[இது இனமாக அனுப்பப்படும்.]

ஸ்ரீ மத்

பகவத்கீதையும்,

ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்யமும்

ஆகிய இவற்றின்

மாதிரிப் பக்கங்கள்.

"கீதா ஸுகீதா கர்த்தவ்யா கிமந்யை: சாஸ்த்ர விஸ்தரை: ||"

"கீதையையே நன்றாகப் படித்துணரவேண்டும்; மற்றைய சாஸ்திர விஸ்தரங்களால் ஆவதென்ன?"

"தேநோபௌ குருதோ யஶ்சைதத் ஏவம் வேத யஶ்ச ந வேத | நாநா து வித்யா சாவித்யா ச யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரம் பவதி ||"

"அறிந்தவனும், அறியாதவனுமாகிய இருவரும் செய்கிறார்கள். ஆனால், அறிவென்பது வேறு; அறியாமையென்பது வேறு. (ஒருவன்) எதனை அறிவோடும், நம்பிக்கையோடும், கருத்தோடும் செய்கிறானோ; அதுதான் அதிகபலமுடையதாகும்." (சாந்தோக்ய உபநிஷத்து - க - க.)

இதற்கு, ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்யம் வருமாறு:

"உலகத்திலே, ரத்நம் விற்பவரான நகைவியாபாரியும் நாட்டுப்புறத்தானுமாகிய இவ்விருவருள், முந்தினவன் அந்த ரத்நத்தைப்பற்றி அதிகமாக அறிந்திருப்பதனாலன்றோ பிந்தினவனைக்காட்டிலும் அதிகமான பணத்தைப் பெறுகிறான்."

1906.

(*All Rights Reserved.*)

ஸ்ரீமத்

பகவத் கீதை

ஸ்ரீ சங்கராசார்ய பாஷ்யத்தோடு

த. சுந்தரராஜ சர்மா

பரிசோதித்து மொழிபெயர்த்தது.

சென்னை

வேதாந்தபோதினி ஆபீஸ்

1907

(காபி ரைட் ரிஸெர்வ்ட்)

முகவுரை.

"ஓம் நமோ பகவதே வாஸுதேவாய." ஸ்ரீமத் பகவத்கீதா சாஸ்திரமானது ஸகலவேதார்த்தஸார மென்றும், **பொருளுணர்தற்குஅரிய** தென்றும், வேதரஹஸ்ய மென்றும் ஆன்றோ ரனைவராலும் ஏத்திப் போற்றப்படுகின்ற தென்பது உலகெலாம் அறிந்த உண்மை. ஆகவே, ருக்வேதம் ஸாமவேதம் என்றாற் போல கீதாவேத மெனக் கூறலாகும். அப்படியே, ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் "பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக,[1] உபநிஷத்துக்களாக,[1] ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக விருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்திலே" என இந்நூலினுட் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும், இதற்கு இயைய, இந்நூல் தனக்குள் அமையப்பெற்ற மஹாபாரதத்தை ஐந்தாம்வேத மென்றலும், "ஸகலவேதார்த்தமும் பாரதத்தி லிருக்கின்றது; பாரதார்த்தமுழுவதும் கீதையிலிருக்கின்றது; ஆதலின், இது ஸகல சாஸ்திரமும் நிறைந்ததாக உயர்த்தி மதிக்கப்படுகின்றது"[2] என்று மஹாபாரதஉரையாசிரியர் நீலகண்டர் பகவத்கீதை உரையின் தொடக்கத்தில் கூறியிருத்தலும், கீதாபாராயண ஆரம்பத்தில் "எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாக, கோபாலனென்னும் குழந்தை பால் கறப்பவனாக, அர்ஜுனன் பாலூட்டும் கன்றாக, நல்லறிவுடையோர் பால் குடிப்பவராக, கீதை-(சாகாமையைத் தருகின்ற) சிறந்த அமிருதமான பாலாகிநின்றது"[3] எனத் தியானித்தலும் காண்க.

மேலும், கீதாசாஸ்திரமானது வ்யாஸமகர்ஷிகளால் செய்யப்பட்டது எனக் கூறாது, "மகாபாரதத்தில் வெளியிடப்பட்டது"[4] என்று கூடார்த்ததீபிகையின் இறுதியிலும், "புருஷோத்தமனுடைய திருவாக்காய், கீதை என்னும் பெயருடைத்தாய், வேதவாக்கியங்களின் ரஹஸ்யமாய் எது உள்ளதோ ......"[5] என்று ௧௮ - ஆம் அத்தியாயத்து ௬௬ - ஆம் சுலோகத்தின் உரையிலும் மதுஸூதந ஸரஸ்வதியாரும், "கிருஷ்ணத்வைபாயநர், பகவான் உபதேசித்த அதே பொருளை எழுநூறு சுலோகங்களால் சேர்த்தமைத்தனர். அவற்றுள், பெரும்பான்மையாக ஸ்ரீகிருஷ்ண(பகவான்) முகத்தினின்று வெளிவந்த சுலோகங்களையே எழுதலாயினர். அவற்றின் (முன் பின் உள்ள கதாஸந்தர்ப்பத்)தொடர்ச்சிக்காக, தாம் சில சுலோகங்களைச் செய்து

---

[1] இந்நூல் யாவரும் மேலாகக்கொண்டு பூஜிக்கத்தக்க மேம்பாட்டை யுடையதாயிருத்தல் பற்றி, இவ்வுயர்வுப்பன்மை இரண்டும் இங்கு வழங்கலாயின.

[2] "𑌭𑌾𑌰𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌭𑌾𑌰𑌤𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌶𑌃। 𑌗𑍀𑌤𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌨𑍇𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌯𑍀 𑌮𑌤𑌾 ॥"

[3] "𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑍋 𑌗𑌾𑌵𑌃 𑌦𑍋𑌗𑍍𑌧𑌾 𑌗𑍋𑌪𑌾𑌲𑌨𑌨𑍍𑌦𑌨𑌃 । 𑌪𑌾𑌰𑍍𑌥𑍋 𑌵𑌤𑍍𑌸𑌃 𑌸𑍁𑌧𑍀𑌰𑍍𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌦𑍁𑌗𑍍𑌧𑌂 𑌗𑍀𑌤𑌾𑌮𑍃𑌤𑌂 𑌮𑌹𑌤𑍍 ॥"

[4] "...𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇...𑌵𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌾।"

[5] "𑌵𑌚𑍋 𑌯𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌖𑍍𑌯𑌂 [illegible] 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂.........।"

சேர்த்தனர். (இதனை,) 'பத்பநாபனுடைய முகாரவிந்தத்தினின்றும் ஸ்வயமாகவே வெளிவந்த கீதைகளையே நன்றாகப் படிக்கவேண்டும். மற்றைய சாஸ்திரவிஸ்தாரங்களால் என்ன?' எனக் கீதாமாஹாத்மியத்தில் கூறப்பட்டிருக்குமாறு (காண்க)"[1] என்று கீதையின் உரைப்பாயிரத்தில் **ஸ்ரீதரஸ்வாமி**களும், "என்னுடைய உயர்ந்த வித்யையானது ப்ரஹ்மஸ்வரூபமாகிய கீதைதான்; ஸம்சயமில்லை..... (அது,) அறிவும் ஆநந்தமுமான கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தன் வாயினால் அருளிச்செய்தது: (ருக், யஜுஸ், ஸாமமென்னும்) மூன்றுவேதமாய்ப் பரமாநந்தமாகி நிற்பது......"[2] என்று **வராஹபுராண**மும் கூறுகிறபடி, பரம்பொருளின் உண்மையை உணர்த்தும் பகவானுடைய திருவாக்குக்குக் **கீதை** என்று பெயர்.

இது, "முற்றுமுணர்ந்தவரான வேதவ்யாஸபகவ்ான் கீதை என்னும் பெயருடைய எழுநூறு சுலோகங்களால் அந்த தருமத்தை பகவான் உபதேசித்தவண்ணம் திரட்டி அமைத்தார்"[3] என்று பாஷ்யகாரர் அருளிச்செய்த திருவாக்கினுடைய ஒவ்வொரு பதத்தின் நோக்கத்தையும் சேர்த்துப்பார்த்து ஊகித்தறிவார்க்கு இனிது புலப்படும். ஆகவே, ப்ரஹ்மாவினிடமிருந்து வெளிப்பட்ட ருக் யஜுஸ் ஸாமாதிவேதங்களைப் பாதராயணபகவான் [வ்யாஸர்] ஒழுங்காகத் திரட்டி அமைத்ததுபோல, பகவானிடமிருந்து வெளிப்பட்ட **கீதாவேதத்**தையும் அப்படியே அமைத்தாரென்க்.

ஆகவே, இப்படிப்பட்ட இவ்வேதத்தின் மெய்ப்பொருளைக் கண்டு, உணர்ந்து, உலகத்திற்கு உரைக்கத்தக்க உரிமையுடையார் பகவத்வதாரமான மகான்களேயாவர். அத்தகையார் அருளிச்செய்த உரையானது, இந்நூற்பொருளை ஸம்சயவிபரீதமறஉணர்தற்கு எவ்வாற்றானும் இன்றியமையாதது. ஏனெனில், அவ்வாறான உரையின்றிப் படித்தால், பொருளை அறியவே முடியாது. ஒருகால் முடியுமாயினும், அது புருஷார்த்தம் கைகூடாவண்ணம் கெடுத்து அநர்த்தமும் விளைவிக்கும். எங்ஙனமெனில், "கடலின் ஜலத்தைத் தனது உள்ளங்கையால் விலக்கி, அதனுள் புதைந்து கிடக்கும் ரத்நங்களை ஒரு நல்ல தெப்பத்தின் உதவியின்றி எடுக்க முயல்பவன், சுழல்களில் அகப்பட்டு மூழ்கிவிடுவானன்றே."

இது இங்ஙனம் நிற்க. பிறநாடுகளிற்போல நம் தமிழ்நாட்டிலும் **பகவத் கீதா சாஸ்திர**மானது ஸர்வஜனஸாதாரணமாய்ப் பெரிதும் வழங்குகின்றது. இவ்வாறு வழங்குகின்ற அரிதுணர்பொருளதான இவ்வேதஸாரத்திற்குக் கீழ்க்கூறியவாறு உரிய ஆசார்யர் எவராயினு மாகுக; அவர் அருளிச்செய்த உரையின் ஒரு

[1] "𑌤𑌦𑍇𑌵 𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌵𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌃 𑌸𑌪𑍍𑌤𑌭𑌿𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌶𑌤𑍈𑌃 𑌉𑌪𑌨𑌿𑌬𑌬𑌨𑍍𑌧 । 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑌃 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍁𑌖𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌾𑌨𑍇𑌵 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌲𑌿𑌖𑌤𑍍। 𑌕𑌾𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑌤𑍍𑌸𑌂𑌗𑌤𑌯𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑍍𑌯𑌰𑌚𑌯𑌤𑍍। 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌗𑍀𑌤𑌾𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇—'𑌗𑍀𑌤𑌾 𑌸𑍁𑌗𑍀𑌤𑌾 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑍈𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍈𑌃 । 𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌪𑌦𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌾𑌃 ॥' 𑌇𑌤𑌿"

[2] "𑌗𑍀𑌤𑌾 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑌾 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃॥........𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑍇𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌮𑍁𑌖𑌤𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌮𑍍। 𑌵𑍇𑌦𑌤𑍍𑌰𑌯𑍀 𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾........॥"

[3] 6-ஆம் பக்கத்தில்22,23-ஆம்வரிகளைப்பார்க்க.

முகவுரை.

மொழிபெயர்ப்பாயினும் நம் தமிழ்ப்பாஷையில் கறந்தபால் கறந்தவண்ணம் அவர் சொன்னவாறே அமைந்து வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஆதலால், இச்சாஸ்திரத்திற்கு பகவத்பாதர் அருளிச்செய்த பாஷ்யத்தையும் கீதாமூலத்தையும், கூட்டாமலும் குறைக்காமலும் உள்ளது உள்ளபடி என் சிற்றறிவிற்கு எட்டியஅளவு மொழிபெயர்த்திருக்கின்றேன். இந்நூற்பொருளின் ஸ்வபாவரீதியானது எவ்வளவு இடங்கொடுத்ததோ, அவ்வளவு தெளிவான எளிய தமிழ்நடையில் இம்மொழிபெயர்ப்பை எழுதியிருக்கின்றேன். மற்றும், முதனூலிற் கூறும் விஷயங்களுக்குத் தலைக்குறிப்புக்களும், எளிதில் பொருள் விளங்காத இடங்களில் குறிப்புக்களும் தந்திருக்கின்றேன். [முதனூல் - கீதையும், பாஷ்யமும்.]

"ஒருபாஷையினின்று மற்றொருபாஷைக்கு ஒன்றை மொழிபெயர்த்துக் கொண்டுபோகும்போது, முதனூலிலுள்ள செறிவும் பொலிவும் அழகும் நயமும் மொழிபெயர்ப்பாகிய வழிநூலிற் குறைவுபடுதல், உலகத்திற் பெரும்பான்மை." மேலும், ஸ்ரீமத்பகவத்கீதையை அர்த்தஞானமின்றிப் பாடமாத்திரமாகப் பாராயணஞ் செய்தலும் புண்ணியமாகும்;(கஅ - எ0). அவ்வாறே, புண்ணியமாகும் பாஷ்ய பாராயணமும். ஆகவே, முதனூலையே நேரே படித்துணர்தலும் அர்த்தஞானத்தோடு பாராயணஞ்செய்தலும் மிகவிசேஷமாதலால், கீதையும் பாஷ்யமும் இம் மொழிபெயர்ப்போடு ஒருங்கே பதிப்பிக்கலாயின.

ப்ரஹ்மஸ்ரீ ஏ. மகாதேவசாஸ்திரியார், பி. ஏ., அவர்கள் ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்துள்ள கீதையை உபயோகித்தற்கு அன்புடன் அநுமதித்த பெருந்தகைமைக்கு மனமுவந்து வந்தனஞ் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இனி, என்போன்றவர் செய்யும் இத்தகைய மொழிபெயர்ப்பிலும் முதனூற் பதிப்பிலும் குற்றங்குறைகள் வந்திருத்தல் கூடும். ஆதலின்,எவராயினும் அவற்றை எடுத்து எனக்குத் தெரிவிப்பராயின், அப்பேருதவி செய்த அவரிடம் மகிழ்வொடு நன்றிபர்ராட்டச் சித்தனுயிருக்கின்றேன்.

" ஸ்ரீ கிருஷ்ணார்ப்பண மஸ்து." " ஓம் தத் ஸத்."

சென்னை:
டிசம்பர்மீ, 1905.

த. சுந்தரராஜசர்மா.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾

𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇𑌨 𑌭𑌾𑌷𑍍𑌯𑍇𑌣 𑌸𑌹𑌿𑌤𑌾 ॥

𑍐 "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑌰𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑌣𑍍𑌡𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ।
𑌅𑌣𑍍𑌡𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤𑌦𑍍𑌵𑍀𑌪𑌾 𑌚 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀 ॥"

𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌃 𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌗𑍍𑌰𑍇 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍀𑌨𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌨𑌕𑌸𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌦𑍀𑌨𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌾𑌮𑌾𑌸 । 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍋 𑌹𑌿 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌶𑍍𑌚 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌹𑍇𑌤𑍁𑌃 𑌯𑌃 𑌸 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌵𑌰𑍍𑌣𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌮𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌿𑌭𑌿𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍀𑌯𑌮𑌾𑌨𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑍇𑌣 𑌕𑌾𑌲𑍇𑌨 ॥

ஸ்ரீமத் பகவத் கீதையும்,

ஸ்ரீசங்கர பகவத்பாத ஆசார்யர் அருளிச்செய்த பாஷ்யமும்.

உரைப்பாயிரம்.

கடவுள் வாழ்த்து.

ஓம் "நாராயணன் (என்னும் பரம்பொருளானது) அவ்யக்தத்திற்கு அப்பால் உள்ளது: அண்டம் அவ்யக்தத்தினின்று உண்டாவது: அண்டத்துள்ளன்றோ இந்த உலகங்களும் ஏழு தீவுள்ள பூமியும் உள்ளன." [1] [அவ்யக்தம் - மாயை.]

வேதத்திற் கூறிய இருவகைத்தான தருமம்.

அந்த பகவான் இந்த உலகத்தைப் படைத்து, அதனை நிலைபெறச் செய்ய விரும்பியவராய், முதலில் மரீசி முதலிய பிரஜாபதிகளைச் சிருஷ்டித்து, வேதத்திற் கூறிய பிரவிருத்தி என்னும் தருமத்தைக் கைக்கொள்ளச் செய்தனர்; பின்பு ஸநகர் ஸநந்தநர் [2] முதலிய மற்றையோரையும் படைத்து, ஞான வைராக்கியங்களைக் குறிப்பாகப் பெற்ற நிவிருத்தி என்னும் தருமத்தைக் கைக்கொள்ளப்பண்ணினுர். வேதத்திற் கூறிய பிரவிருத்தி நிவிருத்தி என்னும் இருவகைத்தான தருமமே உலகத்தை(ஒழுங்குபட)நிலைபெறச்செய்வது; பிராணிகளுக்குச் செல்வத்தையும் உறுதியான

---

[1] இந்த சுலோகம் ப்ரஹ்மாண்ட புராணத்திலிருப்பதாக ராகவாநந்தர் மநுஸ்மிருதியின் க-ஆம் அத்தியாயத்து, க0-ஆம் சுலோகத்தினுரையிற் கூறியுள்ளார். இன்னும் இது, மநுஸ்மிருதியின் சில பிரதிகளில், க-ஆம் அத்தியாயத்து, கக-ஆம் சுலோகமாகவும் காணப்படுகின்றது.

[2] "அவர்கள் வைராக்யத்தை அடைந்து மோக்ஷமார்க்க நிரதர்களாய் ப்ரஜாசிருஷ்டியில் பிரவிருத்தியாமல் ஸர்வ ஸங்க பரித்யாகிகளாய் யோகநிஷ்டை பெற்று, காமக் குரோத மத மாச்சரியங்க ளில்லாதவர்களாய், இருதார்த்தராயிருந்தார்கள்" (வி-க-எ). இதற்கு இணங்க 'ஸநத்குமாரர் [எப்பொழுதுஞ் சிறுவர்]' என்ற பெயரினையுங் காண்க.

𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍄𑌣𑌾𑌂 𑌕𑌾𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌤𑍍 𑌹𑍀𑌯𑌮𑌾𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌹𑍇𑌤𑍁𑌕𑍇𑌨 𑌅𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌅𑌭𑌿𑌭𑍂𑌯𑌮𑌾𑌨𑍇 𑌧𑌰𑍍𑌮𑍇, 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑍇 𑌚 𑌅𑌧𑌰𑍍𑌮𑍇, 𑌜𑌗𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑌰𑌿𑌪𑌿𑌪𑌾𑌲𑌯𑌿𑌷𑍁𑌃 𑌸 𑌆𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌖𑍍𑌯𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌭𑍌𑌮𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍇𑌵𑌕𑍍𑌯𑌾𑌂 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌂𑌶𑍇𑌨 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌕𑌿𑌲 𑌸𑌂𑌬𑌭𑍂𑌵 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌰𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍈𑌦𑌿𑌕𑍋 𑌧𑌰𑍍𑌮𑌃, 𑌤𑌦𑌧𑍀𑌨𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌭𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

𑌸 𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌬𑌲𑌵𑍀𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌃 𑌸𑌦𑌾 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃

நன்மையையும் நேரே தருவதான அத்தருமமே (தம்தமக்கு) நன்மையைத் தேடிக் கொள்ளும் பிராமணர் முதலிய வர்ணத்தாராலும் ஆச்ரமத்தாராலும் நெடுங்காலமாக [1] அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. [உறுதியான நன்மை - முக்தி.]

பகவதவதாரத்தின் பிரயோஜனம்.

(அங்ஙனம்) அநுஷ்டிப்பவருடைய காமக்கிளர்ச்சியால் (நிலையின்றி) விவேகபுத்தி தேய, அதனால் அதர்மம் விளைய, அவ்வதர்மத்தால் தருமம் கீழேயமர்த்தப்பட்டும், அதர்மம் மேலிட்டும் வருமளவில், (வரைமுறையில்லாமல் வரம்பழிந்து போகாவண்ணம்) ஜகத்தின் நிலையைப் பாதுகாக்கக் கருதிய அவ்வாதிகர்த்தாவான நாராயணனென்னும் திருநாமமுடைய விஷ்ணுவானவர், "பூலோகத்திற்குரிய ப்ரஹ்ம"[2] மாகிய பிராமண்யத்தைக் காத்தற்பொருட்டு வஸுதேவருக்குத் தேவகியாரிடத்து (ஸ்ரீமத்)கிருஷ்ண (பகவா)னாக அம்சத்தால்[3] அவதரித்தனரென்ப. ஏனெனில், பிராமண்யம் பாதுகாக்கப்படுமாயின், வைதிகதருமமானது பாதுகாக்கப்பட்டதாகும்; வர்ணாச்ரமபேதங்கள் அதனைச் சார்ந்துநிற்றலின்.[4] [வைதிகம் - வேதத்தில் விதித்தது.]

ஞானம், ஐச்வர்யம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ் என்பவற்றை எப்பொழுதுமுடைய அந்த பகவானனவர், முக்குண வடிவமும் விஷ்ணுவிற்கு உரியதுமான

---

1 "𑌦𑍀𑌰𑍍𑌘𑍇𑌣 𑌕𑌾𑌲𑍇𑌨" என்பதை "𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌤𑍄𑌣𑌾𑌂" என்பதோடுங்கூட்டி, அவற்றுள் முந்தினதற்கு "வெகுகாலமானபின், அதாவது - கிருதயுகமும் திரேதாயுகமும் முடிந்து, துவாபரயுகமும் முடிவுபெறுமளவிலே" என உரைப்பர் (ஆ).

2 "𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌂 𑌦𑍇𑌵𑌕𑍀 𑌦𑍇𑌵𑍀 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌜𑍀𑌜𑌨𑌤𑍍 । 𑌭𑍌𑌮𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌗𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑍈..............॥" "தேவகிப்பிராட்டியாரானவர் பூலோகத்திற்குரிய ப்ரஹ்மத்தைக் காத்தற்காக வஸுதேவர்க்கு எந்தக் கடவுளைப் பெற்றாரோ.........." (ம - சா - சஎ). "பூலோகத்திற்குரிய ப்ரஹ்மமாவது - வேதங்களும், பிராமணர்களும், யாகங்களுமாம்" என உரையாசிரியர் நீலகண்டர் இச்சுலோகத்தினுரையிற் கூறியிருத்தலே இங்கு அறிக.

3 "அம்சத்தால்" என்பதற்கு "𑌸𑍍𑌵𑍇𑌚𑍍𑌛𑌾𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑍇𑌨 𑌦𑌿𑌵𑍍𑌯𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣" "தமதிச்சைப்படி எடுக்கப்பட்ட மாயாமயத் திருமேனியால்" என உரைப்பர் (ஆ). பகவானுடைய திருமேனி மாயையினாலாகியதாம். அது மனிதர்சரீரம்போலப் பஞ்சபூதங்களாலாகியதுமன்று; உண்மையுமன்று; அதாவது - அங்கேதான் உள்ளது இங்கேதான் உள்ளது என வரையறுக்கப்படாது எங்கும் பரிபூரணமாகி நிற்கும் பரமானந்தப் பரம்பொருளே லோகாநுக்கிரகஞ் செய்தற்பொருட்டுப் பிறப்பதுபோலவும், உடம்பொடுநிற்பதுபோலவும் காணப்படுகின்றதென உணர்க. கீதையின் (ச - சு)ஐப் பார்க்க.

4 க்ஷத்திரியர் முதலாயினோர் யாகஞ்செய்தலிலும், வேதமோதுதலிலும் பிராமணர்களுடைய உதவியை வேண்டிநிற்கிறார்கள்.—(ஆ.)

त्रिगुणात्मिकां वैष्णवीं स्वां मायां मूलप्रकृतिं वशीकृत्य-अजः अव्ययो भूतानां ईश्वरो नित्यशुद्धबुद्धमुक्तस्वभावोऽपि सन् स्वमायया देहवानिव जात इव च लोकानुग्रहं कुर्वन् लक्ष्यते ॥

स्वप्रयोजनाभावेऽपि भूतानुजिघृक्षया वैदिकं धर्मद्वयम् अर्जुनाय शोकमोहमहोदधौ निमग्नाय उपदिदेश, गुणाधिकैर्हि गृहीतः अनुष्ठीयमानश्च धर्मः प्रचयं गमिष्यतीति ॥

तं धर्मं भगवता यथोपदिष्टं वेदव्यासः सर्वज्ञो भगवान् गीताख्यैः सप्तभिः श्लोकशतैः उपनिबबन्ध ॥

तदिदं गीताशास्त्रं समस्तवेदार्थसारसंग्रहभूतं दुर्विज्ञेयार्थम् । तदर्थाविष्करणाय अनेकैः विवृतपदपदार्थवाक्यार्थन्यायमपि

---

[1] தம் மாயையாகிய மூலப்பிரகிருதியை வசப்படுத்திக்கொண்டு[1]— (உண்மையில்)பிறவாதவராய், அழிவற்றவராய், பிராணிகளுக்கு ஈச்வரராய், இயல்பாகவே நித்யராய் சுத்தராய் புத்தராய் முக்தராயிருப்பினும்—தம் மாயையினலே உடம்பொடு நிற்பவர்போலவும் பிறந்தவர்போலவும், லோகாநுக்கிரகஞ்செய்பவராய் (உலகத்தில் காணப்படுகிருர். [புத்தர் - ஜடத்தன்மையற்றவர், ஞானவடிவானவர்.]

தமக்கு ஒருபயனும் இல்லையாயினும், பிராணிகளை ஈடேற்றவேண்டுமென்னும் எண்ணத்தால் வேதத்தில் விதித்துள்ள தருமமிரண்டையும் சோகமோகப் பெருங்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற அர்ஜுனனுக்கு—நற்குணம் மிகுந்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அநுஷ்டிக்கப்பட்டும் வருவதான தருமம் பரவுதலை யடையுமென்று (கருதி) உபதேசித்தருளினர்.

கீதையும், பாஷ்யமும்.

முற்றுமுணர்ந்தவரான வேதவ்யாஸபகவான், கீதை என்னும் பெயருடைய எழுநூறுசுலோகங்களால் அந்தத் தருமத்தைப் பகவான் உபதேசித்தவண்ணம் திரட்டி அமைத்தருளினர். [வேத வ்யாஸர் - வேதங்களை வகுத்து ஒழுங்குபடுத்தியவர்.]

பிரசித்தமான இந்த கீதாசாஸ்திரமானது ஸகல வேதார்த்தஸாரத் திரட்டு; பொருளுணர்தற்கு அரியது. அதன் பொருளை வெளியிடுதற்காக (முன் உரை யெழுதினேர்) அநேகரால் பதம், பதப்பொருள், வாக்கியப்பொருள், நியாய மென்பன விவரிக்கப்பெற்றிருந்தும், (அது, முன்பின்)முற்றும் மாறுபட்ட பலபல பொருளுள்ளதாக ஸாமாந்ய ஜனங்களால் கிரகிக்கப்படுவரக்கண்டு, அதன்

---

1 "தம்," "மாயை," என்ற இவ்விரண்டனுள் முந்தியது 'பிரகிருதி பகவானுக்கு உட்பட்டது' என்றும், பிந்தியது 'பிரகிருதியின் வடிவம் தோற்றமாத்திரமேயன்றி மெய்ப்பொருளன்று' என்றும், " வசப்படுத்திக்கொண்டு " என்பது '(ஜீவன் பிரகிருதிக்கு உட்படுவதுபோல,) பகவான் அதற்கு உட்படாதவர்' என்றும் தெரிவிக்குமாறு காண்க.—(ஆ.)"பகவானை அடைக்கலமாகப் புகுந்தவர் மாயையைக்கடந்து நிற்பர்"(எ-கச)என்ற இதனையும் இங்கு நோக்கிக்கொள்க. [மாயை-மாயா; வடசொல். மா-இல்லை, யா-எது. மாயை -எது இல்லையோ அது : அதாவது போலியான தோற்றம், பொய்ம்மை.]

உரைப்பாயிரம்.

அத்யந்தவிருத்தாநேகார்த்தத்வேந லௌகிகை: க்ருஹ்யமாணம் உபலப்ய அஹம் விவேகத: அர்த்தநிர்தாரணார்த்தம் ஸம்க்ஷேபதோ விவரணம் கரிஷ்யாமி ||

தஸ்ய அஸ்ய கீதாஶாஸ்த்ரஸ்ய ஸம்க்ஷேபத: ப்ரயோஜநம் பரம் நி:ஶ்ரேயஸம் ஸஹேதுகஸ்ய ஸம்ஸாரஸ்ய அத்யந்தோபரமலக்ஷணம் | தச்ச ஸர்வகர்மஸந்ந்யாஸபூர்வகாத் ஆத்மஜ்ஞாநநிஷ்டாரூபாத் தர்மாத் பவதி | ததா இமமேவ கீதார்த்தம் தர்மம் உத்திஶ்ய பகவதைவ உக்தம் — "ஸ ஹி தர்ம: ஸுபர்யாப்தோ ப்ரஹ்மண: பதவேதநே" இதி அநுகீதாஸு | தத்ரைவ ச உக்தம் —

"நைவ தர்மீ ந சாதர்மீ ந சைவ ஹி ஶுபாஶுபீ |
ய: ஸ்யாதேகாஸநே லீந: தூஷ்ணீம் கிஞ்சிதசிந்தயந் ||"

"ஜ்ஞாநம் ஸந்ந்யாஸலக்ஷணம்" இதி ச | இஹாபி ச அந்தே உக்தம் அர்ஜுநாய — "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ" இதி ||

அப்யுதயார்த்தோऽபி ய: ப்ரவ்ருத்திலக்ஷணோ தர்மோ வர்ணாந் ஆஶ்ரமாம்ஶ்ச உத்திஶ்ய விஹித: | ஸ தேவாதிஸ்தாநப்ராப்திஹேதுரபி ஸந், ஈஶ்வரார்ப்பணபுத்த்யா

பொருளைத் தெளிவாய் நிர்ணயித்தற்பொருட்டு யான் சுருக்கமாய் உரைசெய்கிறேன். [நியாயம் - ஆக்ஷேப ஸமாதாநம்.]

ஞானயோகமே முக்திக்கு நேரான ஸாதநம்.

பிரசித்தமான இந்த கீதாசாஸ்திரத்தின் பயனாவது - சுருக்கமாக(ச் சொல்லில்), ஸம்ஸாரமானது (தனது) காரண(மாகிய மூல அஜ்ஞாந)த்தோடு முற்றும் ஒழிந்திடுதலாகிய (யாவற்றினும்)மேம்பட்ட உறுதியானநன்மையேயாம். அது, ஸகலகர்மங்களையும் துறத்தலை முன்னிட்டதான ஆத்மஞான நிஷ்டை என்னும் தருமத்தினின்று உண்டாகின்றது. அவ்வண்ணமே, கீதையின் பொருளான இதே தருமத்தைக் குறிப்பிட்டு "ப்ரஹ்மத்தின் நிலையைப் பெறுதற்கு அந்தத் தருமமே நன்றாகப் போதும்"(ம-அச்வ-கசு-கஉ) என அநுகீதைகளில் பகவானே கூறினர். இன்னும், அங்கு"எவன் ஒன்றில் நிற்றலிலே ஊன்றி அமர்ந்தவனாய், ஒன்றும் நினையாதவனாய்ச் சும்மாவிருக்கின்றானோ அவனுக்குப் புண்ணியமுமில்லை, பாபமுமில்லை : வாழ்வுமில்லை, தாழ்வு மில்லை," "ஞானத்திற்குத் துறவே அடையாளம்" (ம-அச்வ-சங-உசு) என்றும் கூறியுள்ளார். இங்கேயும் இறுதியில் "ஸகல தரும (அதரும)ங்களையும் விட்டொழிந்து என்னையே தஞ்சமாகக்கொள்" (கஅ-சுசு) என்று அர்ஜுனனுக்கு அருளிச்செய்தனர். [ஒன்றில் நிற்றலிலே ஊன்றி அமர்ந்தவன்-ப்ரஹ்மத்திலே. லயித்தவன்]

கர்மயோகமானது முக்திக்கு ஸாதநமாயிருக்கும் விதம்.

பிரவிருத்தி என்னும் தருமமானது, செல்வத்திற்குப் பயன்படுவதாயினும், வர்ணங்களையும் ஆச்ரமங்களையும் உத்தேசித்து விதிக்கப்பட்டதாம். அது, (பயனை எதிர்நோக்கிச் செய்யப்பட்டபொழுது) தேவர் முதலாயினோர்களின் நிலையைப் பெறுதற்கு ஏதுவாயிருப்பினும், பயனை எதிர்நோக்காது ஈச்வரார்ப்பணபுத்தியோடு

அநுஷ்டீயமாந: ஸத்த்வஶுத்தயே பவதி ஃபலாபிஸந்திவர்ஜித:। ஶுத்தஸத்த்வஸ்ய ச ஜ்ஞாந-நிஷ்டாயோக்யதாப்ராப்திதாவாரேண ஜ்ஞாநோத்பத்திஹேதுத்வேந ச நிஶ்ரேயஸஹே-துத்வமபி ப்ரதிபத்யதே। ததா சார்த்தமபிஸந்தாய வக்ஷ்யதி—"ப்ரஹ்மண்யாதாய கர்மாணி," "யோகி-ந: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாऽऽத்மஶுத்தயே" இதி॥

இமம் த்விவிதம் தர்மம் நிஶ்ரேயஸப்ரயோஜநம் பரமார்த்ததத்த்வம் ச வாஸு-தேவாக்யம் பரப்ரஹ்மாபிதேயபூதம் விஶேஷத: அபிவ்யஞ்ஜயத் விஶிஷ்டப்ரயோஜ-நஸம்பந்தாபிதேயவத் கீதாஶாஸ்த்ரம்। யத: ததர்த்தவிஜ்ஞாநே ஸமஸ்தபுருஷார்த்த-ஸித்தி:, அத: தத்விவரணே யத்ந: க்ரியதே மயா॥

செய்யப்பட, சித்தசுத்தி வரப்பண்ணுவதாம். இனிப் பரிசுத்தமான மனம் ஞான நிஷ்டைக்கு ஏற்ற தகுதிபெற, அவ்வழியாக(ப் பிரவிருத்தி தருமமானது) ஞான முண்டாகச் செய்தலால், (இவ்வாறு)முக்திக்கு(ப் பரம்பரையான) காரணமாதலையும் பெறுகின்றது. அவ்வண்ணமே (இதே கருத்தை உட்கொண்டு) "ப்ரஹ்மத்தினிடத்துக் கர்மங்களை அர்ப்பித்து" "........யோகிகள் பற்றைவிட்டுக் கர்மத்தைச் செய்கிறார்கள், சித்தசுத்திக்காக" (ரு - கo, கக) என (ஸ்ரீ பகவான்) கூறுவார்.

கீதாசாஸ்திரத்தின் சிறப்புப்பொருளும், சிறப்புப்பயனும்.

கீதாசாஸ்திரமானது, முக்திக்குப் பயன்படுவதான இவ்விருவகைத்தருமத்தையும் (பொதுவாய்) வெளிப்படுத்தி, (தான்) சொல்ல எடுத்துக்கொண்ட (விஷயமான) ப்ரஹ்மமாகிய வாஸுதேவ னென்ற பரமார்த்த தத்துவத்தைச் சிறப்பாய் வெளிப்படுத்துகின்றது; (எனவே,) சிறப்புப்பயனும், சிறப்புச்சம்பந்தமும், சிறப்புப் பொருளும்[1] உடையது (என்பதாயிற்று). அதன்பொருளைக் கண்டு தெறியவளவிலே ஸகலபுருஷார்த்தங்களும் கைகூடுமாதலால், யான் அதற்கு உரை யெழுத முயற்சி செய்கின்றேன்.

---

[1]ஒரு நூல் கேட்கப்புகுந்தவர்க்கு அந்நூலாற் கூறப்படும்பொருளும், நூல்கேட்டலாற் பெறப்படும் பயனும், கேட்டற்கு உரிய அதிகாரிகளாவார் இவரென்பதும், நூற்கும் நூல்கூறியபொருளுக்குமே யன்றி நூல்கூறியபொருளுக்கும் பயனுக்கும் ஸம்பந்தமும் உணர்ந்தாலன்றி நூல கேட்பதில் மனம் ஆக்கம் செல்லாமையின், இந்நான்கையும் முதலில் உணர்த்தவேண்டும்; ஆகவே, அவை இங்கு வருமாறு:—நூலாற் கூறப்படும் பொருள்-பரப்ரஹ்மம் : நூல்கேட்டலாற் பெறப்படும் பயன்-முக்தி : கேட்டற்கு உரிய அதிகாரிகளாவார்—அர்ஜுனன் போன்றவர் : நூற்கும் நூல்கூறிய பொருளுக்கும், உணர்த்துவதும் உணர்த்தப்படுவதுமாகிய ஸம்பந்தம் : நூல்கூறிய பொருளுக்கும் பயனுக்கும், ஸாதநமும் ஸாத்தியமுமாகிய ஸம்பந்தம். இவற்றை முறையே விஷயம், பிரயோஜனம், அதிகாரி, ஸம்பந்தம் என்னும் அநுபந்தசதுஷ்டயம் என்பர் வடநூலார். [ஸாதநம் - கருவி. ஸாத்தியம் - கருவியால் ஸாதிக்கப்படுவது.]

𑌅𑌥

𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑍋𑌗𑌃 ॥

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

௧. 𑌧𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌮𑌵𑍇𑌤𑌾 𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑌵𑌃 ।
𑌮𑌾𑌮𑌕𑌾𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑌿𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤 𑌸𑌂𑌜𑌯 ॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௨. 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍀𑌕𑌂 𑌵𑍍𑌯𑍂𑌢𑌂 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌂𑌗𑌮𑍍𑌯 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

௩. 𑌪𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌮𑌹𑌤𑍀𑌂 𑌚𑌮𑍂𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑍂𑌢𑌾𑌂 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌣 𑌤𑌵 𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌣 𑌧𑍀𑌮𑌤𑌾 ॥

௪. 𑌅𑌤𑍍𑌰 𑌶𑍂𑌰𑌾 𑌮𑌹𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑌾 𑌭𑍀𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌮𑌾 𑌯𑍁𑌧𑌿 ।
𑌯𑍁𑌯𑍁𑌧𑌾𑌨𑍋 𑌵𑌿𑌰𑌾𑌟𑌶𑍍𑌚 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌰𑌥𑌃 ॥

௫. 𑌧𑍃𑌷𑍍𑌟𑌕𑍇𑌤𑍁𑌶𑍍𑌚𑍇𑌕𑌿𑌤𑌾𑌨𑌃 𑌕𑌾𑌶𑌿𑌰𑌾𑌜𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌰𑍁𑌜𑌿𑌤𑍍𑌕𑍁𑌨𑍍𑌤𑌿𑌭𑍋𑌜𑌶𑍍𑌚 𑌶𑍈𑌬𑍍𑌯𑌶𑍍𑌚 𑌨𑌰𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ॥

௬. 𑌯𑍁𑌧𑌾𑌮𑌨𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤 𑌉𑌤𑍍𑌤𑌮𑍌𑌜𑌾𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑍋 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃 ॥

முதல் அத்தியாயம்: அர்ஜுனவிஷாதயோகம்.

போரின் ரீதியை ஸஞ்ஜயன் விவரமாய்ச் சொல்லுதல்.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான்:

௧. ஸஞ்ஜய! போர்செய்ய ஸன்னத்தராய் குருக்ஷேத்திரமென்னும் தரும பூமியிலே ஒருங்குகூடிய நம்மவரும் பாண்டவரும் என் செய்தார்கள்?

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்:

௨. துர்யோதனராஜன், பாண்டவர்களின்படை அணிவகுக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அப்பொழுது ஆசார்யருகிற்சென்று (இவ்) வார்த்தையைப் பேசலாயினன்:

துர்யோதனன் துரோணரோடு பேசுதல்.

௩. ஆசார்யரே! பாண்டவருடைய இப்பெரியசேனையானது தங்களுடைய சிஷ்யனை புத்திசாலியாயுள்ள துருபதபுத்திரனால் அணிவகுக்கப்பட்டிருப்பதைப் பார்ப்பீர்களாக.

௪. இங்கே மகாவில்லாளரான சூரரும், போரில் வீமனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸமானருமான யுயுதானன், விராடன், மகாரதனான துருபதன்,

௫. த்ருஷ்டகேது, சேகிதானன், வீர்யசாலியான காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதரிற் சிறந்தவனான சைப்யன்,

௬. பராக்கிரமசாலியான யுதாமந்யு, வீர்யசாலியான உத்தமௌஜஸ், ஸுபத்ரா குமாரன், திரௌபதி குமாரர் (ஆகிய இவர்கள்) எல்லோருமே மகாரதர்கள்.

௭. 𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌯𑍇 𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌬𑍋𑌧 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌨𑌾𑌯𑌕𑌾 𑌮𑌮 𑌸𑍈𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌾𑌨𑍍𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌤𑍇 ॥
௮. 𑌭𑌵𑌾𑌨𑍍𑌭𑍀𑌷𑍍𑌮𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌕𑍃𑌪𑌶𑍍𑌚 𑌸𑌮𑌿𑌤𑌿𑌂𑌜𑌯𑌃 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌮𑌾 𑌵𑌿𑌕𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌸𑍌𑌮𑌦𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑌯𑌦𑍍𑌰𑌥𑌃 ॥
௯. 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌚 𑌬𑌹𑌵𑌃 𑌶𑍂𑌰𑌾 𑌮𑌦𑌰𑍍𑌥𑍇 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌨𑌾𑌨𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌹𑌰𑌣𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑌾𑌃 ॥
௧௦. 𑌅𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑌦𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌬𑌲𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌿𑌦𑌮𑍇𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌲𑌂 𑌭𑍀𑌮𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 ॥
௧௧. 𑌅𑌯𑌨𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌯𑌥𑌾𑌭𑌾𑌗𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑍀𑌷𑍍𑌮𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌰𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍁 𑌭𑌵𑌨𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌹𑌿 ॥
௧௨. 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌜𑌨𑌯𑌨𑍍𑌹𑌰𑍍𑌷𑌂 𑌕𑍁𑌰𑍁𑌵𑍃𑌦𑍍𑌧𑌃 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃 ।
𑌸𑌿𑌂𑌹𑌨𑌾𑌦𑌂 𑌵𑌿𑌨𑌦𑍍𑌯𑍋𑌚𑍍𑌚𑍈𑌃 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌦𑌧𑍍𑌮𑍌 𑌪𑍍𑌰𑌤𑌾𑌪𑌵𑌾𑌨𑍍 ॥
௧௩. 𑌤𑌤𑌃 𑌶𑌙𑍍𑌖𑌾𑌶𑍍𑌚 𑌭𑍇𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌣𑌵𑌾𑌨𑌕𑌗𑍋𑌮𑍁𑌖𑌾𑌃 ।
𑌸𑌹𑌸𑍈𑌵𑌾𑌭𑍍𑌯𑌹𑌨𑍍𑌯𑌨𑍍𑌤 𑌸 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍁𑌮𑍁𑌲𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥
௧௪. 𑌤𑌤𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑍈𑌰𑍍𑌹𑌯𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌮𑌾𑌧𑌵𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌶𑍍𑌚𑍈𑌵 𑌦𑌿𑌵𑍍𑌯𑍌 𑌶𑌙𑍍𑌖𑍌 𑌪𑍍𑌰𑌦𑌧𑍍𑌮𑌤𑍁𑌃 ॥

---

௭. ஆனால், பிராமணோத்தமரே! நம்மில் சிறந்தவரான என்சேனைத்தலைவர்கள் எவரோ, அவர்களைத் தெரிந்துகொள்க. (தாங்களே தெரிந்துகொள்ளக்கூடு மென்றாலும், இந்த யுத்தக்குழப்பத்தில்) தங்களுக்கு ஒருகுறிப்புக்காக அவர்களைக் கூறுகின்றேன் :

௮. தாங்களும், பீஷ்மரும், கர்ணனும், போரில் வெற்றிபெறும் கிருபரும், அச்வத்தாமனும், விகர்ணனும், ஸோமதத்தன் குமாரனும், ஜயத்ரதனும்,

௯. மற்றும் அனேகசூரரும் எனக்காக உயிரைவிடத் துணிந்தவர் : போர்செய்யக் கருவியான பல பல ஆயுதங்களுடையவர் : போர்புரிதலில் ஸகலரும் தேர்ந்தவர்.

௧௦. பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டதான நம்முடைய இச்சேனை அபரிமிதமாயிருக்கின்றது. வீமனாற் காக்கப்பட்டதான இவர்களுடைய *இச்சேனையோ மிதமாயிருக்கின்றது.

௧௧. ஆகவே, நீங்களெல்லாருமே எல்லாப்படைவகுப்புக்களிலும் தம்தம் நிலைகளினின்று பீஷ்மரையே எல்லாப்புறங்களிலும் காத்தல்வேண்டும்.

இருதிறத்துச்சேனைகளும் போருக்குச் சன்னத்தமாயிருத்தல்.

௧௨. கௌரவர்களில் பெரியவரும் பிரதாபசாலியுமான பாட்டனார் [பீஷ்மர்], அவனுக்கு [துர்யோதனனுக்கு] உத்ஸாஹ முண்டாக்குபவராய், உரக்க ஸிம்ஹநாதஞ்செய்து சங்கையூதினார்.

௧௩. பின்பு உடனே சங்குகளும், பேரிகளும், தம்பட்டங்களும், பறைகளும், ஊதுகொம்புகளும் முழக்கப்பட்டன; அவ்வொலி நிரம்பி நின்றது.

௧௪. அப்பால், மாதவனும் பாண்டவனும் வெண்குதிரைகள் பூட்டியதோர் பெரிய தேரினுள் இருந்தே (தம்முடைய) திவ்வியமான சங்குகளை ஊதினார்கள்.

௧௫. 𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌂 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌃 ।
𑌪𑍌𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌦𑌧𑍍𑌮𑍌 𑌮𑌹𑌾𑌶𑌙𑍍𑌖𑌂 𑌭𑍀𑌮𑌕𑌰𑍍𑌮𑌾 𑌵𑍃𑌕𑍋𑌦𑌰𑌃 ॥
௧௬. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑌯𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌕𑍁𑌨𑍍𑌤𑍀𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 ।
𑌨𑌕𑍁𑌲𑌃 𑌸𑌹𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 𑌸𑍁𑌘𑍋𑌷𑌮𑌣𑌿𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑍌 ॥
௧௭. 𑌕𑌾𑌶𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑌃 𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑍀 𑌚 𑌮𑌹𑌾𑌰𑌥𑌃 ।
𑌧𑍃𑌷𑍍𑌟𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑍋 𑌵𑌿𑌰𑌾𑌟𑌶𑍍𑌚 𑌸𑌾𑌤𑍍𑌯𑌕𑌿𑌶𑍍𑌚𑌾𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌃 ॥
௧௮. 𑌦𑍍𑌰𑍁𑌪𑌦𑍋 𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌪𑌤𑍇 ।
𑌸𑍌𑌭𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃 𑌶𑌙𑍍𑌖𑌾𑌨𑍍𑌦𑌧𑍍𑌮𑍁𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌪𑍃𑌥𑌕𑍍 ॥
௧௯. 𑌸 𑌘𑍋𑌷𑍋 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌦𑌾𑌰𑌯𑌤𑍍 ।
𑌨𑌭𑌶𑍍𑌚 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌤𑍁𑌮𑍁𑌲𑍋 𑌵𑍍𑌯𑌨𑍁𑌨𑌾𑌦𑌯𑌨𑍍 ॥
௨௦. 𑌅𑌥 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍 𑌕𑌪𑌿𑌧𑍍𑌵𑌜𑌃 ।
𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑌾𑌤𑍇 𑌧𑌨𑍁𑌰𑍁𑌦𑍍𑌯𑌮𑍍𑌯 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌃 ॥
௨௧. 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌤𑌦𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍍 𑌇𑌦𑌮𑌾𑌹 𑌮𑌹𑍀𑌪𑌤𑍇 ।

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌰𑌥𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯 𑌮𑍇𑌽𑌚𑍍𑌯𑍁𑌤 ॥
௨௨. 𑌯𑌾𑌵𑌦𑍇𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍇𑌽𑌹𑌂 𑌯𑍋𑌦𑍍𑌧𑍁𑌕𑌾𑌮𑌾𑌨𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌕𑍈𑌰𑍍𑌮𑌯𑌾 𑌸𑌹 𑌯𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌮𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌰𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌮𑍇 ॥

---

௧௫. ஹ்ருஷீகேசன் பாஞ்சஜந்யத்தையும், அர்ஜுனன் தேவதத்தத்தையும், பயங்கரத்தொழிலனான வீமன் பௌண்ட்ரமென்னும் பெரியசங்கையும் முழக்கினார்கள்.

௧௬. குந்திகுமாரனான யுதிஷ்டிரராஜன் அநந்தவிஜயத்தையும், நகுலன் ஸுகோஷத்தையும், ஸஹதேவன் மணிபுஷ்பகத்தையும் (ஊதினார்கள்.)

௧௭. சிறந்தவில்லாளனான காசிராஜனும், மகாரதனான சிகண்டியும், த்ருஷ்டத்யும்நனும், விராடனும், (பகைவரால்)ஜயிக்கப்படாத ஸாத்யகியும்,

௧௮. துருபதனும், திரௌபதிகுமாரர்களும், உயர்தோளனான ஸுபத்ராகுமாரனும் ஆகிய ஸகலரும், பூபதியே! தனித்தனியாய்(தம்தம்)சங்குகளை முழக்கினார்கள்.

௧௯. ஆரவாரித்த அவ்வொலியானது, பூமியையும் ஆகாசத்தையும் எதிரொலிக்கும்படிசெய்வதாய்த் திருதராஷ்டிரனைச் சேர்ந்தவர்களின் நெஞ்சுகளைப் பிளந்தது.

அர்ஜுநன் தனது எதிரிகளை நோக்குதல்.

௨௦, ௨௧, ௨௨. வேந்தே! பின்பு (போர்வீரர்) ஆயுதங்களை வழங்கத் தலைப்பட்டவுடன், குரங்குக் கொடியையுடைய பாண்டவன், ஒழுங்காக அணிவகுக்கப்பட்டு நிற்கும் திருதராஷ்டிரஜனத்தாரைப் பார்த்து, (கையில்) வில் ஏந்தி, அப்பொழுது ஹ்ருஷீகேசனிடத்து இவ்வார்த்தையைக் கூறினான் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

“ போர்செய்யக் கருதி (இங்கு)நிற்கின்ற இவர்களை யான் பார்க்கக்கூடிய இடத்திலே, இருசேனைக்கும் நடுவிலே, அச்சுத! எனது தேரை நிறுத்துக. இப்போர்க்குழப்பத்திலே யான் எவருடன் போர்செய்ய வேண்டுமோ, (அவரைத் தெரிந்து வைத்துக்கொள்கிறேன். ஏனெனில்,)

உ௩. 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌵𑍇𑌕𑍍𑌷𑍇𑌽𑌹𑌂 𑌯 𑌏𑌤𑍇𑌽𑌤𑍍𑌰 𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌰𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌵𑌃 ॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

உ௪. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌰𑌥𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥
உ௫. 𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌮𑌹𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌉𑌵𑌾𑌚 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌪𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌨𑍍𑌸𑌮𑌵𑍇𑌤𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍂𑌨𑌿𑌤𑌿 ॥
உ௬. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑌿𑌤𑍄𑌨𑌥 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌨𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍄𑌨𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑌖𑍀𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
உ௭. 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌨𑍍𑌸𑍁𑌹𑍃𑌦𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑍇𑌨𑌯𑍋𑌰𑍁𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 ।
𑌤𑌾𑌨𑍍𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 ॥
உ௮. 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾𑌽𑌽𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌵𑌿𑌷𑍀𑌦𑌨𑍍𑌨𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌮𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌜𑌨𑌾𑌨𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑍂𑌨𑍍𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 ॥
உ௯. 𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑌮 𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍁𑌖𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌵𑍇𑌪𑌥𑍁𑌶𑍍𑌚 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌮𑍇 𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌶𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

உ௩. திருதராஷ்டிரபுத்திரனை கெடுபுத்தியானுக்கு [துர்யோதனனுக்கு]ப் போரிலே உதவிபுரியக்கருதி(ப்பற்பலதேசங்களிலிருந்து) இங்கு வந்துள்ள இவர்களை, போர்செய்ய வந்தவராகக் காண்கின்றேன்.''

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

உ௪, உ௫. பாரத! இவ்வாறு குடாகேசனாற் கூறப்பெற்ற ஹ்ருஷீகேசன், இரு சேனைக்கும் நடுவிலே, பீஷ்மருக்கும் துரோணருக்கும் (மற்றுமுள்ள) சகல அரசருக்கும் எதிரிலே சிறந்த தேரை நிறுத்தி, ''பார்த்த! (இங்குக்) கூடிய இக்கௌரவர்களைப் பார்'' என மொழிந்தனர்.

உ௬, உ௭. பார்த்தன்,—தந்தையரும், பாட்டனாரும், ஆசார்யரும், அம்மான்களும், பிராதாக்களும், புத்திரரும், பேரன்மார்களும், தோழர்களும், மாமனாரும், மித்திரரும் அங்கு இருசேனையிலும் நிற்கக் கண்டான்.

உ௭, உ௮. அவ்வுறவினரனைவரும் (அங்கு)நிற்கக் கண்டு, மிக்க இரக்கம் மேலிடப்பெற்று, மனத்திடனழிந்து கலங்கி அக்குந்தியின்குமாரன் இதனைச் சொல்லலாயினன்.

அர்ஜுனன் மனங்கலங்கிக்கூறும் சோகவார்த்தைகள்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

உ௮, உ௯. போர்புரிய எண்ணங்கொண்டு (போர்க்களத்திற்)போந்துள்ள இந்தஸ்வஜனத்தைப் பார்த்ததும், கிருஷ்ண! என் அவயவங்கள் சோர்கின்றன; வாயும் உலர்கின்றது; என் உடம்பில் நடுக்கமும் மயிர்க்கூச்சும் உண்டாகின்றன;

௩௦. 𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌂 𑌸𑍍𑌰𑌂𑌸𑌤𑍇 𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑍈𑌵 𑌪𑌰𑌿𑌦𑌹𑍍𑌯𑌤𑍇 !
𑌨 𑌚 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌤𑍁𑌂 𑌭𑍍𑌰𑌮𑌤𑍀𑌵 𑌚 𑌮𑍇 𑌮𑌨𑌃 ॥
௩௧. 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌿 𑌕𑍇𑌶𑌵 ।
𑌨 𑌚 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑌾𑌹𑌵𑍇 ॥
௩௨. 𑌨 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌜𑌯𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌨 𑌚 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌕𑌿𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌨 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌕𑌿𑌂 𑌭𑍋𑌗𑍈𑌰𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍇𑌨 𑌵𑌾 ॥
௩௩. 𑌯𑍇𑌷𑌾𑌮𑌰𑍍𑌥𑍇 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌗𑌾𑌃 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌤 𑌇𑌮𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥
௩௪. 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃 𑌤𑌥𑍈𑌵 𑌚 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ।
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌃 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌃 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌃 𑌶𑍍𑌯𑌾𑌲𑌾𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
௩௫. 𑌏𑌤𑌾𑌨𑍍𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌘𑍍𑌨𑌤𑍋𑌽𑌪𑌿 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌅𑌪𑌿 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍋𑌃 𑌕𑌿𑌂 𑌨𑍁 𑌮𑌹𑍀𑌕𑍃𑌤𑍇 ॥
௩௬. 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌃 𑌕𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌪𑌾𑌪𑌮𑍇𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍 𑌹𑌤𑍍𑌵𑍈𑌤𑌾𑌨𑌾𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 ॥
௩௭. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌹𑌾 𑌵𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌵𑌜𑌨𑌂 𑌹𑌿 𑌕𑌥𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑌿𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌮 𑌮𑌾𑌧𑌵 ॥

---

௩௦. காண்டீவமும் கையினின்று நழுவுகின்றது : உடம்பு முழுதும் எரிச்சலும் காண்கின்றது : என்னால் நிற்கவும் முடியவில்லை : என் மனமும் (மயங்கிச்)சுழல்கின்றது போலும்.

௩௧. கேசவ ! கெட்ட சகுனங்களும் காண்கிறேன். அன்றியும், போரில் ஸ்வஜனங்களைக் கொன்று, பின்பு (அதனாலாகும்) நன்மையுங் காணேன்.

௩௨. கிருஷ்ண ! எனக்கு வெற்றியும் வேண்டாம் : ராஜ்யமும் வேண்டாம் : ஸுகங்களும் வேண்டாம். கோவிந்த ! நமக்கு ராஜ்யத்தால்தான் என்ன ? போகங்களால்தான் என்ன ? உயிர்வாழ்க்கையினால்தான்* என்ன ?

௩௩, ௩௪. எவர்பொருட்டு நமக்கு ராஜ்யமும், போகங்களும், ஸுகங்களும் வேண்டுமோ, அந்த ஆசார்யரும், தந்தையரும், புத்திரரும், பாட்டனாரும், அம்மான்களும், மாமனார்களும், பேரன்மார்களும், மைத்துனர்களும், ஸம்பந்திகளுமாகிய இவர்களே உயிரையும் பொருளையும் விடத்துணிந்து போருக்கு(வந்து) நின்றுகொண்டிருக்கிறார்கள்.

௩௫. மதுஸூதந ! (இந்தத்துர்யோதனாதியர் என்னைக்)கொல்பவராயினும், (நான்) இவர்களைக் கொல்ல விரும்ப(வும்)மாட்டேன், மூவுலகராஜ்யமும் (எனக்குக்) கிடைப்பதென்றிருந்தாலும்; (ஆதலின், இம்)மண்ணுக்காக என்ன ?

௩௬. ஜநார்த்தந ! திருதராஷ்டிரபுத்திரரைக் கொன்றபின், நமக்கு உண்டாகும் ஸந்தோஷமென்ன ? இக்கொடும்பாவிகளைக் கொன்றால் நமக்குப் பாபமே வந்து சேரும்.

௩௭. ஆதலின், நாம் நமது பந்துக்களாகிய திருதராஷ்டிரகுமாரர்களைக் கொல்லத்தகாது. ஏனெனில், மாதவ ! ஸ்வஜனங்களைக் கொன்றுவிட்டு நாம் எப்படி ஸுகிகளாக இருப்போம் ?

௩௮. 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌲𑍋𑌭𑍋𑌪𑌹𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍇 𑌚 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍 ॥
௩௯. 𑌕𑌥𑌂 𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌪𑌾𑌪𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ॥
௪௦. 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥
௪௧. 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥
௪௨. 𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥
௪௩. 𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥
௪௪. 𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌨𑌰𑌕𑍇 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ॥
௪௫. 𑌅𑌹𑍋 𑌬𑌤 𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾 𑌵𑌯𑌮𑍍 ।
𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖𑌲𑍋𑌭𑍇𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 ॥

போரின் தீங்குகளைப்பற்றி அர்ஜுநன் வருந்துதல்.

௩௮, ௩௯. லோபத்தால் கெட்ட மனத்தினரான இவர்கள், குலநாசத்தாலான தீங்கையும் மித்திரத்துரோகத்தில் (விளையும்) பாதகத்தையும் அறியாவிட்டாலும், குலநாசத்தாலான தீங்கை (நாம்) நன்றாய்ப் பார்க்கும்பொழுது, நமக்கு இப்பாபத்தைத் தவிர்க்க எப்படித் தெரியாமற் போகும்?

௪௦. குலம் கெட்டுப்போகும்பொழுது ஸநாதநமான குலதருமங்கள் (அநுஷ்டானத்தில்) இல்லாமற்போகின்றன. தருமங்கள் இல்லாமற்போக, குலம் முழுவதையும் அதர்மம் வியாபிக்கின்றது.

௪௧. அதர்மம் வியாபித்தலால், கிருஷ்ண! குலஸ்திரீகள் கற்பழிந்துவிடுகிறார்கள். ஸ்திரீகள் கற்பழிய, வார்ஷ்ணேய! ஜாதிக்கலப்பு உண்டாகின்றது.

௪௨. ஜாதிக்கலப்பானது குலத்தைக் கெடுத்தவரது குலத்திற்கும் நரகத்திற்கு ஏதுவாகின்றது; ஏனெனில், இவர்களுடைய பிதிருக்கள் பிண்டக்கிரியையும் உதகக்கிரியையும் இழந்திட்டவராய் (நரகத்தில்) வீழ்கிறார்கள்.

௪௩. ஜாதிக்கலப்பை விளைவிப்பனவாகிய குடிகேடர்களுடைய இத்தீத்தொழில்களால், சாச்வதமான ஜாதிதருமங்களும் குலதருமங்களும் கெட்டழிந்துபோம்படி செய்யப்படுகின்றன.

௪௪. ஜநார்த்தந! குலதருமங்கெட்ட மனிதர்களுக்கு நரகத்திலே வாஸம் அவச்யம் உண்டெனக் கேட்டுள்ளோம்.

௪௫. ஆ! என்னே! மஹத்தான பாபஞ்செய்ய (அஞ்சாது) துணிந்திட்டோமே! ராஜ்யஸுகவிஷயமான கடும்பற்றினாலே ஸ்வஜனத்தைக் கொல்ல(வும்) முயன்றுளோமாதலின்.

௪௬. 𑌯𑌦𑌿 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌰𑌮𑍍 𑌅𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌯𑌃 ।
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾 𑌰𑌣𑍇 𑌹𑌨𑍍𑌯𑍁𑌃 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌕𑍍𑌷𑍇𑌮𑌤𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௪௭. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇 𑌰𑌥𑍋𑌪𑌸𑍍𑌥 𑌉𑌪𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ।
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌸𑌶𑌰𑌂 𑌚𑌾𑌪𑌂 𑌶𑍋𑌕𑌸𑌂𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌾𑌨𑌸𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

---

௪௬. கையில் ஆயுதத்தையுடைய திருதராஷ்டிர புத்திரர், போரில் (அவர்களை) எதிர்க்காமலும் (கையில்)ஆயுதமில்லாமலும் இருக்கின்ற என்னைக் கொல்வார்களானால், அது எனக்கு அதிக நன்மை யாகும்.

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௪௭. அர்ஜுனன், இவ்வாறு சொல்லி, அம்போடு வில்லையும் போர்க்களத்தில் (கீழே) எறிந்து, சோகத்தால் பதைத்த மனத்தினனாய்த் தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டான்.

நூறாயிரக்கிரந்தஸம்ஹிதையாய் வியாஸர் அருளிச்செய்த ஸ்ரீ மஹாபாரதத்திலே பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத்பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்தையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுனஸம்வாதத்திலே அர்ஜுனவிஷாதயோகமென்னும் முதல்அத்தியாயம் முற்றும்.

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌃 ॥

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௧. 𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌪𑌯𑌾𑌽𑌽𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑌶𑍍𑌰𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌕𑍁𑌲𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌵𑌿𑌷𑍀𑌦𑌨𑍍𑌤𑌮𑌿𑌦𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍁𑌵𑌾𑌚 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௨. 𑌕𑍁𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌶𑍍𑌮𑌲𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌷𑌮𑍇 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌨𑌾𑌰𑍍𑌯𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍍𑌯𑌮𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌕𑌰𑌮𑌰𑍍𑌜𑍁𑌨 ॥

௩. 𑌕𑍍𑌲𑍈𑌬𑍍𑌯𑌂 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌗𑌮𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

௪. 𑌕𑌥𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌮𑌹𑌂 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇 𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌚 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌇𑌷𑍁𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑌾𑌵𑌰𑌿𑌸𑍂𑌦𑌨 ॥

௫. 𑌗𑍁𑌰𑍂𑌨𑌹𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌪𑍀𑌹 𑌲𑍋𑌕𑍇 ।
𑌹𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍂𑌨𑌿𑌹𑍈𑌵

இரண்டாம் அத்தியாயம் ; ஸாங்க்யயோகம்.

பகவான், அர்ஜுநன் மனநோய்ம்மையைக் கண்டித்தல்.

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௧. அவ்வாறு இரக்கம் மேலிட்டு, கண்களில் நீர் நிரம்பித் ததும்பப்பெற்று மனமேங்கிநிற்கின்ற அவனுக்கு மதுஸூதனன் இவ்வார்த்தையைக் கூறலானார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௨. அஸத்துக்கள் கைக்கொண்டதும், ஸ்வர்க்கத்தை அடையவொட்டாமல் தடுப்பதும், பழியைமிகுவிப்பதுமான இம்மனநோய்ம்மையானது, (இந்த யுத்த) ஸங்கடத்திலே உனக்கு எங்கிருந்து வந்ததோ ? அர்ஜுன !

௩. பார்த்த! ஆண்மையற்றதன்மைக்கு உட்படாதே; இது உனக்குத் தகாது. பரந்தப ! இந்த இழிவான மனநோய்ம்மையைத் தூரத்தள்ளிவிட்டு எழுந்திரு.

அர்ஜுநன், பகவான் உபதேசத்தை நாடுதல்.

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௪. மதுஸூதந ! (புஷ்பாதிகளால்) பூஜிக்கத்தக்கவர்களான பீஷ்மரையும் துரோணரையும் யான் எப்படிப் போரில் அம்புகளால் எதிர்த்துச் சண்டைசெய்வேன்? அரிஸூதந !

௫. மாட்சிமைதங்கிய மகான்களைக் கொல்லாமல் இவ்வுலகிலே பிச்சையெடுத்துப் புசித்தலும் நல்லதாம் [அதாவது, மகான்களைக் கொன்று அரசாள்வதைவிட, க்ஷத்திரியனுக்கு நிஷித்தமாயுள்ள பிச்சையெடுத்துப்பிழைத்தலே மேலானதாம்]. யான் பெரியோர்களைக் கொன்றுவிட்டாலோ, இரத்தந்தோய்ப் பெற்றவை

𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌰𑍁𑌧𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌨𑍍 ॥
௬. 𑌨 𑌚𑍈𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌮𑌃 𑌕𑌤𑌰𑌨𑍍𑌨𑍋 𑌗𑌰𑍀𑌯𑍋
𑌯𑌦𑍍𑌵𑌾 𑌜𑌯𑍇𑌮 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌨𑍋 𑌜𑌯𑍇𑌯𑍁𑌃 ।
𑌯𑌾𑌨𑍇𑌵 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌜𑌿𑌜𑍀𑌵𑌿𑌷𑌾𑌮𑌃
𑌤𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍇 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌃 ॥
௭. 𑌕𑌾𑌰𑍍𑌪𑌣𑍍𑌯𑌦𑍋𑌷𑍋𑌪𑌹𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃
𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌮𑍂𑌢𑌚𑍇𑌤𑌾𑌃 ।
𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌤𑌨𑍍𑌮𑍇
𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 ॥
௮. 𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌮𑌾𑌪𑌨𑍁𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌚𑍍𑌛𑍋𑌕𑌮𑍁𑌚𑍍𑌛𑍋𑌷𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑌾𑌪𑍍𑌯 𑌭𑍂𑌮𑌾𑌵𑌸𑌪𑌤𑍍𑌨𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌚𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

𑌸𑌞𑍍𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௯. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪𑌃 ।
𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌬𑌭𑍂𑌵 𑌹 ॥

யான [1] ஸம்பத்து காமம் போகம் இவைகளை இவ்வுலகிலேயே அனுபவிக்கவேண்டும்.

௬. மேலும், (பிச்சையெடுத்துப்பிழைத்தல் ஸ்வஜாதிதருமமென்று போர் புரிதல் என்ற இவ்விரண்டனுள்) எது நமக்கு மேலானதோ? (நாமே அவர்களை) வெல்வோமோ?—அல்லது (அவர்களே) நம்மை வெல்வாரோ? (என்ற) இதுவும் நமக்குத் தெரியாது. (நாம்)எவர்களைக் கொன்றபின்னர் உயிர்வாழவிரும்பமாட்டோமோ, அந்தத் திருதராஷ்டிர புத்திரர்களே (இப்போர்க்களத்தில் நமக்கு) எதிரே வந்து நிற்கிறார்கள்.

௭. லோபம் என்ற குற்றத்தினால் கெட்டழிந்த மனத்தினனாய், தருமவிஷயத்திலே மனம்திகைத்த அடியேன் (யாது நன்மை ? எனத்) தங்களை வினவுகின்றேன்; எது உறுதியான நன்மையோ, அதனை எனக்கு உரைப்பீர்களாக; (ஏனெனின்,) நான் தங்களுடைய சிஷ்யனாகின்றேன்: தங்களை வந்தடைந்த எனக்கு, (நல்வழிப்படுமாறு) அறிவுறுத்தியருளுக. [லோபம்-இங்கு, ராஜ்யத்தைப் பெறவேணுமென்ற ஆசை.]

௮. உலகிலே பகைவாற்றதாய்ச் செழித்திருக்கும் ராஜ்யமும், தேவர்கட்குத் தலைவனாயிருத்தலும் கிடைக்கபெற்றாலும், புலன்களை(த் தீப்போல) அழற்றுகின்ற தான என்துயரத்தைப் போக்குவது இன்னதென்று எனக்குத் தெரியவே இல்லை [இந்திரபதவியைப் பெற்றாலும், என் துயரம் தீருமாறு இல்லை].

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௯. பகைவரை எரிக்கும் குடாகேசன், இவ்வாறு ஹ்ருஷீகேசனிடம் சொன்னபின்பு, "போர் புரியமாட்டேன்" என்று(ம்) கோவிந்தனிடஞ் சொல்லிவிட்டு (மேலொன்றும்) பேசாமலே இருந்திட்டான்.

---

[1] "தான் ராஜபோகம் அநுபவித்தற்காக அர்ஜுநன் மகான்களைக் கொன்றுவிட்டான்" என்னும் அபகீர்த்தி வியாபிக்குமாதலின், ஸம்பத்தின் அநுபவமும், காமநுகர்ச்சியும் இரத்தந் தோய்ந்தவை போல மிக்க அருவருப்பானவை.

கo. தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத ।
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ॥

அத்ர ச 'த்ருஷ்ட்வா து பாண்டவாநீகம்' இத்யாரப்ய யாவத் 'ந யோத்ஸ்ய இதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ ॥' இத்யேதத³ந்த: ப்ராணிநாம் ஶோகமோஹாதிஸம்ஸாரபீஜபூததோஷோத்பவகாரணப்ரதர்ஶநார்தத்வேந வ்யாக்யேயோ க்ரந்த: । ததா ஹி—அர்ஜுநேந ராஜ்யகுருபுத்ரமித்ரஸுஹ்ருத்ஸ்வஜநஸம்பந்திபாந்தவேஷு 'அஹமேதேஷாம்', 'மமைதே' இத்யேவம்ப்ரத்யயநிமித்தஸ்நேஹவிச்சேதாதிநிமித்தௌ ஆத்மந: ஶோகமோஹௌ ப்ரதர்ஶிதௌ 'கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே' இத்யாதிநா । ஶோகமோஹாப்யாம் ஹி அபிபூதவிவேகவிஜ்ஞாந: ஸ்வத ஏவ க்ஷத்ரதர்மே யுத்தே ப்ரவ்ருத்தோऽபி தஸ்மாத் யுத்தாதுபரராம; பரதர்மம் ச பிக்ஷாஜீவநாதி கர்தும் ப்ரவவ்ருதே । ததா ச ஸர்வப்ராணிநாம் ஶோகமோஹாதிதோஷாவிஷ்டசேதஸாம் ஸ்வபாவத ஏவ ஸ்வதர்மபரித்யாக: ப்ரதிஷித்தஸேவா ச ஸ்யாத் । ஸ்வதர்மே ப்ரவ்ருத்தாநாமபி தேஷாம் வாங்மந:காயாதீநாம் ப்ரவ்ருத்தி: பலாபிஸந்திபூர்விகைவ ஸாஹ-

---

கo. பாரத! இருசேனைக்கும் இடையே (இவ்வாறு)மனங்கலங்கிநிற்கும்அவனுக்கு, ஹ்ருஷீகேசன், புன்னகைசெய்கிறவர்போன்று இவ்வார்த்தையைக் கூறலாயினர்: [புன்னகை செய்கிறவர் போன்று=(தேறுதல் சொல்லுதற்காகப்) பிரஸன்னமுகராகி.]

ஆத்மஞானமே துன்பத்தை அறத் துடைக்கும்.

இங்கு "துர்யோதனராஜன்" (க-உ) என்பது முதல் "போர்புரியமாட்டேனென்று(ம்) கோவிந்தனிடஞ்சொல்லிவிட்டு (மேலொன்றும்) பேசாமலே இருந்திட்டான்" (உ-கூ) என்பது ஈருகவுள்ள நூல், ஸம்ஸாரத்திற்கு வித்துக்களான சோக மோகாதித்தீங்குகள்(எல்லாம்)பிராணிகளுக்குஉண்டாவதன்காரணத்தை நன்குவிளக்குவதாக உரைக்கவேண்டும். எங்ஙனமெனில்—ராஜ்யமும், பெரியோரும், புத்திரரும், மித்திரரும், ஸுஹ்ருத்துக்களும், தன்ஜனங்களும், ஸம்பந்திகளும், பந்துக்களுமாகிய இவர்களின்மீது "நான் இவர்களைச் சேர்ந்தவன், இவர்கள் என்னைச் சேர்ந்தவர்" என்ற இத்தகைய எண்ணத்தால் உண்டாகும் பற்றினாலும், (அப்படித், தான் பற்று வைத்த அவர்களை) இழந்துவிடுதலாலும், இன்னும் (இவைபோன்ற)பிறவற்றாலும் விளைவனவாகிய தனது சோகமோகங்கள், "மதுஸூதந! (புஷ்பாதிகளால்) பூஜிக்கத்தக்கவர்களான" (உ-ச) என்பது முதலாக (ஐந்து சுலோகங்களால்) அர்ஜுனனால் நன்கு காட்டப்பட்டன. க்ஷத்திரியதருமமாகிய யுத்தத்தைத் தானேமேற்கொண்டு (போர்க்களத்திற்கு வந்து) இருந்தும், (தன்)விவேகபுத்தி (நிலைகுலைந்து கலங்கும்படி) சோக மோகங்களாலே தாக்கப்பட்டவனாய் அந்தயுத்தத்தைத் தவிர்ந்தான். பிற[ஸந்யாஸி] தருமமாகிய பிச்சையெடுத்துஜீவித்தல் முதலியனவும் செய்யத்தலைப்பட்டான். அவ்விதமாகவே, சோகமோகாதியான தீங்குகள்நிறைந்துகிடக்கும் மனத்தினையுடைய ஸகல பிராணிகளும் இயல்பாகவே தமது தருமத்தைக் கைவிடலும், விலக்கியதைக் கைக்கொள்ளலும் கூடும். தமது தருமத்தை மேற்கொண்டு ஒழுகுபவராயினும், அவர்களுடைய மனம் மொழி மெய் முதலியவைகளின் போக்கு, பயனை எதிர்பார்த்தலை முன்னிட்டு நின்றே(நான் என்னும்)அகங்காரத்தோடு அமைந்துள்ளது. அவர்கள் இப்படி

𑌙𑍍𑌕𑌾𑌰𑌾 𑌭𑌵𑌤𑌿। 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌚𑌯𑌾𑌤𑍍 𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌜𑌨𑍍𑌮𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖-𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌃 𑌅𑌨𑍁𑌪𑌰𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿। 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑍀𑌜𑌭𑍂𑌤𑍌 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑍌। 𑌤𑌯𑍋𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌤𑌦𑍍 𑌉𑌪𑌦𑌿𑌦𑌿𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌮𑌰𑍍𑌜𑍁𑌨𑌂 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌆𑌹 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 ‘𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 —

𑌅𑌤𑍍𑌰 𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌹𑍁𑌃—𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤 𑌏𑌵। 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿? 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍌𑌤𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌸𑌹𑌿𑌤𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌇𑌤𑌿। 𑌜𑍍𑌞𑌾𑌪𑌕𑌂 𑌚 𑌆𑌹𑍁𑌃 𑌅𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯—‘𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌨 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿’, ‘𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇,’ ‘𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿। 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌯 𑌇𑌤𑌿 𑌇𑌯𑌮𑌪𑌿 𑌆𑌶𑌙𑍍𑌕𑌾 𑌨 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾। 𑌕𑌥𑌂? 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌯𑍁𑌦𑍍𑌧𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍁𑌰𑍁𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌹𑌿𑌂𑌸𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑍍𑌰𑍂𑌰𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌯; 𑌤𑌦𑌕𑌰𑌣𑍇 𑌚—‘𑌤𑌤𑌃

யிருத்தலால், தருமஅதருமங்களின்பெருக்கத்தால் நல்லனதீயனவான பிறவிகளையும் இன்பதுன்பங்களையும்அடைதலாகிய ஸம்ஸாரமானது ஒழிவின்றிநிற்கின்றது. ஆகவே, சோகமோகங்கள் ஸம்ஸாரத்திற்கு வித்துக்களாம். அவைகளோ, ஸகலகர்மங்களையும்துறத்தலை முன்னிட்டதான ஆத்மஞானத்தினாலன்றி நீங்கா என்று அதனை [ஆத்மஞானத்தை] ஸகலலோகாநுக்கிரகத்தின்பொருட்டு உபதேசிக்க விரும்பியவராய், அர்ஜுனனைக் காரண [வியாஜ] மாகக்கொண்டு பகவான் வாஸுதேவன் “நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரைக் குறித்து” (௨-௧௧) என்பதாதியாக அருளிச்செய்யலானார் :

ஞானம் கர்மம் இரண்டுங்கூடியே முக்திக்கு ஸாதநமாம் என்னும் கோள்கை.

இவ்விஷயத்திலே, “ஸகலகர்மங்களையும் துறத்தலை முன்னிட்டதான ஆத்மஞானநிஷ்டையாலேமாத்திரம் முக்தி கிடைக்கவேகிடைக்காது. மற்று என்னையோவெனின், அக்நிஹோத்ராதி ச்ரௌதகர்மங்களையும், (ஔபாஸநாதி)ஸ்மார்த்தகர்மங்களையும்[துணையாகப்பெற்ற ஞானத்தினால்(தான்)முக்தி கிடைக்குமென்பது, கீதைமுழுவதிலும் நிர்ணயிக்கப்பட்ட பொருள்” என்று சிலர் கூறுகிறார். இதுதான் கீதையின் பொருள் என்பதற்கு அறிகுறியாகவும், “ இனி நீ இந்த நியாயமான யுத்தத்தைச் செய்யாவிடில்”(௨-௩௩),“கர்மத்திலேதான் உனக்கு அதிகாரம்” (௨-௪௭),“ஆதலால், நீ கர்மத்தையே செய்யக்கடவாய்” (௪-௧௫)என்பன முதலியவற்றை(மேற்கோளாக எடுத்துக்) கூறுகின்றனர். ‘வேதத்தில் விதித்த கர்மமானது, ஹிம்ஸை [கொலை] முதலியன கூடியுள்ளமையால் அதருமத்தின்பொருட்டாகின்றது’ என்ற இச்சங்கையும் படவேண்டாம். எப்படியெனில்—க்ஷத்திரியனுக்குஉரிய யுத்தமென்னும்கர்மமானது, மூத்தோர் ஸஹோதரர் புத்திரர் முதலாயினோரை ஹிம்ஸிப்பதாய்(இருத்தலால்) மிகக்கொடியதாயினும், தனது[க்ஷத்திரியனது] தொழில் என்ற காரணத்தால் அதருமமாகாது. அதனைச் செய்யாவிடிலோ “நீ ஸ்வ [உன்]தருமத்தையும் விட்டு, புகழையும் இழந்து,

𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 । ’ 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌶𑍍𑌵𑌾𑌦𑌿𑌹𑌿𑌂𑌸𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌪𑌾𑌪𑌮𑍇𑌵 𑌨 𑌶𑍍𑌰𑍇𑌯 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 ॥

𑌤𑌦𑌸𑌤𑍍 ; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌯𑍋𑌃 𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑍍𑌵𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌯𑍋𑌃 । ‘𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌯𑌾𑌵𑌤𑍍 ‘𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯’ 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌨𑍍𑌤𑍇𑌨 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌨 𑌯𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌷𑌡𑍍𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌕𑌰𑍍𑌤𑌾 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾𑌤𑍍 𑌯𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌸𑌾 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌸𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌮𑍁𑌚𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑍇 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌃 । 𑌏𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌵𑍇𑌕𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍋 𑌯𑍋𑌗𑌃 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌸𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌾𑌮𑍁𑌚𑌿𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 ।

பாபத்தை அடைவாய்" (உ-௩௩) என (ஸ்ரீ பகவான்) அருளிச்செய்கிறார்; செய்யவே, "உயிர்வாழ்க்கைமுழுதும்"[1] என்றுதொடங்கும் சுருதியினாலும், மற்றும்இதுபோன்ற சுருதிகளாலும் விதிக்கப்பட்டவையாய்ப் பசுமுதலானவற்றை ஹிம்ஸித்தலாகிய கர்மங்கள் ஏற்கெனவே[2] அதருமமாகா எனத் தீர்ந்த முடிவாகக் கூறப்பட்டதாகின்றது.

ஸாங்க்யத்தையும், யோகத்தையும் பகுத்தல்.

அது சரியன்று; இருவகைத்தான புத்தியை (முறையே) சார்ந்துநிற்கும் ஞான கர்மநிஷ்டைகளை (ஸ்ரீ பகவான்) வேறாகப் பிரித்துரைக்கின்ற திருவாக்கினாலென்க. "நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரை" (உ-௧௧) என்பது முதல் "ஸ்வதருமத்தை நோக்கும்பொழுதும்" (உ-௩௧) என்பதுவரையிலுமுள்ள நூலினால், பரம்பொருளான எந்த ஆத்மதத்துவமானது, பகவானால் உணர்த்தப்பட்டதோ, அது ஸாங்க்யமாம். ஆத்மாவுக்குப் பிறப்புமுதலியவிகாரங்கள் இல்லாமையினால் 'ஆத்மா அகர்த்தா' (உ-௧௯, ௨௦) என்னும் ப்ரகரணத்தின்பொருளை உய்த்துணர்தலால் அவ்[ஆத்மதத்துவ]விஷயமாக யாதொரு (நிச்சய)புத்தி பிறக்கின்றதோ, அது ஸாங்க்ய புத்தியாம். அது எந்த ஞானிகளுக்கு உரித்தாயுள்ளதோ, அவர் ஸாங்க்யர்களாவர். இந்த(ஸாங்க்ய)புத்தி உண்டாவதற்குமுன்னர், ஆத்மாவை, உடம்புமுதலியவற்றினின்றும் வேறாகவும் கர்த்தாவாகவும் போக்தாவாகவும் மற்றும்இத்தன்மையதாகவும் பாவித்துக்கொண்டு (அதற்குஏற்பத்)தருமஅதருமங்களின் பகுத்தறிவுகூடி,[3] முக்திக்கு ஸாதந(மான கர்ம)த்தை அநுஷ்டித்தல் யோகமாம். அது விஷயமான (நிச்சய) புத்தி யோகபுத்தியாம். அது (ஸ்வ)கர்மத்தைச்செய்யும் எவர்க்கு உரித்தாயுளதோ,

---

[1] "𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌮𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌂 𑌜𑍁𑌹𑍋𑌤𑌿 [உயிர்வாழ்க்கைமுழுதும் அக்நிஹோத்ரஞ்செய்ய வேண்டும்]" என்பது 𑌬𑌹𑍍𑌵𑍃𑌚𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌮𑍍.

[2] ஆசார்யர்முதலானோரை ஹிம்ஸித்தலாகிய யுத்தம்முதலியனவான ஸ்மார்த்தகர்மங்களே அதர்மமாகா என்றால்,ஸ்மிருதியினும்மேலான சுருதியில் விதித்த பசுஹிம்ஸாதி கர்மங்கள் அதர்மமாகா என்பது, தானே அமையுமென்றவாறு.

[3] அஜ்ஞானியின் கருத்துக்கு, ஆத்மா உடல் முதலியவற்றிற்கு வேறாகவும், கர்த்தாவாகவும், போக்தாவாகவும் காணப்படுகின்றதாதலின், அவன் இது தருமம், இது அதர்மம் எனக் கல்வி கேள்விகளால் பகுத்தறிந்து, அதருமத்தை விலக்கி, தருமத்தைக் கைக்கொண்டு, அதனை ஈச்வரார்ப்பணமாக அநுஷ்டிக்கவேண்டும் என்பது, கர்மயோகத்தின் லக்ஷணத்தால் அமையுமாறு கண்டுகொள்க.

𑌤𑌥𑌾 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍇 𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍇 ‘𑌏𑌷𑌾 𑌤𑍇𑌽𑌭𑌿𑌹𑌿𑌤𑌾 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋𑌗𑍇 𑌤𑍍𑌵𑌿𑌮𑌾𑌂 𑌶𑍃𑌣𑍁 ।’ 𑌇𑌤𑌿 । 𑌤𑌯𑍋𑌶𑍍𑌚 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 — ‘𑌪𑍁𑌰𑌾 𑌵𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾’ 𑌇𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 — ‘𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍’ 𑌇𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍇 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌏𑌵 𑌉𑌕𑍍𑌤𑍇, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌨𑍇𑌕𑌤𑍍𑌵𑍈𑌕𑌤𑍍𑌵𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌯𑍋𑌃 𑌯𑍁𑌗𑌪𑌦𑍇𑌕𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌾𑌸𑌂𑌭𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌾 । 𑌯𑌥𑌾 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌚𑌨𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌉𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌶𑌾𑌤𑌪𑌥𑍀𑌯𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 — ‘𑌏𑌤𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌾𑌜𑌿𑌨𑍋 𑌲𑍋𑌕𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌿 ।’ 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌤𑌚𑍍𑌛𑍇𑌷𑍇𑌣 ‘𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑍋 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨𑍋𑌽𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌽𑌯𑌂 𑌲𑍋𑌕𑌃’ 𑌇𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌦𑌾𑌰𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ‘𑌪𑍁𑌰𑍁𑌷𑌃’ ‘𑌜𑍍𑌞𑌾𑌤𑌾’ 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍇𑌤𑌾

அவர் யோகியர். அப்படியே, தனித்தனியான இரண்டுபுத்திகள் "ஸாங்க்யவிஷயத்திலே உனக்கு இந்தப் புத்தியானது சொல்லப்பட்டது; இனி நீ யோகவிஷயத்திலே இந்தப்புத்தியைக் கேள்" (உ-௩௯) எனப் பகவானாலே குறிப்பிட்டுக்காட்டி உணர்த்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள், ஸாங்க்யபுத்தியைச் சார்ந்து நிற்கும் ஞானயோகநிஷ்டையை "வேதமாகிய என்னால் முன் கூறப்பட்டது" (௩-௩) என ஸாங்க்யர்களுக்குத் தனியாய்க் கூறுவர். அவ்வாறே, யோகபுத்தியைச் சார்ந்து நிற்கும் கர்மயோகநிஷ்டையை "கர்மயோகத்தால் யோகிகளுக்கு" (௩-௩) என (யோகிகளுக்குத்) தனியாய்க் கூறுவர். கர்த்தாவென்னும் உணர்வையும் அநேகமென்னும்உணர்வையும் சார்ந்து நிற்பதான கர்மமும், அகர்த்தாவென்னும் உணர்வையும் ஏகமென்னும் உணர்வையும் சார்ந்து நிற்பதான ஞானமும் ஒருத்தனையே ஒருங்கு சார்ந்துநிற்கக்கூடாமையைக் கண்டு, பகவானேஇவ்வாறு ஸாங்க்யபுத்தியையும்யோகபுத்தியையும்குறித்து இரண்டு நிஷ்டைகளைத் தனித்தனியாக (ப் பிரித்து)க்கூறலானார். (ஸ்ரீபகவான்) பிரித்துரைக்கின்ற இத்திருவாக்கு எப்படியோ, அப்படியே சதபதப்பிராமணத்திலும் "பற்றற்றவராய் இதே லோகத்தை [அதாவது-ஆத்மாவை](ப் பெற) விரும்பும் பிராமணர்கள் உலகவியாபாரங்களை ஒழித்திடவேண்டும்" என்று ஸகலகர்மத்தினது துறவு விதித்து, "இந்த ஆத்மாவாகிய இவ்வுலகினுள்ள எங்களுக்கு மக்களா லாவதென்ன?" (பி-௪-௪-௨௨) என்ற அதன் [1]சேஷத்தினால்,(ஞானமானது,கர்மத்தினின்றும் வேறாகக்) காட்டப்பட்டுள்ளது. பின்னும் அதனுள், சுருதிமுதலியவற்றில் விதித்த ஸகலகர்மங்களும், "அஜ்ஞானியானஒருவன் (தான்) மணஞ்செய்துகொள்வதற்குமுன் (வேதத்திற்

1 "எது மற்றொன்றிற்குப் பயன்படுகின்றதோ [அதாவது-எது வேறொன்றை வற்புறுத்துகின்றதோ]அது அதன் சேஷமாம்" (ஜைமினிஸூத்ரம் ௩-௧-௨: சபரபாஷ்யம்). "அஜ்ஞானியாவான் இவ்வுலகத்திலே இம்மைப்பயனையும், பிதிருலோகத்திலே மறுமைப்பயனையும் நன்மக்களைப் பெறுதலால் ஸாதித்துக்கொள்கிறான். ஞானியோ, எங்கும் ப்ரஹ்மமாகவே இருக்கிறான். அந்த ப்ரஹ்மமோ நன்மக்கள் முதலிய எவற்றாலும் ஸாத்யமன்று. ஆகவே, அந்த ப்ரஹ்மத்தை அடையவிரும்புபவர்கள் உலகவியாபாரங்களை ஒழித்திடவேண்டும்" என "பற்றற்றவராய்" என்னும் முந்தின வாக்கியத்தை "இந்த ஆத்மாவாகிய" என்னும் பிந்தின வாக்கியம் வற்புறுத்துமாறு கண்டுகொள்க.

யமஜிஜ்ஞாஸோத்தரகாலம் லோகத்ரயஸாதநம் — 'புத்ரம்' த்விப்ரகாரம் ச 'வித்தம்' 'மாநுஷம்' 'தைவம்' ச ; தத்ர மாநுஷம் கர்மரூபம் பித்ருலோகப்ராப்தி-ஸாதநம், வித்யா ச தைவம் வித்தம் தேவலோகப்ராப்திஸாதநம் — 'ஸோऽகா-மயத' இதி அவித்யாகாமவத ஏவ ஸர்வாணி கர்மாணி ச்ரௌதாதீநி தர்சிதாநி 'தேப்ய: வ்யுத்தாய ப்ரவ்ரஜந்தி' இதி வ்யுத்தாநம் ஆத்மாநமேவ லோகம் இச்சத: அகாமஸ்ய விஹிதம் । ததேதத் விபாகவசநம் அநுபபந்நம் ஸ்யாத், யதி ச்ரௌதகர்மஜ்ஞாநயோ: ஸமுச்சய: அபிப்ரேத: ஸ்யாத் பகவத: ॥

ந ச அர்ஜுநஸ்ய ப்ரச்ந: உபபந்நோ பவதி 'ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே' இத்யாதி: । ஏகபுருஷாநுஷ்டேயத்வாஸம்பவம் புத்திகர்மணோ: பகவதா பூர்வம் அநுக்தம் கதம் அர்ஜுந: அச்ருதம் புத்தேச்ச கர்மணோ ஜ்யாயஸ்த்வம் பகவதி அத்யாரோபயேத் ம்ருஷைவ 'ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்தி:' இதி ॥

கிஞ்ச — யதி புத்திகர்மணோ: ஸர்வேஷாம் ஸமுச்சய: உக்த: ஸ்யாத், அர்ஜுநஸ்யாபி ஸ உக்த ஏவேதி 'யச்ச்ரேய ஏதயோரேகம் தந்மே ப்ரூஹி ஸுநிச்சிதம்' இதி கதம் உபயோ: உபதேசே ஸதி அந்யதரவிஷய ஏவ ப்ரச்ந: ஸ்யாத்? ந ஹி பித்த-

---

கூறிய) தருமங்களை ஆராய்ந்தபின்பு, (மானுஷலோகம், பிதிருலோகம், தேவலோகமென்ற) மூவுலகங்களையும் அடைதற்கு ஸாதனமான புத்திரனையும், மானுஷம் தெய்வமென்றஇருவகைச்செல்வத்தினையும்—அவற்றுள் மானுஷச்செல்வமென்பது பித்ருலோகமடைதற்கு ஸாதநமாய்க் கர்மஸ்வரூப(மு)மா யிருப்பது; தெய்வச்செல்வமென்பது தேவலோகமடைதற்கு ஸாதநமான வித்யை[அதாவது, உபாஸனை]—அவன் விரும்பினான்'' (பி - ௧ - ௪ - ௧௭) என, அஜ்ஞானமும் காமமும் உடையவனுக்கே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை முற்றத்துறத்தல்,ஆத்மாவாகிய லோகத்தையே நாடுபவனுய்க் காமமற்றிருப்பவனுக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சுருதியில் விதித்த கர்மமும், ஞானமுமாகிய இரண்டுங் கூடுதலே பகவான் கருத்தெனில், அப்பொழுது (அ·ா) பிரித்துரைக்கின்ற இத்திருவாக்கானது பொருத்தமில்லாததாகும்.

ஞானம் கர்மம் என்ற இரண்டுங்கூடுதலென்பது பகவான் மேலேசொல்வதோடு இயையாமை.

மேலும், "ஞானமானது" (௩ - ௧) என்பது முதலாகவுள்ள அர்ஜுனன் வினு ஏற்காது. ஒருவனே ஞானகர்மங்களை (ஒருங்கே) அநுஷ்டிக்கமுடியாதென்பதும், ஞானமானது கர்மத்திலும் மேலானதென்பதுமாகிய இவை—பகவான் முன் சொல்லாதனவும், (தனது செவிகளால்) கேளாதனவுமாக இருக்க, அவற்றை, "ஞானமானது கர்மத்தினும் மேலானதென்பது தங்களுடைய கருத்தானுல்" (௩-௧) எனப் பகவானிடத்து அர்ஜுனன் பொய்யாக எப்படி ஏற்றக்கூடும்?

அன்றியும், ஞானம் கர்மம்என்ற இரண்டுங்கூடுதல் யாவர்க்குமே உரைக்கப்பட்டதென்றுல், அது அர்ஜுனனுக்கும் உரைக்கப்பட்டதுதான்; எனவே, "(கர்மஞ் செய்தலும் தவிர்தலுமாகிய) இவ்விரண்டனுள் மிக்க நலமுள்ளஒன்றை எனக்குத் தேர்ந்தமுடிவாக உரைத்தருளுவீராக" (௫ - ௧) என இரண்டில் ஏதாவதொன்றைப் பற்றியதாகவே எப்படி (அவன்) வினவலாகும்? (உதாரணமாக,) தனது பித்தந்

पित्तप्रशमनार्थिना मधुरं शीतलं च भोक्तव्यम् इति उपदिष्टे 'तयोः अन्यतरत् पित्तप्रशमनकारणं ब्रूहि' इति प्रश्नः संभवति ॥

अथ अर्जुनस्य भगवदुक्तवचनार्थविवेकानवधारणनिमित्तः प्रश्नः कल्प्येत; तथापि भगवता प्रश्नानुरूपं प्रतिवचनं देयं 'मया बुद्धिकर्मणोः समुच्चयः उक्तः, किमर्थम् इत्थं त्वं भ्रान्तोऽसि?' इति। न तु पुनः प्रतिवचनं प्रश्नाननुरूपम् अन्यदेव 'द्वे निष्ठे मया पुरा प्रोक्ते' इति वक्तुं युक्तम् ॥

नापि स्मार्तेनैव कर्मणा बुद्धेः समुच्चये अभिप्रेते विभागवचनादि सर्वम् उपपन्नम् । किञ्च — क्षत्रियस्य युद्धं स्मार्तं कर्म स्वधर्म इति जानतः 'तत् किं कर्मणि घोरे मां नियोजयसि' इति उपालम्भः अनुपपन्नः ॥

तस्मात् गीताशास्त्रे ईषन्मात्रेणापि श्रौतेन स्मार्तेन वा कर्मणा आत्मज्ञानस्य समुच्चयो न केनचित् दर्शयितुं शक्यः ॥

यस्य तु अज्ञानात् रागादिदोषतो वा कर्मणि प्रवृत्तस्य यज्ञेन दानेन तपसा वा विशुद्धसत्त्वस्य ज्ञानम् उत्पन्नं परमार्थतत्त्वविषयम् 'ए-

தணித்துக்கொள்ளவேண்டிய (ஒரு)வனுக்கு 'இனிமையும், குளிர்ச்சியுமான பதார்த்தங்களைப் புஜிக்கவேண்டும்' என்று வைத்தியன் உரைத்தால் "அவ்விரண்டனுள், பித்தந் தணிதற்குக் காரணமான ஏதாவதொன்றைச் சொல்" என வினவுதல் நிகழாதன்றே !

இனி, அர்ஜுனனுடைய வினவானது, பகவான் அருளிச்செய்த திருவாக்கின் பொருளை(த் தன்) விவேகத்தினால் சரியாகத்தெரிந்துகொள்ளாமையினால் வந்ததாகக் கொள்ளலாமென்றால், அப்பொழுது, பகவான் "யான் ஞானம் கர்மம்இரண்டுங்கூடுதலைக் கூறினேன் ; நீ ஏன் இவ்வாறு மயங்குகின்றாய் ? " என வினவுக்கு ஏற்றதாக மறுமொழி கொடுக்கவேண்டுமேயன்றி, "யான் இரண்டு நிஷ்டைகளைக்கூறினேன் " (ங - ங) என (வினவுக்கு) ஏற்றதல்லாததாய்க் கேட்டதற்குமாறாகவே மறுமொழி கூறப்படாது.

மற்றும், ஸ்மார்த்தகர்மத்தோடுமாத்திரமே ஞானமும் கூடுதலென்பது (பகவான்) கருத்தெனில், (அப்பொழுதும் ஞானகர்மமிரண்டையும்) பிரித்துரைத்தல் முதலிய ஸகலமும் பொருத்தமுறாதனவாம். அன்றியும், யுத்தமாகிய ஸ்மார்த்தகருமமானது க்ஷத்திரியனுக்கு ஸ்வதருமமெனத் தெரிந்துகொண்டிருக்கும்அர்ஜுனன், "அப்பொழுது கர்மத்தில் என்னை ஏன் ஏவுகிறீர் ? (ங - க) எனப் (பகவானைப்பற்றிப்) பழித்தல் அடாது.

ஆதலின், கீதாசாஸ்திரத்தில் ச்ரௌதகர்மத்தோடாயினும் ஸ்மார்த்தகர்மத்தோடாயினும் ஆத்மஞானங்கூடுதலென்பதைச் சிறிதும் எடுத்துக்காட்ட ஒருவராலும் இயலாதென்க.

சிலஇடங்களிலே போலியாகக் கூடிக்காணப்படும் ஞானகர்மங்களின் விவரம்.

(இனி, அஜ்ஞானத்தாலும் ஆசைமுதலியகுற்றங்களாலும் கர்மத்தை மேற்கொண்டு(அநுஷ்டித்து)வருபவனாய், யாகத்தாலும் தானத்தாலும் தவத்தாலும் மனம்

𑌕𑌮𑍇𑌵 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌅𑌕𑌰𑍍𑌤𑍃 𑌚’ 𑌇𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍇 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌯𑌤𑍍𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌤𑌥𑍈𑌵 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌤𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍; 𑌯𑌥𑌾 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑍀𑌯𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇; 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌂𑌧𑍍𑌯𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍 𑌵𑌿𑌦𑍁𑌷𑌃 । 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌨𑍍 𑌨 ‘𑌅𑌹𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿’ 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌚 𑌤𑌤𑍍𑌫𑌲𑌮𑌭𑌿𑌸𑌂𑌧𑌤𑍍𑌤𑍇 ॥

𑌯𑌥𑌾 𑌚 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑌿𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌾𑌮𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌯 𑌆𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑍇𑌃 𑌕𑌾𑌮𑍍𑌯 𑌏𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾𑌮𑌿 𑌕𑍃𑌤𑍇 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑍇𑌽𑌪𑌿 𑌕𑌾𑌮𑍇 𑌤𑌦𑍇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌤𑌤𑍍 𑌕𑌾𑌮𑍍𑌯𑌮𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 — ‘𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌪𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇’, ‘𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 ॥

பரிசுத்தமாகப் பெற்ற எவனுக்கு, பரம்பொருளுண்மையைப் பற்றி “இதெல்லாம் ஒன்றுதான், ப்ரஹ்மம் அகர்த்தாவே” என்னும் ஞானம் உண்டாகுமோ, அவனுக்குக் கர்மமும் கர்மத்தின்பயனும் ஒழிந்திட்டதாயினும், (அவன் முன்)எப்படி ஊக்கத்தோடு கர்மத்தை மேற்கொண்டிருந்தானோ அப்படியே (ஞானோதயமான பின்பும்)உலகத்தைநல்வழிநடக்கச்செய்தற்பொருட்டுக்கர்மத்தை(மேற்கொள்ளக்கூடும்; அப்படி) மேற்கொண்டு ஒழுகுபவனுடைய ப்ரவ்ருத்திரூபமாய் [கர்மப்போலியாய்] எது காணப்படுகின்றதோ, அது (மோக்ஷமடைதற்கு ஸாதநமாய்) ஞானத்தோடு ஒருங்குசேர்க்கவேண்டிய கருமமன்று. உதாரணமாக, பகவான் வாஸுதேவன் க்ஷத்திரியதருமத்தை அநுஷ்டித்தல் (அவர்க்குப்) புருஷார்த்தம்கைகூடுதற்காக ஞானத்தோடு ஒருங்கு சேர்க்கப்படுகிறதில்லை; அதுபோல, பயனை எதிர்நோக்காமையும், அகங்காரமின்மையும் ஞானிக்கும் ஸமமாயிருத்தலின் என்க[1]. மெய்யுணர்ந்தவன்‘யான் செய்கிறேன்’ என மனத்திற் கொள்வதுமில்லை, அதன்பயனை எதிர்நோக்குவதுமில்லை.

பின்னும்உதாரணமாக, ஸ்வர்க்கம்முதலிய காமங்களை நாடுபவன், அக்நிஹோத்ரம்முதலிய காமஸாதனங்களைச் செய்யும்பொருட்டு, அக்நியை (முன்னே)வைத்துக்கொண்டு காம்யமேயான அக்நிஹோத்ராதியைச் செய்யத் தலைப்பட, பாதி செய்தவுடன் (தான் முன் மனத்திற்கொண்டு அக்நிஹோத்ராதியைத் தொடங்கின) ஆசையானது நீங்கிவிடினும்,(விட்டிடாது)அதே அக்நிஹோத்ராதியைச் செய்துமுடிக்கின்றான்; அப்படிச் செய்துமுடிக்கி)கின்ற (அ)வனுக்கும் அது, காம்யஅக்நிஹோத்ராதியாகஆகிறதில்லை. அவ்வாறே பகவான் “(கர்மங்களைச்)செய்கிறவனாயினும்(அவற்றால்) பற்றப்படுகிறானில்லை” (ரு - எ), “(கர்மங்களைச்) செய்கிறானில்லை, (அவற்றால்) பற்றப்படுகிறானில்லை” (கங - ௩க) என ஆங்காங்கு எடுத்துக்காட்டுகிறார்.

---

[1] பகவான் மேற்கொண்டுள்ள க்ஷத்திரிய தருமம் புருஷார்த்தத்துக்காகக் காரணமாகாமல் உலகத்தை நல்வழிப்படுத்தக்காரணமாவதுபோல, ஞானியின் கருமமும் பயனை யெதிர்நோக்காமல் அகங்காரமின்றிச் செய்யப்பட்டு உலகத்தை நல்வழிப்படுத்தவே காரணமாகின்றது என்றபடி.

𑌯𑌤𑍍𑌤𑍁—'𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍,' '𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃' 𑌇𑌤𑌿, 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 । 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌮𑍍?—

𑌯𑌦𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃, 𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 '𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃, 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌹𑍈𑌵 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃, 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑍃𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌅𑌥 𑌨 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌃, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑍇𑌨 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌵𑌾 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌯𑌮𑍍 । 𑌏𑌤𑌮𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 '𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿' 𑌇𑌤𑌿। '𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿—'𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 ॥

மற்றும், "(கர்மமானது) முன்னோர்களாலே முந்தினபண்டைக்காலத்திலே செய்யப்பட்டது" (௪ - ௧௫), "கர்மத்தினாலேயே ஜனகர்முதலானோர்கள் ஸித்தி பெற்றார்கள்" (௩ - ௨௦) என வருவனவற்றை (இருவகையாக)ப் பகுத்துணர்க. அஃது எப்படியெனில்,—

(முதல்வகை):— முன்னோர்களான ஜநகாதியர் மெய்யுணர்ந்தவராயினும், கர்மத்தை மேற்கொண்டாராயின்—அவர்கள் ஜனங்களை நல்வழியில் நடக்கச் செய்தற்பொருட்டு "இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லுகின்றன(வே யன்றி ஆத்மா செல்வதில்லை)" (௩ - ௨௮) என்னும் ஞானத்தினாலேயே ஸித்தியை [மோக்ஷத்தை] அடைந்தார்கள். கர்மத்தைத் துறத்தற்குஉரிய நிலை(மை யானது அவர்கட்கு) வந்திருந்தும் கர்மத்தை (விடாது) உடன்கொண்டே ஸித்திபெற்றார்கள்; கர்மத்தைத் துறக்கவில்லை யென்றபடி.

(இரண்டாம் வகை):— அல்லது, அவர்கள் மெய்யுணர்ந்தவரல்லராயின்—ஈச்வரனுக்கு அர்ப்பிக்கப்பட்ட கர்மமாகிய (ஞான)ஸாதனத்தால் ஸித்தியை (அதாவது-) சித்தசுத்தியை அல்லது ஞானோதயமாகிய ஸித்தியைப் பெற்றார்கள் ஜநகாதியர் என உரைக்க. இதேவிஷயத்தை "(யோகிகள்) சித்தசுத்திக்காகக் கர்மத்தைச் செய்கிறார்கள்" (௫ - ௧௧) எனப் பகவான் கூறுவர். "மனிதன் தன்கர்மத்தினால் அவனை[ஈச்வரனை]ப்பூஜித்து ஸித்திபெறுகிறான்"(௧௮ - ௪௬)எனக் கூறிப் பின்பு, ஸித்திபெற்ற(அ)வனுக்கு "ஸித்திபெற்றவன் எப்படி ப்ரஹ்மத்தை (அடைகிறான் என்பதை என்னிடமிருந்து தெரிந்துகொள்)" (௧௮ - ௫௦) என்பது முதலாக மீண்டும் ஞானநிஷ்டையைக் கூறுவர்.

தஸ்மாத் கீதாஶாஸ்த்ரே கேவலாதேவ தத்த்வஜ்ஞாநாத் மோக்ஷப்ராப்தி:, ந கர்மஸமுச்சிதாத் இதி நிஶ்சிதோऽர்த:। யதா சாயமர்த: ததா ப்ரகரணஶோ விபஜ்ய தத்ர தத்ர தர்ஶயிஷ்யாம: ॥

தத்ர ஏவம் தர்மஸம்மூடசேதஸோ மித்யாஜ்ஞாநவதோ மஹதி ஶோகஸாகரே நிமக்நஸ்ய அர்ஜுநஸ்ய அந்யத்ராத்மஜ்ஞாநாதுத்தரணம் அபஶ்யந் பகவாந் வாஸுதேவ: தத: அர்ஜுநமுத்திதாரயிஷு: ஆத்மஜ்ஞாநாயாவதாரயந் ஆஹ 'அஶோச்யாந்' இத்யாதி—

ஶ்ரீபகவாநுவாச ॥

௧௧. அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே ।
கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா: ॥

ந ஶோச்யா அஶோச்யா பீஷ்மத்ரோணாதய: ; ஸத்வ்ருத்தத்வாத், பரமார்த்தஸ்வரூபேண ச நித்யத்வாத் । தாந் அஶோச்யாந் அந்வஶோச: அநுஶோசிதவாந் அஸி 'தே ம்ரியந்தே மந்நிமித்தம், அஹம் தைர் விநாபூத: கிம் கரிஷ்யாமி ராஜ்ய-

---

ஆகவே, முக்திகைகூடுதலானது மெய்ஞ்ஞானமொன்றினுல்மாத்திரமேயன்றி, கர்மத்தோடு ஒருங்கு கூடிய ஞானத்திஞல் அன்று என்பது கீதாசாஸ்திரத்திலே நிர்ணயிக்கப்பட்ட பொருளாம். இதுவே (கீதையின்) பொருளாய்க்கிடக்கும் விதத்தை (அந்தந்தப்)பிரகரணத்திற்குஏற்ப ஆங்காங்கு எடுத்துக்காட்டுவோம்.

ஆத்மா இறவாதது.

இனி, இவ்வாறு (தான் செய்யவேண்டிய)தருமத்திலே மயங்கிய மனத்தினஞய், சோகப்பெருங்கடலில் மூழ்கிக்கிடக்கின்ற அர்ஜுனனை ஆத்மஞானத்தாலன்றி (வேறுவகையால்) கரையேற்றுதலைக் காணுத பகவான் வாஸுதேவன், அதனினின்றும் அர்ஜுனனைக் கரையேற்ற விரும்பி, அவனுக்கு ஆத்மஞானத்தைப் புகட்டுபவராய் "நீ (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவரை" (உ - கக) என்பதாதியாக அருளிச்செய்கின்ருர் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்ருர் :

கக. நீ (யாவராலும்)துக்கிக்கவேண்டாதவரைப்பற்றித் துக்கப்படுகிருய் ; ஞானவார்த்தைகளையும் பேசுகிருய். உயிர்போனவரையும், உயிர்வாழ்பவரையும் பற்றி ஞானிகள் துக்கியார்.

பீஷ்மத்ரோணதியர் (யாவராலும்) துக்கப்படத்தகாதவர் ; ஏனெனில், (வ்யாவஹாரிகமாக) நல்லொழுக்கமுடையவர், பாரமார்த்திகமாகவும் நித்யரானவர். (நீ) துக்கிக்கத்தகாதஅவர்களைக் குறித்து "அவர்கள் சாகப்போகிருர்களே, (அதற்கு)நானன்றே காரணம். நான், அவர்களில்லாமல் ராஜ்யஸுகம் முதலானவற்ருல் என்ன செய்யப்போகிறேன்? [அதனுல் எனக்கு ஒருப்ரயோஜனமும் இல்லையே!]" என ஏங்கி

𑌸𑍁𑌵𑌾𑌦𑌿𑌨𑌾’ 𑌇𑌤𑌿 । 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌾𑌦𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌤𑌾𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌵𑌾𑌦𑌾𑌨𑍍 𑌚 𑌵𑌚𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌭𑌾𑌷𑌸𑍇 । 𑌤𑌦𑍇𑌤𑌚𑍍𑌛𑍌𑌚𑍍𑌯𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌦𑌰𑍍𑌶𑌯𑌸𑌿 𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤 𑌇𑌵 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑌤𑌾𑌸𑍂𑌨𑍍 𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌮𑍃𑌤𑌾𑌨𑍍 𑌅𑌗𑌤𑌾𑌸𑍂𑌨𑍍 𑌅𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌜𑍀𑌵𑌤𑌶𑍍𑌚 𑌨 𑌅𑌨𑍁𑌶𑍋𑌚𑌨𑍍𑌤𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌃 । 𑌪𑌣𑍍𑌡𑌾 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌹𑌿 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃, ‘𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌦𑍍𑌯’ 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌨𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌨𑍍 𑌅𑌨𑍁𑌶𑍋𑌚𑌸𑌿, 𑌅𑌤𑍋 𑌮𑍂𑌢𑍋𑌽𑌸𑌿 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 ॥ ௧௧ ॥

𑌕𑍁𑌤𑌃 𑌤𑍇 𑌅𑌶𑍋𑌚𑍍𑌯𑌾𑌃? 𑌯𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 । 𑌕𑌥𑌮𑍍?—

௧௨. 𑌨 𑌤𑍍𑌵𑍇𑌵𑌾𑌹𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌨𑌾𑌸𑌂 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌨𑍇𑌮𑍇 𑌜𑌨𑌾𑌧𑌿𑌪𑌾𑌃 ।
𑌨 𑌚𑍈𑌵 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌯𑌮𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ॥

𑌨 𑌤𑍁 𑌏𑌵 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌅𑌹𑌂 𑌨𑌾𑌸𑌂, 𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌆𑌸𑌮𑍇𑌵 । 𑌅𑌤𑍀𑌤𑍇𑌷𑍁 𑌦𑍇𑌹𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑍇𑌷𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯 𑌏𑌵 𑌅𑌹𑌮𑌾𑌸𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 । 𑌤𑌥𑌾—𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌆𑌸𑍀𑌃, 𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌆𑌸𑍀𑌰𑍇𑌵 । 𑌤𑌥𑌾—𑌨 𑌇𑌮𑍇 𑌜𑌨𑌾𑌧𑌿𑌪𑌾𑌃 𑌨 𑌆𑌸𑌨𑍍, 𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌆𑌸𑌨𑍍𑌨𑍇𑌵 । 𑌤𑌥𑌾—𑌨 𑌚 𑌏𑌵 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃, 𑌕𑌿𑌂 𑌤𑍁 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮

வருந்துகிறாய். (மேலும்,) நீ ஞானிகளுடைய வார்த்தைகளையும் பேசுகிறாய்: பித்தன் போல, அந்தமௌட்டியமும்[1] இந்தஞானமுமாகிய மாறுபாட்டை உன்னிடத்திற் காட்டுகின்றாய் என்பது கருத்து. ஏனெனில், இறந்தவரையும் உயிர்வாழ்பவரையும் குறித்துப் பண்டிதரான ஆத்மஞானிகள் துக்கிக்கமாட்டார். எவர்க்கு ஆத்மவிஷயமான ஞானம் உள்ளதோ, அவரே பண்டிதராவர்: (இதனை,) "பாண்டித்யத்தை [ஆத்மஞானத்தை] உறுதியாகப் பெற்று......" (பி - ந - ரு - க) என்னும் சுருதியினால் (அறிக). உண்மையாகப்பார்க்குமிடத்தோ, நித்யராயிருப்பதால், துக்கப்படத்தகாதவர்களான அவர்களைக்குறித்து (நீ) துக்கிக்கிறாய்; ஆதலின், (நீ) மூடனாகிறாய் என்றபடி. (௧௧)

ஏன் அவர்கள் (யாவராலும்) துக்கிக்கவேண்டாதவர்?— நித்தியராதலின். எப்படி? —

௧௨. நானும், நீயும், இந்த அரசர்களும் ஒருபொழுதும் இல்லாதிருந்ததில்லை. இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமற்போவது மில்லை.

நான் ஒருபோதும் இல்லாதிருந்ததில்லை; மற்று, இருக்கவே இருந்தேன்: உடலுக்குநேர்ந்த சென்றபிறப்பிறப்புக்களில் நான் நித்யனாகவே இருந்தேன் என்று கருத்து. அப்படியே, நீ இல்லாதிருந்ததில்லை; மற்று, இருக்கவே இருந்தாய். அவ்வண்ணமே, இந்த அரசர்களும் இல்லாதிருந்ததில்லை; மற்று, இருக்கவே இருந்தார்கள். அவ்வாறே, நாம் இல்லாமற்போவது மில்லை; மற்று, நாமெல்லோரும் இவ்வுடல் இறந்தபின்பும் இருக்கவே இருப்போம். (இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும்) மூக்

[1] அந்தமௌட்டியமாவது - வருத்தப்படவேண்டாத விஷயத்தில் வருத்தப்படுதல்; இந்த ஞானமாவது - ௧- ௩௫ முதலான சுலோகங்களில் புத்திசாலித்தனமாகப் பேசுதல்.

भाव, सर्वे वयम् अतः अस्मात् देहविनाशात् परम् उत्तरकालेऽपि।
त्रिष्वपि कालेषु नित्या आत्मस्वरूपेण इत्यर्थः ॥

देहभेदानुवृत्त्या बहुवचनम्, न आत्मभेदाभिप्रायेण ॥ १२ ॥

तत्र कथमिव नित्य आत्मा इति ? दृष्टान्तमाह—

१३. देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्तिर्धीरस्तत्र न मुह्यति ॥

देहः अस्य अस्ति इति देही तस्य देहिनः देहवतः आत्मनः अस्मिन् वर्तमाने देहे यथा येन प्रकारेण कौमारं कुमारभावो बाल्यावस्था, यौवनं यूनो भावो मध्यमावस्था, जरा वयोहानिः जीर्णावस्था, इत्येताः तिस्रः अवस्थाः अन्योन्यविलक्षणाः । तासां प्रथमावस्थानाशे न नाशः, द्वितीयावस्थोपजनने न उपजनः आत्मनः । किं तर्हि ? अविक्रियस्यैव द्वितीयतृतीयावस्थाप्राप्तिः आत्मनो दृष्टा । तथा तद्वदेव देहात् अन्यो देहो देहान्तरं तस्य प्राप्तिः देहान्तरप्राप्तिः अविक्रियस्यैव आत्मनः इत्यर्थः । धीरो धीमान् तत्र एवं सति न मुह्यति न मोहम् आपद्यते ॥ १३ ॥

यद्यपि आत्मविनाशनिमित्तो मोहो न सम्भवति नित्य आत्मा इति विजानतः, तथापि शीतोष्णसुखदुःखप्राप्तिनिमित्तो मोहो लौकिको

காலங்களிலும் (நாம்) ஆத்மஸ்வரூபத்தால் நித்யர்கள் என்பது (தேர்ந்த)பொருள்.

(ஆத்மா ஒன்றேயாயினும்,) உடல்கள் வேறுவேறாயிருப்பதுபற்றி (“நாமெல்லோரும்” என்னும்) பன்மை (வழங்கலாயிற்று); ஆத்மா வேறுவேறாயிருப்பதென்னும் கருத்தால் அன்று. (கஉ)

இனி, ஆத்மா நித்தியமென்பது எப்படி ? — திருஷ்டாந்தம் கூறுகிறார் :

கங. தேகிக்கு, இந்தத்தேகத்திலே பால்யமும், யௌவநமும், கிழத்தனமும் எப்படியோ, அப்படித்தான் வேறுதேகத்தை அடைவது(ம்) ; அவ்விஷயத்தில் ஞானி மயங்கமாட்டான். [தேகி - தேகமுடையது : ஆத்மா].

உடம்பொடுநிற்கும் ஆத்மாவுக்கு இப்பொழுதுள்ள தேகத்திலே பாலப்பருவமும், யௌவநமாகிய நடுப்பருவமும், வயசின்முதிர்ச்சியான கிழப்பருவமும் ஆகிய இம்மூன்றுபருவங்களும் ஒன்றற்கொன்று வேறுபட்டவையாம். அவற்றுள், முதற்பருவம்போனவுடன் (ஆத்மா) அழிவது [இறப்பது] இல்லை. இரண்டாம்பருவம் வந்தவுடன், (ஆத்மா) உண்டாவது [பிறப்பது] இல்லை. அப்பொழுது என்னவெனில்,— (பாலப்பருவம் மாறினும்,) ஆத்மா மாறுபடாமலே, இரண்டாவதும் மூன்றாவதுமான பருவங்களை அடையக்காண்கிறோம்; அவைபோலவே, ஆத்மா விகாரப்படாமலே வேறுதேகத்தை அடைகின்றதென்க. அது இப்படியிருப்பதனால்(தான்) ஞானவான் (மதி)மயக்க மடைவதில்லை. (கங)

பொறுமையென்பது ஞானத்திற்கு ஒருஸாதனம்.

“ஆத்மா நித்யம் என்று அறிகின்றவனுக்கு, ‘ஆத்மா இறந்துவிடும்’ என்ற (அஜ்ஞானத்)தால்உண்டாகும் மயக்கம் நிகழாதாயினும், குளிர்வெப்பங்களையும் இன்பதுன்பங்களையும் அடைதலாலாகும் மயக்கமும், ஸுகம் நீங்கிப்போதலாலும்

𑌦𑍁𑌃𑌖𑍇, 𑌸𑍁𑌖𑌵𑌿𑌯𑍋𑌗𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾 𑌦𑍁𑌃𑌖𑌸𑌂𑌯𑍋𑌗𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌶𑍍𑌚 𑌶𑍋𑌕𑌃 । 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌵𑌚𑌨𑌂 𑌆𑌶𑌙𑍍𑌕𑍍𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌹—

௧௪. 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌃 ।
𑌆𑌗𑌮𑌾𑌪𑌾𑌯𑌿𑌨𑍋𑌽𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌆𑌭𑌿𑌃 𑌮𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 । 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌃 । 𑌤𑍇 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌃 । 𑌶𑍀𑌤𑌂 𑌉𑌷𑍍𑌣𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 । 𑌅𑌥𑌵𑌾—𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌃 𑌵𑌿𑌷𑌯𑌾𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌯𑌃 । 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌶𑍍𑌚 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌃 । 𑌶𑍀𑌤𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌸𑍁𑌖𑌂, 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑍍 𑌦𑍁𑌃𑌖𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌉𑌷𑍍𑌣𑌮𑌪𑌿 𑌅𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌪𑍁𑌨𑌃 𑌨𑌿𑌯𑌤𑌰𑍂𑌪𑍇 𑌯𑌤𑍋 𑌨 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌃 । 𑌅𑌤𑌃 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌯𑍋𑌃 𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍇 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌾𑌦𑌯𑌃 𑌆𑌗𑌮𑌾𑌪𑌾𑌯𑌿𑌨𑌃 𑌆𑌗𑌮𑌾𑌪𑌾𑌯𑌶𑍀𑌲𑌾𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 । 𑌅𑌤𑌃 𑌤𑌾𑌨𑍍 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑍀𑌨𑍍 𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌪𑍍𑌰𑌸𑌹𑌸𑍍𑌵, 𑌤𑍇𑌷𑍁 𑌹𑌰𑍍𑌷𑌂 𑌵𑌿𑌷𑌾𑌦𑌂 𑌵𑌾 𑌮𑌾 𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௪ ॥

𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑍀𑌨𑍍 𑌸𑌹𑌤𑌃 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 ? 𑌶𑍃𑌣𑍁—

துக்கம்வந்துசேர்தலாலும் உண்டாகின்ற சோகமும் உலகத்தில் ஸாதாரணமாகக் காணப்படுகின்றனவே" என்ற இதனை அர்ஜுனன் வார்த்தையாகச் சங்கித்து, பகவான் கூறுகிறார் :

௧௪. கௌந்தேய! இந்திரிய ஸ்பர்சங்களே குளிர்வெப்பத்தையும், இன்பதுன்பங்களையும் கொடுத்துத் தோன்றிமறையுந்தன்மையனவாய் அநித்தியமா யிருக்கின்றன; பாரத! அவற்றை (நீ) பொறுக்கக்கடவாய்.

ஓசை முதலியவற்றை அறிபவை, செவி முதலிய இந்திரியங்கள். (அந்த) இந்திரியங்களின் ஸ்பர்சங்கள்என்பவை - (அவற்றிற்கு) ஓசை முதலியவற்றோடுள்ள ஸம்பந்தங்களாம். அவைகளே [அந்த ஸம்பந்தங்களே] குளிரையும்வெப்பத்தையும் ஸுகத்தையும் துக்கத்தையும் தருகின்றன என்பது. அல்லது, ஸ்பர்சங்கள்(என்றால் இந்திரியங்களால்) ஸ்பர்சிக்கப்படுவன ஓசைமுதலிய விஷயங்கள்(எனக்கொண்டு), இந்திரியங்களும்விஷயங்களும்,குளிர்வெப்பம் ஸுகம்துக்கம் என்பவற்றைத் தருகின்றன (என்றும் உரைக்கலாம்). குளிர் ஒருகாலத்தில் ஸுகமாயும், மற்றொருகாலத்தில் துக்கமாயும் இருக்கின்றது ; அப்படியே, வெப்பமும் ஒருதன்மையதன்று. ஸுகதுக்கங்களோ ஒருநிலைப்பட்டிருத்தலைப் பிறழ்கின்றனவில்லை [அதாவது - எப்பொழுதும் ஸுகம் ஸுகமாகவும், துக்கம் துக்கமாகவுமே இருக்கின்றன.] ஆதலின், குளிர்வெப்பங்கள் அவற்றினின்றும் வேறாக எடுத்துக்கூறப்பட்டன. இந்திரியஸ்பர்சங்கள் தோன்றிமறையுந் தன்மையனவாதலின், அநித்தியங்கள் ; ஆகவே, (நீ) அந்தக்குளிர் வெப்பம்முதலியவற்றைப் பொறுத்துக்கொள்ளவேண்டும் : அவற்றின் விஷயமாக நீ ஸந்தோஷத்தையாவது துயரத்தையாவது கொள்ளவேண்டாம் என்றபடி. [அநித்யம் - நிலையில்லாதது.] (௧௪)

குளிர்வெப்பமுதலியவற்றை ஸஹிப்பவனுக்கு வரு(ம் நன்மையா)வது என்ன வெனின்?— (அதைக்) கேள் :

௧௫. 𑌯𑌂 𑌹𑌿 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌰𑍍𑌷𑌭 ।
𑌸𑌮𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑌂 𑌧𑍀𑌰𑌂 𑌸𑍋𑌽𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 ॥

𑌯𑌂 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌸𑌮𑍇 𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌸𑌮𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑌂 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌹𑌰𑍍𑌷𑌵𑌿𑌷𑌾𑌦𑌰𑌹𑌿𑌤𑌂 𑌧𑍀𑌰𑌂 𑌧𑍀𑌮𑌨𑍍𑌤𑌂 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌚𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌏𑌤𑍇 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑌯𑌃, 𑌸𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌦𑌰𑍍𑌶𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑍋 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌯 𑌅𑌮𑍃𑌤𑌭𑌾𑌵𑌾𑌯 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯, 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 𑌸𑌮𑌰𑍍𑌥𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥ ௧௫ ॥

𑌇𑌤𑌶𑍍𑌚 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑍌 𑌅𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑌿𑌸𑌹𑌨𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍—

௧௬. 𑌨𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵𑍋 𑌨𑌾𑌭𑌾𑌵𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌸𑌤𑌃 ।
𑌉𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌽𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌯𑍋𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 ॥

𑌨 𑌅𑌸𑌤𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑍇𑌃 𑌸𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌭𑌾𑌵𑍋 𑌭𑌵𑌨𑌂 𑌅𑌸𑍍𑌤𑌿𑌤𑌾 । 𑌨 𑌹𑌿 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑌿 𑌸𑌕𑌾𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍈𑌃 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌮𑌾𑌣𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁𑌸𑌤𑍍 𑌭𑌵𑌤𑌿 । 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌸𑌃, 𑌵𑌿𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌿 । 𑌯𑌥𑌾 𑌘𑌟𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌮𑌾𑌣𑌂 𑌮𑍃𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌅𑌨𑍁𑌪-

---

கரு. மனிதரிற் சிறந்தவனே! ஸுக துக்கங்களை ஸமமாகக்கொண்ட எந்தத் தீரபுருஷனை, இவை உண்மையாகவே துன்பப்படுத்துகின்றன வில்லையோ, அவன் சாகாநிலைக்கு உரியவனுகிருன்.

ஸுகதுக்கங்களை ஸமமாகக்கொண்ட (அதாவது—) ஸுகம்வந்தபோது ஸந்தோஷங் கொள்ளாமலும் துக்கம்வந்தபோது துயரமடையாமலும் இருக்கின்ற ஞானியை, கீழ்க்கூறிய குளிர் வெப்பமுதலியன தாக்கி அசைக்கின்றனவில்லை; (அவன்) நித்யமான ஆத்மாவைக் காண்கிறபடியால். அவன் நித்யமான ஆத்மாவின் ஸ்வரூபத்தைக் கண்டறிதலிலே உறுதியாகநிற்பவன் : த்வந்தங்களை ஸஹிக்கக்கூடியவன் : சாகாத்தன்மையான மோக்ஷமென்பதனை அடையவல்லவன். [த்வந்தங்கள் - குளிர் வெப்பம் முதலியன.] (கரு)

பொய்ம்மையும், மெய்ம்மையும்.

இக்காரணத்தாலும், துயரமும் மயக்கமும் கொள்ளாது, குளிர்வெப்பம் முதலியவற்றைப் பொறுத்தல் (முக்திபெற விரும்புவோனுக்கு) உரியதாகும். எதனுலெனில்,—

கசு. 'பொய்ப்பொருளுக்கு உண்மை இல்லை, மெய்ப்பொருளுக்கு இன்மை இல்லை' (என) இவ்விரண்டற்கும் முடிவு கண்டுவைக்கப்பட்டுள்ளது மெய்ம்மையைக் காணும் இயல்பினராலே.

பொய்ம்மையான குளிர்வெப்பம் முதலியவற்றிற்கும்,(அவற்றின்)காரணமான(நீர், நெருப்பு முதலிய)வற்றிற்கும் உண்மையென்பது இல்லை. பிரமாணங்களால் ஆராயுங்கால்,குளிர்வெப்ப முதலாயினவும்(அவற்றின்)காரணங்களும் உண்மைப்பொருளாய் இருக்கின்றனவில்லை. ஏனெனில்,அவை விகாரமாம். விகாரமோ பிறழ்ந்திடுகின்றது[தன் நிலைதிரிகின்றது].உதாரணமாக,குடம் முதலானவற்றின் உருவங்கள்(கண்ணினுல் உள்

𑌬𑍍𑌧𑍇𑌃 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌤𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌕𑌾𑌰𑌣𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌅𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃 𑌅𑌸𑌨𑍍𑌤𑌃। 𑌜𑌨𑍍𑌮𑌪𑍍𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌚 𑌅𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌘𑌟𑌾𑌦𑍇𑌃, 𑌮𑍃𑌦𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌚 𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌅𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

𑌤𑌦𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌂𑌗 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍— 𑌨 ; 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑍍𑌵𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃, 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑌿 । 𑌯𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍, 𑌯𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌿 𑌤𑌦𑍍 𑌅𑌸𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌸𑌦𑌸𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇, 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌦𑍍𑌵𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑍇𑌤𑍇 𑌸𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍇 𑌨 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌵𑌤𑍍, '𑌸𑌨𑍍 𑌘𑌟𑌃,' '𑌸𑌨𑍍 𑌪𑌟𑌃,' '𑌸𑌨𑍍 𑌹𑌸𑍍𑌤𑍀' 𑌇𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 । 𑌤𑌯𑍋𑌃 𑌬𑍁𑌦𑍍-

---

ளும்புறமும்)உற்றுப்பார்த்து ஆராயப்படும்பொழுது மண்ணைத்தவிர வேறுகப் புலப்படாமையால்[அதாவது-மண்ணுகவே புலப்படுகின்றமையால்]பொய்ம்மையாம். அப்படியே ஸகலவிகாரங்களும் காரணத்தைத்தவிர வேறுகப் புலப்படாமையால் பொய்யே. அன்றியும், (மண்ணின்) கார்யமான குடம் முதலானவை தோன்றுதற்குமுன்னும் அழிதற்குப்பின்னும்[1] புலப்படாமையாலும் (பொய்ம்மையாம்). பின்னும் மண்முதலியகாரணங்களும் தம் காரணமா(ன நிலம் முதலானவா)கவன்றி வேறுகப் புலப்படாமையின் பொய்ம்மையேயா மென்க.[2]

(ஆக்ஷேபம்):—அது(வும் அவ்வாறு)பொய்யாகுமளவிலே ஸகலமும் இல்லையாகும் எனில்,[3]—

(ஸமாதாநம்):— அப்படியன்று ; எங்கும்(வ்யவஹாரநிலையிலே) மெய்யுணர்வும்பொய்யுணர்வுமென இருவகை உணர்வு புலப்படுதலால். எதனைக் குறித்து நிற்கும் உணர்வு பிறழ்ந்திடுகின்றதில்லையோ, அது மெய்ப்பொருள்; எதனைக் குறித்துநிற்கும் உணர்வு பிறழ்ந்திடுகின்றதோ, அது பொய்ப்பொருள் என மெய்ம்மை பொய்ம்மைகளின்வேறுபாடு, புத்தியைப் பொறுத்துநிற்கின்றது ; நிற்கவே, எங்கும் [வ்யவஹாரநிலையிலே] (இந்த) இருவகை உணர்வுகள், 'கரியது நெய்தல்' என்பதுபோலவல்லாமல்[4],'உள்ளது குடம்', 'உள்ளது ஆடை', 'உள்ளது யானை' என யாவராலும் ஒரேஇடத்து[5]உணரப்படுகின்றன. இவ்வாறே எங்கும்(காணப்படுகின்றன). அவ்விருவகை உணர்ச்சியுள் குடமென்னும் உணர்வும், இன்னும் இதுபோன்ற உணர்வுகளும்

---

1 "எது முந்தியும் பிந்தியும் இல்லையோ, அது நிகழ்காலத்திலும் [நடுவிலும்] இல்லை" என்பது மாண்டூக்ய உபநிஷத்தின் கௌடபாதகாரிகை - ௪ - ௯௧.—(ஆ.)

2 இதனல், "கேவலமெய்ப்பொருளானது, காரணகார்ய வரம்பிற்கு அப்பால் உள்ளது" என்று தோன்றுமாறு காண்க.—(ஆ.)

3 ஒருபொருள் காரணமாகவாவது, கார்யமாகவாவது அல்லாமல் இருக்கமுடியாது என்பது ஆக்ஷேபஞ்செய்கிறவனுடைய கருத்து.—(ஆ.)

4 ஒரே இடத்தில் [ஸாமாநாதிகரண்யமாக] பொய்ம்மையும் மெய்ம்மையும் ஆகிய இரண்டுபுத்திகள் உண்டாகின்றன என்றால், 'கரியது நெய்தல்' என்னுமிடத்தில் தோன்றுகிற 'கருமை,' 'நெய்தல்' என்ற இரண்டு பொருள்களைப்பற்றிய உணர்வுகளும் பொய்ம்மையேயன்றோ என்று வரக்கூடிய ஆக்ஷேபத்தை நீக்க, 'கரியது நெய்தல் என்பதுபோலவல்லாமல்' என்றார்.

5 "இது, புஸ்தகம்" என்றவிடத்து 'இது' என்பதும், 'புஸ்தகம்' என்பதும் ஒரே பொருளைக் குறிப்பதுபோல, "உள்ளது குடம்" என்னுமிடத்தில் 'உள்ளது' என்பதும், 'குடம்' என்பதும் ஒரேபொருளைக் குறிக்கின்றன. இவ்வாறு கொள்வதை வடநூலார் 'ஸாமாநாதிகரண்யம்' என்பர்.

𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌃 𑌘𑌟𑌾𑌦𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌿। 𑌯𑌥𑌾 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍। 𑌨 𑌤𑍁 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌘𑌟𑌾𑌦𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑌃 𑌅𑌸𑌨𑍍, 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍। 𑌨 𑌤𑍁 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑌃, 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍॥

𑌘𑌟𑍇 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑍇 𑌘𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑍌 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑌿 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 — 𑌨; 𑌪𑌟𑌾𑌦𑌾𑌵𑌪𑌿 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌷𑌯𑍈𑌵 𑌸𑌾 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 ॥

𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑌤𑍍 𑌘𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑌿 𑌘𑌟𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 — 𑌨; 𑌪𑌟𑌾𑌦𑍌 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 ॥

𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌪𑌿 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌘𑌟𑍇 𑌨 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 — 𑌨; 𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌵𑌿𑌷𑌯𑌾 𑌸𑌤𑍀 𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍌 𑌕𑌿𑌂𑌵𑌿𑌷𑌯𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌨 𑌤𑍁 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌵𑌿𑌷𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ॥

பிறழ்கின்றன. அவ்வண்ணமே(கீழ்)எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால்,உள்ளதென்னும் உணர்வு (அப்படிப் பிறழ்ந்திடுவது) இல்லை. ஆகவே, குடம் முதலிய உணர்வினாற் குறிக்கப்படும்பொருள்[குடம்முதலானவை] பிறழ்ந்திடுதலால் பொய்ப்பொருளாம். ஆனால், உள்ளதென்னும் உணர்வினாற் குறிக்கப்படும் பொருள் பிறழாமையால் (அப்படி) இல்லை [மெய்ப்பொருளாம் என்றபடி].

(ஆக்ஷேபம்):—குடம் அழிவுற்றவளவில், குடமென்னும் உணர்வு பிறழ[இல்லாமற்போக], உள்ளதென்னும் உணர்வும் (அங்ஙனம்) பிறழ்கின்றதெனில்—

(ஸமாதாநம்):—அப்படியன்று; ஆடைமுதலியவற்றிலும் உள்ளதென்னும் உணர்வினைக் காண்கிறபடியால். அந்த உள்ளதென்னும் உணர்வு விசேஷணத்தைக் குறித்தேநிற்பதாம்.

(ஆக்ஷேபம்):—உள்ளதென்னும் உணர்வுபோலக் குடமென்னும் உணர்வும் மற்றொருகுடத்திற் காணப்படுகின்றதெனில்,—

(ஸமாதாநம்):—அப்படியன்று; (குடமென்னும் உணர்வினை) ஆடைமுதலானவற்றிற் காணாமையின்.

(ஆக்ஷேபம்):—உள்ளதென்னும் உணர்வும், அழிவுபட்டகுடத்தில் காணப்படுகின்றதில்லை யெனில்,—

(ஸமாதாநம்):—அப்படியன்று; விசேஷ்யமில்லாமையின்.[1] உள்ளதென்னும் உணர்வு விசேஷணத்தைக் குறித்துநிற்பதாய், விசேஷ்யமில்லாதஇடத்து விசேஷணம் பொருந்தாமையால், எதைக் குறித்து நிற்கும்? ஆனால், உள்ளதென்னும் உணர்வினால் குறிக்கப்படும்பொருள் இல்லாமையாலன்று.[2]

---

[1] உலகத்திலுள்ள எல்லாப்பொருள்கட்கும் இருத்தல் என்பது உண்மைப்பொருளினாலேயே அமைதலால், 'உள்ளது' என்பது அந்த உண்மைப்பொருளைக் காட்டுவதாம் என்று அறிக. ஆகவே, குடம் முதலியன அழிவுற்றாலும், மற்றைப் பொருள்களைக்குறித்து 'உள்ளது, உள்ளது' என வழங்கும்படி அந்த உண்மைப்பொருள் இருக்கின்றதென்க.

[2] குடம் அழிவுற்றவிடத்து, 'உள்ளது' என்பதை எடுத்துக்காட்ட அறிகுறி இல்லை, ஆகவே, 'உள்ளது' என்பது அங்கு விளங்கவில்லையேயன்றி, அந்த 'உள்ளது' என்பதனால் குறிக்கப்படும் உண்மைப்பொருள் இல்லை யென்பதில்லை, இருக்கவேஇருக்கின்றது என்றபடி.—(ஆ.)

𑌏𑌕𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑌤𑍍𑌵𑌂 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍 ?—𑌨; ‘𑌇𑌦𑌮𑍍 𑌉𑌦𑌕𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑌾𑌦𑌾𑌵𑌨𑍍𑌯𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍇𑌹𑌾𑌦𑍇𑌃 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌸𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯 𑌅𑌸𑌤𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵 𑌇𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌸𑌤𑌃 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌅𑌵𑍋𑌚𑌾𑌮 ॥

𑌏𑌵𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌃 𑌸𑌦𑌸𑌤𑍋𑌃 𑌉𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑌃 𑌅𑌨𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃, 𑌸𑌤𑍍 𑌸𑌦𑍇𑌵 𑌅𑌸𑌤𑍍 𑌅𑌸𑌦𑍇𑌵𑍇𑌤𑌿, 𑌤𑍁 𑌅𑌨𑌯𑍋𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑌦𑌿𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌮 ; 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ; 𑌤𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮 𑌤𑌦𑌿𑌤𑌿 । 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌤𑍍 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃, 𑌤𑍈𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌶𑍋𑌕𑌂 𑌮𑍋𑌹𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑌿𑌯𑌤𑌾𑌨𑌿𑌯𑌤𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌨𑌿

(ஆக்ஷேபம்):—(இனி,) குடம்முதலிய விசேஷ்யம் பொய்ம்மையானவளவிலே, (விசேஷணம்விசேஷ்யம் இரண்டும்) ஒரேஇடத்துநிற்ற லென்பது கூடாதெனின்[1]—

(ஸமாதானம்):—அப்படியன்று; (விசேஷணம்விசேஷ்யமென்ற) இரண்டனுள் ஒன்று பொய்ம்மையானவளவினும், கானல்முதலானவற்றிலே 'இது ஜலம்'[2] என, (இவை இரண்டும்) ஒரேஇடத்துநிற்றலைக் காண்கிறபடியா லென்க. ஆகவே, தேகம் முதலியனவும், (குளிர்வெப்பம்முதலான)த்வந்தமும், (அவற்றின்)காரணமுமாகிய பொய்ப்பொருளுக்கு இருப்பில்லையென்பதாம். அவ்வாறே ஆத்மாவாகிய மெய்ப் பொருளுக்கு இருப்பின்மை இல்லை; எவ்விடத்தும் பிறழாமையால் எனக் (காரணம் கீழே) கூறியுள்ளோம்.

இவ்வாறு, மெய்ப்பொருள்பொய்ப்பொருள்களாகிய கீழ்க்கூறிய இந்தஆத்மா அநாத்மாக்கள்இரண்டின்விஷயமாகவும், "மெய்ப்பொருள்(எப்பொழுதும்) உள்ளது தான், பொய்ப்பொருள் (எப்பொழுதும்) இல்லாததுதான்" என்னும் முடிவான நிர்ணயத்தைத் தத்துவதர்சிகள் கண்டறிந்தேயுள்ளார். தத்என்பது, ஸகலத்திற்கும் பெயர். ஸகலமும் ப்ரஹ்மம்; (எனவே,)அதன்பெயர்'தத்'என்பதாம்.அதனதுதன்மை தத்துவம்; (அதாவது-) ப்ரஹ்மம் உள்ளபடியிருக்குந் தன்மை. அதனைக்காணும் இயல்பினரே தத்துவதர்சிகள். நீயும் தத்துவதர்சிகளின் நோக்கை[கொள்கையை]ப் பின் பற்றி,சோகத்தையும் மோகத்தையும் விட்டு,ஒரேதன்மையுள்ளனவும் [ஸுகம்துக்கம் முதலியவும்] ஒரே தன்மையில்லாத குளிர்வெப்பமும் முதலிய த்வந்தங்களை, "விகார

[1] "எங்கும், விசேஷணவிசேஷ்யங்களிரண்டும் மெய்ப்பொருளாகவே இருக்கக்காண்கிறோம். ஆகவே, 'உள்ளது' என்பதுபோல, குடமும் மெய்ப்பொருளாகவே இருக்கவேண்டும் என்பது ஆக்ஷேபஞ்செய்கிறவனுடைய கருத்து.—(ஆ.)

[2] கானலைப் பார்த்து 'இது ஜலம்' என்றவிடத்து ஜலம் பொய்ம்மையாயினும், இது என்று சுட்டுதற்குக் காரணமாய் ஒன்று இருப்பதை உணர்க; அவ்வாறே, 'உள்ளது குடம்' என்னுமிடத்தில் குடம் என்பது பொய்ப்பொருளாயினும், உள்ளது என்று வழங்குமாறு அங்கு ஒருபொருள் [ப்ரஹ்மம்] இருக்கின்றதென்க.

'𑌵𑌿𑌕𑌾𑌰𑍋𑌽𑌯𑌮𑍍 𑌅𑌸𑌦𑍇𑌵 𑌮𑌰𑍀𑌚𑌿𑌜𑌲𑌵𑌤𑍍 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌵𑌭𑌾𑌸𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌵 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 ॥ ௧௬ ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍 𑌯𑌤𑍍 𑌸𑌦𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௭. 𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌨𑌾𑌶𑌮𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥

𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿 𑌨 𑌵𑌿𑌨𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌅𑌸𑍍𑌯𑍇𑌤𑌿 । 𑌤𑍁𑌶𑌬𑍍𑌦𑌃 𑌅𑌸𑌤𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑌤𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 । 𑌕𑌿𑌮𑍍? 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌤𑌤𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌸𑌦𑌾𑌖𑍍𑌯𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌸𑌾𑌕𑌾𑌶𑌮𑍍, 𑌆𑌕𑌾𑌶𑍇𑌨𑍇𑌵 𑌘𑌟𑌾𑌦𑌯𑌃 । 𑌵𑌿𑌨𑌾𑌶𑌮𑍍 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 𑌅𑌭𑌾𑌵𑌮𑍍 । 𑌅𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 𑌉𑌪𑌚𑌯𑌾𑌪𑌚𑌯𑍌 𑌨 𑌯𑌾𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 । 𑌨 𑌏𑌤𑌤𑍍 𑌸𑌦𑌾𑌖𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑌿, 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑍀𑌯𑍇𑌨, 𑌆𑌤𑍍𑌮𑍀𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑍋 𑌧𑌨𑌹𑌾𑌨𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿, 𑌨 𑌤𑍁 𑌏𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿, 𑌅𑌤𑌃 𑌅𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿, 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 । 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮; 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 ॥ ௧௭ ॥

மாயுள்ள இது, பொய்ப்பொருளாகவேயிருந்து, கானல்ஜலம்போலப் பொய்யாகத் தோற்றுகின்றது" என உள்ளத்தில் நிச்சயித்து, (தீரத்தன்மையோடு சாந்தனைப்) பொறுத்துக்கொள்ளவேண்டும் என்பது கருத்து. (௧௬)

ஆனால், எப்பொழுதும் மெய்ப்பொருளாகவேஇருப்பதென்பது யாது ?—கூறுவோம் :

௧௭. இதெல்லாம் எதனால் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அதையே அழிவில்லாததாகத்தெரிந்துகொள்.(தன்)நிலைதிரியாதஇதற்கு ஒருவராலும்அழிவுசெய்ய இயலாது.

அதை(யே) அழிவுபடுந்தன்மையில்லாததாகத் தெரிந்துகொள். (இங்கு 'அதையே' என்பதிலுள்ள) ஏகாரம் (பொய்ம்மையினின்றும் மெய்ம்மையைப் பிரித்து வேறுபடுத்திநிற்றலால்) பிரிநிலைப்பொருளுடையது.—எதனை?—குடம் முதலியன ஆகாசத்தினால் (வியாபிக்கப்பெறுமாறு) போல,ஆகாசமுள்பட இந்தஜகத்துமுழுவதும் எந்த 'ஸத்' என்னும் பெயருடைய ப்ரஹ்மத்தினாலே வியாபிக்கப்பட்டுள்ளதோ, (அதனை). அழிவெனினும்,மறைதலெனினும்,இன்மையெனினும் ஒக்கும். (ப்ரஹ்மம்)வளர்தலும் தேய்தலும் அடைகிறதில்லை ; (ஆதலின் தன்)நிலை திரியாததாம். ஸத் என்னும் பெயருடைய இந்தப்ரஹ்மம் தன்நிலை மாறுகிறதில்லை ; சரீராதிகள்போல அவயவங்களைப் பெற்றிராமையால். (மேலும்,) தன்னுடைய(து எதுவாயினு மாகுக ; அதனாலான நஷ்டத்)தாலும், (ப்ரஹ்மம் நிலைமாறுவது)இல்லை ; (அதற்குத்) தன்னுடையதென்பதேஇல்லையாதலின். உதாரணமாக,தேவதத்தன் (தன்னுடைய) பணநஷ்டத்தால் கெட்டுப்போகிறான் ; ப்ரஹ்மமோ இவ்வாறு கெட்டுப்போவதில்லை. ஆகவே, (தன்) நிலைமாறாத இந்தப்ரஹ்மத்திற்கு ஒருவராலும் அழிவுசெய்ய முடியாது. ஆத்மாவை அழிக்க ஒருவராலும்—ஈச்வரனாலுங்கூட—முடியாது ; ஏனெனில், ஆத்மா ப்ரஹ்மம் : தன்ஆத்மாவினிடத்தே தொழில் கூடாமையாலென்க. (௧௭)

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌉𑌕𑍍𑌤𑌂 “𑌯𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌜𑌨𑍍𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌕𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌫𑌲𑌦𑌾𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌸𑌤𑍍𑌯𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇, 𑌤𑌥𑌾 𑌅𑌨𑌾𑌰𑌬𑍍𑌧𑌫𑌲𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌯𑍋 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃” 𑌇𑌤𑌿—𑌤𑌦𑌸𑌤𑍍। 𑌕𑌥𑌮𑍍? —𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌷𑍁𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌫𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌯𑌥𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑍇𑌧𑌾𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌇𑌷𑍁𑌃 𑌧𑌨𑍁𑌷𑌃 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑍇𑌧𑍋𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑌮𑌪𑌿 𑌆𑌰𑌬𑍍𑌧𑌵𑍇𑌗𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍 𑌪𑌤𑌨𑍇𑌨𑍈𑌵 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌏𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍇 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌽𑌪𑌿, 𑌆𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑍇𑌗𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌏𑌵 । 𑌯𑌥𑌾 𑌸 𑌏𑌵 𑌇𑌷𑍁𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌰𑌬𑍍𑌧𑌵𑍇𑌗𑌸𑍍𑌤𑍁 𑌅𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌧𑌨𑍁𑌷𑌿 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌉𑌪𑌸𑌂𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇, 𑌤𑌥𑌾 𑌅𑌨𑌾𑌰𑌬𑍍𑌧𑌫𑌲𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌬𑍀𑌜𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿, 𑌪𑌤𑌿𑌤𑍇 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌵𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑍇 ‘𑌨 𑌸 𑌭𑍂𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍇𑌵 𑌉𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥ ௨௩ ॥

𑌅𑌤𑍍𑌰 𑌆𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌬𑌹𑌵𑌃 𑌉𑌪𑌾𑌯𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 𑌇𑌮𑍇 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌯𑌃 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇—

௨௪. 𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑍇 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌚𑌾𑌪𑌰𑍇 ॥

V.B. SUBRAHMANYA SARMA TAMIL-PANDIT.

இனி, “பயனைக்கொடுக்கத் தலைப்பட்டு இப்பொழுதுள்ளபிறப்பை விளைத்த கர்மங்கள், ஞானமிருந்தும் [ஞானமுண்டான பின்பும்] தேய்ந்துபோகாதவாறுபோல, பயனை விளைக்கத்தொடங்காத கர்மங்களும் தேய்ந்துபோகாமை பொருந்தியது” என எது கூறப்பட்டதோ, அது சரியன்று.—எப்படி ? —அவை, எய்த அம்புபோல, பயனை(க் கொடுக்க)த் தலைப்பட்டுள்ளமையின். எவ்வாறு ஓர் குறியைத் துளைக்க வில்லி னின்றும் ஒருகால் விடுத்த அம்பு குறியைத் துளைத்தபின்பும் (ஓயாது) தொடங்கிய விசை குறைய(க் கீழே)விழுந்துதான் ஒய்கின்றதோ, அவ்வாறே, உடம்பைஉண்டாக்கிய கர்மமானது - உடம்பு உள்ளதின் பிரயோஜனம் ஒழிந்திட்டதாயினும், (அக்கர்ம) வாஸநாவலிமையின் வேகம் குன்றும்வரை முன்போல செல்லவே செல்லுகின்றது. ஆனால், எவ்வாறு அதேஅம்பானது வில்லில் தொடுக்கப்பெற்றதாயினும், செல்லுதற்குக் காரணமான வேகத்தால் செலுத்தப்படாதவளவிலே (குறியை நோக்கி) விடப்படாததாய் (வில்லினின்றும்) பிரித்தெடுக்கப்படுகின்றதோ, அவ்வாறு, பயனைக் கொடுக்கத்தலைப்படாத கர்மங்கள் தமது இருப்பிடத்தினின்றே [சைதந்யப்பிரதிபலநமுள்ள அகக்கரணத்தினின்றே] மெய்யறிவினால் விதையற்றுப்போமாறுசெய்யப்படுகின்றன [முளைக்கும்சக்தியில்லாமற்போகின்றன]; ஆகவே, ஞானியினுடைய இவ்வுடம்பு இறந்தவளவிலே “அவன் மீளவும் பிறப்பதில்லை” என்று கூறியது நேர்தான் என அமைந்தது. (௨௩)

ஆத்மஞானத்திற்கு நால்வகை வழிகள்.

இனி, ஆத்மாவைக் காண்பதற்குத் தியானம்முதலிய அநேகமான இந்த வழிவகைகளை அருளிச்செய்கிறார் :

௨௪. சிலர் தியானத்தால் புத்தியினுள் ஆத்மாவை அகக்கரணத்தால் காண்கிறார்கள் : வேறுசிலர் ஸாங்க்ய யோகத்தினாலும்; வேறுசிலர் கர்மயோகத்தினாலும் (காண்கிறார்கள்).

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍 𑌅𑌸𑌤𑍍 𑌯𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌤𑍀𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௮. 𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌮𑍇 𑌦𑍇𑌹𑌾 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃 ।
𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑍋𑌽𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌅𑌨𑍍𑌤𑌃 𑌵𑌿𑌨𑌾𑌶𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 **𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌃** । 𑌯𑌥𑌾 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾𑌦𑍌 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌸 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌃 ; 𑌤𑌥𑌾 **𑌇𑌮𑍇 𑌦𑍇𑌹𑌾𑌃** 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌾𑌯𑌾𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 **𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌃** 𑌶𑌰𑍀𑌰𑌵𑌤𑌃 **𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑌃 𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯** 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 **𑌅𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌾𑌃** 𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌭𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

'𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯' '𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑌃' 𑌇𑌤𑌿 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ; 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕𑍇, 𑌨𑌾𑌶𑌸𑍍𑌯 𑌚 । 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌹𑍋 𑌭𑌸𑍍𑌮𑍀𑌭𑍂𑌤𑌃 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌗𑌤𑍋 𑌨𑌷𑍍𑌟 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ; 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑌰𑌿𑌣𑌤𑍋 𑌵𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌜𑌾𑌤𑍋 𑌨𑌷𑍍𑌟 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌤𑌤𑍍𑌰 '𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑌃' '𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯' 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨𑌾𑌶𑍇𑌨 𑌅𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 𑌅𑌸𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌦𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 ; 𑌤𑌤𑍍 𑌮𑌾 𑌭𑍂𑌦𑌿𑌤𑌿 '𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯' '𑌅𑌨𑌾𑌶𑌿𑌨𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹 ॥

ஆனால், தானிருக்கும் நிலையைப் பிறழுந்தன்மையுள்ள பொய்ப்பொருள் என்பது யாது?—கூறுவோம்:

௧௮. நித்யமாய், கேடில்லதாய், அறிதற்குஅரியதான தேகியின் இச்சரீரங்கள், முடிவுள்ளவையாகக் கூறப்பட்டிருக்கின்றன; ஆதலின், போர்செய்யக்கடவாய், பாரத!

எவைகட்கு அழிவு உண்டோ, அவை முடிவுள்ளவை; கானல் முதலானவைகளில் (ஜலம் முதலியன) இருக்கின்றன என்னும் புத்தியானது, (இடையறாது) தொடர்ச்சியாக வியாபித்திருந்து(ம்), பிரமாணஆராய்ச்சியின் முடிவிலே விட்டுப்போகின்றது: அது அதற்கு [அதாவது-அந்தப் புத்தி விட்டுப்போதல் கானல்ஜலம்முதலியவற்றிற்கு] முடிவு; அப்படியே, நித்யமாய் சரீரியாய் கேடில்லதாய் அறிதற்குஅரியதான ஆத்மாவின் இச்சரீரங்கள், ஸ்வப்நத்திலும் இந்திரஜாலத்திலும் (காணப்பட்ட) சரீராதிகள்போல முடிவுள்ளவை என்று விவேகிகளாற் கூறப்பட்டிருக்கின்றன.[கானலில் ஜலமிருக்கிறதென்னும் புத்தியானது, ஆராய்ச்சியினால் விட்டுப்போகும்போது, கானல்ஜலமும் பொய்ப்பொருளாவதுபோல, சரீரமிருக்கின்றது என்னும் புத்தி ஆராய்ச்சியினால் விட்டுப்போக,சரீரமும் பொய்ப்பொருளாமென ஆராய்ந்தறிக.]

'நித்யமாய்', 'கேடில்லதாய்' என்றது, கூறியதுகூற லன்று; நித்யமாயிருத்தலும் கேடும் உலகத்தில் இருவகையாயிருத்தலின். உதாரணமாக, சாம்பலாய்ப் போய் மறைதலை அடைந்த சரீர(மு)ம், கேடுற்றதாகச் சொல்லப்படுகின்றது; பிணிமுதலானவற்றோடுகூடி வேறுவகையாக மாறிப்போய் (உயிரோடு)உள்ளதான சரீரமும் கேடுற்றதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே 'கேடில்லதாய்', 'நித்யமாய்' என, இருவகைத்தான கேட்டினும் இதற்கு ஸம்பந்தமில்லையென்க. இப்படி ('நித்யமாய்' 'கேடில்லதாய்' என்று) கூறுவிட்டால், பூமி முதலானவைபோல ஆத்மா நித்யமென்றும் தோன்றும்; அது [அவ்வாறு தோன்றுதல்] கூடாதென்று 'நித்யமாய்', 'கேடில்லதாய்' எனக் கூறலாயினர்.

𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍈𑌃 𑌅𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌨𑌨𑍁 𑌆𑌗𑌮𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌨𑌾 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 । 𑌨; 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌤𑌃𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌤𑌰𑌿 𑌪𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌸𑍋𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌵𑍇𑌷𑌣𑌾 𑌭𑌵𑌤𑌿 । 𑌨 𑌹𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 '𑌇𑌤𑍍𑌥𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌯 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌯 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌾𑌮 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 𑌅𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌤𑍁 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌪𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 । 𑌤𑌥𑌾 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃—"𑌯𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌃" 𑌇𑌤𑌿 ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌏𑌵𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵, 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌤𑍍 𑌉𑌪𑌰𑌮𑌂 𑌮𑌾 𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌨 𑌹𑌿 𑌅𑌤𑍍𑌰 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇, 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤 𑌏𑌵 𑌹𑌿 𑌅𑌸𑍌 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌦𑍍𑌧𑌃 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌮𑍍 𑌆𑌸𑍍𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌪-

---

அறிதற்கு அரியதான = பிரத்தியக்ஷம் முதலியபிரமாணங்களால் நிச்சயிக்க முடியாததான.

(ஆக்ஷேபம்) :—என்! ஆத்மா சாஸ்திரத்திஞலும்,(அந்தசாஸ்திரத்திற்கு)முந்தி ப்ரத்தியக்ஷம்முதலான பிரமாணங்களிஞலும் நிச்சயிக்கப்படுகின்றதன்றே(எனில்)—

(ஸமாதானம்) :—அப்படியன்று ; ஆத்மா ஸ்வதஸ்ஸித்தமாயிருத்தலின். அறிபவஞன ஆத்மா நிச்சயமானவிடத்தன்றே, (பொருள்களை)அறியப்புகுந்தவன் (அறிதற்குக் கருவியான)பிரமாணங்களைத் தேடுதல் கூடும். (ஒருவன்)முதலில் ஆத்மாவை 'நான் இன்னுன்' என்று நிச்சயிக்காமல், பின்பு ப்ரமேயங்களை [அறியப்படும்பொருள்களை] நிச்சயித்தற்பொருட்டுத் தலைப்படுவதில்லை யன்றே. ஆத்மாவென்பதோ ஒருவர்க்கும் தெரியாததன்று. ஆஞல், முடிவானபிரமாணமாகிய சுருதியானது அதன்தன்மையல்லாததை, [அதாவது - ஆத்மா கர்த்தா என்பது முதலானவற்றை] (அதனிடத்து) ஏற்றுதலைமாத்திரம் நீக்குவதாயிருப்பதஞலே,ஆத்மாவுக்குப் பிரமாணமாகின்றதே யன்றி, (முற்றிலும்)தெரியாதபொருளை(ப் புதிதாக)த் தெரிவிப்பதஞலன்று. அவ்வண்ணமே, "எது தெரிந்ததும் தெரியாததுமான ப்ரஹ்மமோ,எது ஆத்மாவோ,எங்குமுளதோ" (பி-உ-௩-௪) என்று சுருதி(கூறுகின்றது).

ஆத்மா இவ்வாறு நித்யமாய், நிர்விகாரியுமாயிருத்தலால், நீ போர்செய்யக் கடவாய் : போரினின்றும் ஒழிதலைச் செய்யாதே [போர்செய்யாது நிற்கவேண்டாம்] என்று பொருள்.

இங்கு, யுத்தஞ்செய்யவேண்டுமென்று விதிக்கப்படவில்லை. இவன் [அர்ஜுனன்] (முந்தியே தாஞகப்) போர்புரியப் புகுந்தவனே, (பின்பு) சோகமோஹங்களால் தடுக்கப்பட்டுப் பேசாமல் உட்கார்ந்திருக்கின்றுன். ஆதலால்,அவனுடைய (யுத்தத்தி

𑌨𑌯𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇। 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 '𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵' 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌵𑌾𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂, 𑌨 𑌵𑌿𑌧𑌿𑌃 ॥ ௧௮ ॥

𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑌾𑌰𑌕𑌾𑌰𑌣𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂, 𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌮𑍍, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌸𑍍𑌯 𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑍇 𑌋𑌚𑍌 𑌆𑌨𑌿𑌨𑌾𑌯 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 '𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌭𑍀𑌷𑍍𑌮𑌾𑌦𑌯𑍋 𑌮𑌯𑌾 𑌹𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌹𑌨𑍍𑌤𑌾' 𑌇𑌤𑌿, 𑌏𑌷𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌮𑍃𑌷𑍈𑌵 𑌤𑍇। 𑌕𑌥𑌮𑍍?—

௧௯. 𑌯 𑌏𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌶𑍍𑌚𑍈𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌹𑌤𑌮𑍍।
𑌉𑌭𑍌 𑌤𑍌 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑍋 𑌨𑌾𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 ॥

𑌯 𑌏𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌂 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌹𑌨𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂, 𑌯𑌶𑍍𑌚 𑌏𑌨𑌂 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌹𑌤𑌂 𑌦𑍇𑌹𑌹𑌨𑌨𑍇𑌨 '𑌹𑌤𑌃 𑌅𑌹𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌹𑌨𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌤𑌂, 𑌤𑍌 𑌉𑌭𑍌 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑌃 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌨𑍍𑌤𑍌 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍। '𑌹𑌨𑍍𑌤𑌾 𑌅𑌹𑌮𑍍' '𑌹𑌤𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌅𑌹𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌦𑍇𑌹𑌹𑌨𑌨𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌯𑍌 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌤𑌃 𑌤𑍌 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌨𑌭𑌿𑌜𑍍𑌞𑍌 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨 𑌅𑌯𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌹𑌨𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌨 𑌚 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥ ௧௯ ॥

ற்குத்) தடை (செய்துநிற்கின்ற சோகமோஹங்)களை நீக்குதல்மாத்திரம் பகவானால் செய்யப்படுகின்றது. ஆகவே, "போர்செய்யக்கடவாய்" என்பது அநுவாதமாத்திரமேயன்றி, விதி(த்தற்பொருளுடையது) ஆகாது. [அநுவாதம் - முன்னமே அமைந்துள்ள ஒன்றை யாதாயினும் ஓர்நிமித்தத்தால் பின்னும் கூறுதல்.] (௧௮)

ஆத்மா அகர்த்தா.

"கீதாசாஸ்திரமானது சோகமோகம் முதலான ஸம்ஸாரகாரணங்களைப் போக்குதற்குப் பயன்படுவதல்லது, (அவற்றுள்) புகும்படி செய்வதன்று" என்ற இவ்விஷயத்திற்கு ஸாக்ஷிகளாயுள்ள இரண்டு ருக்குக்களைப் பகவான் (கடோபநிஷத்தினின்றும்) எடுத்தாளலானார்.

"யுத்தத்திலே பீஷ்மாதியர்கள் என்னால் கொல்லப்படுகிறார்கள்; நானே அவர்களைக் கொல்பவன்" என்று நீ நினைக்கிற இந்தப் புத்தி தவறே.—எப்படி ?—

௧௯. எவன் இதனைக் கொல்வதாக அறிகிறானோ, எவன் இதனைக் கொல்லப்படுவதாக அறிகிறானோ; அவ்விருவரும் சரியாக அறிபவராகார். (ஏனெனில்,) இது கொல்வது(ம்) இல்லை, கொல்லப்படுவது(ம்) இல்லை.

எவன் இப்பொழுதுபேசிவருகின்ற இத்தேகியை, கொலைத்தொழிலைச் செய்வதாக அறிகின்றானோ; வேறுஎவன் இதனை, சரீரம் கொல்லப்படுதலால் 'நான் கொல்லப்பட்டவன்' எனக் கொலைத்தொழிலுக்குச் செயப்படுபொருளாகக் கருதுகின்றானோ,— அவ்விருவரும், அவிவேகத்தால் ஆத்மாவை உணராதவர். உடலைக் கொல்லுதலால் 'நான் கொல்பவன், நான் கொல்லப்படுகிறவன் என்று (நினைத்து), ஆத்மாவை 'நான்' என்னும் எண்ணத்திற்கு எட்டுவதாக அறிகிற அவர்கள், ஆத்மா இன்னதென்பதை ஆராய்ந்தறியாதவர்களென்க. ஏனெனில், இந்த ஆத்மா அவிகாரியாதலின் கொலைத்தொழிலுக்குக் கர்த்தாவுமாகாது, செயப்படுபொருளுமாகாது என்றபடி. (௧௯)

𑌕𑌿𑌞𑍍𑌚—

௨௫. 𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑌯𑍋𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑍋 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑌿𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑌯𑍋𑌃 𑌤𑍁𑌲𑍍𑌯𑌃 𑌸𑌮𑌃 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌃 ; 𑌤𑍁𑌲𑍍𑌯𑌃 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑌿𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃—𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑌰𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑌿𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌰𑌿𑌵 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 । 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌤𑍁𑌲𑍍𑌯𑍋 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑌿𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀— 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌆𑌰𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌆𑌰𑌮𑍍𑌭𑌾𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌆𑌰𑌮𑍍𑌭𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀, 𑌦𑍇𑌹𑌧𑌾𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌃 𑌸𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௫ ॥

'𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌵𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 '𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌃 𑌸 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌨𑍍𑌤𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌯𑌤𑍍𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌂 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 ; 𑌸𑍍𑌥𑌿𑌰𑍀𑌭𑍂𑌤𑌂 𑌤𑍁 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥

V. B. SUBRAHMANYA SARMA, TAMIL-PANDIT.

மற்றும்,

௨௫. **மானவமானங்களில் ஒப்பநிற்பவனாய், நண்பரது பக்கத்திலும், பகைவரது பக்கத்திலும் ஒப்பநிற்பவனாய், எல்லாமுயற்சிகளையும் துறக்கின்ற அவன் ‘‘குணாதீதன்’’ [குணங்களைக் கடந்தவன்] எனப்படுகிறான்.**

ஒப்பநிற்பவன் - மாறுபாடில்லாதவன் [தாக்கப்படாதவன்]. சிலர் தமதுகருத்தின்படி உதாஸீநர்களாயிருந்தாலும், பிறர்கருத்தின்படி நண்பரது பக்கத்திலாயினும், பகைவரது பக்கத்திலாயினும் இருக்கிறவர்போல(க் காணப்படுகிறார்கள்) ; என்று, ‘‘இவனோ நண்பரது பக்கத்திலும் பகைவரது பக்கத்திலும் ஒப்பநிற்பவன்’’ என அருளிச்செய்கிறார். இவன் இம்மைமறுமைக்கான எல்லாக்கர்மங்களையும் விட்டொழியும் தன்மையன் : உடம்பைக் கொண்டுசெலுத்தற்குமாத்திரம் காரணமானவை [உடம்பு நிற்றற்குமாத்திரம்வேண்டிய கர்மங்கள்] நீங்கலாக எல்லாக்கர்மங்களையும் துறந்துநிற்பவன் என்பது பொருள். (௨௫)

பகவத்பக்தி முக்திக்கு ஸாதநம்.

குணங்களைக்கடந்தவனாதற்கு ‘‘எவன்’’ (௧௪ - ௨௩) என்பதுமுதல் ‘‘குணங்களைக் கடந்தவன் எனப்படுகிறான்’’ (௧௪ - ௨௫) என்பதுவரை கூறப்பட்ட ஸாதநங்கள் எவ்வளவுகாலத்தில் முயற்சியால் ஸாதிக்கக்கூடியவையோ, அவ்வளவுகாலம் ஸந்யாஸியினால், மோக்ஷத்தை நாடும் துறவியினால் அநுஷ்டிக்கவேண்டியவை ; ஆனால், உறுதியாகநிலைப்பட்டுத் தானே உணரக்கூடியவளவிலே [தன்அநுபவத்தில் முயற்சியின்றி அவை தாமாகவே இயல்பாய் அமைந்திட்டபொழுது], குணங்களைக் கடந்துநிற்கும்யதிக்கு அடையாளங்களாகின்றன. (ஞானாதிகாரியானவன் தனக்கு ஆத்ம அறிவு பிறத்தற்குமுன் உதாஸீநனாயிருத்தல்முதலிய இவ்வொழுக்கங்களையெல்லாம் முயற்சியோடு அநுஷ்டித்துச் சாதித்துக்கொள்ளவேண்டும். ஆனால், ஆத்மஞானம் உதித்தவுடன் ஜீவன்முக்தனான அவனுக்கு அவையெல்லாம் உறுதியாகநிலைப்பட்டு அநுபவத்தில் அமைந்து, அவனுக்கு லக்ஷணங்களாகநிற்கின்றன.—ஆ.)

கஸ்மாத் அவிக்ரிய: இதி? த்விதீயோ மந்த்ர:—

20\. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூத்வா(அ)பவிதா வா ந பூய: |
அஜோ நித்ய: ஶாஶ்வதோ(அ)யம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ||

ந ஜாயதே ந உத்பத்யதே, ஜநிலக்ஷணா வஸ்துவிக்ரியா ந ஆத்மநோ வித்யத இத்யர்த:। ததா ந ம்ரியதே வா। வாஶப்த: சார்தே। ந ம்ரியத இதி அந்த்யா விநாஶலக்ஷணா விக்ரியா ப்ரதிஷித்யதே। கதாசிச்சப்த: ஸர்வவிக்ரியாப்ரதிஷேதை: ஸம்பத்யதே— ந கதாசிஜ்ஜாயதே, ந கதாசிந் ம்ரியதே இத்யேவம்। யஸ்மாத் அயம் ஆத்மா பூத்வா பவநக்ரியாம் அநுபூய பஶ்சாத் அபவிதா அபாவம் கந்தா ந பூய:, தஸ்மாத் ந ம்ரியதே। யோ ஹி பூத்வா ந பவிதா ஸ ம்ரியதே இதி உச்யதே லோகே। வாஶப்தாத் நஶப்தாச்ச அயம் ஆத்மா அபூத்வா வா பவிதா தேஹவத் ந பூய:। தஸ்மாத் ந ஜாயதே। யோ ஹி அபூத்வா பவிதா ஸ ஜாயதே இதி உச்யதே। நைவம் ஆத்மா। அதோ ந ஜாயதே। யஸ்மாத் ஏவம், தஸ்மாத் அஜ:। யஸ்மாச்ச ந ம்ரியதே

ஆத்மா நிர்விகாரி.

ஆத்மா நிர்விகாரியென்பது எப்படி?—இரண்டாம் மந்திரம் (விடை கூறுகின்றது):

20\. ***இது பிறப்பதில்லை : ஒருகாலத்து இறப்பதும் இல்லை : (ஒருகாலத்து) இருந்து மறுபடி இல்லாமற்போவதும் இல்லை : (ஒருகாலத்து இல்லாதிருந்து) மறுபடி இருப்பதும் இல்லை. பிறவாததாய், நித்யமாய், சாச்வதமாய் புராணமாயுள்ள இது, சரீரம் கொலையுண்ணும்பொழுது (தான்) கொல்லப்படுவதில்லை.***

*இது உண்டாகிறதில்லை : பொருள்களுக்கு உள்ள உற்பத்திஎன்னும் விகாரம் ஆத்மாவுக்கு இல்லையென்க. அவ்வண்ணமே, இது இறப்பதுமில்லை. 'இறப்பதும் இல்லை' எனக் கடைசியாயுள்ள அழிவென்னும் விகாரம், மறுக்கப்படுகின்றது. '**ஒருகாலத்து**' என்றசொல்லை, ஒருகாலத்துப் பிறப்பது(ம்)இல்லை, ஒருகாலத்து இறப்பது(ம்) இல்லை என இவ்வாறு (ஆத்மாவுக்கு) ஸகலவிகாரங்களையும் மறுத்த ('இல்லை' என்னும் ஓரேசொல்)லோடு சேர்த்துக்கொள்க. இந்தஆத்மா(முதலில்)இருத்தலென்னும் வினையைப் பெற்று,பின்பு மீண்டும் இல்லாமற்போதலை அடைவதில்லை யாதலின், இறப்பதில்லை; எது(ஒருகாலத்தில்) இருந்து, பின்பு இல்லாமற் போகின்றதோ, அது இறக்கின்றது என்று உலகத்திற் சொல்லப்படுகின்றது.('**இறப்பதும் இல்லை**' என்பதிலுள்ள)'**உம்**' என்ற சொல்லினாலும் '**இல்லை**' என்ற சொல்லினாலும், இந்தஆத்மா சரீரம்போல (முதலில்)இல்லாதிருந்து, பின்பு இருத்தலைப் பெறுவதும்[பிறப்பதும்] இல்லை(எனவும் கொள்க). ஆதலின், (ஆத்மா) பிறப்பதில்லை. எது (முதலில்) இல்லாதிருந்து, பின்பு உண்டாகின்றதோ, அது பிறக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆத்மா இவ்வாறன்று; ஆதலின், பிறப்பதில்லை. (அது) இவ்வாறிருத்தலின், **பிறவாததாம்;***

𑌤𑌥𑌾𑌜𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌚 | 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌆𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌯𑍋𑌃 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌧𑍍𑌯𑌭𑌾𑌵𑌿𑌨𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑍈𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌯𑍌𑌵𑌨𑌾𑌦𑌿𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑍋 𑌯𑌥𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌹—𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 | 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤 𑌇𑌤𑌿 𑌅𑌪𑌕𑍍𑌷𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇 | 𑌶𑌶𑍍𑌵𑌦𑍍𑌭𑌵𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌃 | 𑌨 𑌅𑌪𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣, 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌨𑌾𑌪𑌿 𑌗𑍁𑌣𑌕𑍍𑌷𑌯𑍇𑌣 𑌅𑌪𑌕𑍍𑌷𑌯𑌃 | 𑌅𑌪𑌕𑍍𑌷𑌯𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌽𑌪𑌿 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇—𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 𑌇𑌤𑌿 | 𑌯𑍋 𑌹𑌿 𑌅𑌵𑌯𑌵𑌾𑌗𑌮𑍇𑌨 𑌉𑌪𑌚𑍀𑌯𑌤𑍇 𑌸 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇, 𑌅𑌭𑌿𑌨𑌵 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 | 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍁𑌰𑌾𑌽𑌪𑌿 𑌨𑌵 𑌏𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃; 𑌨 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 | 𑌤𑌥𑌾—𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌪𑌰𑌿𑌣𑌮𑍍𑌯𑌤𑍇 𑌹𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑍇 𑌵𑌿𑌪𑌰𑌿𑌣𑌮𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌶𑌰𑍀𑌰𑍇 | 𑌹𑌨𑍍𑌤𑌿𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌵𑌿𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌾𑌰𑍍𑌥𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌅𑌪𑍁𑌨𑌰𑍁𑌕𑍍𑌤𑌤𑌾𑌯𑍈 | 𑌨 𑌵𑌿𑌪𑌰𑌿𑌣𑌮𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ||

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌷𑌡𑍍 𑌭𑌾𑌵𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌲𑍌𑌕𑌿𑌕𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 | 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌹𑌿𑌤𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌃 | 𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌂

இறப்பதில்லை யாதலின், **நித்ய**மாயுமிருப்பதாம். முதலிலும் முடிவிலுமுள்ள விகாரங்களை மறுத்திடவே, ஸகலவிகாரங்களும் மறுக்கப்பட்டவையாகின்றன; என்றாலும், இடைநின்ற விகாரங்களை, அந்தந்தச்சொற்கள்கொண்டே [வெளிப்படையாக] மறுத்தல்வேண்டுமென (இங்குக்) கூறுதொழிந்த அசைதல்முதலிய ஸகலவிகாரங்களின் மறுத்தலும் (கூறப்பட்டதாகவே) ஆம்படி, **"சாச்வதமாய்"** என்பது முதலாகக் கூறுகிறார்: சாச்வதமாய் எனத் தேய்தலாகிய விகாரம் மறுக்கப்படுகின்றது. **சாச்வதமாய்** = எப்பொழுதும் உள்ளதாய்; (ஆத்மா) அவயவங்களைப் பெற்றிராமையால் தன்வடிவத்தில் தேய்வதில்லை; அன்றியும், குணக்குறைவால் குறைந்துபோவதும் இல்லை; நிர்க்குணமாதலால். **புராணமாய்** எனத் தேய்தலுக்கு மறுதலையாகிய வளர்தல்என்னும் விகாரம் மறுக்கப்படுகின்றது: அவயவங்கள் அதிகரித்தலால் எது மிகுகின்றதோ, அது வளர்கின்றது எனவும், புதியது எனவும் சொல்லப்படுகின்றது. இவ்வாத்மாவுக்கோ அவயவங்கள் இல்லையாதலின், (அது இப்பொழுதும் இனிமேலும் புதிதாக இருப்பதுபோல) முந்தியும் புதிதாகவே இருப்பதென்று **புராணம்** (எனப்படுகின்றது). (எப்பொழுதும் ஒரேநிலையையுடையதாதலின், அது) வளர்கின்றதில்லை யென்க. அவ்வாறே, சரீரம் கொலையுண்ணும்பொழுதும், (அதாவது - சரீரம் தன்) நிலைமாறும்பொழுதும் (ஆத்மா)கொல்லப்படுவதில்லை, (அதாவது - தன்) நிலைமாறுவதில்லை. கூறியதுகூறல்(என்னும் குற்றம்) வாராமைக்காக, கொல்லுதல் என்பதை - இங்கு நிலைமாறுதல் என்றபொருளில் நிற்பதாகக் கொள்க. (ஆத்மா) நிலைமாறுகின்றதில்லை என்றபடி.

இந்தமந்திரத்திலே, உலகத்துப்பொருள்களின் நிலைவேறுபாடாகிய(பிறத்தல், இருத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், அழிதல் என்னும்) ஆறு பாவவிகாரங்களும் ஆத்மாவினிடத்து மறுக்கப்படுகின்றன. எவ்விதமான விகாரமும் ஆத்மாவுக்கு

त्वात् 'उभौ तौ न विजानीतः' इति पूर्वेण मन्त्रेण अस्य सम्बन्धः ॥ २० ॥

'य एनं वेत्ति हन्तारम्' इत्यनेन मन्त्रेण हननक्रियायाः कर्ता कर्म च न भवति इति प्रतिज्ञाय 'न जायते' इत्यनेन अविक्रियत्वं हेतुम् उक्त्वा प्रतिज्ञातार्थम् उपसंहरति—

२१. वेदाविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हन्ति कम् ॥

वेद विजानाति अविनाशिनम् अन्त्यभावविकाररहितं नित्यं विपरिणामरहितं यो वेद इति सम्बन्धः । एनं पूर्वेण मन्त्रेण उक्तलक्षणम् अजम् अव्ययम् अपक्षयरहितं कथं केन प्रकारेण सः विद्वान् पुरुषः अधिकृतः हन्ति हननक्रियां करोति? । कथं वा घातयति हन्तारं प्रयोजयति? । न कथंचित् कंचित् हन्ति, न कथंचित् कंचित् घातयति इति उभयत्र आक्षेप एव अर्थः, प्रश्नार्थासम्भवात् । हेत्वर्थस्य च अविक्रियत्वस्य तुल्यत्वात् विदुषः सर्वकर्मप्रतिषेध एव प्रकरणार्थः अभिप्रेतो भगवता । हन्तेः तु आक्षेपः उदाहरणार्थत्वेन कथितः ॥

இல்லையென்பது வாக்கியத்தின் பொருள். இப்படியிருப்பதனால், "அவ்விருவரும் சரியாக அறிபவராகார்" (உ - கக)என முந்தின மந்திரத்தோடு இதனைச் சேர்த்துக் கொள்க. (உ0)

ஞானி, கர்மங்களைத் துறக்கவேண்டியதாயிருத்தல்.

"எவன் இதனைக் கொல்வதாக அறிகிறானோ" (உ - கக)என்ற இம்மந்திரத்தால் (ஆத்மா) கொலைத்தொழிலுக்குக் கர்த்தாவும் செயப்படுபொருளும் ஆவதில்லை எனப் பிரதிஜ்ஞைசெய்து, "இது பிறப்பதில்லை" (உ - உ0) என்ற இதனால் அவிகாரியாயிருத்தலை ஏதுவாகக் கூறி; பிரதிஜ்ஞைசெய்த விஷயத்தை முடிக்கிறார்:

உக. எவன் இதனை அழிவற்றதாய், நித்யமானதாய், பிறவாததாய், குறைபாடில்லாததாக அறிகிறானோ, அப்புருஷன், பார்த்த! எப்படி யாரைக் கொல்லும்படி செய்கிறான்? யாரைக் கொல்கிறான்?

முந்தின மந்திரத்தால் லக்ஷணம்கூறப்பெற்ற இதனை [ஆத்மாவை], அழிவற்றதாய்=கடைசியாயுள்ள (அழிவென்னும்)பாவவிகாரமற்றதாய், நித்யமானதாய்=(தன்) நிலைதிரிதல் இல்லாததாய், பிறவாததாய் குறைபாடில்லாததாக = பிறத்தலும் தேய்தலும் இல்லாததாக எவன் அறிகிறானோ, அந்த அதிகாரிபுருஷனான ஞானி, எவ்விதத்தால் கொலைத்தொழிலைச் செய்கிறான்? எப்படித்தான் கொல்பவனை ஏவுகிறான்? ஒருவிதத்தாலும் ஒருவனையும் கொல்வதில்லை, ஒருவிதத்தாலும் ஒருவனையும் கொல்லும்படி செய்வதுமில்லை என இரண்டிடத்திலும் எதிர்மறையே பொருள்; வினாப்பொருள் பொருந்தா(து, மேலே விடைஇல்லா)மையால். (கொலைத்தொழிலை மறுத்தற்குக் கூறிய) காரணமானது[ஆத்மா நிர்விகாரியென்பது], (மற்றைய தொழில்களை மறுத்தற்கும்) ஒப்பநிற்றலின், ஞானிக்கு ஸகலகர்மங்களையும் மறுத்தலே (இப்) பிரகரணத்தின் பொருளாகப் பகவானாற் கருதப்பட்டுள்ளது; கொல்லுதலின் மறுப்போ, உதாரணத்திற்காகக் கூறப்பட்டதாம்.

விதுஷ: கம் கர்மாஸம்பவஹேதுவிஶேஷம் பஶ்யந் கர்மாண்யாக்ஷிபதி பகவாந் 'கதம் ஸ புருஷ:' இதி। நநு உக்த ஆத்மந: அவிக்ரியத்வம் ஸர்வகர்மாஸம்பவகாரணவிஶேஷ: ॥

ஸத்யமுக்த: । ந து ஸ: காரணவிஶேஷ:, அந்யத்வாத் விதுஷ: அவிக்ரியாத் ஆத்மந: இதி । ந ஹி அவிக்ரியம் ஸ்தாணும் விதிதவத: கர்ம ந ஸம்பவதி இதி சேத்— ந ; விதுஷ: ஆத்மத்வாத் । ந தேஹாதிஸம்காதஸ்ய வித்வத்தா । அத: பாரிஶேஷ்யாத் அஸம்ஹத: ஆத்மா வித்வாந் அவிக்ரிய: இதி தஸ்ய விதுஷ: கர்மாஸம்பவாத் ஆக்ஷேபோ யுக்த: 'கதம் ஸ புருஷ:' இதி । யதா புத்த்யாத்யாஹ்ருதஸ்ய ஶப்தாத்யர்தஸ்ய அவிக்ரிய ஏவ ஸந் புத்திவ்ருத்த்யவிவேகவிஜ்ஞாநேந அவித்யயா உபலப்தா ஆத்மா கல்ப்யதே, ஏவமேவ ஆத்மாநாத்மவிவேகஜ்ஞாநேந புத்திவ்ருத்த்யா வித்யயா அஸத்யரூபயைவ பரமார்தத: அவிக்ரிய ஏவ ஆத்மா வித்வாந் உச்யதே । விதுஷ: கர்மாஸம்பவவசநாத் யாநி கர்மாணி ஶாஸ்த்ரேண விதீயந்தே தாநி அவிதுஷோ விஹிதாநி இதி பகவதோ நிஶ்சயோऽவகம்யதே ॥

(ஆக்ஷேபம்) :—ஞானிக்குச் செய்தொழில் இல்லாமற்போவதற்கு, பகவான், எத்தகைய சிறப்புக்காரணத்தைக் கண்டு "அவன் எப்படிக் கொல்கிறான்?" எனச் செய்தொழில்களை மறுக்கிறார்?

(ஸமாதானம்) :—ஏன்! ஆத்மா அவிகாரியாயிருத்தல், செய்தொழில்களெல்லாம் இல்லாமற்போவதற்குச் சிறப்புக்காரணமாக (முன்னமே) கூறப்பட்டுள்ளதே.

(ஆக்ஷேபம்) :—கூறப்பட்டுள்ளது உண்மைதான். ஆனால், அது சிறப்புக் காரணமாகாது; அவிகாரியான ஆத்மாவைக்காட்டிலும் ஞானி வேறானவனாதலின் என்பது. ஒரு தூணை, அசைதல்முதலிய விகாரமற்றதாக அறிந்தவனுக்குத் தொழில் உண்டாவதில்லையென்பது இல்லையே யெனின்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று; ஞானியே ஆத்மாவாக இருத்தலின். ஞானியாயிருத்தலென்பது உடல்முதலியவற்றின் சேர்க்கைக்கு அன்று. ஆதலின், பரிசேஷாநுமானத்தால்,[1] ஞானியானவன் (உடல்முதலியவற்றின்) சேர்க்கையல்லாத அவிகாரியான ஆத்மா என(அமையும்; அமைய)வே, அந்தஞானிக்குச் செய்தொழில்கள் நிகழ்வதில்லையாதலின் "அவன் எப்படிக் கொல்கிறான்?" என்னும் மறுப்பு ஏற்கு மென்க. உதாரணமாக, (ஆத்மாவினின்றும்) புத்திவ்ருத்தியை வேறாகப் பகுத்தறியமாட்டாத அஜ்ஞானத்தால்—அவிகாரியாயேயிருக்கும் ஆத்மா, புத்திமுதலியவற்றால் கவரப்பட்ட ஓசைமுதலிய பொருள்களை உணர்வதாகக் கற்பனைசெய்யப்படுகின்றது. இவ்வண்ணமே, ஆத்மாஅநாத்மாக்களைப் பகுத்தறிகிற புத்திவ்ருத்தியாகிய பொய்ம்மையேயான அஜ்ஞானத்தால்— உண்மையில் நிர்விகாரியேயான ஆத்மா, ஞானியாகக் கூறப்படுகின்றது. ஞானிக்குத் தொழில் ஏற்காதென்று உரைத்தலின், சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களெல்லாம் அஜ்ஞானிக்கு விதிக்கப்பட்டவை [ஏற்பட்டவை] எனப் பகவானுடைய நிர்ணய மென்று தெரிகின்றது.

[1] ராமன் கிருஷ்ணன் என்றஇருவருள் 'இவன் ராமனல்லன்' என்றால், 'இவன் கிருஷ்ணன்' என்பது பரிசேஷாநுமானம். [பரிசேஷம் - ஒழிபு.]

ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ வாங்மயம் தப உச்யதே ||

அநுத்வேககரம் ப்ராணிநாம் அது:ககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத் — ப்ரியஹிதே த்ருஷ்டாத்ருஷ்டார்த்தே | அநுத்வேககரத்வாதிபி: தர்மை: வாக்யம் விசேஷ்யதே | விசேஷணதர்மஸமுச்சயார்த்த: சசப்த: | பரப்ரத்யயார்த்தம் ப்ரயுக்தஸ்ய வாக்யஸ்ய அநுத்வேககரஸ்ய ஸத்யப்ரியஹிதாநாம் அந்யதமேந த்வாப்யாம் த்ரிபிர்வா விஹீநஸ்ய ந வாங்மயதபஸ்த்வம் | ததா ஸத்யவாக்யஸ்ய இதரேஷாம் அந்யதமேந த்வாப்யாம் த்ரிபிர்வா விஹீநதாயாம் ந வாங்மயதபஸ்த்வம் | ததா ப்ரியவாக்யஸ்யாபி இதரேஷாம் அந்யதமேந த்வாப்யாம் த்ரிபிர்வா விஹீநஸ்ய ந வாங்மயதபஸ்த்வம் | ததா ஹிதவாக்யஸ்யாபி இதரேஷாம் அந்யதமேந த்வாப்யாம் த்ரிபிர்வா விஹீநஸ்ய ந வாங்மயதபஸ்த்வம் | கிம் புந: தத் தப:?— யத் ஸத்யம் வாக்யம் அநுத்வேககரம் ப்ரியம் ஹிதம் ச தத் தப: வாங்மயம், யதா "சாந்தோ பவ வத்ஸ! ; ஸ்வாத்யாயம் யோகம் ச அநுதிஷ்ட, ததா தே ச்ரேயோ பவிஷ்யதி" இதி | ஸ்வாத்யாயாப்யஸநம் சைவ யதாவிதி வாங்மயம் தப: உச்யதே || ௧௫ ||

௧௬. மந:ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌநமாத்மவிநிக்ரஹ: |
பாவஸம்சுத்திரித்யேதத் தபோ மாநஸமுச்யதே ||

மான வார்த்தை எதுவோ, (அதுவும்), ஓதுதலை அப்யஸித்தலும் "வாங்மய தபஸ்" எனப்படுகின்றன.

மனக்கொதிப்பைச் செய்யாதது - பிராணிகட்கு வருத்தத்தை விளைக்காதது. இனியது - பார்க்கப்பட்ட பயனுள்ளது [கேட்பதற்குத் தற்காலத்தில் இன்பமாயிருப்பது]; இதம் - பார்க்கப்படாத பயனுள்ளது [முடிவிலே நலமானது]. "மனக்கொதிப்பைச் செய்வது" முதலான தன்மைகளால் வார்த்தையானது விசேஷிக்கப்படுகின்றது. உம்மை - விசேஷணத்தன்மைகளை ஒருங்குசேர்க்கும் பொருளது. பிறர்க்கு உறுதி உண்டாம்பொருட்டு வழங்கியதாய் மனக்கொதிப்பைச் செய்யாத வார்த்தையானது உண்மை இனிமை இதம் என்றவற்றுள் எதாவதொன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் இல்லாக்கால், வாங்மயதபஸ் ஆகாது. அவ்வாறே, உண்மை வார்த்தையானது மற்றையவற்றுள் எதாவதொன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் குறைந்தவழி, வாங்மயதபஸ் ஆகாது. அங்ஙனமே, இனியவார்த்தையும் மற்றையவற்றுள் எதாவதொன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் இல்லாவிடத்து, வாங்மயதபஸ் ஆகாது. அவ்வண்ணமே, இதவார்த்தையும் மற்றையவற்றுள் எதாவதொன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் குறைந்தவளவிலே, வாங்மயதபஸ் ஆகாது.—ஆனால், அந்த தபஸ் என்பது யாது?—எது உண்மையும், மனக்கொதிப்பைச் செய்யாததும், இனியதும், இதமுமான வார்த்தையோ, அது வாங்மயதபஸ் என்க. உதாரணமாக, "குழந்தாய்! அமைந்தவனாய் இருக்க; ஓதுதலையும், யோகத்தையும் அநுஷ்டிக்க. அவ்வாறு, உனக்கு நலமுண்டாம்" என்பது. ஓதுதலை - விதிப்படி ஓதுதலை. (வாங்மயம் - வார்த்தையை அதிகமாகவுடையது, அதனைப் பிரதாநமாகக்கொண்டது என்றபடி.—ஆ.) (௧௫)

மனத்தால் செய்யப்படும் தவம்.

௧௬. மனத்தெளிவு, நன்மனமுடைமை, மௌனம், தன்னடக்கம், ஹிருதய பரிசுத்தம் என்றஇது மாநஸதபஸ் எனப்படுகின்றது.

௧௮. 𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌨𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌪𑍋 𑌦𑌮𑍍𑌭𑍇𑌨 𑌚𑍈𑌵 𑌯𑌤𑍍 ।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌦𑌿𑌹 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌚𑌲𑌮𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥

𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌃 𑌸𑌾𑌧𑍁𑌕𑌾𑌰𑌃 "𑌸𑌾𑌧𑍁𑌃 𑌅𑌯𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌰𑍍𑌥𑌮𑍍, 𑌮𑌾𑌨𑌃 𑌮𑌾𑌨𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌾𑌭𑌿𑌵𑌾𑌦𑌨𑌾𑌦𑌿 𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑍍, 𑌪𑍂𑌜𑌾 𑌪𑌾𑌦𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌾𑌰𑍍𑌚𑌨𑌾𑌶𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌤𑌪𑌃 𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌨𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌥𑌮𑍍, 𑌦𑌮𑍍𑌭𑍇𑌨 𑌚𑍈𑌵 𑌯𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌪𑌃 𑌤𑌦𑌿𑌹 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌚𑌲𑌂 𑌕𑌾𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌕𑌫𑌲𑌤𑍍𑌵𑍇𑌨 𑌅𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥ ௧௮ ॥

௧௯. 𑌮𑍂𑌢𑌗𑍍𑌰𑌾𑌹𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑌤𑍍𑌪𑍀𑌡𑌯𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌪𑌃 ।
𑌪𑌰𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑌾𑌦𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌮𑍂𑌢𑌗𑍍𑌰𑌾𑌹𑍇𑌣 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍀𑌡𑌯𑌾 𑌯𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌪𑌃 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌵𑌾 𑌤𑌤𑍍 𑌤𑌾𑌮𑌸𑌂 𑌤𑌪𑌃 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௧௯ ॥

𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌦𑌾𑌨𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௦. 𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌯𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌦𑍀𑌯𑌤𑍇𑌽𑌨𑍁𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑍇 ।
𑌦𑍇𑌶𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑌤𑍍 𑌦𑌾𑌨𑌂 𑌦𑍀𑌯𑌤𑍇 𑌅𑌨𑍁𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑍇

---

௧௮. எந்தத் தபஸானது உபசாரத்திற்காகவும், மதிப்பிற்காகவும், வழிபடுதற்காகவும் கள்ளமாகவே செய்யப்படுகின்றதோ, அது ராஜஸம் எனப்பட்டது: இங்கே(தான் பயனுள்ளது) : சஞ்சலமானது : உறுதியற்றது.

உபசாரத்திற்காக - "இவன் தவமுடைய நல்ல பிராமணன்" என்பதற்காக, (இவ்வாறு பிறர் தன்னைக் கொண்டாடுவதற்காக). மதிப்பு - மதித்தல் ; இருக்கையெழுதல், வணங்கல் முதலியன. அவற்றிற்காக - (இவ்வாறு தன்னைப் பிறர்மதித்தற்காக.) வழிபடுதல்-காலலம்பல், பூஜித்தல், விருந்திடுதல் முதலியன. அவற்றிற்காக - (பிறர் இவ்விதமாகத் தன்னைத் தொழுதற்காக). சஞ்லமானது - (சிறிதுகாலம் நிற்கும் பயனுள்ளது.—ம.) ஏதோ ஒருகாலத்துப் பயனுடையதனால், உறுதியற்றது - (சிறிது காலம் நிற்கின்ற அந்தப்பயனையும் கொடுப்பதென்பதும் நிச்சயமில்லாதது). (௧௮)

௧௯. முரட்டுப்பிடியினால் எந்தத் தவமானது தன்னை ஹிம்ஸித்துக்கொண்டு செய்யப்படுகின்றதோ, அல்லது பிறனைக் கெடுத்தற்காகச்(செய்யப்படுகின்றதோ), அது தாமஸமாகக் கூறப்பட்டது.

முரட்டுப்பிடியினால் - பகுத்தறிவில்லா உறுதியினால். அது - தவம். (௧௯)

தானங்களின் மூன்று வகை.

இனி, தானத்தினுடைய மூன்றுவகைகளையும் கூறுகிறார் :

௨௦. எந்தத் தானமானது உதவிபுரியாதவனுக்கு, (உரிய) இடத்திலும் (உரிய) காலத்திலும் யோக்கியனிடத்திலும் கொடுக்கவேண்டுமென்று கொடுக்கப்படுகின்றதோ அந்தத் தானம் ஸாத்துவிகம் எனப்படுகின்றது.

கொடுக்கவேண்டுமென்று - (கொடுக்கவேண்டியது தனது கடமையென்று) இவ்வாறு மனங்கொண்டு. உதவிபுரியாதவனுக்கு - பதிலுபகாரத்தைச் செய்யமுடி

V.B. SUBRAHMANYA SARMA TAMIL PANDIT

ननु विद्यापि अविदुष एव विधीयते, विदितविद्यस्य पिष्टपेषणवत् विद्याविधानानर्थक्यात् । तत्र अविदुषः कर्माणि विधीयन्ते न विदुषः इति विशेषो नोपपद्यत इति चेत् — न । अनुष्ठेयस्य भावाभावविशेषोपपत्तेः । अग्निहोत्रादिविध्यर्थज्ञानोत्तरकालम् अग्निहोत्रादिकर्म अनेकसाधनोपसंहारपूर्वकम् अनुष्ठेयम् "कर्ता अहम्, मम कर्तव्यम्" इत्येवंप्रकारविज्ञानवतः अविदुषः यथा अनुष्ठेयं भवति न तु तथा 'न जायते' इत्याद्यात्मस्वरूपविध्यर्थज्ञानोत्तरकालभावि किंचित् अनुष्ठेयं भवति; किं तु "नाहं कर्ता, नाहं भोक्ता" इत्याद्यात्मैकत्वाकर्तृत्वादिविषयज्ञानात् न अन्यत् उत्पद्यते इति एष विशेष उपपद्यते ॥

यः पुनः "कर्ता अहम्" इति वेत्ति आत्मानम्, तस्य "मम इदं कर्तव्यम्" इति अवश्यंभाविनी बुद्धिः स्यात्; तदपेक्षया सः अधिक्रियते इति तं प्रति कर्माणि सन्ति । स च अविद्वान्, 'उभौ तौ न विजानीतः' इति वच-

---

அஜ்ஞானிக்கே கர்மங்கள்.

(ஆக்ஷேபம்):—அப்படியானுல், ஞானமும் அஜ்ஞானிக்கே விதிக்கப்படுகின்றது; முன்னமே ஞானம் கைகூடப்பெற்றவனுக்கு (மீண்டும்) ஞானத்தை விதித்தலென்பது அரைத்ததை அரைப்பதுபோலப் பயனில்லையாதலின். அப்படியிருக்க, "அஜ்ஞானிக்குக் கர்மங்கள் விதிக்கப்படுகின்றனவேயன்றி, ஞானிக்கு அல்ல" என்னும் வேறுபாடு கூடாதெனில்,—

(ஸமாதாநம்):—அப்படியன்று; "(அக்நிஹோத்ராதிகர்மங்களை அஜ்ஞானி) செய்யவேண்டியது உண்டு, (ஞானி செய்யவேண்டியது) இல்லை" என்னும் வேறுபாடு கூடுமாகலின். அக்நிஹோத்ரம்முதலிய விதிகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டபின், அனேகஸாதநங்களைச்சேர்த்துக்கொண்டு அநுஷ்டிக்கவேண்டியவையான அக்நிஹோத்ரம்முதலிய கர்மங்கள், "நானே கர்த்தா, (இது) எனது கடமை" என்னும் இத்தகைய அறிவுடைய அஜ்ஞானிக்கு எப்படிச் செய்யவேண்டியன ஆகின்றனவோ, அப்படி, "இது பிறப்பதில்லை" (உ-உ0) என்பதுமுதலாக ஆத்மா இன்னதென்று (உணர்த்துகின்ற)விதிகளின் பொருளைக் கண்டறிந்தபின், (ஞானிக்கு) ஒன்றும் செய்யவேண்டியதாவதில்லை: ஆனல், "நான் கர்த்தா அன்று, நான் போக்தா அன்று" என்பதுமுதலாக ஆத்மா ஏகமெனவும் அகர்த்தாவெனவும் ஆகிய இவைபோன்ற விஷயங்களின் நிச்சயஅறிவைக்காட்டிலும் வேறு(அறிவு) உண்டாவதில்லை என, இவ் வேறுபாடு கூடுமென்க.

மற்று, எவன் ஆத்மாவை "நான் கர்த்தா" என்று அறிகிறுனே, அவனுக்கு "நான் இது செய்யவேண்டும்" என்னும் எண்ணம் அவசியம் உண்டாகும். அதற்கு ஏற்ப, அவன் (கர்மத்திற்கு)அதிகாரியாகிறுன் என அவனைப்பற்றிக் கர்மங்கள் (விதிக்கப்படுகின்றனவாம்). அ(ப்படிப்பட்ட)வன் அஜ்ஞானியே; "அவ்விருவரும் சரியாக அறிபவராகார்" (உ-கக) என்னும் திருவாக்கினுலும், சிறப்பித்துக் கூறியுள்ள

நாஶ,விஶேஷிதஸ்ய ச விதுஷ: கர்மாக்ஷேபவசநாத் 'கதம் ஸ புருஷ:' இதி।
தஸ்மாத் அவிக்ரியாத்மதர்ஶிநோ விதுஷோ முமுக்ஷோஶ்ச ஸர்வகர்மஸம்ந்யாஸ ஏ-
வ அதிகார: । அத ஏவ பகவாந் நாராயண: ஸாங்க்யாந் விதுஷ: அவிதுஷஶ்ச
கர்மிண: ப்ரவிபஜ்ய த்வே நிஷ்டே க்ராஹயதி—'ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்ம-
யோகேந யோகிநாம்' இதி । ததா ச புத்ராய ஆஹ பகவாந் வ்யாஸ:— "த்வா-
விமாவத பந்தாநௌ" இத்யாதி । ததா ச க்ரியாபதஶ்சைவ புரஸ்தாத் பஶ்சாத் ஸம்-
ந்யாஸஶ்சேதி । ஏதமேவ விபாகம் புந: புந: தர்ஶயிஷ்யதி பகவாந் 'அத-
த்த்வவித் அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே', 'தத்த்வவித்து ந அஹம்
கரோமி' இதி । ததா ச 'ஸர்வகர்மாணி மநஸா ஸம்ந்யஸ்யாஸ்தே' இத்யாதி ॥

தத்ர கேசித் பண்டிதம்மந்யா வதந்தி—"ஜந்மாதிஷட்பாவவிக்ரியாரஹித: அவிக்ரி-
ய: அகர்தா ஏக: அஹம் ஆத்மா" இதி ந கஸ்யசித் ஜ்ஞாநம் உத்பத்யதே, யஸ்மிந் ஸ-
தி ஸர்வகர்மஸம்ந்யாஸ: உபதிஶ்யதே இதி । தத் ந; 'ந ஜாயதே' இத்யாதி ஶா-
ஸ்த்ரோபதேஶாநர்த்தக்யப்ரஸங்காத் । யதா ச ஶாஸ்த்ரோபதேஶஸாமர்த்யாத் தர்மா-

---

ஞானிக்கு "அவன் எப்படிக் கொல்கிறான் ?" என்று கர்மத்தை மறுக்குந் திருவாக்கினாலு மென்க. ஆகவே, அவிகாரியான ஆத்மாவைக் காண்கின்ற ஞானிக்கும், முக்தி (பெற) விரும்புவோனுக்கும் ஸகலகர்மங்களையும் துறத்தலிலேதான் அதிகாரம். ஆதலால்தான், பகவான்நாராயணன் ஸாங்க்யர்களான ஞானிகளையும், கர்மிகளான அஜ்ஞானிகளையும் (தனித்தனியே) பிரித்து "ஞானயோகத்தால் ஸாங்க்யர்களுக்கும், கர்மயோகத்தால் யோகிகளுக்கும்" (௩-௩) என (முறையே) இரண்டுநிஷ்டைகளை உணர்த்துகிறார். அவ்வண்ணமே வ்யாஸபகவான் "இனி, இவ்வழிகள் இரண்டாயுள்ளன" (மோ - ௨௪ - ௬) என்பது முதலாக(த் தமது) புத்திரனுக்குக் கூறுகிறார். அப்படியே, "கர்மமார்க்கமே முந்தியது, துறவே பிந்தியது" என(வும் அதேஸந்தர்ப்பத்திற் கூறுவர்). பகவான், "அகங்காரத்தால் மனம்மயங்கி உண்மையுணராதிருப்பவன் 'நான் கர்த்தா' எனக் கொள்கிறான்," "உண்மையுணர்ந்தவனோ 'நான்(ஒன்றும்)செய்கிறேனில்லை'(எனக் கொள்கிறான்)" (௩-௨௭, ௨௮)என இதேவேறுபாட்டை அடிக்கடி எடுத்துக்காட்டுவர். அவ்வாறே, "ஸகலகர்மங்களையும் மனத்தால் துறந்து (ஸுகமாகத்) தங்கியிருக்கிறான்" (௫ - ௧௩) என்பதுமுதலியவற்றை (எடுத்துக்காட்டுவர்).

நிர்விகாரியான ஆத்மாவின் ஞானம், உண்டாகக் கூடியது தான்.

(ஆக்ஷேபம்) :—இனி, தங்களைப் பண்டிதர்களாக எண்ணியுள்ள சிலர், "எத்தகைய ஞான முண்டானால், ஸகலகர்மங்களையும் துறத்தலென்பது விதிக்கப்படுகின்றதோ, (அத்தகைய ஞானம், அதாவது-)"நான் - (உலகிலுள்ள) பொருள்களுக்கு உரிய பிறப்பு முதலிய (ஆறு) விகாரங்களும் இல்லாமல் நிர்விகாரியாய், அகர்த்தாவாய், ஏகமாயிருக்கும் ஆத்மா" என்னும் ஞானம் ஒருவனுக்கும் உண்டாகாது" என்று கூறுகிறார்கள்.

பல பயன்களையும், (அவற்றைப்பெறுதற்கான பல)கருவிகளையும், (அப்பயன்கட்கும் கருவிகட்கும் உள்ள)ஸம்பந்தங்களையும் விளக்கி,ப்ரவிருத்தி நிவிருத்திகளை உணர்த்தும்(நூல்களின்) கேள்விகளால் பலவிதமாய் மயங்கிக்கலங்கிய உன்மனமானது, சித்தத்தைத் தன்னிடத்தில் வைக்கப்பெறுவதாகிய ஆத்மாவினிடத்து ஸம்சய விபரீதமற்றதாய் எப்பொழுது ஸ்திரமாய் நிற்குமோ, அப்பொழுது நீ யோகத்தை=விவேகபுத்தியாகிய ஸமாதியைப் பெறுவாய். (௫௩)

ஜீவன்முக்தனுடைய லக்ஷணம்.

வினாவுக்கு ஸமயம் வாய்த்தது கண்டு, ஆத்மஞானத்தை அடைந்தவனுடைய லக்ஷணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பத்தால் அர்ஜுனன் சொல்லலுற்றான் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௫௪. கேசவ! ஞானம்நிலைத்து ஸமாதியில் நிற்பவனை எவ்வாறு சொல்வது ? ஞானம் நிலைத்தவன் எவ்வாறு பேசுவான்? எவ்வாறு இருப்பான்? எவ்வாறு நடப்பான்?

𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 "𑌅𑌹𑌂 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾 𑌭𑌾𑌷𑌾 𑌭𑌾𑌷𑌣𑌂 𑌵𑌚𑌨𑌂, 𑌕𑌥𑌂 𑌅𑌸𑍌 𑌪𑌰𑍈𑌃 𑌭𑌾𑌷𑍍𑌯𑌤𑍇 𑌸𑌮𑌾𑌧𑌿𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑌮𑌾𑌧𑍌 𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌹𑍇 𑌕𑍇𑌶𑌵 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑌧𑍀𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌾 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌷𑍇𑌤 𑌕𑌿𑌮𑍍 𑌆𑌸𑍀𑌤 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤 𑌕𑌿𑌮𑍍 𑌆𑌸𑌨𑌂 𑌵𑍍𑌰𑌜𑌨𑌂 𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌥𑌂 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌅𑌨𑍇𑌨 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌪𑍃𑌚𑍍𑌛𑍍𑌯𑌤𑍇 ॥ ௫௪ ॥

𑌯𑍋 𑌹𑌿 𑌆𑌦𑌿𑌤𑌃 𑌏𑌵 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃, 𑌯𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨, 𑌤𑌯𑍋𑌃 '𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌆𑌰𑌭𑍍𑌯 𑌆 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌾𑌧𑌨𑌂 𑌚 𑌉𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌵 𑌹𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 𑌯𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑌿 𑌉𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌯𑌤𑍍𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌾𑌨𑌿 𑌯𑌤𑍍𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌿 𑌸𑌾𑌧𑌨𑌾𑌨𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 𑌚 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚 ॥

௫௫. 𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌮𑌨𑍋𑌗𑌤𑌾𑌨𑍍 ।
𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌦𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌜𑌹𑌾𑌤𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾-

"நான் பரப்ரஹ்மமாய் இருக்கிறேன்" என்னும் ஞானம் நிலைத்து ஸமாதியில் நிற்பவனைச்சொல்லுதல் எவ்வாறு? கேசவ! பிறரால் எவ்வாறு இவன் பேசப்படுகிறான்? [இவனுடைய லக்ஷணம் என்ன?] நிலைத்த ஞானமுள்ளவன், தான் எப்படிப் பேசுவான்? எவ்வாறு இருப்பான்? எவ்வாறு நடப்பான்? அவனுக்கு இருத்தலாவது, நடத்தலாவது எப்படி? என்பது பொருள். இந்த சுலோகத்தால் ஞானம்நிலைத்தவனுடைய லக்ஷணம் கேட்கப்படுகின்றது. (௫௪)

எவன் முதலிலிருந்தே [ப்ரஹ்மசர்யநிலையிலிருந்தே] கர்மங்களைத் துறந்து ஞானயோகநிஷ்டையில் சென்றிருக்கின்றானோ, (வேறு) எவன் (துறவாது) கர்மயோகத்தால் செல்லுகின்றானோ [கர்மயோகநிஷ்டையிலேயே சென்றிடுகின்றானோ], அந்த இருவர்க்கும் "பார்த்த!" (௨-௫௫) என்பதுமுதல் அத்தியாயம் முற்றும்வரையிலும் ஞானம் நிலைத்தவனுடைய லக்ஷணமும், (அவனுடைய நிலையைப்பெறுதற்கான) ஸாதநமும் உபதேசிக்கப்படுகின்றன. ஏனெனில், முக்தி கைகூடப்பெற்றவனுடைய லக்ஷணங்கள் எவைகளோ, அவைகளே வேதாந்தநூல்களில் எங்கும் ஸாதனங்களாக உபதேசிக்கப்படுகின்றன; முயற்சியினால் ஸாதிக்கக்கூடியவையாதலின். முயற்சியால் ஸாதிக்கக்கூடிய ஸாதநங்களும், (ஞானத்தின் வல்லமையினால் வரக்கூடிய) லக்ஷணங்களும் எவைகளோ, அவற்றை ஸ்ரீபகவான் கூறலானார் :

(௧) தன்னிடத்தே தனக்கு ஸந்தோஷம்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௫௫. பார்த்த! தானாக ஆத்மாவினிடத்தே ஸந்தோஷித்திருப்பவனாய், மனத்திலுள்ள ஸகல ஆசைகளையும் எவன் எப்பொழுது தள்ளிவிடுகின்றானோ, அப்பொழுது (அவன்) ஞானம்நிலைத்தவன் எனப்படுகிறான்.

எப்பொழுது (ஒருவன் தன்) நெஞ்சினுள் புகுந்துகிடக்கின்ற பலபடியான

कान् इच्छाभेदान् सर्वान् समस्तान् हे पार्थ मनोगतान् मनसि प्रविष्टान् हृदि प्रविष्टान्। सर्वकामपरित्यागे तुष्टिकारणाभावाच्च शरीरधारणनिमित्तशेषे च सति उन्मत्तप्रमत्तस्येव प्रवृत्तिः प्राप्ता, इत्यत उच्यते — आत्मन्येव प्रत्यगात्मस्वरूप एव आत्मना स्वेनैव बाह्यलाभनिरपेक्षः तुष्टः परमार्थदर्शनामृतरसलाभेन अन्यस्मादलंप्रत्ययवान् स्थितप्रज्ञः स्थिता प्रतिष्ठिता आत्मानात्मविवेकजा प्रज्ञा यस्य सः स्थितप्रज्ञः विद्वान् तदा उच्यते। त्यक्तपुत्रवित्तलोकैषणः संन्यासी आत्मारामः आत्मक्रीडः स्थितप्रज्ञ इत्यर्थः ॥ ५५ ॥

किं च —

५६. दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः।
वीतरागभयक्रोधः स्थितधीर्मुनिरुच्यते॥

दुःखेषु आध्यात्मिकादिषु अनुद्विग्नं न प्रक्षुभितं दुःखप्राप्तौ मनो यस्य सोऽयम् अनुद्विग्नमनाः। तथा सुखेषु प्राप्तेषु

ஆசைகளை முற்றிலும் விட்டொழிக்கின்றானோ, உள்ளேயுள்ள ஆத்மஸ்வரூபத்திலேயே தானாகவே திருப்தனாய், வெளிலாபங்களை வேண்டாதவனாய், பரம்பொருளைக் கண்டுணர்தலாகிய அமிருதரஸம் கிடைக்கப்பெற்றமையால் 'மற்றைய பொருள்கள் வேண்டாம்' என்ற எண்ணம்வந்தவனாய் இருக்கின்றானோ, அப்பொழுது (அவன்) ஆத்மாஅநாத்மாக்களின் ஆராய்ச்சியாலான ஞானம் நிலைத்திருக்கப்பெற்றவன் வித்வான்[ஞானி] எனப்படுகிறான். ஸகலஆசைகளையும் ஒழித்திட்டவளவிலே, ஸந்தோஷத்தை உண்டாக்க ஒன்றும் இல்லாமையாலும், உடம்பொடுநிற்றற்குக் காரணமான (கர்மத்தின்) மிச்சம் பின்னும் இருப்பதனாலும் (ஞானம்நிலைத்தவனுடைய) நடக்கையானது பித்தன் வெறியன் இவர்களுடைய(நடக்கை)போல ஆகும்என்றதனால் (தான்) "**தானாக ஆத்மாவினிடத்தே ஸந்தோஷித்திருப்பவனாய்**" என அருளிச்செய்கிறார். மக்கள், பொருள், உலகம் என்றவற்றினிடத்துப் பற்றைவிட்டு முற்றத்துறந்தவனாய், ஆத்மாவினிடத்தே மகிழ்பவனாய், ஆத்மாவோடு விளையாடுபவன், ஞானம் நிலைத்தவன் என்பது (தேர்ந்த)பொருள். (௫௫)

(உ) இன்ப துன்பங்களில் ஒப்பநிற்றல்.

மேலும்,

௫௬. **துக்கங்களில் நொந்திடாத மனத்தினனாய், ஸுகங்களில் ஆசையற்றவனாய், (பொருள்களின்மேல்) பற்றும் பயமும் கோபமும் நீங்கப்பெற்றவனாய் இருப்பவன், நிலைத்தஞானமுடையவன் முனிவன் எனப்படுகிறான்.**

ஆத்யாத்மிகம்முதலிய[1] துன்பங்கள் வந்தபொழுது மனமானது நிலைகுலைந்து நோவப்பெறுமலும், அப்படியே, விறகுமுதலியவற்றை இடும்பொழுது தீயானது

---

[1] முதலிய என்றதனால், ஆதிபௌதிகமும் ஆதிதைவிகமும் கொள்க. தலைவலி, ஜ்வரம் முதலியவற்றால்வருவது ஆத்யாத்மிகம். தேள், பாம்பு முதலியவற்றால் வருவது ஆதிபௌதிகம். இடி, மழையின்மை முதலியவற்றால் வருவது ஆதிதைவிகம். ஆத்யாத்மிகம் - தன்னைப்பற்றி வருவது. ஆதிபௌதிகம் - பிற உயிர்களைப்பற்றி வருவது. ஆதிதைவிகம் - தெய்வத்தைப்பற்றி வருவது. துன்பங்கள் இவ்வாறாக மூன்றுவகை.

விகதா ஸ்ப்ருஹா த்ருஷ்ணா யஸ்ய, ந அக்னிரிவ இந்தனாத்யாதானே ஸுகான்யனு வர்ததே ஸ விகதஸ்ப்ருஹ: | வீதராகபயக்ரோத: ராகஶ்ச பயம் ச க்ரோதஶ்ச வீதா: விகதா: யஸ்மாத் ஸ: வீதராகபயக்ரோத: | ஸ்திததீ: ஸ்திதப்ரஜ்ஞ: முனி: ஸந்ந்யாஸீ ததா உச்யதே || ௫௬ ||

கிஞ்ச—

௫௭. யஸ்ஸர்வத்ரானபிஸ்னேஹஸ்தத்தத்ப்ராப்ய ஶுபாஶுபம் |
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||

ய: முனி: ஸர்வத்ர தேஹஜீவிதாதிஷ்வபி அனபிஸ்னேஹ: அபிஸ்னேஹவர்ஜித: தத்தத் ப்ராப்ய ஶுபாஶுபம் தத்தச் சுபம் அஶுபம் வா லப்த்வா ந அபிநந்ததி ந த்வேஷ்டி ஶுபம் ப்ராப்ய ந துஷ்யதி ந ஹ்ருஷ்யதி, அஶுபம் ப்ராப்ய ந த்வேஷ்டி இத்யர்த: | தஸ்ய ஏவம் ஹர்ஷவிஷாதவர்ஜிதஸ்ய விவேகஜா ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா || ௫௭ ||

கிஞ்ச—

௫௮. யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோऽங்கானீவ ஸர்வஶ: |
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ||

யதா ஸம்ஹரதே ஸம்யக் உபஸம்ஹரதே ச அயம் ஜ்ஞானநிஷ்டாயாம் ப்ரவ்ருத்தோ யதி: கூர்ம: அங்கானி இவ யதா கூர்மோ பயாத் ஸ்வானி அங்கானி உப-

---

(மேன்மேலும் வளர்வது)போல, ஸுகங்கள் வந்தபொழுது ஆசையானது ஸுகங்களைஒட்டி மேன்மேலும் மிகப்பெருமலும், பயகோபங்கள் நீங்கவும் பெற்றவன் எவனோ, அவன் அப்பொழுது ஸ்திதப்ரஜ்ஞன், முநி, ஸந்யாஸி எனப்படுகிறான்.(௫௬)

(௩) வெறுப்பும், களிப்பும், பற்றும் இல்லாமை.

அன்றியும்,

௫௭. எவன் எங்கும் பற்றில்லாதவனாய், நல்லதும் தீயதுமான அதனைப் பெற்று ஸந்தோஷமும் வெறுப்பும் கொள்வதில்லையோ, அவனுடைய ஞானம் நிலை பெற்றது.

முனியென்பவன் சரீரஜீவநம் முதலியவற்றிலுங்கூடப் பற்றில்லாதவனாய், நல்லதையும் தீயதையும் பெற்று ஸந்தோஷிப்பதில்லை, வெறுப்புறுவது(ம்)இல்லை : நல்லவற்றை அடைந்து மகிழ்வது(ம்) இல்லை, தீயவற்றைப் பெற்றுப் பகைப்பதும் இல்லை என்பது பொருள். இவ்வாறு ஸந்தோஷமும் வ்யஸநமும் இல்லாதவனுக்கு விவேகத்தாற் பிறந்த ஞானமானது நிலைபெற்று நிற்கின்றது. (௫௭)

(௪) இந்திரியங்கள் தம்தம் விஷயங்களினின்றும் முற்றிலும் அடங்கி உள்நோக்கிச் செல்லுதல்.

மற்றும்,

௫௮. ஆமை (தன்) அவயவங்களை எல்லாப்பக்கங்களினின்றும் (உள்ளே)அடக்குமாறுபோல, இவன் எப்பொழுது விஷயங்களினின்றும் இந்திரியங்களை அடக்குகிறானோ, (அப்பொழுது) அவனுடைய ஞானம் நிலைத்தது.

எப்படி ஆமையானது அச்சத்தினால் தன் அங்கங்களை எல்லாப்புறங்களினின்றும் முற்றிலும் ஒடுக்கிவைத்துக்கொள்கின்றதோ அப்படி, ஞானநிஷ்டையை மேற்

ஸம்ஹரதி ஸர்வஶ: ஸர்வத:, ஏவம் ஜ்ஞாநநிஷ்ட: இந்த்ரியாணி இந்த்ரியார்தேப்ய: ஸர்வவிஷயேப்ய: உபஸம்ஹரதே । தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா இதி உக்தார்தம் வாக்யம் ॥ ௫௮ ॥

தத்ர விஷயாந் அநாஹரத: ஆதுரஸ்யாபி இந்த்ரியாணி ஸம்ஹ்ரியந்தே, ந து தத்விஷயோ ராக: । ஸ கதம் ஸம்ஹ்ரியத இதி ? உச்யதே—

௫௯. விஷயா விநிவர்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: ।
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே ॥

யத்யபி விஷயா: விஷயோபலக்ஷிதாநி விஷயஶப்தவாச்யாநி இந்த்ரியாணி நிராஹாரஸ்ய அநாஹ்ரியமாணவிஷயஸ்ய கஷ்டே தபஸி ஸ்திதஸ்ய மூர்கஸ்யாபி விநிவர்தந்தே தேஹிந: தேஹவத: ரஸவர்ஜம் ரஸோ ராக: விஷயேஷு ய: தம் வர்ஜயித்வா । ரஸஶப்தோ ராகே ப்ரஸித்த: "ஸ்வரஸேந ப்ரவ்ருத்த:, ரஸிக:, ரஸஜ்ஞ:" இத்யாதிதர்ஶநாத் । ஸோऽபி ரஸ: ரஞ்ஜநாரூப: ஸூக்ஷ்ம: அஸ்ய யதே: பரம் பரமார்ததத்த்வம் ப்ரஹ்ம த்ருஷ்ட்வா உபலப்ய 'அஹமேவ தத்' இதி வர்தமாநஸ்ய நிவர்ததே நிர்பீஜம் விஷயவிஜ்ஞாநம் ஸம்பத்யதே இத்யர்த: । ந அஸதி ஸம்யக்தர்ஶநே ரஸஸ்ய உச்சேத: । தஸ்மாத் ஸம்யக்தர்ஶநாத்மிகாயா: ப்ரஜ்ஞாயா: ஸ்தைர்யம் கர்தவ்யம் இத்யபிப்ராய: ॥ ௫௯ ॥

கொண்ட இந்த யதியானவன் ஸகலவிஷயங்களினின்றும் இந்திரியங்களை எப்பொழுதொடுக்கிக்கொள்கின்றானோ,(அப்பொழுது)"அவனுடைஞானம் நிலைத்தது" என்னும் வாக்கியத்திற்குப் பொருள்(௫௭ - ஆம் சுலோகத்தின் உரையில்) கூறப்பட்டது.(௫௮)

இனி, விஷயங்களைக் கவராத[அவற்றை நுகர்தற்கு மனம்நோங்காத] நோயாளிக்கும் இந்திரியங்கள் ஒடுங்குகின்றன ; அவற்றின்மீதுள்ள ஆசையோ ஒடுங்குவதில்லை. அஃது ஒடுங்கும்வகை எப்படி என்பது?—(விடை) கூறுவோம் :

௫௯. உணவில்லாத மனிதனுக்கு ரஸத்தைத் தவிர விஷயங்கள் ஒழிகின்றன. பரம்பொருளைக் கண்டபின்பு, இவனுடைய ஆசையும் [ரஸமும்] ஒழிகின்றது.

(இங்கே) "விஷயங்கள்" என்னும்சொல்லால் கூறற்குஉரியன - (அந்த)விஷயங்களால் உணர்த்தப்பட்ட இந்திரியங்கள். விஷயங்களை ஒழித்துக் கடுந்தவம்புரிகின்ற மூடமனிதனுக்கும் இந்திரியங்கள் (தம்தம் விஷயங்களினின்றும்) ஒழிகின்றன. என்றாலும், விஷயங்களிலுள்ள ரஸத்தைத்தவிர (மற்றது ஒழிகின்றது). [அதாவது - ஆசைமாத்திரம் நீங்குவதில்லை]. ரஸம் என்ற சொல்லானது 'ஆசை' என்னும் பொருளில் பயின்றுவழங்குவது. 'ஸ்வரஸமாகப் புகுந்தவன்,' 'ரஸிகன்,' 'ரஸஜ்ஞன்' என்பன முதலியவாகக் காண்கிறபடியால். பரமார்த்தஉண்மையாகிய ப்ரஹ்மத்தைக் கண்டுணர்ந்து "நானே அது" என்றிருக்கின்ற இந்தயதிக்கு இன்பத்திலே ருசியாகிய நுண்மையான அந்த ஆசையும் நீங்குகின்றது : விஷயங்களின்உணர்வு வேரோடு அற்றுப்போகின்றது என்பது பொருள். நல்லறிவு இல்லாவிடத்து ஆசை அறுவதில்லை. ஆகவே, நல்லறிவு என்னும் ஞானத்தை நிலைத்திருக்கச் செய்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

(௫௯)

𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌣𑌾 𑌆𑌦𑍌 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑍍𑌵𑌵𑌶𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌦𑌨𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 𑌦𑍋𑌷𑌮𑌾𑌹—

௬௦. 𑌯𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃 ॥

𑌯𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌃 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑌃 '𑌅𑌪𑌿' 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍇𑌨 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 । 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌪𑍍𑌰𑌮𑌥𑌨𑌶𑍀𑌲𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑌯𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 𑌹𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌵𑌿𑌕𑍍𑌷𑍋𑌭𑌯𑌨𑍍𑌤𑌿 𑌆𑌕𑍁𑌲𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿, 𑌆𑌕𑍁𑌲𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌚 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑍇𑌵 𑌪𑌶𑍍𑌯𑌤𑍋 𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑌃 ॥ ௬௦ ॥

𑌯𑌤𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍—

௬௧. 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥

𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌸𑌂𑌯𑌮𑌨𑌂 𑌵𑌶𑍀𑌕𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 𑌅𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃, '𑌨 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌆𑌸𑍀𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌏𑌵𑌮𑌾𑌸𑍀𑌨𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌬𑌲𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௬௧ ॥

இந்திரியங்களை அடக்காவிடின் அவை தீங்கு செய்யும்.

நல்லறிவு என்னும் புத்தியை நிலைப்படுத்தக் கருதியவன் முதலில் இந்திரியங்களைத் தன்வசத்தில் நிற்கும்படி செய்யவேண்டும். ஏனெனில், அவற்றை அடக்காத வழி (வரும்) தீங்கைக் கூறுகிறார்:

௬௦. **ஏனெனில், புத்திசாலியான புருஷன் (தன் இந்திரியங்களை அடக்க) முயல்கின்றனாயினும், கௌந்தேய! கொந்தளிக்கும் இயல்பையுடைய இந்திரியங்கள் மனத்தை வலியக்கவர்ந்துகொண்டு போகின்றன.**

(எதையும்) கலங்கச்செய்யும் தன்மையையுடைய இந்திரியங்கள், விஷயங்களிலே நோக்கமுள்ள புருஷனைக்கலக்கிக் குழம்பச்செய்கின்றன; அவை அப்படிக்கலக்கிய பின்னும், (விஷயங்களின் கெடுதிகளை அவன்) பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே விவேகபுத்தியுள்ளதாய்த் தெளிந்தே நிற்பதான (அந்த புத்திசாலியினுடைய) மனத்தை வலியக் கவர்ந்திடுகின்றன. (௬௦)

(௫) பகவானை இடைவிடாது தியானித்தல்.

எதனால் (இவ்வாறு), அதனால்

௬௧. **(அவன்) அவற்றையெல்லாம் அடக்கி, என்னிடத்தே ஈடுபட்டவனாய் அமைந்து இருக்கவேண்டும். இந்திரியங்கள் எவனுக்கு (த் தன்)வசத்தில் இருக்கின்றனவோ, அவனுக்கு ஞானம் நிலைத்தது.**

அந்த (இந்திரியங்கள்)எல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டு, அடக்கமுடையவனாய், ஸகலத்திற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாகிய வாஸுதேவனான என்னிடத்து ஈடுபட்டு (நிற்கவேண்டும்): "நான் அவனினும் வேறு அல்லேன்" எனக்கொண்டு இருக்கவேண்டும் என்பது பொருள். இவ்வாறு இருக்கின்ற எந்த யதிக்கு(த் தன்) இந்திரியங்கள் பயிற்சியினால் (தன்)வசத்தில் இருக்கின்றனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது. (௬௧)

अथेदानीं पराभविष्यतः सर्वानर्थमूलमिदमुच्यते —

६२. ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात्सञ्जायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥

ध्यायतः चिन्तयतः विषयान् शब्दादीन् विषयविशेषान् आलोचयतः पुंसः पुरुषस्य सङ्गः आसक्तिः प्रीतिः तेषु विषयेषु उपजायते उत्पद्यते । सङ्गात् प्रीतेः सञ्जायते समुत्पद्यते कामः तृष्णा । तस्मात् कामात् कुतश्चित् प्रतिहन्यमानात् क्रोधः अभिजायते ॥ ६२ ॥

६३. क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद्बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति ॥

क्रोधात् भवति संमोहः अविवेकः कार्याकार्यविषयः । क्रुद्धो हि संमूढः सन् गुरुमप्याक्रोशति । संमोहात् स्मृतिविभ्रमः शास्त्राचार्योपदेशाहितसंस्कारजनितायाः स्मृतेः स्यात् विभ्रमो भ्रंशः स्मृत्युत्पत्तिनिमित्तप्राप्तौ अनुत्पत्तिः । ततः स्मृतिभ्रंशात् बुद्धिनाशः बुद्धेर्नाशः । कार्याकार्यविषयविवेकायोग्यता अन्तःकरणस्य

விஷயங்களின் நினைப்பே கெடுதிக்கு மூலம்.

இனி, இப்பொழுது கெட்டழிந்துபோகின்றவனுடைய அநர்த்தத்திற்கெல்லாம் காரணமானதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

கூ௨. **விஷயங்களை நினைக்கும் புருஷனுக்கு அவற்றின்மேல் பற்று உண்டாகிறது : பற்றினின்றும் ஆசை உண்டாகிறது : ஆசையினின்றும் கோபம் உண்டாகின்றது.**

ஓசைமுதலிய விஷயவிசேஷங்களில் [அவ்விஷயங்களின்மேல் தானாக ஏற்றி வைத்துக்கொண்ட அழகுமுதலியவற்றிலே] கருத்தைச்செலுத்தும் புருஷனுக்கு அந்த விஷயங்களின்மேல் பிரியம் உண்டாகின்றது. ஏதாவதொருகாரணத்தால் ஆசை தடைப்பட, அதனின்றும் கோபம் உண்டாகின்றது. (கூ௨)

கூ௩. **கோபத்தினின்று மயக்கமும், மயக்கத்தினின்று நினைவுத்தவறும், நினைவுத்தவறினின்று அறிவுகேடும் உண்டாகின்றது. அறிவுகெடுதலால் (ஒருவன்) முற்றும் கெட்டுப்போகிறான்.**

கோபத்தினின்று மயக்கம் உண்டாகின்றது. (மயக்கம் -)செய்யத்தக்கனவற்றையும் செய்யத்தகாதனவற்றையும்பற்றிய ஆராய்ச்சியில்லாமை. கோபங்கொண்டவன் (ஒன்றுந்தெரியாது) மயங்கிவிட்டவனாய்க் குருவையும் பழித்திடுகிறானன்றோ. மயக்கத்தினின்றும் நினைவுத்தவறு (உண்டாகின்றது): சாஸ்திரம் ஆசார்யன் இவர்களின் உபதேசத்தால் (புத்தியுள்) நாட்டப்பட்ட பயிற்சியாலாகும் (தருமநியாயங்களின்) நினைவு, தவறிப்போகின்றது. (அந்த)நினைவு உண்டாவதற்குக்காரணம் அமைந்திருக்க [தான் கேட்டுள்ள நல்லஉபதேசம் ஒருவனுடைய நினைவுக்கு வரக்கூடியதாயிருந்தும்] (கோபம் வந்தபோது அவன் மயக்கத்தால் மூடப்படுகின்றமையால் அவனுக்கு அந்த நினைவு) உண்டாவதில்லை. அந்த நினைவுத்தவறினின்றும் அறிவுகேடு வருகின்றது : அந்தக்கரணத்திற்கு கார்யஅகார்யங்களைப் பகுத்தறியமுடியாமை, அறிவுகேடு எனப்படு

புத்தேர்நாஶ உச்யதே। புத்திநாஶாத் ப்ரணஶ்யதி। தாவதேவ ஹி புருஷ: யாவதந்த:கரணம் ததீயம் கார்யாகார்யவிஷயவிவேகயோக்யம்। தத்அயோக்யத்வே நஷ்ட ஏவ புருஷோ பவதி। அத: தஸ்ய அந்த:கரணஸ்ய புத்தேர்நாஶாத் ப்ரணஶ்யதி புருஷார்த்தாயோக்யோ பவதீத்யர்த்த: ॥ ௬௩ ॥

ஸர்வாநர்த்தஸ்ய மூலமுக்தம் விஷயாபித்யாநம்। அத இதாநீம் மோக்ஷகாரணம் இதம் உச்யதே—

௬௪. ராகத்வேஷவியுக்தைஸ்து விஷயாநிந்த்ரியைஶ்சரந்।
ஆத்மவஶ்யைர்விதேயாத்மா ப்ரஸாதமதிகச்சதி ॥

ராகத்வேஷவியுக்தை: ராகஶ்ச த்வேஷஶ்ச ராகத்வேஷௌ, தத்புர:ஸரா ஹி இந்த்ரியாணாம் ப்ரவ்ருத்தி: ஸ்வாபாவிகீ, தத்ர யோ முமுக்ஷுர்பவதி ஸ: தாப்யாம் வியுக்தை: ஶ்ரோத்ராதிபி: இந்த்ரியை: விஷயாந் அவர்ஜநீயாந் சரந் உபலபமாந: ஆத்மவஶ்யை: ஆத்மந: வஶ்யாநி வஶீபூதாநி இந்த்ரியாணி தை: ஆத்மவஶ்யை: விதேயாத்மா இச்சாத: விதேய: ஆத்மா அந்த:கரணம் யஸ்ய ஸ: அயம் ப்ரஸாதம் அதிகச்சதி। ப்ரஸாத: ப்ரஸந்நதா ஸ்வாஸ்த்யம் ॥ ௬௪ ॥

ப்ரஸாதே ஸதி கிம் ஸ்யாத் இதி? உச்யதே—

இன்றது. அறிவுகேட்டினால் முற்றும் அழிந்துவிடுகிறான் : எவ்வளவுகாலம் அவனுடைய அந்தக்கரணம் கார்யாகார்யங்களைப் பகுத்தறிய வல்லமைபெற்றுள்ளதோ அவ்வளவுகாலமேயன்றோ புருஷன். அதற்கு [அவற்றைப் பகுத்தறிதற்கு]த் தகுதியற்றால், புருஷன் அழிந்தவனாகவே ஆகிறான். ஆகவே அவனுடைய அந்தக்கரணத்தின் அறிவுகேட்டினால் அழிந்துவிடுகிறான் : புருஷார்த்தத்திற்குத் தகாதவன் ஆகிறான் என்பது பொருள். (௬௩)

இந்திரியங்களின்அடக்கம் மனத்தெளிவையும், ஸுகத்தையும் கொடுக்கும்.

விஷயங்களைக் கருதுதலானது அநர்த்தங்கட்கெல்லாம் காரணம் என்று கூறப்பட்டது. இனி இப்பொழுது மோக்ஷத்திற்கு வழி, இது எனப்படுகின்றது :

௬௪. அந்தக்கரணம் அடங்கியவனோ, விருப்பவெறுப்புக்கள் நீங்கப்பெற்றுத் தனக்கு அடங்கிநிற்கும் இந்திரியங்களால் விஷயங்களிற்சென்று (மனத்)தெளிவைப் பெறுகிறான்.

இந்திரியங்களுடைய இயற்கையானபோக்கானது விருப்புவெறுப்புக்களை முன்னிட்டன்றோ இருப்பது. இனி, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்புகிறவன் எவனோ, அவன் அவற்றினின்றும் நீங்கியவனாய்த் தன்வசப்பட்ட செவிமுதலிய இந்திரியங்களால், (உணவுமுதலிய) தவிர்க்கத்தகாதவிஷயங்களை நாடிக்கொள்பவனாய்த் (தன்) இஷ்டப்படி நடக்கக்கூடிய அந்தக்கரணத்தைப் பெற்றுத் தெளிவை அடைகிறான். தெளிவு - கலங்காமை, நிலைபெற்ற தன்மை, அமைதியுடைமை. (௬௪)

தெளிவு உண்டானால், என்ன உண்டாகும் என்பது ?—(விடை) கூறப்படுகின்றது :

௬௫. *प्रसादे सर्वदुःखानां हानिरस्योपजायते ।*
प्रसन्नचेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥

प्रसादे सर्वदुःखानाम् आध्यात्मिकादीनां हानिः विनाशः अस्य यतेः उपजायते । किं च — प्रसन्नचेतसः स्वस्थान्तःकरणस्य हि यस्मात् आशु शीघ्रं बुद्धिः पर्यवतिष्ठते आकाशमिव परि समन्तात् अवतिष्ठते, आत्मस्वरूपेणैव निश्चलीभवतीत्यर्थः ॥

एवं प्रसन्नचेतसः अवस्थितबुद्धेः कृतकृत्यता यतः, तस्मात् रागद्वेषवियुक्तैः इन्द्रियैः शास्त्राविरुद्धेषु अवर्जनीयेषु युक्तः समाचरेत् इति वाक्यार्थः ॥ ௬௫ ॥

सा इयं प्रसन्नता स्तूयते —

௬௬. *नास्ति बुद्धिरयुक्तस्य न चायुक्तस्य भावना ।*
न चाभावयतः शान्तिरशान्तस्य कुतः सुखम् ॥

नास्ति न विद्यते न भवतीत्यर्थः, बुद्धिः आत्मस्वरूपविषया अयुक्तस्य असमाहितान्तःकरणस्य । न च अयुक्तस्य भावना आत्मज्ञानाभिनिवेशः । तथा — न च अभावयतः आत्मज्ञानाभिनिवेशम् अकुर्वतः शान्तिः उपशमः । अशान्तस्य कुतः सुखम् ? इन्द्रियाणां हि विषयसेवातृष्णातः निवृत्तिः

---

௬௫. ***தெளிவுள்ளவழி, இவனுடைய துன்பங்கட்கெல்லாம் கழிவு பிறக்கின்றது ; ஏனெனில், மனந்தெளிந்தவனுக்குப் புத்தி விரைவாக நிலைத்துநிற்கின்றது.***

தெளிவுண்டானவழி, இந்த யதிக்குத் தன்னைப்பற்றிவருவன முதலிய துன்பங்களெல்லாவற்றிற்கும் கழிவு உண்டாகின்றது. அன்றியும், சுத்தமான அந்தக்கரணமுள்ளவனுக்கு எதனால் புத்தியானது விரைவாக நிலைத்துநிற்கின்றதோ, அதாவது· ஆகாசம்போல எங்கும் நிலைபெறுகின்றதோ, ஆத்மாவின் ஸ்வரூபமாகவே அலையாது அமைந்துநிற்கின்றதோ, (அதனால், புத்திதெளிவுக்காக முயற்சிசெய்யவேண்டும்).

இவ்வாறு மனம்தெளிந்து புத்திநிலைத்தவனுக்குப் புருஷார்த்தம் கைகூடுகின்றமையால், (ஸம்ஸாரத்தினின்றும் விடுபடவிரும்புகிறவன்) விருப்புவெறுப்புக்கள் நீங்கிய இந்திரியங்களால் சாஸ்திரத்தோடுமாறுபடாத (உணவுமுதலிய) தவிர்க்கமுடியாதவிஷயங்களை அமைதியொடு நாடவேண்டும் என்பது, (இந்த) ஸந்தர்ப்பத்திற் கூறப்பட்ட பெருளாம். (௬௫)

ஆதலால், இந்த (மனத்)தெளிவைப் புகழ்ந்து சொல்லுகிறார் :

௬௬. ***ஒருநிலையில்லாதவனுக்கு ஞானம் உண்டாவதில்லை : ஒருநிலையில்லாதவனுக்கு (ஆத்ம)த்யானமும் உண்டாவதில்லை : (ஆத்ம)த்யானமில்லாதவனுக்கு ஒழிபும் உண்டாவதில்லை : ஒழிபற்றவனுக்கு ஸுகம் ஏது ?***

மனம்ஒருநிலைப்படாதவனுக்கு ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய அறிவு உண்டாகாது. ஒருநிலைப்படாதவனுக்கு ஆத்மாவை அறிதலிலே மிக்கஊக்கமும் உண்டாகாது. அவ்வாறே, ஆத்மாவை அறிதலிலே மிக்கஊக்கங்கொள்ளாதவனுக்கு ஒழிபு உண்டாவதில்லை. ஒழிபற்றவனுக்கு ஸுகம் ஏது ? இந்திரியங்கள் விஷயநுகர்ச்சியிலுள்ள

ஸுகம், ந விஷயவிஷயா த்ருஷ்ணா । து:கமேவ ஹி ஸா । ந த்ருஷ்ணாயாம் ஸத்யாம் ஸுகஸ்ய கந்தோऽபி உபபத்யத இத்யர்த: ॥ ௬௬ ॥

அயுக்தஸ்ய கஸ்மாத் பாவநா நாஸ்தி இதி? உச்யதே—

௬௭. இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே ।

ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர் நாவமிவாம்பஸி ॥

இந்த்ரியாணாம் ஹி யஸ்மாத் **சரதாம்** ஸ்வஸ்வவிஷயேஷு ப்ரவர்தமாநாநாம் யத் மந: அநுவிதீயதே அநுப்ரவர்ததே தத் இந்த்ரியவிஷயவிகர்ஷணே ப்ரவ்ருத்தம் மந: அஸ்ய யதே: **ஹரதி ப்ரஜ்ஞாம்** ஆத்மாநாத்மவிவேகஜாம் நாஶயதி । கதம்? **வாயு: நாவமிவ அம்பஸி** உதகே ஜிகமிஷிதாம் ஸாம்யாத்ரிகாணாம் மார்காத் உத்க்ருஷ்ய உந்மார்கே யதா வாயு: நாவம் ப்ரவர்தயதி ஏவம் ஆத்மவிஷயாம் ப்ரஜ்ஞாம் ப்ரச்யாவ்ய மந: விஷயவிஷயாம் கரோதி ॥ ௬௭ ॥

'யததோ ஹி' இத்யுபந்யஸ்தஸ்ய அர்தஸ்ய அநேகதா உபபத்திம் உக்த்வா தம் ச அர்தம் உபஸம்ஹரதி—

௬௮. தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதாநி ஸர்வஶ: ।

இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ் தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥

ஆசையினின்றும் நீங்குதலன்றோ ஸுகமாவது: விஷயங்களைப்பற்றிய ஆசை(ஸுகம்) அன்று; அது துன்பமேயன்றோ. ஆசையுள்ளவிடத்து ஸுகத்தின் நாற்றமாத்திரமும் உண்டாகாது என்பது பொருள். (௬௬)

உறுதியான ஞானத்தைத் தருவது, இந்திரியஅடக்கம்.

ஒருநிலைப்படாதவனுக்கு ஏன் ஞானம் உண்டாவதில்லை என்பது ?— (அதற்கு விடை) கூறப்படுகின்றது :

௬௭. ஏனெனில், எந்த மனமானது (விஷயங்களில்) திரிகின்ற இந்திரியங்களைப் பின்தொடர்கின்றதோ, அது, ஜலத்திலே கப்பலைக் காற்று (அடித்துக்கொண்டுபோவது)போல, இவனுடைய அறிவைக் கவர்ந்துகொண்டுபோகின்றது.

ஏனெனில், தம்தம் விஷயங்களிற்செல்லுகின்ற இந்திரியங்களை எந்த மனம் பின்பற்றுகின்றதோ அது, (அதாவது -) இந்திரியவிஷயங்களை ஆராய்ந்துகொண்டுசென்ற மனமானது ஆத்மாஅநாத்மாக்களின் ஆராய்ச்சியால் வருவதான இந்த யதியின் அறிவை அழிக்கின்றது.—எப்படி ?—காற்றானது ஜலத்திலே செல்லப்புகுந்த கப்பற்காரர்களுடைய வழியினின்றும் கப்பலை விலக்கி, தப்புவழியிலே செலுத்துகின்றது; இதுபோல, மனமானது, ஆத்மாவைப்பற்றிய அறிவைக் கவர்ந்து, விஷயங்களை நோக்கும்படி செய்கின்றது. (௬௭)

"புத்திசாலியான" (௨ - ௬௦) என்றுகூறிய விஷயத்திற்கு பலவாறாகப் பொருத்தத்தைக் கூறிப் பின்பு அதேவிஷயத்தை நிரூபித்து முடிக்கிறார் :

௬௮. ஆதலால், உயர்தோள ! எவனுடைய இந்திரியங்கள் இந்திரியவிஷயங்களினின்று முழுதும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌦𑍋𑌷𑌃 𑌉𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌃 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌨𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌮𑌾𑌨𑌸𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍈𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥௬௮॥

𑌯𑍋𑌽𑌯𑌂 𑌲𑍌𑌕𑌿𑌕𑍋 𑌵𑍈𑌦𑌿𑌕𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌸𑌃 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌫𑍁𑌟𑍀𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌹—

௬௯. 𑌯𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌸𑌂𑌯𑌮𑍀 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍋 𑌮𑍁𑌨𑍇𑌃 ॥

𑌯𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌵𑌿𑌵𑍇𑌕𑌕𑌰𑍀 𑌤𑌮𑌃𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍? 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑌃 । 𑌯𑌥𑌾 𑌨𑌕𑍍𑌤𑌂𑌚𑌰𑌾𑌣𑌾𑌮𑌹𑌰𑍇𑌵 𑌸𑌦𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌶𑌾 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌨𑌕𑍍𑌤𑌂𑌚𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑌾𑌨𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌶𑌾 𑌇𑌵 𑌨𑌿𑌶𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌅𑌗𑍋𑌚𑌰𑌤𑍍𑌵𑌾𑌦𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌬𑍁𑌦𑍍𑌧𑍋 𑌜𑌾𑌗𑌰𑍍𑌤𑌿 𑌸𑌂𑌯𑌮𑍀 𑌸𑌂𑌯𑌮𑌵𑌾𑌨𑍍, 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿-

---

எதனால், இந்திரியங்கள் (விஷயங்களிற்)செல்வதனால் (வரும்) தீங்கு உணர்த்தப்பட்டதோ, அதனால், மாநஸம் முதலிய பலவகையாலும் [மனமொழிமெய்களால்] எந்த யதியினுடைய இந்திரியங்கள் ஓசைமுதலிய விஷயங்களினின்றும் அடக்கப்பட்டனவோ, அவனுடைய ஞானம் நிலைத்தது. (௬௮)

(௬௯) ஜீவன்முக்தனுக்கு உலகம் கனவுதான்.

“லௌகிகமாகவும் வைதிகமாகவுமுள்ள இந்த வ்யவஹாரம் எதுவோ, அது, அஜ்ஞானத்தின் கார்யமாதலால், விவேகபுத்தி பிறந்து ஞானம் நிலைத்தவனுக்கு அஜ்ஞானம் நீங்கியஉடனே நீங்கிவிடுகின்றது. அஜ்ஞானம் ஞானத்தின் விரோதத்தாலும் [அதன்முன் நிற்காததாலும்] நீங்குகின்றது” என்ற இவ்விஷயத்தைத் தெளியச்செய்பவராய்(ப் பகவான்) அருளிச்செய்கிறார் :

௬௯. எது பிராணிகட்கெல்லாம் இரவோ, அதில், அடக்கமுள்ளவன் விழித்திருக்கிறான். எதில் பிராணிகள் விழித்திருக்கின்றனவோ, அது, (உண்மையைக்) காணும் முனிவனுக்கு இரவு.

எது தாமஸத்தன்மையையுடைமையால் ஸகலபிராணிகட்கும் ஒவ்வொரு பொருளைப்பற்றியும் வெவ்வேறாகப் பகுத்தறியமுடியாமையைச் செய்வதான இரவோ, அது யாது?—ஞானம்நிலைத்தவனுக்கு எட்டுவதான பரமார்த்தஉண்மை. இரவில் திரிவன(வாகிய கோட்டான்முதலிய)வற்றிற்குப் பகலாகவேஇருப்பது, (காக்கை முதலிய)மற்றையவற்றிற்கு இரவாகவே எப்படி ஆகின்றதோ, அப்படியே பரம்பொருளின் உண்மையானது இரவில் திரிவனவற்றை ஒத்த அஜ்ஞானிகளான ஸகல பிராணிகட்கும் இரவுபோன்றுள்ளமையால் இரவாகவே இருக்கின்றது; அதில் அறிவில்லாதவர்க்கு (அது) எட்டாததலின். அடக்கமுடையவனும் இந்திரியங்களைஜயித்த

யோ யோகீத்யர்த²:| யஸ்யாம் க்³ராஹ்யக்³ராஹகபே⁴த³லக்ஷணாயாம் அவித்³யாநிஶாயாம் ப்ரஸுப்தாந்யேவ பூ⁴தாநி ஜாக்³ரதி இதி உச்யந்தே, யஸ்யாம் நிஶாயாம் ப்ரஸுப்தா இவ ஸ்வப்நத்³ருஶ: ஸா நிஶா அவித்³யாரூபத்வாத் பரமார்த²தத்த்வம் பஶ்யத: முநே: இதி ॥

அத: கர்மாணி அவித்³யாவஸ்தா²யாமேவ சோத்³யந்தே, ந வித்³யாவஸ்தா²யாம் வித்³யாயாம் ஹி ஸத்யாம் உதி³தே ஸவிதரி ஶார்வரமிவ தம: ப்ரணாஶம் உபக³ச்ச²தி அவித்³யா। ப்ராக் வித்³யோத்பத்தே: அவித்³யா ப்ரமாணபு³த்³த்⁴யா க்³ருஹ்யமாணா க்ரியாகாரகப²லபே⁴த³ரூபா ஸதீ ஸர்வகர்மஹேதுத்வம் ப்ரதிபத்³யதே। ந அப்ரமாணபு³த்³த்⁴யா க்³ருஹ்யமாணாயா: கர்மஹேதுத்வோபபத்தி:, "ப்ரமாணபூ⁴தேந வேதே³ந மம சோதி³தம் கர்தவ்யம் கர்ம" இதி ஹி கர்மணி கர்தா ப்ரவர்ததே "ந அவித்³யாமாத்ரம் இத³ம் ஸர்வம் நிஶா இவ" இதி। யஸ்ய புந: "நிஶா இவ அவித்³யாமாத்ரமித³ம் ஸர்வம் பே⁴த³ஜாதம்" இதி ஜ்ஞாநம், தஸ்ய ஆத்மஜ்ஞஸ்ய ஸர்வகர்மஸம்ந்யாஸ ஏவ அதி⁴காரோ ந ப்ரவ்ருத்தௌ। ததா² ச த³ர்ஶயிஷ்யதி—'தத்³பு³த்³த⁴யஸ்ததா³த்மாந:' இத்யாதி³நா ஜ்ஞாநநிஷ்டா²யாமேவ தஸ்ய அதி⁴காரம் ॥

(ஞான)யோகியானவன், அஜ்ஞானஉறக்கம் தெளிந்து அந்தப் பரமார்த்தஉண்மையிலே விழித்துக்கொண்டிருக்கிறான். உணரப்படுவதும் உணர்வதுமான பேதமாகிய எந்த அஜ்ஞானஇரவிலே உறங்கிக்கொண்டேயிருக்கும் பிராணிகள் விழித்திருக்கின்றன என்று கூறப்படுகின்றனவோ, எந்த இரவிலே (அவை) உறங்கினவைபோலக் கனவுகாண்கின்றனவோ, அது அஜ்ஞானவடிவமாதலால், பரமார்த்தஉண்மையைக் காணும் முனிவனுக்கு இரவென்பதாம்.

கர்மம் ஞானிக்கு அன்று.

ஆகவே, அஜ்ஞானநிலையில்தான் கர்மங்கள் விதிக்கப்படுகின்றன; ஞானநிலையில் அல்ல. சூரியன் உதிக்க இரவின் இருள் (கெடுமாறு)போல, ஞானமுண்டாக அஜ்ஞானம் முழுவதும் நாசமடைகின்றதன்றோ. ஞானம் உண்டாவதற்குமுன் அஜ்ஞானமானது, செய்கையும் செய்பவனும் பயனுமாகிய பேதவடிவமாய்நின்று, ப்ரமாணபுத்தியால் கிரகிக்கப்பட்டு [அந்தப் பேதபுத்தி அஜ்ஞானநிலைமையிலே வாஸ்தவமாய்த் தோற்றுதலால்] ஸகலகர்மத்திற்கும் காரணமாதலைப் பெறுகின்றது. "(இந்தப் பேதபுத்தி) ப்ரமாண மன்று" எனக் கொள்ளப்படும்பொழுது, (அந்த அஜ்ஞானமானது) கர்மத்திற்குக் காரணமாதல் பொருந்தாது. "ப்ரமாணமாயுள்ள வேதத்தினால் எனக்கு விதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யவேண்டும்" என்று நினைத்தன்றோ செய்பவன் செய்கையில் தலைப்படுகிறான். "இதெல்லாம் இரவுபோல அஜ்ஞானமேதான்" என்று(நினைத்து) அன்று(செய்பவன் செய்கையில் தலைப்படுவது). "இந்தப் பேதக்கூட்ட(மாகிய உலகத்தோற்ற)மெல்லாம் இரவுபோல அஜ்ஞானமேதான்" என்னும் ஞானம் எவனுக்கோ, அந்த ஆத்மஞானிக்கு ஸகலகர்மங்களையும் துறத்தலிலேதான் அதிகாரம்; கர்மத்தைச் செய்வதில் அன்று. அவ்வண்ணமே (பகவான்)"அதிலே புத்தியையுடையவராய்" (நி - கள) என்பதுமுதலாக ஞானநிஷ்டையிலேயே அவனுக்கு அதிகாரத்தைக் காட்டுவர்.

𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑌾𑌵𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—𑌨, 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾, 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 । 𑌤𑌦𑌨𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌧𑌿𑌗𑌮𑍇 𑌸𑌤𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌮𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍; 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌯𑌦𑍇𑌵 𑌚 𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍀𑌭𑌵𑌤𑌿, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌿𑌵 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑍇 । 𑌲𑍋𑌕𑍇 𑌚 𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌧𑌿𑌗𑌮𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌰 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥ ௬௯ ॥

𑌵𑌿𑌦𑍁𑌷𑌃 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍈𑌷𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌏𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌤𑍁 𑌅𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑌿𑌨𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌹—

௭௦. 𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌪𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌯𑌦𑍍𑌵𑌤𑍍 ।
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌮𑌾 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀 ॥

(ஆக்ஷேபம்) :—(ஞானநிஷ்டையை) மேற்கொள்ளும்படி செய்கிற விதி இல்லாதிருந்தால், அதையும் மேற்கொள்ளுதல் கூடாதெனின்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; ஆத்மஞானமென்பது தன் ஆத்மாவைப் பற்றியதாதலின். தன்னைத் தன் ஆத்மாவினிடத்துச் செல்லும்படி செய்கிற விதி வேண்டுவதில்லையன்றோ ; (தான்) ஆத்மாவேயாதலாலும், ப்ரமாணங்களெல்லாம் ப்ரமாணமாயிருத்தலென்பது அதுவரையிலுமாதலாலுமென்க [ப்ரமாணங்களெல்லாம் உண்மையாயிருத்தலானது, ஆத்மஞானம் உண்டாகிறவரையிலும்தான் ; பின்பு அவை, உண்மையாயிருக்கமாட்டா]. ஆத்மா இன்னதென்று கண்டறிந்தவிடத்துப் பின்பு (இது)ப்ரமாணம் [அறிதற்கான கருவி],(இது) ப்ரமேயம் [அறியப்படும் பொருள்] என,(பேதபுத்தியினால் வரக்கூடிய) வழக்கு நிகழாதன்றே. ஏனெனில், முடிவான ப்ரமாணமா(கிய வேதமா)னது ப்ரமாதாவாயிருத்தலை [ஒருபொருளை அறிதற்குக் கர்த்தாவாகின்றதென்பதை]ஆத்மாவுக்கு நீக்குகின்றது. (அப்படி) மறுக்குமளவிலேயே, கனாக்காலத்து அறிவு விழிப்புநிலையிலே (ப்ரமாணமாகாதவாறு)போல (அந்த வேதமும்) ப்ரமாணமாவதில்லை. லோகத்திலேயும் ஒரு பொருளை (ஒருவன் இன்னதென்று சரியாய்) அறிந்தவிடத்து,ப்ரமாணமானது (மறுபடியும் அவனை, அதை அறியப்) புகும்படி செய்வதைக் காணாமையின். ஆகவே, 'ஆத்மாவை அறிபவனுக்குக் கர்மத்தில் அதிகாரமில்லை' என்பது பெறப்பட்டது. (௬௯)

(௭) தனது அடக்கமும், ஆசையை அறுத்தலும்.

'ஆசையை ஒழித்தவனாய் ஞானம் நிலைபெற்ற ஞானியான யதிக்குத்தான் முக்தி கைகூடுதல் ; (கர்மத்தைத்) துறக்காமலும், கர்மத்தை விரும்பியுமுள்ளவனுக்கு அன்று' என்ற இவ்விஷயத்தைத் திருஷ்டாந்தத்தால் உணர்த்த (மீண்டும்) அருளிச் செய்கிறார் :

௭௦. (தானே) எப்புறமும் நிரம்பியதாய்(த் தன்) நிலைமாறாதுநிற்கும் ஸமுத்திரத்தை (நதியின்) ஜலங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்வாறே ஆசைகளெல்லாம் எவனைப் புகுகின்றனவோ, அவன் சாந்தியை அடைகிறான்; காமத்தை விரும்புகிறவன் (அதனை அடைவது)இல்லை.

ஆபூர்யமாணம் அத்பி: அசலப்ரதிஷ்டம் அசலதயா ப்ரதிஷ்டா அவஸ்திதி: யஸ்ய தம் அசலப்ரதிஷ்டம் ஸமுத்ரம் ஆப: ஸர்வதோ கதா: ப்ரவிஶந்தி ஸ்வாத்மஸ்தம் அவிக்ரியமேவ ஸந்தம் யத்வத் தத்வத் காமா: விஷயஸந்நிதாவபி ஸர்வத: இச்சாவிஶேஷா: யம் முநிம், ஸமுத்ரமிவ ஆப:, அவிகுர்வந்த: ப்ரவிஶந்தி ஸர்வே ஆத்மந்யேவ ப்ரலீயந்தே ந ஸ்வாத்மவஶம் குர்வந்தி ஸ: ஶாந்திம் மோக்ஷமாப்நோதி | ந இதர: காமகாமீ காம்யந்தே இதி காமா: விஷயா: தாந் காமயிதும் ஶீலம் யஸ்ய ஸ: காமகாமீ | ஸ ந ப்ராப்நோதி இத்யர்த²: || ௭௰ ||

யஸ்மாத் ஏவம் தஸ்மாத்—

௭௧. விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாம்ஶ்சரதி நிஸ்ப்ருஹ: |
நிர்மமோ நிரஹங்கார: ஸ ஶாந்திமதிகச்சதி ||

விஹாய பரித்யஜ்ய காமாந் ய: ஸந்ந்யாஸீ புமாந் ஸர்வாந் அஶேஷத: சரதி ஜீவநமாத்ரசேஷ்டாஶேஷ: பர்யடதி இத்யர்த²:| நிஸ்ப்ருஹ: ஶரீரஜீவநமாத்ரேऽபி நிர்கதா ஸ்ப்ருஹா யஸ்ய ஸ: நிஸ்ப்ருஹ: ஸந் நிர்மம: ஶரீரஜீவநமாத்ராக்ஷிப்தபரிக்ரஹேऽபி 'மம இதம்' இதி அபிநிவேஶவர்ஜித: நிரஹங்கார: வித்யாவத்த்வாதிநிமித்தாத்மஸம்பாவநாரஹித: இத்யேதத் | ஸ ஏவம்பூத: ஸ்திதப்ரஜ்ஞ: ப்ரஹ்மவித் ஶாந்திம் ஸர்வஸம்ஸாரது:கோபரமலக்ஷணாம் நிர்வாணாக்யாம் அதிகச்சதி ப்ராப்நோதி ப்ரஹ்மபூத: பவதி இத்யர்த²: || ௭௧ ||

ஜலங்களால் எப்புறமும் நிரம்பியதாய், மாறாத நிலையுள்ளதாய், வேறுபாடில்லாமலே (ஒரே தன்மையாகத்) தன் நிலையிலே நிற்பதான ஸமுத்திரத்தை எங்குமுள்ள ஜலங்கள் எவ்வாறு புகுகின்றனவோ, அவ்வாறே—(அந்த) ஜலங்கள் ஸமுத்திரத்தைப் புகுமாறுபோல—பலவகைப்பட்ட ஆசைகளெல்லாம் எந்த முனிவனை விஷயங்களின் முன்னிலையிலும் விகாரப்படுத்தாமல் புகுகின்றனவோ (அதாவது -) எந்த முனியைத் தம் வசமாகச் செய்யமுடியாது, ஆத்மாவினிடத்தேயே ஒடுங்குகின்றனவோ, அவன் சாந்தியை = முக்தியைப் பெறுகிறான். விஷயங்களை விரும்பும் தன்மையனான மற்றையவன் அன்று; அவன் (மோக்ஷத்தைப்) பெறுவதில்லை என்று பொருள். (௭௰)

இப்படியிருத்தலின்,

௭௧. எந்தப் புருஷன் ஸகலகர்மங்களையும் விட்டு, பற்றற்றவனாய், அஹங்கார மமகாரங்கள் இல்லாதவனாய்த் திரிகின்றானோ, அவன் சாந்தியைப் பெறுகிறான்.

எந்தத் துறவியான புருஷன் கர்மங்களை(ச் சிறிதும்) மிச்சமில்லாது முழுதும் ஒழித்துத் திரிகின்றானோ அதாவது - ஜீவித்திருப்பதற்குமாத்திரம்(வேண்டிய) செய்கையை மிச்சம் வைத்துக்கொண்டவனாகத் திரிகின்றானோ, பற்றற்றவனாய் = கேவலம் சரீரம்ஜீவித்திருப்பதிலுங்கூடப் பற்று நீங்கியவனாய், மமகாரம் இல்லாதவனாய் = சரீரம் ஜீவித்திருப்பதற்குமாத்திரம் வேண்டிய உடைமையிலும் "இது எனது" என்னும் பிடிப்பில்லாதவனாய், அஹங்காரம் இல்லாதவனாய் = கல்வியுடைமை முதலியவற்றால் உண்டாகும் ("நான்" எனத்) தன்னையே (தான்) மதித்தல் இல்லாதவனாய் இருக்கின்றானோ, அவன் இவ்வாறிருப்பவனாய், ஞானம் நிலைத்தவனாய், ப்ரஹ்மத்தை அறிந்தவனாய், ஸம்ஸாரத்துன்பமெல்லாம் ஒழிந்திடுதலாகிய நிர்வாணமென்னும் பெயருடைய சாந்தியை [மோக்ஷத்தை]ப் பெறுகிறான் : ப்ரஹ்மமாகவே ஆகிறான் என்பது பொருள். [நிர்வாணம் - பேரின்பம்.] (௭௧)

𑌸𑍈𑌷𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇—

௭௨. 𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌏𑌷𑌾 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌭𑌵𑍇𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍂𑌪𑍇𑌣𑍈𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 । 𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨 𑌏𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌮𑍋𑌹𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 । 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌅𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑍇 𑌵𑌯𑌸𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌕𑌿𑌮𑍁 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵 𑌅𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑌿 ॥ ௭௨ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஞானமே ப்ரஹ்மாநந்தத்தைத் தருவது.

ஆதலால், இந்த நிஷ்டையானது பாராட்டப்படுகின்றது :

௭௨. பார்த்த ! இது ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை. இதனை அடைந்து (ஒருவனும்) மயங்கமாட்டான். (ஒருவன்) கடைசிக்காலத்திலும் [முதுமைப்பருவத்திலும்] இதிலே நின்று ப்ரஹ்மாநந்தத்தை அடைகிறான்.

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச் செய்ததாய், பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துகளாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுநஸம்வா தத்திலே ஸாங்க்யயோகம் என்னும் இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

கீழ்க்கூறிய இது, ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை : எல்லாவற்றையும் துறந்து ப்ரஹ்மஸ்வரூபமாகவே நிற்றலென்பது. ஏ ! பார்த்த ! இந்த நிலையைப்பெற்று (ஒருவனும்) மயக்கத்தை அடையமாட்டான். (ஒருவன்) ப்ரஹ்மத்தைப்பற்றிய கீழ்க்கூறிய இந்தநிலையில் கடைசிவயசில் இருந்தாலும், ப்ரஹ்மாநந்தமாகிய மோக்ஷத்தை அடைகிறான் ; (எனவே,) எவன் ப்ரஹ்மசர்யத்திலிருந்தே துறந்து, உயிர்வாழ்க்கை முழுவதும் ப்ரஹ்மத்திலேயே நிற்கின்றானோ, அவன் ப்ரஹ்மாநந்தத்தைப்பெறுகிறான் என்ற (விஷயத்தில்) என்ன சொல்லவேண்டுவது ? (௭௨)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் இரண்டாவது அத்தியாயம் முற்றும்.

𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 ॥

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑌭𑍂𑌤𑍇 𑌦𑍍𑌵𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍇, 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍋𑌗𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌚 । 𑌤𑌤𑍍𑌰 "𑌪𑍍𑌰𑌜𑌹𑌾𑌤𑌿 𑌯𑌦𑌾 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍" 𑌇𑌤𑌿 𑌆𑌰𑌭𑍍𑌯 𑌆 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌉𑌕𑍍𑌤𑌾 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌯𑍈𑌵 𑌚 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌾 '𑌏𑌷𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃' 𑌇𑌤𑌿 । 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌚 '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 ..... 𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿' 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌯𑍋𑌗𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾, 𑌨 𑌤𑌤 𑌏𑌵 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍍 𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 । 𑌤𑌦𑍇𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍀𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌃 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌕𑌥𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌰𑍍𑌥𑌿𑌨𑍇 𑌯𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌂 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌵𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍇𑌕𑌾𑌨𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌪𑌾𑌰𑌂𑌪𑌰𑍍𑌯𑍇𑌣𑌾𑌪𑌿 𑌅𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍌 𑌨𑌿𑌯𑍁𑌞𑍍𑌜𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑍀𑌭𑌾𑌵𑌃 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯, 𑌤𑌦𑌨𑍁𑌰𑍂𑌪𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 '𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃, 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌵𑌕𑌾𑌰𑌣𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑌿𑌷𑌯𑍇 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 ॥

மூன்றும் அத்தியாயம் : கர்மயோகம்.

அர்ஜுனனுடைய மனமலைப்பு.

ப்ரவிருத்தி நிவிருத்திகளைப்பற்றியவையான (கீதா)சாஸ்திரத்தின் இரண்டு கொள்கைகள் பகவானால் (இரண்டாம் அத்தியாயத்தில்) ஸாங்க்யவிஷயத்திலே புத்தி எனவும், யோகவிஷயத்திலே புத்தி எனவும் உபதேசிக்கப்பட்டன. அவற்றுள் "எப்பொழுது" (௨ - ௫௫) என்பதுமுதல் அத்தியாயம் முடிகிறவரையிலும், ஸாங்க்யபுத்தியைச் சார்ந்தவர்க்குத் துறவு அவச்யம் வேண்டுமெனக் கூறி, அந்த நிஷ்டையையுடைமையினாலேயே புருஷார்த்தங் கைகூடுதலும் "இது, ப்ரஹ்மத்தைப்பற்றிய நிலை" (௨ - ௭௨) எனக் கூறப்பட்டது. அர்ஜுனனுக்கும் (பகவான்) "கர்மத்திலேதான் உனக்கு அதிகாரம்......கர்மத்தைச் செய்யாமையிலே உனக்குப் பிரியம் இருக்கக் கூடாது" (௨-௪௭)என யோகபுத்தியைப்பற்றிக் கர்மத்தையே செய்யவேண்டுமெனக் கூறினர்; (ஆனால்,) அதிலிருந்தே நன்மை[முக்தி] பெறுதலைக் கூறவில்லை. அதையும் [முக்திக்கு நேரே ஸாதநமான ஞானத்தைப் பிறர்க்கு எடுத்துக்காட்டியதையும்], இதையும்[அதற்குவிரோதமான கர்மத்தை அநுஷ்டிக்கும்படி தனக்குச்சொன்னதையும்] பார்த்து அறிவுதிகைத்த அர்ஜுனன் (௩ - ௧,௨ - ஆம் சுலோகங்களைக்) கூறலானான்:

'எது நன்மை[முக்தி]யைப் பெறுதற்கு நேரான ஸாதநமோ,(அந்த) ஸாங்க்ய புத்திநிஷ்டையை, நன்மையைநாடும் பக்த(னான வேறொருவ)னுக்கு உபதேசித்து, (நன்கு)தெரிகின்ற பலதீங்குகளோடுகூடியதும், பரம்பரையாகவாயினும் நன்மை கைகூடுதலென்னும்பயன்(இதே ஜந்மத்தில் என்பது)நிச்சயமில்லாததுமானகர்மத்தில் (பகவான்) எப்படி என்னை ஏவக்கூடும்?' என்று அர்ஜுனன் மனத்திகைப்புக் கொண்டது ஏற்கும். "கர்மயோகமானது" (௩ - ௧) என்பதுமுதலான வினாவும் அதற்குஏற்ப உள்ளது. பின்னும், சாஸ்திரமானது கீழ்க்கூறிய (ஞானம் கர்மம் என்ற இப்)பிரிவை(த் தான் கூறும்) விஷயமாகக்கொண்டிருந்தால்(தான், அர்ஜுனனுடைய) வினாவை (ஏற்றுக்கொள்ளாது)தள்ளிவிடுகின்ற பகவானுடைய திருவாக்கும் (௩ - ௩) பொருத்தமாகும்.

𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍁—𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌂 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌵𑌰𑍍𑌣𑌯𑌨𑍍𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌃 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌂 𑌚 𑌇𑌹 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌯𑍋𑌃 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌰𑍂𑌪𑌯𑌨𑍍𑌤𑌿। 𑌕𑌥𑌮𑍍? 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇 𑌤𑌾𑌵𑌤𑍍—𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍 𑌆𑌶𑍍𑌰𑌮𑌿𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌤𑌂𑌚 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍍 𑌏𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍 𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑍇𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿। 𑌇𑌹 𑌤𑍁 𑌆𑌶𑍍𑌰𑌮𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌾 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗 𑌉𑌕𑍍𑌤𑌃। 𑌤𑌤𑍍𑌕𑌥𑌮𑍀𑌦𑍃𑌶𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌯 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌦𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍, 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌵𑌾 𑌕𑌥𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 𑌅𑌵𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍? ॥

𑌤𑌤𑍍𑌰 𑌏𑌤𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍—𑌗𑍃𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑍇𑌵 𑌶𑍍𑌰𑍌𑌤𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍍 𑌏𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌤𑍁 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌮𑌿𑌤𑌿। 𑌏𑌤𑌦𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵। 𑌕𑌥𑌮𑍍? 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌣𑌾𑌂

ஞானமும் கர்மமும் ஒருங்கு சேரப்பெறுமை.

ஆனால், சிலர் அர்ஜுனனுடைய வினாப்பொருளை வேறுவிதமாகக் கற்பித்து, பகவான் மறுமொழியை அதற்கு[வினாவுக்கு]மாறாக விவரிக்கிறார்கள்; அன்றியும், (தாம் கீதைக்கு எழுதிய) முகவுரையிலே கீதையின் பொருளானது தம்மால் எப்படி ஆராய்ச்சிசெய்யப்பட்டதோ, அதற்குமாறாகவும் இங்கே[மூன்றாம் அத்தியாயத் தொடக்கத்திலே] வினாவிடைகளின் பொருளை ஆராய்ச்சி செய்கிறார்கள்.—எப்படியெனில்?—அந்த முகவுரையிலே 'ஆச்ரமத்தார் அனைவர்க்கும் ஞானம்கர்மம்என்ற இரண்டும் கூடுதலானது, கீதாசாஸ்திரத்திலே நிர்ணயிக்கப்பட்டபொருள்' என்று கூறப்பட்டது; பின்னால்,"உயிர்வாழ்க்கைமுழுவதும்" என்னும் சுருதியினால் விதிக்கப்பட்ட கர்மங்களைத் துறந்து, ஞானமொன்றினாலேமாத்திரம் முக்தி கிடைக்குமென்ற இது முற்றிலுமே மறுக்கப்பட்டதென்றும் சிறப்பித்துக் கூறப்பட்டது. இங்கேயோ [மூன்றாம் அத்தியாயத்தொடக்கத்திலோ], (பகவான்) ஆச்ரமவேறுபாட்டை[ஞானம் கர்மம்என்ற இரண்டனுள் ஒருவனுக்கு ஏதாவதொன்றிலேயே நிஷ்டையை] உணர்த்துகிறார்; உணர்த்தவே, "உயிர்வாழ்க்கைமுழுவதும்" என்னுஞ் சுருதியினால் விதிக்கப்பட்ட (அந்தக்)கர்மங்களையே துறந்திடுதல் கூறப்பட்டதாயிற்று. இத்தகைய மாறுபட்ட அந்தவிஷயத்தைப் பகவான் எப்படி அர்ஜுனனுக்குக் கூறுவார்? அல்லது, கேட்பவன்தான் மாறுபட்டபொருளை எப்படிக் கேட்பான்?

அவ்வாறுகொள்ளுமிடத்து இது (அவர்களுடைய கருத்தாக) இருக்கலாம்:—"சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்களைத் துறந்திடுதலோடு(கூடிய) ஞானமொன்றினாலேயே முக்தி (கிடைக்காதென்று)மறுக்கப்படுகின்றது கிருகஸ்தர்களுக்கே தான்; மற்றைய ஆச்ரமத்தார்க்கு அன்று" என்ற இதுவும், முன் பின்னுக்கு மாறுபட்டதுதான்.—எப்படி?—'ஆச்ரமத்தார்எல்லார்க்குமே ஞானம்கர்மம்என்றஇரண்டும்

ज्ञानकर्मणोः समुच्चयो गीताशास्त्रे निर्णीतोऽर्थः इति प्रतिज्ञाय इह कथं तद्विरुद्धं केवलादेव ज्ञानात् मोक्षं ब्रूयात् आश्रमान्तराणाम्॥

अयं भावः—श्रौतकर्मापेक्षया सावधारणं "केवलादेव ज्ञानात् श्रौतकर्मरहितात् गृहस्थानां मोक्षः प्रतिषिध्यते" इति; तत्र गृहस्थानां विद्यमानमपि स्मार्तं कर्म अविद्यमानवत् उपेक्ष्य "ज्ञानादेव केवलात्" इति उच्यते इति। तदपि विरुद्धम्। कथम्? गृहस्थस्यैव स्मार्तकर्मणा समुच्चितात् ज्ञानात् मोक्षः प्रतिषिध्यते न त्वाश्रमान्तराणाम् इति कथं विवेकिभिः शक्यमवधारयितुम्। किं च—यदि मोक्षसाधनत्वेन स्मार्तानि कर्माणि ऊर्ध्वरेतसां समुच्चीयन्ते तथा गृहस्थस्यापि इष्यतां स्मार्तैरेव समुच्चयो न श्रौतैः॥

अथ श्रौतैः स्मार्तैश्च गृहस्थस्यैव समुच्चयः मोक्षाय, ऊर्ध्वरेतसां तु स्मार्तकर्ममात्रसमुच्चितात् ज्ञानात् मोक्ष इति। तत्रैवं सति गृहस्थस्य आयासबाहुल्यात्, श्रौतं स्मार्तं च बहुदुःखरूपं कर्म शिरसि आरोपितं स्यात्॥

கூடுதலானது, கீதாசாஸ்திரத்திலே நிர்ணயிக்கப்பட்ட பொருள்' என்று (முகவுரையிலே) பிரதிஜ்ஞைசெய்து, இங்கே[மூன்றும் அத்தியாயத்திலே] அதற்குமாறாக, ஞானமொன்றினாலேயேமாத்திரம் மற்றைய ஆச்ரமங்களுக்கு மோக்ஷ(உபாய)த்தை எப்படிக் கூறலாம்?

(இனி, இது) கருத்தாயின்:—"ச்ரௌதகர்மம்(சேர்தல்)இல்லாத ஞானமொன்றினாலேமட்டும் மோக்ஷமானது, கிருகஸ்தர்களுக்கு மறுக்கப்படுகின்றது" என்ற இவ்வசநம் ச்ரௌதகர்மத்தைக் குறித்து(நிற்பது). ஸ்மார்த்தகர்மமானது கிருகஸ்தர்களுக்கு இருந்தும், (அது ச்ரௌதகர்மம்போல ப்ரதாந மன்றாகையால் அதனை) இல்லாததுபோலக்கொண்டு அ(ந்த வசநத்)திலே "ஞானமொன்றினாலேமட்டும்" எனப்படுகின்றது என்பது. இதுவும் மாறுபட்டது(தான்).—எப்படி?—"ஸ்மார்த்த கர்மத்தோடு ஒருங்கு சேரப்பெற்ற ஞானத்தாலே மோக்ஷமானது மறுக்கப்படுகின்றது கிருகஸ்தர்களுக்கேயன்றி, மற்றை ஆச்ரமங்களுக்கு அன்று" என்று விவேகிகளால் எப்படிக் கொள்ளக்கூடும்? இன்னும், ஸந்யாஸிகளுக்கு ஸ்மார்த்தகர்மங்கள் மோக்ஷஸாதநமாக (ஞாநத்தோடு) ஒருங்கு சேர்க்கப்படுமாயின், அவ்வாறே கிருகஸ்தனுக்கும் ஸ்மார்த்தகர்மங்களோடேயே(ஞாநத்தை) ஒருங்கு சேர்த்தலைக்கொள்ளலாம். ச்ரௌதகர்மங்களோடு (ஞானத்தை ஒருங்கு சேர்த்துக்கொள்ள)வேண்டாம்.

இனி, "முக்தியின் பொருட்டு(ஞாநத்தை,) ச்ரௌத(மும்) ஸ்மார்த்த(முமான கர்ம)ங்களோடு ஒருங்கு சேர்த்தல் கிருகஸ்தனுக்கே; ஸந்யாஸிகளுக்கோ ஸ்மார்த்தகர்மத்தோடுமாத்திரம் ஒருங்கு சேரப்பெற்ற ஞாநத்தால் முக்தியாம்" என்றாலோ,—

அது இவ்வாறுள்ளவளவிலே, உழைப்பு மிகுதியால், பல துன்பவடிவமாகிய ச்ரௌதமும் ஸ்மார்த்தமுமான கர்மம் கிருகஸ்தன் தலையிலே ஏற்றப்பட்டதாகும்.

अथ गृहस्थस्यैव आयासबाहुल्यकारणात् मोक्षः स्यात् न आश्रमान्तराणां श्रौतनित्यकर्माविहितत्वात् इति। तदपि असत्, सर्वोपनिषत्सु इतिहासपुराणयोगशास्त्रेषु च ज्ञानाङ्गत्वेन मुमुक्षोः सर्वकर्मसंन्यासविधानात्, आश्रमविकल्पसमुच्चयविधानाच्च श्रुतिस्मृत्योः॥

सिद्धः तर्हि सर्वाश्रमाणां ज्ञानकर्मणोः समुच्चयः—न; मुमुक्षोः सर्वकर्मसंन्यासविधानात्। 'पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति,' 'तस्मात् न्यासमेषां तपसामतिरिक्तमाहुः,' 'न्यास एवात्यरेचयत्' इति। 'न कर्मणा न प्रजया धनेन त्यागेनैके अमृतत्वमानशुः' इति च। 'ब्रह्मचर्यादेव प्रव्रजेत्' इत्याद्याः श्रुतयः॥

'त्यज धर्ममधर्मं च उभे सत्यानृते त्यज।
उभे सत्यानृते त्यक्त्वा येन त्यजसि तत् त्यज॥'

சுருதி முதலியவற்றில் விதித்த துறவு.

இனி, "உழைப்பு மிகுதியால் கிருகஸ்தனுக்கே மோக்ஷமாம்; மற்றைய ஆச்ரமங்களுக்கு இல்லையாம்; சுருதியில்விதித்துள்ள நித்யகர்மம் இல்லாமையால்" எனின்,—

அதுவும் சரியன்று; (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோனுக்கு ஞானத்திற்குத்துணையாக ஸகலகர்மங்களையும் துறத்தலை உபநிஷத்துக்கள் எல்லாவற்றிலும், புராணங்களிலும், இதிஹாஸங்களிலும், யோகநூல்களிலும், விதித்தலாலும் (முதல் மூன்று ஆச்ரமங்களினின்று நான்காம் ஆச்ரமத்திற்கு) முறையாகவாயினும், (அல்லது முதல் மூன்று ஆச்ரமங்களுள் ஏதாவதொன்றிலிருந்து நான்காம் ஆச்ரமத்திற்குச்) சடக்கென்றாயினும் (போகவிரும்பியவனுக்கு அப்படியே) ஆச்ரமங்களை சுருதிஸ்மிருதிகளில் விதித்தலாலும் என்க.

அப்பொழுது ஆச்ரமங்கள் எல்லாவற்றிற்கும் ஞானகர்மங்கள் இரண்டும் ஒருங்குசேரல் அமைந்தது (என்றால்),—

அப்படியன்று; (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோனுக்கு ஸகலகர்மங்களையும் துறத்தலை விதித்தலின். "மக்களாசையையும், பொருளாசையையும், உலக ஆசையையும் விட்டுப், பின்பு, பிச்சையெடுத்து ஜீவிக்கிறார்கள்" (பி - ங - ரு - க), "ஆதலால் இத்தவங்களுள் துறவை மேலானதாகக்கூறுகிறார்கள்," "துறவே சிறப்புற்றது" (தை - ச - எகூ,எஅ) என்றும், "சிலர் கர்மத்தினாலும், மக்களினாலும், பொருளினாலும் அல்லாமல், துறவினால் சாகாத்தன்மையைப்பெற்றார்கள்" (தை - ச - கஉ) என்றும், "ப்ரஹ்மசர்யத்தினின்றே துறக்கலாம்" (ஜா - ச) என்றும் முதலாக உள்ளவை (துறவை விதிக்கும்) சுருதிகளாம். " தருமம் அதர்மம் என்ற இரண்டையும் விட்டிடு; மெய்பொய் என்ற இரண்டையும்விட்டிடு: மெய்பொய்என்ற இரண்டையும் விட்டிட்டுப் பின்பு, எதனால் இவற்றை விட்டிடுகிறாயோ, அதனை(யும்) விட்டிடு ["நான் இவற்றை விடுகிறேன்" என்று நினைக்கும் பற்றையும் விட்டிடு]," "மணஞ்செய்து

‘ 𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑍇𑌵 𑌨𑌿𑌸𑍍𑌸𑌾𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌸𑌾𑌰𑌦𑌿𑌦𑍃𑌕𑍍𑌷𑌯𑌾 ।
𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑍋𑌦𑍍𑌵𑌾𑌹𑌾𑌃 𑌪𑌰𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥’ 𑌇𑌤𑌿 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 ।
‘ 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑌯𑌃 𑌪𑌾𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥’ 𑌇𑌤𑌿 𑌶𑍁𑌕𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌇𑌹𑌾𑌪𑌿 𑌚 ‘ 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥

𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌚 𑌅𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌮𑍍 । 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—𑌨, 𑌅𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌃 । 𑌨 𑌹𑌿 𑌅𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑌃 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌃 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌮𑌪𑌿 ॥

கொள்ளாதவர்களாய் ஸம்ஸாரத்தையே ஸாரமற்றதாகக் கண்டு, ஸாரமாயுள்ளதைக் காணவேண்டுமென்னும் கருத்தோடு மிக்கவைராக்கியத்தையடைந்து துறக்கிறார்கள்" என்பது பிருகஸ்பதி(வசனம்). "பிராணிகள் கர்மத்தால் கட்டப்படுகின்றன; ஞானத்தால் விடுவிக்கப்படுகின்றன ; ஆதலால்,முடிவைக் கண்டறிந்த யதிகள் கர்மத்தைச் செய்வதில்லை"(மோ- உசுக - எ) என்பது சுகர் உரைப்பது. இங்கேயும் [கீதையிலும்] "ஸகலகர்மங்களையும் மனத்தால் துறந்து" (ரு - கங) என்பதுமுதலானவை(யெல்லாம் துறவைவிதிக்கும் ஸ்மிருதிகளாம்).

மோக்ஷம் கர்மத்தினு லமையமுடியாது.

மற்றும், மோக்ஷமென்ப(தனுடைய ஸ்வரூபத்தை ஆலோசித்தாலும், அ)து கார்யமாக [கர்மத்தினுல் ஸாதிக்கப்படுவதாக] இல்லை ; ஆகவே, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோனுக்குக் கர்மம் பயன்படாது.

(ஆக்ஷேபம்) :—நித்தியகர்மங்கள்,(செய்யாதுவிட்டிடுதலால் வரும்)குற்றத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டுப் பயன்படுகின்றன எனின்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; (கர்மங்களைச் செய்யாவிடின்) குற்றம் வரும் என்பதுஸந்யாஸிகளல்லாதவர்களுக்காதலின். இன்னும்(விதிப்படி)ஸந்யாஸிகளாகாத ப்ரஹ்மசாரிகளுக்குக்(குற்றமவருவது) போல, அக்நிகார்யம்முதலியவற்றைச் செய்யாமையினுல் ஸந்யாஸிக்குக் குற்றம்(வருமென்று)கற்பிக்கமுடியாதன்றே. [ஸமித்துக்களால் ஹோமஞ்செய்தல், வேதம் ஓதுதல் முதலியன ப்ரஹ்மசாரிக்கு விதிக்கப்பட்டவை. அவற்றை அவன் செய்யாவிடில், அவனுக்குக் குற்றம் வரும். அவற்றை ஸந்யாஸி செய்யாவிடில், ஸந்யாஸிக்குக் குற்றம் வராது. எப்படியெனில்,—அந்தந்த ஆச்ரமத்திற்கு விதிக்கப்பட்டதை அந்தந்த ஆச்ரமத்திலுள்ளவர்கள் செய்யாவிடில், அவர்கட்குக் குற்றம் வருமேயன்றி, ஒரு ஆச்ரமத்திற்கு விதிக்கப்பட்டதை மற்றோராச்ரமத்திலுள்ளவர்கள் செய்யாவிட்டால், அதனுல் இவர்கட்குக் குற்றம் வராது. ஒருவன் ப்ரஹ்மசர்யநிலையிலிருந்தால், அக்நிகார்யம் முதலியவற்றைச் செய்யவேண்டும். அவனே ஸந்யாஸியாய்விட்டாலோ, அவற்றைச் செய்யவேண்டியதில்லை. ஏனெனில், அவை ப்ரஹ்மசர்யநிலைக்கேயன்றி ஸந்யாஸநிலைக்கு விதிக்கப்பட்டன அல்ல ஆதலால், ப்ரஹ்மசர்யநிலையிலிருந்து ஸந்யாஸியானபின் அவற்றைச்செய்யாமையினுல் குற்றம் வாராதென்க.—ஆ.]

ந தாவத் நித்யாநாம் அகரணாத் அபாவாதேவ பாவரூபஸ்ய ப்ரத்யவாயஸ்ய உத்பத்தி: கல்பயிதும் ஶக்யா, 'கதம் அஸத: ஸத் ஜாயேத' இதி அஸத: ஸஜ்ஜந்மாஸம்பவஶ்ருதே:। யதி விஹிதாகரணாத் அஸம்பாவ்யோऽபி ப்ரத்யவாயம் ப்ரூயாத் வேத:, ததா அநர்த்தகர: வேத: அப்ரமாணமித்யுக்தம் ஸ்யாத், விஹிதஸ்ய கரணாகரணயோ: து:கமாத்ரபலத்வாத்। ததா ச காரகம் ஶாஸ்த்ரம் ந ஜ்ஞாபகம் இதி அநுபபந்நார்த்தம் கல்பிதம் ஸ்யாத்। ந சைதத் இஷ்டம்। தஸ்மாத் ந ஸந்ந்யாஸிநாம் கர்மாணி। அதோ ஜ்ஞாநகர்மணோ: ஸமுச்சயாநுபபத்தி: ॥

'ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்தி:' இதி அர்ஜுநஸ்ய ப்ரஶ்நாநுபபத்தேஶ்ச। யதி ஹி பகவதா த்விதீயே அத்யாயே ஜ்ஞாநம் கர்ம ச ஸமுச்சித்ய த்வயா அநுஷ்டேயம் இதி உக்தம் ஸ்யாத், தத: அர்ஜுநஸ்ய ப்ரஶ்ந: அநுபபந்ந: 'ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்தி:' இதி। அர்ஜுநாய சேத் புத்திகர்மணீ த்வயா அநுஷ்டேயே இத்யுக்தே யா கர்மணோ ஜ்யாயஸீ புத்தி: ஸாऽபி உக்தைவ இதி 'தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஶவ' இதி உபாலம்போ

இனி, நித்தியகர்மங்களைச்செய்யாமையாகிய இன்மையினின்றே உண்மையாகிய குற்றம் உண்டாவதென்பதைக் கொள்ளமுடியாது; "இன்மையினின்றும் உண்மை எப்படி உண்டாகும்?" (சா - சு - உ) என, இன்மையினின்று உண்மை உண்டாதல் கூடாமையைக்கூறுஞ்சுருதியினால். வேதமானது, விதித்ததைச் செய்யாமையினால் நேரிடக்கூடாத குற்றத்தையுங்கூறுமாயின், அப்பொழுது கெடுதிசெய்கின்றவேதம் ப்ரமாணமாகாதென்று கூறப்பட்டதாகும்; விதித்ததைச் செய்தல் செய்யாமை என்ற இரண்டும் துன்பத்தைமாத்திரம் கொடுத்தலினாலென்க. மேலும் அவ்வாறே, சாஸ்திரமானது காரகமேயன்றி ஞாபகம் அன்று என, (அது) பொருத்தமில்லாப் பொருளையுடையதாகக் கற்பனைசெய்யப்பட்டதாகும் [காரகம் - செய்வது: உண்டாக்குவது. ஞாபகம் - தெரிவிப்பது. நீர், நெருப்பு முதலிய பொருள்களின் சக்தி உலகப்பிரஸித்தம். அச்சக்தியைச் சார்ந்தே சாஸ்திரமானது தெரியாததைத் தெரிவிக்கின்றது. ஆனால், தானாக அப்பொருள்கட்கு ஒருசக்தியை உண்டாக்கச் சாஸ்திரத்திற்கு முடியாது. முடியுமாயின், அது நியாயவிரோதமாதலால் சாஸ்திரம் அஸங்கதமாகும்.] இதுவோ (நமது) கொள்கையன்று. ஆகவே, ஸந்யாஸிக்குக் கர்மங்கள் (செய்யவேண்டியன) இல்லை. ஆதலால், ஞானகர்மங்கள் என்றஇரண்டும் கூடுதல் பொருந்தாதென்க.

இரண்டும் கூடுதலென்பது, அர்ஜுனன் வினவோடு பொருந்தாமை.

மற்றும், "ஞானமானது கர்மத்தைக்காட்டிலும் சிறந்ததென்பது உமது கொள்கையானால்" (௩ - ௧) என்னும் அர்ஜுனனுடைய வினா பொருந்தாது. "நீ ஒருவனே ஞானத்தையும் கர்மத்தையும் சேர்த்து அநுஷ்டிக்கவேண்டும்" என்று இரண்டாம் அத்தியாயத்தில் பகவான் கூறியிருந்தாலன்றோ, அப்பொழுது "ஞானமானது கர்மத்தைக்காட்டிலும் சிறந்ததென்பது உமது கொள்கையானால்" (௩ - ௧) என்னும் அர்ஜுனனுடைய வினா பொருத்தமுறாததாகும். "நீ ஞானகர்மங்கள் இரண்டையும் அநுஷ்டிக்கவேண்டும்" என அர்ஜுனனுக்குக் கூறப்பட்டிருந்தால், (அப்பொழுது), கர்மத்தினும் மேலாக யாதொரு ஞானம் உள்ளதோ, அதுவும் கூறப்பட்டதுதான்; எனவே, "கேசவ! அப்பொழுது ஏன் என்னைக் கொடியதான கர்மத்தில் ஏவுகிறீர்?"

𑌵𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌨 𑌕𑌥𑌂𑌚𑌨 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌚 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, 𑌯𑍇𑌨 ‘𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌯𑌦𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌏𑌕𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌤𑌃 𑌅𑌯𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌃 ‘𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 । 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌯𑍋𑌃 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌨 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌚 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌕𑌲𑍍𑌪𑌨𑍀𑌯𑌮𑍍 । 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌯𑍋𑌃 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑍇𑌵𑌲𑌾𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌚 ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 ‘𑌏𑌕𑌂 𑌵𑌦 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯’ 𑌇𑌤𑌿 𑌚 𑌏𑌕𑌵𑌿𑌷𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌾 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌾 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌸𑌂𑌭𑌵𑍇 । ‘𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌽𑌸𑌂𑌭𑌵𑌂 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌅𑌵𑌧𑌾𑌰𑌣𑍇𑌨 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

(௩ - க) என்று (பகவானைப்) பழித்தலாவது, வினவுதலாவது ஒருவிதத்தாலும் பொருந்தாது. "ஞானமானது" (௩ - க) என்னும் வினு நிகழுமாறு "நீ கர்மத்தினும் மேலான ஞானத்தை அநுஷ்டிக்கக்கூடாது" என்று அர்ஜுனனுக்குமாத்திரம் பகவான் முன் உரைக்கவில்லை என்று கொள்வதும் சரியன்று. ஆனல், ஞானகர்மங்களுக்கு (ஒன்றற்கொன்றுள்ள) விரோதத்தால் ஒரே புருஷன் (அவற்றை) ஒருங்கே அநுஷ்டித்தல் நிகழாதென்று (கருதி), '(அவை) வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவை' எனப் பகவான் முன் கூறியிருந்தால், அப்பொழுது "ஞானமானது" (௩ - க) என்பது முதலான இக்கேள்வியானது பொருந்தியது. (பகவான் அருளிச்செய்ததைத்) தெளிவாகத் தெரிந்துகொள்ளாமையினுல் கேள்வி கேட்கப்பட்டதெனக் கொண்டவிடத்தும், 'ஞானநிஷ்டையும் கர்மநிஷ்டையும் வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவை' என்ற பகவான் மறுமொழி பொருந்தாது. அன்றியும், பகவான் மறுமொழியையும் அறியாமையினு லானதாகக்கொள்ளுதல் தகாது. 'ஞானகர்மநிஷ்டைகள் வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவை' என்னும் பகவானுடைய இம்மறுமொழியைக் காண்கிறபடியால், ஞானகர்மங்கள் ஒருங்குசேரலென்பது இயையாதென்க.

ஆகவே, 'ஞான மொன்றினுலேயே முக்தி' என்ற இது, கீதையிலும், எல்லா உபநிஷத்துக்களிலும் நிர்ணயிக்கப்பட்டபொருளாம்.

இரண்டும் ஒருங்குசேரக்கூடுமாயின், ஞானகர்மங்களுள் 'ஒன்றை நிச்சயித்துச் சொல்லுக' (௩ - உ) என (ஏதாவது) ஒன்றைப்பற்றியதாகவே (அர்ஜுனன் பகவானைப்) பிரார்த்தித்தல் பொருத்தமில்லை யாகும். 'ஆதலால் நீ கர்மத்தையே செய்யக்கடவாய்' (௪ - கரு) என்றும் அர்ஜுனனுக்கு ஞானநிஷ்டை கூடாமையைத் தேற்ற (ஏகார)த்தினுல் காட்டுவர்.

अर्जुन उवाच ॥

क. ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥

ज्यायसी श्रेयसी चेत् यदि कर्मणः सकाशात् ते तव मता अभिप्रेता बुद्धिः ज्ञानं हे जनार्दन । यदि बुद्धिकर्मणोः समुच्चयः इष्टः तदा एकं श्रेयःसाधनम् इति कर्मणो ज्यायसी बुद्धिः इति कर्मणः अतिरिक्तकरणं बुद्धेः अनुपपन्नम् अर्जुनेन कृतं स्यात्; न हि तदेव तस्मात् फलतः अतिरिक्तं स्यात् । तथा च, कर्मणः श्रेयस्करी भगवता उक्ता बुद्धिः, अश्रेयस्करं च कर्म कुरु इति मां प्रतिपादयति, तत् किं नु कारणम् इति भगवत उपालम्भमिव कुर्वन् तत्किं कस्मात् कर्मणि घोरे क्रूरे हिंसालक्षणे मां नियोजयसि केशव इति च यदाह तदपि नोपपद्यते ॥

अथ स्मार्तेनैव कर्मणा समुच्चयः सर्वेषां भगवता उक्तः अर्जुनेन च अवधारितश्चेत् 'तत्किं कर्मणि घोरे मां नियोजयसि' इत्यादि कथं युक्तं वचनम् ॥ क ॥

ஞானமா கர்மமா எது சிறந்தது?

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

க. ஜநார்த்தந! ஞானம் கர்மத்திலும் மேலானதென்பது உமது கருத்தானால், அப்பொழுது ஏன் கேசவ! என்னைக் கொடியதான கர்மத்தில் ஏவுகிறீர்?

ஞானகர்மங்கள் இரண்டும் ஒருங்குசேர்தல் (முக்திக்கு ஸாதனம் என்பது பகவான்) கருத்தானால், அப்பொழுது (ஒருங்கு சேர்க்கப்பட்ட) மோக்ஷஸாதனம் ஒன்றுதான். எனவே, 'கர்மததைக்காட்டிலும் ஞானம் மேலானது' என்று கர்மத்தினின்றும் ஞானத்தைப் பிரித்திடுதல் அர்ஜுனன் தப்பாகச் செய்ததாகும்; அதே அதனினின்றும் பயனால் வேறுபட்டதாகாதன்றோ [ஒரேபயனைப பெறுதற்கு இரண்டு ஒருங்குசேர்ந்து ஸாதநமாயிருந்தால், அவற்றுள் ஒன்றற்கொன்று கீழானது மேலானது என்றவேறுபாடு எப்படிக் கூடும்? கூடாது. உதாரணமாக, பித்தம் தணிதலென்னும் பயனைப் பெறுதற்குக் குளிர்ச்சியும் இனிமையுமான இரண்டுபதார்த்தங்களை ஒருங்குசேர்த்துப் புஜித்தல் ஸாதநமாயின், அவற்றுள் மற்றயதைக்காட்டிலும் இனிமையான பதார்த்தம் மேலானதென்னும் வேறுபாடு பொருந்தாதன்றோ.] இன்னும் அவ்வாறே, "பகவான் கர்மத்தைககாட்டிலும் ஞானம் நன்மைசெய்வதாகக் கூறினர்; நன்மைசெய்வதல்லாததான கர்மத்தை (நீ) செய்யக்கடவாய் என்று எனக்கு உபதேசிக்கிறார். அஃதென்ன காரணமோ?" என்று பகவானைப் பழிக்கிறவன்போல 'கேசவ! அப்பொழுது ஹிம்ஸையாகிய கொடிய கர்மத்தில் எக்காரணத்தால் என்னை ஏவுகிறீர்?' என்று (அர்ஜுனன்) கூறுவதும் பொருந்தாது.

இனி, ஸ்மார்த்தகர்மத்தோடுமாத்திரம் (ஞானம்) ஒருங்குசேர்தல் பகவானால் ஸகலருக்கும் கூறப்பட்டு, அர்ஜுனனாலும் (அப்படியே) கிரகித்துக்கொள்ளப்பட்டது என்றால்,—"அப்பொழுது ஏன் என்னைக் கொடியதான கர்மத்தில் ஏவுகிறீர்?" என்பதுமுதலான வார்த்தை எப்படி நேராகும்?

(க)

𑌅𑌂 𑌉—

௨. 𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑍀𑌵 𑌮𑍇 ।
𑌤𑌦𑍇𑌕𑌂 𑌵𑌦 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌹𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ॥

𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌧𑌾𑌯𑍀 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌮𑌮 𑌮𑌨𑍍𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑌮𑌿𑌵 𑌭𑌗𑌵𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿 । 𑌤𑍇𑌨 𑌮𑌮 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑌿 𑌇𑌵, 𑌮𑌮 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌾𑌪𑌨𑌯𑌾𑌯 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌕𑌥𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑌿? 𑌅𑌤𑌃 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑌿 𑌇𑌵 𑌮𑍇 𑌇𑌤𑌿। 𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌭𑌿𑌨𑍍𑌨𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌏𑌕𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌸𑌂𑌭𑌵𑌂 𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇, 𑌤𑌤𑍍𑌰 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌤𑌯𑍋𑌃 𑌏𑌕𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌾 𑌇𑌦𑌮𑍇𑌵 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌮𑌿𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌵𑌦 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿, 𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌵𑌾 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑍇𑌣 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌆𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ॥

𑌯𑌦𑌿 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌗𑍁𑌣𑌭𑍂𑌤𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌥𑌂 "𑌤𑌯𑍋𑌃 𑌏𑌕𑌂 𑌵𑌦" 𑌇𑌤𑌿 𑌏𑌕𑌵𑌿𑌷𑌯𑍈𑌵 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍। 𑌨 𑌹𑌿 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 "𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿, 𑌨𑍈𑌵 𑌦𑍍𑌵𑌯𑌮𑍍" 𑌇𑌤𑌿, 𑌯𑍇𑌨 𑌉𑌭𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

அன்றியும்,

௨. **மலைக்கச்செய்வதுபோன்ற வார்த்தையினால் என்னுடைய புத்தியை மயக்குகின்றீர்போலும். நான் எதனால் நன்மையைப் பெறுவேனோ, அந்த ஒன்றை [ஞானகர்மங்களுள், உனக்கு உரியது இன்னதுதான் என்பதை]ப் பிரித்துச் சொல்லவேண்டும்.**

பகவான் தெளிவாகப் பேசுபவராயினும், மந்தபுத்தியான எனக்குப் பகவான் வார்த்தையானது மலைக்கச்செய்வதுபோலத் தோற்றுகின்றது. அதனால் என் மதியை மயக்குகின்றீர்போலும்: மந்தபுத்தியான என்னுடைய மயக்கத்தைப் போக்குதற்கென்றே தலைப்பட்டுள்ள நீங்கள் (என்னை) எப்படி மயங்கச்செய்வீர்கள்? [செய்யமாட்டீர்கள்]. ஆதலால் கூறுகிறேன் "எனது புத்தியை மயங்கச்செய்கின்றீர்போலும்" என்று. ஆனால், "ஞானத்தை அநுஷ்டிப்பவன் வேறு, கர்மத்தை அநுஷ்டிப்பவன் வேறு; ஒருவனே (ஒரேகாலத்து இவ்விரண்டையும் ஒருங்கே) அநுஷ்டித்தல் நிகழாது" என நீங்கள் நினைத்தால், (அப்பொழுது) அது இவ்வாறிருக்க, அவற்றுள் (ஏதாவது)ஒன்றை = ஞானத்தை அல்லது கர்மத்தை—"இதுவே அர்ஜுனனுக்குத் தக்கது, (அவனுடைய) புத்திவல்லமைக்கும், நிலைமைக்கும் ஏற்றது" என நிச்சயித்து அருளிச்செய்க. ஞானமாகவாயினும், கர்மமாகவாயினுமுள்ள எந்த ஏதாவதொன்றினால் நான் நன்மையைப்பெறுவேனோ, (அதனை உரைத்தருளுக).

பகவான் ஞானத்தைக் கர்மநிஷ்டைக்குத் துணையாகவாவது கூறியிருந்தால், அப்பொழுது "அவ்விரண்டனுள் ஒன்றைச் சொல்லவேண்டும்" என ஒன்றைப்பற்றியதாகவே அர்ஜுனன் எப்படிக் கேட்கவிரும்பலாகும்? (அவன்), தான் இரண்டையும் பெறமுடியாதென்று நினைக்கின்றவனாய் ஒன்றையே வேண்டும்படிக்கு, பகவான் முன் "ஞானகர்மங்களுள் ஏதாவதொன்றுதான் சொல்லுவேன், இரண்டையும் (சொல்ல)மாட்டேன்" எனக் கூறவில்லையன்றோ. (௨)

யதாப்ரஶ்நமேவ ப்ரதிவசநம் ஶ்ரீபகவாநுவாச —

ஶ்ரீபகவாநுவாச ॥

௩. லோகேऽஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா மயாऽநக ।
ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் ॥

லோகேऽஸ்மிந் ஶாஸ்த்ராநுஷ்டாநாதிக்ருதாநாம் த்ரைவர்ணிகாநாம் த்விவிதா த்விப்ரகாரா நிஷ்டா ஸ்திதி: அநுஷ்டேயதாத்பர்யம் புரா பூர்வம் ஸர்காதௌ ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா தாஸாம் அப்யுதயநி:ஶ்ரேயஸப்ராப்திஸாதநம் வேதார்தஸம்ப்ரதாயம் ஆவிஷ்குர்வதா ப்ரோக்தா மயா ஸர்வஜ்ஞேந ஈஶ்வரேண ஹே அநக அபாப । தத்ர கா ஸா த்விவிதா நிஷ்டா இதி? ஆஹ — தத்ர ஜ்ஞாநயோகேந ஜ்ஞாநமேவ யோக: தேந ஸாங்க்யாநாம் ஆத்மாநாத்மவிஷயவிவேகவிஜ்ஞாநவதாம் ப்ரஹ்மசர்யாஶ்ரமாதேவ க்ருதஸம்ந்யாஸாநாம் வேதாந்தவிஜ்ஞாநஸுநிஶ்சிதார்தாநாம் பரமஹம்ஸபரிவ்ராஜகாநாம் ப்ரஹ்மண்யேவ அவஸ்திதாநாம் நிஷ்டா ப்ரோக்தா । கர்மயோகேந கர்மைவ யோக: கர்மயோக: தேந கர்மயோகேந யோகிநாம் கர்மிணாம் நிஷ்டா ப்ரோக்தா இத்யர்த: ॥

யதி ச ஏகேந புருஷேண ஏகஸ்மை புருஷார்தாய ஜ்ஞாநம் கர்ம ச ஸமுச்சித்ய அநுஷ்டேயம் பகவதா இஷ்டம் உக்தம் வக்ஷ்யமாணம் வா கீதாஸு வே-

---

ஞானவழியும், கர்மவழியும்.

ஸ்ரீபகவான், வினவுக்குஏற்பவே மறுமொழி கூறலானார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௩. பாபமற்றவனே! முன்பு இவ்வுலகத்திலே ஸாங்க்யர்களுக்கு ஞானயோகத்தாலும், யோகிகளுக்குக் கர்மயோகத்தாலும் இருவகையான நிஷ்டைகளை யான் கூறினேன்.

எல்லாவற்றையும் அறிகின்ற ஈச்வரனான யான், முன்பு ஸிருஷ்டித்தொடக்கத்தில் ஜனங்களைப் படைத்து, அவர்கட்குச் செல்வமும் முக்தியும் கிடைப்பதற்கு ஸாதனமான வேதப்பொருளின் ஸம்பிரதாயத்தை வெளிப்படுத்தியபொழுது, இவ்வுலகத்திலே, நூற்பொருளை அநுஷ்டிக்க அதிகாரம்பெற்ற மூன்று வர்ணத்தார்க்கும் இருவிதமான நிஷ்டையை=நிலையை, அநுஷ்டிக்கக்கடவதிலே அமர்ந்துநிற்றலைக் கூறலானேன். இனி, அந்த இருவகைத்தான நிஷ்டை யாதென்றவிடத்துக் கூறுகிறார் :— அவற்றுள் ஞானமாகிய யோகத்தால், ஆத்மாஅநாத்மாக்களைப் பகுத்தறியும் ஞானமுடையவராய், ப்ரஹ்மசர்யநிலையினின்றே துறந்தவராய், வேதாந்தஞானத்தால் பொருள்களை நன்குநிர்ணயித்தவராய்,பரமஹம்ஸரென்னும் ஸந்யாஸிகளாய்,ப்ரஹ்மத்திலேயே நிற்கின்ற ஸாங்க்யர்களுக்கு ஞானநிஷ்டையைக் கூறினேன் ; கர்மமாகிய யோகத்தால் யோகிகளான கர்மிகளுக்கு நிஷ்டை கூறப்பட்டது என்பது பொருள்.

ஒரே புருஷனாலே ஒரேபுருஷார்த்தத்தின்பொருட்டு ஞானமும் கர்மமும் ஒருங்கே சேர்த்துஅநுஷ்டிக்கவேண்டிய தென்பது கீதையிலே பகவானாலே (தமது) கருத்தாக (முன்) கூறப்பட்டதும் அல்லது (பின்) கூறப்படுவதும், வேதங்களிலும் ஓதப்

शेषत्वेनापि, अथ इह अर्जुनाय उपसन्नाय प्रियाय विशिष्टभिन्नपुरुषकर्तृके एव ज्ञानकर्मनिष्ठे ब्रूयात्? यदि पुनः अर्जुनः ज्ञानं कर्म च द्वयं श्रुत्वा स्वयमेव अनुष्ठास्यति अन्येषां तु भिन्नपुरुषानुष्ठेयतां वक्ष्यामि इति मतं भगवतः कल्प्येत, तदा रागद्वेषवान् अप्रमाणभूतो भगवान् कल्पितः स्यात्। तच्च अयुक्तम्। तस्मात् कयाऽपि युक्त्या न समुच्चयो ज्ञानकर्मणोः ॥ ௩ ॥

यत् अर्जुनेन उक्तं कर्मणो ज्यायस्त्वं बुद्धेः, तच्च स्थितम्, अनिराकरणात्; तस्याश्च ज्ञाननिष्ठायाः संन्यासिनैव अनुष्ठेयत्वम्, भिन्नपुरुषानुष्ठेयत्ववचनात्। भगवतः एवमेव अनुमतमिति गम्यते। मां च बन्धकारणे कर्मण्येव नियोजयसि इति विषण्णमनसम् अर्जुनं कर्म नारभे इत्येवं मन्वानम् आलक्ष्य आह भगवान्— "न कर्मणामनारम्भात्" इति ॥

अथ वा— ज्ञानकर्मनिष्ठयोः परस्परविरोधात् एकेन पुरुषेण युगपत् अनुष्ठातुम् अशक्यत्वे सति इतरेतरानपेक्षयोः एव पुरुषार्थहेतुत्वे प्राप्ते कर्मनिष्ठाया ज्ञाननिष्ठाप्राप्ति-

---

பட்டதுமாக இருந்தால், பகவான் (தன்னை) வழிபட்ட அன்பனான அர்ஜுனனுக்கு "ஞானநிஷ்டையை அநுஷ்டித்தற்கு உரிய புருஷன் வேறு, கர்மநிஷ்டையை அநுஷ்டித்தற்கு உரிய புருஷன் வேறு" என்றே இங்கு எப்படிக் கூறலாம்? மற்று, "அர்ஜுனன் ஞானம்கர்மம் இரண்டையும் கேட்டுத் தானாகவே (அவற்றை ஒருங்கே) அநுஷ்டிப்பான்; மற்றையோர்க்கோ 'அவை வேறுவேறுபுருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவை' எனக்கூறுவேன்" என்று பகவான் கருத்தெனக்கொண்டால், அப்பொழுது பகவான் விருப்புவெறுப்பினை யுடையவராக, அப்ராமாணிகராக நினைக்கப்பட்டவ ராவர். அதுவோ தக்கதன்று. ஆகவே, எந்தயுக்தியினாலும் ஞானகர்மங்கள் ஒருங்குசேர்தல் அமையாதென்க. (௩)

கர்மயோகமானது ஒருவனைக் கர்மத்தினின்றும் விடுவிக்கும்.

ஞானம் கர்மத்தின் மேலானதென்று அர்ஜுனன் கூறியது நிலைத்தது; (பகவான் அதனை) மறுக்காமையால். பின்னும், அந்த ஞானநிஷ்டையானது ஸந்யாஸியினாலேயே அநுஷ்டிக்கத்தக்கதென்பதும், "(ஞானகர்மங்கள்) வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவை" என்னும் திருவாக்கினால் (நிலைத்தது). இப்படியே பகவான் கருத்தென்று தெரியவருகின்றது. இனி "(ஸம்ஸாரக்)கட்டுக்குக்காரணமான கர்மத்திலேயே என்னை ஏவுகிறீர்" என்று மனம்வருந்திய அர்ஜுனன் 'கர்மத்தைச் செய்யமாட்டேன்' என நினைத்திருப்பதாகக் கண்டு, பகவான் "ஒருவன் கர்மங்களை" (௩-௪) என்பதை அருளிச்செய்கின்றார்:

அல்லது, (பின்வருமாறுகொண்டாலும் அமையும்) :—'ஞானகர்மநிஷ்டைகள் ஒன்றற்கொன்று மாறுபட்டிருத்தலால், ஒரேபுருஷன் (அவற்றை) ஒரேஸமயத்தில் அநுஷ்டிக்கக்கூடாமையின், (அவை) ஒன்றையொன்று சார்ந்துநிற்காமலே புருஷார்த்தத்தைத் தருவன' என்பதாயிற்று. ஆகவே, கர்மநிஷ்டையானது ஞானநிஷ்டையைப்

हेतुत्वेन पुरुषार्थहेतुत्वं, न स्वातन्त्र्येण; ज्ञाननिष्ठा तु कर्मनिष्ठोपायलब्धात्मिका सती स्वातन्त्र्येण पुरुषार्थहेतुः अन्यानपेक्षा, इत्येतमर्थं प्रदर्शयिष्यन् आह भगवान्—

४. न कर्मणामनारम्भान्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति॥

न कर्मणां क्रियाणां यज्ञादीनाम् इह जन्मनि जन्मान्तरे वा अनुष्ठितानाम् उपात्तदुरितक्षयहेतुत्वेन सत्त्वशुद्धिकारणानां तत्कारणत्वेन च ज्ञानोत्पत्तिद्वारेण ज्ञाननिष्ठाहेतुत्वम्,

"ज्ञानमुत्पद्यते पुंसां क्षयात्पापस्य कर्मणः।
यथाऽऽदर्शतलप्रख्ये पश्यत्यात्मानमात्मनि॥"

इत्यादिस्मरणात्, अनारम्भात् अननुष्ठानात् नैष्कर्म्यं निष्कर्मभावं कर्मशून्यतां ज्ञानयोगेन निष्ठां निष्क्रियात्मस्वरूपेणैव अवस्थानम् इति यावत्, पुरुषः न अश्नुते न प्राप्नोति इत्यर्थः। "न कर्मणाम् अनारम्भात् नैष्कर्म्यं पुरुषोऽश्नुते" इति वचनात् तद्विपर्ययात् तेषाम् आरम्भात् नैष्कर्म्यं पुरुषोऽश्नुते इति गम्यते। कस्मात् पुनः कारणात् कर्मणाम् अनारम्भात् नैष्कर्म्यं न अश्नुते इति? उच्यते, नैष्कर्म्योपायत्वात् कर्मारम्भस्य। न हि उपायमन्तरेण

பெறக் காரணமாவதால் புருஷார்த்தத்தைத் தருவதென்பது; ஸ்வதந்திரமாகவே [தானாகவே] (அது புருஷார்த்தத்தைத் தருவது) அன்று. ஞானநிஷ்டையோ, கர்மநிஷ்டையாகிய உபாயத்தால் கிடைக்கப்பெறுவதாய், பிறஉதவி இல்லாமல் ஸ்வதந்திரமாகவே [நேராகவே] புருஷார்த்தத்தைத் தருவது. என்ற இவ்விஷயத்தைத் தெளிய விளக்கும்பொருட்டுப் பகவான் கூறுகிறார்:

௪. ஒருவன் கர்மங்களைச் செய்யாமையினால் நைஷ்கர்ம்யத்தை [கர்மமற்றநிலையை]ப் பெறுகிறானில்லை; (அவற்றைத்) துறத்தலினாலேயே ஸித்தியை அடைகிறானுமில்லை.

இப்பிறப்பிலாயினும், முற்பிறப்பிலாயினும் அநுஷ்டிக்கப்பட்ட யஜ்ஞம் முதலிய கர்மங்கள் முன்செய்த பாவத்தைத் தேயப்பண்ணுவதால் சித்தசுத்தியை உண்டாக்குகின்றன; (அவை) அதனை உண்டாக்குவதனால் ஞானமுண்டாதல்மூலமாக ஞானநிஷ்டைக்குக் காரணமாகின்றன. (அவை அவ்வாறு ஞானத்திற்குக் காரணமாதலை), ''பாவகர்மம் தேய்தலாலே மனிதர்க்கு ஞானம் உண்டாகின்றது; (அவ்வளவிலே ஒருவன்) துலக்கமான கண்ணாடியிற்போலத் தன்னில் தன்னைக் காண்கிறான்'' (ம-சா-௨௦௪ - அ) என்பது முதலிய ஸ்மிருதிவசநங்களால் (அறிக). (கர்மங்களைச்) செய்யாமையினால் நைஷ்கர்ம்யத்தை=கர்மம் நீங்கிய தன்மையை, பிரவிருத்தியில்லாமற்போன நிலையை, ஞானயோகத்தால் நிஷ்டையை, அதாவது-தொழிலைப்பெறாத ஆத்மஸ்வரூபமாகவே நிற்றலை ஒருவன் அடையமாட்டான். **''ஒருவன் கர்மங்களைச் செய்யாமையினால், நைஷ்கர்ம்யத்தைப் பெறுகிறானில்லை''** என்னும் திருவாக்கினால், ''அதன் மறுதலையால், (அதாவது-) அவற்றை அநுஷ்டித்தலால் கர்மம்நீங்கிய நிலையைப் பெறுவான்''

𑌉𑌪𑍇𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿 । 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌸𑍍𑌯, 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 𑌇𑌹 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌨𑍋𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 “𑌤𑌮𑍇𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌨𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌵𑌿𑌵𑌿𑌦𑌿𑌷𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍋𑌪𑌾𑌯𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌚—

“𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌦𑍁𑌃𑌖𑌮𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌯𑍋𑌗𑌤𑌃 ।”

“𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇 ।”

“𑌯𑌜𑍍𑌞𑍋 𑌦𑌾𑌨𑌂 𑌤𑌪𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑌾𑌵𑌨𑌾𑌨𑌿 𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 ।” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥

𑌨𑌨𑍁 𑌚— ‘𑌅𑌭𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌦𑌪𑌿 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 । 𑌲𑍋𑌕𑍇 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌤𑍍 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑌰𑌮𑍍 । 𑌅𑌤𑌶𑍍𑌚 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑍇𑌣? 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌅𑌤 𑌆𑌹— 𑌨 𑌚 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 । 𑌨𑌾𑌪𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌨𑌾𑌦𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌰𑌹𑌿𑌤𑌾𑌤𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌸𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 ॥ ௪ ॥

என்றுதோன்றுகின்றது. மற்று, எக்காரணத்தால் கர்மங்களைச்செய்யாமையினால் கர்மங்களினின்று நீங்கிய நிலையைப் பெறமாட்டானென்பது ?—கூறுவோம்: கர்மத்தைச் செய்தலே கர்மமற்ற நிலையைப் பெறுதற்கு உபாயமாதலின் என்க. உபாயமின்றி ஒரு பயனைப் பெறுவதில்லையன்றோ. நைஷ்கர்ம்ய நிலைமையாகிய ஞானயோகத்திற்குக் கர்மயோகம் உபாயமாம்; (அவ்வாறே,) சுருதியிலும், இங்கு [கீதையிலு]ம் உணர்த்துவதனால். சுருதியிலோ, இங்குப் பேசிவருகின்றதும் அறியவேண்டியதுமான ஆத்மாவாகிய உலகத்தை அறிதற்கு உபாயமாக “ப்ராஹ்மணர்கள் வேதம்ஓதுதலாலும், யாகத்தாலும், அந்த இதனை [ஆத்மாவை] அறியநாடுகிறார்கள்” (பி-ச-ச-உஉ) என்பது முதலானவற்றால், கர்மயோகம் ஞானயோகத்திற்கு உபாயமென்பது உணர்த்தப்பட்டது. இங்கேயும் [கீதையிலும்], “உயர்தோள ! ஸந்யாஸமோ, (கர்ம)யோகமின்றிப் பெறுவது கஷ்டமே” (ரு - சு), “யோகிகள் பற்றைவிட்டுச் சித்தசுத்திக்காகக் கர்மத்தைச் செய்கிறார்கள்” (ரு-கக), “யஜ்ஞமும், தானமும், தவமும் பயனை எதிர்நோக்காதார்க்குத் தூய்மைசெய்வனவாம்” (கஅ - ரு) என்பன முதலியவற்றை(ப் பகவான்) உணர்த்துவர்.

அப்படியானால், (இனி ஒருசங்கை வருமாறு) :—“ஸகலப்பிராணிகட்கும் அபயமளித்தபின்பு நைஷ்கர்ம்யத்தை மேற்கொள்ளவேண்டும்” என்பதுமுதலானவற்றிலே, (ஒருவன் தான்) செய்யவேண்டிய கர்மங்களைத் துறத்தலாலும் நைஷ்கர்ம்யத்தைப் பெறலாமென்று காட்டப்படுகின்றது. உலகத்திலும், கர்மங்களைச் செய்யாமையினால் கர்மம்நீங்கிய தன்மையென்பது(யாவரும்) நன்குஅறிந்த விஷயம். ஆகவே, நைஷ்கர்ம்யத்தைத் தேடுகிறவனுக்குக் கர்மத்தைச் செய்வதனால் ஆவதென்ன ? [ஒன்றுமில்லை] என்னும் (சங்கை) வந்தது.

ஆதலால் (ஸ்ரீபகவான்) கூறுகிறார் “துறவினாலேயே இல்லை” என்று. கர்மத்தை விட்டிடுதல்மாத்திரமேயாகிய ஞானமில்லாத வெறுந்துறவினாலேயே ஸித்தியை = கர்மமற்றநிலையாகிய ஞானயோகநிஷ்டையை அடையமாட்டான். (ச)

கஸ்மாத் புந: காரணாத் கர்மஸந்யாஸமாத்ராதேவ கேவலாத் ஜ்ஞாந-ரஹிதாத் ஸித்திம் நைஷ்கர்ம்யலக்ஷணாம் புருஷோ நாதிகச்சதி? இதி ஹேத்வாகாங்க்ஷாயாமாஹ—

௫. ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத் ।
கார்யதே ஹ்யவஶ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்குணை: ॥

ந ஹி யஸ்மாத் க்ஷணமபி காலம் ஜாது கதாசித் கஶ்சித்திஷ்டதி அகர்மக்ருத் ஸந்। கஸ்மாத்? கார்யதே ப்ரவர்த்யதே ஹி யஸ்மாத் அவஶ ஏவ அஸ்வதந்த்ர ஏவ கர்ம ஸர்வ: ப்ராணீ ப்ரக்ருதிஜை: ப்ரக்ருதிதோ ஜாதை: ஸத்த்வரஜஸ்தமோபிர்குணை:। அஜ்ஞ இதி வாக்யஶேஷ:, யத: வக்ஷ்யதி "குணைர்யோ ந விசால்யதே" இதி ॥

ஸாங்க்யாநாம் ப்ருதக்கரணாத் அஜ்ஞாநாமேவ ஹி கர்மயோக:, ந ஜ்ஞாநிநாம். ஜ்ஞாநிநாம் து குணைரசால்யமாநாநாம் ஸ்வத: சலநாபாவாத் கர்மயோகோ நோபபத்யதே। ததா ச வ்யாக்யாதம் 'வேதாவிநாஶிநம்' இத்யத்ர ॥ ௫ ॥

யஸ்து அநாத்மஜ்ஞ: சோதிதம் கர்ம ந ஆரபத இதி, தத் அஸத் இதி ஆஹ—

௬. கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந் ।
இந்த்ரியார்தாந் விமூடாத்மா மித்யாசார: ஸ உச்யதே ॥

அஜ்ஞானிகள் முக்குணங்களாலும் ஆட்டப்படுகிறார்கள்.

மற்று, 'எக்காரணத்தால் ஒருவன் ஞானமில்லாத கேவலகர்மத்துறவினாலே மாத்திரம் கர்மமற்றநிலையாகிய ஸித்தியைப் பெறுவதில்லை' என்பதற்குக் காரணம் (கூற)வேண்டியிடத்து, (அதனைக்) கூறுகிறார் :

௫. ஏனெனில், ப்ரகிருதியினின்றுந் தோன்றும் குணங்களால் ஒவ்வொன்றும் ஸ்வாதீனமற்றுக் கர்மத்திற் செலுத்தப்படுகின்றதாதலால், ஒன்றுவது எக்காலத்தும் ஒருகணப்பொழுதாயினும் தொழிலைச் செய்யாததாக இருப்பதில்லை.

ஒவ்வொன்றும் - உயிருள்ள ஒவ்வொரு பிராணியும். ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்பன குணங்கள். ("ஒவ்வொன்றும்" என்பதற்கு முன்) 'அஜ்ஞானியான' என்பது வாக்கியத்தில் தொக்கிநிற்கின்றது ; ஏனெனின், "எவன் குணங்களால் அசைக்கப்படுவதில்லையோ" (௧௪ - ௨௩) என (ஞானியைப்பற்றி)க் கூறுவர்.

ஸாங்க்யர்களை வேறாகப்பகுத்தலால், அஜ்ஞானிகளுக்கே கர்மயோகம் ; ஞானிகளுக்கு அன்று. குணங்களால் அசைக்கப்படாத ஞானிகளுக்கோ, தங்களிடத்து அசைவு [யாதொருவிகாரமும்] இல்லாமையால் கர்மயோகம் ஒவ்வாது. அவ்வண்ணமே, "எவன் இதனை" (௨-௨௧) என்றவிடத்து உரைக்கப்பட்டது. (௫)

அஜ்ஞானிகள் கர்மத்தை விடக்கூடாது.

ஆனால், 'ஆத்மாவை அறியாதவன் (தனக்கு) விதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யாதிருப்பது சரியன்று' என்று கூறுகிறார் :

௬. எவன் கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரியவிஷயங்களை மனத்தில் நினைத்துக்கொண்டு மனம்மயங்கி இருக்கின்றானோ, அவன், 'ஆசாரக்கள்ளன்' எனப்படுகிறான்.

कर्मेन्द्रियाणि हस्तादीनि संयम्य संहृत्य यः आस्ते मनसा स्मरन् चिन्तयन् इन्द्रियार्थान् विषयान् विमूढात्मा विमूढान्तःकरणः मिथ्याचारः मृषाचारः पापाचारः स उच्यते ॥ ௬ ॥

௭. यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोगमसक्तः स विशिष्यते ॥

यस्तु पुनः कर्मण्यधिकृतः अज्ञः बुद्धीन्द्रियाणि मनसा नियम्यारभते अर्जुन कर्मेन्द्रियैः वाक्पाण्यादिभिः। किमारभते? इत्याह—कर्मयोगम् असक्तः सन् फलाभिसन्धिवर्जितः स विशिष्यते इतरस्मात् मिथ्याचारात् ॥ ௭ ॥

यत एवम् अतः—

௮. नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥

नियतं नित्यं, यो यस्मिन् कर्मणि अधिकृतः फलाय च अश्रुतं तत् नियतं कर्म, तत् कर्म त्वं कुरु हे अर्जुन यतः कर्म ज्यायः अधिकतरं फलतः हि यस्मात् अकर्मणः अकरणात् अनारम्भात्। कथम्? शरीरयात्रा शरीरस्थितिः अपि च ते तव न प्रसिद्ध्येत् प्रसिद्धिं न गच्छेत् अकर्मणः अकरणात्। अतः दृष्टः कर्माकर्मणोः विशेषो लोके ॥ ௮ ॥

கைமுதலிய கர்மேந்திரியங்களை அடக்கி, இந்திரியவிஷயங்களை மனத்தில் கருதிக்கொண்டு அகக்கரணம் மயங்கிநிற்பவன் 'ஆசாரக்கள்ளன்,' 'பொய்யொழுக்கமுடையான்,' 'கெட்ட நடக்கையுள்ளவன்' எனப்படுகிறான். (௬)

௭. **அர்ஜுன! மற்று எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கிக்கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைப், பற்றற்றவனாய் அநுஷ்டிக்கின்றானோ, அவன் மேலாகிறான்.**

ஆனால், கர்மத்திற்கு உரியவனாகிய எந்த அஜ்ஞானியானவன், மனத்தால் ஞானேந்திரியங்களை அடக்கிக்கொண்டு, பயனை எதிர்பார்த்தல் இல்லாதவனாய், வாய் கை முதலியகர்மேந்திரியங்களால் கர்மயோகத்தை அநுஷ்டிக்கின்றானோ, அவன் மற்றைய ஆசாரக்கள்ளனினும் சிறந்தவனாகிறான். (௭)

இப்படியிருப்பதனால்,

௮. **நீ (உனக்கு) அமைந்த கர்மத்தைச் செய்யக்கடவாய்; ஏனெனின், செய்தல் செய்யாமையினும் மேலானது: மற்றும், (அதனைச்) செய்யாதிருப்பதனால், சரீரத்தைக் கொண்டுசெலுத்தலும் உனக்கு முடியாது.**

எவன் எந்தக்கர்மத்திற்கு உரியவனோ, ஒருபயனைப் பெறும்பொருட்டு (எவனுக்கு எந்தக் கர்மமானது வேதத்திற்) கூறப்படவில்லையோ, (அவனுடைய) அந்த நித்யகர்மமானது -(அவனுக்கு) அவச்யமான கர்மமென்பது. ஏ அர்ஜுன! நீ அதனைச் செய்யவேண்டும். ஏனெனில், செய்தல் செய்யாமையைக்காட்டிலும் பயன்விஷயத்திலே மிக்கஅதிகமானது [செய்தலிலே வரும் பயன், செய்யாமையிலே வரும் பயனைக் காட்டிலும் மிக்க அதிகம்].—எப்படி?—(கர்மத்தைச்) செய்யாமையினால் உனக்குச் சரீரம்நிற்றலும் அமையாது. ஆகவே, (இவ்வாறு) உலகத்திலே, செய்தற்கும் செய்யாமைக்கும் வேறுபாடு கண்டுவைக்கப்பட்டுள்ளது. (௮)

यच्च मन्यसे बन्धार्थत्वात् कर्म न कर्तव्यमिति, तदप्यसत् । कथम्—

௯. **यज्ञार्थात्कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।**
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥

"यज्ञो वै विष्णुः" इति श्रुतेः यज्ञः ईश्वरः, तदर्थं यत् क्रियते तत् यज्ञार्थं कर्म । तस्मात् कर्मणः अन्यत्र अन्येन कर्मणा लोकः अयम् अधिकृतः कर्मकृत् कर्मबन्धनः कर्म बन्धनं यस्य सः अयं लोकः, न तु यज्ञार्थात् । अतः तदर्थं यज्ञार्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः कर्मफलसङ्गवर्जितः सन् समाचर निर्वर्तय ॥ ௯ ॥

इतश्च अधिकृतेन कर्म कर्तव्यम्—

௧௦. **सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।**
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥

सहयज्ञाः यज्ञसहिताः प्रजाः त्रयः वर्णाः ताः सृष्ट्वा उत्पाद्य पुरा सर्गादौ उवाच उक्तवान् प्रजापतिः प्रजानां स्रष्टा अनेन यज्ञेन प्रसविष्यध्वं प्रसवः वृद्धिः उत्पत्तिः तां कुरुध्वम् । एषः यज्ञः वः युष्माकम् अस्तु भवतु इष्टकामधुक् इष्टान् कामान् अभिप्रेतान् फलविशेषान् दोग्धीति इष्टकामधुक् ॥ ௧௦ ॥

இன்னும், 'கர்மமானது கட்டுக்குக் காரணமாதலால் (அதனைச்) செய்யக் கூடாது' என்று நீ நினைப்பது எதுவோ, அதுவும் சரியன்று.—எப்படி ?—

௯. **யஜ்ஞத்திற்கான கர்மத்தைத்தவிர (மற்றைய கர்மத்தினால்தான்) இவ்வுலகம் கர்மக்கட்டை யுடைத்து ; கௌந்தேய ! அதற்கான கர்மத்தைப், பற்றுவிட்டவனாய் நன்கு செய்யக்கடவாய்.**

"யஜ்ஞமே விஷ்ணு" (தை-ஸம்-க-எ-ச) என்னும் சுருதியினால் யஜ்ஞம் (என்பதற்கு)-ஈச்வரன்(என்று பொருள்). எது அவன்பொருட்டுச் செய்யப்படுகின்றதோ, அது யஜ்ஞத்திற்கான கர்மம். (கர்மத்திற்கு) உரியவனாய்க் கர்மத்தைச் செய்கிறவன், அந்தக் கர்மமொழிந்த மற்றைய கர்மத்தினாலே கர்மமாகியகட்டைப் பெறுகிறான்; ஈச்வரனுக்கான கர்மத்தினாலோ (இவ்வாறு கட்டைப்பெறுவது)இல்லை. ஆகவே, கௌந்தேய ! கர்மத்தின்பயனிலே பற்றில்லாதவனாய் ஈச்வரார்ப்பணமாகக் கர்மத்தைச் செய்துவரவேண்டும். (௯)

இக்காரணத்தாலும், (கர்மத்திற்கு) உரியவன் கர்மத்தைச் செய்யவேண்டும் :

௧௦. **ப்ரஜாபதியானவர் முதலில் யஜ்ஞங்களோடுகூடவே ப்ரஜைகளைப் படைத்து "(நீங்கள்) இதனால் [யஜ்ஞத்தால்] அபிவிருத்திசெய்யுங்கள்; இது,உங்களுக்கு வேண்டியவிருப்பங்களைக் கொடுப்பதாக (இருக்கட்டும்" என்று) கூறினர்.**

ப்ரஜைகளை - மூன்று வர்ணத்தாரை. முதலில் - முன்பு சிருஷ்டித்தொடக்கத்தில். ப்ரஜாபதி - ப்ரஜைகளைப் படைப்பவர். வேண்டிய விருப்பங்களை - (பெறக்)கருதிய பல ப்ரயோஜனங்களை. (௧௦)

𑌕𑌥𑌮𑍍?—

௧௧. 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌯𑌤𑌾𑌽𑌨𑍇𑌨 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 ॥

𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌭𑌾𑌵𑌯𑌤 𑌪𑍂𑌜𑌯𑌤 𑌅𑌨𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 । 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌆𑌪𑍍𑌯𑌾𑌯𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌨𑍍 । 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌂 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌅𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 । 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌪𑌰𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌅𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 ॥ ௧௧ ॥

𑌕𑌿𑌂 𑌚—

௧௨. 𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍈𑌰𑍍𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍈𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌏𑌵 𑌸𑌃 ॥

𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌵𑍋 𑌯𑍁𑌷𑍍𑌮𑌭𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑌶𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 𑌯𑌜𑍍𑌞𑍈𑌃 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾𑌃 𑌤𑍋𑌷𑌿𑌤𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑍈𑌃 𑌦𑍇𑌵𑍈𑌃 𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍍 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌅𑌪𑍍𑌰𑌦𑌾𑌯 𑌅𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌆𑌨𑍃𑌣𑍍𑌯𑌮𑍍 𑌅𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌏𑌭𑍍𑌯𑌃 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑌃, 𑌯𑌃 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑍇𑌵 𑌤𑌰𑍍𑌪𑌯𑌤𑌿 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌏𑌵 𑌤𑌸𑍍𑌕𑌰 𑌏𑌵 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌸𑍍𑌵𑌾𑌪𑌹𑌾𑌰𑍀 ॥ ௧௨ ॥

எப்படி ?—

கக. "(நீங்கள்) இதனால் தேவர்களை விருத்தியடையச்செய்யுங்கள் : அந்தத் தேவர்கள் உங்களை விருத்தியடையச்செய்யட்டும் ; (இவ்வாறு) ஒருவரையொருவர் விருத்திசெய்கிறவர்களாய் மேலான நன்மையை அடையுங்கள்."

தேவர்களை - இந்திரன் முதலானோர்களை. (விருத்தியடையச்செய்யுங்கள் - போஷியுங்கள், திருப்தி செய்யுங்கள்.) இதனால் - யஜ்ஞத்தினால். விருத்தியடையச் செய்யட்டும் - மழை முதலியவற்றால் வளம்பெறச் செய்யட்டும். மேலான நன்மையை - படிப்படியாக ப்ரஹ்மஞானத்தைப் பெறுதலை, அல்லது ஸ்வர்க்கத்தை. [ஸம்ஸாரத்தினின்றும் விடுபடவிரும்புவோனுக்கு, படிப்படியாக ப்ரஹ்மஞானத்தைப் பெறுதல் - மேலான நன்மை ; ஸம்ஸாரவிஷயங்களை அநுபவிக்க விரும்புவோனுக்கு, ஸ்வர்க்கமே - மேலான நன்மை. என வேறுபாடு கண்டுகொள்க.—ஆ.] (கக)

அன்றியும்,

கஉ. "தேவர்கள் யாகங்களால் விருத்தியடைவிக்கப் பெற்றவர்களாய் உங்களுக்கு வேண்டிய போகங்களைக் கொடுப்பார்களன்றோ." அவர்கள் கொடுத்தவற்றை இவர்கட்குக் கொடாமல் எவன் அநுபவிக்கின்றானோ, அவன் திருடனே யாவன்.

தேவர்கள் யாகங்களால் விருத்தியடைவிக்கப்பட்டு = திருப்தி அடைவிக்கப் பெற்று, ஸ்திரீகள் பசுக்கள் மக்கள் முதலிய இஷ்டமான போகங்களை உங்களுக்குக் கொடுப்பார்களன்றோ. அந்தத் தேவர்கள் கொடுத்த போகங்களை அந்தத் தேவர்களுக்குக் கொடாமல், அதாவது - கடனைத் தீராமல், எவன் தன்னுடைய சரீரத்தையும் இந்திரியங்களையுமே திருப்திசெய்துவருகின்றானோ, அவன், தேவர் முதலானோர்களுடைய சொத்தைப் பறித்துக்கொண்ட திருடனே. (கஉ)

யே து—

௧௩. யஜ்ஞஶிஷ்டாஶிந: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை: ।
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத் ॥

தேவயஜ்ஞாதீந் நிர்வர்த்ய தச்சிஷ்டம் அஶநம் அம்ருதாக்²யம் அஶிதும் ஶீலம் யேஷாம் தே யஜ்ஞஶிஷ்டாஶிந: ஸந்த: முச்யந்தே ஸர்வகில்பிஷை: ஸர்வபாபை: சுல்ல்யாதிபஞ்சஸூநாக்ருதை: ப்ரமாதக்ருதஹிம்ஸாதிஜநிதைஶ்ச । யே து ஆத்மம்பரய: புஞ்ஜதே தே து அகம் பாபம் ஸ்வயமபி பாபா: யே பசந்தி பாகம் நிர்வர்த்தயந்தி ஆத்மகாரணாத் ஆத்மஹேதோ: ॥ ௧௩ ॥

இதஶ்ச அதிக்ருதேந கர்ம கர்த்தவ்யம், ஜகச்சக்ரப்ரவ்ருத்திஹேதுர் ஹி கர்ம । கதம் இதி? உச்யதே—

௧௪. அந்நாத்³ப⁴வந்தி பூ⁴தாநி பர்ஜந்யாத³ந்நஸம்ப⁴வ: ।
யஜ்ஞாத்³ப⁴வதி பர்ஜந்யோ யஜ்ஞ: கர்மஸமுத்³ப⁴வ: ॥

௧௫. கர்ம ப்³ரஹ்மோத்³ப⁴வம் வித்³தி⁴ ப்³ரஹ்மாக்ஷரஸமுத்³ப⁴வம் ।
தஸ்மாத் ஸர்வக³தம் ப்³ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டி²தம் ॥

ஆனுல், எவர்கள்

௧௩. யாகசேஷத்தைப் புஜிக்கும் ஸாதுக்களோ, (அவர்கள்) ஸகல பாவங்களாலும் விடப்படுகிருர்கள். மற்று, தமக்காக எவர்கள் சமைக்கிருர்களோ, அந்தப் பாவிகள் பாவத்தை உண்கிருர்கள்.

தேவயஜ்ஞம் முதலியவற்றைச் செய்துமுடித்தபின்பு, அவற்றின் சேஷமாய் அமிருதமெனப்படுகின்ற அந்நத்தைப் போஜனஞ்செய்யுந்தன்மையுடைய நல்லோர்கள், பிராணிஹிம்ஸை நேர்ந்திடுகின்ற அடுப்பு முதலிய ஐந்து இடங்களிலும் உண்டாகின்றனவும், (அறியாது நிகழும்) தவறினுல் நேர்ந்த (பிராணி) ஹிம்ஸை முதலியவற்ருல் வருகின்றனவுமான எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிருர்கள். தம்மையே [தமது உடலையும் இந்திரியங்களையும்] வளர்ப்பவராய்த் தமக்காகச் சமையல் செய்துகொள்ளும் மற்றவரோ, தாங்களும் பாவிகளாகிப் பாவத்தை உட்கொள்ளுகிருர்கள். (ஐந்து இடங்களாவன - அடுப்பு, அரிவாள்மணை, அரைக்கும் யந்திரம், தண்ணீர்க்குடம், துடைப்பம் என்பன. இங்கு நேரும் பாவங்கள், ப்ரஹ்மயஜ்ஞம் முதலிய பஞ்ச மகாயஜ்ஞங்களால் தேய்ந்துவிடும். மநு - ௩ - ௬௯, ௭௧.) (௧௩)

ஜகத்தின் சக்கிரத்தைச் சுற்றிவரச் செய்யவேண்டும்.

இக்காரணத்தாலும், (கர்மத்திற்கு) உரியவன் கர்மஞ்செய்ய வேண்டும்; ஏனெனில், கர்மமானது ஜகத்தின் சக்கிரத்தைச் செல்லும்படிசெய்வது.—எப்படி என்பது ?—கூறுவோம் :

௧௪, ௧௫. (உட்கொள்ளும்) உணவினின்று பிராணி(களின் சரீரங்)கள் உண்டாகின்றன : உணவு மழையினின்று உண்டாகின்றது : மழை யாகத்தினின்று உண்டாகின்றது : யாகம் கர்மத்தினின்று உண்டாகின்றது. கர்மத்தை ப்ரஹ்மத்தினின்று உண்டானதாக(வும்), ப்ரஹ்மத்தை அழிவில்லாப்பொருளினின்று உண்டானதாக(வும்) தெரிந்துகொள். ஆதலால், ஸகலத்தையும்பற்றிய ப்ரஹ்மமானது யாகத்திலே நிலைபெற்றதாம்.

௧௬. 𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍀𑌹 𑌯𑌃 ।
𑌅𑌘𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌾𑌮𑍋 𑌮𑍋𑌘𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸 𑌜𑍀𑌵𑌤𑌿 ॥

𑌅𑌨𑍍𑌨𑌾𑌤𑍍 𑌭𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍 𑌲𑍋𑌹𑌿𑌤𑌰𑍇𑌤𑌃𑌪𑌰𑌿𑌣𑌤𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 । 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 𑌅𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌭𑌵𑌃 𑌅𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃 । 𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃,

"𑌅𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌾𑌽𑌽𑌹𑍁𑌤𑌿𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ।
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌵𑍃𑌷𑍍𑌟𑍇𑌰𑌨𑍍𑌨𑌂 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥" 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥ 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸 𑌚 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑌯𑍋𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌃 𑌕𑌰𑍍𑌮, 𑌤𑌤𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥ ௧௪ ॥

𑌤𑌚𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦𑌃 𑌸 𑌉𑌦𑍍𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍁𑌨𑌃 𑌵𑍇𑌦𑌾𑌖𑍍𑌯𑌮𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌨𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌵𑌤𑍍 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌮𑍍 𑌅𑌪𑌿 𑌸𑌤𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌯𑌜𑍍𑌞𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௫ ॥

---

௧௬. பார்த்த! இங்கு எவன் பாவஆயுளையும் இந்திரியவிளையாட்டையும் உடையவனாய் இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள சக்கிரத்தை அநுஸரிப்பதில்லையோ, அவன் வீணாக உயிர்வாழ்கின்றான்.

ரக்தமாகவும், ரேதஸ் ஆகவும் திரிவதான உட்கொண்ட உணவினின்று (ஸகலருக்கும்) பிரத்தியக்ஷமாகப் பிராணிகள் உண்டாகின்றன. (அந்த) உணவு மழையினின்று உண்டாகின்றது. (அந்த)மழை யாகத்தினின்று உண்டாகின்றது. (என்பதை) "அக்நியிலே போகட்ட ஆகுதியானது நேரே சூரியனைச்சேர, சூரியனிடத்தினின்று மழை உண்டாகின்றது. மழையினின்று உணவும், உணவினின்று பிராணிகளும் (உண்டாகின்றன)" (மநு-௩-௭௬) என்னும் ஸ்மிருதியினால் (உணர்க). யஜ்ஞமென்பது அபூர்வம் [= ஒன்று செய்யப்படுகின்ற காலத்திற்கும், பயனைக் கொடுக்கின்ற காலத்திற்கும் நடுவான இடைக்காலத்திலே, தான் ஒருவராலும் காணப்படாது நிற்கின்ற நிலைமை: அதாவது - வெகுகாலத்திற்குமுன் நடந்த காரணமாகிய ஒரு கர்மத்தின் கார்யமாகிய ஒரு பயனை நெடிதுகாலத்திற்குப் பின்னாயினும், வேறு உலகத்திலாயினும் கொடுக்கக்கூடிய ஓர்வகைத்தன்மை]. கர்மமென்பது ரித்விக்குக்களும் யஜமானனுமாகிய இவர்களுடைய தொழில். அந்த யஜ்ஞமோ, அ(ந்தக் கர்மத்)தினின்று உண்டாவது. (௧௪)

அந்தக் கர்மமும் ப்ரஹ்மத்தினின்று = வேதத்தினின்று வெளிப்படுவது. வேதமென்னும் பெயருடைய ப்ரஹ்மமோ, அழிவில்லாத பரமாத்மாவினின்று தோன்றுவது. ப்ரஹ்மம் (என்பதற்கு) - வேதம் என்று பொருள். மநுஷ்யனிடத்தினின்று மூச்சு (வெளிப்படுவது) போல, பரமாத்மாஎன்னும்பெயரையுடைய அழிவிலாப் பொருளினின்றும் வேதம் நேரே உண்டானதாதலின், (அது) ஸகலவிஷயத்தையும் வெளிப்படுத்துவதாதலால் ஸகலத்தையும்பற்றியதாயிருப்பினும், யஜ்ஞவிதிகளைப் பிரதாநமாகவுடைமையின் எப்பொழுதும் யஜ்ஞத்திலே நிலைபெற்றதென்க. (௧௫)

V.B. SUBRAHMANYASARMA TAMIL PANDIT.

एवम् इत्थम् ईश्वरेण वेदयज्ञपूर्वकं जगच्चक्रं प्रवर्तितं न अनुवर्तयति इह लोके यः कर्मणि अधिकृतः सन् अघायुः अघं पापम् आयुः जीवनं यस्य सः अघायुः, पापजीवनः इति यावत्, इन्द्रियारामः इन्द्रियैः आरामः आरमणम् आक्रीडा विषयेषु यस्य सः इन्द्रियारामः मोघं वृथा हे पार्थ स जीवति ॥

तस्मात् अज्ञेन अधिकृतेन कर्तव्यमेव कर्म इति प्रकरणार्थः। प्राक् आत्मज्ञाननिष्ठायोग्यताप्राप्तेः तादर्थ्येन कर्मयोगानुष्ठानम् अधिकृतेन अनात्मज्ञेन कर्तव्यम् इत्येतत् 'न कर्मणामनारम्भात्' इत्यत आरभ्य 'शरीरयात्रापि च ते न प्रसिध्येदकर्मणः' इत्येवमन्तेन प्रतिपाद्य 'यज्ञार्थात्कर्मणोऽन्यत्र' इत्यादिना 'मोघं पार्थ स जीवति' इत्येवमन्तेनापि ग्रन्थेन प्रासङ्गिकम् अधिकृतस्य अनात्मविदः कर्मानुष्ठाने बहुकारणम् उक्तम्। तदकरणे च दोषसंकीर्तनं कृतम् ॥ १६ ॥

एवं स्थिते, किम् एवं प्रवर्तितं चक्रं सर्वेण अनुवर्तनीयम्? आहोस्वित् पूर्वोक्तकर्मयोगानुष्ठानोपायप्राप्याम् अनात्मविदः ज्ञानयोगेन निष्ठाम् आत्मविद्भिः सांख्यैः अनुष्ठेयाम् अप्राप्तेनैव?

இவ்வுலகத்திலே, கர்மத்திற்குஉரியவனுயுள்ள எவன், இவ்வாறு ஈச்வரனுல் வேதங்களையும் யாகங்களையும் முன்னிட்டுச் செலுத்தப்பட்டுள்ள ஜகச்சக்கிரத்தை அநுஸரியாது, பாவஆயுளையும் = பாவவாழ்க்கையையும், இந்திரியங்களினுல் விஷயங்களிலே விளையாடுதலையும் உடையவனுய் இருக்கின்ருனே, அவன் ஏ! பார்த்த! வீணுக உயிர்வாழ்கின்ருன். (ஜகச்சக்கிரம் - ஜகத்தைக் கொண்டுசெலுத்தும் சக்கிரம். கர்மத்தால் யஜ்ஞமும், யஜ்ஞத்தால் மழையும், மழையினுல் உணவும், உணவினுல் பிராணிகளும், மீண்டு மிவ்வாறே பிராணிகளால் கர்மமும், கர்மத்தால் யஜ்ஞமும் உண்டாவன என்பது சக்கிரம்போலச் சுற்றிவருதல் காண்க.)

ஆகவே, (கர்மத்திற்கு)உரிய அஜ்ஞானியானவன் கர்மத்தைச் செய்யவே வேண்டுமென்பது (இந்த) ஸந்தர்ப்பத்தின் பொருள். (கர்மத்திற்கு) உரியவனுய் ஆத்மாவை அறியாதிருப்பவன், ஆத்மஞான நிஷ்டைக்கு ஏற்ற தகுதி பெறுதற்கு முந்தி அது [ஆத்மஞானம்] (தனக்குக்) கைகூடும்படிக்குக் கர்மயோகத்தை அநுஷ்டித்தல்வேண்டும் என்பது "ஒருவன்" (ங - ச) என்ற இதுமுதல் "அன்றியும்" (ங-அ) என இவ்வாறுள்ள (நூல்) வரையிலும் உணர்த்தப்பட்டது. (பின்னும்,) "யஜ்ஞத்திற்கான" (ங-கூ)என்பதுமுதலாக "அவன் வீணுக" (ங - கசு)என இவ்வாறு ஈருகவுள்ள நூலினுலும், (கர்மத்திற்கு) உரியவனுய் ஆத்மாவை அறியாதிருப்பவன் கர்மத்தை அநுஷ்டிக்கும் விஷயத்திலே பல காரணங்கள், இடையே நேர்ந்த ப்ரஸ்தாபத்தால் கூறப்பட்டன. அதனைச் செய்யாமலிருந்தாலும் குற்றம் கூறப்பட்டது. (கசு)

ஆத்மாவை அறிபவனுக்குக் கர்மயோகம் அன்று.

(இது) இங்ஙனம் நிற்க. "இவ்வாறு செலுத்தப்பட்ட சக்கிரத்தை யாவரும் அநுஸரிக்கவேண்டியதா ? அல்லது, ஆத்மாவை அறியாதவன் முற்கூறிய கர்மயோகத்தை அநுஷ்டித்தலாகிய உபாயத்தால் அடையக்கூடியதும், ஆத்மாவை அறியும் ஸாங்க்யர்களால் அநுஷ்டிக்கத்தக்கதுமான ஞானயோக நிஷ்டையைப் பெருதவன்

இத்யேவமர்த்தம் அர்ஜுநஸ்ய ப்ரஶ்நம் ஆஶங்க்ய ஸ்வயமேவ ஶாஸ்த்ரார்த்தஸ்ய விவேகப்ரதிபத்த்யர்த்தம் "ஏதம் வை தமாத்மாநம் விதித்வா நிவ்ருத்தமித்யாஜ்ஞாநா: ஸந்த: ப்ராஹ்மணா: மித்யாஜ்ஞாநவத்பி: அவஶ்யம் கர்தவ்யேப்ய: புத்ரைஷணாதிப்யோ வ்யுத்தாய பிக்ஷாசர்யம் ஶரீரஸ்திதிமாத்ரப்ரயோஜநம் சரந்தி ந தேஷாம் ஆத்மஜ்ஞாநநிஷ்டாவ்யதிரேகேண அந்யத் கார்யம் அஸ்தி" இத்யேவம் ஶ்ருத்யர்த்தம் இஹ கீதாஶாஸ்த்ரே ப்ரதிபிபாதயிஷிதம் ஆவிஷ்குர்வந் ஆஹ பகவாந்—

கஎ. யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத் ஆத்மத்ருப்தஶ்ச மாநவ: ।
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம் ந வித்யதே ॥

யஸ்து ஸாங்க்ய: ஆத்மஜ்ஞாநநிஷ்ட: ஆத்மரதி: ஆத்மநி ஏவ ரதி: ந விஷயேஷு யஸ்ய ஸ ஆத்மரதிரேவ ஸ்யாத் பவேத் ஆத்மத்ருப்தஶ்ச ஆத்மநைவ த்ருப்த: ந அந்நரஸாதிநா ஸ மாநவ: மநுஷ்ய: ஸம்ந்யாஸீ ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட: । ஸந்தோஷோ ஹி பாஹ்யார்த்தலாபே ஸர்வஸ்ய பவதி, தம் அநபேக்ஷ்ய ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட: ஸர்வதோ வீததிருஷ்ண இத்யேதத் । ய: ஈத்ருஶ ஆத்மவித் தஸ்ய கார்யம் கரணீயம் ந வித்யதே நாஸ்தி இத்யர்த்த: ॥ கஎ ॥

மாத்திரமே (அநுஷ்டிக்கவேண்டியதா ?)" என்ற இவ்வாறான விஷயத்தை, (கேட்போர்க்கு இந்) நூற்பொருள் தெளிவாய்த் தெரியும்பொருட்டுப் பகவான் தாமே அர்ஜுனன் வினவாகச் சங்கித்து, "பிராமணர்கள் பிரஸித்தமான இந்த ஆத்மாவை அறிந்து, பொய்யறிவு நீங்கப்பெற்று, பொய்யறிவுள்ளவரால் அவச்யம் பாராட்டப் படுவனவாகிய மக்களாசை முதலியவற்றைத் துறந்து, பின்பு உடல்நிற்றற்குமாத்திரம் வேண்டிய பிச்சையெடுத்தலைச் செய்து திரிகின்றார்கள்; அவர்கட்கு ஆத்மஞானநிஷ்டையைத்தவிர வேறுகார்யம் இல்லை" (பி - ந - ௫ - க) என்ற இவ்வாறான வேதப்பொருளை இந்தக் கீதாசாஸ்திரத்திலே உணர்த்தக்கருதியது என்பது வெளியாதற்பொருட்டுக் கூறுகிறார் :

கஎ. மற்று, எந்த மனிதன் ஆத்மாவினிடத்தே மகிழ்ச்சியுடையவனாய், ஆத்மாவிலேயே த்ருப்திபெற்றவனாய், ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷமுள்ளவனாய் இருக்கின்றானோ, அவனுக்கு(உலகவ்யவகாரமும் வேதவ்யவகாரமுமான)கார்யம் இல்லை.

ஆனால் எந்த ஸாங்க்யன் ஆத்மாவை அறிதலிலே உறுதியாகநின்று ஆத்மாவினிடத்தேயன்றி விஷயங்களிலே மகிழ்ச்சியில்லாதவனாகவும், ஆத்மாவினாலேயேயன்றி உணவுருசி முதலியவற்றால் திருப்திபெறாதவனாகவும் இருக்கின்றானோ, அந்த ஸந்யாஸியான மனிதன் ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷித்திருக்கிறான். (பணம் முதலிய) வெளிப்பொருள்களைப் பெறுதலாலன்றோ யாவர்க்கும் ஸந்தோஷம் உண்டாகின்றது. (இவனோ,) அ(ந்தப் பணம் முதலியவற்றைப் பெறுவ)தை வேண்டாது ஆத்மாவினிடத்திலேயே ஸந்தோஷமடைந்தவன் : எல்லாவற்றிலும் ஆசைநீங்கியவன் என்பதாம். எவன் இத்தகைய ஆத்மஞானியாக இருக்கின்றானோ, அவன் செய்ய வேண்டியது (ஒன்றும்) இல்லை என்க. (கஎ)

किंच—

கஅ. नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥

न चैव तस्य परमात्मरतेः कृतेन कर्मणा अर्थः प्रयोजनमस्ति । अस्तु तर्हि अकृतेन अकरणेन प्रत्यवायाख्योऽनर्थः ? न अकृतेन इह लोके कश्चन कश्चिदपि प्रत्यवायप्राप्तिरूप आत्महानिलक्षणो वा नैवास्ति । न च अस्य सर्वभूतेषु ब्रह्मादिस्थावरान्तेषु भूतेषु कश्चिदर्थव्यपाश्रयः प्रयोजननिमित्तक्रियासाध्यो व्यपाश्रयः व्यपाश्रयणम् । कंचिद्भूतविशेषमाश्रित्य न साध्यः कश्चिदर्थोऽस्ति, येन तदर्था क्रिया अनुष्ठेया स्यात् ॥ १८ ॥

न च त्वं तथा सर्वतःसंप्लुतोदकस्थानीये सम्यग्दर्शने वर्तसे । यतः अतः—

ககூ. तस्मादसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन्कर्म परमाप्नोति पूरुषः ॥

तस्मात् असक्तः सङ्गवर्जितः सततं सर्वदा कार्यं कर्तव्यं नित्यं कर्म समाचर निर्वर्तय । असक्तो हि यस्मात् समाचरन् ईश्वरार्थं कर्म कुर्वन् परं मोक्षम् आप्नोति पूरुषः सत्त्वशुद्धिद्वारेण इत्यर्थः ॥ १९ ॥

மேலும்,

கஅ. இங்கே (ஒன்று) செய்யப்பெற்றதனாலும், செய்யப்பெறாததனாலும் அவனுக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லையேஇல்லை. இன்னும், இவனுக்கு ஸகலபூதங்களினிடத்தும் ஒருபயனுக்காக ஆச்ரயிக்கவேண்டுவது ஒன்றும் இல்லை.

இவ்வாறு ஆத்மாவினிடத்தே மகிழ்வுற்றவனுக்குக் கர்மத்தால் பயன் இல்லையேஇல்லை.—அப்பொழுது, குற்றம் எனப்படுகின்ற அனர்த்தம் (கர்மத்தைச்)செய்யாமையினால் (வருமன்றோ)?—இவ்வுலகத்திலே, குற்றம்வருதலாகவாயினும் ஆத்மாவை இழத்தலாகவாயினுமுள்ள ஒரு அனர்த்தமும், செய்யாமையினால் இல்லையேஇல்லை. இன்னும், இவனுக்கு ப்ரஹ்மாமுதல் (புல்முதலிய) ஸ்தாவரம் ஈறாகவுள்ள பொருள்களினிடத்து ஒரு ப்ரயோஜனத்திற்காக ஒரு கார்யத்தால் ஸாதிக்கப்படுவதும், (தான்) ஆச்ரயிக்கவேண்டியதுமான ஒன்றும் இல்லை ; அ(வன், பயனைப் பெறு)தற்கான ஒரு தொழிலைச் செய்யவேண்டியதாகும்படி, ஏதோஒருசிறப்புபொருளைச் சார்ந்து (தனக்கு) ஸாதித்துக்கொள்ளவேண்டிய பயன் ஒன்றும் இல்லை. (கஅ)

அர்ஜுனன் கர்மயோகத்திற்கு உரியவன்

நீ, எங்கும்பெருகிய (பெரிய) நீர்ப்பெருக்கை நிகர்த்ததான (உ-சசு) இந்த நல்லறிவிலே இருக்கிறாயில்லை. எதனால் இவ்வாறு (இருக்கிறாயோ),

ககூ. அதனால், நீ செய்யவேண்டிய கர்மத்தைப் பற்றில்லாதவனாய் எப்பொழுதும் செய்யக்கடவாய்; ஏனெனில், பற்றற்றவனாய்க் கர்மஞ்செய்கிற புருஷன் மேலானதைப் பெறுகிறான்.

ஆதலால், என்றைக்கும் செய்யவேண்டிய நித்யகர்மத்தை,பற்றில்லாதவனாகச் செய் ; ஏனெனில், பற்றற்றவனாய் ஈச்வரார்ப்பணமாகக் கர்மத்தைச் செய்பவன் சித்தசுத்தியைப் பெறுதல்வழியாக மேலானதை = மோக்ஷத்தை அடைகிறான். (ககூ)

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍—

௨௦. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ।
𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌗𑌨𑍍𑌤𑍁𑌮𑍍 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 𑌜𑌨𑌕𑌾𑌶𑍍𑌵𑌪𑌤𑌿𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑌃 । 𑌯𑌦𑌿 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃, 𑌤𑌤𑌃 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌹𑍈𑌵 𑌅𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍍 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌥 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃, 𑌤𑌦𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌾𑌧𑌨𑌭𑍂𑌤𑍇𑌨 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑍍 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 ॥

𑌅𑌥 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌜𑌨𑌕𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌪𑌿 𑌅𑌜𑌾𑌨𑌦𑍍𑌭𑌿𑌃 𑌏𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑌂; 𑌤𑌾𑌵𑌤𑌾 𑌨𑌾𑌵𑌶𑍍𑌯𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑍇𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌵𑌤𑌾 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌇𑌤𑌿; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌯𑌤𑍍𑌤𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 𑌏𑌵 𑌅𑌪𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌉𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌂 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃, 𑌤𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍 𑌅𑌰𑍍𑌹𑌸𑌿 ॥ ௨௦ ॥

𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌂 𑌕𑌃 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍 𑌅𑌰𑍍𑌹𑌤𑌿? 𑌕𑌥𑌂 𑌚 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

ஞானிகள் ஸாதாரணஜனங்களுக்கு நல்லொழுக்கத்தை நடத்திக்காட்டவேண்டும்.

இன்னும், எதனால்

௨௦. ***ஜநகர்முதலானோர்கள் கர்மத்தினாலேயே ஸித்திபெற்றார்களோ, (அதனாலும்,) நீ உலகத்தை நல்வழியில் நடக்கச்செய்தலை நன்கு ஆலோசித்தும், (கர்மத்தைச்) செய்யத்தகுந்தவனே ஆகிறாய்.***

ஏனெனில், முன்னோர்களான க்ஷத்திரியர்களாகிய ஜநகர், அச்வபதி முதலான ஞானிகள் கர்மத்தினாலேயே முக்திபெற முயன்றார்கள். (அச்வபதியைப்பற்றி சா-௫-௨-௪ பார்க்க.) அவர்கள் நல்லறிவைப் பெற்றவராயின்,—அப்பொழுது ப்ராரப்த கர்மம் இருந்தமையால் கர்மத்தோடுகூடவே கர்மத்தைத் துறவாமலே முக்திபெற முயன்றார்கள் என்பது பொருள். ஜநகர் முதலானோர்கள் நல்லறிவைப்பெறாதவர்களானாலோ,—அப்பொழுது சித்தசுத்திக்கு ஸாதனமான கர்மத்தைக்கொண்டு, முக்தி பெறப் படிப்படியாக முயன்றார்கள் என்று (இச்)சுலோகம் உரையிடத்தக்கது.

இனி, "ஜநகாதியருமான முன்னோர்களும் அஜ்ஞானிகளாயிருக்கும்பொழுது தான் நித்யகர்மத்தைச் செய்தார்கள்; அதனால், 'நல்லறிவு உடையவனாய்ப் புருஷார்த்தங்கைகூடப்பெற்ற வேறொருவன் அவச்யம்(கர்மத்தைச்)செய்யவேண்டியதென்பது' அமையாது" என்று நீ நினைத்தாலும், (க்ஷத்திரிய ஜந்மத்தை இப்பொழுது உனக்குத் தந்துள்ள) ப்ராரப்தகர்மத்திற்கு உட்பட்டிருக்கின்ற நீ உலகம் தீவழியிற் செல்லுதலைத் தடுத்தலாகிய (இப்)பயனைமாத்திரமாவது நன்றாகஆலோசித்து (க் கர்மத்தை)ச் செய்யவேண்டும். (௨௦)

உலகநன்மையை யார் செய்யவேண்டும்?—எப்படி(ச் செய்யவேண்டும்) என்பது?—கூறுவோம்:

௨௧. 𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃 ।
𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

𑌯𑌦𑍍𑌯𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮 𑌆𑌚𑌰𑌤𑌿 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌃 𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌆𑌚𑌰𑌤𑌿 𑌇𑌤𑌰𑌃 𑌜𑌨𑌃 𑌤𑌦𑌨𑍁𑌗𑌤𑌃 । 𑌕𑌿𑌂 𑌚 𑌸𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍌𑌕𑌿𑌕𑌂 𑌵𑍈𑌦𑌿𑌕𑌂 𑌵𑌾 𑌲𑍋𑌕𑌃 𑌤𑌤𑍍 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌤𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௧ ॥

𑌯𑌦𑌿 𑌅𑌤𑍍𑌰 𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌃, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌕𑌿𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌸𑌿 ?—

௨௨. 𑌨 𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂𑌚𑌨 ।
𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌤 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

𑌨 𑌮𑍇 𑌮𑌮 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌅𑌪𑌿 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌕𑌿𑌂𑌚𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 । 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 ? 𑌨 𑌅𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑍍 𑌅𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌣𑍀𑌯𑌂, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌵𑌰𑍍𑌤𑍇 𑌏𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌹𑌂 ॥ ௨௨ ॥

௨௩. 𑌯𑌦𑌿 𑌹𑍍𑌯𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 ।
𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥

𑌯𑌦𑌿 𑌹𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌅𑌹𑌂 𑌨 𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃 𑌅𑌨𑌲𑌸𑌃 𑌸𑌨𑍍 𑌮𑌮 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌸𑌤𑌃 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑍍 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 ॥ ௨௩ ॥

---

௨௧. மேலானவன் எதெதைச் செய்கின்றானோ, அதனையே மற்றை ஜனங்கள் (செய்கிறார்கள்) : அவன் எதனை ப்ரமாணமாகக் கொள்கின்றானோ, அதனை உலகம் அநுஸரிக்கின்றது.

முதன்மையானவனைச் சிறந்தவன் எந்தெந்தக் கர்மத்தை அநுஷ்டிக்கின்றானோ, அந்தந்தக் கர்மத்தையே அவனைப் பின்தொடர்ந்த மற்றை ஜனங்கள் அநுஷ்டிக்கிறார்கள். அன்றியும், (மனிதரிற்)சிறந்தவனான அவன் லௌகிகவிஷயத்திலாயினும் வைதிகவிஷயத்திலாயினும் எதனை ப்ரமாணமாகக்கொள்கிறானோ, அதனை உலகம் பின்பற்றுகின்றது: அதனையே ப்ரமாணமாகக்கொள்கின்றது என்றபடி. (௨௧)

உலகநன்மையைச் செய்யவேண்டியதான இதிலும உனக்கு ஸம்சய மிருந்தால், நீ ஏன் என்னைப் பார்க்கவில்லை ?—

௨௨. பார்த்த! மூன்று உலகங்களிலும் எனக்குச் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை. (இனி நான்) அடையவேண்டியதாய் (இப்பொழுது) அடையாதிருப்பது (ஒன்றும்) இல்லை. ஆயினும், கர்மத்தில் இருக்கவே இருக்கின்றேன்.

பார்த்த! மூவுலகங்களிலும் எனக்குச் செய்யவேண்டியது ஒன்றும் இல்லை.—ஏதனால் ?—(நான்) அடையாதது (ஒன்றும்) அடையவேண்டியதாக இல்லை. ஆயினும், நான் கர்மத்தில் இருக்கவே இருக்கிறேன் [கர்மத்தைச் செய்துகொண்டே வருகிறேன்]. (௨௨)

௨௩. ஏனெனில், நான் சோம்புதலில்லாதவனாய் எப்பொழுதாயினும் கர்மத்தில் இராவிட்டால், பார்த்த! மனிதர்கள் எவ்வகையிலும் என்வழியை அநுஸரிப்பார்கள்.

ஶ்ரேஷ்டன் - (பிராணிகட்கெல்லாம்) மேலாக இருக்கின்றவனுடைய. (௨௩)

𑌤𑌥𑌾 𑌚 𑌕𑍋 𑌦𑍋𑌷 𑌇𑌤𑌿? 𑌆𑌹—

௨௪. 𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌦𑌹𑌮𑍍 ।
𑌸𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥

𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌃 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑍇𑌯𑍁𑌃 𑌇𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌲𑍋𑌕𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌤𑍍 𑌅𑌹𑌮𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚—𑌸𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍 । 𑌤𑍇𑌨 𑌕𑌾𑌰𑌣𑍇𑌨 𑌉𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑍍 𑌇𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 । 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌤𑌦𑍁𑌪𑌹𑌤𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌮𑌮 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌅𑌨𑌨𑍁𑌰𑍂𑌪𑌮𑍍 𑌆𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 ॥ ௨௪ ॥

𑌯𑌦𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌅𑌹𑌮𑌿𑌵 𑌤𑍍𑌵𑌂 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌵𑌾, 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑌰𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹 𑌏𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹—

௨௫. 𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 "𑌅𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌫𑌲𑌂 𑌮𑌮 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿" 𑌇𑌤𑌿 । 𑌕𑍇? 𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤, 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌤𑌥𑌾 𑌅𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍 । 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿? 𑌤𑌤𑍍 𑌶𑍃𑌣𑍁—𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌃 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑍁𑌃 𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥ ௨௫ ॥

அவ்வாறு (இருந்தால், வரும்) கெடுதி என்ன என்பது ?—கூறுகிறார் :

௨௪. யான் கர்மத்தைச் செய்யாவிடில், இந்த உலகங்கள் அழிந்துபோகும் : ஜாதிக்கலப்புக்குக் காரணமு மாவேன் : இந்த ப்ராணிகளைக் கெடுத்தவன் ஆவேன.

நான் கர்மத்தைச் செய்யாவிடில், உலகம் நிலைபெறுதற்குக் காரணமான கர்மம் இல்லாமையால், இந்த உலகங்களெல்லாம் கெட்டுவிடும் : அன்றியும், ஜாதிக்கலப்பைச் செய்பவனுமாவேன். அக்காரணத்தால், இந்த ப்ராணிகளைக் கெடுத்தவனுமாவேன். 'ப்ராணிகளை அநுக்கிரகிக்கப்புகுந்த யான் அவைகட்குக் கெடுதிசெய்வேன்' என்பது ஈச்வரனான எனக்குத் தகாததாகும். (௨௪)

ஞானியின் கர்மத்திற்கும், அஜ்ஞானியின் கர்மத்திற்கும் உள்ள வேறுபாடு.

நீயாவது, அல்லது வேறொருவனாவது என்னைப்போல ஆத்மாவை அறிந்தவனாகவும், (தனக்குப்)புருஷார்த்தங்களைகூடிவிட்டதென்னும் புத்தியையுடையவனுமாகவும் இருந்தால், அவனுக்கும் தான்செய்யவேண்டியது (ஒன்றும்) இல்லாமலிருந்தாலும், (அவனும்) பிறரை ஈடேற்றுதலையே செய்யவேண்டும் என்று கூறுகிறார் :

௨௫. பாரத ! எப்படி அஜ்ஞானிகள் கர்மத்தில் பற்றுடையவராய்(க் கர்மத்தைச்) செய்கிறார்களோ, அப்படியே ஞானிகள் (கர்மத்திற்)பற்றில்லாதவராய் உலகத்தைக் காக்கவிரும்பி (கர்மத்தை)ச் செய்யவேண்டும்.

"(நான் செய்கின்ற) இக்கர்மத்தின்பயன் எனக்கு வரும்" என்று கர்மங்களில் பற்றுள்ளவர்கள்[பயனை எதிர்நோக்கியிருப்பவர்கள்]—யார் ?—அஜ்ஞானிகள். (அவர்கள்) எவ்வாறு (கர்மங்களைச்) செய்கிறார்களோ, அவ்வாறே ஆத்மாவை அறிந்தவன் பற்றில்லாதவனாய் (அவற்றைச்) செய்யவேண்டும்.—அ(வன், அஜ்ஞானி செய்கிற)துபோல எதற்காகச் செய்கிறான் ?—அதனைக் கேள் : உலக நன்மையைச் செய்யவிரும்பி. (௨௫)

𑌸 𑌏𑌵𑌂 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍋𑌃 𑌨 𑌮𑌮 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 । 𑌤𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌇𑌦𑌮𑍍 𑌉𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇—

௨௬. 𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍 ॥

𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌭𑍇𑌦𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌃 “𑌮𑌯𑌾 𑌇𑌦𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌫𑌲𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌰𑍂𑌪𑌾𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌭𑍇𑌦𑌨𑌂 𑌚𑌾𑌲𑌨𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌃 𑌤𑌂 𑌨 𑌜𑌨𑌯𑍇𑌤𑍍 𑌨 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑍇𑌤𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌆𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌆𑌸𑌙𑍍𑌗𑌵𑌤𑌾𑌮𑍍 । 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌅𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌅𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍 ॥ ௨௬ ॥

𑌅𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌅𑌜𑍍𑌞𑌃 𑌕𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌸𑌜𑍍𑌜𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌆𑌹—

௨௭. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ॥

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌸𑌾𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌵𑌿𑌕𑌾𑌰𑍈𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌰𑍂𑌪𑍈𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌲𑍌𑌕𑌿𑌕𑌾𑌨𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌯𑌾𑌣𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾-

---

இவ்வாறு உலகநன்மையைச் செய்யக்கருதியவனும், ஆத்மாவை அறிந்திருப்பவனுமான எனக்காவது, வேறொருவனுக்காவது உலகநன்மையைத் தவிர்த்துச்செய்யவேண்டியது (ஒன்றும்) இல்லை. ஆகவே, ஆத்மாவை அறிந்த அவனுக்கு இது, உபதேசிக்கப்படுகின்றது :

௨௬. ஞானியானவன், கர்மத்திற் பற்றுள்ள அஜ்ஞானிகளுக்குப் புத்திக்கலக்கத்தை உண்டாக்கக்கூடாது [அவர்களுடைய புத்தியைக் கலையும்படிசெய்யக்கூடாது] ஸகலகர்மங்களையும் (தானும்)நன்றாகச் செய்துகொண்டு, (அவர்களையும்) செய்விக்க வேண்டும்.

ஞானியானவன் கர்மத்திற்பற்றுடைய அவிவேகிகளுக்குள்ள "நான் இதனைச் செய்யவேண்டும்; இக்கர்மத்தின்பயனை அநுபவிக்கவேண்டும்" என்னும் நிச்சய புத்திக்குச கலக்கத்தை உண்டாக்கக் கூடாது.—மற்று, என்ன செய்யவேண்டும்?— அஜ்ஞானிகளுடைய அதேகர்மத்தைத் தான் ஊக்கத்தோடு நன்றாக அநுஷ்டித்துக் கொண்டு அவர்களையும் அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். (௨௬)

(ஆத்மாவை) அறியாத அஜ்ஞானியானவன், கர்மத்தில் எப்படிப் பற்றுக்கொள்கிறான் என்பது ?—கூறுகிறார் :

௨௭. அகங்காரத்தால் மனம்மயங்கியிருப்பவன், எவ்வகையிலும் ப்ரகிருதியின் குணங்களால் செய்யப்படுகின்ற கர்மங்களை "நான் செய்கிறேன்" எனக் கொள்கிறான்.

ப்ரகிருதி என்பது - ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களுடைய ஸமநிலை. அந்தப்ரகிருதியின் குணங்களாலே=சரீர இந்திரியங்களா(க வேறுபட்டவையா)ன விகாரங்களாலே, லௌகிகமாகவும் வைதிகமாகவுமுள்ள எத்தகைய கர்மங்களும் செய்

ரோ: அஹங்காரவிமூடாத்மா கார்யகாரணஸங்காதாத்மப்ரத்யய: அஹங்கார: தேந விவிதம் மூட: ஆத்மா அந்த:கரணம் யஸ்ய ஸ: அயம் கார்யகாரணமூர்த்தா கார்யகாரணாபிமாநீ அவித்யயா கர்மாணி க்ருதாநி மந்யமாந: தத்தத்கர்மணாம் அஹம் கர்தா இதி மந்யதே ॥ 27 ॥

ய: புந: வித்வாந்—

28. தத்த்வவித்து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ: ।
குணா குணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே ॥

தத்த்வவித் து மஹாபாஹோ । கஸ்ய தத்த்வவித்? குணகர்மவிபாகயோ: குணவிபாகஸ்ய கர்மவிபாகஸ்ய ச தத்த்வவித் இத்யர்த்த: । குணா: கரணாத்மகா: குணேஷு விஷயாத்மகேஷு வர்தந்தே ந ஆத்மா இதி மத்வா ந ஸஜ்ஜதே ஸக்திம் ந கரோதி ॥ 28 ॥

யே புந:—

29. ப்ரக்ருதேர்குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு ।
தாநக்ருத்ஸ்நவிதோ மந்தாந் க்ருத்ஸ்நவிந்ந விசாலயேத் ॥

ப்ரக்ருதே: குணை: ஸம்யக் மூடா: ஸம்மோஹிதா: ஸந்த: ஸஜ்ஜந்தே குணாநாம் கர்மஸு குணகர்மஸு "வயம் கர்ம குர்ம: ஃபலாய" இதி । தாந்

யப்படுகின்றன. 'சரீர இந்திரியங்களின் சேர்க்கையே ஆத்மா' என்னும் எண்ணமாகிய அகங்காரத்தால் பலவகையாக மயங்கியுள்ள அந்தக்கரணமுடையவன், (அதாவது -) சரீர இந்திரியங்களுடைய தன்மையையுடையவனாய் [தன்னை அத்தன்மையனாகவே நினைப்பவனாய்], 'சரீர இந்திரியங்களே நான்' என்று எண்ணுகின்ற இவன், அஜ்ஞானத்தால் ஆத்மாவினிடத்துக் கர்மங்களை(ஏற்றி)க்கொண்டு, அந்தந்தக் கர்மங்களுக்கு "கர்த்தா நான்" எனக் கொள்கிறான். (உஎ)

ஆனால், எவன் ஞானியோ, (அவன் எப்படிக் கொள்கிறான் எனில்)—

உஅ. உயர்தோளா! குணங்களும் (அவற்றின்) தொழில்களுமாகிய (இ)வற்றின் பிரிவுகளினுடைய உண்மையையுணர்ந்தவனோ, 'இந்திரியங்கள் விஷயங்களின்வழியே செல்லுகின்றன' எனக் கொண்டு (கர்மங்களிற்)பற்றுக்கொள்வதில்லை.

உயர்தோளா! உண்மையையுணர்ந்தவனோ,— எவற்றினுடைய உண்மையையுணர்ந்தவன்?—குணங்களுடைய பிரிவும், (அவற்றின்)தொழில்களுடைய பிரிவுமாகிய (இ)வற்றினுடைய உண்மையையுணர்ந்தவன் "இந்திரியங்களாகிய குணங்கள் விஷயங்களாகிய குணங்களிற் செல்லுகின்றன, ஆத்மா அன்று" எனக் கொண்டு, (கர்மங்களில்) பற்றுவைப்பதில்லை. (உஅ)

மற்று, எவர்கள்

உகூ. ப்ரகிருதியின் குணங்களால் முற்றும் மயங்கியவராய், குணங்களுடைய கர்மங்களிலே பற்றுக்கொள்கிறார்களோ, அந்த முற்றும் உணராத அஜ்ஞானிகளை முற்றும்உணர்ந்தவன் கலங்கும்படி செய்யக்கூடாது.

(அஜ்ஞானிகள்) ப்ரகிருதியின் குணங்களால் நன்றாக மயங்கியுள்ளவர்களாய், "நாம் கர்மத்தைச் செய்கிறோம் (அதனுடைய) பயனைப் பெறுதற்காக" எனக் குண

𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌃 𑌅𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌮𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌕𑌰𑌣𑌮𑍇𑌵 𑌚𑌾𑌲𑌨𑌂 𑌤𑌤𑍍 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௯ ॥

𑌕𑌥𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑍇𑌨 𑌅𑌜𑍍𑌞𑍇𑌨 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌣𑌾 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௦. 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾 ।
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 ॥

𑌮𑌯𑌿 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑍇𑌤𑌸𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 "𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌭𑍃𑌤𑍍𑌯𑌵𑌤𑍍 𑌕𑌰𑍋𑌮𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌨𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 । 𑌕𑌿𑌂 𑌚— 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌶𑍀𑌃 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃 𑌮𑌮𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 𑌵𑌿𑌗𑌤𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌃 𑌵𑌿𑌗𑌤𑌶𑍋𑌕𑌃 𑌸𑌨𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௦ ॥

𑌯𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌮𑌮 𑌮𑌤𑌂 "𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌤𑌥𑌾—

௩௧. 𑌯𑍇 𑌮𑍇 𑌮𑌤𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ॥

ங்களுடைய கர்மங்களிலே பற்றுவைக்கிருர்கள். முற்றும்உணர்ந்த ஆத்மஞானியானவன், கர்மத்தின் பயனைமட்டும் பார்ப்பவராய்க் கர்மத்திலே பற்றினையுடைய அந்த மந்தபுத்திகளை, தான் கலங்கும்படி செய்யக்கூடாது: (அவர்களுடைய நிச்சய)புத்தியைப் பேதிக்கும்படிசெய்தலே - கலங்கும்படிசெய்தல்; அதனைச் செய்யக்கூடாது என்பது பொருள். (௨௯)

ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்புகிறவன் கர்மத்தைச் செய்யவேண்டியவிதம்.

ஆனல், கர்மத்திற்கு உரியவனும்,(ஸம்ஸாரத்தினின்றும்)விடுபட விரும்புபவனுமான அஜ்ஞானி எப்படிக் கர்மத்தைச் செய்யவேண்டும் என்பது?—(விடை) கூறப்படுகின்றது:

௩௦. **ஆத்மாவைப்பற்றிய மனத்தோடு ஸகலகர்மங்களையும் என்னிடத்துவைத்து, ஆசையற்றவனுய் மமகாரமில்லாதவனுய்த் துயரம்நீங்கிப் போர்செய்யக்கடவாய்.**

எல்லாவற்றினுடைய ஆத்மாவாகவும் முற்றும் உணர்ந்தவனுகவும் பரம ஈச்வரனுகவுமுள்ள கடவுளாகிய வாஸுதேவனை என்னிடத்து, "நான் செய்பவன்; ஈச்வரனுக்காகத் தொண்டன்போல(க் கர்மத்தைச்)செய்கிறேன்" என்ற இவ்விவேக புத்தியோடு கர்மங்களெல்லாவற்றையும் அர்ப்பித்துப் பின்னும் ஆசையும், '(இது) எனது' என்னும்(பற்றும்)அற்றவனுய் மனங்கலங்கித் துயரமுருது போர்செய்யவேண்டும் என்க. (௩௦)

"(அஜ்ஞானி)கர்மத்தைச் செய்யவேண்டும்" என்று (யான்)நியாயத்தோடு கூறியுள்ள என்னுடைய இக்கொள்கையை அவ்வாறு (அநுஷ்டிப்பவர்கள் படிப்படியாக முக்தி பெறுகிருர்கள்)—

௩௧. **எந்த மனிதர்கள் என்னுடைய இக்கொள்கையை இடக்குப்பேசாமல் நம்பிக்கையொடு எப்பொழுதும் அநுஷ்டிக்கிருர்களோ, அவர்களும் கர்மங்களால் விடப்படுகிருர்கள்.**

ये मे मदीयम् इदं मतं नित्यम् अनुतिष्ठन्ति अनुवर्तन्ते मानवाः मनुष्याः श्रद्धावन्तः श्रद्दधानाः अनसूयन्तः असूयां च मयि परमगुरौ वासुदेवे अकुर्वन्तः मुच्यन्ते तेऽपि एवंभूताः कर्मभिः धर्माधर्माख्यैः ॥ ௩௧ ॥

௩௨. ये त्वेतदभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञानविमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥

ये तु तद्विपरीताः एतत् मे मम मतम् अभ्यसूयन्तः निन्दन्तः न अनुतिष्ठन्ति नानुवर्तन्ते सर्वेषु ज्ञानेषु विविधं मूढाः ते सर्वज्ञानविमूढाः तान् विद्धि जानीहि नष्टान् नाशं गतान् अचेतसः अविवेकिनः ॥ ௩௨ ॥

कस्मात् पुनः कारणात् त्वदीयं मतं नानुतिष्ठन्ति, परधर्मान् अनुतिष्ठन्ति, स्वधर्मं च नानुवर्तन्ते, त्वत्प्रतिकूलाः कथं न बिभ्यति त्वच्छासनातिक्रमदोषात् ?—

௩௩. सदृशं चेष्टते स्वस्याः प्रकृतेर्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥

பரமாசார்யனுகிய வாஸுதேவனை என்னைப்பற்றி,(மடமையினுலாவது,"என்னையே தஞ்சமாகக்கொள் என்று பகவான் தற்புகழ்ச்சி செய்கின்ருர்" என இது போன்றவற்றைக் காரணமாகக்கொண்டாவது)இடக்குப் பேசாமல், நம்பிக்கையோடு என்னுடைய இக்கொள்கையை அநுஸரிக்கின்ற இத்தகையோரும், தருமஅதர்மங்கள்என்னும் பெயரையுடைய கர்மங்களால் விடப்படுகிருர்கள். [அஸூயை - குணமாயுள்ள தனுடைய நலத்தைப் பொருது, எவ்வகையினுலாவது அதனிடத்தே குற்றத்தை ஏற்றுதல் : இடக்குப் பேசுதல்.] (௩௧)

௩௨. ஆனுல், இடக்குப்பேசுகின்ற எவர்கள் என்னுடைய இக்கொள்கையை அநுஷ்டிப்ப தில்லையோ, அவர்களை, அவிவேகிகளாகவும் (ஸகுணநிர்குணங்களைப்பற்றிய) அறிவிலெல்லாம் பலவாருக மயங்கியவர்களாகவும் அழிந்துபோனவர்களாகவும் தெரிந்துகொள்.

எவர்கள் - (முந்தின சுலோகத்திற் கூறிய) அவர்கட்கு விபரீதமானவர்கள். ()

ஒருவனுடைய நடக்கையானது அவன் ஸ்வபாவத்திற்கு வசமாயிருத்தல்.

(அவர்கள்) எக்காரணத்தால் உமது கொள்கையை அநுஷ்டியாது, பிறருடைய தருமங்களை அநுஷ்டிக்கிருர்கள்? ஸ்வ[தமது] தருமத்தையும் அநுஸரிப்பதில்லை? உமக்கு மாருக நடப்பவர்கள் உங்களுடைய கட்டளையை மீறுதலாகிய குற்றத்திற்கு ஏன் அஞ்சுவதில்லை?—

௩௩. ஞானமுள்ளவனுங்கூடத் தன்னுடைய ஸ்வபாவத்திற்குஏற்ப நடக்கிருன் : பிராணிகள்(எல்லாம் தம்தம்)ஸ்வபாவத்தை அநுஸரிக்கின்றன. தடுப்பது என்ன செய்யும்? [அந்த ஸ்வபாவத்தைத் தடுக்க ஒருவராலும் முடியாது.]

सदृशम् अनुरूपमेव चेष्टते चेष्टां करोति । कस्याः ?
स्वस्याः स्वकीयायाः प्रकृतेः । प्रकृतिर्नाम पूर्वकृतधर्माधर्मादि-
संस्कारः वर्तमानजन्मादौ अभिव्यक्तः, सा प्रकृतिः । तस्याः सदृशमेव
सर्वः जन्तुः ज्ञानवानपि चेष्टते, किं पुनः मूर्खः । तस्मात् प्रकृ-
तिं यान्ति अनुगच्छन्ति भूतानि प्राणिनः । निग्रहः निषेधरूपः किं
करिष्यति मम वा अन्यस्य वा ॥ ३३ ॥

यदि सर्वो जन्तुः आत्मनः प्रकृतिसदृशमेव चेष्टते न च
प्रकृतिशून्यः कश्चित् अस्ति—ततः पुरुषकारस्य विषयानुपपत्तेः
शास्त्रानर्थक्यप्राप्तौ इदम् उच्यते—

३४. इन्द्रियस्येन्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वशमागच्छेत्तौ ह्यस्य परिपन्थिनौ ॥

इन्द्रियस्येन्द्रियस्य अर्थे सर्वेन्द्रियाणामर्थे शब्दादिविष-
ये इष्टे रागः अनिष्टे द्वेषः इत्येवं प्रतीन्द्रियार्थं रागद्वेषौ
अवश्यंभाविनौ । तत्र अयं पुरुषकारस्य शास्त्रार्थस्य च विषय उच्य-

---

ஏற்ப செய்கையைச் செய்கிறான்,—எதற்கு?—தன்னுடைய ஸ்வபாவத்திற்கு. (யார்?—ஞானவானுங்கூட.) ஸ்வபாவமென்பது - இப்பொழுதுள்ள பிறப்பின் தொடக்கத்திலே வெளிப்பட்டதாய், முந்தின பிறப்புக்களிலே) செய்யப்பட்ட தருமஅதர்மங்கள் முதலியவற்றின் வாஸனை. அது ப்ரகிருதி(எனவும் படும்). அதற்குஏற்பவே ஒவ்வொரு பிராணியும்—ஞானமுள்ளவனுங்கூட—நடக்கிறான். மூடனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, பிராணிகள் (தம்தம்)ப்ரகிருதியைப் பின்பற்றுகின்றன. நானாவது, வேறொருவனாவது (அதனைத்)தடுத்துஒடுக்குதல் என்ன செய்யும்? [அறிவுள்ளவனுங்கூட வாஸனைக்கு வசப்பட்டு, பாவங்களான தீவினைகளை எண்ணாது செய்துநிற்கிறான் என்க.] (௩௩)

மனிதனுடைய சொந்த முயற்சிக்கு இடம்உண்டு.

ஸகலப்பிராணிகளும் தம்(தம்)ப்ரகிருதிக்கு ஏற்பவே நடப்பனவாகவும், ஒன்றும் ப்ரகிருதியற்றதாக இல்லையாகவும் இருந்தால்,—அப்பொழுது புருஷனுடைய முயற்சிக்கு இடமில்லாமையால், சாஸ்திரம் வீண் என்று (அதனைத் தூஷணமாகச் சொல்லவேண்டி)வருமிடத்து, (பகவான்) இதனை அருளிச்செய்கிறார்:

௩௪. **விருப்புவெறுப்புக்கள் ஒவ்வொரு இந்திரியத்தினுடைய விஷயத்திலேயும் அமைந்துள்ளன: (ஒருவனும்) அவற்றின் [விருப்புவெறுப்புகளின்] வசத்தை அடையக்கூடாது; ஏனெனில், அவை இவனுக்கு விரோதிகள்.**

இந்திரியங்கட்கெல்லாம் விஷயங்களாகிய ஓசைமுதலியவற்றுள், (ஒருவனுக்கு) வேண்டியதிலே விருப்பும் வேண்டாததிலே வெறுப்பும் என இவ்வாறாக இந்திரியவிஷயந்தோறும் விருப்புவெறுப்புக்கள் அவச்யம் உண்டாகின்றன. இனி, முயற்சிக்கும் சாஸ்திரவிஷயத்திற்கும் இது இடமாகச்சொல்லப்படுகின்றது:—சாஸ்

தே | ஶாஸ்த்ரார்தே ப்ரவ்ருத்த: பூர்வமேவ ராகத்வேஷயோ: வஶம் நாகச்சேத் | யா ஹி புருஷஸ்ய ப்ரக்ருதி: ஸா ராகத்வேஷபுர:ஸரைவ ஸ்வகார்யே புருஷம் ப்ரவர்தயதி ; ததா ஸ்வதர்மபரித்யாக: பரதர்மாநுஷ்டாநம் ச பவதி | யதா புந: ராகத்வேஷௌ தத்ப்ரதிபக்ஷேண நியமயதி ததா ஶாஸ்த்ரத்ருஷ்டிரேவ புருஷோ பவதி, ந ப்ரக்ருதிவஶ: | தஸ்மாத் தயோ: ராகத்வேஷயோ: வஶம் நாகச்சேத், யத: தௌ ஹி அஸ்ய புருஷஸ்ய பரிபந்திநௌ ஶ்ரேயோமார்கஸ்ய விக்நகர்தாரௌ தஸ்கரௌ இவ பதி || ௩௪ ||

தத்ர ராகத்வேஷப்ரயுக்த: மந்யதே ஶாஸ்த்ரார்தமபி அந்யதா "பரதர்மோ(அ)பி தர்மத்வாத் அநுஷ்டேய ஏவ" இதி ; தத் அஸத்—

௩௫. ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ||

ஶ்ரேயாந் ப்ரஶஸ்யதர: ஸ்வோ தர்ம: ஸ்வதர்ம: விகுண: அபி விகுணோ(அ)பி அநுஷ்டீயமாந: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் ஸாத்குண்யேந ஸம்பாதிதாதபி | ஸ்வதர்மே ஸ்திதஸ்ய நிதநம் மரணம் அபி ஶ்ரேய: பரதர்மே ஸ்திதஸ்ய ஜீவிதாத் | கஸ்மாத்? பரதர்ம: பயாவஹ: நரகாதிலக்ஷணம் பயம் ஆவஹதி இதி || ௩௫ ||

திரவிஷயத்தை மேற்கொண்டவன் முதலிலிருந்தே விருப்புவெறுப்புக்களுக்கு உட்படக்கூடாது. ஏனெனில், எது புருஷனுடைய ப்ரகிருதியோ, அது விருப்புவெறுப்புக்களை முன்னிட்டே தன்காரியத்தில் (அப்)புருஷனைச் செலுத்துகின்றது; அப்பொழுது தன் தருமத்தைக் கைவிடுதலும் பிறர்தருமத்தைக் கைக்கொள்ளலும் உண்டாகின்றன; ஆனால், எப்பொழுது (ஒருவன்) விருப்புவெறுப்புக்களை அவற்றின் விரோதி (யான விவேகபுத்தி)யினால் தடுத்தடக்குகின்றானோ, அப்பொழுது (அப்)புருஷன் சாஸ்திரத்தில் கருத்துள்ளவனாகவே ஆகிறானேயன்றிப் பிரகிருதிக்கு வசமாவதில்லை. வழியில் திருடர்கள்போல, அவை [விருப்புவெறுப்புக்கள்] இப்புருஷனுக்கு நல்வழிக்கு இடையூறு செய்வனவாதலால், அவ்விருப்புவெறுப்புக்கட்கு வசமாகக்கூடாது. (சாஸ்திரீயமான விவேகபுத்தியினால், நல்லனவற்றை எண்ணிச்செய்தலும், தீயனவற்றை எண்ணித்தவிர்தலும் கூடும் என்பது, தேர்ந்த கருத்து.) (௩௪)

இனி, விருப்பவெறுப்புக்களால் தூண்டப்பட்டவன், "பிறருடைய தருமமும் தருமமாதலால் செய்யத்தக்கதுதான்" எனச் சாஸ்திரவிஷயத்தை வேறுவிதமாக[மாறாக]க் கொள்கிறான்; அது சரியன்று:

௩௫. நன்கு அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தருமத்தைக்காட்டிலும் குணமில்லாத[நன்கு அநுஷ்டிக்கப்படாத]தன் தருமம் மேலானது ; தன் தருமத்திலே சாதல் நல்லது ; பிறருடைய தருமம் அபாயத்தை விளைப்பது.

செவ்வையாக அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தர்மத்தைக்காட்டிலும் சொந்த தருமமானது குறைவாக அநுஷ்டிக்கப்பட்டாலும் மேலானது. பிறருடைய தருமத்திலிருந்து வாழ்வதைக்காட்டிலும் சொந்த தருமத்திலிருந்து சாதலும் நல்லதாம்.—எதனால்?—பிறருடைய தருமமானது நரகம்முதலான அபாயத்தை விளைக்கின்றது என்பதனால் என்க. (௩௫)

யத்யபி அநர்தமூலம் 'த்யாயதோ விஷயாந்' 'ராகத்வேஷௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ' இதி ச உக்தம்; விக்ஷிப்தம் அநவதாரிதம் ச யத் உக்தம் தத் ஸங்க்ஷிப்தம் நிஶ்சிதம் ச இதமேவ இதி ஜ்ஞாதும் இச்சந் அர்ஜுந உவாச, ஜ்ஞாதே ஹி தஸ்மிந் தது(ச்)சேதாய யத்நம் குர்யாம் இதி—

அர்ஜுந உவாச ||

௩௬. அத கேந ப்ரயுக்தோऽயம் பாபம் சரதி பூருஷ: |
அநிச்சந்நபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித: ||

அத கேந ஹேதுபூதேந ப்ரயுக்த: ஸந் ராஜ்ஞா இவ ப்ருத்ய: அயம் பாபம் கர்ம சரதி ஆசரதி பூருஷ: புருஷ: ஸ்வயம் அநிச்சந் அபி ஹே வார்ஷ்ணேய வ்ருஷ்ணிகுலப்ரஸூத பலாத் இவ நியோஜித: ராஜ்ஞா இவ இதி உக்தோ த்ருஷ்டாந்த: || ௩௬ ||

ஶ்ருணு தம் வைரிணம் ஸர்வாநர்தகரம் யம் த்வம் ப்ருச்சஸி இதி பகவாந் உவாச—

"ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: |
வைராக்யஸ்யாத மோக்ஷஸ்ய ஷண்ணாம் பக இதீரணா ||"

ஐஶ்வர்யாதிஷட்கம் யஸ்மிந் வாஸுதேவே நித்யம் அப்ரதிபத்தேந ஸாமக்ர்யேண ச வர்ததே—

மனிதனுக்கு ஆசை சத்துரு.

"விஷயங்களை" (௨ - ௬௨)என்ற(சுலோகத்)திலும், "விருப்புவெறுப்புக்கள்" (௩ - ௩௪)என்ற (சுலோகத்)திலும் கெடுதிக்கு மூலம் கூறப்பட்டது. ஆயினும், பலஇடங்களில் சிதறிக்கிடப்பதும், நன்றாகத் தெரியாமலிருப்பதுமான (கீழ்க்)கூறிய(விஷயத்)தை இதுதான் என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் அறியக்கருதி, "அதனை [கெடுதியின் மூலத்தை] அறிந்தாலன்றோ, அதனை அறுத்தற்கு முயற்சிசெய்வேன்" என்று அர்ஜுனன் கூறலானான் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௩௬. வார்ஷ்ணேய! இனி, இப்புருஷன் இஷ்டமில்லாமலிருந்தாலும், வலிய ஏவப்பட்டவன்போல, எதனால் தூண்டப்பட்டுப் பாவத்தைச் செய்கிறான்?

தூண்டப்பட்டு - அரசனால் ஏவப்பட்ட வேலைக்காரன்போல. வார்ஷ்ணேயன் - வ்ருஷ்ணிகுலத்திற் பிறந்தவன். அரசனால் தூண்டப்பட்டவன்போல என்னும் திருஷ்டாந்தம் (இஷ்டமில்லாமலே தொழிலைச்செய்தற்குக்) கூறப்பட்டது. (௩௬)

"நீ எதனை(ப்பற்றி என்னை)க் கேட்கின்றனையோ, அதனை(அதாவது,) ஸகல அநர்த்தங்களையும் செய்கின்ற (அச்)சத்துருவை(க் கூறுகிறேன்); கேள் :" என்று பகவான் கூறலானார் :

ஐச்வர்யம்முதலிய ஆறும் எந்த வாஸுதேவனிடத்து எப்பொழுதும் தடையில்லாது முழுதும் இருக்கின்றனவோ, எவனுக்கு (ஜகத்தின்)உற்பத்தி முதலானவற்றைப்பற்றிய விசேஷஅறிவும் உள்ளதோ, அந்த வாஸுதேவனுக்குப் பகவான் என்று

"𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌗𑌤𑌿𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ।
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌸 𑌵𑌾𑌚𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥"

𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌵𑌾𑌚𑍍𑌯𑌃 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌇𑌤𑌿—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௩௭. 𑌕𑌾𑌮 𑌏𑌷 𑌕𑍍𑌰𑍋𑌧 𑌏𑌷𑌃 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌮𑌹𑌾𑌶𑌨𑍋 𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌨𑌮𑌿𑌹 𑌵𑍈𑌰𑌿𑌣𑌮𑍍 ॥

𑌕𑌾𑌮 𑌏𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌯𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌸 𑌏𑌷 𑌕𑌾𑌮𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌤𑌃 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌰𑍋𑌧𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑌰𑌿𑌣𑌮𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌪𑌿 𑌏𑌷 𑌏𑌵 । 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 𑌰𑌜𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍 𑌗𑍁𑌣𑌸𑍍𑌤𑍁 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 । 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃; 𑌕𑌾𑌮𑌃 𑌹𑌿 𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌃 𑌰𑌜𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌯𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿; "𑌤𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌰𑌿𑌤𑌃" 𑌇𑌤𑌿 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌰𑌜𑌃𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌸𑍇𑌵𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌲𑌾𑌪𑌃 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 । 𑌮𑌹𑌾𑌶𑌨𑌃 𑌮𑌹𑌦𑌶𑌨𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌮𑌹𑌾𑌶𑌨𑌃; 𑌅𑌤 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 । 𑌕𑌾𑌮𑍇𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌃 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌨𑌂 𑌕𑌾𑌮𑌮𑌿𑌹 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌵𑍈𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ ௩௭ ॥

பெயர். (அவ்வாறே,) "நிறைந்த ஐச்வர்யமும் [ஆளுந்தன்மையும்], வீர்யமும், புகழும், திருவும்[செல்வம், அழகு முதலாயினவும்], வைராக்கியமும், மோக்ஷமுமாகிய ஆறுக்கு 'பகம்' என்று பெயர்" (வி-பு-௬-௭௪), "பூதங்களுடைய உற்பத்தியையும் அழிவையும், வருதலையும், போதலையும், ஞானத்தையும், அஜ்ஞானத்தையும் அறிகிறவர் 'பகவான்' என்று சொல்லுதற்கு உரியவர்" (வி-பு-௬-௭௮)·(என வருவனவற்றைக் காண்க).

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௩௭. **இது காமம் : இது(வே) கோபம் : (இதுவே) ரஜோகுணத்தினின்று உண்டாவது : பெருந்தீனியுடையது : மிகப்பொல்லாதது : நீ இங்கே இதனைச் சத்துருவாகத் தெரிந்துகொள்.**

எது காரணமாகப் பிராணிகட்கு ஸகல அனர்த்தங்களும் வருகின்றனவோ ? (அது,) உலகமனைத்திற்கும் சத்துருவான இக்காமமே(தான்). அத்தகைய இக்காமம், (எதோ)ஒருகாரணத்தால் தடுக்கப்பட்டுக் கோபமாக மாறுகின்றது. ஆதலால், கோபமும் இதுவே. காமம்,ரஜஸ்என்னும் குணத்தினின்றுஉண்டாவது;அல்லது,(அது) ரஜோகுணம் உண்டாதற்குக் காரணம்· ஏனெனில்,காமம் உண்டானவுடன் ரஜோகுணத்தைத் தலையெடுக்கச்செய்து ஒருவனை (ஒருகார்யத்திற்) செலுத்துகின்றது. ரஜோகுணத்தின் தொழிலான அடிமைத்தனம் முதலியவற்றை மேற்கொண்டு வருந்துகிறவர்கள் "ஆசையாலன்றோ நான் (அடிமைத்தொழிலைச்) செய்யும்படி பண்ணப் படுகிறேன்" என்று புலம்புதலைக் கேட்கிறோம். (காமம்) பெருந்தீனி யுடையது ; ஆதலால், மிகப்பொல்லாதது. பிராணியானது காமத்தினால் தூண்டப்பட்டன்றோ பாவத்தைச் செய்கின்றது. ஆகவே, இந்த ஸம்ஸாரத்திலே இக்காமத்தைச் சத்துருவாகத் தெரிந்துகொள். (௩௭)

𑌕𑌥𑌂 𑌵𑍈𑌰𑍀? 𑌇𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌯𑌯𑌤𑌿—

௩௮. 𑌧𑍂𑌮𑍇𑌨𑌾𑌵𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 𑌯𑌥𑌾𑌽𑌽𑌦𑌰𑍍𑌶𑍋 𑌮𑌲𑍇𑌨 𑌚 ।
𑌯𑌥𑍋𑌲𑍍𑌬𑍇𑌨𑌾𑌵𑍃𑌤𑍋 𑌗𑌰𑍍𑌭𑌃 𑌤𑌥𑌾 𑌤𑍇𑌨𑍇𑌦𑌮𑌾𑌵𑍃𑌤𑌮𑍍 ॥

𑌧𑍂𑌮𑍇𑌨 𑌸𑌹𑌜𑍇𑌨 𑌆𑌵𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌵𑌹𑍍𑌨𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌅𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌤𑍍𑌮𑌕𑍇𑌨, 𑌯𑌥𑌾 𑌵𑌾 𑌆𑌦𑌰𑍍𑌶𑍋 𑌮𑌲𑍇𑌨 𑌚, 𑌯𑌥𑌾 𑌉𑌲𑍍𑌬𑍇𑌨 𑌚 𑌜𑌰𑌾𑌯𑍁𑌣𑌾 𑌗𑌰𑍍𑌭𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑍇𑌨 𑌆𑌵𑍃𑌤𑌃 𑌆𑌚𑍍𑌛𑌾𑌦𑌿𑌤𑌃 𑌗𑌰𑍍𑌭𑌃 𑌤𑌥𑌾 𑌤𑍇𑌨 𑌇𑌦𑌂 𑌆𑌵𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௮ ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍 𑌇𑌦𑌂 𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍 𑌕𑌾𑌮𑍇𑌨 𑌆𑌵𑍃𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௯. 𑌆𑌵𑍃𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌰𑌿𑌣𑌾 ।
𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑍇𑌣 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌦𑍁𑌷𑍍𑌪𑍂𑌰𑍇𑌣𑌾𑌨𑌲𑍇𑌨 𑌚 ॥

𑌆𑌵𑍃𑌤𑌮𑍍 𑌏𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌰𑌿𑌣𑌾, 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌹𑌿 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 “𑌅𑌨𑍇𑌨 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑍇 𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌃” 𑌇𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌦𑍁𑌃𑌖𑍀 𑌚 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 । 𑌤𑍇𑌨 𑌅𑌸𑍌 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌰𑍀, 𑌨 𑌤𑍁 𑌮𑍂𑌰𑍍𑌖𑌸𑍍𑌯 । 𑌸 𑌹𑌿 𑌕𑌾𑌮𑌂 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌕𑌾𑌲𑍇 𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌵 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌦𑍁𑌃𑌖𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 “𑌤𑍃𑌷𑍍𑌣𑌯𑌾 𑌅𑌹𑌂 𑌦𑍁𑌃𑌖𑌿𑌤𑍍𑌵𑌮𑌾𑌪𑌾𑌦𑌿𑌤𑌃” 𑌇𑌤𑌿, 𑌨 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 । 𑌅𑌤𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨 𑌏𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌰𑍀 । 𑌕𑌿𑌂𑌰𑍂𑌪𑍇𑌣? 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑍇𑌣 𑌕𑌾𑌮𑌃 𑌇𑌚𑍍𑌛𑍈𑌵

ஆசை, அறிவைச் சூழ்ந்துகொள்கின்றது.

'(அது) எவ்வாறு சத்துரு?' என்பதைத் திருஷ்டாந்தங்களால் மெய்ப்பிக்கிறார்:

௩௮. நெருப்புப் புகையாலும், கண்ணாடி அழுக்காலும் எவ்வாறு மூடப்படுகின்றனவோ, கருவானது பையினால் எவ்வாறு மூடப்படுகின்றதோ, அவ்வாறு அதனால் இது மூடப்படுகின்றது.

ஒளியாகிய தீயானது இருளாகிய உடன்பிறந்த புகையினால் சூழப்படுவதுபோலவும், கண்ணாடி அழுக்கினால் மறைக்கப்படுவதுபோலவும், கருவானது கர்ப்பப் பையினால், மூடப்படுவதுபோலவும் அதனால் இது மூடப்படுகின்றது. (௩௮)

ஆனால், '**இது**' என்ற சொல்லால் சொல்லப்படுவதும் காமத்தால் மூடப்பட்டிருப்பதுமாக எது உள்ளதோ, அது யாதென்பது?—(விடை) கூறப்படுகின்றது:

௩௯. ஞானிக்கு எப்பொழுதும்சத்துருவும், (விஷயநுகர்ச்சியால்)நிரம்பாததும், (அதிலே) திருப்திவாராததுமான காமமாகிய இதனால் அறிவு மூடிண்டுகிடக்கின்றது.

ஞானியானவன் "நான் இதனால் கெடுதியிலே தூண்டப்பட்டிருக்கின்றேன்" என்று (அக்கெடுதி வருதற்கு)முந்தியே அறிகிறான்; ஆதலால், எப்பொழுதுமே வருத்தப்படுகிறவனாகிறான். ஆகவே, இது எப்பொழுதும் சத்துருவென்பது ஞானிக்கேயன்றி மூடனுக்கு அன்று. ஏனெனில், அவன் [மூடன்] (ஒரு விஷயத்தை) ஆசைப்பட்டு அநுபவிக்கும் ஸமயத்திலே காமத்தைத் தோழன்போலப் பார்ப்பவனாய் அதன் தொழிலாகிய துன்பம் வந்தவிடத்து "நான் ஆசையினால் வருத்தப்படுகின்றவனாகச் செய்யப்பட்டேன்" என்று (பின்னால்) அறிகிறானேயன்றி முன்னமே (அறிகிறான்) இல்லை. ஆகவே, (இது) ஞானிக்கே எப்பொழுதும் சத்துரு என்க.— எவ்

𑌰𑍂𑌪𑌮𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌃 𑌤𑍇𑌨 𑌦𑍁𑌷𑍍𑌪𑍂𑌰𑍇𑌣 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌪𑍂𑌰𑌣𑌮𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌪𑍂𑌰𑌃 𑌤𑍇𑌨 𑌅𑌨𑌲𑍇𑌨 𑌨 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌲𑌂 𑌪𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌨𑌲𑌃 𑌤𑍇𑌨 𑌚 ॥ ௩௯ ॥

𑌕𑌿𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌆𑌵𑌰𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑍈𑌰𑍀 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯? 𑌇𑌤𑌿 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑍍 𑌆𑌹, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍋𑌃 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌸𑍁𑌖𑍇𑌨 𑌶𑌤𑍍𑌰𑍋𑌃 𑌨𑌿𑌬𑌰𑍍𑌹𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿—

௪௰. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌚 𑌅𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑍍 𑌆𑌶𑍍𑌰𑌯𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑍈𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑍈𑌃 𑌵𑌿𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌏𑌷𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌆𑌵𑍃𑌤𑍍𑌯 𑌆𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 𑌶𑌰𑍀𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ ௪௰ ॥

𑌯𑌤𑌃 𑌏𑌵𑌮𑍍—

௪௧. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ।
𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑍍𑌯𑍇𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌆𑌦𑍌 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌾𑌪𑌾𑌚𑌾𑌰𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜 𑌏𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨-

---

வடிவினால்?— (விஷய நுகர்ச்சியால் பூர்த்தியாக)நிரப்பமுடியாததும், (விஷய நுகர்ச்சி இவ்வளவு)போது மென்பது இல்லாததுமான விருப்பம் என்னும் வடிவுள்ள காமமென்ற ரூபத்தால். (௩௯)

ஆசையின் இருப்பிடம்.

மற்று, அறிவை மறைப்பதனால் ஸகலஜனத்திற்கும் சத்துருவான காமத்தின் இருப்பிடம் யாது? என்று கவனிக்குமிடத்துக் கூறுகிறார்: ஏனெனில், சத்துருவின் இருப்பிடத்தை அறிந்தால், சத்துருவை எளிதாகக் கொல்லமுடியும் என்று—

௪௰. **இந்திரியங்களும், மனமும், புத்தியும் இதனுடைய இருப்பிடம் எனப்படுகின்றன. இது இவற்றின்வழியாக அறிவை மறைத்துத், தேகியைப் பலவகையாக மயக்குகின்றது.**

இதனுடைய - காமத்தினுடைய. இவற்றின்வழியாக-இந்திரியங்கள்முதலான இருப்பிடத்தின்வழியாக. இது - காமம். (௪௰)

ஆசையைக் கொல்லும் வழி.

எதனால் இப்படி(க் காமமானது இருக்கின்றதோ)—

௪௧. **அதனால், ஏ ! பாரதரிற் சிறந்தோனே ! நீ முதலில் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, சாஸ்திரஅறிவையும் அநுபவஅறிவையும் அழிக்கின்ற பொல்லாத இதனைக் கொன்றுவிடு.**

நீ (ஆசைகளைத் தடுப்பதற்கு)முந்தியேஇந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு, தீமையான செய்கையையுடையதாய்ச் சாஸ்திரஅறிவையும் அநுபவஅறிவையும் அழிப்பதான இக்காமத்தைத் தூரத்தள்ளிவிடு : ஞானம் - சாஸ்திரத்தினின்றும், ஆசார்

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌾𑌶𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌶𑍍𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌵𑌬𑍋𑌧𑌃, 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 𑌤𑌦𑌨𑍁𑌭𑌵𑌃 𑌤𑌯𑍋𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍍𑌵𑍋𑌃 𑌨𑌾𑌶𑌨𑌂 𑌪𑍍𑌰𑌜𑌹𑌿𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௪௧ ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌕𑌾𑌮𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌜𑌹𑌿 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌕𑌾𑌮𑌂 𑌜𑌹𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௪௨. 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 ।
𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌃 ॥
௪௩. 𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌜𑌹𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌮𑍍 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚 𑌦𑍇𑌹𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌪𑌰𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌆𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 । 𑌤𑌥𑌾—𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।

யனிடத்தினின்றும் ஆத்மாமுதலானவற்றை உணர்தல். விஜ்ஞானம் - அப்பொருள்களைச் சிறப்பாக அநுபவித்தல். நன்மையைப் பெறுதற்குக் காரணமான அந்த ஞானவிஜ்ஞானங்கட்குக் கேடுசெய்கின்ற (காமத்)தை உன்னிடமிருந்து உதறித்தள்ளிவிடு என்பது பொருள். (௪௧)

“ முதலில் இந்திரியங்களை வசப்படுத்திக்கொண்டு, காமமாகிய சத்துருவைக் கொல்லு” என்று கூறப்பட்டது. அங்ஙனம், எங்கேநின்றுகொண்டு [யாரை அண்டினால்] காமத்தைக் கொல்வது என்பது ?—(அதனைக்) கூறுவோம் :

௪௨. (ஞானிகள்) இந்திரியங்களை மேலாகக் கூறுகிறார்கள் : இந்திரியங்களைக் காட்டிலும் மனம் மேலானது : மனத்தைக்காட்டிலும் புத்தியோ மேலானது : புத்தியைக்காட்டிலும் மேலானது எதுவோ, அது (ஆத்மா).

௪௩. உயர்தோளா ! நீ இவ்வாறு புத்திக்குமேலானதை அறிந்து, மனத்தை மனத்தால் நிறுத்தி, வெல்லுதற்கு அரிதான காமமாகிய சத்துருவைக் கொல்லு.

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச்செய்ததாய், பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுநஸம்வாதத்திலே கர்மயோகம் என்னும் மூன்றும் அத்தியாயம் முற்றும்.

செவிமுதலிய இந்திரியங்கள் ஐந்து. வெளியிலே இருப்பதும் அளவிற்குஉட்பட்டதுமான ஸ்தூல [பருத்த] உடம்பை நோக்க, (அவை) நுண்மையாகவும் உள்ளேயிருப்பனவாகவும் வியாபகமாகவும் [அதிகத்தொழிலையுடையனவாகவும்] மற்றுமிவை போன்றனவாகவும் இருப்பதைப் பார்த்து ஞானிகள் (அந்த இந்திரியங்களை அந்த

𑌤𑌥𑌾 — 𑌮𑌨𑌸𑌃 𑌤𑍁 𑌪𑌰𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 । 𑌤𑌥𑌾 — 𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌃, 𑌯𑌂 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑍈𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌮𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌰𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌮𑍋𑌹𑌯𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌤𑌃 𑌤𑍁 𑌸𑌃 । 𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌪𑌰 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥ ௪௨ ॥

𑌏𑌵𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌪𑌰𑌂 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌤𑌭𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌜𑌹𑌿 𑌏𑌨𑌂 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌆𑌸𑌦𑌃 𑌆𑌸𑌾𑌦𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌂 𑌦𑍁𑌰𑌾𑌸𑌦𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑍇𑌕𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑍍 𑌇𑌤𑌿 ॥ ௪௩ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஸ்தூல உடம்பினும்) மேலாகக் கூறுகிறார்கள். அவ்வண்ணமே, எண்ணமென்பதையும் வேற்றுமையென்பதையும் தன் வடிவாக உடைய மனம் இந்திரியங்களைக்காட்டிலும் மேலானது. அப்படியே, நிர்ணயவடிவமுள்ள புத்தியோ மனத்தைக்காட்டிலும் மேலானது. அவ்வாறே—எது, (உடம்புமுதல்) புத்திஉள்படக் காணப்படுகின்ற ஸகலத்திற்கும் அப்பால் உள்ளதோ, காமமானது இந்திரியங்கள் முதலானவற்றை இருப்பிடமாகக்கொண்டு, ஞானத்தை மறைத்து எந்தத்தேகியை மயக்குகின்றது எனக் கூறப்பட்டதோ, அது புத்தியைக்காட்டிலுங்கூட மேலானது. புத்தியைப் பார்க்கும் பரமாத்மா அது. (௪௨)

புத்திக்குமேலான ஆத்மாவை நீ இவ்வாறுதெரிந்துகொண்டு, மனத்தை உன் மனத்தாலேயே அலையாது நன்கு நிறுத்தி, அதாவது - சுத்தமாகத் தெளிந்த மனத்தால் ஸமாதானப்படுத்தி,[1] காமமாகிய இச்சத்துருவைக் கொல்லு. (அது,) அறிதற்கு அரிய பலவிசேஷங்களை [பலபல ஸ்பாவத்தை] யுடைமையால், வெல்லுதற்கு அரியது. (௪௩)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

---

[1] மனஸ் ஸமாதானத்திற்குப், பரிசுத்தமாகத் தெளிந்த மனம் காரணம்.—(ஆ.)

अथ

चतुर्थोऽध्यायः ज्ञानयोगः ॥

योऽयं योगः अध्यायद्वयेनोक्तः ज्ञाननिष्ठालक्षणः ससंन्यासः कर्मयोगोपायः, यस्मिन् वेदार्थः परिसमाप्तः प्रवृत्तिलक्षणः निवृत्तिलक्षणश्च, गीतासु च सर्वास्वयमेव योगो विवक्षितः भगवता। अतः परिसमाप्तं वेदार्थं मन्वानः तं वंशकथनेन स्तौति भगवान्—

श्रीभगवानुवाच ॥

१. इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।
विवस्वान्मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥

२. एवं परम्पराप्राप्तमिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परन्तप ॥

इमम् अध्यायद्वयेनोक्तं योगं विवस्वते [illegible] सर्गादौ प्रोक्तवानहं जगत्परिपालयितॄणां क्षत्रियाणां बलाधानाय। तेन हि योगबलेन युक्ताः समर्था भवन्ति ब्रह्म परिरक्षितुम्। ब्रह्मक्षत्रे परिपालिते जगत् परिपालयितुम् अलम्। अव्ययम् अव्ययफल-

---

நான்காம் அத்தியாயம் : ஞானயோகம்.

ஞானயோகத்தின் வரலாறு.

கர்மயோகத்தை ஸாதநமாகக்கொண்டு, ஸந்யாஸத்தோடுகூடிநிற்கும் ஞான நிஷ்டையாகிய இந்த யாதொரு யோகமானது (முந்தின) இரண்டு அத்தியாயங்களால் சொல்லப்பட்டதோ, ப்ரவ்ருத்தியினால் உணரப்படும் (கர்மயோகமும்) நிவ்ருத்தியினால் உணரப்படும் (ஞானயோகமுமாகிய) வேதப்பொருளானது எதிலே முடிந்திருக்கின்றதோ, (அந்த) இதேயோகந்தான் கீதைமுழுவதிலும் பகவான் உபதேசிக்கக் கருதியது. ஆகவே, வேதத்திற்கூறிய பொருளை (அந்த ஞானயோகத்திலே) முடியப் பெற்றதாகக் கொண்டு, ஸ்ரீ பகவான் (அதனுடைய) ஸம்பிரதாயவரலாற்றைக் கூறி அதனைப் புகழ்கின்றார் :

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

க. **இந்த அழிவிலா யோகத்தை யான் விவஸ்வானுக்குக் கூறினேன் : விவஸ்வான் மநு(ப்ரஜாபதி)க்குக் கூறினன் : மநு இக்ஷ்வாகுவுக்குக் கூறினன்.**

உ. **இவ்வாறு பரம்பரையாகவந்த இதனை ராஜர்ஷிகள் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையால் பரந்தப ! இந்த யோகம் இப்பொழுது சிதைந்து போயிற்று.**

உலகத்தைப் பாதுகாக்கும் க்ஷத்திரியர்களுக்கு வலிமை உண்டாகும்பொருட்டு, (முந்தின) இரண்டு அத்தியாயங்களால் கூறிய இந்தயோகத்தை யான் (உலகத்தின்) சிருஷ்டித்தொடக்கத்தில் ஸூர்யனுக்குக் கூறினேன். அந்த யோகவலிமையையுடைய (க்ஷத்திரிய) ரன்றோ பிராமணரைப் பாதுகாக்க வல்லவராகிறார். பிராமணரும் க்ஷத்திரியரும் பாதுகாக்கப்பட்டவழி, உலகத்தைப் பாதுகாக்கமுடியும். அழி

ஶ்வாஸ꞉ । ந ஹி அஸ்ய யோகஸ்ய ஸர்வோபநிஷத்ப்ரதிஷ்டாலக்ஷணஸ்ய மோக்ஷாக்யம் ஃபலம் வ்யேதி । ஸ ச விவஸ்வாந் மநவே ப்ராஹ । மநு꞉ இக்ஷ்வாகவே ஸ்வபுத்ராய பூர்வராஜாய கதிதவாந் ॥ ௧ ॥

ஏவம் க்ஷத்ரியபரம்பராப்ராப்தம் இமம் ராஜர்ஷய꞉ ராஜாநஸ்ஸந்த ருஷயஸ்ஸந்த꞉ விது꞉ இமம் யோகம் । ஸ யோக꞉ காலேந இஹ மஹதா ததா ஶ்ரோத்ருணாம் புத்திமாந்த்யாத் நஷ்ட꞉ விச்சிந்நஸம்ப்ரதாய꞉ ஸம்வ்ருத்த꞉ । ஹே பரந்தப, ஶத்ரூந் விபக்ஷபூதாந் பரான் இதி உச்யதே, தாந் ஸ்வபுஜப்ரதாபஜந்மாக்நிநா பரிதாபயதி இதி பரந்தப꞉ இத்யர்த்த꞉ ॥ ௨ ॥

ததுபயேஷ்வாந் அஜிதேந்த்ரியாந் ப்ராப்ய நஷ்டம் யோகம் இமம் உபலப்ய லோகம் ச அபுருஷார்த்தஸம்பந்நம் த்ருஷ்ட்வா—

௩. ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக꞉ ப்ரோக்த꞉ புராதந꞉ ।
பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம் ॥

ஸ ஏவ அயம் மயா தே அத்ய ப்ரோக்த꞉ யோக꞉ ப்ரோக்த꞉ புராதந꞉, பக்த꞉ அஸி மே ஸகா ச அஸி இதி । ரஹஸ்யம் ஹி யஜ்ஞாநம் வேதாந்தோதிதம் உத்தமம் யோகோ ஜ்ஞாநமித்யர்த்த꞉ ॥ ௩ ॥

பகவதா விருத்திதம் உக்தம் இதி கா அபி புத்தி꞉ மா பூதிதி பரிஹாராய சோத்யந் அர்ஜுந உவாச—

விலாப்பயனை யுடையதாதலின் (இந்த யோகம்) அழிவிலாதது. உள்ளதை உள்ளபடி உணர்தலிலே ஊன்றிநிற்றலாகிய இ(ந்தயோகத்)தினுடைய மோக்ஷமென்னும் பயனது, (ஒருபொழுதும்) அழிவுறுவதில்லையன்றே. அந்த விவஸ்வான் (இந்த யோகத்தை) மநுவுக்குக்கூறினன்: மநு, தனது புத்திரன் இக்ஷ்வாகுவாகிய(ஸூர்யவம்சத்து) முதல் அரசனுக்குக் கூறினன். [விவஸ்வான் - ஸூர்யன்.] (௧)

இவ்வாறு க்ஷத்திரிய பரம்பரையாக வந்த இந்த யோகத்தை ராஜர்ஷிகள் அறிந்திருந்தார்கள். ராஜர்ஷிகளென்பார் - அரசர்களாயும் ரிஷிகளாயும் இருப்பவர். (அத்தகையார் - ஜநகர், புரூரவஸ் முதலாயினோ ரென்க.) நீடித்தகாலமானமையால் அந்தயோகம் (வரவரத் தேய்ந்து) ஸம்பிரதாயம் இடைவிட்டுப்போனதாயிற்று. தனக்கு எதிரியாயுள்ளவர்கள் 'பரர்கள்' எனப்படுகிறார்கள். அவர்களை (த் தன்) பராக்கிரம ஒளியின் கிரணங்களால் எரிக்கிறவன் - பரந்தபன் : பகைவர்களைத் தவிக்கச் செய்வோன் என்றபடி. (௨)

இந்த யோகமானது, மனத்திடனில்லாதவராக இந்திரியங்களை அடக்காதவராக இருந்தவரைச் சார்ந்து சிதைந்திருக்கவும், (ஆகவே) உலகத்திற்குப் புருஷார்த்தம் கிட்டாதிருக்கவும் கண்டு,

௩. இந்தப் பழமையான அதேயோகமானது, நீ என்னுடைய பக்தனாகவும் தோழனாகவும் இருக்கிறாய் என உனக்கு என்னால் இன்று கூறப்பட்டது ; ஏனெனில், இது உயர்ந்த ரஹஸ்யம். (௩)

இது - யோகம் : அதாவது, ஞானம்.

பகவானுடைய அவதாரங்கள்.

பகவானாலே (ஒன்றற்கொன்று) விரோதமாகக் கூறப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஒருவர்க்கும் உண்டாகக்கூடாது என, (அவருடைய திருவாக்கிலே அத்தகைய விரோதத்தைப்) பரிகரித்தற்பொருட்டு ஆக்ஷேபம் செய்கிறவன்போல அர்ஜுனன் கூறலானான் :

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

௪. 𑌅𑌪𑌰𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 ।
𑌕𑌥𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥

𑌅𑌪𑌰𑌮𑍍 𑌅𑌰𑍍𑌵𑌾𑌕𑍍 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑍇 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 । 𑌪𑌰𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍌 𑌜𑌨𑍍𑌮 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 । 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌮𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾, 𑌯𑌃 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌆𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 𑌇𑌮𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌸 𑌏𑌵 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑌹𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑌿 𑌇𑌤𑌿 ॥ ௪ ॥

𑌯𑌾 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌅𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌶𑌙𑍍𑌕𑌾 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾𑌣𑌾𑌂 𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌹𑌰𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚, 𑌯𑌦𑌰𑍍𑌥𑍋 𑌹𑌿 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌃—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௫. 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥

𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌮𑌮 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵 𑌚 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌤𑌾𑌨𑌿 𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌜𑌾𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌨 𑌜𑌾𑌨𑍀𑌷𑍇, 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌦𑍍𑌧𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌹𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑌾𑌵𑌰𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦 𑌅𑌹𑌂 𑌹𑍇 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥ ௫ ॥

𑌕𑌥𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌤𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌜𑌨𑍍𑌮 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௪. **உங்களுடைய பிறப்புப் பிந்தினது ; ஸூர்யனுடைய பிறப்பு முந்தினது. (இப்படியிருக்க)நீங்கள் முதலில் (அந்த யோகத்தை அவனுக்கு) அருளிச்செய்தீர்கள் என்ற இதனை, நான் எவ்வாறு அறியலாகும் ?**

உங்களுடைய பிறப்பு வஸுதேவருடைய வீட்டில் பிந்தி (உண்டா)னது ; ஸூர்யனுடைய பிறப்பு சிருஷ்டித்தொடக்கத்தில், (உங்களுடைய பிறப்பிற்கு) முந்தி (உண்டா)னது. ஆகவே, "நீங்கள் இந்தயோகத்தை முதலில் அருளிச்செய்தீர்கள் ; (அப்பொழுது) அருளிச்செய்தவரேயான நீங்களே இப்பொழுது எனக்கு (அதனை மறுபடியும்) அருளிச்செய்தவராக இருக்கிறீர்கள்" என, இதனை, (ஒன்றோடொன்று) மாறுபடாத விஷயமாக நான் தெரிந்துகொள்ளக்கூடிய விதம் என்ன ? (௪)

"வாஸுதேவன் ஈச்வர னல்லன், முற்றுமுணர்ந்தோ னல்லன்" என மூடர்களுக்கு உண்டாகும் சங்கையைப் பரிகரித்தற்பொருட்டு ஸ்ரீ பகவான் கூறலாயினார் ; அர்ஜுனன் வினா அதன்பொருட்டாதலால்—

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார் :

௫. **அர்ஜுந ! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் சென்றுபோயின. அவற்றையெல்லாம் யான் அறிவேன் ; நீ அறியமாட்டாய் பரந்தப !**

தரும அதர்மங்கள் முதலானவற்றால் ஞானசக்தி தடைப்பட்டவனாதலின், நீ அவையெல்லாவற்றையும் அறியமாட்டாய். நானோ, இயல்பாகவே நித்யனாய் சுத்தனாய் முக்தனாயிருத்தலால் மறைவில்லாத [தடைப்படாத] ஞானசக்தி யுடையேன் ; ஆதலின், யான் (அவற்றை) அறிவேன் (என்பது). (௫)

அப்பொழுது, நித்யராய் ஈச்வரராய் இருக்கின்ற உங்களுக்குத் தரும அதர்மங்கள் இல்லாதிருந்தும், பிறப்பென்பது எப்படி ?—கூறுவோம் :

௬. 𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥

𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌜𑌨𑍍𑌮𑌰𑌹𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍, 𑌤𑌥𑌾 𑌅𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌅𑌕𑍍𑌷𑍀𑌣𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍, 𑌤𑌥𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌈𑌶𑌨𑌶𑍀𑌲𑌃 𑌅𑌪𑌿 𑌸𑌨𑍍, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌮𑌮 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀𑌂 𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌂, 𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑌶𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌯𑌯𑌾 𑌮𑍋𑌹𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍 𑌸𑍍𑌵𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿, 𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌦𑍇𑌹𑌵𑌾𑌨𑍍 𑌇𑌵 𑌜𑌾𑌤 𑌇𑌵 𑌆𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌮𑌾𑌯𑌯𑌾, 𑌨 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑍋 𑌲𑍋𑌕𑌵𑌤𑍍 ॥ ௬ ॥

𑌤𑌚𑍍𑌚 𑌜𑌨𑍍𑌮 𑌕𑌦𑌾 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௭. 𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌃 𑌹𑌾𑌨𑌿𑌃 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤, 𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 𑌉𑌦𑍍𑌭𑌵𑌃 𑌅𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯, 𑌤𑌦𑌾 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌅𑌹𑌂 𑌮𑌾𑌯𑌯𑌾 ॥ ௭ ॥

---

௬. பிறவாதவனுனும், குறைவிலாத்தன்மையனுனும், பூதங்களுக்கு ஈச்வரனுனும், (யான்) என் மாயையை வசப்படுத்திக்கொண்டு, என்மாயையினுல் பிறக்கின்றேன் [அவதரிக்கின்றேன்].

பிறப்பில்லாதவனுயினும்,இன்னும் இயல்பாகவே குறைவிலா ஞானசக்தியுடையவனுயினும்,மற்றும் ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுமுள்ள பூதங்களை (யெல்லாம்)ஆளுந்தன்மையனுயினும்,—இந்த உலகமெல்லாம் எதற்கு உட்பட்டிருக்கின்றதோ, (பின்னும் அது) எதனுல் மயக்கப்பட்டு வாஸுதேவனைத் தன் ஆத்மாவாக அறியவில்லையோ, அந்த ப்ரக்ருதியை (அதாவது,)விஷ்ணுவுக்கு உரியதும், முக்குணவடிவுமான என்மாயையை வசப்படுத்திக்கொண்டு,என்னுடைய மாயையினுலே உடம்பொடுநிற்பவன்போல, பிறந்தவன்போல யான் இருக்கின்றேன். (ஆனுல்,) உலகத்தாரைப்போல உண்மையாகவே (பிறக்கிறேன்) இல்லை. (௬)

பகவதவதாரத்தின் பிரயோஜனம்.

இனி, அப்பிறப்பு எப்பொழுது? எதற்கு? என்பது—கூறுவோம்:

௭. பாரத! (உலகத்திலே) தருமத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்துக்கொள்கிறேன்.

வர்ணத்தாலும், ஆச்ரமத்தாலும், மற்றுமித்தன்மையவற்றுலும் அறியப்படுவதாய், பிராணிகளின் செல்வத்திற்கும் உறுதியான நன்மை(யாகிய முக்தி)க்கும் ஸாதநமாயிருக்கின்ற தருமத்திற்குக் குறைவும், அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னை மாயையினுல் படைத்துக்கொள்கிறேன் [ஜனங்களுக்குப் புலப்படுகின்றேன்]. (௭)

𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌮𑍍?—

௮. 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥

𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂, 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂, 𑌕𑌿𑌞𑍍𑌚, 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍁𑌗𑌮𑍍 ॥ ௮ ॥

𑌤𑌤𑍍—

௯. 𑌜𑌨𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌮𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ।
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨𑍈𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌸𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ॥

𑌜𑌨𑍍𑌮 𑌮𑌾𑌯𑌾𑌰𑍂𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌦𑌿 𑌮𑍇 𑌮𑌮 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌏𑌵𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌯𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌦𑍇𑌹𑌮𑍍 𑌇𑌮𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌜𑌨𑍍𑌮 𑌪𑍁𑌨𑌰𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌨 𑌏𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 । 𑌮𑌾𑌮𑍍 𑌏𑌤𑌿 𑌆𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 ॥ ௯ ॥

𑌨𑍈𑌷 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 ; 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 ? 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌪𑌿—

௧௦. 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌭𑌯𑌕𑍍𑌰𑍋𑌧𑌾 𑌮𑌨𑍍𑌮𑌯𑌾 𑌮𑌾𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑌹𑌵𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ॥

எதன்பொருட்டு ?—

௮. **நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயனசெய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் (யான்) யுகந்தோறும் அவதரிக்கின்றேன்.**

நல்லோர் - நல்வழிநிற்பவர். தீயனசெய்வோர் - பாவங்களாயினவற்றைச் செய்பவர். (௮)

அந்த

௯. **திவ்வியமான என்னுடைய அவதாரத்தையும், செய்கையையும் எவன் இவ்வாறு உண்மையாய் அறிகிறானோ, அவன் (தனது) உடலைவிட்டபின்பு மறுபிறப்பைப் பெறுவதில்லை ; அர்ஜுந ! அவன் என்னை அடைகிறான்.**

(மனிதர் சரீரம்போல) ப்ரகிருதியினாலாகிய தல்லாததாய் ஈச்வரனுக்கு(என்று) சிறக்க அமைவதான என்னுடைய அவதாரமானது மாயையினாலாகிய தெனவும், (என்னுடைய) செய்கையானது நல்லோரைப் பாதுகாத்தல் முதலிய தெனவும் இப்படிக் கீழ்க்கூறியவாறு உள்ளது உள்ளபடி எவன் அறிகிறானோ, அவன் இந்தத் தேகத்தைவிட்டவுடன் மறுபிறப்பை யடையான். அர்ஜுந ! அவன் என்னை அடைகிறான் : (ஸம்ஸாரத்தினின்று முற்றும்) விடுபடுகிறான். (௯)

ஞானயோகமொன்றுதான் முக்திக்கு ஸாதநம்.

இந்த மோக்ஷவழியானது இக்காலத்தில் தலைப்பட்டதன்று. எப்பொழுதெனின் ?—முற்காலத்திலுங்கூட,

௧௦. **(பொருள்களிலே) ஆசை பயம் கோபம் இவை நீங்கியவர்களாய், என் மயமானவர்களாய், என்னைப் புகலடைந்தவராய், ஞானமாகிய தபஸினால் பரிசுத்தரான அனேகர்கள் என் தன்மையை அடையலானார்கள்.**

வீதராக₃ப₄யக்ரோதா₄: ராக₃ஶ்ச ப₄யம் ச க்ரோத₄ஶ்ச வீதா விக₃தா யேப்₄ய: தே உந்மயா: ப்ரஹ்மவித₃: ஈஶ்வராபே₄த₃த₃ர்ஶிந: மாமேவ ச பரமேஶ்வரம் உபாஶ்ரிதா: கேவலஜ்ஞாநநிஷ்டா₂ இத்யர்த₂: । ப₃ஹவ: அநேகே ஜ்ஞாநதபஸா ஜ்ஞாநமேவ ச பரமாத்மவிஷயம் தப: தேந ஜ்ஞாநதபஸா பூதா: பராம் ஶுத்₃தி₄ம் க₃தா: ஸந்த: மத்₃பா₄வம் ஈஶ்வரபா₄வம் மோக்ஷம் ஆக₃தா: ஸமநுப்ராப்தா: । இதரதபோநிரபேக்ஷா ஜ்ஞாநநிஷ்டா₂ இத்யஸ்ய லிங்க₃ம் 'ஜ்ஞாநதபஸா' இதி விஶேஷணம் ॥ ௧௦ ॥

தவ தர்ஹி ராக₃த்₃வேஷௌ ஸ்த:, யேந கேஷாஞ்சிதே₃வ ஆத்மபா₄வம் ப்ரயச்ச₂ஸி ந ஸர்வேப்₄ய: இதி; உச்யதே—

௧௧. யே யதா₂ மாம் ப்ரபத்₃யந்தே தாம்ஸ்ததை₂வ ப₄ஜாம்யஹம் ।
மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த₂ ஸர்வஶ: ॥

யே யதா₂ யேந ப்ரகாரேண யேந ப்ரயோஜநேந யத்ப₂லார்தி₂ந: மாம் ப்ரபத்₃யந்தே தாந் ததை₂வ தத்ப₂லதா₃நேந ப₄ஜாமி அநுக்₃ருஹ்ணாமி அஹம், தேஷாம் மோக்ஷம் ப்ரதி அநர்தி₂த்வாத் । ந ஹி ஏகஸ்ய முமுக்ஷுத்வம் ப₂லார்தி₂த்வம் ச யுக₃பத் ஸம்ப₄வதி । அத: யே ப₂லார்தி₂ந: தாந் ப₂லப்ரதா₃நேந, யே யதோ₂-

---

என் மயமானவர்களாய் - ப்ரஹ்மத்தை அறிந்தவராய், (தமது ஆத்மாவுக்கும்) ஈச்வரனுக்கும் பேதமில்லை யெனக் காண்பவராய். பரமேச்வரனை ***என்னையே புகலடைந்தவராய்*** - ஞானமொன்றிலேயே உறுதியாகநிற்பவராய் என்றபடி. பரமாத்மாவைப்பற்றிய ஞானமென்னும் தபஸினால் சிறந்த பரிசுத்தியைப் பெற்று என் தன்மையை = ஈச்வரன் நிலையை, மோக்ஷத்தை நன்கு அடையலானார்கள். ஞானநிஷ்டையானது, (முக்தியைக் கொடுக்கும் விஷயத்திலே தனக்கு உதவியாக)வேறோர் தபஸை வேண்டிநிற்காததாம் என்பதற்கு - '**ஞானமாகிய தபஸினால்**' என்னும் விசேஷணம் அறிகுறி. (௧௦)

செல்வத்தையும், முக்தியையும் பகவான் தந்தருளுதல்.

அப்பொழுது உங்களுக்கு (ஒன்றினிடத்து) விருப்பும், (மற்றொன்றினிடத்து) வெறுப்பும் உண்டாம்; ஏனெனில், நீங்கள் ஆத்மநிலையைச் சிலர்க்குமாத்திரமே யன்றி எல்லோர்க்கும் தந்தருளுவதில்லை என்பது?—(விடை)கூறுவோம் :

௧௧. ***எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ, அவர்களை நான் அவ்வாறே அநுக்கிரகிக்கிறேன். பார்த்த! மனிதர்கள் எவ்வாற்றாலும் என்வழியை அநுஸரிக்கிறார்கள்.***

எவ்விதமாக எப்பிரயோஜனத்தோடு (அதாவது,) எப்பயனை வேண்டி எவர்கள் என்னை அடைகிறார்களோ, அவ்விதமாகவே அப்பயனை அளிப்பதனால் அவர்களை அநுக்கிரகிக்கிறேன்; அவர்கட்கு முக்தியிலே விருப்பமில்லையாதலின். (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விருப்பமுடைமையும், (இம்மை மறுமைப்) பயன்களிலே விருப்பமுடைமையும் ஒருவனுக்கு ஒருங்கே நிகழாதன்றோ. ஆதலால், எப்பயனை எவர்கள் வேண்டுகிறார்களோ, அப்பயனை அளிப்பதனால் அவர்களை(அநுக்கிரகிக்கின்றேன்);

𑌕𑍍𑌤𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 𑌤𑍁 𑌅𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑌵𑌶𑍍𑌚 𑌤𑌾𑌨𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨, 𑌯𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑌵𑌶𑍍𑌚 𑌤𑌾𑌨𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇𑌨, 𑌤𑌥𑌾 𑌆𑌰𑍍𑌤𑌾𑌨𑍍 𑌆𑌰𑍍𑌤𑌿𑌹𑌰𑌣𑍇𑌨 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇 𑌤𑌾𑌨𑍍 𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑍋𑌹𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌕𑌂𑌚𑌿𑌦𑍍 𑌭𑌜𑌾𑌮𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌮𑌮 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃— 𑌯𑌤𑍍𑌫𑌲𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌯𑌾 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌃 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌯𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇—𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 ॥ கக ॥

𑌯𑌦𑌿 𑌤𑌵 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌷𑍁 𑌅𑌨𑍁𑌜𑌿𑌘𑍃𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌫𑌲𑌦𑌾𑌨𑌸𑌮𑌰𑍍𑌥𑍇 𑌚 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌸𑌤𑌿 "𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌵 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑌵𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌶𑍃𑌣𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍—

கஉ. 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤 𑌇𑌹 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 ॥

ஆனல், எவர்கள் (சாஸ்திரத்திற்)கூறியபடி (ஸகலத்தையும்) செய்பவராய், (இம்மை மறுமைப்) பயன்களை வேண்டாதவராய், (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புபவராய் (இருக்கின்றார்களோ), அவர்கட்கு ஞானத்தைக் கொடுத்து (அருளுகின்றேன்) : ஞானிகளாயும், துறவிகளாயும், (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புபவராயும் இருப்பவர்கள் எவர்களோ, அவர்களை மோக்ஷமளிப்பதனல் (அருளுகின்றேன்) : அவ்வண்ணமே, துயருற்றவர்களைத் துயரத்தைப் போக்குவதனல் என இவ்வாறாக (அநுக்கிரகிக்கின்றேன்). எவர்கள் (என்னை) எவ்வாறு அடைகிறார்களோ, அவர்களை அவ்வாறே யான் அநுக்கிரகிக்கின்றேன் என்பது பொருள். மற்று, விருப்பினலாவது, வெறுப்பினலாவது, மருட்சியினலாவது நான் ஒருவனையும் அநுக்கிரகிப்பதில்லை. எல்லா நிலையையும் உடையவனை [எங்கும் ஆத்மஸ்வரூபமாக வேயுள்ள] ஈச்வரனுகிய என்(னல் கூறப்பட்டுள்ள ஞானகர்ம)மார்க்கத்தை மனிதர்கள் எவ்வகையாலும் அநுஸரிக்கிறார்கள். எப்பயனை வேண்டி(அதற்குஏற்ப)எக்கர்மத்தைச்செய்ய உரியவராகி எவர்கள் முயற்சிசெய்கின்றார்களோ, (அப்பயனைப் பெறுதற்கு அத்தொழிலைச்செய்யும்) அவர்கள் 'மனிதர்கள்' எனப்படுகிறார்கள்[இங்கே 'மனிதர்கள்' என்பதற்கு - மநுஷ்யர்களும், (ராக்ஷஸன் குரங்கு யானை முதலிய) மற்றைப் பிராணிகளும் என்பது பொருள்.—ஆ.] (கக)

ஈச்வரனுகிய உங்களுக்கு ஆசை முதலியகுற்றங்கள் இல்லாமையால் (பிராணிகளை) ஈடேற்றவேண்டுமென்னும் விருப்பம் ஸகலப்பிராணிகள்மேலும் ஸமமாயுள்ளது : தாங்களோ எப்பயனையும் தந்தருளவல்லவர். (இவ்வாறுள்ள)வளவிலே, ஸகலரும் " எல்லாம் வாஸுதேவனே " என்னும் ஞானத்தினலேயே (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்பியவராய் உங்களையே ஏன் அடைகிறார்களில்லை? எனில்,—அவ்விஷயத்திலே காரணங் (கூறுகிறேன்), கேள் :

கஉ. (தாம் செய்யும்) கர்மங்களின் ஸித்தியை [பயன் கைகூடுதலை] விரும்புகிறவர்கள் இங்கே தேவதைகளை ஆராதிக்கிறார்கள் ; ஏனெனில், கர்மத்தினலுண்டாகும் ஸித்தியானது மநுஷ்யலோகத்திலே விரைவாக ஆகின்றது.

𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌫𑌲𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌯𑌜𑌨𑍍𑌤 𑌇𑌹 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌲𑍋𑌕𑍇 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃; '𑌅𑌥 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌯𑌥𑌾 𑌪𑌶𑍁𑌰𑍇𑌵𑌂 𑌸 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌹𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌜𑌿𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇—𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑍇 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 । '𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 । 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑍇 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃—𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌫𑌲𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌜𑌾𑌤𑌾 ॥ ௧௨ ॥

𑌮𑌾𑌨𑍁𑌷 𑌏𑌵 𑌲𑍋𑌕𑍇 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌨 𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌯𑌮𑌃 𑌕𑌿𑌂𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿? 𑌅𑌥 𑌵𑌾—𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌗𑍋𑌪𑍇𑌤𑌾𑌃 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌮𑌮 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌤𑌵𑍈𑌵 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௩. 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

இவ்வுலகத்திலே, (தாம் செய்யும்) கர்மங்களின் பயன் (தமக்குக்) கைகூடுதலை வேண்டுகிறவர்கள், இந்திரன் அக்நி முதலான தேவதைகளைத் தொழுகிறார்கள். (இதனை,) "இனி எவன் 'அவன் வேறு, நான் வேறு' எனக்கொண்டு வேறுதேவதையை உபாஸிக்கிறானோ, அவன்,—(மனிதர்கட்கு) ஆடுமாடுமுதலியன எப்படியோ, அப்படியே தேவதைகட்கு" (பி-௧-௪-௧௦) என்னும் சுருதியினால் (அறிக). பயனை விரும்பி வேறு தேவதைகளைப் பூஜிப்பவராய், வர்ணத்திற்கும் ஆச்ரமத்திற்கும் உரித்தானவராய், (ஆகவே அவ்வர்ணாச்ரமங்கட்குஏற்ப தம்தம்)கர்மத்தைச் செய்கின்ற அவர்கட்கு (அக்) கர்மத்தால் வரும் பயன் விரைவாகக் கைகூடுகின்றது.—சாஸ்திரத்தின் அதிகாரம் மனுஷ்யலோகத்திலேதான். "மனுஷ்யலோகத்திலே விரைவாக" என்னும் விசேஷணத்தால், மற்றைய லோகங்களிலும் கர்மத்தின்பயன் கைகூடுதலைப் பகவான் எடுத்துக்காட்டுகிறார். மனுஷ்யலோகத்திலே வர்ணம் ஆச்ரமம் முதலானவற்றிற்கேற்ப கர்மத்திலே அதிகாரம் என்பது, (இவ்வுலகத்திற்கும் மற்றைய உலகங்களுக்குமுள்ள) வேறுபாடு. (௧௨)

ஜாதியென்பது மனுஷ்யலோகத்திலே பகவானால் நியமிக்கப்பட்ட ஒழுங்கு.

"மனுஷ்யலோகத்திலேதான் வர்ணம் ஆச்ரமம் முதலானவற்றிற்கு ஏற்ப கர்மத்திலே அதிகாரம்; மற்றைய லோகங்களில் (இவ்வாறு) இல்லை" என்னும் நியமம் எதனாலாகியது என்பது?—அல்லது, "வர்ணம் ஆச்ரமம் முதலிய வேறுபாட்டையுடைய மனிதர்கள் எவ்வகையாலும் என் வழியை அநுஸரிக்கிறார்கள்" என்று (கீழ்க்)கூறப்பட்டதே. (அவர்கள்) எக்காரணத்தால் உம்முடைய வழியையேயன்றி வேறொருத்தனுடைய (வழியை) அநுஸரிப்பதில்லை" என்பது? (விடை) கூறுவோம் :

௧௩. நான்கு ஜாதியும், குணம் கர்மம் என்றவற்றின் பலவகையான அளவிற்குத்தக்கபடி என்னால் படைக்கப்பட்டது. (யான்) அதனைச் செய்தவனாயினும், (அதனைச்) செய்யாதவனாக நிர்விகாரியாக இருக்கிறேன் என்று என்னை நீ அறியக்கடவாய்.

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰 𑌏𑌵 𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 𑌸𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 “𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑌮𑌾𑌸𑍀𑌤𑍍” 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃, 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 𑌗𑍁𑌣𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌶𑍍𑌚। 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌾𑌂𑌸𑌿। 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 ‘𑌶𑌮𑍋 𑌦𑌮𑌃 𑌤𑌪𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌸𑌰𑍍𑌜𑌨𑌰𑌜𑌃𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌶𑍌𑌰𑍍𑌯𑌤𑍇𑌜𑌃𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿, 𑌤𑌮𑌉𑌪𑌸𑌰𑍍𑌜𑌨𑌰𑌜𑌃𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑍈𑌶𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿, 𑌰𑌜𑌉𑌪𑌸𑌰𑍍𑌜𑌨𑌤𑌮𑌃𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌤𑌚𑍍𑌚 𑌇𑌦𑌂 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌨 𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁, 𑌅𑌤𑌃 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑍍॥

𑌹𑌨𑍍𑌤! 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑍇𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌫𑌲𑍇𑌨 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍇, 𑌅𑌤𑌃 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇— 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌮𑌾𑌯𑌾𑌸𑌂𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍇𑌣 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌸𑌨𑍍𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌅𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 𑌅𑌤 𑌏𑌵 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 𑌅𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌂 𑌚 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥ ௧௩ ॥

நான்கேயான ஜாதியானது, குணத்தின் பலவிதமான [ஏற்றத்தாழ்ச்சியான] அளவிற்குத் தக்கபடியும், (அவ்வாறே) கர்மத்தின் பலவிதமான அளவிற்குத் தக்க படியும் ஈச்வரனுகிய என்னுல் அமைக்கப்பட்டது. (இதனை,) "ப்ராஹ்மணன் இத னுடைய முக மாஞன்" (ருக் - ௧0 - ௯0) என்பதுமுதலான சுருதியினுல் (அறிக). குணங்கள் - ஸத்துவம், ராஜஸ், தமஸ் என்பன. அவற்றுள் [அந்த நான்கு வர்ணங்க ளுள்], ஸாத்விகனுன (அதாவது) ஸத்துவகுணத்தை முதன்மையாகவுடைய ப்ராஹ் மணனுக்குச் சாந்தம் அடக்கம் தவம் என்பன முதலானவை, (உரிய) கர்மங்கள் (௧௮ - ௪௨). ஸத்துவகுணத்தைத் துணையாகப் பெற்றுள்ள ரஜோகுணத்தை முதன் மையாகவுடைய க்ஷத்திரியனுக்கு சௌர்யம் பராக்கிரமம் முதலியவை (உரிய) கர்மங் கள் (௧௮ - ௪௩). தமோகுணத்தைத் துணையாகப்பெற்றுள்ள ரஜோகுணத்தை முதன்மையாகவுடைய வைச்யனுக்கு வேளாண்மைமுதலியன (உரிய) கர்மங்கள் (௧௮ - ௪௪). ரஜோகுணத்தைத் துணையாய்ப்பெற்றுள்ள தமோகுணத்தை முதன் மையாகவுடைய சூத்திரனுக்கு (உரியது)ஊழியம் என்னும் ஒரேகர்மந்தான் (௧௮-௪௪) என இவ்வாறு குணம் கர்மம் என்றவற்றின் பலவிதமான அளவிற்குஏற்ப நான்கு வர்ணமும் என்னுல் படைக்கப்பட்டது என்பது பொருள். பிரஸித்தமான இந்த நான்குஜாதியும் மற்றையஉலகங்களில் இல்லை; ஆதலால்தான் "மனுஷ்யலோகத்திலே" (௪ - ௧௨) என்னும் விசேஷணம்.

(ஆக்ஷேபம்):—"ஆ! அப்பொழுது,நான்குவர்ணத்தையும் படைத்தல் முதலிய தொழில்கட்கு (நீங்கள்) கர்த்தாவாதலால், அதன்பயன் (உமக்கே) வந்துசேரும். ஆகவே நீங்கள் (ஸம்ஸாரத்தினின்றும்) என்றும் விடுபட்டவராகவும், என்றும் ஈச்வர ராகவும் ஆகமாட்டீர்கள் என்பது?

(ஸமாதானம்):—(விடை) கூறுவோம் :—மாயையின் வ்யவஹாரத்தால் (யான்) அந்தத்தொழிலுக்குக் கர்த்தாவாக இருந்தாலும், உண்மையாக அகர்த்தாவாதலால் நான் ஸம்ஸாரத்திற்கு உட்படாதவன் என்று தெரிந்துகொள். (௧௩)

येषां तु कर्मणां कर्तारं मां मन्यसे परमार्थतः तेषाम् अकर्ता एव अहम्, यतः—

கச. न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥

न मां तानि कर्माणि लिम्पन्ति देहाद्यारम्भकत्वेन, अहंकाराभावात् । न च तेषां कर्मणां फले मे मम स्पृहा तृष्णा । येषां तु संसारिणाम् "अहं कर्ता" इत्यभिमानः कर्मसु, स्पृहा च तत्फलेषु, तान् कर्माणि लिम्पन्ति इति युक्तं, तदभावात् न मां कर्माणि लिम्पन्ति । इति एवं यः अन्योऽपि माम् आत्मत्वेन अभिजानाति "नाहं कर्ता, न मे कर्मफले स्पृहा" इति स कर्मभिः न बध्यते, तस्यापि न देहाद्यारम्भकाणि कर्माणि भवन्ति इत्यर्थः ॥ கச ॥

"नाहं कर्ता, न मे कर्मफले स्पृहा" इति—

கரு. एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥

एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैः अपि अतिक्रान्तैः मुमुक्षुभिः । कुरु तेन कर्मैव, न तूष्णीम् आसनं, नापि संन्यासः

பற்றற்றுச் செய்யும் கர்மமானது ஒருவனைக் கட்டுப்படுத்துவதில்லை.

மற்று, நீ என்னை எந்தத் தொழில்கட்குக் கர்த்தாவாக நினைக்கின்றனையோ அவற்றிற்கு யான் உண்மையாகவே அகர்த்தாதான்; ஏனெனில்,

கச. "கர்மங்கள் என்னைப் பற்றுவதில்லை: கர்மத்தின் பயனிலே எனக்கு ஆசை இல்லை" என எவன் என்னை அறிகிறானோ, அவன் கர்மங்களால் கட்டப்படுவதில்லை.

(எனக்கு) அகங்காரமின்மையால், அந்தக்கர்மங்கள் (எனக்கு) உடம்பு முதலியவற்றை உண்டாக்கி என்னைப் பற்றுவதில்லை; அக்கர்மங்களின் பயன்களிலே எனக்கு ஆசையும் இல்லை. ஆனால், ஸம்ஸாரிகளான [உலகவாழ்க்கையில் பற்றுக்கொண்ட] எவர்கட்குக் கர்மங்களிலே "நான் கர்த்தா" என்ற எண்ணமும், அவற்றின் பயன்களிலே ஆசையும் உள்ளனவோ, அவர்களைக் கர்மங்கள் பற்றுகின்றன என்பது ஏற்கும். அவை (எனக்கு) இல்லாததனால், கர்மங்கள் என்னைப் பற்றமாட்டா. "நான் கர்த்தா இல்லை, எனக்குக் கர்மத்தின் பயனிலே ஆசை இல்லை" என இவ்வாறாக அறிகிறவன் வேறு எவனானாலும் ஆகுக; அவன் கர்மங்களால் கட்டப்படுவதில்லை: அவனுக்குங்கூடச் சரீரம்முதலானவற்றை உண்டாக்கும் கர்மங்கள் இல்லை என்பது பொருள். (கச)

"நான் கர்த்தா இல்லை, எனக்குக் கர்மத்தின் பயனிலே ஆசை இல்லை" என

கரு. இவ்வாறாக அறிந்து, (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்பிய முன்னோர்களாலும் கர்மமானது செய்யப்பட்டது. ஆதலால், முந்தின பண்டைக்காலத்தில் முன்னோர்களால் செய்யப்பட்ட கர்மத்தையே நீ செய்யக்கடவாய்.

(ஸம்ஸாரத்தினின்றும்) விடுபடவிரும்பிய முன்னோர்களாலும் அநுஷ்டிக்கப்பட்டமையால், நீ கர்மத்தையே செய்யவேண்டுமேயன்றி மௌனமாக உட்கார்ந்திரு

ऽकर्तव्यः, तस्मात् त्वं पूर्वैरपि अनुष्ठितत्वात्, यदि अज्ञः तदा आत्मशुद्ध्यर्थं, तत्त्ववित् चेत् लोकसंग्रहार्थं, पूर्वैः जनकादिभिः पूर्वतरं कृतं न इदानीन्तनं कृतं निर्वर्तितम् ॥ १५ ॥

तत्र कर्म चेत् कर्तव्यं त्वद्वचनादेव करोमि अहम्। किं विशेषितेन 'पूर्वैः पूर्वतरं कृतम्' इति? उच्यते— यस्मात् महत् वैषम्यं कर्मणि। कथम्?—

१६. किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्॥

किं कर्म किं च अकर्म इति कवयः मेधाविनः अपि अत्र कर्मादिविषये मोहिताः मोहं गताः। तत् ते तुभ्यं अहं कर्म अकर्म च प्रवक्ष्यामि यत् ज्ञात्वा विदित्वा कर्मादि मोक्ष्यसे अशुभात् संसारात् ॥ १६ ॥

न च त्वया एतत् मन्तव्यम्—कर्म नाम देहादिचेष्टा लोकप्रसिद्धम्, अकर्म नाम तदक्रिया तूष्णीमासनम्; किं तत्र बोद्धव्यम् इति? कस्मात्? उच்यते—

த்தலையாவது, (கர்மங்களைத்) துறந்திடுதலையாவது செய்யக்கூடாது. நீ அஜ்ஞானியானால், அப்பொழுது சித்தசுத்திக்காக(க் கர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும்); நீ உண்மைஉணர்ந்தோனானால், உலகத்தை நல்வழிநிறுத்த(க் கர்மத்தை அநுஷ்டிக்க வேண்டும். அன்றியும், அக்கர்மமானது) மிகப்பழைய காலத்திலே ஜநகாதியரான முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவந்ததேயன்றி இப்பொழுது (புதிதாக) அநுஷ்டிக்கப்பட்டதன்று. (கரு)

கர்மம் இன்னது, அகர்மம் இன்னது என்பது.

இ(ம் மநுஷ்யலோகத்)திலே கர்மத்தைச் செய்யவேண்டுமென்றால், நீங்கள் சொல்வதனாலேயே நான் (அதனைச்) செய்வேன். (ஆகவே, அங்ஙனம்) "முன்னோர்களாலே மிகப்பழைய காலத்திலே செய்யப்பட்டது" என்று சிறப்பித்துக்கூறியதனால் என்ன என்பது? — கூறுவோம்: ஏனெனில், கர்மத்(தை அறியும் விஷயத்)திலே அதிக அருமை இருக்கின்றது.—எப்படி?—

கசு. கர்மமென்பது என்ன? அகர்மமென்பது என்ன? என்றஇதிலே, அறிவுடையோரும் மயங்கிவிட்டார்கள். நீ எதனை அறிந்து, தீமையினின்றும் விடுவிக்கப் படுவாயோ, அந்தக் கர்மத்தையும் அகர்மத்தையும் யான் உனக்கு உபதேசிப்பேன்.

இவ்விஷயத்திலே அறிவுள்ளவருங்கூட மயக்கமடைந்துள்ளார். ஆகவே, யான் உனக்குக் கர்மத்தையும் அகர்மத்தையும் (அவை இன்னவை யென்று) விரித்துக் கூறுவேன். நீ கர்மம்முதலான எவற்றை அறிந்து ஸம்ஸாரத்தினின்றும் விடுவிக்கப் படுவாயோ, (அவற்றை விவரமாகச் சொல்வேன்). (கசு)

கர்மமென்பது, உடம்புமுதலியவற்றின் அசைவு; அகர்மமென்பது, அவற்றின் தொழிலின்மை. உலகத்திலே (இவை யாவர்க்கும்) தெரிந்தவை. (ஆகவே,) அதில் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன? [ஒன்றும் இல்லை]—என்று நீ இவ்வாறு கொள்ளவும் கூடாது.—ஏன்?—கூறுவோம்:

௧௭. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 ।
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌗𑌹𑌨𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌗𑌤𑌿𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌪𑌿 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂, 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯, 𑌤𑌥𑌾 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌮𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑌹𑌨𑌾 𑌵𑌿𑌷𑌮𑌾 𑌦𑍁𑌰𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌾—𑌕𑌰𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂—𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌗𑌤𑌿𑌃 𑌯𑌾𑌥𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௭ ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍇𑌃 𑌯𑌤𑍍 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑍍? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௮. 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 ।
𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌿, 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌰𑌂, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌂 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍, 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍇 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃-

---

௧௭. ஏனெனில், கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு; விகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு: அகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு. கர்மத்தின் போக்கானது அறிதற்கு அரியது. [விகர்மம் – விலக்கப்பட்ட கர்மம். அகர்மம் – ஒன்றுஞ்செய்யாது சும்மாஇருத்தல்.]

ஏனெனில், சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட கர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது: விலக்கப்பட்ட விகர்மத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியதும் இருக்கவேஇருக்கின்றது. அவ்வாறே, மௌனமாயிருத்தலாகிய அகர்மத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டியது இருக்கின்றது. ஏனெனில், கர்மம் விகர்மம் அகர்மம் என்றவற்றின் போக்கானது=உள்ளது உள்ளபடியான தன்மையானது, அதாவது,(அவற்றின்)உண்மை கஷ்டமானது, அறிதற்குஅரிதானது.— "இருக்கின்றது" என்பதை மூன்றி(டங்களி)லும் வருவித்துக்கொள்க. "கர்மத்தின்" என்பது, கர்மம் முதலானவற்றின் உபலக்ஷணத்திற்காக. (உபலக்ஷணம் - ஒரு சொல், தன்னோடு தன்இனங்களையும் கொள்ளுதற்கு உரியதாய்நிற்றல். சோற்றை உண்டான் என்றால் - அதனோடு கறிமுதலியவற்றையும் தின்றான் என்பது கூறாமலே அமைதலால், சோறுஎன்னும் சொல் - மற்றைக் கறிமுதலிய தன் இனங்களையும் கொள்ளுதற்கு உரியதாய்நிற்றல் காண்க.) (௧௭)

ஆனால், "(கர்மஅகர்மங்களைப்பற்றித்) தெரிந்துகொள்ளவேண்டியதைக் கூறுவேன்" என்று (நீங்கள்) மேற்கொண்டுள்ள (அக்) கர்மம்முதலானவற்றின் உண்மை என்ன ? —கூறுவோம் :

௧௮. எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காணக்கூடுமோ, எவன் அகர்மத்திலும் கர்மத்தைக் காணக்கூடுமோ, அவன், மனிதர்களுள் அறிவுள்ளவன் ; அவன் (ஞானநிஷ்டையைக்) கூடினவன், கர்மங்களெல்லாவற்றையும் செய்தவன்.

செய்யப்படுகிறதென்பது - செய்கை, கர்மம், தொழில் பொது [செல்லல், நிற்றல், நினைத்தல்முதலிய எல்லாத்தொழிலுமாம்]. பிரவிருத்தியும் நிவிருத்தியும்,

𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍋𑌃—𑌵𑌸𑍍𑌤𑍁 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌾𑌰𑌕𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌭𑍂𑌮𑍌 𑌏𑌵—𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁, 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌯𑍋𑌗𑍀 𑌚, 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 𑌸𑌮𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌚𑍍𑌚 𑌸𑌃, 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌦𑌰𑍍𑌶𑍀 ॥

𑌨𑌨𑍁 𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 '𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮' 𑌇𑌤𑌿; 𑌨 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮 । 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌥𑌂 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾?—𑌨, 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌸𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌵𑌤𑍍 𑌅𑌵𑌭𑌾𑌸𑌤𑍇 𑌮𑍂𑌢𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌃 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯, 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌅𑌕𑌰𑍍𑌮𑌵𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌥𑌾𑌭𑍂𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥-

---

செய்பவனுகிய கர்த்தாவைச் சார்ந்துநிற்றலின், (கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காணக்கூடு மென்க. பிரவிருத்தி - கர்மம், செய்தலென்னும் முயற்சி. நிவிருத்தி - அகர்மம், ஓய்தலென்னும் முயற்சி.) மெய்ப்பொருளை அடையாவிடத்தன்றோ செய்கையென்னும் வ்யவஹாரமும், செய்பவனென்னும் வ்யவஹாரமும், மற்றுமிவைபோன்ற வ்யவஹாரமுமாகிய ஸகலமுமே அஜ்ஞானநிலையிலேயே நிகழ்கின்றது. எவன் கர்மத்திலே கர்மமின்மையைக் காண்கிறானோ, எவன் கர்மமின்மையிலேயும் கர்மத்தைக் காண்கிறானோ, அவன் மனிதர்களுள் அறிவுடையவன்: அவன் யோகி: அவன் எல்லாக்கர்மங்களையும் செய்தவன் என்று, கர்மஅகர்மங்களிரண்டினும் ஒன்றில் மற்றொன்றைக் காண்பவன் (இவ்வாறு) கொண்டாடப்படுகிறான்.

(ஆக்ஷேபம்) :— அப்படியானால், "எவன் கர்மத்திலே அகர்மத்தையும், அகர்மத்திலேயும் கர்மத்தையும் காண்கிறானோ" என்று இதென்ன விரோதமாகக்கூறப்படுகின்றது? நிச்சயமாகக் கர்மம் அகர்ம மாகாது, அகர்மும் கர்மமாகாது. (ஒன்றைக்) காண்பவன், அதில் (அதற்கு) விரோதமானதை எப்படிக் காண்பான்? [காண முடியாது.]

(ஸமாதாநம்) :— அப்படியன்று; உண்மையிலே அகர்மமாகவே இருப்பது, விவேகபுத்திமயங்கிய ஜனங்களுக்குக் கர்மம்போலத் தோற்றுகின்றது; அவ்வாறே, கர்மமாகவே (இருப்பது) அகர்மம்போல(த் தோற்றுகின்றது). பகவான் அவற்றை உள்ளபடி உணர்த்தும்பொருட்டு "எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காண்கிறானோ"—என்று தொடங்குகின்ற (சுலோகத்)தைக் கூறலானார். (மயக்கஉணர்வினால் ஆத்மாவினிடத்துத் தோன்றிய கர்மத்திலே அகர்மத்தைக் காணுதலென்பது - மயக்கஉணர்வினால் தோன்றிய வெள்ளியிலே இப்பியைக் காண்பது போல. பின்னும் அம்மயக்கஉணர்வினால் அவ்வாத்மாவினிடத்துத் தோன்றிய அகர்மத்திலே கர்மத்தைக் காணுதலென்பதும் அது. எப்படியெனில், —ஒருபொருளின் உணர்ச்சியைப் பெற்றாலன்றி, 'அப்பொருள் இல்லை' என்னும் உணர்ச்சி வாராது. இப்பியைப் பார்த்து வெள்ளியென்றவிடத்து, இப்பியிலே வெள்ளி கற்பிக்கப்பட்டது. அவ்வண்ணமே அதனைப் பார்த்து 'இங்கே முன் தோன்றிய வெள்ளி இல்லை' என்றவிடத்து இல்லை என்னும் உணர்ச்சியானது, கற்பிக்கப்பட்ட வெள்ளியின் உணர்ச்சியைத் தழுவிநிற்றலால், இப்பியிலே வெள்ளி இல்லை என்பதும் கற்பனைதான். இதனை நுண்மையாக ஆராய்ந்தறிக. இவ்வாறே, ஆத்மாவினிடத்துக்

[illegible] — 'कर्मण्यकर्म यः पश्येत्' इत्यादिकस्य न विरोधः। बुद्धिमत्त्वाद्युपपत्तेः, 'बोद्धव्यम्' इति च यथाभूतदर्शनस्य उच्यते। न च विपरीतज्ञानात् मोक्षणं स्यात्; 'यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्' इति च उक्तम्। तस्मात् कर्माकर्मणी विपर्ययेण गृहीते प्राणिभिः तद्विपर्ययग्रहणनिवृत्त्यर्थं भगवतो वचनं 'कर्मण्यकर्म यः' इत्यादि। न च अत्र कर्माधिकरणम् अकर्म अस्ति, कुण्डे बदराणीव। नापि अकर्माधिकरणं कर्म अस्ति; कर्माभावत्वात् अकर्मणः। अतः विपरीतगृहीते एव कर्माकर्मणी लौकिकैः, यथा मृगतृष्णिकायाम् उदकं, शुक्तिकायां वा रजतम्॥

ननु कर्म कर्मैव सर्वेषां न क्वचित् व्यभिचरति — तत् न, नौस्थस्य नावि गच्छन्त्यां तटस्थेषु अगतिषु नगेषु प्रतिकूलगतिदर्शनात्, दूरेषु चक्षुषा असंनिकृष्टेषु गच्छत्सु गत्यभावदर्शनात्, एवम्

கர்மமும், கர்மமில்லை என்பதும் கற்பனை என்று கண்டுகொள்க.—ஆ.) ஆகவே, விரோதமில்லை. அறிவுடைமை முதலியவை (மற்றைய ஞானத்தாலல்லாமல் ஆத்ம ஞானமொன்றினால் மாத்திரம்) அமையுமாதலாலும், "(கர்மஅகர்மங்களைப்பற்றித்) தெரிந்துகொள்ளவேண்டியது உண்டு" (ச-கள) என்றதனாலும் (பகவான்) உள்ளதை உள்ளபடி உணர்த்துதலை அருளிச்செய்கிறார். அன்றியும், தீமையினின்று நீங்குதலும் மயக்கஉணர்வினால் அமையாது; (ஏனெனில்,) "எதனை அறிந்து நீ தீமையினின்றும் நீங்குவாயோ" (ச - கசு) என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், பிராணிகள் (எல்லாம்) கர்ம அகர்மங்கள் இரண்டனையும் விபரீதமாகக் கொண்டிருக்கின்றன (என்று,) "எவன் கர்மத்திலே அகர்மத்தை" என்று தொடங்கும் பகவான் திருவாக்கானது அவர்கள் (அவ்வாறு) விபரீதமாகக் கொண்டிருத்தலை நீக்குதற்கென்க. இனி, இலந்தைக் கனிகள் ஒரு பாண்டத்தில் (இருப்பது)போல, இங்கே [உலகவ்யவஹாரத்திலாயினும், சாஸ்திரவ்யவஹாரத்திலாயினும்] அகர்மம் கர்மத்தை இடமாகவுடையதில்லை; (அவ்வாறே,) கர்மமும் அகர்மத்தை இடமாகவுடையதில்லை; அகர்மமென்பது கர்மமின்மை யாதலின். ஆகவே, கர்மஅகர்மங்கள் இரண்டும் ஸாமாந்ய ஜனங்களால் கானலில் ஜலம்போலவாவது இப்பியில் வெள்ளிபோலாவது விபரீதமாகக் கிரகிக்கப்பட்டேயுள்ளன (என்பது, பகவான் கருத்தென்க).

(ஆக்ஷேபம்):—அப்படியானல், கர்மமென்பது எல்லார்க்கும் கர்மந்தான்; ஒரு இடத்திலாயினும் (அது வேறொன்றாகப்) பிறழ்வதில்லை.

(ஸமாதானம்):—அது சரியன்று; கப்பலில் இருப்பவனுக்குக் கப்பல் செல்லுகையில் (தாம் நிலைபெயர்ந்து)செல்லுதலில்லாதவையாய்க் கரையில் நிற்கும் மரங்களினிடத்து (அவை அவனுக்கு) எதிராகச் செல்லுதல் தோற்றுதலாலும், ஸமீபத்தில்லாது தூரத்திற்செல்லுகின்றவற்றினிடத்து(அவை)செல்லுதலின்மை கண்ணுக்குத் தோற்றுதலாலுமென்க. இவ்வண்ணமே இங்கு [ஆத்மாவினிடத்து]ம் அகர்மத்திலே

ஐஹாவபி அகர்மணி கர்மத³ர்ஶனம் கர்மணி சாகர்மத³ர்ஶனம் விபரீதத³ர்ஶனம், யேன தந்நிராகரணாயாஹ ப⁴க³வாந் 'கர்மண்யகர்ம ய꞉ பஶ்யேத்' இத்யாதி³ ॥

ததே³தத் உக்தப்ரதிவசனமபி அஸக்ருத் அத்யந்தவிபரீதத³ர்ஶனபா⁴விததயா மோமுஹ்யமானோ லோக꞉ ஶ்ருதமபி அஸக்ருத் தத்த்வம் விஸ்ம்ருத்ய விஸ்ம்ருத்ய மித்²யாப்ரஸங்க³ம் அவதார்ய அவதார்ய சோத³யதி இதி புன꞉ புன꞉ உத்தரம் ஆஹ ப⁴க³வாந், து³ர்விஜ்ஞேயத்வம் ச ஆலக்ஷ்ய வஸ்துன꞉ ॥

'அவ்யக்தோऽயமசிந்த்யோऽயம்' 'ந ஜாயதே ம்ரியதே' இத்யாதி³னா ஆத்மனி கர்மாபா⁴வ꞉ ஶ்ருதிஸ்ம்ருதிந்யாயப்ரஸித்³த⁴꞉ உக்த꞉ வக்ஷ்யமாணஶ்ச । தஸ்மிந் ஆத்மனி கர்மாபா⁴வே அகர்மணி கர்மவிபரீதத³ர்ஶனம் அத்யந்தநிரூட⁴ம்; யத꞉—"கிம் கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா꞉" । தே³ஹாத்³யாஶ்ரயம் கர்ம ஆத்மனி அத்⁴யாரோப்ய "அஹம் கர்தா, மம ஏதத் கர்ம, மயா அஸ்ய கர்மண꞉ ப²லம் போ⁴க்தவ்யம்" இதி ச, ததா² "அஹம் தூஷ்ணீம் ப⁴வாமி, யேன அஹம் நிராயாஸ꞉ அகர்மா ஸுகீ² ஸ்யாம்" இதி கார்யகரணாஶ்ரயம் வ்யாபாரோபரமம் தத்க்ருதம் ச ஸுகி²த்வம்

கர்மம் தோற்றுதலும், கர்மத்திலே அகர்மம் தோற்றுதலும் விபரீதமான தோற்ற மாதலால், (பகவான்) அதனை நீக்கும்பொருட்டு "எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காண்கிறானோ" என்று தொடங்கும் (திருவாக்கை) அருளிச்செய்யலானார்.

அத்தகைய இ(ச்சங்கையான)து அடிக்கடி மறுமொழி கூறப்பெற்றதாயினும், மிக்க விபரீதமான உணர்வினால் (பொய்ப்பொருளின்) வாஸனையே பதியப் பெற்றுள்ளமையால் அடுத்தடுத்து மயக்கமுறும் உலகமானது, ஒருதடவைக்குப் பலதடவை கேட்கப்பட்டிருப்பதுமான உண்மையை மறந்து மறந்து, (ஏதோ ஒரு) பொய்ம்மையான விஷயத்திற் புகுந்து புகுந்து (ஆத்மாவினிடத்தும் கர்மம் உண்டென்று) ஆக்ஷேபிக்கின்றது என, மெய்ப்பொருளை அறிதல் அருமை என்பதையும் நோக்கிப் பகவான் மீண்டும் மீண்டும் விடை அருளிச்செய்கிறார்.

ஆத்மாவிடத்துக் கர்மமில்லை என்பது, சுருதியிலும் ஸ்மிருதியிலும் யுக்தியினாலும் நன்கு தெரிந்திருப்பது; "இது புலப்படாதது, இது நினைக்கமுடியாதது" (உ - உரு), "இது பிறப்பதில்லை, இறப்பதில்லை" (உ - உ0) என்பன முதலாகக் கூறப்பட்டுள்ளது; (ரு - கஅ முதலாக மேலே) கூறப்படுவது. அந்த ஆத்மாவினிடத்து, கர்மமின்மையாகிய அகர்மத்தில் கர்மமாகிய விபரீதத்தை[விரோதத்தை]க் காணுதலானது (பிராணிகளுடைய மனத்தினுள்) அளவுகடந்து வேரூன்றியிருப்பதாம். ஏனெனில், "எது கர்மம்? எது அகர்மம்? என்ற இவ்விஷயத்தில் ஞானிகளும் மயங்கியுள்ளார்" (சு - கசு). "நான் செய்பவன், இது என்னுடைய தொழில், இத்தொழிலின் பயனை நான் அநுபவிக்கவேண்டும்" என உடம்பு முதலியவற்றைச் சார்ந்துநிற்கும் கர்மத்தை ஆத்மாவினிடத்து ஏற்றி, அவ்வண்ணமே, "நான் தொல்லையில்லாது, தொழிலில்லாது ஸுகியாயிருக்குமாறு மௌனமாயிருக்கின்றேன்" என, தேகம்மனம் இந்திரியங்களென்றவற்றைச் சார்ந்துநிற்கும் (ஓய்வையும், அதாவது,) தொழில் ஓய்ந்துஇருத்தலையும், அதனால் உண்டான ஸௌக்கியத்தையும் [ஸுகமாயிருத்தலையும்],

आत्मनि अध्यारोप्य "न करोमि किञ्चित्, तूष्णीं सुखमासे" इति अभिमन्यते लोकः । तत्र इदं लोकस्य विपरीतदर्शनापनयनाय आह भगवान्—'कर्मण्यकर्म यः पश्येत्' इत्यादि ॥

अत्र च कर्म कर्मैव सत् कार्यकरणाश्रयं कर्मरहिते अविक्रिये आत्मनि सर्वैरध्यस्तं, यतः पण्डितोऽपि "अहं करोमि" इति मन्यते । अतः आत्मसमवेततया सर्वलोकप्रसिद्धे कर्मणि नदीकूलस्थेष्विव वृक्षेषु गतिप्रतिलोमेन अकर्म कर्माभावं यथाभूतं गत्यभावमिव वृक्षेषु यः पश्येत्, अकर्मणि च कार्यकरणव्यापारोपरमे कर्मवत् आत्मनि अध्यारोपिते—"तूष्णीं अकुर्वन् सुखमासे" इत्यहंकाराभिसंधिहेतुत्वात्—तस्मिन् अकर्मणि च कर्म यः पश्येत्, यः एवं कर्माकर्मविभागज्ञः स बुद्धिमान् पण्डितः मनुष्येषु स युक्तः योगी कृत्स्नकर्मकृच्च, सः अशुभात् मोक्षितः कृतकृत्यो भवति इत्यर्थः ॥

ஆத்மாவிடத்து ஏற்றி "நான் ஒன்றுஞ்செய்வதில்லை, மௌனமாக ஸுகமாய் இருக்கின்றேன்" என்று உலகம் அபிமானித்துநிற்கின்றது [நான் என்னும் அஹங்கார முனைப்போடு அவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கின்றது]. அது (அவ்வாறு) இருப்பதனால், ஜனங்களுடைய மயக்கஉணர்வைப் போக்குதற்காகப் பகவான் "எவன் கர்மத்திலே அகர்மத்தைக் காண்கிறானோ" என்று தொடங்குகின்ற இதனைக் கூறலானார்.

இனி, இங்கு [வ்யவஹாரநிலையிலே] தேகம் மனம் இந்திரியங்கள் என்றவற்றைச் சார்ந்துநிற்கும் கர்மம் கர்மமாகவே இருந்துகொண்டு, கர்மமில்லாத நிர்விகாரியான ஆத்மாவினிடத்து எல்லாராலும் ஏற்றப்பட்டிருக்கின்றது; ஏனெனில், அறிவுள்ளவனுங்கூட "நான் செய்கிறேன்" எனக்கொள்கிறான். ஆகவே (இச்சுலோகத்தின் கருத்து வருமாறு):—(தெப்பத்திலிருப்பவன்) எதிரே செல்லுதலால், (விரைந்து நடப்பன போலத் தோற்றுகின்றனவாய்) நதிக்கரையில் நிற்கும் மரங்களினிடத்து நடத்தலின்மையை(க் காண்பது)போல, எவன், ஆத்மாவொடு ஸமவேதமாயிருப்பதாக ஸகல ஜனங்களும் (விபரீதமாய்த்) தெரிந்துள்ள கர்மத்திலே கர்மமின்மையை உள்ளபடி காண்கிறானோ, (அவன் அறிவுள்ளவன்). [ஸமவேதமாயிருப்பது = (நூலொடு வெண்மைநிறம்போல)ஒற்றித்திருப்பது.] தேகம் மனம் இந்திரியங்கள் என்றவற்றினுடைய தொழிலின் ஓய்வாகிய அகர்மமானது. "நான் மௌனமாய் ஒன்றுஞ்செய்யாமல் ஸுகமாய் இருக்கிறேன்" என்னும் அஹங்காரமுனைப்பு(ஆகிய தொழிலு)க்குக் காரணமாவதால், ஆத்மாவினிடத்துக் கர்மம்போல(ப் பொய்ம்மையாக) ஏற்றப்பட்ட அகர்மத்திலும் எவன் கர்மத்தை [நான் ஒன்றுஞ்செய்யாமல் ஸுகமாய் இருக்கின்றேன் என்று அகங்கரித்தல் போன்ற தொழிலை]க் காண்கின்றானோ,—(அதாவது,) எவன் இவ்வாறாகக் கர்மஅகர்மங்களின் வேறுபாட்டை பகுத்தறிபவனோ, அவன் மனிதரில் அறிவுடையவன், அவன் யோகி, ஸகல கர்மங்களையும் செய்தவன்: அவன் தீமையினின்றும் விடுபட்டவனாய்ச் செய்யவேண்டியதைச் செய்திருப்பவனாய் [முக்திகைகூடப்பெற்றவனாய்] இருக்கிறான் என்பது (தேர்ந்த) பொருள்.

अयं श्लोकः अन्यथा व्याख्यातः कैश्चित्। कथम्? नित्यानां किल कर्मणाम् ईश्वरार्थे अनुष्ठीयमानानां तत्फलाभावात् अकर्माणि तानि उच्यन्ते गौण्या वृत्त्या। तेषां च अकरणम् अकर्म; तच्च प्रत्यवायफलत्वात् कर्म उच्यते गौण्यैव वृत्त्या। तत्र नित्ये कर्मणि अकर्म यः पश्येत् फलाभावात्; यथा धेनुरपि गौः अगौः इत्युच्यते क्षीराख्यं फलं न प्रयच्छति इति, तद्वत्। तथा नित्याकरणे तु अकर्मणि च कर्म यः पश्येत् नरकादिप्रत्यवायफलं प्रयच्छति इति॥

न एतत् युक्तं व्याख्यानम्। एवं ज्ञानात् अशुभात् मोक्षानुपपत्तेः 'यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्' इति भगवता उक्तं वचनं बाध्येत। कथम्? नित्यानाम् अनुष्ठानात् अशुभात् स्यात् नाम मोक्षणम्, न तु तेषां फलाभावज्ञानम्। न हि नित्यानां फलाभावज्ञानम् अशुभमुक्तिफलत्वेन चोदितम्, नित्यकर्मज्ञानं वा। न च भगवता एव इह उक्तम्। एतेन अकर्मणि कर्मदर्शनं प्रत्युक्तम्। न हि अकर्मणि "कर्म" इति दर्शनं कर्तव्यतया इह चोद्यते, नित्यस्य तु कर्तव्यतामात्रात्।

சிலர் இச்சுலோகத்தை வேறுவகையாக உரைத்தனர்.—எப்படி ?—ஈச்வரனுக்கென்று அநுஷ்டிக்கப்படும் நித்யகர்மங்களுக்குப் பயன் இல்லாமையால், அவைகள் உபசாரவழக்கினுல் அகர்மங்கள் எனப்படுகின்றன. இனி, அவற்றைச் செய்யாதிருத்தல், அகர்மமென்பது. அது குற்றத்தை விளைப்பதனுல், உபசாரவழக்கினுலேயே கர்மம் எனப்படுகின்றது. பசு गौः [பசு]வாயிருந்தாலும், பால் என்கிற பயனைக் கொடுப்பதில்லை என (அது) अगौः [பசு அன்று] என்று கூறப்படுமாறுபோல, எவன் அந்த நித்யகர்மத்திலே பயனில்லாமையினுல் அகர்மத்தைக் காண்கிருனே, அவ்வாறே எவன் (அகர்மமானது)நரகம் முதலான கெடுதியாகிய பயனைத் தருகின்றதென, நித்யகர்மத்தைச் செய்யாமையாகிய (அந்த) அகர்மத்திலும் கர்மத்தைக் காண்கிருனே, (அவன் அறிவுடையவன்..... ....).

இந்த உரை சரியன்று. இத்தகைய அறிவினுல் தீமையினின்றும் நீங்குதல் அமையாததலின், "நீ எதனை அறிந்து கெடுதியினின்றும் விடப்படுவாயோ" (௪ - ௧௬) எனப் பகவான் அருளிச்செய்த திருவாக்கு மாறுபடநிற்பதாகும் [வீணுகும்].—எப்படி ?—நித்யகர்மங்களை அநுஷ்டித்தலால் கெடுதியினின்று நீங்குதலென்பது இருக்கட்டும் [வாதத்திற்காக அதனை ஒத்துக்கொள்வோம்]. என்றுலும், அவற்றிற்குப் பயனில்லை யென்னும் அறிவினுல் (அவ்வாறு நீங்குதல்) அமையாது. தீமையினின்றும் நீங்குதல், நித்யகர்மங்களுக்குப் பயனில்லையென்னும் அறிவின் பயனுகவாவது, நித்யகர்மங்களுடைய அறிவின் பயனுகவாவது (சுருதியில்) விதிக்கப்படவில்லையன்ருே. பின்னும்,(அது)பகவானுலேயே இங்கு க்கூறப்படவில்லை.அகர்மத்தில் கர்மத்தைக் காண்பதற்கு, இதனுல் மறுமொழி கூறப்பட்டது.அகர்மத்தினிடத்திலே கர்மமென்று காண்பது அவச்யமென இங்கு விதிக்கப்படுவதில்லை [அகர்மத்தைக் கர்மமாகக் கொள்ளவேண்டு மென்று இச்சுலோகத்தில் விதிக்கப்படவில்லை]. மற்று, நித்ய

𑌨 𑌚 “𑌅𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑌾𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿” 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌫𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌨𑌾𑌪𑌿 “𑌕𑌰𑍍𑌮 𑌅𑌕𑌰𑍍𑌮” 𑌇𑌤𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑌾𑌤𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌾 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌚 𑌫𑌲𑌮𑍍 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 । 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌹𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑌰𑍂𑌪𑌮𑍍 । 𑌕𑍁𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑌾𑌤𑍍 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌮𑍍? 𑌨 𑌹𑌿 𑌤𑌮𑌃 𑌤𑌮𑌸𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥

𑌨𑌨𑍁 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌯𑌤𑍍 𑌅𑌕𑌰𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨 𑌤𑌤𑍍 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍; 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿? 𑌗𑍌𑌣𑌂 𑌫𑌲𑌭𑌾𑌵𑌾𑌭𑌾𑌵𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑍍—𑌨, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌗𑍌𑌣𑌸𑍍𑌯 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌅𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌹𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌤𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯𑌾𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌪𑌿 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍 “𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌫𑌲𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌚 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌰𑌕𑌪𑌾𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍” 𑌇𑌤𑌿; 𑌤𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌾𑌜𑍇𑌨 𑌪𑌰𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌾𑌰𑍂𑌪𑍇𑌣 ‘𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾

கர்மத்தைச் செய்யவேண்டுமென்பதுதான் விதிக்கப்படுகின்றது). மேலும், “ நித்யகர்மத்தைச்செய்யாமையினால் குற்றம் வருகின்றது ” என்னும்அறிவினால் ஒரு பயனும் வாராது. அன்றியும், (பகவான்என்ற புத்தியை வைக்கப்பெறும் விக்கிரகம் முதலியனபோல) “ நித்யகர்மத்தைச் செய்யாமையானது,(கர்மமென்ற)எண்ணத்தை வைக்கப்பெறும் பொருள்” எனவும் விதிக்கப்படவில்லை. மற்றும், கர்மத்தை அகர்மமென்று (அறியும்)பொய்யறிவினால் தீமையினின்று நீங்குதலும், அறிவுடைமையும், நிஷ்டைகூடிநிற்றலும், கர்மங்களனைத்தையும் அநுஷ்டித்திருப்பதும், இன்னும் இவை போன்றதும் பயனாகவாவது,புகழ்ச்சியாகவாவது அமையாது.பொய்யறிவென்பதே நேரான தீமைவடிவந்தான் ; (அது ஒன்றை)மற்றொரு தீமையினின்றும் நீக்குதல் ஏது ? இருள் இருளை நீக்குவதாகாதன்றோ.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், கர்மத்தை அகர்மமாகக் காண்பதும் அகர்மத்தைக் கர்மமாகக் காண்பதும் எதுவோ, அது [அவ்வறிவு] பொய்யறிவு அன்று. அப்பொழுதென்னவெனில்,—(அவ்வறிவு) - “(கர்மத்தை அகர்மமாகக் காண்பதிலே) பயன் உண்டு, (அகர்மத்தைக் கர்மமாகக் காண்பதிலே) பயன் இல்லை ” என்பதனால் உண்டாகும் கௌணமான அறிவு. (கௌணம் - உபசாரம் : அதாவது, லக்ஷணையால் வேறொருபொருளை அறிவிப்பது. “ லக்ஷணையாவது - பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தம்த்ம்பொருளை உணர்த்தாது.......தாத்பர்யபொருளை.....அறிவித்தல். ” இவன் மாடு என்றவிடத்து,மாடென்னும்சொல் தன்பொருளைஉணர்த்தாது,மடையன் என்னும் தாத்பர்யத்தை அறிவித்துநின்றது காண்க).

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; கர்மஅகர்மங்களைப்பற்றிய கௌணமான அறிவினாலும் பயன் உண்டு எனச் சுருதியிலே கூறப்படாமையின். அன்றியும், (பிரகிருதத்தில்)கூறியதை விட்டிட்டு, கூறாததைக் கற்பித்துக்கொள்வதனால் ஒருவிசேஷமும் காணப்படவில்லை.“ நித்யகர்மங்களுக்குப் பயனில்லை,ஆனால் அவற்றைச் செய்யாமையினால் நரகத்துவீழ்தலாகும்”என நேராகவே சொல்லக்கூடியதாயிருக்க,அப்பொழுது பிறர்க்கு மயக்கமாயிருக்கும் “ எவன் கர்மத்தில் அகர்மத்தைக் காண்கிறானோ”

किम् ? तत्र एवं व्याचक्षाणेन भगवतो वाक्यं लोकव्यामोहाय इति व्यक्तं कल्पितं स्यात् । न च एतत् छद्मरूपेण वाक्येन रक्षणीयं वस्तु । नापि शब्दान्तरेण पुनः पुनः उच्यमानं सुबोधं स्यात् इत्येवं वक्तुं युक्तम् । 'कर्मण्येवाधिकारः' इत्यत्र हि स स्फुटतर उक्तः अयमर्थः न पुनः वक्तव्यो भवति । सर्वत्र च प्रशस्तं बोद्धव्यं च कर्तव्यमेव । न निष्प्रयोजनं बोद्धव्यम् इति उच्यते । न च मिथ्याज्ञानं बोद्धव्यं भवति, तत्प्रत्युपस्थापितं वा वस्त्वाभासम् । नापि नित्यानाम् अकरणात् अभावात् प्रत्यवायभावोत्पत्तिः, 'नासतो विद्यते भावः' इति 'कथमसतः सज्जायेत' इति च असतः सज्जन्मप्रतिषेधात् । असतः सदुत्पत्तिं ब्रुवता असदेव सद्भवेत्, सच्चापि असद्भवेत् इत्युक्तं स्यात् । तच्च अयुक्तं, सर्वप्रमाणविरोधात् । न च निष्फलं विदध्यात् कर्म शास्त्रम्, दुःखस्वरूपत्वात्, दुःखस्य च बुद्धिपूर्वकतया कार्यत्वानुपपत्तेः । तदकरणे च नरकपाताभ्युपगमात् अनर्थायैव उभ-

---

என்று தொடங்கும் கபட(வாக்கியத்தால்) ஆவதென்ன ? அங்கு இவ்வாறு உரைப்பவரால் "பகவானுடைய திருவாக்கானது உலகம் மயங்குதற்பொருட்டாம்" எனத் தெளிவாகக் கற்பனைசெய்யப்பட்டதாகும். மேலும், இந்த(நித்யகர்மாநுஷ்டான) விஷயம் கபடரூபமான வாக்கியத்தால் பாதுகாக்கத்தக்கதில்லை ; (அது வேறு)வேறு சொற்களால் மீண்டும் மீண்டும் சொல்லப்படும்பொழுது, எளிதில் அறியக்கூடியதாகும் என்று இவ்வாறு கூறவும்படாது. ஏனெனில், "கர்மத்திலேதான் அதிகாரம்" (உ - சஎ) என்னுமிடத்து மிகத்தெளிவாகக் கூறப்பட்ட அவ்விஷயத்தை மறுபடியும் கூறவேண்டியதில்லை. எங்கும்[சாஸ்திரத்திலும், உலகத்திலும்]புகழப்பெற்றதும் செய்தற்குஉரியதாயு மிருப்பதையே (ஒருவன்) தெரிந்துகொள்ளவேண்டும். வீணை தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கூறப்படவில்லை. மேலும், பொய்யறிவானது அறிதற்கு உரியதில்லை. (அவ்வாறே,) அதனால் எதிரே நிறுத்தப்பட்ட போலியான பொருளும் (அறிதற்கு உரியதில்லை) [அப்பொய்யறிவுக்கு விஷயமான பொருள், தோற்றமாதலால் அதுவும் அறிதற்குயோக்யமானதில்லை.] மற்றும், நித்யகர்மங்களைச் செய்யாமையாகிய இன்மையினின்றும் குற்றமாகிய உண்மை உண்டாகமாட்டாது ; "பொய்ம்மைக்கு உண்மை இல்லை"(உ - கசு)எனவும், "இன்மையினின்றும் உண்மை எப்படிஉண்டாகும்?"(சா - சு - உ - உ)எனவும் இன்மையினின்றுஉண்மைஉண்டாதலை மறுத்தலின். இன்மையினின்று உண்மை உண்டாதலைக் கூறுபவரால், "இன்மையே உண்மையாகும், உண்மையும் இன்மையாகும்" எனக் கூறப்பட்டதாகும். அதுவோ நேரன்று ; ஸகலநியாயங்களுக்கும் முரண்படுதலின். இன்னும், சாஸ்திரமானது பயனில்லாத கர்மத்தை விதிக்காது ; (இது)துன்பவடிவமாதலாலும், துன்பத்தைத் தெரிந்துவேணுமென்று செய்துகொள்ளுதல் அமையாததாதலாலு மென்க. இனி, அதனைச்செய்யாதவிஷயத்தில் நரகத்துவீழ்தலை ஒத்துக்கொள்வதனால், செய்தாலும் செய்யாவிட்டாலும் இருவிதத்திலும் கெடுதிக்காகவே யுள்ள சாஸ்திரமானது

यथा कश्चित् कर्मणे कर्मणे च साध्यं निष्फलं कल्पितं स्यात् । स्वाभ्युपगमविरोधश्च "नित्यं निष्फलं कर्म" इति अभ्युपगम्य "मोक्षफलाय" इति ब्रुवतः ॥

तस्मात् यथाश्रुत एवार्थः 'कर्मण्यकर्म' इत्यादेः । तथा च व्याख्यातः अस्माभिः श्लोकः ॥ १८ ॥

तदेतत् कर्मणि अकर्मादिदर्शनं स्तूयते —

१९. यस्य सर्वे समारम्भाः कामसंकल्पवर्जिताः ।
ज्ञानाग्निदग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥

यस्य यथोक्तदर्शिनः सर्वे यावन्तः समारम्भाः सर्वाणि कर्माणि, समारभ्यन्ते इति समारम्भाः, कामसंकल्पवर्जिताः कामैस्तत्कारणैश्च संकल्पैः वर्जिताः मुधैव चेष्टामात्रा अनुष्ठीयन्ते; प्रवृत्तेन चेत् लोकसंग्रहार्थम्, निवृत्तेन चेत् जीवनमात्रार्थम् । तं ज्ञानाग्निदग्धकर्माणं कर्मादौ अकर्मादिदर्शनं ज्ञानं तदेव अग्निः तेन ज्ञानाग्निना दग्धानि शुभाशुभलक्षणानि कर्माणि यस्य तम् आहुः परमार्थतः पण्डितं बुधाः ब्रह्मविदः ॥ १९ ॥

வீண் என்று கொள்ளப்பட்டதாகும். அன்றியும், "நித்யகர்மத்திற்குப் பயனில்லை" எனக்கொண்டு, பின்னே "(அது) முக்திக்குப் பயன்படுவதாம்" என்பார்க்குத் தம் கொள்கைக்கு விரோதமும் முண்டாகும்.

ஆதலால், "கர்மத்தில் அகர்மத்தை" என்றுதொடங்கும் வாக்கியத்திற்கு உள்ளபடியான சொல்அர்த்தமேதான், (லக்ஷணையால் வரும் அர்த்தமன்று). அவ்வாறே நாம்(இச்)சுலோகத்தை உரைத்திருக்கின்றோம். (கஅ)

பண்டிதனென்பவன் எவன்?

ஆதலால், இதனை = கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதனைப் (பகவான்) புகழ்ந்து கூறுகிறார்:

கக. எவனுடைய கர்மங்களெல்லாம், ஆசையும் அபிமாநமும் அற்றனவோ, அவனை (அதாவது) ஞானமாகிய தீயினால் (ஸகல) கர்மமும் எரிக்கப்பெற்றவனை ஞானிகள் "பண்டிதன்" என்கிறார்கள்.

கீழ்க்கூறிய(உண்மையைக்)காண்பவனால் (தான்) செய்யுங் கர்மங்களெல்லாம், ஆசைகளும் அவற்றிற்குக் காரணமான அபிமாநங்களும்அற்ற வெறுஞ்செய்கைகளாகச் சும்மா அநுஷ்டிக்கப்படுகின்றன. (அவன் உலகவாழ்க்கையை) மேற்கொண்டவனாயின், உலகத்தை நல்வழிப்படுத்துதற்காக (அக்கர்மங்களைச் செய்கிறான்; அவன் அவ்வுலகவாழ்க்கையினின்றும்) ஒழிந்தவனாயின், ஜீவித்தற்குமாத்திரம் (அவற்றைச் செய்கிறான்). எவனுடைய நல்வினை தீவினைகள் (எல்லாம்), கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் காண்பதான ஞானமென்னும் தீயினால் எரிக்கப்பட்டுள்ளனவோ, அவனை ஞானிகளான ப்ரஹ்மவித்துக்கள் [ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள்] உண்மையான பண்டிதன் என்கிறார்கள். (கக)

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍌 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑍀 𑌸 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌜𑍀𑌵𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌚𑍇𑌷𑍍𑌟𑌃 𑌸𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌨𑍍 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸𑌸𑌾𑌧𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌏𑌵 । 𑌸 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌨𑍍 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌸𑌂𑌭𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌤𑌤𑍍𑌫𑌲𑍇 𑌚 𑌸𑌂𑌗𑌰𑌹𑌿𑌤𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑍀𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍 𑌆𑌹—

௨௦. 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃 ॥

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌅𑌭𑌿𑌮𑌾𑌨𑌂 𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑌃 𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑌰𑌹𑌿𑌤𑌃, 𑌆𑌶𑍍𑌰𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌯𑌤𑍍 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑌿𑌸𑌾𑌧𑌯𑌿𑌷𑌤𑌿, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌷𑍍𑌟𑌫𑌲𑌸𑌾𑌧𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌰𑌹𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑍇𑌨 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾-

உலகத்திற்கு நல்லொழுக்கத்தை நடத்திக்காட்டும் ஞானியின் ஒழுக்கம்.

இனி, கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவன் எவனோ, அவன் (ஆத்மா அநாத்மாக்களைப்) பகுத்தறிதற்குமுன் (கர்மத்தை) மேற்கொண்டவனாயினும்,(அவற்றைப் பகுத்தறிந்தபின்)கர்மம்முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றைக் காண்பதனாலேயே கர்மம் நீங்கியவனாய், துறவியாய், ஜீவித்தற்குமாத்திரம்வேண்டிய செய்கையை யுடையவனாய் (இருப்பதனால்) கர்மத்தை மேற்கொள்வதில்லை. ஆனால், எவன் கர்மத்தைச் செய்துவருகையிலே, பின்பு, ஆத்மாவை உள்ளபடி உணரும் அறிவுண்டாகப்பெற்ற (ஞானியா)வனோ[ஒருவன் கர்மத்தைச் செய்துவருகையிலே, அவனுக்குச் சீக்கிரமாகவாவது தாமதமாகவாவது ஆத்மஞானம் உண்டாகலாமாதலின்,அப்பொழுது அவ்வாறு ஞானம் உதிக்கப்பெற்றவன் எவனோ], அவன் எக்கர்மத்திலும் பயனைக் காணாதவனாய், கர்மத்தையும்(அதற்கான)கருவிகளையும் துறந்தேவிடுகிறான். அவன் ஏதோ ஒருகாரணத்தால் கர்மத்தைத் துறக்கக்கூடாமலிருக்கும்போது, கர்மத்திலும் அதன் பயனிலும் பற்றில்லாமையினால் தனக்கு ஒருபயனும் இல்லையாகவே, உலகத்தை நல்வழிப்படுத்தும்பொருட்டு முன்போலவே கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், (அவன்) ஒன்றுஞ் செய்கிறானே இல்லை ; ஞானமென்னும் தீயினால் கர்மம் (எல்லாம்) எரிக்கப்பட்டமையின், அவனுடைய கர்மமானது அகர்மமாகவே ஆகின்றது. என்ற இவ்விஷயத்தை உணர்த்தும்பொருட்டு(ப் பகவான்) கூறுகிறார் :

௨௦. கர்மத்தின் பயனிலே பற்றை விட்டு, எப்பொழுதும் திருப்தியுடையவனாய் ஆச்ரயமின்றி நிற்கின்றவன் கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், அவன் ஒன்றுஞ் செய்கின்றானே இல்லை. [ஆச்ரயம் - ஒருபொருளினுடைய அபேக்ஷை.]

(ஞானியானவன்) கீழ்க்கூறிய ஞானத்தால் கர்மங்களிலே அபிமானத்தையும், பயனிலே பற்றையும் விட்டு எப்பொழுதும் திருப்தியுள்ளவன், விஷயங்களிலே விருப்பமற்றவன் என்பது பொருள். (ஒருவன்)எதனைச் சார்ந்துநின்று தனக்குவேண்டியதைச் சாதித்துக்கொள்ளக் கருதுகின்றானோ, அது - ஆச்ரயம். (அஃதில்லாதவன்), ஆச்ரயமில்லாதவன், இம்மைமறுமைப்பயன்களுக்கான ஸாதநங்களை ஆச்ரயிக்காதவன்[அவற்றைத் தேடாதவன்] என்றபடி. இவ்வாறுள்ள அ(ந்த ஞானியான)வன்

𑌭𑌵𑌾𑌤𑍍 𑌸𑌸𑌾𑌧𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇, 𑌤𑌤𑌃 𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌣𑌾𑌪𑌰𑌿𑌜𑌿𑌹𑍀𑌰𑍍𑌷𑌯𑌾 𑌵𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃 ॥ ௨௦ ॥

𑌯𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌾𑌰𑌂𑌭𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑍇 𑌸𑌂𑌜𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌃 𑌸 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌾𑌶𑍀𑌰𑍍𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌤𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸𑌸𑌾𑌧𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌚𑍇𑌷𑍍𑌟𑌃 𑌯𑌤𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌮𑌰𑍍𑌥𑌮𑌾𑌹—

௨௧. 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ।
𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 ॥

𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌾𑌃 𑌆𑌶𑌿𑌷𑌃 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌃 𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌃, 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌸𑌂𑌘𑌾𑌤𑌃 𑌤𑍌 𑌉𑌭𑌾𑌵𑌪𑌿 𑌯𑌤𑍌 𑌸𑌂𑌯𑌤𑍌 𑌯𑍇𑌨 𑌸𑌃 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾, 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃

தனக்கு ஒருபயனும் இல்லையாதலின் கர்மத்தையும்(அதற்கான)ஸாதநங்களையும் விட்டொழியவேவேண்டும் என்று அமையும்; அமையவே,(அங்ஙனம்) அவற்றினின்றும் நீங்குதலைச் செய்யமுடியாது நேர்தலின், உலகத்தை நல்வழி நடக்கச் செய்யவேண்டும் என்னும் கருத்தினாலாவது, நல்லோர்பழிப்பை வாராமல் தவிர்த்துக்கொள்ளவேண்டும்என்னும் எண்ணத்தினாலாவது அவன் முன்போலக் கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், கர்மமில்லா ஆத்மாவின் காட்சியைப் பெற்றிருத்தலால் (அவன் உண்மையாகவே) ஒன்றுஞ் செய்வதே இல்லை. (௨௦)

உடம்பு நிற்றற்பொருட்டு ஞானிசெய்யும் செய்கை.

மற்று, எவன் (தான்) கர்மத்தில் தலைப்படுதற்கு முன்னமேயே, எல்லாவற்றினும் உள்ளேயுள்ள ஆத்மாவான கர்மமில்லா ப்ரஹ்மத்தினிடத்து (அதுவே, தான் என்னும்) ஆத்மக்காட்சி உண்டாகப்பெற்றவனாய், முற்கூறியவனுக்கு மாறாய் [உலக நன்மைமுதலியவற்றைக் கவனியாதவனாய்]இருக்கின்றானோ, அவன் இம்மைமறுமைகளில் வேண்டப்படும் விஷயங்களிலே ஆசையொழிந்தவனாதலால் இம்மைமறுமைக்கான கர்மத்தில் ஒருபயனையும் காணாது, கர்மத்தையும் (அதற்கான) ஸாதநத்தையும் துறந்து, உடம்புநிற்றற்குமாத்திரம்(வேண்டிய) செய்கைகளை யுடையவனாய் ஞானத்திலே உறுதியாக நிற்கும் யதியாய்[ஊக்கமுள்ளவனாய்] (துன்பத்தினின்றும்)விடுபடுகின்றான். என்னும் விஷயத்தை உணர்த்தும்பொருட்டு(ப் பகவான்) அருளிச்செய்கிறார் :

௨௧. ஆசை நீங்கி, மனத்தையும் தன்னையும் [இந்திரியங்களோடு சரீரத்தையும்] அடக்கி, (தனது பணம், நிலம், முதலிய) ஸகல உடைமைகளையும் விட்டிட்டு, சாரீரகர்மத்தைமாத்திரம் செய்பவன் பாவத்தை அடைவதில்லை. [சாரீரகர்மம் – சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம்வேண்டிய கர்மம்.]

எவனிடத்தினின்று ஆசைகள் போய்விட்டனவோ, எவனாலே அந்தக்கரணமும், வெளியில் தோற்றுவதான தேகேந்திரியங்களின் சேர்க்கையுமாகிய இரண்டும் அடக்கப்பட்டனவோ, (இன்னும்)எவனாலே(தனது பொருள், வீடுமுதலிய) உடைமைகளெல்லாம் விடப்பட்டனவோ, அவன் (தனது) சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம்

யத꞉ ஸ꞉ த்யக்தஸர்வபரிக்³ரஹ꞉, ஶாரீரம் ஶரீரஸ்தி²திமாத்ரப்ரயோஜனம் கேவலம் தத்ராபி அபி⁴மானவர்ஜிதம் கர்ம குர்வந் ந ஆப்னோதி ந ப்ராப்னோதி கில்பி³ஷம் அநிஷ்டரூபம் பாபம் த⁴ர்மம் ச । த⁴ர்மோ(அ)பி முமுக்ஷோ꞉ முமுக்ஷோ꞉ ப³ந்தா⁴பாத³கத்வாத் கில்பி³ஷமேவ ஸம்ஸார-பா³த⁴கத்வாத் । தஸ்மாத் தாப்⁴யாம் முக்த꞉ ப⁴வதி, ஸம்ஸாராத் முக்தோ ப⁴வதி இத்யர்த²꞉ ॥

‘ஶாரீரம் கேவலம் கர்ம’ இத்யத்ர கிம் ஶரீரநிர்வர்த்யம் ஶாரீரம் கர்ம அபி⁴ப்ரேதம்? ஆஹோஸ்வித் ஶரீரஸ்தி²திமாத்ரப்ரயோஜனம் ஶாரீரம் கர்ம இதி?

கிம் ச அத꞉—யதி³ ஶரீரநிர்வர்த்யம் ஶாரீரம் கர்ம, யதி³ வா ஶரீர-ஸ்தி²திமாத்ரப்ரயோஜனம் ஶாரீரம் இதி? ॥

உச்யதே—

யதா³ ஶரீரநிர்வர்த்யம் கர்ம ஶாரீரம் அபி⁴ப்ரேதம் ஸ்யாத், ததா³ த்³ருஷ்டா-த்³ருஷ்டப்ரயோஜனம் கர்ம ப்ரதிஷித்³த⁴மபி ஶரீரேண குர்வந் நாப்னோதி கில்பி³ஷம் இதி ப்³ருவதோ விருத்³தா⁴பி⁴தா⁴நம் ப்ரஸஜ்யேத । ஶாஸ்த்ரீயம் ச கர்ம த்³ருஷ்டா-த்³ருஷ்டப்ரயோஜனம் ஶரீரேண குர்வந் நாப்னோதி கில்பி³ஷம் இத்யபி ப்³ருவத꞉ அப்ராப்தப்ரதிஷேத⁴ப்ரஸங்க³꞉ । ‘ஶாரீரம் கர்ம குர்வந்’ இதி விஶேஷணாத் கேவலஶப்³த³ப்ரயோகா³ச்ச வாங்மனஸாப்⁴யாம் நிர்வர்த்யம் கர்ம விதி⁴ப்ரதிஷேத⁴-

---

வேண்டிய செய்கையைமட்டும், அதிலுங்கூட அபிமானமில்லாது செய்பவனைத் தீமையாகிய பாவத்தையும்,புண்யத்தையும் அடைவதில்லை.(ஸம்ஸாரத்தினின்றும்)விடு படவிரும்புவோனுக்குப் புண்யமும் பாவமேதான் ; (பிறப்பிறப்பு முதலியஸம்ஸாரக்) கட்டை விளைப்பதாதலின். ஆதலால், (அவன்) அவற்றினின்றும் நீங்கினவனாகிறான், ஸம்ஸாரத்தினின்றும் விடுபட்டவனாகிறான் என்பது பொருள்.

“சாரீரகர்மத்தை மாத்திரம்” என்றவிடத்து, சரீரத்தால் செய்யத்தக்க கர்மம் - சாரீரகர்மம் என்று கருத்தா ? அல்லது, சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்தி ரம் வேண்டிய கர்மம் - சாரீரகர்மம் என்று கருத்தா ?

ஆகவே, இன்னும், (ஒருவினை வருமாறு) :—சரீரத்தால் செய்யத்தக்க கர்மம் சாரீரகர்மம் என்றால், (வரும் குற்ற மென்ன ?) அல்லது, சரீரம் நிலைத்திருப்பதற்கு மாத்திரம் வேண்டிய கர்மம் - சாரீரகர்மம் என்றால், (வரும் பயனென்ன ?)

கூறுவோம் :

(முதல்வகை):—சரீரத்தால்செய்யத்தக்க கர்மம்-சாரீரகர்மம் என்றால்,இம்மை மறுமைகளிலே பயனை விளைப்பதாய்(ச் சாஸ்திரத்தில்) விலக்கப்பட்ட கர்மத்தையும் செய்பவன் பாவத்தை அடையமாட்டான் என்றுசொல்வார்க்கு, அப்பொழுது (அச் சாஸ்திரத்தோடு) மாறுபடக் கூறுதல் (என்னும் குற்றம்) வரும். இனி, “இம்மைமறு மைகளில் பயனை விளைப்பதும், சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதுமான கர்மத்தைச் செ ய்பவன்பாவத்தை அடையமாட்டான்” என்றுசொல்வார்க்கும், வாராததை விலக்கு தல்(என்னும்குற்றம்)வரும். (அல்லது,)“சாரீரகர்மத்தைச்செய்பவன்”என்னும் விசேஷ ணத்தாலும்,“மாத்திரம்”என்னும்சொல்லின்பிரயோகத்தினாலும்“விதிவிலக்குக்களைப்

𑌵𑌿𑌷𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍। 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌪𑌕𑍍𑌷𑍇 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 𑌆𑌪𑌦𑍍𑌯𑍇𑌤। 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌸𑍇𑌵𑌾𑌪𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌭𑍂𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 𑌅𑌨𑌰𑍍𑌥𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

𑌯𑌦𑌾 𑌤𑍁 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍, 𑌤𑌦𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌗𑌮𑍍𑌯𑌂 𑌶𑌰𑍀𑌰𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌅𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌤𑍈𑌰𑍇𑌵 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌕𑍇𑌵𑌲𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 "𑌅𑌹𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌦𑌿𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌲𑍋𑌕𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 𑌇𑌤𑌿। 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌪𑌾𑌪𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌨 𑌆𑌪𑍍𑌨𑍋𑌤𑌿; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍇𑌨 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌫𑌲𑌾𑌨𑍁𑌵𑌾𑌦 𑌏𑌵 𑌏𑌷𑌃। 𑌏𑌵𑌂 '𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮' 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥ ௨௧ ॥

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌯 𑌯𑌤𑍇𑌃 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍇𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌹𑍇𑌤𑍋𑌃 𑌪𑌰𑌿-

பற்றிநிற்பதும், தருமம்அதர்மம்என்னும்சொற்களால் வழங்கப்படுவதும்,மனமொழிகளால் செய்யத்தக்கதுமான கர்மத்தைச் செய்பவன் பாவத்தை அடைகிறான்" என்பது (கருத்தெனக்)கூறலாம். அதிலேயுங்கூட—விதித்ததை,மனமொழிகளால் அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் பாவமடைதலைச் சொல்லுதல் விரோதமாகும். விலக்கியதைக்கொள்ளும்பக்ஷத்திலும்,முன்னமே அமைந்துள்ள விஷயத்தை வீணாகத் திரும்பச்சொல்லுதல்மாத்திரம் ஆகும்.

(இரண்டாம் வகை):—இனி, சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம் வேண்டிய கர்மம் - சாரீரகர்மம் என்பது கருத்தென்றால், இம்மைமறுமைகளில் பயனை விளைப்பதும், விதிவிலக்குக்களால் உணரப்படுவதும், மனமொழிமெய்களால் செய்யப்படுவதுமான மற்றைய கர்மத்தைச் செய்யாதவனாய், சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம் வேண்டியனவாகிய சரீராதியின் செய்கைகளைமட்டும், "மாத்திரம்"என்னும் சொல்லின் பிரயோகத்தால் "நான் செய்கிறேன்"என்னும் அபிமானமில்லாது அதே சரீரம்முதலியவற்றால் உலகப்பார்வைக்குச் செய்(பவன்போலத் தோன்று)கிறவன் பாவத்தை அடையமாட்டான் என்பது அப்பொழுது (பொருந்தும்). இவ்வாறுள்ளவன் பாவமென்னும் சொல்லால் கூறப்படும் கில்பிஷத்தை அடைதல் நிகழாதாதலின், (அவன்)பாவத்தை = ஸம்ஸாரத்தை அடையமாட்டான். ஞானமாகிய தீயினால் ஸகல கர்மங்களும் எரிக்கப்பட்டமையின் (அவன்,ஸம்ஸாரத்தினின்றும்)தடையில்லாது விடுபடவேபடுகிறான். எனவே, முன்(௪-௧௮)கூறிய நல்லறிவின் பயனை அநுவதித்ததேதான், இது. "சாரீரகர்மத்தைமாத்திரம்" என்பதற்கு இவ்வாறாகப் பொருள்கொள்ளுமிடத்து, ('சாரீரம்' 'மாத்திரம்'என்ற இரண்டும்)குற்றமில்லாதவையாகின்றன. (௨௧)

(தனது) உடைமைகளெல்லாவற்றையும் கைவிட்ட யதிக்குச் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலியஉடைமை இல்லாமையின், இரத்தல் முதலி

ग्रहस्य याचनादिना शरीरस्थितिकर्तव्यतायां प्राप्तायाम् "अयाचितमसंक्लृप्तम् उपपन्नं यदृच्छया" इत्यादिना वचनेन अनुज्ञातं यतेः शरीरस्थितिहेतोः अन्नादेः प्राप्तिद्वारम् आविष्कुर्वन् आह —

२२. यदृच्छालाभसन्तुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥

यदृच्छालाभसन्तुष्टः अप्रार्थितोपनतो लाभो यदृच्छालाभः तेन सन्तुष्टः सञ्जातालंप्रत्ययः । द्वन्द्वातीतः द्वन्द्वैः शीतोष्णादिभिः हन्यमानोऽपि अविषण्णचित्तः द्वन्द्वातीतः उच्यते । विमत्सरः विगतमत्सरः निर्वैरबुद्धिः समः तुल्यः यदृच्छालाभस्य सिद्धौ असिद्धौ च । यः एवम्भूतो यतिः अन्नादेः शरीरस्थितिहेतोः लाभालाभयोः समः हर्षविषादवर्जितः कर्मादौ अकर्मादिदर्शी यथाभूतात्मदर्शननिष्ठः शरीरस्थितिमात्रप्रयोजने भिक्षाटनादौ कर्मणि शरीरादिनिर्वर्त्ये "नैव किञ्चित् करोम्यहम्, गुणा गुणेषु वर्तन्ते" इत्येवं सदा सम्परिचक्षाणः आत्मनः कर्तृत्वाभावं पश्यन् नैव किञ्चित् भिक्षाटना-

---

யவற்றால் சரீரத்தை நிலைத்திருக்கச் செய்யவேண்டும் என்று அமைந்தது ; அமையவே, யதிக்குச் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலானவை கிடைக்கும் வழியானது, "(பிக்ஷை பிறரிடம்) இரக்கப்படாததாக, (முன்னமே) அமர்த்திவைக்கப்படாததாக, தற்செய்லாய் [தன் பிரயத்தினமின்றி]க் கொண்டுவரப் பட்டதாக(இருக்கவேண்டும்)" (போ - உ - அ - கஉ)என்பது முதலான வசநங்களால் அநுமதிபெற்றதென்பதை வெளிப்படுத்தக் கூறுகிறார் :

உஉ. தானாகக் கிடைப்பதைக்கொண்டு திருப்தியடைந்தவன், த்வந்தங்களைக் கடந்தவன் : பொறாமையில்லாதவன் : (உணவுமுதலியன)கிடைத்தலிலும் கிடையாமையிலும் ஒப்பநிற்பவன். (அவன் ஒருகர்மத்தைச்)செய்தாலும், (அதனால்)கட்டப்படுவதில்லை.

தானாகக்கிடைப்பதென்பது - (தான் பிறரிடம்)வேண்டாது வருவது. அதனால்(இது)போதுமென்றஎண்ணம்வந்தவன் (ஞானியாவன்). குளிர்வெப்பம்முதலியவற்றால் தாக்கப்பட்டாலும், மனம்வருந்திக் கலங்காதவன் - த்வந்தங்களைக் கடந்தவன் எனப்படுகிறான். பொறாமை நீங்கினவன் - வைரமில்லாப் புத்தியுடையோன். தற்செயலாய்க் கிடைப்பது(தனக்கு) அமைந்தாலும் அமையாவிட்டாலும் (அவன்)ஸமமானவன். இவ்வாறான எந்த யோகியானவன் சரீரம் நிலைத்திருப்பதற்குக் காரணமான உணவு முதலியவை கிடைத்தாலும் கிடையாவிடினும் ஸமமாயிருந்து, ஸந்தோஷமும் வருத்தமு மில்லாது, கர்மம் முதலானவற்றிலே அகர்மம் முதலானவற்றைக் கண்டு, ஆத்மாவை உள்ளபடிஉணர்தலிலே உறுதியாகநின்று, சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம் வேண்டியனவும் சரீரம்முதலியவற்றால் செய்யப்படுவனவுமாகிய பிக்ஷைக்குச்செல்லுதல் முதலான கர்மங்களிலே "நான் ஒன்றுஞ்செய்கிறேனில்லை, இந்திரியங்கள் விஷயங்களிற் செல்லுகின்றன" என்று இவ்வாறாக எப்பொழுதும் நன்குஉணர்ந்து, ஆத்மா கர்த்தா இல்லை என்பதைக் காண்பவனாய் (இருக்கின்றானே, அவன்) பிக்ஷைக்குச் செல்லுதல் முதலிய ஒரு கர்மத்தையும் செய்வதே இல்லை.

𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌲𑍋𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌤𑍁 𑌲𑍌𑌕𑌿𑌕𑍈𑌃 𑌆𑌰𑍋𑌪𑌿𑌤𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌟𑌨𑌾𑌦𑍌 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍇𑌨 𑌤𑍁 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌦𑌿𑌜𑌨𑌿𑌤𑍇𑌨 𑌅𑌕𑌰𑍍𑌤𑍈𑌵 । 𑌸 𑌏𑌵𑌂 𑌪𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌂 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌟𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌽𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑌹𑍇𑌤𑍁𑌕𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 𑌦𑌗𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌵𑌾𑌦 𑌏𑌵 𑌏𑌷𑌃 ॥ ௨௨ ॥

‘𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾 𑌸𑌨𑍍 𑌯𑌦𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌭𑌾𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍 𑌤𑌦𑌸𑌂𑌭𑌵𑍇 𑌸𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌅𑌪𑌿 ‘𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃’ 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌃 । 𑌯𑌸𑍍𑌯 𑌏𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑍋 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵—

௨௩. 𑌗𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌚𑌰𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 ॥

ஆனல், (அஜ்ஞானியிடத்துப்போல, அவனிடத்தும் ஸ்நாநபாநம் முதலிய) உலகவ்யவஹாரத்தை ஸமமாகக் காண்கிறபடியால், ஸாமாந்யஜனங்கள், "(அவனும் நம்மைப் போலக் கர்மத்தைச்செய்யும்)கர்த்தாதான்." என ஏற்றுதலால், (அவன்)பிக்ஷைக்குச் செல்லுதல் முதலான கர்மத்தில் கர்த்தா வாகிறான். மற்று, சாஸ்திரப்பிரமாணம் முதலியவற்றால் உண்டான தன்அநுபவத்தால்(அவன்) அகர்த்தாதான் என்க. அவன் கர்த்தா என்பதை இவ்வாறு பிறரால் ஏற்றப்பட்டுச் சரீரம் நிலைத்திருப்பதற்குமாத்திரம்வேண்டியனவாகிய பிக்ஷைக்குச் செல்லுதல் முதலான கர்மங்களைச் செய்தாலும், (அவன் அவற்றால்) கட்டப்படுவதில்லை ; கட்டுக்குக் காரணமான கர்மமும், அதன்காரணமும் ஞானமென்னும் தீயினால் எரிக்கப்பட்டமையின். எனவே, இது (சு - கக, உக - ஆம் சுலோகங்களில்) கூறியுள்ளதின் அநுவாதமே யென்க. (௨௨)

ஞானியின் உலகவ்யவஹாரமானது அவனைக் கட்டுப்படுத்தாது.

எவன் கர்மத்தைச் செய்துவருகையிலே "கர்மமில்லா ப்ரஹ்மமே, தான்" என்பதை எப்பொழுது காணப்பெறுவானே, அப்பொழுது தனக்குச் செய்கையென்பதும், செய்பவனென்பதும், பயனென்பதும் இல்லாதிருத்தலைக் காண்கின்ற அவனுக்குக் கர்மத்தை விட்டிடுதல் வந்திருக்குமளவிலே, ஏதோ ஒருகாரணத்தால் அது முடியாதிருக்க,(அங்ஙனம் அவன்) முன்போலக் கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும், " அவன் உண்மையாகவே ஒன்றுஞ் செய்வதில்லை " (சு - ௨0)என (அவனுக்கு)க் கர்மமில்லாதிருத்தல் " கர்மத்தின் பயனிலே " (சு - ௨0)என்னும் சுலோகத்தினால் உணர்த்தப்பட்டது. எவனுக்கு இவ்வாறு கர்ம மின்மையானது உணர்த்தப்பட்டதோ,அவனுக்குத்தான் (கர்மக்கட்டு இல்லை)—

௨௩. பற்றில்லாதவனாய், விடுபட்டவனாய், ஞானத்திலே மனம் நிலைத்தவனாய்ப் பகவானுக்காகச் செய்கிறவனுடைய கர்மமெல்லாம் கரைந்துபோகின்றன.

𑌗𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑍇𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌏𑌵 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌚𑍇𑌤𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌾𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌾𑌯 𑌯𑌜𑍍𑌞𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍍 𑌆𑌚𑌰𑌤𑌃 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌸𑌹 𑌅𑌗𑍍𑌰𑍇𑌣 𑌫𑌲𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌤𑌤𑍍 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௩ ॥

𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑌮𑍍𑌭𑌕𑌂 𑌸𑌤𑍍 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌯𑌤𑌃—

௨௪. **𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌹𑍁𑌤𑌮𑍍।**
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌅𑌰𑍍𑌪𑌣𑌂 𑌯𑍇𑌨 𑌕𑌰𑌣𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 𑌹𑌵𑌿𑌃 𑌅𑌗𑍍𑌨𑍌 𑌅𑌰𑍍𑌪𑌯𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌵 𑌇𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌅𑌭𑌾𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌰𑌜𑌤𑌾𑌭𑌾𑌵𑌮𑍍; 𑌤𑌦𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌵 𑌅𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 𑌇𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌯𑌤𑍍 𑌰𑌜𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾 𑌏𑌵 𑌇𑌤𑌿 । '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌅𑌰𑍍𑌪𑌣𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌅𑌸𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑌦𑍇 । 𑌯𑌤𑍍 𑌅𑌰𑍍𑌪𑌣𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌵 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌃 𑌤𑌥𑌾 𑌯𑌤𑍍 𑌹𑌵𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌮𑌾𑌣𑌂 𑌤𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌏𑌵 𑌅𑌸𑍍𑌯 । 𑌤𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌇𑌤𑌿 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌪𑌦𑌮𑍍 । 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌯𑌤𑍍𑌰 𑌹𑍂𑌯𑌤𑍇

எல்லாவற்றினின்றும் பற்று ஒழியவும், தருமம்அதர்மம்முதலானகட்டினின்று (தான்) நீங்கவும், ஞானத்திலேயே மனம் நிலைக்கவும் பெற்று, பகவானுடைய ப்ரீதிக்காகச் செய்கிறவனுடைய கர்மமானது பயனோடு கரைந்துபோகின்றது : (அவனுக்கு அக்கர்மமும், அதன் பயனும்) இல்லாமற்போகின்றன என்பது பொருள். (௨௩)

ஞானமென்னும் யாகம்.

மற்று, எக்காரணத்தால் (அவன்) செய்யும் கர்மமானது தன்பயனை விளைவித்தலைச்செய்யாது முழுதும் இல்லாமற்போவதென்பது ? கூறுவோம் : ஏனெனில்,

௨௪. **அர்ப்பிப்பது ப்ரஹ்மம் : ஹவிஸ் ப்ரஹ்மம் : அக்நியாகிய ப்ரஹ்மத்திலே (யஜமானனாகிய) ப்ரஹ்மத்தால் ஹோமஞ் செய்யப்படுதல் ப்ரஹ்மம் : ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுள்ள அவனால் அடையப்படுவது (ம்) ப்ரஹ்மமே.**

ப்ரஹ்மத்தை அறிந்தவன் எக்கருவியினால் ஹவிஸை அக்நியில் இடுகின்றானோ, அது ப்ரஹ்மந்தான் எனக்காண்கிறான். இப்பியிலே வெள்ளியின்மையை[இப்பியன்றி வெள்ளி இல்லையென]க் காண்பதுபோல, ஆத்மாவன்றி அஃதில்லை யெனக் காண்கிறான். ஆதலால், ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி ப்ரஹ்மமே எனப்படுகின்றது. உதாரணமாக, வெள்ளியாகத் தோற்றுவது இப்பியாகவே இருப்பதுதான் என்க. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌅𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 என்பன தொகாநிலைச் சொற்கள். உலகத்தில் (ஜனங்கள்) எதனை, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவியெனக் கொள்கிறார்களோ, அது இந்த ஆத்மஞானிக்கு ப்ரஹ்மமே என்பது பொருள். அவ்வாறே, (அவர்கள்) எதனை ஹவிஸ் எனக்கொள்கிறார்களோ,அது அவனுக்கு ப்ரஹ்மமேதான். அவ்வண்ணமே [முன்போல அல்லாது], 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 என்பது தொகைநிலைப்பதம். (யஜமானனாகிய)செய்பவனென்னும் ப்ரஹ்மமானது எதிலே (ஹவிஸை) ஹோமஞ்செய்கின்றதோ, (அந்த) அக்நியும்

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌕𑌰𑍍𑌤𑍍𑌰𑌾, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌹𑍁𑌤𑌂 𑌹𑌵𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌤𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 । 𑌯𑌤𑍍 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌤𑌦𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 𑌤𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌏𑌵𑌂 𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌣𑌾𑌽𑌪𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌃 𑌅𑌕𑌰𑍍𑌮, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌮𑍃𑌦𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍁𑌤𑌰𑌾𑌮𑍍 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇; 𑌯𑌤𑍍 𑌅𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿 𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨 𑌇𑌤𑌿 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑍇 𑌅𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑌨𑌰𑍍𑌥𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌜𑌾𑌨𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃, 𑌕𑌾𑌰𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌚𑍍𑌚 । 𑌨 𑌹𑌿 𑌕𑌾𑌰𑌕𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌖𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑌬𑍍𑌦𑌸𑌮-

---

ப்ரஹ்மமேதான். செய்பவன் ப்ரஹ்மமே என்பது (இங்கே சொல்லுவான்) குறிப்பு. அவன் ஹோமஞ் செய்தலென்னும் தொழில், ப்ரஹ்மம்தான். அதனால்அடையவேண்டிய பயன் எதுவோ, அதுவும் ப்ரஹ்மம்தான். ப்ரஹ்மமாகிய கர்மத்திலே ஸமாதியுடைய [ப்ரஹ்மத்தைக் காண்பதாகிய கர்மத்திலே தலைப்பட்டு அந்த ப்ரஹ்மத்தையே எங்கும் காண்ப]வனால் அடையப்படுவது(ம்) ப்ரஹ்மமேதான் என்க.

இவ்வாறு, உலகத்தை நல்வழிப்படுத்த விரும்புவோனும் செய்கின்ற கர்மமானது உண்மையாகவே அகர்மமாம்; (ஸகலமும்) ப்ரஹ்மமென்ற புத்தியினாலே (கர்மமென்னும் புத்தியானது) தள்ளுண்டுபோனமையின். இவ்வாறுள்ளதனால்,(ஒருவன்) கர்மத்தினின்றும் ஒழிந்தவனானாலும், ஸகலகர்மங்களையும் துறந்த (அ)வனுடைய மெய்யறிவைப் புகழ்தற்பொருட்டு ஞானத்திலே யஜ்ஞத்தை ஏற்றிக்கூறுதல் நன்றாகப் பொருந்துகின்றது. வாஸ்தவமான யாகத்திலே வழங்கப்படுவனவாகிய (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலியன எவைகளோ, அவைகள், பரம்பொருளைக் காண்கின்ற இவனுக்குத் தன் ஆத்மாவான ப்ரஹ்மமேதான் என்பது. அவ்வாறில்லாவிட்டால், ஸகலமும் ப்ரஹ்மமாயிருக்க, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலியவற்றைமாத்திரம் ப்ரஹ்மமாகச் சிறப்பித்துக் கூறுதல் பயனில்லாததாகும். ஆகவே, “ இதெல்லாம் ப்ரஹ்மமேதான் ” என்று அறிகிறவனுக்குக் கர்மமில்லை. அன்றியும், காரகத்தைப்பற்றிய எண்ணமே இல்லையாதலாலும், (அவனுக்குக் கர்மமில்லை யென்க. காரகம் - ஒரு தொழில் உண்டாகிமுடிவுபெறுதற்கு உபயோகமாயிருப்பது. யஜமாநன் இந்திரனுக்கு ஹவிஸை அகப்பையினால் அக்நியிலே அர்ப்பித்தான் என்றவிடத்து, அர்ப்பித்தலென்னும் தொழிலுக்கு யஜமாநன் என்பது செய்பவன்என்னும் காரகம்: இந்திரனுக்கு என்பது கொள்பவன்என்னும் காரகம்: ஹவிஸை என்பது செயப்படுபொருள் என்னும் காரகம்: அகப்பையினால் என்பது கருவியென்னும் காரகம்: அக்நியிலேஎன்பது இடம்என்னும் காரகம். இவ்வாறே மற்றையதையும் கண்டுகொள்க.) யாகமெனப்படும் கர்மமானது காரகபுத்தியில்லாததாகக் காணப்படவில்லையன்றோ. அக்நிஹோத்ரம் முதலிய ஸகலமுமே (ஹவிஸை, ‘இந்திரனுக்கு’ ‘அக்நிக்கு’ என்பனமுதலா

𑌵𑌿𑌹𑌿𑌤𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌕𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑍇 𑌕𑌰𑍍𑌤𑍍𑌰𑌭𑌿𑌮𑌾𑌨𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍; 𑌨 𑌉𑌪𑌮𑍃𑌦𑌿𑌤𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌾𑌰𑌕𑌫𑌲𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌰𑌹𑌿𑌤𑌂 𑌵𑌾 । 𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌪𑌮𑍃𑌦𑌿𑌤𑌾𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌿 𑌕𑌰𑍍𑌮 । 𑌅𑌤𑌃 𑌅𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌤𑍍 । 𑌤𑌥𑌾 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍' '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃' '𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇' '𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 । 𑌤𑌥𑌾 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌕𑌾𑌰𑌕𑌫𑌲𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌮𑌰𑍍𑌦𑌨𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾 𑌚 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌕𑌾𑌮𑍋𑌪𑌮𑌰𑍍𑌦𑍇𑌨 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌹𑌾𑌨𑌿𑌃 । 𑌤𑌥𑌾 𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌆𑌰𑌮𑍍𑌭𑌕𑌤𑍍𑌵𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌤𑌥𑌾 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌮𑍃𑌦𑌿𑌤𑌾𑌰𑍍𑌪𑌣𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌬𑌾𑌹𑍍𑌯𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑌰𑍍𑌮𑌾𑌪𑌿 𑌵𑌿𑌦𑍁𑌷𑌃 𑌅𑌕𑌰𑍍𑌮 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌉𑌕𑍍𑌤𑌂 '𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

கச்) சொல்லிக் கொடுக்கப்பெறும் சிறப்புத்தெய்வமாகிய கொள்பவனென்னும் காரகத்தையும், மற்றுமிதுபோன்ற காரகத்தையும்பற்றின எண்ணத்தையும், (நான்)செய்பவனென்னும் அபிமாநத்தையும், பயனை எதிர்நோக்குதலையும் உடைய கர்மமாகக் காணப்படுவதேயன்றி, செய்கை யென்பதும், காரகமென்பதும், பயனென்பதுமான பேதபுத்தி எடுபடப்பெற்றதாகவாயினும், (நான்) செய்பவன்என்னும் அபிமாநமும் பயனை எதிர்நோக்குதலும் இல்லாததாகவாயினும் காணப்படவில்லை. இதுவோ[ஞானயஜ்ஞமோ](ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவிமுதலான காரகமென்பதும் செய்கையென்பதும் பயனென்பதுமான பேதபுத்தி, (ஸகலமும்) ப்ரஹ்மமென்ற புத்தியினால் தள்ளுண்டுபோகப்பெற்ற கர்மமாம். ஆகவே, அது அகர்மமேயென்க. அவ்வண்ணமே "எவன்கர்மத்தில்" (ச - கஅ), "கர்மத்தை மேற்கொண்டிருந்தாலும்" (ச - உ0), "குணங்கள்" (ந - உஅ), "(நிஷ்டை)கூடி உண்மை உணர்ந்தவன்" (ரு - அ) என்பன முதலியவற்றால் (அது) உணர்த்தப்பட்டது. அவ்வாறே (பகவான்), செய்கையென்பதும் காரகமென்பதும் பயனென்பதுமான பேதபுத்தி விண்டுபோதலைச் செய்கிறார் [அப்பேதபுத்தியை நீங்கும்படி செய்கிறார்]. இனி, காம்யமான அக்நிஹோத்ரம் முதலியவற்றிலே காமமானது போய்விட [பயனை விரும்பாதுஅவற்றைச்செய்ய],(அவை) காம்யாக்நிஹோத்ரம் முதலியவையாக ஆவதில்லை யென்பதும், அவ்வாறே,(இத்தொழிலை நான் செய்யவேண்டும், இதன் பயனை நான் அநுபவிக்கவேண்டும்) என்னும்எண்ணத்தோடாயினும், எண்ணமில்லாதாயினும், வேறுவகையாகவாயினும்(செய்யப்படும்) கர்மங்கள் தம்தமக்குஉரிய பயன்களை விளைக்கின்றன வென்பதும் (நமக்குத்) தெரிந்தவை. அவ்வாறு இங்கும், (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவிமுதலான காரகமென்பதும் செய்கையென்பதும் பயனென்பதுமான பேதபுத்தி விண்டுபோன ஞானியின் (தொழிலானது) வெளிச்செய்கையினால்மாத்திரம் கர்மமாகத் தோன்றினாலும், அகர்மமாகின்றது. ஆதலால் கூறப்பட்டது "ஸகல (கர்ம) மும் கரைந்துபோகின்றன" (ச - உங) என்று.

அத்ர கேசிதாஹு:—யத் ப்ரஹ்ம தத் அர்பணாதீநி; ப்ரஹ்மைவ ஸ்ருவ அர்பணாதிநா பஞ்சவிதகாரகாத்மநா அவஸ்திதம் ஸத் ததேவ கர்ம கரோதீதி, தத்ர ந அர்பணாதிபுத்தி: நிவர்த்யதே; கிம் து அர்பணாதிஷு ப்ரஹ்மபுத்தி: க்ரியதே; யதா ப்ரதிமாதௌ விஷ்ணுபுத்தி:, யதா வா நாமாதௌ ப்ரஹ்மபுத்தி: இதி ॥

ஸத்யம், ஏவமேவ ஸ்யாத் யதி ஜ்ஞாநயஜ்ஞஸ்துத்யர்த்தம் ப்ரகரணம் ந ஸ்யாத்। அத்ர து ஸம்யக்ஜ்ஞாநம் ஜ்ஞாநயஜ்ஞசப்திதம் யஜ்ஞசப்திதாந் க்ரியாவிசேஷாந் உபந்யஸ்ய 'ச்ரேயாந் த்ரவ்யமயாத்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ:' இதி ஜ்ஞாநம் சம்ஸதி। அத்ர ச ஸமயேऽபி இதம் வசநம் 'ப்ரஹ்மார்பணம்' இத்யாதி ஜ்ஞாநஸ்ய யஜ்ஞத்வஸம்பாதநே; அந்யதா ஸர்வஸ்ய ப்ரஹ்மத்வே அர்பணாதீநாமேவ விசேஷதோ ப்ரஹ்மத்வாபிதாநம் அநர்த்தகம் ஸ்யாத்। யே து அர்பணாதிஷு ப்ரதிமாயாம் விஷ்ணுத்ருஷ்டிவத் ப்ரஹ்மத்ருஷ்டி: க்ரியதே நாமாதிஷ்விவ வேதி ப்ரஹ்மவதே ந தேஷாம் ப்ரஹ்மவித்யா உக்தா இஹ விவக்ஷிதா, அர்பணாதிவிஷயத்வாத் ஜ்ஞாநஸ்ய।

இதில் சிலர் கூறுவர்:—எது ப்ரஹ்மமோ, அது (ஹவிஸை)அர்ப்பிக்கும் கருவி முதலியதாம். ப்ரஹ்மமே (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலிய ஐந்து காரகவடிவமாய் இருந்துகொண்டு அதேகர்மத்தைச் செய்கின்றதென்பர். (ஐந்து காரகமாவன - செய்பவன், செயப்படுபொருள், கருவி, கொள்பவன், இடம் என முற்கூறப்பட்டவை. ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவியென்னும் புத்தியும், இன்னுமிதுபோன்ற புத்தியும் அதிலே நீக்கப்படுவதில்லை; மற்று, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் புத்தியானது வைக்கப்படுகின்றது. விக்கிரகம் முதலானவற்றிலே விஷ்ணுமுதலான புத்திபோலவும், (பகவானுடைய) திருநாமம் முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் புத்திபோலவுமென்க.

உண்மை; பிரகிருதமானது ஞானமென்னும் யஜ்ஞத்தைப் புகழ்தற்காக இல்லாவிட்டால், இப்படியும் இருக்கலாம். ஆனல், (பகவான்) யஜ்ஞமென்று சொல்லப்பட்ட பல கர்மவிசேஷங்களை எடுத்துக்கூறிப், பின்னே, ஞானயஜ்ஞமென்று சொல்லப்பட்ட மெய்யறிவாகிய ஞானத்தை "திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானயஜ்ஞம் மேலானது" (ச - ௩௩)எனப் புகழ்கின்றார். அன்றியும், இங்கே "அர்ப்பிப்பது ப்ரஹ்மம்"என்று தொடங்கும் இத்திருவாக்கானது ஞானத்தின்மீது யஜ்ஞத்தை ஏற்றிக்கூறுவதிலே கருத்துடையதென்க. அப்படியல்லாவிட்டால், ஸகலமும் ப்ரஹ்மமாயிருக்க, அர்ப்பிப்பது முதலானவற்றையே ப்ரஹ்மமாக விசேஷித்துக் கூறுதல் வீணாகும். மற்று, எவர்கள் விக்கிரகத்திலே விஷ்ணுவென்று நோக்குதல்போலவும், (பகவானுடைய) திருநாமம் முதலியவற்றிலே ப்ரஹ்மமென நோக்குதல்போலவும், (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென்னும் நோக்கானது வைக்கப்படுகின்றது என்று கூறுகிறார்களோ, அவர்களுடைய (கருத்தின்படி பகவான்) இங்கு உபதேசிக்கவிரும்பியது, (இதுவரையிலும்) கூறிவந்த ப்ரஹ்மவித்யை அன்று; (இங்குக் கூறிய) அறிவானது (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முத

ந ச த்³ருஷ்டிஸம்பாத³நஜ்ஞாநேந மோக்ஷப²லம் ப்ராப்யதே । 'ப்³ரஹ்மைவ தேந க³ந்தவ்யம்' இதி ச உச்யதே । விருத்³த⁴ம் ச ஸம்யக்³த³ர்ஶநமந்தரேண மோக்ஷப²லம் ப்ராப்யத இதி ॥

ப்ரக்ருதவிரோத⁴ஶ்ச ; ஸம்யக்³த³ர்ஶநம் ச ப்ரக்ருதம் 'கர்மண்யகர்ம ய: பஶ்யேத்' இத்யத்ர, அந்தே ச தத³ேவ உபஸம்ஹாராத் । 'ஶ்ரேயாந் த்³ரவ்யமயாத்³யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ:' 'ஜ்ஞாநம் லப்³த்⁴வா பராம் ஶாந்திம்' இத்யாதி³நா ஸம்யக்³த³ர்ஶநஸ்துதிமேவ குர்வந் உபக்ஷீண: அத்⁴யாய: । தத்ர அகஸ்மாத் அப்ரகரணே ப்ரதிமாயாமிவ விஷ்ணுத்³ருஷ்டி: உச்யதே இதி அநுபபந்நம் ॥

தஸ்மாத் யதா²வ்யாக்²யாதார்த² ஏவ அயம் ஶ்லோக: ॥ ௨௪ ॥

தத்ர அது⁴நா ஸம்யக்³த³ர்ஶநஸ்ய யஜ்ஞத்வம் ஸம்பாத்³ய தத்ஸ்துத்யர்த²ம் அந்யேऽபி யஜ்ஞா உபக்ஷிப்யந்தே —

௨௫. தை³வமேவாபரே யஜ்ஞம் யோகி³ந: பர்யுபாஸதே ।
ப்³ரஹ்மாக்³நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி ॥

வியவற்றைப்பற்றிய தாதலின். இனி, ப்ரஹ்மமென்று நோக்குதலை (ஒன்றிலே) ஏற்றிக்கொள்வதென்னும் ஞானத்தாலும் முக்தியாகிய பயனைப் பெறமுடியாது. ஆனல், "அதனல் ப்ரஹ்மமே அடையத்தக்கது" எனக்கூறப்படுகின்றது. மற்றும், மெய்யறிவுஇல்லாமல் முக்தியென்னும் பயனை அடையக்கூடு மென்பதும் விரோதமாகும்.

அன்றியும், பிரகிருதத்திற்கும் விரோதமென்க. "எவன் கர்மத்தில்" (௪ - ௧௮) என்றவிடத்தும், (இவ்வத்தியாய)முடிவிலும் எடுத்துக்கொண்ட விஷயம் மெய்யறிவு என்பது ; (அங்கு) அதனையே முடித்தலா லென்க. (இந்த) அத்தியாயமானது "திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானமென்னும் யஜ்ஞம் மேலானது" (௪-௩௩), "ஞானத்தை அடைந்து" (௪ - ௩௯) என்பனமுதலாக மெய்யறிவைப் பாராட்டுதலையே செய்துகொண்டு முற்றுப்பெற்றது. அது அவ்வாறுள்ளவளவிலே, விக்கிரகத்தில் விஷ்ணுவென்று நோக்குதல்போல, (ஹவிஸை) அர்ப்பிக்கும் கருவி முதலானவற்றிலே ப்ரஹ்மமென நோக்குதல், பிருகிருதமில்லாஇடத்திலே காரணமின்றிக் கூறப்படுகின்றதென்பது பொருந்தாது.

ஆதலால், இச்சுலோகத்திற்கு (யாம்) உரைத்தபடியே பொருளென்க. (௨௪)

கர்மத்தினல் செய்யப்படும் யஜ்ஞங்கள்.

இனி, இப்பொழுது மெய்யறிவிலே யஜ்ஞத்தை ஏற்றிக்கூறியபின், அதனைப் புகழ்தற்பொருட்டு மற்றை யஜ்ஞங்களையும் (பகவான்) எடுத்துக்கூறுகிறர் :

௨௫. மற்றையோர்கள் தேவதைகளுக்கே யஜ்ஞத்தைச் செய்கிறர்கள் : வேறொருவர், ப்ராஹ்மமாகிய அக்கினியிலே ஆத்மாவை ஆத்மாவினலேயே ஹோமஞ் செய்கிறர்கள்.

दैवमेव देवा इज्यन्ते येन यज्ञेन असौ दैवो यज्ञः तमेव अपरे यज्ञं योगिनः कर्मिणः पर्युपासते कुर्वन्तीत्यर्थः । ब्रह्माग्नौ 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' 'विज्ञानमानन्दं ब्रह्म' 'यत् साक्षादपरोक्षाद् ब्रह्म य आत्मा सर्वान्तरः' इत्यादिवचनोक्तमशनायापिपासादिसर्वसंसारधर्मवर्जितं 'नेति नेति' इति निरस्ताशेषविशेषं ब्रह्मशब्देनोच्यते । ब्रह्म च तदग्निश्च सः । होमाधिकरणविवक्षया ब्रह्म अग्निः । तस्मिन् ब्रह्माग्नौ अपरे अन्ये ब्रह्मविदः यज्ञम्—यज्ञशब्दवाच्य आत्मा, आत्मनामसु यज्ञशब्दस्य पाठात्—तमात्मानं यज्ञं परमार्थतः परमेव ब्रह्म सन्तं बुद्ध्याद्युपाधिसंयुक्तमध्यस्तसर्वोपाधिधर्मकमाहुतिरूपं यज्ञेनैव उक्तलक्षणेन उपजुह्वति प्रक्षिपन्ति, सोपाधिकस्य आत्मनः निरुपाधिकेन परब्रह्मस्वरूपेणैव यद्दर्शनं स तस्मिन् होमः तं कुर्वन्ति ब्रह्मात्मैकत्वदर्शननिष्ठाः संन्यासिनः इत्यर्थः ॥

எந்த யாகத்தால் (இந்திரன்முதலிய) தேவர்கள் உபாஸிக்கப்படுகிறார்களோ, அது தைவமான யஜ்ஞம். அதேயஜ்ஞத்தைச் சில கர்மயோகிகள் அநுஷ்டிக்கிறார்கள். "ப்ரஹ்மம் மெய்ப்பொருளாயும், அறிவாயும்,முடிவில்லதாயு முள்ளது" (தை - உ-க) "ப்ரஹ்மம் அறிவும் ஆநந்தமு மாயிருப்பது" (பி - ௩ - கூ -உ அ), "எது ஸமீபத்திலும் தூரத்திலும் உள்ளதோ, எது எல்லாவற்றிற்கும் உள்ளேயுள்ள ஆத்மாவாகஇருக்கின்றதோ, (அது)ப்ரஹ்மம்"(பி-௩-உ-க) என்பனமுதலிய (சுருதி) வாக்கியங்களால் கூறப்பட்டு, பசி நீர்வேட்கைமுதலிய எவ்வித ஸம்ஸாரத்தன்மையுமின்றி, "அன்று அன்று" (பி - ச - ச - உஉ) என எத்தகைய சிறப்பியல்புமில்லாதது, ப்ரஹ்மமென்னும் சொல்லால் கூறப்படுகின்றது. ஹோமத்திற்கு இடமாகக்கொண்டதனால், ப்ரஹ்மம் அக்நி யென்க. ப்ரஹ்மத்தை அறிபவரான சிலர் ப்ரஹ்மமாகிய அக்நியிலே, உண்மையாகப் பரப்ரஹ்மமாகவே உள்ளதாய் புத்தி முதலிய உபாதிகளோடு கூடி (அதனால் தன்னிடத்து அவ்)வுபாதிகளின் தன்மையெல்லாம் ஏற்றப்பட்டுநிற்கும் ஆத்மாவாகிய ஆகுதியை, (கீழ்க்) கூறிய லக்ஷணமுள்ள [பசிமுதலிய எத்தகைய ஸம்ஸாரத் தன்மையும், எவ்விதமான சிறப்பியல்பு மில்லாத]ஆத்மாவினாலேயே அர்ப்பிகிறார்கள்: உபாதியுடைய ஆத்மாவை உபாதியில்லாத பரப்ரஹ்மஸ்வரூபமாகவே கண்டுதெளிதல் எதுவோ, அது அதிலே [ப்ரஹ்மத்திலே] ஹோமஞ்செய்தலென்பது; ப்ரஹ்மமும் தானும் ஒன்றெனக் காண்பதிலே உறுதியாகநிற்கும் துறவிகள் அதனைச் செய்கிறார்கள் என்பது (தேர்ந்த) பொருள். (யாஸ்கர்) ஆத்மாவின் பெயர்களுள் யஜ்ஞமென்னும்சொல்லை எடுத்துச்சொல்வதனால், யஜ்ஞமென்னும் சொல்லுக்கு - (இங்கு)ஆத்மா என்று பொருள். (எது தன் தன்மையை வேறொன்றனிடத்து இருப்பதாகத் தோற்றுவிக்கின்றதோ, அது உபாதியெனப்படும். ஒரு ஸ்படிகத்தின் அருகிலேயுள்ள செம்பருத்திப்பூவானது தன் தன்மையாகிய சிவப்புநிறத்தை அந்தஸ்படிகத்திலே இருப்பதாகத்தோற்றுவிக்கின்றது, அதாவது,அது ஸ்படிகமாகத் தோன்றாது சிவப்புக்கல்லாகவே தோன்றுகின்றது. ஆகவே ஸ்படிகத்திற்கு செம்பருத்திப்பூ உபாதியாம். அதுபோல, இங்கும் கண்டுகொள்க).

ஸோऽயம் ஸம்யக்தர்சநலக்ஷணோ யஜ்ஞோ தைவயஜ்ஞாதிஷு யஜ்ஞேஷு உபக்ஷிப்யதே 'ப்ரஹ்மார்பணம்' இத்யாதிச்லோகை: ப்ரஸ்துத: 'ச்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப' இத்யாதிநா ஸ்துத்யர்த்தம் ॥ உரு ॥

உசா. ச்ரோத்ராதீநீந்த்ரியாண்யந்யே ஸம்யமாக்நிஷு ஜுஹ்வதி ।
சப்தாதீந் விஷயாநந்ய இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி ॥

ச்ரோத்ராதீநி இந்த்ரியாணி அந்யே யோகிந: ஸம்யமாக்நிஷு । ப்ரதீந்த்ரியம் ஸம்யமோ பித்யத இதி பஹுவசநம் । ஸம்யமா ஏவ அக்நய: தேஷு ஜுஹ்வதி இந்த்ரியஸம்யமமேவ குர்வந்தி இத்யர்த்த: । சப்தாதீந் விஷயாந் அந்யே இந்த்ரியாக்நிஷு இந்த்ரியாண்யேவ அக்நய: தேஷு இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி ச்ரோத்ராதிபி: அவிருத்தவிஷயக்ரஹணம் ஹோமம் மந்யந்தே ॥ உசா ॥

கிஞ்ச—

உஎ. ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி சாபரே ।
ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே ॥

ஸர்வாணி இந்த்ரியகர்மாணி இந்த்ரியாணாம் கர்மாணி இந்த்ரியகர்மாணி, ததா ப்ராணகர்மாணி ப்ராணோ வாயு: ஆத்யாத்மிக: தத்கர்மாணி ஆகுஞ்சந-

---

"அர்ப்பிப்பது ப்ரஹ்மம்" (ச - உச) என்றுதொடங்கும் சுலோகத்திலே பிரஸ்தாபிக்கப்பட்ட மெய்யறிவுஎன்னும் அத்தகைய இந்தயஜ்ஞத்தை "பரந்தப! திரவியங்களா லாகும் யஜ்ஞத்தைக்காட்டிலும் ஞானயஜ்ஞம் மேலானது" (ச - ஙஙு) என்பதுமுதலாகக் கொண்டாடும்பொருட்டு தைவயஜ்ஞம்முதலிய யஜ்ஞங்களின் இடையே (அந்த ஞானயஜ்ஞத்தைப் பகவான்) வைத்தருளுகிறார். (உரு)

உசா. மற்றையோர்கள் செவிமுதலிய இந்திரியங்களை அடக்கமென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள். வேறொருவர் ஓசைமுதலிய விஷயங்களை இந்திரியங்களென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள்.

அடக்குதலென்பது ஒவ்வொரு இந்திரியத்திற்கும் வெவ்வேறுயுள்ள தென ('அக்கினிகளில்' என்னும்)பன்மை (வழங்கலாயிற்று). சிலயோகிகள் செவிமுதலிய இந்திரியங்களை, (அவற்றை) அடக்குதலென்னும் அக்கினிகளிலே ஹோமஞ்செய்கிறார்கள்: இந்திரிய அடக்கத்தையே செய்கிறார்கள் என்பது பொருள். சிலர் ஓசைமுதலியவிஷயங்களை இந்திரியங்களென்னும் அக்கினிகளில் ஹோமஞ்செய்கிறார்கள் : (சாஸ்திரத்திற்கு) விரோதமில்லாத விஷயங்களைச் செவிமுதலியவற்றால் கிரகிப்பதை(யே) ஹோமமாகக் கொள்கிறார்கள் [தமக்குக் கிடைத்தவற்றுள், விலக்கப்பட்ட விஷயங்களைத் தவிர்த்து, மற்றையவற்றை அந்தந்த இந்திரியங்களால் விருப்பவெறுப்பில்லாது அநுபவிக்கிறார்க ளென்க.—ஆ.] (உசா)

மேலும்,

உஎ. மற்றையோர்கள், இந்திரியங்கள் பிராணன் என்றவற்றின் தொழில்களையெல்லாம் ஞானத்தால் பிரகாசிப்பிக்கப்பட்ட ஆத்மஅடக்கமென்னும் யோகாக்கினியிலே ஹோமஞ் செய்கிறார்கள்.

பிராண னென்பது - ஒவ்வொரு சரீரத்திலுமுள்ள வாயு. அதன் தொழில்-வளைதல், நிமிர்தல் முதலியன. ஆத்மஅடக்கமாவது - ஆத்மாவினிடத்து (மனத்தை அலையாது)நிறுத்துதல். அதுவே யோகமென்னும் அக்கினி. எண்ணெயினால் விளக்குப்

ப்ரஸாரணாதீநி கர்மாணி ச அபரே ஆத்மஸம்யமயோகாக்நௌ ஆத்மநி ஸம்யம: ஆத்மஸம்யம: ஸ ஏவ யோகாக்நி: தஸ்மிந் ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ப்ரக்ஷிபந்தி ஜ்ஞாநதீபிதே ஸ்நேஹேநேவ ப்ரதீபே விவேகவிஜ்ஞாநேந உஜ்ஜ்வலபாவம் ஆபாதிதே ஜுஹ்வதி ப்ரவிலாபயந்தி இத்யர்த: ॥ ௨௭ ॥

௨௮. த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாபரே ।
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஸ்ச யதய: ஸம்ஸிதவ்ரதா: ॥

த்ரவ்யயஜ்ஞா: தீர்தேஷு த்ரவ்யவிநியோகம் யஜ்ஞபுத்த்யா குர்வந்தி யே தே த்ரவ்யயஜ்ஞா: । தபோயஜ்ஞா: யே தபஸ்விந: தே தபோயஜ்ஞா: । யோகயஜ்ஞா: ப்ராணாயாமப்ரத்யாஹாராதிலக்ஷண: யோக: யஜ்ஞோ யேஷாம் தே யோகயஜ்ஞா: । ததா அபரே ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஸ்ச ஸ்வாத்யாய: யதாவிதி ருகாத்யப்யாஸ: யஜ்ஞ: யேஷாம் தே ஸ்வாத்யாயயஜ்ஞா: । ஜ்ஞாநயஜ்ஞா: ஜ்ஞாநம் ஸாஸ்த்ரார்தபரிஜ்ஞாநம் யஜ்ஞ: யேஷாம் தே ஜ்ஞாநயஜ்ஞா: । ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஸ்ச யதய: யதநஸீலா: ஸம்ஸிதவ்ரதா: ஸம்யக் ஸிதாநி தநூக்ருதாநி தீக்ஷ்ணீக்ருதாநி வ்ரதாநி யேஷாம் தே ஸம்ஸிதவ்ரதா: ॥ ௨௮ ॥

கிஞ்ச —

௨௯. அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபாநம் ததாபரே ।
ப்ராணாபாநகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா: ॥

(பிரகாசிப்பிக்கப்பெறுவது) போல, விவேக அறிவினால் பிரகாசத் தன்மையை அடைவிக்கப்பெற்ற அந்த அக்நியிலே இந்திரியங்கள் பிராணன் இவற்றின் தொழில்களையெல்லாம் சிலர் அர்ப்பிக்கிறார்கள்: கரையச்செய்கிறார்கள், ஒடுங்கச்செய்கிறார்கள் என்பது பொருள் [ஸகலத் தொழிலையும் தடுத்து, ஆத்மாவினிடத்து மனம் தலைக்கூடுதலைச் செய்கிறார்க ளென்க.—ஆ.] (௨௭)

௨௮. மற்றையோர் திரவியமென்னும் யஜ்ஞத்தையுடையவர்: தபஸென்னும் யஜ்ஞத்தை யுடையவர்: யோகமென்னும் யஜ்ஞத்தையுடையவர்: ஓதுதலென்னும் யஜ்ஞத்தையுடையர்: ஞானமென்னும் யஜ்ஞத்தையுடையவர். இன்னும், சில யதிகள் கடுமையான விரதங்களையுடையவர்.

யோக்யர்கட்குப் பொருள் கொடுத்தலை, சிலர் யஜ்ஞமென்னும் புத்தியோடு செய்கிறார்கள். தவம்புரிபவர் எவரோ, அவர் தபஸென்னும் யஜ்ஞத்தைக் கொண்டவர். சிலர், பிராணனை அடக்குதலும் மனத்தை விஷயங்களினின்றும் உள்ளேமடக்குதலும் முதலிய யோகத்தை யஜ்ஞமாகக் கொண்டவர். சிலர், ரிக்வேதம் முதலானவற்றை அப்பியஸித்தலை யஜ்ஞமாகக் கொண்டவர். சிலர், சாஸ்திரத்தின் பொருளை நன்குஉணர்தலென்னும் யஜ்ஞத்தைக் கொண்டவர். சிலர் ஊக்கமுள்ள இயல்பினராய் கடுமையான விரதங்களைக் கொண்டவர். (எனவே, இதனுள் ஆறு யஜ்ஞம் கூறப்பட்டன.) (௨௮)

அன்றியும்,

௨௯. சிலர் அபானத்தில் பிராணனை ஹோமஞ்செய்கிறார்கள். அவ்வாறே சிலர், பிராணனில் அபானத்தை ஹோமஞ் செய்கிறார்கள். சிலர் பிராண அபானன்களுடைய போக்குக்களைத் தடுத்து, பிராணாயாமத்திலேயே கருத்தூன்றியவராய் இருக்கிறார்கள். [அபானன் = உள்ளேவரும் மூச்சு, பிராணன் - வெளியே செல்லும் மூச்சு.]

𑌅𑌪𑌾𑌨𑍇 𑌅𑌪𑌾𑌨𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑍍, 𑌪𑍂𑌰𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇 𑌅𑌪𑌾𑌨𑌂 𑌤𑌥𑌾 𑌅𑌪𑌰𑍇 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿, 𑌰𑍇𑌚𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌗𑌤𑍀 𑌰𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾, 𑌮𑍁𑌖𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌯𑍋𑌃 𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌯 𑌗𑌤𑌿𑌃, 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍇𑌣 𑌅𑌧𑍋𑌗𑌮𑌨𑌮𑍍 𑌅𑌪𑌾𑌨𑌸𑍍𑌯 𑌗𑌤𑌿𑌃, 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌗𑌤𑍀 𑌰𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌃 𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௯ ॥

𑌕𑌿𑌂𑌚 —

௩௦. 𑌅𑌪𑌰𑍇 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍋 𑌯𑌜𑍍𑌞𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃 ॥

𑌅𑌪𑌰𑍇 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾𑌃 𑌨𑌿𑌯𑌤𑌃 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌃 𑌆𑌹𑌾𑌰𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌨𑌿𑌯𑌤𑌾𑌹𑌾𑌰𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌵𑌾𑌯𑍁𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇𑌷𑍁 𑌏𑌵 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿, 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾𑌯𑍋𑌃 𑌜𑌯𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌰𑌾𑌨𑍍 𑌵𑌾𑌯𑍁𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿, 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌇𑌵 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌏𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑌃 𑌯𑌜𑍍𑌞𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃 𑌯𑌜𑍍𑌞𑍈𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌃 𑌨𑌾𑌶𑌿𑌤𑌃 𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌕𑍍𑌷𑌪𑌿𑌤𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃 ॥ ௩௦ ॥

𑌏𑌵𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍍 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯 —

௩௧. 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮 ॥

சிலர், அபாநத்தின் செய்கையிலே பிராணன் செய்கையை அர்ப்பிக்கிறார்கள்: பூரகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். அவ்வாறே சிலர் பிராணனிலே, அபாநனை அர்ப்பிக்கிறார்கள்: ரேசகமென்னும்பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். வாய்மூக்குக்களின்வழியாகக் காற்று வெளியே செல்லுதல் பிராணனுடைய போக்கு. அதற்கு மறுதலையாக உள்ளே செல்லுதல் அபாநனுடைய போக்கு. சிலர், பிராணஅபாநன்களுடைய அப்போக்குக்களைத்தடுத்து, பிராணாயாமத்திலேயே கருத்துள்ளவராய் இருக்கிறார்கள் : கும்பகமென்னும் பிராணாயாமத்தைச் செய்கிறார்கள் என்பது பொருள். (௨௯)

இன்னும்,

௩௦. சிலர் மிதமான ஆஹாரமுடையவராய் வாயுக்களை வாயுக்களில் அர்ப்பிக்கிறார்கள். இவர்களெல்லோருமே யஜ்ஞங்களை அறிந்தவர்கள், (கீழ்க்கூறிய) யஜ்ஞங்களால் பாவந்தேயப் பெற்றவர்கள்.

சிலர் (தம்) உணவை அளவாக அமைத்துக்கொண்டு, பலவாயுள்ளவாயுக்களை வாயுக்களிலேயே ஹோமஞ்செய்கிறார்கள் ; எந்தெந்த வாயுவானது ஜயிக்கப்படுகின்றதோ, அந்தந்த(வாயுவிலே)மற்றைய வாயுவிசேஷங்களை அர்ப்பிக்கிறார்கள். அவை அவற்றுள் புகுந்து [ஒடுங்கி]விட்டனபோல ஆகின்றன. (௩௦)

இவ்வாறு கீழ்க்கூறிய யஜ்ஞங்களைச் செய்து முடித்து,

௩௧. யஜ்ஞத்தின் சேஷமான அமிருதத்தைப் புஜிப்பவர்கள் சாச்வதமான ப்ரஹ்மத்தை அடைகிறார்கள். யஜ்ஞமில்லாதவனுக்கு இவ்வுலகம் இல்லை ; கௌரவரிற் சிறந்தோனே ! மற்றையது எங்கிருந்து ? [இல்லையே இல்லை].

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑌃 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌚 𑌤𑌤𑍍 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌚 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿𑌚𑍋𑌦𑌿𑌤𑍇 𑌅𑌨𑍍𑌨𑍇 𑌅𑌮𑍃𑌤𑌾𑌖𑍍𑌯𑌮𑍍 𑌅𑌨𑍍𑌨𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌮𑍃𑌤𑌭𑍁𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 𑌚𑌿𑌰𑌨𑍍𑌤𑌨𑌂 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑌵𑌶𑍍𑌚𑍇𑌤𑍍; 𑌕𑌾𑌲𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌅𑌯𑌂 𑌲𑍋𑌕𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍋𑌽𑌪𑌿 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌮𑍍 𑌏𑌕𑍋𑌽𑌪𑌿 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌃 𑌅𑌯𑌜𑍍𑌞𑌃 𑌤𑌸𑍍𑌯 । 𑌕𑍁𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑌾𑌧𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌸𑌤𑍍𑌤𑌮 ॥ ௩௧ ॥

௩௨. 𑌏𑌵𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾 𑌯𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 ।
𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 ॥

𑌏𑌵𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾 𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾 𑌯𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 । 𑌵𑍇𑌦𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌅𑌵𑌗𑌮𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌉𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇; 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 '𑌵𑌾𑌚𑌿 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌜𑍁𑌹𑍁𑌮𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 । 𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌕𑌾𑌯𑌿𑌕𑌵𑌾𑌚𑌿𑌕𑌮𑌾𑌨𑌸𑌕𑌰𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌨𑍍, 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍋 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾 । 𑌅𑌤𑌃 𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 । 𑌨 𑌮𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾 𑌇𑌮𑍇, 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍋𑌽𑌹𑌂 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂

கீழ்க்கூறிய யஜ்ஞங்களைச் செய்த காலம்போக மிச்சமாயுள்ள காலத்திலே, (தமக்கு)விதிக்கப்பட்ட அமிருத மென்னும் அந்நத்தை எவர்கள் விதிப்படி புஜிக்கிறார்களோ, அவர்கள், (ஸம்ஸாரத்தினின்றும்)விடுபட விரும்புபவரானால், நித்யமான ப்ரஹ்மத்தைக் காலக்கிரமப்படி அடைகிறார்கள். 'காலக்கிரமப்படி' என்பது யுக்தியினால் தெரியவருகின்றது. (யுக்தி - பொருந்தும்விதம்.) கீழ்க்கூறிய யஜ்ஞங்களுள் எவனுக்கு ஒருயஜ்ஞமேனும் இல்லையோ, அவனுக்கு, ஸகலப்பிராணிகட்கும்பொதுவான இவ்வுலகமே இல்லை (என்றால், ஜ்யோதிஷ்டோமம் முதலிய) சிறப்புஸாதநங்களால் ஸாதிக்கத்தக்க மற்றைய (உலகம்) ஏது? கௌரவோத்தம! [இல்லையே இல்லை யென்க.] (௩௧)

௩௨. இவ்வாறு பலவகையாயுள்ள யஜ்ஞங்கள் வேதத்தின் முகத்திலே விரிந்துள்ளன. அவையெல்லாம் கர்மத்தினாலானவை யெனத்தெரிந்துகொள். நீ இவ்வாறு தெரிந்து (தீமையினின்றும்) விடுபடுவாய்.

கீழ்க்கூறிய பலவிதமான யஜ்ஞங்கள் வேதத்தின் முகத்திலே விஸ்தாரமாயுள்ளவை. வேதத்தின் வழியாக [வேதத்தினின்று] அறியப்படுகின்றவை, "வேதத்தின் முகத்திலே விரிந்துள்ளவை" எனப்படுகின்றன. அது, "வாக்கிலேயன்றோ பிராணனைஹோமஞ்செய்கின்றோம்" என்பது முதலாக வரும். அவையெல்லாவற்றையும் மனமொழிமெய்களின் செய்கைகளால் உண்டாவனவாக (அதாவது,) ஆத்மாவல்லாதவற்றினின்றும் தோன்றுவனவாக அறிந்துகொள்; ஏனெனில், ஆத்மா தொழிலில்லாதது. ஆகவே, நீ இவ்வாறு அறிந்து கெடுதியினின்றும் நீங்குவாய். "இவை எனது செய்கைகளல்ல, நான் தொழிலில்லாதவன், உதாஸீநன்"

𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌅𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑌨𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௨ ॥

'𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌪𑌾𑌦𑌿𑌤𑌮𑍍 । 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌅𑌨𑍇𑌕𑍇 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 । 𑌤𑍈𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑍈𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑍍?—

௩௩. 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ॥

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 𑌯𑌜𑍍𑌞𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 । 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌯𑍋 𑌹𑌿 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌆𑌰𑌮𑍍𑌭𑌕𑌃, 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌆𑌰𑌮𑍍𑌭𑌕𑌃, 𑌅𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌃 । 𑌕𑌥𑌮𑍍? 𑌯𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌸𑍍𑌤𑌮𑍍 𑌅𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑍇 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । '𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌾𑌯 𑌵𑌿𑌜𑌿𑌤𑌾𑌯𑌾𑌧𑌰𑍇𑌯𑌾𑌃 𑌸𑌂𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍇𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌦𑌭𑌿𑌸𑌮𑍇𑌤𑌿 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌾𑌧𑍁 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌯𑌤𑍍 𑌸 𑌵𑍇𑌦' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 ॥ ௩௩ ॥

என நீ இவ்வாறு தெளிந்தவுடன், இந்த மெய்யறிவினாலே, தீமையாகிய ஸம்ஸாரக் கட்டினின்றும் விடுபடுவாய் என்பது (தேர்ந்த) பொருள். (உதாஸீநன் - உபேக்ஷையுள்ளவன், அதாவது, விவாதஞ்செய்கின்ற இருவருடைய வெற்றி தோல்விகளோடு ஸம்பந்தப்படாது, அவற்றால் வரும் மகிழ்ச்சி வருத்தங்களையும் அடையாது, யாதொரு விகாரமுமின்றி இருப்பவன்.) (௩௨)

ஞானமென்னும் யஜ்ஞமானது மற்றைய யஜ்ஞங்களினும் மேலானது.

"அர்ப்பிப்பது ப்ரஹ்மம்" (௪ - ௨௪) என்று தொடங்கும் சுலோகத்தினால் மெய்யறிவிலே யஜ்ஞமானது ஏற்றிக்கூறப்பட்டது. பின்னும், பல யஜ்ஞங்களும் உபதேசிக்கப்பட்டன. ஒருவன்விரும்பிய பயனை ஸித்தமாகவுடைய [அதனைப் பெறுதற்கு ஸாதனமான] அந்த (மற்றைய யஜ்ஞங்களோடு) ஞானத்தை (வைத்துப் பகவான்) புகழ்கிறார் :— எப்படி ?—

௩௩. பரந்தப ! ஞானமென்னும் யஜ்ஞமானது திரவியங்களாலாகும் யஜ்ஞத்தைப்பார்க்கிலும் மேலானது. பார்த்த ! ஸகலகர்மமும் ஞானத்திலே மிச்சமில்லாது முடியப்பெறுகின்றன.

பரந்தப ! திரவியங்களாகிய ஸாதனங்களால் ஸாதிக்கப்படும் யஜ்ஞந்தான் பயனை விளைப்பது. ஞானமென்னும் யஜ்ஞமென்பது பயனை விளைவியாதது. ஆதலால், (இது) மேலானதாம்.—எப்படி ?— முக்திக்கு ஸாதனமான ஞானத்திலே ஸகல கர்மமும் முடியப்பெறுகின்றன, அடங்கிநிற்கின்றன என்பது பொருள். ஆகவே, (ஞானயஜ்ஞம் உயர்ந்ததென்க. இதனை, "சூதாட்டத்திலே) வெல்லப்பட்ட கிருதனென்னும் (வருமானத்திற்கு, அதற்குக்) கீழான (திரேதா, த்வாபரன், கலி என்னும் வருமானங்கள்) வந்துசேர்வதுபோல, ஜனங்கள் செய்யும் நற்செய்கையெல்லாம் அவனைச் சேர்கின்றது. அவன் அறிந்ததை அறிபவன் எவனோ, (அவனும் அதனையே அடைகிறான்" (சா - ௪ - க - ௪) என்னும் சுருதியினால் (உணர்க). (௩௩)

𑌤𑌦𑍇𑌤𑌦𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௪. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨 𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌨 𑌸𑍇𑌵𑌯𑌾 ।
𑌉𑌪𑌦𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥

𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌯𑍇𑌨 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌭𑌿𑌗𑌮𑍍𑌯 **𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨** 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌨𑍀𑌚𑍈𑌃 𑌪𑌤𑌨𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌃 𑌤𑍇𑌨 "𑌕𑌥𑌂 𑌬𑌨𑍍𑌧𑌃? 𑌕𑌥𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃? 𑌕𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾? 𑌕𑌾 𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾?" 𑌇𑌤𑌿 **𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑍇𑌨 𑌸𑍇𑌵𑌯𑌾** 𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌯𑌾 𑌏𑌵𑌮𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌪𑍍𑌰𑌶𑍍𑌰𑌯𑍇𑌣 𑌆𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾 𑌉𑌪𑌦𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 **𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃** । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌶𑍀𑌲𑌾𑌃, 𑌅𑌪𑌰𑍇 𑌨 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿; 𑌅𑌤𑍋 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 **𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃** 𑌇𑌤𑌿 । 𑌯𑍇 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌤𑍈𑌃 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌨 𑌇𑌤𑌰𑌦𑍍 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌮𑌤𑌮𑍍 ॥ ௩௪ ॥

𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌇𑌦𑌮𑌪𑌿 𑌸𑌮𑌰𑍍𑌥𑌂 𑌵𑌚𑌨𑌮𑍍—

௩௫. 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑍋𑌹𑌮𑍇𑌵𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ।
𑌯𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌥𑍋 𑌮𑌯𑌿 ॥

ஒருவன் ஞானத்தைத் தேடவேண்டிய விதமும், இடமும்.

அத்தகைய இச்சிறந்த ஞானமானது அங்ஙனம் எதனால் கிடைக்குமென்பது? கூறுவோம்:

௩௪. ஸாஷ்டாங்க நமஸ்காரத்தினாலும், கேள்வியினாலும், பணிவிடையினாலும் அதனை அறிந்துகொள். உண்மையைக் கண்டுணர்ந்த ஞானிகள் ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

அது எவ்விதத்தால் கிடைக்குமென்பதைத் தெரிந்துகொள். ஆசாரியரிடம் சென்று நன்றாகக் கீழேவிழுந்து வணங்குதலென்னும் நெடிய நமஸ்காரத்தாலும், "(இந்த ஸம்ஸாரக்)கட்டு (வந்தது) எவ்வாறு? (இதனின்றும்)விடுபடுதல் எவ்வாறு? அறியாமையென்பது என்ன? அறிவு என்பது என்ன?" என்னும் கேள்வியினாலும், ஆசாரியருக்குப் பணிவிடைசெய்தலாலும், மற்றுமிவைபோன்றவற்றாலும்(நீ ஞானத்தைப் பெறுவாய். பக்தி சிரத்தையோடமைந்த மிக்க ஒடுக்கவணக்கமென்னும்) வழிபாட்டினால் (தமது கருத்திலே) அருள்சுரக்கப்பெற்ற ஞானிகளான ஆசாரியர்கள், கீழே சிறப்பித்துக்கூறிய ஞானத்தை உனக்கு உரைத்தருளுவார்கள். ஞானவான்களாயினும், சிலரே உண்மையை உள்ளபடிகாணும் இயல்பினர். மற்றையோர்(அவ்வாறு) அல்லர். ஆதலால் சிறப்பித்துக்கூறுகிறார் "**உண்மையைக் கண்டுணர்ந்த**" என்று. எவர்கள் மெய்யறிவைப் பெற்றவர்களோ, அவர்கள் உபதேசித்த ஞானம் (தான்), கார்யத்தை ஸாதிக்க வலியதாகின்றது; மற்றையது இல்லை என்பது பகவான் கருத்தென்க. (௩௪)

அவ்வாறுள்ளவளவிலேதான் இத்திருவாக்கும் பொருத்தமுடையதாகும்:

௩௫. பாண்டவ! நீ எதனை அறிந்து மறுபடியும் இவ்வாறு மயக்கத்தை அடையாயோ, எதனால் ஸகலப்பொருள்களையும் நீ உன்னிடத்தும் என்னிடத்தும் காண்பாயோ, (அந்த ஞானத்தைத் தேடிக்கொள்).

𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍈𑌃 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌅𑌧𑌿𑌗𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌭𑍂𑌯𑌃 𑌮𑍋𑌹𑌮𑍍 𑌏𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌮𑍋𑌹𑌂 𑌗𑌤𑌃 𑌅𑌸𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌏𑌵𑌂 𑌨 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌹𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 । 𑌕𑌿𑌞𑍍𑌚—𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌅𑌶𑍇𑌷𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 "𑌮𑌤𑍍𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌇𑌮𑌾𑌨𑌿" 𑌇𑌤𑌿 𑌅𑌥𑍋 𑌅𑌪𑌿 𑌮𑌯𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 "𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌚 𑌇𑌮𑌾𑌨𑌿" 𑌇𑌤𑌿; 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍇𑌶𑍍𑌵𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௫ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—𑌏𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍—

௩௬. 𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥

𑌅𑌪𑌿 𑌚𑍇𑌤𑍍 𑌅𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌦𑍍𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌪𑍍𑌲𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌵𑍃𑌜𑌿𑌨𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌪𑌾𑌪𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 । 𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌪𑌿 𑌇𑌹 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍋𑌃 𑌪𑌾𑌪𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௬ ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌥𑌂 𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 𑌪𑌾𑌪𑌮𑍍 𑌇𑌤𑌿 ? 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௭. 𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥

𑌯𑌥𑌾 𑌏𑌧𑌾𑌂𑌸𑌿 𑌕𑌾𑌷𑍍𑌠𑌾𑌨𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌇𑌦𑍍𑌧𑌃 𑌦𑍀𑌪𑍍𑌤𑌃 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍 𑌭𑌸𑍍𑌮𑍀𑌭𑌾𑌵𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵-

---

பாண்டவ ! அவர்கள் உபதேசித்த ஞானத்தைப் பெற்று, நீ இப்பொழுது மயக்கமுற்றிருப்பதுபோல மீண்டும் இவ்வாறு மயக்கமுறமாட்டாய். அன்றியும், ப்ரஹ்மாமுதலாகப் புல் ஈறாகவுள்ள ஸகலப்பொருள்களையும், " இவை என்னிடத்து இருக்கின்றன " என உன்னிடத்தும், " இவை பரமேச்வரனிடத்தும் இருக்கின்றன " என வாஸுதேவனை என்னிடத்தும் ஞானத்தினால் நேரே காண்பாய் : உபநிஷத்துக்களிலெல்லாம் மிகத்தெளிவா யுணர்த்தப்பட்ட ஜீவேச்வர ஐக்கியத்தை [ஜீவனும் ஈச்வரனும் ஒன்றென்பதை]க் கண்டுதேறுவாய் என்பது பொருள். (௩௫)

ஞானமென்பது ஸகலபாவத்தையும், ஸகலகர்மத்தையும் எரித்துவிடும்.

இனி இதன் பெருமையை(க் கேள்) :

௩௬. **நீ, பாவஞ்செய்தோர் எல்லாரையும் பார்க்கிலும் அதிக பாவஞ்செய்தவனானாலும், ஞானமாகிய தெப்பத்தினாலேயே ஸகலபாவங்களையும் கடந்திடுவாய்.**

நீ ஞானத்தையே தெப்பமாகச்செய்துகொண்டு பாவமாகிய கடலைக் கடந்துவிடுவாய். (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோனுக்கு, இங்கே புண்யமும் பாவமென்க. (௩௬)

ஞானமானது பாவத்தை எவ்வாறு அழிக்கின்றது என்பது ?— திருஷ்டாந்தம் கூறுவோம் :

௩௭. **அர்ஜுந ! ஜ்வலிக்கின்ற தணலானது விறகுகளை எவ்வாறு நீறாகச் செய்கின்றதோ, அவ்வாறே ஞானமென்னும் தணலானது ஸகலபாவத்தையும் நீறாகச் செய்கின்றது.**

அர்ஜுந ! நன்கு எரியும் தீயானது விறகுகளைச் சாம்பலாக்குவதுபோல, ஞானமென்னும் தீயானது ஸகலகர்மங்களையும் சாம்பலாக்குகின்றது : வித்து ஆகாத

கர்மாணி ஸர்வாணி பஸ்மஸாத் குருதே ததா நிர்பீஜம் கரோதீத்யர்த²꞉ | ந ஹி ஸாக்ஷாதேவ ஜ்ஞாநாக்³நி꞉ கர்மாணி இந்த⁴நவத் ப⁴ஸ்மீகரோதி | தஸ்மாத் ஸர்வ-கர்மணாம் நிர்பீஜகரணே ஜ்ஞாநம் ஹேதுரித்யபி⁴ப்ராய꞉ | ஸாமர்த்²யாத் யேந கர்மணா ஶரீரஸ்ய ப்ராரம்ப⁴꞉ தஸ்ய ப்ரவ்ருத்தப²லத்வாத் உபபோ⁴கேநைவ க்ஷயேத, ததோ யாநி அப்ரவ்ருத்தப²லாநி ஜ்ஞாநோத்பத்தே꞉ ப்ராக் க்ருதாநி ஜ்ஞாநஸஹபா⁴வீநி ச அதீதாநேகஜந்மக்ருதாநி ச தாந்யேவ ஸர்வாணி பஸ்மஸாத் குருதே ॥ ௩௭ ॥

யத꞉ ஏவம் அத꞉—

௩௮. ந ஹி ஜ்ஞாநேந ஸத்³ருஶம் பவித்ரமிஹ வித்³யதே |
தத் ஸ்வயம் யோக³ஸம்ஸித்³த⁴꞉ காலேநாத்மநி விந்த³தி ॥

ந ஹி ஜ்ஞாநேந ஸத்³ருஶம் அந்யத் பவித்ரம் பாவநம் ஶுத்³தி⁴கரம் இஹ வித்³யதே | தத் ஜ்ஞாநம் ஸ்வயம் ஏவ யோக³ஸம்ஸித்³த⁴꞉ கர்மயோகே³ந ஸமாதி⁴யோகே³ந ச ஸம்ஸித்³த⁴꞉ ஸம்ப்ராப்த꞉ யோக்³யதாம் ப்ராப்த꞉ ஸந் காலேந மஹதா ஆத்மநி விந்த³தி லப⁴தே இத்யர்த²꞉ ॥ ௩௮ ॥

யேந ஸாத⁴நேந ஜ்ஞாநப்ராப்தி꞉ ப⁴வதி ஸ உபாய꞉ உபதி³ஶ்யதே—

படி[முளைக்கும் சக்தி அற்றுப்போம்படி]செய்கின்றது என்பது பொருள். விறகுகளை (த் தீயானது நேரே சாம்பலாக்குவது)போல, ஞானமென்னும் தீயானது கர்மங்களை நேரேயே சாம்பலாக்கமுடியாதன்றோ. ஆகவே, ஸகலகர்மங்களும் வித்துஆகாததற்கு மெய்யறிவு காரணமென்பது கருத்து. எக்கர்மத்தினால் (இவ்)வுடல் ஆக்கப் பட்டதோ [வந்ததோ], அது, (தன்) பயனைக் கொடுக்கத் தலைப்பட்டுள்ளமையால், அநுபவத்தினாலேயே கழிந்துபோகின்றது (என்பதை) யுக்தியினால் (கண்டுகொள்க. யுக்தி - பொருந்தும்விதம்.) ஆகவே, (தம்தம்) பயனைக் கொடுக்கத் தலைப்படாத (கர்மங்கள்) எவைகளோ, அவைகளெல்லாவற்றையுந்தான் (ஞானமென்னும் தீயானது நீறச்செய்கின்றது. (அவை யாவையெனின்,) ஞான முண்டாதற்குமுன் செய்யப் பட்டவையும், ஞானத்தோடு உடன்நிகழ்பவையும், சென்ற பல பிறவிகளிலே ஸம்பா திக்கப்பெற்றவையுமா மென்க. (௩௭)

இவ்வாறிருப்பதனால்,

௩௮. ஞானத்திற்கு ஸமமாகத் தூய்மையைச் செய்வது இங்கு இல்லையே இல்லை [ஒருவனைப் பரிசுத்தப்படுத்தும்விஷயத்திலே ஞானத்திற்கு ஸமமாக வேறொன்று, வ்யவஹாரநிலையிலே இல்லை]. யோகத்தால் சீர்திருத்தப்பட்டவன் அதனைத் தானே தன்னிடத்து (தக்க)காலத்தில் அடைகிறான்.

(ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்புவோன், கர்மயோகத்தாலும் ஸமாதி யோகத்தாலும் (ஞானமடைதற்கு) ஏற்றதகுதிவரப்பெற்றவனாய் வெகுகாலத்திற்குப் பின் ஞானத்தைத் தானாகவே தன்னிடத்துப் பெறுகின்றான் என்க. (௩௮)

ஞானத்தைப் பெறுதற்கு அந்தரங்கமான ஸாதநம்.

ஞானத்தைப் பெறுதலானது எதனால் நிச்சயமாகக் கைகூடுகின்றதோ, அந்த (அந்தரங்கமான) வழியை(ப் பகவான்) உபதேசித்தருளுகிறார்:

௩௯. 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌲𑌭𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌲𑍁𑌃 𑌲𑌭𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 । 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌲𑍁𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌮𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌃, 𑌅𑌤 𑌆𑌹—𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌗𑍁𑌰𑍂𑌪𑌾𑌸𑌨𑌾𑌦𑍌 𑌅𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌬𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 । 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌅𑌪𑌿 𑌅𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌆𑌹—𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸𑌂𑌯𑌤𑌾𑌨𑌿 𑌵𑌿𑌷𑌯𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌨𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃 । 𑌯 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌶𑍍𑌚 𑌸𑌃 𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌭𑌤𑍇 । 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑌾𑌦𑌿𑌸𑍍𑌤𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌅𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍋𑌽𑌪𑌿 𑌭𑌵𑌤𑌿, 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 ; 𑌨 𑌤𑍁 𑌤𑌤𑍍 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍌 𑌇𑌤𑍍𑌯𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌬𑍍𑌧𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌃 । 𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌾𑌭𑌾𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌖𑍍𑌯𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍍 𑌉𑌪𑌰𑌤𑌿𑌮𑍍 𑌅𑌚𑌿𑌰𑍇𑌣 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌵 𑌅𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 । 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌨𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௯ ॥

---

௩௯. நம்பிக்கையை யுடையவனும், அதிலே கருத்தையூன்றி இந்திரியங்களை நன்கு அடக்கியவன் ஞானத்தையடைகிறான் ; ஞானத்தை அடைந்த பின்னர், தாமத மில்லாது உயர்ந்த ஒழிவைப் பெறுகிறான்.

(வேதம்முதலியவற்றிலே)நம்பிக்கையையுடையவன் ஞானத்தை அடைகிறான். நம்பிக்கையுடைமை இருந்தாலும், ஒருவன்(ஞானஸாதநத்திலே)செல்லல மந்தனாய் [நோக்கமில்லாதவனாய்]இருக்கிறான். ஆதலால், "ஞானமடைதற்கு ஸாதநமாயிருப்பவையான குருவை வழிபடுதல்முதலானவற்றிலே ஊக்கமுள்ளவனாய்(இருக்கவேண்டும்)" என்கிறார். அவற்றிலே ஊக்கமுடையோனாயினும், (அவன் தன்)இந்திரியங்களை ஜயிக்காதவனாக இருக்கலா மென, "விஷயங்களினின்றும் இந்திரியங்களை(உள்ளே)மடக்கினவனாக(இருக்கவேண்டும்)"என்கிறார்.(குருவினுடைய திருவாக்குக்களிலே) நம்பிக்கையும், அ(வரை வழிபடுதல்முதலான)வற்றிலே ஊக்கமும் உடையவனாய் இந்திரியங்களை நன்கு அடக்கி இவ்வாறு நிற்பவன் எவனோ, அவன் அவச்யம் ஞானத்தைப் பெறுகிறான். பகிரங்க(ஸாதந)மான ஸாஷ்டாங்கநமஸ்காரம் முதலியவையோ, (பயனைக் கொடுக்கத்)தவறுபவையாகவும் ஆகின்றன ; (மனத்திலொன்றும், வெளியிலொன்றுமாகக் காட்டுவதனால்)கள்ளமாயத்தன்மைமுதலியன நிகழக்கூடுமாகலின். ஆனால், அவை நம்பிக்கையுடைமைமுதலானவற்றிலே நிகழமாட்டா என(இந்நம்பிக்கையுடைமைமுதலியவை), ஞானத்தைப் பெறுதற்குத் தவறாத வழியாம். மற்று, ஞானத்தைப் பெறுதலால் ஆவதென்ன என்பது ? கூறுவோம் :—(அவன்)ஞானத்தையடைந்தபின்னர், மோக்ஷமெனப்படும் உயர்ந்த ஒழிவைத் தாமதமின்றிச் சீக்கிரமாகவே அடைகிறான். மெய்யறிவினால் விரைவாகவே மோக்ஷம் அமைகின்றதென்பது எல்லாசாஸ்திரங்களாலும் யுக்தியினாலும் நிரூபித்து நன்குநிர்ணயிக்கப்பட்டதான விஷய மென்க.

(௩௯)

𑌅𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑍋 𑌹𑌿 𑌸𑌂𑌶𑌯𑌃। 𑌕𑌥𑌮𑍍? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௪௦. 𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌰𑍋 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌗𑍁𑌰𑍁𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌅𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌸𑌂𑌶𑌯𑌚𑌿𑌤𑍍𑌤𑌶𑍍𑌚 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌅𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑍌 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌃, 𑌨 𑌤𑌥𑌾 𑌯𑌥𑌾 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 । 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍁 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍। 𑌕𑌥𑌮𑍍? 𑌨𑌾𑌯𑌂 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍋𑌽𑌪𑌿 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌨 𑌪𑌰𑌃 𑌲𑍋𑌕𑌃 । 𑌨 𑌸𑍁𑌖𑌂, 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌸𑌂𑌶𑌯𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌂𑌶𑌯𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌂𑌶𑌯𑍋 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 ॥ ௪௦ ॥

𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍?—

௪௧. 𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌮𑍍 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌨𑍍𑌤𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑌂𑌜𑌯 ॥

𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌯𑍇𑌨 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌿 𑌤𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍍 । 𑌕𑌥𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑍇𑌤𑌿? 𑌆𑌹—𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌃 𑌸𑌂𑌶𑌯𑍋 𑌯𑌸𑍍𑌯

ஞானம் ஸம்சயத்தை அறச்செய்வது.

இதிலே ஸம்சயப்படக்கூடாது ; ஏனெனில், ஸம்சயமென்பது மிகப்பெரிய பாவமாம்.—எப்படி ?— கூறுவோம் :

௪௦. **அறியாதவனும், நம்பாதவனும், ஸந்தேகத்தன்மையனும் கெட்டுப்போகிறார்கள். ஸந்தேகத்தன்மையனுக்கு இவ்வுலகம் இல்லை, மற்றை (உலகமும்) இல்லை, ஸுக(மு)ம் இல்லை.**

ஆத்மாவை அறியாதவனும், குருவினுடைய திருவாக்கிலும் சாஸ்திரத்திலும் நம்பிக்கையில்லாதவனும், ஸந்தேகப்பட்ட மனத்தினனும் கெட்டுப்போகிறார்கள். அஜ்ஞானியும், நம்பிக்கையில்லாதவனும் கெட்டுப்போகிறார்கள் என்றாலும், ஸந்தேக மனத்தினன் எவ்வாறு அவ்வாறு (இவர்கள் கெட்டுப்போவது) இல்லை. ஸம்சயமனமுடையவனே தான் எல்லாரினும் மிகப்பெரியபாவி.—எப்படி ?—(அவனுக்கு, எல்லார்க்கும்) பொதுவாயுள்ளதுமான இவ்வுலகம் இல்லை. அவ்வண்ணமே, பரலோகமில்லை. ஸந்தேகமனமுள்ளவனுக்குஅவற்றிலும்[இம்மைமறுமை இரண்டிலும்]ஸம்சயமுண்டாதலால், ஸுக மில்லை. ஆதலால், ஸம்சயப்படக்கூடாது. (௪௦)

ஏனெனில்,

௪௧. **தநஞ்ஜய ! யோகத்தால் கர்மத்தைத் துறந்து, ஞானத்தால் ஸம்சயமறப் பெற்று, கவனத்தோடிருப்பவனைக் கர்மங்கள் கட்டுப்படுத்தமாட்டா.**

பரம்பொருளைக் காண்பவன், (அப்)பரம்பொருளைக், காணுதலென்னும் யோகத்தினால், தருமம்அதர்மம் எனப்படுகின்ற கர்மங்களைத் துறந்துநிற்கிறான் என்பது எப்படி ?—கூறுகிறார்:—(அவன்), தன்னையும் ஈச்வரனையும் ஒன்றாகக் காணுதலென்னும் ஞானத்தினால் ஸம்சயமறப்பெற்றவன். தநஞ்ஜய! எவன் இவ்வாறுயோகத்தால்

𑌸𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 । 𑌯 𑌏𑌵𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾 𑌤𑌂 𑌆𑌤𑍍𑌮𑌵𑌨𑍍𑌤𑌂 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌂 𑌗𑍁𑌣𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌰𑍂𑌪𑍇𑌣 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌨𑌾𑌰𑌭𑌨𑍍𑌤𑍇 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ॥ சக ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌤𑍍 𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑍍𑌷𑌯𑌹𑍇𑌤𑍁𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵, 𑌯𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑍇 𑌸𑌂𑌶𑌯𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿—

சஉ. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌂 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌤𑍍 𑌜𑌾𑌤𑌂 𑌹𑍃𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌹𑌰𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌅𑌸𑌿𑌃 𑌖𑌡𑍍𑌗𑌃 𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑌿𑌨𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯, 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌸𑌂𑌶𑌯𑌸𑍍𑌯 । 𑌨 𑌹𑌿 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑍇𑌨 𑌛𑍇𑌤𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾-

---

கர்மங்களைத் துறந்தவனே, அந்த ஸாவதாந(ஞானியை முக்)குணங்களின் செய்கைகளாகக் காணப்பட்ட கர்மங்கள் கட்டுப்படுத்துவதில்லை, தீமைமுதலாகியபயனை விளைப்பதில்லை யென்க. (சக)

க. கர்மயோகத்தை அநுஷ்டித்தலால் அழுக்குத் தேய்ந்துபோக, அதனால் ஞானமுண்டாக, அந்தஞானத்தால் ஸம்சயமறப்பெற்றவனைக் கர்மங்கள் கட்டுவதில்லை; ஞானமென்னும் தீயினால் கர்ம(மனைத்து)ம் எரிக்கப்பட்டமையினாலேயே யென்க. உ. அன்றியும்,ஞானகர்மங்களை அநுஷ்டிக்கும்விஷயத்திலே ஸந்தேகமுடையவன் கெட்டுப்போகிறான் (என்றஇவ்விரண்டும்)எதனால் உள்ளனவோ,

சஉ. அதனால், நீ, அஜ்ஞானத்தா லுண்டாகி நெஞ்சிலே நிலைத்திருப்பதாய், ஆத்மாவைப்பற்றிய இச் சந்தேசத்தை ஞானமென்னும் அரிவாளால் அரிவி யோகத்தைக் கைக்கொள். பாரத ! எழுந்திரு.

ஸ்ரீ மகாபாரதத்திலே நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையாய், வ்யாஸர் அருளிச்செய்ததாய், பீஷ்மபர்வத்திலே ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீ கிருஷ்ணார்ஜுநஸம்வாதத்திலே ஞானயோகம் என்னும் நான்காம் அத்தியாயம் முற்றும்.

ஆதலால், நீ, மிகப்பொல்லாததும் அவிவேகத்தால் உண்டானதும் புத்தியிலே நிலைத்திருப்பதும் தான்[நீ]கெடுதற்குக் காரணமானதுமாய் ஆத்மாவைப்பற்றியதான த[உ]ன்னுடை இச்சம்சயத்தை, துன்பம்மயக்கம்முதலான தீங்குகளைப் போக்கும் மெய்யறிவென்னும் அரிவாளால் அரிவி, மெய்யறிவுக்கு ஸாதநமான கர்மாநுஷ்டாநத்தைக் கைக்கொள், அதாவது(அதனைச்)செய், பாரத ! இனி இப்பொழுது போர் புரிய எழுந்திரு. என(ப் பகவான் அருளிச்செய்யலானார்).

ஸ்த²:, யேந ஸ்வஸ்யேதி விஶேஷ்யதே । அத: ஆத்மவிஷயோऽபி ஸ்வஸ்யைவ ப⁴வதி । சி²த்த்வா ஜ்ஞாநம் ஸம்ஶயம் ஸ்வவிநாஶஹேதுபூ⁴தம், மயோபதி³ஷ்டம் ஸம்யக்³த³ர்ஶநோபாயம் கர்மாநுஷ்டா²நம் ஆதிஷ்ட² கர்ம குர்வித்யர்த²: । உத்திஷ்ட² ச இதா³நீம் யுத்³தா⁴ய ஹே பா⁴ரத இதி ॥ சஉ ॥

இதி ஶ்ரீப⁴க³வத்³கீ³தாபா⁴ஷ்யே சதுர்தோ²ऽத்⁴யாய: ॥

ஸம்சயமானது ஆத்மாவைப்பற்றிய தாதலின், "தன்னுடைய" (என்பதை வருவித்துக்கொள்க). ஒருவனுடைய ஸம்சயத்தை வேறொருவன் அறுக்கமுடியாதா தலின், தன்னுடைய என்று சிறப்பித்துக்கூறவேண்டும். ஆதலால்,(ஸம்சயமானது) ஆத்மாவைப்பற்றியதாயினும், தன்னுடையதாகவே ஆகின்றது.(தான் - ஆத்மா. ஒரு வன் இப்பியைப் பார்த்து, இது இப்பியோ வெள்ளியோ என ஐயமுற்றவிடத்து அச்சந்தேகம் இப்பியைப்பற்றியதாய் அவனிடத்து உள்ளது. இங்கேயோ,இவ்வாறு இல்லை. ஸம்சயமானது தன்னைப்பற்றியதாய்த் தன்னிடத்தே உள்ளது. இதனை விளக்கும்பொருட்டு "தன்னுடைய" என்பதை வருவித்துக்கொள்ளவேண்டும் என்க.—ஆ.) (சஉ)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் நான்காவது அத்தியாயம் முற்றும்.

𑌪𑌞𑍍𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌃 ॥

'𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 '𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍' '𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍍' '𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍' '𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾𑌲𑌾𑌭𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃' '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌃' '𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍' '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥' '𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿' '𑌯𑍋𑌗𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍈𑌃 𑌵𑌚𑌨𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍍 𑌅𑌵𑍋𑌚𑌤𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍; '𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌨𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑌿𑌷𑍍𑌠' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌵𑌚𑌨𑍇𑌨 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 । 𑌉𑌭𑌯𑍋𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌗𑌤𑌿𑌵𑌤𑍍 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌏𑌕𑍇𑌨 𑌸𑌹 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌕𑌾𑌲𑌭𑍇𑌦𑍇𑌨 𑌚 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, 𑌅𑌰𑍍𑌥𑌾𑌤𑍍 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌸𑌤𑍍𑌯𑌾𑌂 𑌯𑌤𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌮𑍍 𑌏𑌤𑌯𑍋𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌃 𑌤𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌇𑌤𑌰𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑌰𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌯𑌾 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—'𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 ॥

𑌨𑌨𑍁 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌦𑌾𑌹𑍃𑌤𑍈𑌃 𑌵𑌚𑌨𑍈𑌃 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍍 𑌅𑌵𑍋𑌚𑌤𑍍, 𑌨 𑌤𑍁 𑌅𑌨𑌾-

---

ஐந்தாம் அத்தியாயம் : ஸந்யாஸ யோகம்.

அஜ்ஞானிக்கு நலமானது கர்மயோகமா ? ஸந்யாஸமா ?

" எவன் கர்மத்தில் " (௪ - ௧௮) என்பது முதல், " ஞானமென்னும் தீயினால்" (௪ - ௧௯), " சாரீரகர்மத்தை " (௪-௨௧), " தானாகக்கிடைத்ததை " (௪-௨௨), " அர்ப்பிப்பது " (௪-௨௪), " அவை யெல்லாவற்றையும்" (௪-௩௨), "ஸகலகர்மமும்" (௪-௩௩), " ஞானம் " (௪ - ௩௭), " கர்மங்களை " (௪-௪௧) என்பன ஈறாகவுள்ள திருவாக்குக்களால் ஸகலகர்மங்களையும் துறந்திடுதலைப் பகவான் கூறினர்."இச்சம்சயத்தை (ஞானமென்னும் வாளால்) அரிவி, (கர்ம) யோகத்தைச் செய்யக்கடவாய் " (௪ - ௪௨) என்னும் இத்திருவாக்கினால் ' கர்மாநுஷ்டாநமாகிய யோகத்தையும் நீ செய்யவேண்டும் ' எனக் கூறினர். இனி, கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத் துறந்திடுதலுமாகிய இரண்டும், நிற்றலென்பதும் நடத்தலென்பதும் போல, ஒன்றற்கொன்று விரோதித்தலால் (அவற்றை) ஒருவன் ஒருங்கே அநுஷ்டிக்கமுடியாது. அன்றியும், (அவற்றை) வெவ்வேறுகாலத்தில் அநுஷ்டிக்கலாம் எனவும் விதிக்கப்படவில்லை. ஆகவே, இவ்விரண்டனுள் ஏதாவதொன்றை அநுஷ்டிக்கவேண்டுமென்பது கருத்தினால் அமைய, ' கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத் துறந்திடுதலுமாகிய இவ்விரண்டனுள் எது சிறந்ததோ, அதனைச் செய்யவேண்டும் ; மற்றையது இல்லை' என இவ்வாறாகக்கொண்டு அர்ஜுனன், சிறந்ததைத் தெரிந்துகொள்ளவேண்டும்என்னும் விருப்பத்தினால் " கிருஷ்ண !" (௫ - ௧) என்பதுமுதலாகக் கூறலானான் :

(ஆக்ஷேபம்):—அப்படியானால், பகவான் ஞானயோகத்தால் நிஷ்டையை உணர்த்தும்பொருட்டு, முன்எடுத்துக்காட்டிய திருவாக்குக்களால் கர்மங்களைத் துறந்திடு

तज्ज्ञस्य । कुतः कर्मानुष्ठानकर्मसंन्यासयोः भिन्नपुरुषविषयत्वात् अन्यतरस्य प्रशस्यतरत्वबुभुत्सया अयं प्रश्नः अनुपपन्नः ॥ सत्यम्; त्वदभिप्रायेण प्रश्नो न उपपद्यते; प्रष्टुः स्वाभिप्रायेण पुनः प्रश्नः युज्यत एवेति वदामः । कथम्? पूर्वोदितवाक्येभ्यः कर्मणां भगवता कर्मसंन्यासस्य कर्तव्यतया विवक्षितत्वात्, प्राधान्यमन्तरेण च तस्य कर्तुः कर्तव्यत्वासंभवात् अनात्मविदोऽपि कर्तृपक्षे प्राप्तः अनूद्यते; न पुनः आत्मवित्कर्तृकस्यैव संन्यासस्य विवक्षितत्वम् इति । एवं मन्यमानस्य अज्ञस्य कर्मानुष्ठानकर्मसंन्यासयोः अविद्वत्कर्तृकत्वेऽपि अस्तीति पूर्वोक्तेन प्रकारेण तयोः परस्परविरोधात् अन्यतरस्य कर्तव्यत्वे प्राप्ते प्रशस्यतरं च कर्तव्यं न इतरत् इति प्रशस्यतरविविक्षया प्रश्नः न अनुपपन्नः ॥

प्रतिवचनवाक्यार्थनिरूपणेनापि प्रष्टुः अभिप्रायः एवमेवेति गम्यते । कथम्? "संन्यासकर्मयोगौ निःश्रेयसकरौ तयोस्तु

தலை ஆத்மாவை அறிபவனுக்குக் கூறினுரேயன்றி ஆத்மாவை அறியாதவனுக்கு இல்லை. ஆகவே, கர்மங்களை அநுஷ்டித்தலும் கர்மங்களைத்துறந்திடுதலுமாகிய இரண்டும் வெவ்வேறு புருஷர்களைப் பற்றியுள்ளமையால் (அவற்றுள்) எது சிறந்ததெனத் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்னும் கருத்தினால் இவ்வினு (வந்ததென்பது) பொருந்தாது.

(ஸமாதாநம்) :—உண்மை ; இவ்வாறு உன் கருத்தின்படி வினுப் பொருந்தாது ; மற்று, கேட்கின்றவனுடைய சொந்தக்கருத்தின்படி வினு, பொருந்தியே நிற்கின்றதெனக்கூறுவோம்.—எப்படி?—கர்மங்களைத் துறந்திடவேண்டுமென்பது, முன் எடுத்துக்காட்டிய திருவாக்குக்களினால் பகவான் சொல்லக்கருதியது. அன்றியும், (ஸந்யாஸத்திற்கு) முதன்மை இல்லாவிடில், கர்த்தாவினால் அது செய்யப்படவேண்டுமென்பது ஏற்காது. ஆதலால், கர்த்தாவானவன் அஜ்ஞானியாயினும் (விஷயங்களிலே மிக்கவைராக்கியமுள்ளவனாயின், அவனும் கர்மஸந்யாஸ)பக்ஷத்தில்(அதிகாரியாவான் என்பது கருத்து. ஆகவே, இங்கு, அவ்வாறு)அமைந்தவனே குறிக்கப்படுகிறான். ஆனால், கர்மஸந்யாஸத்திலே ஞானிதான் அதிகாரியென்பது கருத்தன்று ; ஆதலின், (அஜ்ஞானிக்கும் ஒருநிலைமையிலே கர்மஸந்யாஸம் உண்டு என அறிக. இனி) இவ்வாறாக அஜ்ஞானியான புருஷனும், கர்மங்களை அநுஷ்டித்தலினும் கர்மங்களைத்துறந்திடுதலினும் அதிகாரியாக இருக்கிறான் என்று அர்ஜுனன் (மனத்திற்) கொள்ள, அப்பொழுது முற்கூறியபடி அவை இரண்டற்கும் ஒன்றற்கொன்றுள்ள மாறுபாட்டினால் எதாவதொன்றைச் செய்யவேண்டுமென்று அமைய, (அவற்றுள்) மேலானதையே செய்யவேண்டுமேயன்றி மற்றையதை இல்லை என (அவற்றுள்) மேலானதைத் தெரிந்துகொள்ளும் கருத்தோடு (கேட்ட அவன்) வினுவானது பொருந்தாததாய் இல்லையென்க.

இவ்வினுவானது ஞானியைப்பற்றியதன்று.

(பகவானுடைய) மறுமொழிவாக்கியத்தின்பொருளை ஆராய்தலானும், கேட்கிறவனுடைய கருத்து இப்படித்தான் என்று தெரியவருகின்றது.—எப்படி ?— "துறவும், கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவை ; ஆனால், அவற்றுள் கர்ம

𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌮𑍍 | 𑌏𑌤𑌤𑍍 𑌨𑌿𑌰𑍂𑌪𑍍𑌯𑌮𑍍—𑌕𑌿𑌮𑍍 𑌅𑌨𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌯𑍋𑌰𑍇𑌵 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌤𑌦𑍁𑌭𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌇𑌤𑌿 ||

𑌕𑌿𑌂 𑌚 𑌅𑌤𑌃—𑌯𑌦𑌿 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌤𑌦𑍁𑌭𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 ||

𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌯𑍋𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌅𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌤𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌵𑌚𑌨𑌂 𑌤𑌦𑍀𑌯𑌾𑌚𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌉𑌭𑌯𑌮𑍍 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 | 𑌯𑌦𑌿 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌸𑌂𑌭𑌵𑍇𑌤𑌾𑌂, 𑌤𑌦𑌾 𑌤𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌿𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍

யோகம் சிறப்புற்றது" (ரு-உ) என்பது மறுமொழி. ஞானியைக்கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவையென்னும் பயனைக் கூறி, அவற்றுள்ளே கர்மங்களைத் துறந்திடுதலைக்காட்டிலும் கர்மயோகம் ஏதோஒருவிசேஷத்தால் மேலானது என இதனால் கூறப்படுகின்றதா? அல்லது, அஜ்ஞானியைக் கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமுமாகிய இவற்றிற்கு அவையிரண்டும் [உறுதியான நன்மையைச் செய்வதும், கர்மயோகம் மேலானதென்பதும்] கூறப்படுகின்றனவா? என இதனை [மறுமொழியை] ஆராயவேண்டும்.

ஆகவே, இன்னும் (ஒருவினா வருமாறு):—ஞானிசெய்யும் கர்மஸந்யாஸமும் கர்மயோகமும் உறுதியானநன்மையைச் செய்பவை என்பதும், ஆனால் அவற்றுள் கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலானது என்பதும் கூறப்பட்டால், (வரும் குற்றமென்ன?) அல்லது, அஜ்ஞானிசெய்யும் கர்மஸந்யாஸம் கர்மயோகம் என்றவற்றிற்கு அவையிரண்டும் கூறப்பட்டால், (வரும் பயனென்ன?) என்பது.

இதனுள், (முதல்பக்ஷத்திலே வரும் குற்றத்தைக்)கூறுவோம்:

ஞானியைக் கர்த்தாவாகவுடைய துறவும் கர்மயோகமும் நிகழக்கூடாமையின் அவை உறுதியானநன்மையைச் செய்பவை எனக்கூறுதலும், அவனுடைய கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலானது எனக்கூறுதலுமாகிய இவ்விரண்டும் பொருந்தா என்க. ஆத்மாவை அறியாதவனுக்குக் கர்மங்களைத்துறந்திடுதலும், அதற்கு மாறானதும் (அதாவது,) கர்மங்களை அநுஷ்டித்தலாகிய கர்மயோகமும் நிகழக்கூடுமாயின், அவை இரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவை என்றலும், கர்மயோகம் கர்மங்களைத்துறந்திடுதலினும் மேலானதென்றலும் ஆகியஇவ்விரண்டும் அப்பொழுது

𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍 𑌉𑌭𑌯𑌮𑍍 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌅𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌤𑌯𑍋𑌃 𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌚𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌚 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌆𑌹 — 𑌕𑌿𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌉𑌭𑌯𑍋𑌰𑌪𑌿 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃? 𑌆𑌹𑍋𑌸𑍍𑌵𑌿𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌸𑍍𑌯 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃? 𑌯𑌦𑌾 𑌚 𑌅𑌨𑍍𑌯𑌤𑌰𑌸𑍍𑌯 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃 𑌤𑌦𑌾 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯? 𑌉𑌤 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯? 𑌇𑌤𑌿 । 𑌅𑌸𑌂𑌭𑌵𑍇 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌚 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 ॥ 𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 — 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌲𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌅𑌪𑌾𑌸𑍍𑌤𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑍍𑌯 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌲𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌪𑍁𑌰𑌃𑌸𑌰𑌸𑍍𑌯 𑌸𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌇𑌹 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍂𑌲𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

பொருந்தும். ஆனால், ஆத்மாவை அறிந்தவனுக்குத் துறவும் கர்மயோகமும் நிகழாமையின், அவைஇரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவை என்று கூறலும், கர்மயோகம் துறவினும் மேலானதென்பதும் பொருந்தா என்க.

துறவும் கர்மயோகமும் ஞானிக்குப் பொருந்தா.

(ஆக்ஷேபம்) :—இதில் (பிரதிவாதி) கூறுகிறான்:— ஆத்மாவை அறிந்தவனுக்குத் துறவு கர்மயோகம் இரண்டுமே நிகழ்வதில்லையா ? அல்லது, ஏதாவதொன்று நிகழ்வதில்லையானால், அங்ஙனம் (அது) கர்மஸந்யாஸமா ? அல்லது, கர்மயோகமா ? என்பது. (அவை இரண்டுமாயினும், ஏதாவதொன்றாயினும் அவனுக்கு) நிகழாதிருத்தலிலே காரணமும் சொல்லவேண்டும் என்பது.

(ஸமாதானம்):— இதில் (வாதி) கூறுகிறான்:— ஆத்மாவை அறிந்தவனுக்குப் பொய்யறிவு நீங்கியுள்ளமையால், மயக்கஅறிவு காரணமாகவரும் கர்மயோகம் நிகழாமை யாகும். எவன் தன்னை, பிறத்தல் முதலிய எத்தகையவிகாரங்களும் கர்மங்களும் இல்லாத ஆத்மாவாக அறிகிறானோ, அந்த ஆத்மஞானிக்கு (அதாவது,) மெய்யறிவினால் பொய்யறிவு நீங்கியவனுக்கு, கர்மமில்லா ஆத்மவடிவமாகவே நிற்றலாகிய ஸகலகர்மத்துறவைக் கூறிப், பின்னே, அதற்கு மாறானதாய், பொய்யறிவு மூலமாக வரும் (யான் தொழிலைச்) செய்பவன் என்னும் முனைப்பை முன்னிட்டு, தொழிலோடு கூடிய ஆத்மவடிவமாகவே நிற்றலாகிய [ஆத்மா தொழிலைப் பெற்றதுஎன்னும் எண்ணத்தைத் தழுவிநிற்பதாகிய]கர்மயோகமானது, மெய்யறிவு பொய்யறிவுகட்கும்(அவ்வாறே)அவற்றின்செய்கைகட்கும் உள்ள மாறுபாட்டினால்(ஞானிக்கு இல்லை என இங்குக் கீதாசாஸ்திரத்தில் ஆங்காங்கு ஆத்மா இன்னதென்று நிரூபிக்குமிடங்களிலே உணர்த்தப்படுகின்றது. ஆதலால், பொய்யறிவு நீங்கி ஆத்மாவை அறிந்தவனுக்கு, **மயக்கஅறிவு மூலமாகவரும் கர்மயோகம் நிகழாதெனக் கூறியது நேராகு மென்க.**

𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌷𑍁 𑌪𑍁𑌨𑌃 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿? 𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—'𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿 𑌤𑍁 𑌤𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯 '𑌯 𑌏𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌮𑍍' '𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨𑌨𑍁 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋𑌽𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤 𑌏𑌵; 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 '𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌭𑌾𑌰𑌤' '𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿 𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯' '𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍌। 𑌅𑌤𑌶𑍍𑌚 𑌕𑌥𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌅𑌸𑌂𑌭𑌵𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿? 𑌅𑌤𑍍𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇— 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍, '𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌤𑌃 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌰𑌣𑌾𑌤𑍍, 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, '𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌵𑌚𑌨𑌾𑌤𑍍, '𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑌨𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌤𑍍' '𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁

(வினா) :—மற்று, ஆத்மா இன்னது என நிரூபிக்கின்ற எந்தெந்த இடங்களிலே, ஆத்மாவை அறிந்தவனுக்குக் கர்மமின்மையானது உணர்த்தப்படுகின்றது என்பது ?

(விடை) :—(அவற்றை) இங்குக்கூறுவோம்:— ஆத்மாவை அறிந்தவனுக்குக் கர்மமின்மையானது "அது அழிவில்லாதது "(௨ - ௧௭) எனப்பிரஸ்தாபிக்கப்பட்டு "எவன் இதனை "(௨ - ௧௯), "அழிவில்லாததாக "(௨- ௨௧)என்பனமுதலியவற்றிலே ஆங்காங்குக் கூறப்படுகின்றது.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், ஆத்மா இன்னது என்று நிரூபிக்கும் இடங்களிலே ஆங்காங்குக் கர்மயோகமும்தான் உணர்த்தப்படவேபடுகின்றது. அது, "பாரத ! ஆதலால், போர்புரியக்கடவாய்" (௨ - ௧௮), "ஸ்வதருமத்தையும் நோக்கியும் " (௨ - ௩௧), "உனக்குக் கர்மத்திலேதான் அதிகாரம் "(௨ - ௪௭)என்பனமுதலியவற்றிலே வருமாறு(காண்க). ஆதலால், ஆத்மாவை அறிந்தவனுக்கும் கர்மயோகம் நிகழாமை எப்படி என்பது ?

(ஸமாதானம்):—இங்கே கூறுவோம் :—(௧)மெய்யறிவிற்கும் பொய்யறிவிற்கும் (அவ்வாறே) அவற்றின்செய்கைகட்குமுள்ள மாறுபாட்டினாலும் : (௨) "ஞானயோகத்தால் ஸாங்க்யர்களுக்கு " (௩ - ௩) என்றஇதனால், கர்மமில்லா ஆத்மவடிவமாகவே நிற்றலாகிய ஞானயோகநிஷ்டையை, ஆத்மாவின் உண்மையை உணர்ந்த ஸாங்க்யர்களுக்கு, ஆத்மாவை அறியாதவன் செய்யும் கர்மயோக நிஷ்டையினின்றும் வேறுபடுத்தலாலும் : (௩)ஆத்மாவை அறிந்தவனுக்குப் புருஷார்த்தங் கைகூடப்பெற்றமையால் (அடையவேண்டிய)வேறொருபயன் இல்லாமையாலும் : (௪)"அவனுக்குக் காரியமில்லை "(௩ -௧௭) என(அவன்)செய்யவேண்டியதொன்றும் இல்லாமையைக் கூறுதலாலும் : (௫) " கர்மங்களைச் செய்யாமையினால் "(௩ - ௪), "உயர்தோள!

संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः' इत्यादिना च ज्ञाननिष्ठाङ्गत्वेन कर्मयोगस्य विधानात्, 'योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते' इत्यनेन च उत्पन्नसम्यग्दर्शनस्य कर्मयोगाभावविधानात्, 'शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम्' इति च शरीरस्थितिकारणातिरिक्तकर्मणो निवारणात्, 'नैव किञ्चित्करोमीति युक्तो मन्येत तत्त्ववित्' इत्यनेन च शरीरस्थितिमात्रप्रयुक्तेष्वपि दर्शनश्रवणादिकर्मसु आत्मयाथात्म्यविदः "न करोमि" इति प्रत्ययस्य समाहितचेततया सदा कर्तव्यत्वविधानात् आत्मतत्त्वविदः सम्यग्दर्शनविरुद्धो मिथ्याज्ञानहेतुकः कर्मयोगः स्वप्नेऽपि न सम्भावयितुं शक्यते यस्मात् तस्मात् अनात्मवित्कर्तृकयोरेव संन्यासकर्मयोगयोः निःश्रेयसकरत्ववचनं, तदीयाच्च कर्मसंन्यासात् पूर्वोक्तात्मवित्कर्तृकसर्वकर्मसंन्यासविलक्षणात् सत्येव कर्तृत्वविज्ञाने कर्मैकदेशविषयात् यमनियमादिसहितत्वेन च दुरनुष्ठेयात् सौकर्येण च कर्मयोगस्य विशिष्टत्वाभिधानम् इत्येवं प्रतिवचनवाक्यार्थनिरूपणेनापि पूर्वोक्तः प्रष्टुः अभिप्रायः निश्चीयते इति स्थितम् ॥

துறவென்பது "(ரு - சு)என்பன முதலியவற்ருல், கர்மயோகத்தை ஆத்மஅறிவுக்குத் துணையாக விதித்தலாலும் : (சு) மெய்யறிவு உண்டானவனுக்குக் கர்மயோகமில்லாமையை "யோகத்தை அடைந்தவனுக்கு" (சு - ங)என்றஇதனுல் கூறுதலாலும்: (எ)"சாரீரகர்மத்தைமாத்திரம் செய்கிறவன் பாவத்தை அடையமாட்டான்" (சு-உக) என, சரீரம் நிலைபெறுதற்குக் காரணமான கர்மத்தைத்தவிர மற்றையகர்மத்தை மறுத்தலாலும்(ஞானிக்குக் கர்மயோகமில்லை யென்க). பார்த்தல், கேட்டல் முதலிய தொழில்கள் சரீரம்நிலைத்திருப்பதற்குமாத்திரம் அமைவனவாயினும், ஆத்மாவின் உள்ளபடியான தன்மையை உணர்ந்தவன் அவற்றின்மேல் "நான்(ஒன்றும்) செய்கிறேனில்லை"என்னும் எண்ணத்தை ஒருநிலைப்பட்ட மனத்தோடு எப்பொழுதும் கொள்ளவேண்டுமென "(நிஷ்டை)கூடி உண்மைஉணர்ந்தவன் 'நான் ஒன்றுஞ் செய்வதே இல்லை'எனக் கொள்ளவேண்டும்" (ரு - அ) என்பதனுல் உபதேசித்தலின், மெய்யறிவிற்கு மாறானதாய்ப் பொய்யறிவினுல் உண்டாகும் கர்மயோகமானது ஆத்ம உண்மையை உணர்ந்தவனுக்குக் கனவிலும் நினைக்கமுடியாது. ஆதலால், ஆத்மாவை அறியாதவன் செய்யும் துறவும் கர்மயோகமுந்தான் உறுதியான நன்மையைச் செய்பவை எனக்கூறுதல்(ஏற்கும்) ; அன்றியும், முன்கூறிய ஆத்மஞானி செய்யும் ஸகலகர்மத்துறவிற்கு வேருய், கர்த்தாவென்னும்புத்தி இருக்கும்பொழுதேயே சிலகர்மங்களைப்பற்றியதும் [ஸந்யாஸநிலைக்கு விதிக்கப்பட்ட சிரவணம் மநநம் முதலியதொழில்களை நான் செய்பவன்என்னும் புத்திஇருக்கும்பொழுதே முந்தின ஆச்ரமச் செய்கைகளைமாத்திரம் துறந்திடுவதும்], யமம் நியமம் முதலியவற்ருேடமைந்துள்ளமையால் அநுஷ்டித்தற்கு அரியதுமான அவனுடைய[அஜ்ஞானியினுடைய] கர்மஸந்யாஸத்தைக்காட்டிலும் கர்மயோகமானது எளிதில்செய்யக்கூடியதாதலால்மேலானதென்று கூறுதலும்(ஏற்கும்). எனஇவ்வாருக மறுமொழிவாக்கியத்தின் பொருளை ஆலோசித்தலாலும், கேட்கிறவனுக்கு முற்கூறியது(தான்) கருத்தென நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகவே, (அர்ஜுனன் வினு நேரென்பது) நிலைத்தது.

'ज्यायसी चेत्कर्मणस्ते' इत्यादौ ज्ञानकर्मणोः सह असंभवात् "यच्छ्रेय एतयोः तदेकं ब्रूहि" इति पृष्टोऽर्जुनेन भगवान् सांख्यानां संन्यासिनां ज्ञानयोगेन निष्ठा कर्मयोगेन योगिनां निष्ठा प्रोक्तेति निर्णयं चकार। "न च संन्यसनादेव केवलात् सिद्धिं समधिगच्छति" इति वचनात् ज्ञानसहितस्य संन्यासस्य सिद्धिसाधनत्वम् इष्टं; कर्मयोगस्य च, विधानात्। ज्ञानरहितः संन्यासः श्रेयान्? किं वा कर्मयोगः श्रेयान्? इति एतयोः विशेषं बुभुत्सुः—

अर्जुन उवाच॥

க. संन्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि।
यच्छ्रेय एतयोरेकं तन्मे ब्रूहि सुनिश्चितम्॥

संन्यासं परित्यागं कर्मणां शास्त्रीयाणाम् अनुष्ठानविशेषाणां शंससि प्रशंससि कथयसि इत्येतत्। पुनः योगं च तेषामेव अनुष्ठानम् अवश्यकर्तव्यं शंससि। अतः मे कतरत् श्रेयः इति संशयः—किं कर्मानुष्ठानं श्रेयः? किं वा तद्धानम् इति? प्रशस्यतरं च अनुष्ठेयम्। अतश्च यत् श्रेयः प्रशस्यतरम् एतयोः कर्मसंन्यासकर्मयोगयोः, यदनुष्ठानात् श्रेयोऽवाप्तिः मम स्यात् इति

ஞானகர்மங்கள் இரண்டும் ஒருங்கே உடன் நிகழாமையால், "கர்மமானது" (ங - க)என்றவிடத்து "இவ்விரண்டனுள் எது மேலானதோ, அதனை எனக்கு உரைத்தருளவேண்டும்" என அர்ஜுனனுல் கேட்கப்பட்ட பகவான், ஸாங்க்யர்களான துறவிகட்கு ஞானயோகத்தால் நிஷ்டையும் (கர்ம)யோகிகட்குக் கர்மயோகத்தால் நிஷ்டையும் கூறப்பட்டன என்று முடிவுசெய்தனர். மேலும், "வெறுந்துறவினுல் மாத்திரம்(பொருள்)கைகூடுதலே அடைவதில்லை" (ங - ச)என்னும் திருவாக்கினுல், ஞானத்தோடுகூடிய அது, பொருள்கைகூடுதற்கு ஸாதநமாகக் கொள்ளப்பட்டது; மற்றும், கர்மயோகத்தை விதித்தலால்(ச - சஉ), (அதுவும், பொருள்கைகூடுதற்கு ஸாதநமெனக் கொள்ளப்பட்டது). ஞானமில்லாத துறவு மேலானதா ? அன்றி, கர்மயோகம் மேலானதா ? என இவ்விரண்டனுள் மேலானதை அறிய விரும்பிய

அர்ஜுனன் சொல்லலுற்றுன் :

க. **கிருஷ்ண ! கர்மங்களைத்துறந்திடுதலேயும், மற்று, (கர்ம) யோகத்தையும் புகழ்ந்து பேசுகிறீர்கள். இவ்விரண்டனுள் எது மேலானதோ, அஃதொன்றையே தீர்க்தமுடிவாக எனக்கு உரைத்தருளவேண்டும்.**

சாஸ்திரத்திற்கூறிய பலவகையான அநுஷ்டாநங்களைத் துறந்திடுதலைப் புகழ்கிறீர்கள், அதாவது, கூறுகிறீர்கள். மீண்டும், அவற்றையே அநுஷ்டித்தலையும் அவசியம் செய்யவேண்டுமெனக்கூறுகிறீர்கள். ஆகவே, எது மேலானதோ என்பது என் ஸம்சயம் : கர்மத்தை அநுஷ்டித்தல் மேலானதா? அல்லது, அதனை விட்டிடுதல் மேலானதா ? என்பது. ஆனுல், மேலானதாயிருப்பதை அநுஷ்டிக்கவேண்டும். ஆதலால், கர்மஸந்யாஸமும் கர்மயோகமுமாகிய இவ்விரண்டனுள் எது மேலானதோ, எதனை

अनुष्ठेयं तत् एकं अनुष्ठातुः सह एकपुरुषानुष्ठेयासंभवात् मे ब्रूहि सुनिश्चितम् अभिप्रेतं तव इति ॥ ௧ ॥

स्वाभिप्रायं चाचक्षाणो निर्णयाय श्रीभगवानुवाच—

श्रीभगवानुवाच ॥

௨. संन्यासः कर्मयोगश्च निःश्रेयसकरावुभौ ।
तयोस्तु कर्मसंन्यासात् कर्मयोगो विशिष्यते ॥

संन्यासः कर्मणां परित्यागः कर्मयोगश्च तेषाम् अनुष्ठानं तौ उभौ अपि निःश्रेयसकरौ मोक्षं कुर्वाते ज्ञानोत्पत्तिहेतुत्वेन । उभौ यद्यपि निःश्रेयसकरौ, तथापि तयोस्तु निःश्रेयसहेत्वोः कर्मसंन्यासात् केवलात् कर्मयोगो विशिष्यते इति कर्मयोगं स्तौति ॥ ௨ ॥

कस्मात् इति ? आह—

௩. ज्ञेयः स नित्यसंन्यासी यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात् प्रमुच्यते ॥

ज्ञेयः ज्ञातव्यः सः कर्मयोगी नित्यसंन्यासी इति यो न द्वेष्टि किञ्चित् न काङ्क्षति दुःखसुखे तत्साधने च । एवंविधो यः

அநுஷ்டிப்பதனால் நான் நன்மையைப் பெறலாமென்று நீங்கள் நினைக்கின்றீர்களோ, அந்த எதாவதொன்றையே (அதாவது) உங்களுடைய கருத்தை (இன்னதுதான் என்று) தீர்ந்த முடிவாக எனக்குச் சொல்லவேண்டும்; (அவை இரண்டையும்) ஒரே புருஷன் ஒரேகாலத்து அநுஷ்டிக்கக் கூடாமையினா லென்க. (க)

துறவைக்காட்டிலும் கர்மயோகமே அஜ்ஞானிக்கு ஏற்றது.

(அஜ்ஞானிக்கு எது தகுந்ததென்பதை) நிச்சயித்தற்பொருட்டுத் தமது கருத்தைக் கூறுகின்ற ஸ்ரீபகவான் அருளிச்செய்யலானார்:

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்:

உ. **துறவும் கர்மயோகமுமாகிய இரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவை. ஆனால் அவற்றுள் கர்மயோகமானது கர்மஸந்யாஸத்தினும் மேலாகின்றது.**

கர்மங்களைத் துறந்திடுதலும் அவற்றை அநுஷ்டித்தலுமாகிய இரண்டுமே, ஞானமுண்டாதற்குக் காரணமாதலால், முக்தியைத் தருகின்றன. இரண்டும் முக்தியைத் தருபவை என்றாலும், முக்திக்குக் காரணமான அவற்றுள்ளும் கர்மயோகமானது வெறுங்கர்மஸந்யாஸத்தினும் மேலாகின்றது எனக் கர்மயோகத்தைப் புகழ்கின்றார். (வெறும் கர்மஸந்யாஸம் - ஞானமில்லாத கர்மஸந்யாஸம்.) (உ)

(கர்மயோகம் உறுதியான நன்மையைச் செய்வதானது) எதனால் என்பது?— கூறுகிறார்:

ங. **எவன் பகைப்பதில்லையோ, விரும்புவதில்லையோ, அவனை என்றும் ஸந்யாஸியாக அறியவேண்டும்; ஏனெனில், உயர்தோள! த்வந்தங்களைக் கடந்தவன் (கர்மமாகிய) கட்டினின்றும் எளிதே விடுபடுகிறான்.**

எவன் எதனையும் பகைப்பதில்லையோ, (அதாவது,) துன்பத்தையும், அதனைக் கொடுக்கும் பொருள்களையும் பகைப்பதில்லையோ, (அவ்வாறே) இன்பத்தையும்,

𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌃 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌸𑍁𑌖𑌂 𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍 𑌅𑌨𑌾𑌯𑌾𑌸𑍇𑌨 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌯𑍋𑌃 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌯𑍋𑌃 𑌫𑌲𑍇𑌽𑌪𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃, 𑌨 𑌤𑍁 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌕𑌰𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇, 𑌇𑌦𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௪. 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍌 𑌪𑍃𑌥𑌗𑍍𑌬𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌕𑌮𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌉𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌫𑌲𑌮𑍍 ॥

𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍌 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌭𑌿𑌨𑍍𑌨𑌫𑌲𑍌 𑌬𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 । 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌃 𑌏𑌕𑌂 𑌫𑌲𑌮𑍍 𑌅𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 । 𑌕𑌥𑌮𑍍? 𑌏𑌕𑌮𑌪𑌿 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌫𑌲𑌮𑍍 । 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌂 𑌫𑌲𑌮𑍍; 𑌅𑌤𑌃 𑌨 𑌫𑌲𑍇 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿 ॥

அதனைக் கொடுக்கும் பொருள்களையும் விரும்புவதில்லையோ, அந்தக் கர்மயோகியானவன் எப்பொழுதும் ஸந்யாஸி என்று அறிந்துகொள்க. கர்மத்திலிருப்பவனாயினும், எவன் இப்படிப்பட்டவனாக இருக்கின்றானோ அவன் எப்பொழுதும் துறவி என்று உணர்க என்பது பொருள். ஏனெனில், உயர்தோளா ! (விருப்பு வெறுப்பு முதலிய) த்வந்தங்களற்றவன் (கர்மமாகிய) கட்டினின்றும் ஆயாஸமில்லாது எளிதே விடுபடுகிறான். (௩)

கர்மஸந்யாஸமும், கர்மயோகமும் ஒரேபயனைத் தருகின்றன.

வெவ்வேறு புருஷர்களால் அநுஷ்டிக்கத்தக்கவையாய்(ஒன்றற்கொன்று)மாறுபட்ட கர்மஸந்யாஸமும் கர்மயோகமுமாகிய இரண்டும் (தம்தம்) பயனிலும் மாறுபடுதல் ஏற்குமேயன்றி, இரண்டும் உறுதியான நன்மையைச் செய்பவைதான் என்பது இல்லை என்னும் (ஆக்ஷேபம்) வர, அப்பொழுது இதனைக் கூறுவோம் :

௪. சிறுவர்கள் ஸாங்க்யத்தையும் யோகத்தையும் வேறாகக் கூறுகிறார்கள் ; ஞானிகள் (அவ்வாறு கூறுவது) இல்லை. ஒன்றையாவது நன்றாக மேற்கொண்டவன் இரண்டினுடைய பயனைப் பெறுகிறான். (ஸாங்க்யம் - கர்மஸந்யாஸம். யோகம் - கர்மயோகம்.)

சிறுவர்கள்[நூற்பொருளை ஆராயாதவர்கள்] ஸாங்க்யமும் யோகமும் (ஒன்றற்கொன்று) மாறுபட்ட வெவ்வேறான பயன்களையுடையவை யெனக் கூறுகிறார்கள்; பண்டிதர்கள் (அங்ஙனம் கூறுவது) இல்லை. விவேகிகளான ஞானிகளோ, மாறுபாடில்லாத ஒரே பயனைக் கொள்கிறார்கள்.—எப்படி ?—ஸாங்க்யயோகங்களில் ஒன்றையாவது நன்கு மேற்கொண்டவன், அதாவது செவ்வையாக அநுஷ்டித்தவன் இரண்டினுடைய பயனை அடைகிறான். முக்தியாகிய அதேபயனன்றோ இரண்டற்கும் உள்ளது. ஆதலால், பயனில் வேறுபாடு இல்லை என்க.

ननु सन्न्यासकर्मयोगशब्देन प्रस्तुत्य सांख्ययोगयोः फलैक्यं कथमिह अप्रस्तुतं ब्रवीति? न अत्र दोषः—यद्यपि अर्जुनेन सन्न्यासं कर्मयोगं च केवलमभिप्रेत्य प्रश्नः कृतः, भगवांस्तु तदवान्तरभेदेनैव साभिप्रायं च विशेषं संयोज्य शब्दान्तरवाच्यतया प्रतिवचनम् उवाच 'सांख्ययोगौ' इति। तौ च सन्न्यासकर्मयोगौ ज्ञानतदुपायसम्बन्धिकाकारसंयुक्तौ सांख्ययोगशब्दवाच्यौ इति भगवतो मतम्। अतः न अप्रस्तुतप्रक्रिया इति ॥ ४ ॥

एकस्यापि सम्यगनुष्ठानात् कथम् उभयोः फलं विन्दते इति? उच्यते—

५. यत्सांख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं सांख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥

यत् सांख्यैः ज्ञाननिष्ठैः सन्न्यासिभिः प्राप्यते स्थानं मोक्षाख्यं तत् योगैरपि ज्ञानप्राप्त्युपायकेन कर्मणा सहै-

---

(ஆக்ஷேபம்):—அப்படியானால், (பகவான்) ஸந்யாஸம் கர்மயோகம் என்னும் சொற்களால் பிரகிருதத்தைப் பேசிப், பின்பு, ஸாங்க்யத்திற்கும் யோகத்திற்கும் பயன் ஒன்று என இங்குப் பிரகிருதமல்லாததை எப்படிக் கூறுகிறார் என்பது ?

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று. அர்ஜுனன் வெறுங்கர்மஸந்யாஸத்தையும் வெறுங்கர்மயோகத்தையும் (மனத்திற்)கொண்டு கேள்வி கேட்டான் என்றாலும், (அவையிரண்டும்) ஸாங்க்யம் யோகம் என்னும் வேறுசொற்களால் கூறத்தக்கனவாதலால் பகவான் அவற்றை விடாமலே, தாம் கருதியுள்ள விசேஷத்தையும் சேர்த்து மறுமொழியைத் தந்தருளினார். ஞானம் அதன்ஸாதநமான ஸமபுத்தி முதலானவற்றோடு கூடிய அந்தக் கர்மஸந்யாஸமும் அந்தக்கர்மயோகமுந்தான் ஸாங்க்யம் யோகம் என்னும் சொற்களால் கூறற்குஉரியன என்பது பகவான் கருத்து. ஆகவே, (ஸாங்க்யத்திற்கும் யோகத்திற்கும் பயன் ஒன்று என்பது) பிரகிருதமல்லாதவிஷயமன்றென்க. [ஒருவிசேஷமாயினும் உடன்சேரப்பெறாத வெறுங்கர்மஸந்யாஸத்தையும் வெறுங்கர்மயோகத்தையும்பற்றி அர்ஜுனன் பகவானைக்கேட்க, அவர் அதற்கு மறுமொழிகூறும் வாக்கியத்திலே "ஞானமாகியவிசேஷத்தோடுகூடிய கர்மஸந்யாஸமும், ஸமத்துவபுத்தியாகிய விசேஷத்தோடு (உ-சஅ)கூடிய கர்மயோகமுந்தான் சிறந்தவை" என்னும் தமது கருத்தை அவனுக்குத் தெரிவித்தற்பொருட்டு "ஸாங்க்யம்" "யோகம்" என்னும்சொற்களை வழங்கலாயினர் என ஆராய்ந்துணர்க.] (ச)

(ஒருவன்) ஒன்றைமாத்திரம் நேராகஅநுஷ்டித்தலால் இரண்டனுடைய பயனையும் பெறுகிறான் என்பது எப்படி ?—கூறுவோம் :

ரு. ஸாங்க்யர்களால் எந்த நிலையானது அடையப்படுகின்றதோ, அது யோகிகளாலும் அடையப்படுகின்றது. எவன் ஸாங்க்யத்தையும் யோகத்தையும் ஒன்றாகக் காண்கிறானோ, அவன் (நேராகக்) காண்கிறான்.

ஞானத்திலே நிலைத்துநிற்கும் ஸந்யாஸிகளாலே, எந்த நிலையானது அடையப்படுகின்றதோ, அது யோகிகளாலும் (அடையப்படுகின்றது). எவர்கள் ஞானமடைதற்கு ஸாதநமாகக் கர்மங்களை ஈச்வரனிடத்து அர்ப்பித்து, தமக்குப் பயனை எதிர்

कर्माणि आत्मनः फलम् अनभिसन्धाय अनुतिष्ठन्ति ये ते योगाः योगिनः तेषामपि परमार्थज्ञानसंन्यासप्राप्तिद्वारेण गम्यते इत्यभिप्रायः । अतः एकं साङ्ख्यं च योगं च यः पश्यति फलैकत्वात् स पश्यति सम्यक् पश्यतीत्यर्थः ॥ ५ ॥

एवं तर्हि योगात् संन्यास एव विशिष्यते ; कथं तर्हि इदम् उक्तं 'तयोस्तु कर्मसंन्यासात् कर्मयोगो विशिष्यते' इति ? शृणु तत्र कारणम्—त्वया पृष्टं केवलं कर्मसंन्यासं कर्मयोगं च अभिप्रेत्य तयोः अन्यतरः कः श्रेयान् (इति) । तदनुरूपं प्रतिवचनं मया उक्तं कर्मसंन्यासात् कर्मयोगः विशिष्यते इति ज्ञानम् अनपेक्ष्य । ज्ञानापेक्षस्तु संन्यासः साङ्ख्यमिति मया अभिप्रेतः । परमार्थयोगश्च स एव । यस्तु कर्मयोगः वैदिकः स च तादर्थ्यात् योगः संन्यास इति च उपचर्यते ॥

कथं तादर्थ्यमिति ? उच्यते—

सू. संन्यासस्तु महाबाहो दुःखमाप्तुमयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म न चिरेणाधिगच्छति ॥

நோக்காது அநுஷ்டிக்கிறார்களோ, அவர்கள் யோகிகள். அந்த யோகிகளும் உண்மையான ஞானத்தையும், உண்மையான ஸந்யாஸத்தையும் பெற்று அவ்வழியாக (அதே நிலையைப்) பெறுகிறார்கள் என்பது கருத்து. ஆதலால், பயன் ஒன்றாயிருத்தலின் எவன் ஸாங்க்யத்தையும் யோகத்தையும் ஒன்றாகப் பார்க்கிறானோ, அவன் பார்க்கிறான், நேராகப் பார்க்கிறான் [சரியாக அறிகிறான் என்பது பொருள்.] (ரு)

(வி):—அப்பொழுது இவ்வாறாக, ஸந்யாஸந்தான் யோகத்தைக்காட்டிலும் மேலாகின்றது. 'அவ்விரண்டனுள், கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலாகின்றது' (ரு - உ) என்று கூறியுள்ள இது, அங்ஙனம் எவ்வாறு (பொருந்தும்)?

(விடை) .—அதிலே காரணத்தைக் கேள் : நீ வெறுங்கர்மஸந்யாஸத்தையும் வெறுங்கர்மயோகத்தையும் கருத்திற்கொண்டு, 'அவ்விரண்டனுள் எந்த எதாவதொன்று மேலானது?' (எனக்) கேட்டாய். நான் அதற்கேற்ற மறுமொழியை, ஞானத்தைக் குறியாது(அஃதில்லாத வெறுங்)கர்மஸந்யாஸத்தினும் கர்மயோகம் மேலாகின்றது எனக் கூறினேன். ஞானத்தைச் சார்ந்துநிற்கும் ஸந்யாஸமே ஸாங்க்யமென்பது என் கருத்து. உண்மையான யோகமும் அதுதான். ஆனால், (யோகமென்னும்சொல்லும், ஸந்யாஸமென்னும் சொல்லும் கர்மயோகமென்னும் பொருளில் வழங்கி வருகின்றனவே எனில்,—)வேதத்திற்கூறிய கர்மயோகம் எதுவோ, அது அதன்பொருட்டாதலால் [உண்மையான ஸந்யாஸத்திற்குப் பயன்படுதலால்] யோகமெனவும், ஸந்யாஸமெனவும் உபசாரவழக்கினால் கூறப்படுகின்றது.

உண்மையான ஸந்யாஸத்திற்குக் கர்மயோகம் வழி.

அதன்பொருட்டாதலென்பது எப்படி?—கூறுவோம் :

சூ. உயர்தோள! மற்று, ஸந்யாஸத்தை யோகத்தாலல்லாமல் (வேறுவகையால்)பெறுவது அரிது. (கர்ம)யோகத்தைக்கூடி(பகவானை இடைவிடாது) நினைக்கும் தன்மையன் தாமதமின்றி ப்ரஹ்மத்தை அடைகிறான்.

ஸம்ந்யாஸஸ்து பாரமார்திகோ ஹே மஹாபாஹோ து:கமாப்தும் ப்ராப்தும் அயோகத: யோகேந விநா । யோகயுக்தோ வைதிகேந கர்மயோகேந ஈஶ்வரஸமர்பிதரூபேண பலநிரபேக்ஷேண யுக்த:, முநி: மநநாத் முநி: ஈஶ்வரஸ்வரூபஸ்ய மநநாந்முநி:, ப்ரஹ்ம—பரமாத்மஜ்ஞாநநிஷ்டாலக்ஷணத்வாத் ப்ரக்ருத: ஸம்ந்யாஸ: ப்ரஹ்ம உச்யதே, 'ந்யாஸ இதி ப்ரஹ்மா ப்ரஹ்மா ஹி பர:' இதி ஶ்ருதே:— ப்ரஹ்ம பரமார்தஸம்ந்யாஸம் பரமார்தஜ்ஞாநநிஷ்டாலக்ஷணம் ந சிரேண க்ஷிப்ரமேவ அதிகச்சதி ப்ராப்நோதி । அத: மயா உக்தம் 'கர்மயோகோ விஶிஷ்யதே' இதி ॥ சு ॥

யதா புந: அயம் ஸம்யக்தர்ஶநப்ராப்த்யுபாயத்வேந—

எ. யோகயுக்தோ விஶுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய: ।
ஸர்வபூதாத்மபூதாத்மா குர்வந்நபி ந லிப்யதே ॥

யோகேந யுக்த: யோகயுக்த:, விஶுத்தாத்மா விஶுத்தஸத்த்வ:, விஜிதாத்மா விஜிததேஹ:, ஜிதேந்த்ரியஶ்ச, ஸர்வபூதாத்மபூதாத்மா ஸர்வேஷாம் ப்ரஹ்மாதீநாம் ஸ்தம்பபர்யந்தாநாம் பூதாநாம் ஆத்மபூத: ஆத்மா ப்ரத்யக்சேதநோ யஸ்ய ஸ: ஸர்வபூதாத்மபூதாத்மா ஸம்யக்தர்ஶீத்யர்த:, ஸ தத்ரைவம் வர்தமாநோ லோகஸம்க்ரஹாய கர்ம குர்வந்நபி ந லிப்யதே ந கர்மபிர் பத்யதே இத்யர்த: ॥ எ ॥

உயர்தோளா ! உண்மையான ஸந்யாஸத்தையோ கர்மயோகத்தினலல்லாமல் (வேறொன்றினால்) அடையமுடியாது. ஈச்வரனிடத்து அர்ப்பிக்கப்படுவதும், பயனை எதிர்நோக்காததும், வேதத்திற்கூறியதுமான கர்மயோகத்தைக் கூடி, ஈச்வரனுடைய வடிவத்தை இடைவிடாது நினைந்துகொண்டிருப்பவன் பரமார்த்தஞானநிஷ்டையென்னும் உண்மையான ஸந்யாஸத்தைச் சீக்கிரமாகவே அடைகிறான். ஆதலால் யான் கூறினேன் கர்மயோகம் மேலாகின்றதென்று.

பிரகிருதத்திற் கூறிய ஸந்யாஸமானது பரம்பொருளுடைய ஞானமாயிருத்தலால் 'ப்ரஹ்மம்' எனப்படுகின்றது ; "ந்யாஸமென்பது ப்ரஹ்மா, ப்ரஹ்மாவே மேலானவன்" (தை - ச - எஅ) என்னும் சுருதியினுலெண்க. (சு)

ஞானியின் தொழில் அவனைச் சார்வதில்லை.

ஆனால், எப்பொழுது இவன் மெய்யுணர்வைப் பெறுதற்கு ஸாதநமாக
எ. (கர்ம)யோகத்தைக் கூடி, மனந்தெளிந்து, தேகத்தையும் இந்திரியங்களை
யும் வென்று,(தனது)ஆத்மாவை ஸகலபூதங்களுடைய ஆத்மாவாகக்கொண்டு(உள்ள
தை உள்ளபடி உணர்கின்றானோ, அப்பொழுது அவன் ஒன்றைச்)செய்பவனாயினும்,
பற்றப்படுகிறானில்லை.

(தனது)ஆத்மாவை ஸகலபூதங்களுடைய ஆத்மாவாகக் கொண்டவன் - (தன்னுடைய) உள்ளேயுள்ளே ஆத்மாவை, ஸகலபூதங்களுடைய ஆத்மாவாயிருக்கப் பெற்றவன் : உள்ளதை உள்ளபடி காண்பவன் என்பது (தேர்ந்த)பொருள். அவன் அதிலே[உள்ளதை உள்ளபடி காண்பதிலே]யே இருப்பவனாய், உலகத்தை நல்வழிப்படுத்தும்பொருட்டுக் கர்மத்தைச் செய்பவனாயினும், கர்மங்களால் பற்றப்படுகிறானில்லை : கட்டப்படுகிறானில்லை என்பது பொருள். (எ)

ந ச அஸௌ பரமார்தத: கரோதி, அத:—

௮. நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மந்யேத தத்த்வவித் ।

நைவ கிஞ்சித் கரோமீதி யுக்த: ஸமாஹித: ஸந் மந்யேத சிந்தயேத், தத்த்வவித் தத்த்வஸ்ய யாதாத்ம்யம் தத்த்வம் வேத்தீதி தத்த்வவித் பரமார்ததர்ஶீத்யர்த: ॥

கதா கதம் வா தத்த்வம் அவதாரயந் மந்யேத இதி? உச்யதே—

௮. பஶ்யந் ஶ்ருண்வந் ஸ்ப்ருஶந் ஜிக்ரந் அஶ்நந் கச்சந் ஸ்வபந் ஶ்வஸந் ॥
௯. ப்ரலபந் விஸ்ருஜந் க்ருஹ்ணந் உந்மிஷந் நிமிஷந்நபி ।
இந்த்ரியாணீந்த்ரியார்தேஷு வர்தந்த இதி தாரயந் ॥

மந்யேத இதி பூர்வேண ஸம்பந்த: । தஸ்ய ஏவம் தத்த்வவித: ஸர்வகார்யகரணசேஷ்டாஸு கர்மஸு அகர்மைவ பஶ்யத: ஸம்யக்தர்ஶிந: ஸர்வகர்மஸந்ந்யாஸே ஏவ அதிகார:, கர்மண: அபாவதர்ஶநாத் । ந ஹி ம்ருகத்ருஷ்ணிகாயாம் உதகபாநாய ப்ரவ்ருத்த: உதகாபாவஜ்ஞாநே அபி தத்ரைவ பாநப்ரயோஜநாய ப்ரவர்ததே ॥ ௮, ௯ ॥

ஞானியின் செய்கைகள் உண்மை யல்ல.

இவன் உண்மையாகவே செய்வதில்லை யாதலால்,

௮. ஒருநிலைப்பட்டு உண்மையுணர்ந்தவன் 'நான் ஒன்றுஞ் செய்வதே இல்லை' எனக்கொள்ளவேண்டும்.

உண்மையுணர்ந்தவன் 'நான் ஒன்றுஞ் செய்வதே இல்லை' என ஒருநிலைப் பட்ட மனத்தினனாய்க் கொள்ளவேண்டும். உண்மையுணர்ந்தவன் - ஆத்மாவினுடைய உள்ளபடியான தன்மையை அறிந்தவன் : பரம்பொருளைக் காண்பவன் என்று பொருள். (௮)

(அவன்)உண்மையை நன்றாகத் தெளிந்தவனாய், எப்பொழுது எவ்வாறு (அப் படிக்)கொள்ளவேண்டும் என்பது ?—கூறுவோம் :

௮, ௯. (அவன்) பார்ப்பவனாயினும், கேட்பவனாயினும், தொடுபவனாயினும், முகர்பவனாயினும், உண்பவனாயினும், நடப்பவனாயினும், உறங்குபவனாயினும், மூச்சு விடுபவனாயினும், பேசுபவனாயினும், (மலஜலங்களை) விடுபவனாயினும், எடுப்பவனாயினும், கண்களை விழிப்பவனாயினும், மூடுபவனாயினும், 'இந்திரியங்கள் இந்திரியவிஷயங்களுள் திரிகின்றன' எனத் தெளிந்து(நான் ஒன்றுஞ் செய்வதே இல்லை எனக் கொள்ளவேண்டும்.)

கொள்ளவேண்டும் என முந்தின (வாக்கியத்)தோடு கூட்டுக. இவ்வாறாக உண்மையுணர்ந்து தேகேந்திரியங்களுடைய ஸகலச்செய்கைகளிலும் (அதாவது, ஸகல)கர்மங்களிலும் அகர்மத்தையே காண்பவனாய் உள்ளதை உள்ளபடி பார்க்கின்ற அவனுக்கு ஸகலகர்மங்களையும் துறத்தலிலேதான் அதிகாரம் ; (அவன்) கர்மமில்லாமையைக் காண்கிறபடியா லென்க. கானலிலே ஜலம் (உள்ளதெனக்)கொண்டு நீர்குடித்தற்காகச் சென்றவன் (அங்கு) நீர் இல்லை யென்றறிந்தபின்பும் நீர்குடித்த லென்னும் பயனுக்காக (மீண்டும்) அங்கேயே செல்லமாட்டானன்றே. (௮, ௯)

यस्तु पुनः अतत्त्ववित् प्रवृत्तश्च कर्मयोगे —

१०. ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा ॥

ब्रह्मणि ईश्वरे आधाय निक्षिप्य "तदर्थं कर्म करोमि" इति भृत्य इव स्वाम्यर्थं सर्वाणि कर्माणि मोक्षेऽपि फले सङ्गं त्यक्त्वा करोति यः, लिप्यते न स पापेन न संबध्यते पद्मपत्रमिव अम्भसा उदकेन । केवलं सत्त्वशुद्धिमात्रमेव फलं तस्य कर्मणः स्यात् ॥ १० ॥

यस्मात् —

११. कायेन मनसा बुद्ध्या केवलैरिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये ॥

कायेन देहेन मनसा बुद्ध्या च केवलैः ममत्ववर्जितैः "ईश्वरायैव कर्म करोमि, न मम फलाय" इति ममत्वबुद्धिशून्यैः इन्द्रियैरपि — केवलशब्दः कायादिभिरपि प्रत्येकं संबध्यते सर्वव्यापारेषु ममतावर्जनाय — योगिनः कर्मिणः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वा फलविषयम् आत्मशुद्धये सत्त्वशुद्धये इत्यर्थः । तस्मात् तत्रैव तव अधिकारः इति कुरु कर्मैव ॥ ११ ॥

கர்மயோகியானவன் அவனுடைய கர்மங்களின் பயன்களால் பற்றப்படுவதில்லை.

ஆனால், எவன் உண்மையை அறியாதவனோ; அன்றியும், கர்மயோகத்தை மேற்கொண்டவனோ;

௧௦. எவன் ப்ரஹ்மத்தினிடத்துக் கர்மங்களை வைத்து, பற்றை விட்டுச் செய்கிறானோ; அவன் நீரினால் தாமரையிலைபோல பாவத்தால் ஒட்டப்படுவதில்லை.

வேலைக்காரன் யஜமானனுக்காக(ச் செய்வது)போல, "நான் அவனுக்காக [ஈச்வரனுக்காக]க் கர்மத்தைச் செய்கிறேன்" என்று ஸகலகர்மங்களையும் ஈச்வரனிடத்து வைத்து, முக்தியாகிய பயனிலும் பற்றைவிட்டு எவன் செய்கிறானோ, அவனிடத்தில் தாமரையிலையிலே ஜலம்போல, பாவம் ஒட்டுவதில்லை. கேவலம் மனம் பரிசுத்தப்படுதல்மாத்திரமே அவனுடைய கர்மத்திற்கு பயனாகும். (௧௦)

ஏனெனில்,

௧௧. (கர்ம)யோகிகள் பற்றைவிட்டு, சித்த சுத்திக்காக, சரீரத்தாலும் மனத்தாலும் புத்தியினாலும் வெறும் இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிறார்கள்.

வெறும் - எனதென்பது இல்லாத, "ஈச்வரனுக்காகவே செய்கிறேன், என்னுடைய பயனுக்காக அன்று" என எனதென்னும் எண்ணமில்லாத. ஒவ்வொரு செய்கையிலும் எனதென்பது இல்லாதிருத்தற்பொருட்டு, வெறும் என்னும் சொல்லை சரீரம் முதலியவற்றோடும் தனித்தனி கூட்டுக. கர்மயோகிகள் பயனைப்பற்றிய பற்றை விட்டு, சித்தசுத்திக்காக, (வெறும்)தேகத்தாலும் (வெறும்)மனத்தாலும் (வெறும்)புத்தியினாலும் வெறும் இந்திரியங்களாலும் கர்மத்தைச் செய்கிறார்கள். ஆதலால், அதிலேயே உனக்கு அதிகாரமாதலின் நீ கர்மத்தையே செய்யக்கடவாய்.

യസ്മാച്ച —

௧௨. യുക്തഃ കർമഫലം ത്യക്ത്വാ ശാന്തിമാപ്നോതി നൈഷ്ഠികീം ।
അയുക്തഃ കാമകാരേണ ഫലേ സക്തോ നിബധ്യതേ ॥

യുക്തഃ "ഈശ്വരായ കർമാണി കരോമി, ന മമ ഫലായ" ഇത്യേവം സമാഹിതഃ സന് കർമഫലം ത്യക്ത്വാ പരിത്യജ്യ ശാന്തിം മോക്ഷാഖ്യാമാപ്നോതി നൈഷ്ഠികീം നിഷ്ഠായാം ഭവാം സത്ത്വശുദ്ധിജ്ഞാനപ്രാപ്തിസർവകർമസംന്യാസജ്ഞാനനിഷ്ഠാക്രമേണേതി വാക്യശേഷഃ । യസ്തു പുനഃ അയുക്തഃ അസമാഹിതഃ കാമകാരേണ കരണം കാരഃ, കാമസ്യ കാരഃ കാമകാരഃ, തേന കാമകാരേണ കാമപ്രേരിതതയേത്യർഥഃ, "മമ ഫലായ ഇദം കരോമി കർമ" ഇത്യേവം ഫലേ സക്തഃ നിബധ്യതേ । അതഃ ത്വം യുക്തോ ഭവ ഇത്യർഥഃ ॥ ௧௨ ॥

യസ്തു പരമാർഥദർശീ സഃ—

௧௩. സർവകർമാണി മനസാ സംന്യസ്യാസ്തേ സുഖം വശീ ।
നവദ്വാരേ പുരേ ദേഹീ നൈവ കുർവന്ന കാരയൻ ॥

സർവാണി കർമാണി സർവകർമാണി സംന്യസ്യ പരിത്യജ്യ നിത്യം നൈമിത്തികം കാമ്യം പ്രതിഷിദ്ധം ച താനി സർവാണി കർമാണി മനസാ വിവേക-

---

மற்றும், ஏனெனில்,

௧௨. *(கர்மயோகத்தைக்)கூடியவன் கர்மத்தின் பயனைவிட்டு, நிஷ்டையினாலாகும் ஒழிவைப் பெறுகிறான். (கர்மயோகத்தைக்) கூடாது, காமத்தின் செய்கையினால் பயனிலே பற்றுவைத்தவன் கட்டப்படுகிறான்.*

"ஈச்வரனுக்காகக் கர்மங்களைச் செய்கிறேன், என்னுடைய பயனுக்காக அன்று" என இவ்வாறாக ஒரு நிலைப்பட்ட மனத்தினனாய், கர்மத்தின் பயனை விட்டு(க் கர்மத்தைச் செய்பவன், முதலில் மனம் பரிசுத்தமாதல், பின்பு ஞானமடைதல், பின்பு ஸகலகர்மங்களையும் துறந்திடுதல், பின்பு ஞானத்திலே நிலைத்து நிற்றல் என்னும் படிப்படியான முறையினால்) நிஷ்டையினாலாகும் மோக்ஷமென்னும் ஒழிவைப் பெறுகிறான். 'மனம் பரிசுத்தமாதல், ஞானமடைதல், ஸகலகர்மங்களையும் துறந்திடுதல், ஞானத்திலே நிலைத்துநிற்றல் என்னும்முறையினால்' என்பது வாக்கியத்திலே தொக்கிநிற்கின்றது. ஆனால், ஒருநிலையில்லா மனத்தினனாய், காமத்தின் செய்கையினாலே, அதாவது காமத்தால் தூண்டப்பட்டு "எனது பயனுக்காக இத்தொழிலைச் செய்கிறேன்" என இவ்வாறு பயனிலே பற்றுவைத்தவன் கட்டுண்டுகிடக்கிறான். ஆதலால், நீ (கர்மயோகத்தைக்)கூடினவனாய் இரு என்பது பொருள். (௧௨)

ஜீவன்முக்தன் உடம்பொடுநின்று பரம்பொருளைக்கண்டு வாழும் பேராநந்த வாழ்வு.

ஆனால், பரம்பொருளைக் காண்பவன் எவனோ, அவன் (எப்படி இருக்கின்றான் எனில்)—

௧௩. *தன்னடக்கங்கொண்டு உடம்பொடுநிற்பவன் ஸகலகர்மங்களையும் மனத்தால் துறந்து, (ஒன்றுஞ்)செய்யவேசெய்யாதவனாய், செய்விக்காதவனாய் ஒன்பதுவாசலுள்ள பட்டணத்திலே ஸுகமாகத் தங்கியிருக்கின்றான்.*

(பரம்பொருளைக் கண்டவன்)நித்யம், நைமித்திகம், காம்யம், பிரதிஷித்தம் என்னும் ஸகலகர்மங்களையும் விவேகஅறிவால் துறந்து, அதாவது கர்மம்முதலானவற்றிலே அகர்மத்தைக் கண்டு (கர்மங்களை)முற்றும் விட்டு ஸுகமாகத் தங்கியிருக்

புத்த்யா, கர்மாதாவகர்மஸந்தர்ஶநேந ஸந்த்யஜ்யேத்யர்த:, ஆஸ்தே திஷ்டதி ஸுகம்। த்யக்தவாங்மந:காயசேஷ்ட: நிராயாஸ: ப்ரஸந்நசித்த: ஆத்மந: அந்யத்ர நிவ்ருத்தஸர்வபாஹ்யப்ரயோஜந: இதி 'ஸுகம் ஆஸ்தே' இத்யுச்யதே। வஶீ ஜிதேந்த்ரிய இத்யர்த:। க்வ கதம் ஆஸ்தே இதி? ஆஹ நவத்வாரே புரே। ஸப்த ஶீர்ஷண்யாநி ஆத்மந உபலப்தித்வாராணி, அர்வாக் ச த்வே மூத்ரபுரீஷவிஸர்கார்தே, தை: த்வாரை: நவத்வாரம் புரம் உச்யதே ஶரீரம், புரமிவ புரம், ஆத்மைகஸ்வாமிகம், தததர்தப்ரயோஜநைஶ்ச இந்த்ரியமநோபுத்திவிஷயை: அநேகபலவிஜ்ஞாநஸ்ய உத்பாதகை: பௌரைரிவ அதிஷ்டிதம்। தஸ்மிந் நவத்வாரே புரே தேஹே தேஹீ ஸர்வம் கர்ம ஸந்ந்யஸ்ய ஆஸ்தே॥

கிம் விஶேஷணேந? ஸர்வோ ஹி தேஹீ ஸந்ந்யாஸீ அஸந்ந்யாஸீ வா தேஹே ஏவ ஆஸ்தே; தத்ர அநர்தகம் விஶேஷணம்। உச்யதே—யஸ்து அஜ்ஞ: தேஹீ தேஹேந்த்ரியஸங்காதமாத்ராத்மதர்ஶீ ஸ ஸர்வோऽபி "கேஹே பூமௌ ஆஸநே வா ஆஸே" இதி மந்யதே। ந ஹி தேஹமாத்ராத்மதர்ஶிந: கேஹே

கிறான். (நைமித்திகம் - யாதாயினும் ஒர் நிமித்தத்தா லாவது. அது, கிரகணம் முத லானவற்றிலே ஸ்நாநம் செய்தல் முதலானது. பிரதிஷித்தம் - விலக்கப்பட்டது. அவன்) மனமொழிமெய்களின் செய்கைகளை விட்டவன், தொல்லை நீங்கியவன், மனந் தெளிந்தவன், ஆத்மாவைத்தவிர வெளிப்பிரயோஜனங்களெல்லாம் ஒழிந்தவன் என்ப தனால், "ஸுகமாகத் தங்கியிருக்கிறான்" எனக் கூறப்படுகின்றது. தன்னடக்கங் கொண்டு (என்பதற்கு) - இந்திரியங்களை ஜயித்து என்பது பொருள்.—(அவன்) எங்கே எவ்வாறு தங்கியிருக்கிறான் என்பது ? — கூறுகிறார் "ஒன்பதுவாசலுள்ள பட்டணத்தில்" (என்று). ஆத்மா (ஓசைமுதலியவற்றை) உணர்தற்கு வழிகளாய் தலையில் உள்ளவை (கண் 2, செவி 2, மூக்குத்துவாரங்கள் 2, வாய் 1, ஆக) ஏழு; மல ஜலங்களை விடுதற்கான (வழிகள்) கீழே இரண்டு. அந்த வாசல்களால் தேகமானது ஒன்பது வாசலுள்ள பட்டணம் எனப்படுகின்றது. (அது) பட்டணம் போன்று (ள்ளமையால்) பட்டணமாயிருப்பது : ஆத்மாவையே அரசனாகக்கொண்டது : அவன் பொருட்டு (தம் தம் செய்கைகளிற்) செல்லுபவையாய், பலபயன்களை விளைப்பவை யாய், பட்டணத்துக் குடிகள்போன்றுநிற்கும் இந்திரியங்கள் மனம் புத்தி (அவற்றின்) விஷயங்கள் என்றவற்றால் குடியேறப்பெற்றது. ஒன்பதுவாசல்பட்டணமான அந்தத் தேகத்திலே உடம்பொடு நிற்பவன் ஸகல கர்மத்தையும்துறந்து தங்கியிருக்கிறான்.

(ஆக்ஷேபம்) :—("அவன் தேகத்திலே தங்கியிருக்கிறான்" என்னும்) விசே ஷணத்தால் ஆவதென்ன ? ஸந்யாஸியானாலும், ஸந்யாஸியல்லாதவனானாலும், ஒவ் வொரு ஜீவனும் தேகத்திலேதான் தங்கியிருக்கிறான். (ஆகவே,) அங்கு விசேஷணம் பயனில்லாததாம்.

(ஸமாதாநம்) :—கூறுவோம் : தேகம் இந்திரியங்கள் இவற்றின் சேர்க்கை யையே ஆத்மாவாக அறியும் அஜ்ஞானியான ஜீவன் எவனோ, அந்த ஒவ்வொரு வனும் "வீட்டிலோ, தரையிலோ, அல்லது (பலகை முதலான) ஆஸநத்திலோ நான் தங்கியிருக்கிறேன்" எனக் கொள்கிறான். தேகத்தையே ஆத்மாவாகக் காண்பவனு க்கு வீட்டில் (தங்கியிருக்கிறேன் என்னும்எண்ணம் உண்டாவது)போல, தேகத்தில்

𑌏𑌵 𑌦𑍇𑌹𑍇 𑌆𑌸 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌸𑍍𑌤𑍁 “𑌦𑍇𑌹𑍇 𑌆𑌸𑍇” 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑌰𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌚 𑌪𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌗𑍇𑌹𑍇 𑌇𑌵 𑌦𑍇𑌹𑍇 𑌏𑌵 𑌨𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌪𑍁𑌰𑍇 𑌆𑌸𑌨𑌂, 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌫𑌲𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌶𑍇𑌷𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌦𑍇𑌹𑍇 𑌏𑌵 𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌦𑍇𑌹𑍇 𑌏𑌵 𑌆𑌸𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌫𑌲𑌂, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑌵𑌿𑌦𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌭𑍇𑌦𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑌿; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌸𑌮𑌵𑌾𑌯𑌿 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌰𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌆𑌶𑌙𑍍𑌕𑍍𑌯 𑌆𑌹—𑌨𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂, 𑌨 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌕𑌾𑌰𑌯𑌨𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌨𑍍 ॥

தங்கியிருக்கிறேன் என்னும் எண்ணம் உண்டாவதில்லையன்றே. ஆனால்,தேகம்முதலானவற்றின் சேர்க்கைக்கு வேறாக ஆத்மாவை அறிபவனுக்கு " தேகத்திலே தங்கியிருக்கிறேன் " என்னும்எண்ணம் (நிகழக்)கூடுமென்க. ஒன்றனிடத்து (அதாவது) ஆத்மாவினிடத்து அறியாமையினால் ஏற்றப்பட்ட மற்றொன்றனுடைய [மனமொழிமெய்களுடைய] கர்மங்களை ஞானத்தினால், விவேகஅறிவினால்,மனத்தினால் துறந்திடுதல் கூடும்.(ஒருவன் ஆத்மாவைக் கண்டுணரும்)விவேகஅறிவு உண்டாகப்பெற்று,ஸகலகர்மங்களையும் துறந்திருப்பவனாயினும்,வீட்டில்(அவன் இருப்பது)போல, ஒன்பதுவாசல் பட்டணமாகிய தேகத்திலேயே இருத்தலென்பது(ஏற்கும் ; இப்பொழுதுள்ள சரீரத்தைத் தமது)பயனாகத் தந்துநிற்கும் பிராரப்த கர்மங்களுடைய மிச்சத்திலிருந்து (தேகம்முதலானவற்றின்)வாஸனையானது தொடர்ந்துவருதலால், (தேகத்திலேயே (தங்கியிருத்தலென்னும்)சிறப்புணர்ச்சி உண்டாதலின். (இவ்வாறாக,) " தேகத்திலேயே தங்கியிருக்கிறான் " என்னும்விசேஷணத்திற்குப் பயன் இருக்கவேஇருக்கின்றது ; (அவ்விசேஷணம்)ஞானி அஜ்ஞானி இவர்களுடைய எண்ணங்களின்பேதத்தைக் குறித்துநிற்றலால் என்க. [சிறப்புணர்ச்சி - ஒன்றைக் குறித்துநிற்கும் உணர்வு.]

(சங்கை):—"அறியாமையினால் ஆத்மாவினிடத்து ஏற்றப்பட்ட (கர்மங்களை, அதாவது) தேகம் இந்திரியங்கள் என்றவற்றின் தொழில்களை(ஞானி)துறந்திடுகிறான் என்றாலும், (வெண்மை நிறமான தன்மையானது பாலொடு ஒற்றித்திருப்பதுபோல,) ஸந்யாஸத்தைச் செய்துகொண்டவனுக்கு, செய்பவனாயிருக்குந்தன்மையும் செய்விப்பவனாயிருக்குந்தன்மையும் ஆத்மாவொடு ஒற்றித்திருக்கலாம்" எனச் சங்கித்து,

(ஸமாதானம்):—(பகவான்) கூறுகிறார் : "(ஞானி ஒன்றையும்) தான் செய்யவே செய்யாதவனாய், தேகம் இந்திரியங்கள் என்றவற்றைச் செய்விக்காதவனாய் (அதாவது அவற்றைத் தம்தம்)தொழில்களிற் செலலும்படிசெய்யாதவனாய்(த் தங்கியிருக்கிறான்)."

கிம் யத் தத் கர்த்ருத்வம் காரயித்ருத்வம் ச தேஹிந꞉ ஸ்வாத்மஸமவாயி ஸத் ஸம்ந்யாஸாத் ந ஸம்பவதி, யதா கந்துர் கதி꞉? கிம் வா ஸ்வத ஏவ ஆத்மனோ நாஸ்தீதி? அத்ர உச்யதே — நாஸ்தி ஆத்மன꞉ ஸ்வத꞉ கர்த்ருத்வம் காரயித்ருத்வம் வா। உக்தம் ஹி 'அவிகார்யோऽயமுச்யதே' 'ஶரீரஸ்தோऽபி ந கரோதி ந லிப்யதே' இதி। 'த்யாயதீவ லேலாயதீவ' இதி ச ஶ்ருதே꞉ ॥ ௧௩ ॥

கிஞ்ச —

௧௪. ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு꞉ ।
ந கர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே ॥

ந கர்த்ருத்வம் ஸ்வயம் குரு இதி நாபி கர்மாணி ரதகடப்ராஸாதாதீனி ஈப்ஸிததமானி லோகஸ்ய ஸ்ருஜதி உத்பாதயதி ப்ரபு꞉ ஆத்மா । நாபி ரதாதி க்ருதவத꞉ தத்பலேன ஸம்யோகம் கர்மபலஸம்யோகம் உத்பாதயதி ॥

யதி கிஞ்சிதபி ஸ்வயம் ந கரோதி ந காரயதி ச தேஹீ, க꞉ தர்ஹி குர்வன் காரயம்ஶ்ச ப்ரவர்த்ததே இதி? உச்யதே — ஸ்வபாவஸ்து ஸ்வோ பாவ꞉ ஸ்வபாவ꞉

(ஆக்ஷேபம்) :—நடப்பவன் (நின்றுவிடுதலால் தன்னிடத்துள்ள நடத்தலென்னும்தொழிலை விட்டிடுகிறான் ; விட்டிடவே, அப்பொழுது அவனுக்கு) நடத்தல் (உண்டாகாதவாறு) போல, செய்பவனுயிருத்தலும் செய்விப்பவனுயிருத்தலுமாகிய இரண்டும் உடம்பொடுநிற்பவனுக்குத் தன் ஆத்மாவொடு ஒற்றித்திருப்பனவாகி, துறவினால் உண்டாகின்றன இல்லையா? அல்லது, ஆத்மாவுக்குத் தாமாகவே (அவை) இல்லையா? என்பது.

(ஸமாதானம்) :—இதில் கூறுவோம் : செய்பவனுயிருத்தலாவது செய்விப்பவனுயிருத்தலாவது ஆத்மாவுக்குத் தானாக இல்லை. ஏனெனில், "இது விகாரப்படாதது" (உ-உரு), "சரீரத்தில் தங்கியிருந்தாலும் (இது ஒன்றையுஞ்) செய்வதில்லை, (எதனாலும்) பற்றப்படுவதில்லை" (கங-நக) என உரைக்கப்பட்டுள்ளது. "(அது) நினைப்பது போலவும், அசைவது போலவும் உள்ளது" (பி-ச-ந-எ) என்னும் சுருதியினாலும் (இதனை அறிக). (கங)

அதது தொழில்படுதற்கு ஸ்வபாவமென்பது மூலகாரணம்.

மேலும்,

கச. **கர்த்தாவாதலையும் பொருள்களையும் பிரபு உலகத்திற்குப் படைப்பதில்லை; (ஒருவன் தான் செய்யும்) கர்மத்தின் பயனோடு கூடுதலை (யும், உண்டுபண்ணுவது) இல்லை. ஆனால், ஸ்வபாவமென்பது பிரவிருத்திக்கின்றது. [பிரபு - தேகம்முதலியவற்றிற்குப் பிரபுவான ஆத்மா.]**

கர்த்தாவாதலை ஆத்மா உண்டாக்குவதில்லை, (அதாவது, "நீ இதனைச்) செய்" என்று தானாக (ஆத்மா ஒருவனைத் தூண்டுவது) இல்லை. (ஒருவன் தான்) அடையவிரும்பிய வண்டிகள் குடங்கள் மாளிகைகள் முதலியவற்றையும் ஆத்மா உலகத்திற்கு உண்டுபண்ணுவதில்லை. அன்றியும், வண்டிமுதலியவற்றைச் செய்தவன் அத்தொழிலின் பயனோடு கூடுதலையும் (ஆத்மா) உண்டாக்குவதில்லை.

(வினா) :—உடம்பொடுநிற்கும் (ஆத்மாவானது) தானாக ஒன்றையுஞ் செய்வதும் செய்விப்பதும் இல்லையானால், அப்பொழுது எது செய்வதாயும் செய்விப்பதாயும் தலைப்படுகின்றது என்பது?

அவிஜ்ஞாலக்ஷணா ப்ரக்ருதி: மாயா ப்ரவர்ததே "தைவீ ஹி" இத்யாதிநா வக்ஷ்ய-மாணா ॥ ௧௪ ॥

பரமார்த்ததஸ்து—

௧௫. நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு: ।
அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: ॥

ந ஆதத்தே ந க்ருஹ்ணாதி பக்தஸ்யாபி கஸ்யசித் பாபம் । ந சைவ ஆதத்தே ஸுக்ருதம் பக்தை: ப்ரயுக்தம் விபு: ॥

கிமர்த்தம் தர்ஹி பக்தை: பூஜாதிலக்ஷணம் யாகதாநஹோமாதி ச ஸுக்ருதம் ப்ரயுஜ்யதே இதி? ஆஹ—அஜ்ஞாநேந ஆவ்ருதம் ஜ்ஞாநம் விவேகவிஜ்ஞா-நம், தேந முஹ்யந்தி "கரோமி, காரயாமி, போக்ஷ்யே, போஜயாமி" இத்யேவம் மோஹம் கச்சந்தி அவிவேகிந: ஸம்ஸாரிணோ ஜந்தவ: ॥ ௧௫ ॥

௧௬. ஜ்ஞாநேந து தத் அஜ்ஞாநம் யேஷாம் நாசிதமாத்மந: ।
தேஷாமாதித்யவஜ்ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத்பரம் ॥

ஜ்ஞாநேந து யேந அஜ்ஞாநேந ஆவ்ருதா முஹ்யந்தி ஜந்தவ: தத் அஜ்ஞாநம் யேஷாம் ஜந்தூநாம் விவேகஜ்ஞாநேந ஆத்மவிஷயேண நாசிதம் ஆத்ம-

(விடை) :—கூறுவோம் : மற்று, ஸ்வபாவமென்பது, இயற்கையென்பது தன்மையென்பது, அறியாமையென்னும் பிரகிருதியானது, "(மூக்)குணமயமான" (எ - ௧௪)என்பதுமுதலாகக் கூறப்படும் மாயையானது தலைப்படுகின்றது, சேஷ்டிக் கின்றது. (௧௪)

அறிவும், அறியாமையும்.

உண்மையிலோ,

௧௫. எங்கும் நிறைந்த(பகவான்) ஒருவனுடைய தீவினையை வாங்கிக்கொள் வதில்லை ; நல்வினையையும் (வாங்கிக்கொள்வது) இல்லை. அறிவு அறியாமையினால் மூடப்பட்டுள்ளது ; அதனால் பிராணிகள் மயங்குகின்றன.

ஒருவன் பக்தனாயிருந்தாலும், அவனுடைய தீவினையை(யும்)பகவான் வாங்கிக் கொள்வதில்லை ; பக்தர்களால் செய்யப்பட்ட நல்வினையையும் வாங்கிக்கொள்வதில்லை.

(வினா) :—அப்பொழுது பக்தர்களால் பூஜைமுதலாகிய நல்வினைகளும், யாகம் தானம் ஹோமம் முதலான நல்வினைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்பது ?

(விடை) :—(பகவான்)கூறுகிறார் : விவேகஅறிவு அஜ்ஞானத்தால் மூடுண்டு கிடக்கின்றது. ஆகவே, விவேகமில்லாத ஸம்ஸாரிகளான பிராணிகள் "நான் செய்கி றேன், செய்விக்கிறேன், அநுபவிக்கிறேன், அநுபவிக்கும்படிசெய்கிறேன்" என இவ் வாறாக மயக்கமுறுகின்றன. (௧௫)

௧௬. ஆனால், எவர்களுடைய அந்த அஜ்ஞானமானது ஆத்மாவைப்பற்றிய ஞானத்தால் நசிக்கப்பட்டதோ, அவர்களுக்கு ஞானம் சூரியன்போல அப் பரம்பொ ருளை விளங்கும்படி செய்கின்றது.

எந்த அஜ்ஞானத்தால் மூடுண்டு பிராணிகள் மயங்குகின்றனவோ, அந்த அஜ் ஞானமானது எப்பிராணிகட்கு ஆத்மாவைப்பற்றிய விவேகஅறிவினால் நசிக்கப்பட்

नं भवति, तेषाम् अज्ञाननाशितानाम् आदित्यवत् यथा आदित्यः समस्तं रूपजातम्, अवभासयति तद्वत् ज्ञानं ज्ञेयं वस्तु सर्वं प्रकाशयति तत् परं परमार्थतत्त्वम् ॥ ௧௬ ॥

यत् परं परमार्थतत्त्वं ज्ञानप्रकाशितम्—

௧௭. तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः ।
गच्छन्त्यपुनरावृत्तिं ज्ञाननिर्धूतकल्मषाः ॥

तस्मिन् ब्रह्मणि गता बुद्धिः येषां ते तद्बुद्धयः, तदात्मानः तदेव परं ब्रह्म आत्मा येषां ते तदात्मानः, तन्निष्ठाः निष्ठा अभिनिवेशः तात्पर्यं सर्वाणि कर्माणि संन्यस्य तस्मिन् ब्रह्मण्येव अवस्थानं येषां ते तन्निष्ठाः, तत्परायणाश्च तदेव परम् अयनं परा गतिः येषां भवति ते तत्परायणाः केवलात्मरता इत्यर्थः । येषां ज्ञानेन नाशितम् आत्मनः अज्ञानं ते गच्छन्ति ईदृशाः अपुनरावृत्तिम् अपुनर्देहसम्बन्धं ज्ञाननिर्धूतकल्मषाः यथोक्तेन ज्ञानेन निर்धूतः नाशितः कल्मषः पापादिसंसारकारणदोषः येषां ते ज्ञाननिर्धूतकल्मषाः यतयः इत्यर्थः ॥ ௧௭ ॥

டுள்ளதோ, அப்பிராணிகட்கு(அந்த)ஞானமானது,சூரியன்(உலகத்திலுள்ள)பொருள்களின் கூட்டத்தையெல்லாம் விளங்கத் தோற்றுவிக்கின்றதுபோல, அறியவேண்டிய பரமார்த்தஉண்மையாகிய அப்பரம்பொருள்முழுவதையும்விளங்கும்படிசெய்கின்றது.

ஆத்மஞானிக்கு மீண்டும் பிறவி இல்லை.

ஞானத்தால் பிரகாசிக்கப்பட்ட பரம்பொருளாகிய பரமார்த்த உண்மை எதுவோ,

௧௭. அதிலே புத்தியையுடைவராய், அதையே ஆத்மாவாகக் கொண்டவராய், அதிலே நிலைத்து நிற்பவராய், அதையே சிறந்த அடைக்கலமாக அடைந்து, ஞானத்தால் பாவந்தேயப்பெற்றவர்கள் மீண்டும் (ஸம்ஸாரத்தின்கண்)வாராமையை அடைகிறார்கள்.

அதிலே புத்தியையுடையவராய் – ப்ரஹ்மத்தினிடத்து புத்தி சென்றவராய். அதையே – பரப்ரஹ்மத்தையே. நிஷ்டையாவது - உள்ளக்கிளர்ச்சி,ஊக்கம், கருத்துடைமை. அதிலே நிலைத்து நிற்பவராய் - ஸகலகர்மங்களையும் துறந்து ப்ரஹ்மத்தினிடத்தேயே (தமது)இருப்பைக்கொண்டவராய். அதுவே எவர்கட்குச் சிறந்த புகலிடமாக இருக்கின்றதோ,அவர்கள்அதனையே உயர்ந்த அடைக்கலமாகக் கொண்டவர்கள் : ஆத்மாவொன்றிலேயே மகிழ்ந்திருப்பவர்கள் என்பது பொருள். எவர்களுடைய அறியாமையானது ஆத்மாவைப்பற்றிய அறிவினால் நசிக்கப்பட்டதோ, அவர்கள் இத்தகையோராகி மீண்டும் (ஸம்ஸாரத்தின்கண்) வாராமையை = மீண்டும் உடலொடுகூடுதல் இல்லாமையைப் பெறுகிறார்கள். ஸம்ஸாரகாரணமாகிய தீவினைமுதலான தீங்கானது கீழ்க்கூறியஞானத்தால் எவர்கட்கு நசிக்கப்பட்டுள்ளதோ, அவர்கள் ஞானத்தால் பாவந்தேயப்பெற்றவர்கள் : யதிகள் என்பது பொருள். (௧௭)

𑌯𑍇𑌷𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌾𑌶𑌿𑌤𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍇 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌕𑌥𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

கஅ. 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 ।
𑌶𑍁𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌚 𑌵𑌿𑌨𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑍌, 𑌵𑌿𑌨𑌯𑌃 𑌉𑌪𑌶𑌮𑌃 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌨𑍀𑌤𑌶𑍍𑌚 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 𑌶𑍁𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃—𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌮𑍇 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌤𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍇, 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌰𑌾𑌜𑌸𑍍𑌯𑌾𑌂 𑌗𑌵𑌿 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌹𑍀𑌨𑌾𑌯𑌾𑌂, 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌕𑍇𑌵𑌲𑌤𑌾𑌮𑌸𑍇 𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍌 𑌚, 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍈𑌃 𑌤𑌜𑍍𑌜𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌤𑌥𑌾 𑌰𑌾𑌜𑌸𑍈𑌃 𑌤𑌥𑌾 𑌤𑌾𑌮𑌸𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌅𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑌮𑌮𑍇𑌕𑌮𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌂 𑌤𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥ கஅ ॥

𑌨𑌨𑍁 𑌅𑌭𑍋𑌜𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌃 𑌤𑍇 𑌦𑍋𑌷𑌵𑌨𑍍𑌤𑌃, ‘𑌸𑌮𑌾𑌸𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌷𑌮𑌸𑌮𑍇 𑌚 𑌪𑍂𑌜𑌾𑌤𑌃’ 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 ॥ 𑌨 𑌤𑍇 𑌦𑍋𑌷𑌵𑌨𑍍𑌤𑌃 । 𑌕𑌥𑌮𑍍?—

𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌸𑍁𑌰𑌭𑌿𑌃 𑌗𑌂𑌧𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌅𑌹𑌂, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌯𑌿 𑌗𑌂𑌧𑌭𑍂𑌤𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌪𑍍𑌰𑍋𑌤𑌾 । 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌗𑌂𑌧𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤 𑌏𑌵; 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 𑌅𑌬𑌾𑌦𑌿𑌷𑍁 𑌰𑌸𑌾𑌦𑍇𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍍𑌵𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 । 𑌅𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌗𑌂𑌧𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌽𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌭𑍂𑌤𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑍇𑌜𑌃 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌃 𑌚 𑌅𑌸𑍍𑌮𑌿 𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍌 𑌅𑌗𑍍𑌨𑍌 । 𑌤𑌥𑌾 𑌜𑍀𑌵𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁, 𑌯𑍇𑌨 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑌤𑍍 𑌜𑍀𑌵𑌨𑌮𑍍 । 𑌤𑌪𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌷𑍁, 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌤𑌪𑌸𑌿 𑌮𑌯𑌿 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑍋𑌤𑌾𑌃 ॥ ௯ ॥

௧௦. 𑌬𑍀𑌜𑌂 𑌮𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ॥

𑌬𑍀𑌜𑌂 𑌪𑍍𑌰𑌰𑍋𑌹𑌕𑌾𑌰𑌣𑌂 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸𑌨𑌾𑌤𑌨𑌂 𑌚𑌿𑌰𑌨𑍍𑌤𑌨𑌮𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚 — 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌵𑌿𑌵𑍇𑌕𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑌾𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿, 𑌤𑍇𑌜𑌃 𑌪𑍍𑌰𑌾𑌗𑌲𑍍𑌭𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌵𑌤𑌾𑌂 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌮𑌹𑌮𑍍 ॥ ௧௦ ॥

மானிடத்தன்மையாக மனிதர்களுள்(இருக்கின்றேன்) : அந்த (மானிடத்தன்மையின் பொதுமையாகவுள்ள)என்னிடத்து மனிதர்கள் கோக்கப்பட்டிருக்கிறார்கள். (௮)

௯. **நிலத்தினுள் நன்மணமாகவும், தீயினுள் ஒளியாகவும் இருக்கின்றேன் ; எல்லாப் பூதங்களுள் ஜீவநமாகவும், தவமுடையவருள் தவமாகவும் இருக்கின்றேன்.**

நான் நிலத்தினுள் நல்லமணமாக இருக்கின்றேன் : அந்தமணமாகவுள்ள என்னிடத்து நிலமானது கோக்கப்பட்டிருக்கின்றது. இயல்பாகவே நாற்றத்திற்கு நல்ல தன்மைதான். நீர்முதலியவற்றுள் சுவைமுதலானவற்றின் நல்லதன்மையை உணர்த்துதற்காக நிலத்தினுள்(அந்த நல்லதன்மை)எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால், நாற்றம் முதலியவற்றின் தீயதன்மையானது பிராணிகளுடைய அவித்யை பாவம்முதலானவற்றிற்குஏற்ப (அந்தநாற்றம்முதலியன தம்தம் கார்யமான நிலம்முதலியபூதங்களுள்) சிலபல பூதங்களோடு சேர்(ந்துவிகாரப்படு)வதனால் ஆகின்றது. அக்நியுள் ஒளியாகவும் இருக்கின்றேன். அவ்வாறே, எதனால் பிராணிகளெல்லாம் உயிர்வாழ்கின்றனவோ, அந்த (அமிருதமென்னும்) அந்நரஸமாக இருக்கின்றேன். தவமுடையவர்களுள் தவமாகவும் இருக்கின்றேன் : அந்தத் தவமாகவுள்ள என்னிடத்து தவமுடையவர்கள் கோக்கப்பட்டிருக்கிறார்கள்.

௧௦. **பார்த்த ! என்னை ஸகலபூதங்கட்கும் சாச்வதமான வித்தாக அறி. நான் அறிவுள்ளவருள் அறிவாகவும், வீரமுடையவருள் வீரமாகவும் இருக்கிறேன்.**

வித்து என்பது - முளைத்தற்குக் காரணமாயிருப்பது. அறிவு என்பது - அந்தக்கரணத்தின் பகுத்தறியும்சக்தி. அறிவுடையவருள்- பகுத்தறியும் சக்தியுள்ளவருள். வீரம் என்பது - வீரத்தன்மை[பிறரால் தான் வெல்லலாகாது, தான் பிறரை வெல்லுந்திறமை—ஆ.] (௧௦)

௧௧. 𑌬𑌲𑌂 𑌬𑌲𑌵𑌤𑌾𑌂 𑌚𑌾𑌹𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑌾𑌮𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥

𑌬𑌲𑌂 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌮𑍍 𑌓𑌜𑌃 𑌬𑌲𑌵𑌤𑌾𑌮𑌹𑌂, 𑌤𑌚𑍍𑌚 𑌬𑌲𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂, 𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌰𑌾𑌗𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍—𑌕𑌾𑌮𑌃 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 𑌅𑌸𑌨𑍍𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑍇𑌷𑍁 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁, 𑌰𑌾𑌗𑍋 𑌰𑌞𑍍𑌜𑌨𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁— 𑌤𑌾𑌦𑍃𑌶𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌧𑌾𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑌲𑌮𑌹𑌮𑌸𑍍𑌮𑌿; 𑌨 𑌤𑍁 𑌯𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌾𑌂 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑌾𑌗𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚—𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌅𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌕𑌾𑌮𑌃, 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌹𑌧𑌾𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑍋 𑌽𑌨𑍍𑌨𑌪𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌃, 𑌸 𑌕𑌾𑌮𑌃 𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌭𑌰𑌤𑌰𑍍𑌷𑌭 ॥ ௧௧ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௧௨. 𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌸𑌾𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌭𑌾𑌵𑌾𑌃 𑌰𑌾𑌜𑌸𑌾𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵𑍇𑌤𑌿 𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌤𑍇 𑌮𑌯𑌿 ॥

𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌸𑌾𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌃 𑌸𑌤𑍍𑌵𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 𑌭𑌾𑌵𑌾𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌃, 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃 𑌰𑌜𑍋𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌃, 𑌤𑌾𑌮𑌸𑌾𑌃 𑌤𑌮𑍋𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌶𑍍𑌚, 𑌯𑍇 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌵𑌶𑌾𑌤𑍍 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌭𑌾𑌵𑌾𑌃 𑌤𑌾𑌨𑍍 𑌮𑌤𑍍𑌤 𑌏𑌵 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑍍 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 । 𑌏𑌵𑌂 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑍇 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌹𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌤𑌦𑌧𑍀𑌨𑌃 𑌤𑌦𑍍𑌵𑌶𑌃, 𑌯𑌥𑌾 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 । 𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 𑌮𑌯𑌿 𑌮𑌦𑍍𑌵𑌶𑌾𑌃 𑌮𑌦𑌧𑍀𑌨𑌾𑌃 ॥ ௧௨ ॥

---

௧௧. பரதரிற் சிறந்தோனே! மற்றும், யான் ஸாமர்த்தியவான்களுள் அவாவும் பற்றும் ஒழிந்த ஸாமர்த்தியமாகவும், பிராணிகளுள் தருமத்திற்கு விரோதமில்லாத ஆசையாகவும் இருக்கின்றேன்.

அவா என்பது - (இந்திரியங்களோடு) கூட்டரவுப்படாத [அடையாத] பொருள்களின்மேல் ஆசை ; பற்று என்பது - அடைந்தபொருள்களிலே உருசி. நான், அவையிரண்டும் இல்லாததாய், உடம்புமுதலியவற்றைமாத்திரம் தாங்குதற்கு வேண்டிய ஸாமர்த்தியமாக இருக்கின்றேன் ; ஆனால், ஸம்ஸாரிகளுடைய அவாவிற்கும் பற்றுக்கும் காரணமான (திறமை) எதுவோ, (அது) அன்று. மேலும், பிராணிகளிடத்து, நூற்கொள்கையொடு மாறுபடாத ஆசை எதுவோ அதுவாக, உதாரணமாக, உடம்பைக்காத்தல்முதலியவற்றிற்குமாத்திரம் வேண்டியதாய், (உணவைப்) புசித்தலையும், (ஜலம்)குடித்தலையும், மற்றுமிவைபோன்றவற்றையும்பற்றிய ஆசையாக இருக்கின்றேன். (௧௧)

மேலும்,

௧௨. ஸாத்விகமான பொருள்கள் எவையோ, ராஜஸமும் தாமஸமுமான(பொருள்கள்) எவையோ, அவை என்னிடமிருந்தே(தோன்றியவை)என்று அறிந்துகொள். ஆனால், நான் அவற்றினிடத்து (இல்லை) ; அவை என்னிடத்து (உள்ளன).

ஸாத்விகம் - ஸத்துவகுணத்தாலானது. ராஜஸம்-ரஜோகுணத்தாலானது. தாமஸம் - தமோகுணத்தாலானது. பிராணிகளுடைய தமது கர்மவசப்படி ஸாத்விகமாகவும், ராஜஸமாகவும், தாமஸமாகவுமுள்ள எந்தெந்தப் பொருள்கள் உண்டாகின்றனவோ, அவற்றையெல்லாம் என்னிடமிருந்தே உண்டானவையாக இவ்வாறு தெரிந்துகொள். இப்படி அவை என்னிடமிருந்து உண்டாகின்றனவாயினும், ஸம்ஸாரிகள் (இருப்பது)போல நான் அவற்றைச் சார்ந்து, அவற்றிற்கு வசமாக இருக்கிறேனில்லை. மற்று, அவை எனக்கு வசமாக என்னைச் சார்ந்துள்ளன. (௧௨)

𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑍋𑌽𑌪𑌿 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌦𑍋𑌷𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌾𑌹𑌕𑌾𑌰𑌣𑌂 𑌸𑌨𑍍 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌜𑌗𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 । 𑌤𑌚𑍍𑌚 𑌕𑌿𑌂𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌜𑌗𑌤𑌃 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௩. 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌮𑌯𑍈𑌰𑍍𑌭𑌾𑌵𑍈𑌰𑍇𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 ।
𑌮𑍋𑌹𑌿𑌤𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌗𑍁𑌣𑌮𑌯𑍈𑌃 𑌗𑍁𑌣𑌵𑌿𑌕𑌾𑌰𑍈𑌃 𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌮𑍋𑌹𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌭𑌾𑌵𑍈𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑍈𑌃 𑌏𑌭𑌿𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌜𑌾𑌤𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌮𑍋𑌹𑌿𑌤𑌂 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌤𑌾𑌂 𑌆𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌸𑌤𑍍 𑌨 𑌅𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌮𑌾𑌮𑍍 𑌏𑌭𑍍𑌯𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌂 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌚 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 𑌵𑍍𑌯𑌯𑌰𑌹𑌿𑌤𑌂 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑌿𑌕𑌾𑌰𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௩ ॥

𑌕𑌥𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌦𑍈𑌵𑍀𑌮𑍍 𑌏𑌤𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀𑌂 𑌮𑌾𑌯𑌾𑌂 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌇𑌤𑌿 ? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௪. 𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 ।
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ॥

𑌦𑍈𑌵𑍀 𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌮𑌮 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌸𑍍𑌵𑌭𑍂𑌤𑌾 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌏𑌷𑌾

மாயையும், அதனை வெல்லும் வழியும்.

பரமேச்வரனான(யான்)இயல்பாகவே சுத்தனும் புத்தனும் முக்தனுமாய்,ஸகல பூதங்களுடைய ஆத்மாவாய், நிர்க்குணனாய்,ஸம்ஸாரத்தீங்கினுடைய விதையை வறுத்தற்குக் காரணமாய் இவ்வாறு இருந்தாலும், என்னை ஜகத்தானது அறிகின்றதில்லை எனப் பகவான் இரக்கத்தைக் காட்டுகிறார்.—ஜகத்திற்கு அந்த அறியாமை எதனாலானது ?— கூறுவோம் :

௧௩. இந்தஜகத்தெல்லாம் முக்குணவிகாரங்களான பொருள்களால் மயக்கப்பட்டு, என்னை இவற்றினின்றும் வேறானவனாகவும், மாறுபாடில்லாதவனாகவும் அறிகின்றதில்லை.

இந்தப் பிராணிவர்க்கமானது விருப்பு வெறுப்பு மயக்கம் முதலாக (இவ்)விதமாயுள்ள கீழ்க்கூறிய இப்பொருள்களால் அவிவேகமுடைமையை அடைவிக்கப்பெற்று,என்னை கீழ்க்கூறிய இக்குணங்கட்கு அப்பால்உள்ளவனாகவும்,வேறானவனாகவும், திரிபில்லாதவனாகவும் அறிகின்றதில்லை. (அவிவேகம் - ஆராய்ச்சியின்மை.) திரிபில்லாதவன் -(உலகத்திலுள்ள)பொருள்கட்கு உரிய பிறப்புமுதலான எத்தகைய விகாரமும் இல்லாதவன் என்றபடி. (௧௩)

மற்று, முக்குணவடிவமான இதனை = விஷ்ணுவினுடைய தைவமாயையை (ஒருவன்)கடந்துநிற்பது எப்படி என்பது ?—கூறுவோம் :

௧௪. (முக்)குணங்களாலாகியதான என்னுடைய இந்தத் தைவமாயையானது கடக்கஅரிதுதான். எவர்கள் என்னையே அடைகிறார்களோ, அவர்கள் இம்மாயையைக் கடந்துவிடுகிறார்கள்.

எங்குமுள்ள ஈச்வரனாகிய எனக்குச்சொந்தமானதும், (முக்)குணவிகாரமானதும், கீழேகூறப்பட்டதுமான என்னுடைய இம்மாயையானது கடக்கமுடியாதது.

யதோக்தா குணமயீ மம மாயா துரத்யயா து:கேந அத்யய: அதிக்ரமணம் யஸ்யா: ஸா துரத்யயா। தத்ர ஏவம் ஸதி ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேவ மாயாவிநம் ஸ்வாத்மபூதம் ஸர்வாத்மநா யே ப்ரபத்யந்தே தே மாயாமேதாம் ஸர்வபூதமோஹிநீம் தரந்தி அதிக்ராமந்தி; தே ஸம்ஸாரபந்தநாத் முச்யந்த இத்யர்த: ॥ ௧௪ ॥

யதி த்வாம் ப்ரபந்நா: மாயாமேதாம் தரந்தி, கஸ்மாத் த்வாமேவ ஸர்வே ந ப்ரபத்யந்தே இதி? உச்யதே—

௧௫. ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: ।
மாயயாऽபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ॥

ந மாம் பரமேஶ்வரம் துஷ்க்ருதிந: பாபகாரிண: மூடா: ப்ரபத்யந்தே நராதமா: நராணாம் மத்யே அதமா: நிக்ருஷ்டா: । தே ச மாயயா அபஹ்ருதஜ்ஞாநா: ஸம்முஷிதஜ்ஞாநா: ஆஸுரம் பாவம் ஹிம்ஸாந்ருதாதிலக்ஷணம் ஆஶ்ரிதா: ॥ ௧௫ ॥

யே புந: நரோத்தமா: புண்யகர்மாண:—

௧௬. சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந ।
ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப ॥

சதுர்விதா: சது:ப்ரகாரா: பஜந்தே ஸேவந்தே மாம் ஜநா: ஸுக்ருதிந: புண்யகர்மாண: ஹே அர்ஜுந । ஆர்த: ஆர்திபரிக்ருஹீத:

ஆதலால், அது இவ்வாறுள்ளவளவிலே, எவர்கள் ஸகலகர்மங்களையுந் துறந்து, மாயையையுடையவனைத் தமது[அவர்களது]ஆத்மாவாகவுள்ள என்னையே எவ்வகையினும் அடைகிறார்களோ, அவர்கள் எல்லாப்பிராணிகளையும் மயக்குகின்ற இம்மாயையைக் கடந்துநிற்கிறார்கள் : அவர்கள் ஸம்ஸாரக்கட்டினின்றும் விடுபடுகிறார்கள் என்பது பொருள். (௧௪)

உன்னை அடைந்தவர்கள் இம்மாயையைக் கடந்துவிடுகிறார்களானால், எதனால் உன்னையே எல்லாரும் அடைவதில்லை என்பது ?—கூறுவோம் :

௧௫. மாயையினால் அறிவு அபகரிக்கப்பட்டு, அஸுரத்தன்மையை அடைந்து, மனிதர்களுள் கடைப்பட்டவராய்த் தீவினைகளைச் செய்யும் மூடர்கள் என்னை அடைவதில்லை.

என்னை - பரமேச்வரனை. அபகரிக்கப்பட்டு - கவரப்பட்டு. அஸுரத்தன்மையை - ஹிம்ஸை, பொய், முதலாகியதை. (௧௫)

பக்தர்கள் நான்கு வகை.

மற்று, நல்வினைகளையுடைய மானிடோத்தமர்கள் எவரோ, (அவர்கள் என்னை வழிபடுகிறார்கள்) :

௧௬. பாதரிற் சிறந்த அர்ஜுன ! துயருற்றவனும், (உண்மையினை)அறிய விரும்புவோனும், பொருளைவேண்டுவோனும், ஞானியுமாகிய நால்வகையான நல்லஜனங்கள் என்னைத் தொழுகிறார்கள்.

நல்ல - நல்வினைகளையுடைய. துயருற்றவன் - துன்பத்தால் கவரப்பட்டவன்,

तस्करव्याघ्ररोगादिना अभिभूतः आपन्नः । जिज्ञासुः भगवत्तत्त्वं ज्ञातुमिच्छति यः । अर्थार्थी धनकामः । ज्ञानी विष्णोः तत्त्ववित् च हे भरतर्षभ ॥ १६ ॥

கள. तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥

तेषां चतुर्णां मध्ये ज्ञानी तत्त्ववित् तत्त्ववित्त्वात् नित्ययुक्तः भवति एकभक्तिश्च, अन्यस्य भजनीयस्य अदर्शनात्; अतः स एकभक्तिः विशिष्यते विशेषमाधिक्यमापद्यते, अतिरिच्यते इत्यर्थः । प्रियो हि यस्मात् अहम् आत्मा ज्ञानिनः, अतः तस्य अहम् अत्यर्थं प्रियः; प्रसिद्धं हि लोके “आत्मा प्रियः भवति” इति । तस्मात् ज्ञानिनः आत्मत्वात् वासुदेवः प्रियः भवतीत्यर्थः । स च ज्ञानी मम वासुदेवस्य आत्मैवेति मम अत्यर्थं प्रियः ॥ १७ ॥

न तर्हि आर्तादयः त्रयः वासुदेवस्य प्रियाः ? न ; किं तर्हि ?—

கஅ. उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥

திருடர் புலி நோய்முதலியவற்றால் தாக்கப்பட்டவன், ஆபத்தை அடைந்தவன். எவன் பகவானுடைய உண்மையை அறியவிரும்புகின்றானோ, (அவன்) - அறியவிரும்புவோன். பொருளை வேண்டுவோன் - திரவியத்தின்மேல் ஆசையுள்ளவன். ஞானி - விஷ்ணுவினுடைய உண்மையை அறிந்தவன். (கசு)

கள. ஒன்றிலேயே பேரன்பையுடையவனாய் எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட ஞானியானவன் அவர்களுள் மேம்படுகிறான் ; ஏனெனில், யான் ஞானிக்கு மிகவும் பிரியமானவன் ; அவனும் எனக்குப் பிரியமானவன்.

அந்தநால்வருள் ஞானியானவன் உண்மையினை அறிந்துள்ளமையால் (பகவானாகிய ஆத்மாவினிடத்திலேயே)எப்பொழுதும் ஒருநிலைப்பட்டவனாயும், ஒன்றிலேயே [அந்த ஆத்மாவினிடத்திலேயே]பேரன்பையுடையவனாயும் இருக்கிறான் ; (அவன், தான்)அன்புவைக்கவேண்டிய வேறு(ஒன்றையும்) காணாமையினால் என்க. ஆகவே, ஒன்றிலேயே பேரன்பையுடைய அவன் சிறப்பை = உயர்வை அடைகிறான்:மேலாகின்றான் என்றபடி. நான் ஞானியினுடைய ஆத்மாவாதலின், அவனுக்கு நான் மிகவும் பிரியமானவன். (எவனுக்கும் தன்)ஆத்மா பிரியமாயிருக்கின்றதென்பது உலகத்தில் (யாவர்க்கும்)தெரிந்ததன்றோ. ஆகவே, வாஸுதேவன் ஞானியினுடைய ஆத்மாவாதலால், (ஞானிக்குப்)பிரியமாய் இருக்கின்றான் என்பது பொருள். அந்த ஞானியும் வாஸுதேவனை என்னுடைய ஆத்மாவாகவே (இருக்கிறான்)ஆதலால், எனக்கு மிகவும் பிரியமானவன் என்க. (கள)

அப்பொழுது, துயருற்றவன்முதலிய மூவரும் வாஸுதேவனுக்குப் பிரியமானவரல்லர் ? —அப்படியன்று.—மற்று, என்ன ?—

கஅ. இந்தஎல்லோருமே உயர்ந்தவர்கள். ஞானியோ ஆத்மாதான் என்பது எனது கொள்கை. ஏனெனில், மனம் ஒருநிலைப்பட்ட அவன் என்னையே மிக்கமேலான அடைக்கலமாக நாடியுள்ளவன்.

𑌉𑌦𑌾𑌰𑌾𑌃 𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵 𑌏𑌤𑍇, 𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌪𑌿 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌏𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌮𑌮 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌭𑌵𑌤𑌿 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍁 𑌅𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌤𑌤𑍍𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑌿𑌤𑌿? 𑌆𑌹—𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍁 𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌨 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌮𑌤𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌮 𑌮𑌤𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 । 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌆𑌰𑍋𑌢𑍁𑌮𑍍 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 "𑌅𑌹𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌨 𑌅𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂, 𑌗𑌨𑍍𑌤𑍁𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௮ ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇—

௧௯. 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥

𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌮𑌨𑍍𑌤𑍇 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑍌 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌪𑌰𑌿𑌪𑌾𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌃 𑌮𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑍍?—𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 । 𑌯 𑌏𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌸 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 ; 𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌧𑌿𑌕𑍋 𑌵𑌾 । 𑌅𑌤𑌃 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃, '𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁' 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 ॥ ௧௯ ॥

இவர்களெல்லாருமே உயர்ந்தவர்கள் : மூவர்களும் எனக்குப் பிரியமானவர்கள்தான் என்றபடி. என்னுடைய எந்த பக்தனும் வாஸுதேவனான எனக்குப் பிரியனல்லாதவனாக இருக்கமாட்டானன்றோ. ஆனால், ஞானியானவன் மிகவும் பிரியனாய் இருக்கிறான் என்ற(இவ்)வேறுபாடு உண்டு.—அது எதனால் என்பது ?—கூறுகிறார் : ஞானியோ ஆத்மாதான், என்னைக்காட்டிலும் வேறானவன் அல்லன் என்பது என் நிச்சயம். ஏனெனில், அந்த ஞானியானவன் " நானே பகவான் வாஸுதேவன், வேறு அல்லன் " என இவ்வாறு ஒருதலைப்பட்டமனத்தினனாய், அடையவேண்டிய தான பரப்ரஹ்மத்தையே மிக்கஉயர்ந்த கதியாக நாடத்தலைப்பட்டான் என்க. (௧௮)

மீண்டும் ஞானியைப் புகழ்கின்றார் :

௧௯. பல பிறவிகளுடைய முடிவிலே, ஞானியானவன் " எல்லாம் வாஸுதேவன் " என்று என்னை அடைகிறான். அந்த மஹாத்மா கிடைப்பதற்கு மிக்க அருமை.

ஞானத்திற்குவேண்டிய(நல்ல)வாஸனை(உண்டாதற்கு)இடமாயுள்ள பலஜன்மங்களின் முடிவிலே ஞானத்தின் பரிபக்குவத்தை அடைந்தவன் உள்ளேயுள்ள ஆத்மாவாகிய வாஸுதேவனான என்னை அடைகிறான்.—எவ்வாறு ?—" எல்லாம் வாஸுதேவன் " என்று. எவன் எல்லாவற்றினுடைய ஆத்மாவாகவுள்ள என்னை இவ்வாறு அடைகின்றானோ, அவன் மஹாத்மா [யாவற்றினும் மேலான வைபவத்தைப் பெற்றவன்.—ஆ.] அவனுக்கு ஒப்பாகவாயினும், உயர்வாகவாயினும் வேறொருவன் இல்லை. ஆகவே, (அவன்) கிடைப்பதற்கு மிக்க அருமை. " மனிதர்களுடைய (எத்தனையோ) ஆயிரங்களில், (ஒருவன் முக்தி கைகூடுதற்காக முயலுகின்றான்) " (எ - ௩) எனக் கூறப்பட்டுள்ளதன்றோ. (௧௯)

𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍌 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௰. 𑌕𑌾𑌮𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍈𑌰𑍍𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌮𑌾𑌸𑍍𑌥𑌾𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾 ॥

𑌕𑌾𑌮𑍈𑌃 𑌤𑍈𑌃 𑌤𑍈𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌪𑌶𑍁𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑍈𑌃 𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌅𑌪𑌹𑍃𑌤𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌨𑍍𑌯𑌾𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌤𑌂 𑌤𑌂 𑌨𑌿𑌯𑌮𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌰𑌾𑌧𑌨𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌯𑍋 𑌯𑍋 𑌨𑌿𑌯𑌮𑌃 𑌤𑌂 𑌤𑌮𑍍 𑌆𑌸𑍍𑌥𑌾𑌯 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌨𑌿𑌯𑌤𑌾𑌃 𑌨𑌿𑌯𑌮𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑍀𑌯𑌯𑌾 ॥ ௨௰ ॥

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌕𑌾𑌮𑌿𑌨𑌾𑌮𑍍—

௨௧. 𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

𑌯𑍋 𑌯𑌃 𑌕𑌾𑌮𑍀 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌨𑍁𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌚 𑌸𑌨𑍍 𑌅𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌂 𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍁𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌿𑌨𑌃 𑌅𑌚𑌲𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑍀𑌕𑌰𑍋𑌮𑌿 ॥ ௨௧ ॥

𑌯𑌯𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑍋 𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌨𑍁𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌅𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿—

மூடர்கள் வேறுதெய்வங்களை வழிபடுகிறார்கள்.

"ஸகலமும் வாஸுதேவனாகிய ஆத்மாதான்" என்னும் ஞானமுண்டாகாததற்குக் காரணம் கூறப்படுகின்றது :

௨௰. ***அந்தந்த ஆசைகளால் அறிவு அபகரிக்கப்பட்டவர்கள் அந்தந்த நியமத்தைக் கைப்பற்றி, தம்முடைய இயற்கையினாலே நியமிக்கப்பட்டவராய் வேறுதெய்வங்களை அடைகிறார்கள்.***

மக்கள், பசு, ஸ்வர்க்கம் முதலியவற்றைப்பற்றிய அந்தந்த ஆசைகளால் அபகரிக்கப்பெற்ற விவேகசக்தியை யுடையவர்கள்,—(வேறு)தெய்வங்களை ஆராதித்தற்கு அமைந்த நியமம் எதெதுவோ, அதனைக் கைக்கொண்டு, தமது ஸ்வபாவத்தினாலே= முந்தின பிறவிகளில் ஸம்பாதித்துவைக்கப்பட்ட (அந்தந்தச்) சிறப்புவாஸனையினாலே அடக்கி ஆளப்பட்டவராய், ஆத்மாவாகிய வாஸுதேவனைக்காட்டிலும் வேறாய் தெய்வங்களைத் தொழுகிறார்கள். (௨௰)

அந்தக் காமிகளுள் [ஆசையுள்ளவர்களுள்],

௨௧. ***எந்தெந்த பக்தன் எந்தெந்த வடிவத்தை நம்பிக்கையோடு பூஜிக்கக் கருதுகின்றானோ, அவனவனுக்கு நான் அதே நம்பிக்கையை அசையாததாகச் செய்கின்றேன்.***

எந்தெந்தக் காமியானவன் எந்தெந்த தேவதாமூர்த்தியை நம்பிக்கையோடும் பக்தியோடும் கூடியவனாய்ப் பூஜிக்க விரும்புகின்றானோ, அந்தந்தக் காமிக்கு அதே நம்பிக்கையை அசையாததாக நிலைக்கச்செய்கின்றேன். (௨௧)

எவனெவன் எந்தநம்பிக்கையோடு இவ்வாறு முன்னமே இயற்கையாகத் தலைப்பட்டு, எந்தெந்த தேவதாவடிவத்தை ஆராதிக்க விரும்புகின்றானோ,

௨௨. 𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇 ।
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍 ॥

𑌸 𑌤𑌯𑌾 𑌮𑌦𑍍𑌵𑌿𑌹𑌿𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌨𑍋𑌃 𑌆𑌰𑌾𑌧𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑌨𑌂 𑌸𑌮𑍀𑌹𑌤𑍇 𑌚𑍇𑌷𑍍𑌟𑌤𑍇 । 𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑌿𑌤𑌾𑌯𑌾𑌃 𑌦𑍇𑌵𑌤𑌾𑌤𑌨𑍋𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌵𑌿𑌭𑌾𑌗𑌜𑍍𑌞𑌤𑌯𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌤𑌾𑌨𑍍, 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍇 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌾𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌾𑌨𑍍 𑌅𑌵𑌶𑍍𑌯𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

'𑌹𑌿𑌤𑌾𑌨𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑌦𑌚𑍍𑌛𑍇𑌦𑍇 𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑍍 𑌉𑌪𑌚𑌰𑌿𑌤𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂; 𑌨 𑌹𑌿 𑌕𑌾𑌮𑌾 𑌹𑌿𑌤𑌾𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 ॥ ௨௨ ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌪𑌰𑌾 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌃 𑌕𑌾𑌮𑌿𑌨𑌶𑍍𑌚 𑌤𑍇, 𑌅𑌤𑌃—

௨௩. 𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌯𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌪𑌿 ॥

---

௨௨. அவன் அந்தநம்பிக்கையோடு கூடியவனாய் அதனுடைய பூஜையை மேற்கொள்ளுகிறான்; உண்மையிலே என்னாலேயே அமைக்கப்பட்ட அந்த விரும்பிய பொருள்களை அதனிடத்தினின்றும் பெறுகிறான்.

அவன் என்னால் நியமிக்கப்பட்ட அந்தநம்பிக்கையோடு கூடியவனாய் அந்த தேவதாமூர்த்தியினுடைய உபாஸனையைச்செய்துநிறைவேற்றுகிறான். (நான்) கர்மமும் அதன்பயனுமாகிய இவற்றின் பாகுபாட்டை அறிந்துள்ளமையால், முற்றுமுணர்ந்த பரமேச்வரனான என்னாலேயே அமைக்கப்பட்ட அந்தக் காமங்களை = (அவன்) அடையவிரும்பிய பொருள்களை(த் தான்)ஆராதித்த அந்த தேவதாமூர்த்தியினின்றும் பெறுகிறான். அந்தக்காமங்கள் பகவானாலேயே நியமிக்கப்பட்டனவாதலால், அவற்றை(அவன்)அவச்யம் அடைகிறான் என்பது பொருள். [ஒருவன் எப்பொருளை வேண்டி வேறுதெய்வத்தை உபாஸிக்கின்றானோ, அப்பொருள் அவனது உபாஸனையின் பயனாம் என்க. இனி, இன்னதற்கு இன்னது பயன் என்று அமைப்பவனும் அப்பயனை அளிப்பவனும், முற்றுமுணர்ந்த ஸர்வேச்வரனான பகவானாதலால், அந்த வேறுதெய்வத்தினுள்ளும் அந்தர்யாமியாகவுள்ள அப்பகவான்,—அவன்வேண்டின பொருள்களை அவனுடைய உபாஸனைக்குத் தக்கவாறு தானே அமைத்து, ஆனால் தானே நேராக அல்லாமல் அத்தெய்வத்தின்மூலமாகவே கொடுத்தருளுகிறான் என்பது தேர்ந்த கருத்து. பின்வரும் ச்லோகத்தின் பாஷ்யத்தையும் பார்க்க.]

"ஹிதாந்" என்று பதம்பிரித்தால், ('நலமான காமங்களை' என்று பொருள்படும்; படவே,)காமங்கள் நலமானவை என்பதை உபசாரவழக்காகக்கொள்ளவேண்டும். காமங்கள் (தீங்கானவையேயன்றி)ஒருவனுக்கும் நலமானவையல்லவன்றோ. (ஆகவே, அதனை உபசாரவழக்காகவும் கொள்ளப்படாதென்க.) (௨௨)

அவர்கள் முடிவுள்ள(பயனைப் பெறுதற்கான)வழியிலே முயல்பவராயும், விவேகமில்லாதவராயும், காமிகளாயும் இருக்கிறார்கள் ஆதலால்,

௨௩. அற்பபுத்தியுடைய அவர்கட்கு அப்பயன் முடிவுள்ளதாகவே ஆகின்றது; தேவதைகளை ஆராதிப்பவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். என்னுடைய பக்தர்கள் என்னையும் அடைகிறார்கள்.

अन्तवत् विनाशि तु फलं तेषां तत् भवति अल्पमेधसाम् अल्पप्रज्ञानाम्। देवान् देवयजो यान्ति इति देवयजः, ते देवान् यान्ति, मद्भक्ता यान्ति मामपि। एवं समाने अपि आयासे मामेव न प्रपद्यन्ते अनन्तफलाय, अहो खलु कष्टं वर्तन्ते, इत्यनुक्रोशं दर्शयति भगवान्॥ २३॥

किंनिमित्तं मामेव न प्रपद्यन्ते इति? उच्यते—

२४. अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम्॥

अव्यक्तम् अप्रकाशं व्यक्तिम् आपन्नं प्रकाशं गतम् इदानीं मन्यन्ते मां नित्यप्रसिद्धम् ईश्वरमपि सन्तम् अबुद्धयः अविवेकिनः परं भावं परमात्मस्वरूपम् अजानन्तः अविवेकिनः मम अव्ययं व्ययरहितम् अनुत्तमं निरतिशयं मदीयं भावम् अजानन्तः मन्यन्ते इत्यर्थः॥ २४॥

तदज्ञानं किंनिमित्तम् इति? उच्यते—

முடிவுள்ளதாகவே - அழியுந்தன்மையதாகவே. இவ்வாறு(இருவகையிலும், பகவானை ஆராதிப்பதிலும் வேறுதெய்வத்தை ஆராதிப்பதிலும்) ஆயாஸமானது ஸமமாயிருந்தும், (அழியும்பயனுக்காக அவர்கள் அந்யதேவதைகளை அடைகிறார்களேயன்றி) அழிவிலாப் பயனுக்காக என்னையே அடைவதில்லை. ஆ ! என்னே ! மிகப்பரிதாபமாக இருக்கிறார்கள்.—எனப்பகவான் இரக்கத்தைக் காட்டுகிறார். (ஸகலமும் அழிந்துபோகின்ற பிரளயகாலத்திலே தேவதைகளும் அவர்களதுஉலகங்களும் அழிந்துபோகின்றமையால், அவர்களை உபாஸித்தவர்கட்கு அவ்வுலகங்களிலே ஸுகமாக வாழ்தல் அப்பொழுது முடிந்துபோகின்றது. போகவே, மீண்டும் அவர்கள் தமது கர்மகதிப்படி மநுஷ்யலோகத்திற் பிறக்கிறார்கள். கூ - உ௩, உச, உ௫ - ஆம் சுலோகங்களைப்பார்க்க. ஆனால், பகவானுடைய பக்தர்கள் "**என்னையும் அடைகிறார்கள்**" என்ற உம்மையினால், முதலையினால் விழுங்கப்பட்ட கஜேந்திரம் முதலாயினோர்போல முதலில், தாம் வேண்டினதைப்பெற்று, பின்பு, பிறவாமையைக் கொடுக்கும் அழியாப் பயனாகிய முக்தியைப் படிப்படியாகப் பெறுகிறார்கள் என்று கண்டுகொள்க.) (உ௩)

எக்காரணத்தால் (அவர்கள்) என்னையே அடைவதில்லை என்பது ?—கூறுவோம் :

உச. என்னுடைய நிர்விகாரமான உயர்ந்த மேலான நிலையை அறியாத அவிவேகிகள் (இந்திரியங்கட்குப்) புலப்படாத என்னை (அவற்றிற்குப்) புலப்படுதலை அடைந்த (ஒருமநுஷ்ய ஜீ)வனாக எண்ணுகிறார்கள்.

நான் என்றும் பிரஸித்தனான ஈச்வரனாயிருந்தாலும், விவேகமில்லாதவர்கள் என்னுடைய நிர்விகாரமான உயர்ந்த பரமாத்மஸ்வரூபத்தை அறியாதவர்களாய், (நான் இவ்வுடம்பை யெடுத்தற்குமுன் இந்திரியங்கட்குப்) புலப்படாதிருந்த என்னை இப்பொழுது [வஸுதேவரது வீட்டிலே அவரது மகனாக உடம்பொடு நிற்கும் பொழுது] (இந்திரியங்கட்குப்) புலப்படுதலை அடைந்த (கிருஷ்ணனென்னும் பெயருடைய ஒரு மநுஷ்யஜீ)வனாகக் கொள்கிறார்கள் என்க. (உச)

பகவானுடைய உண்மை தெரியாததற்கு யோகமாயையும், மயக்கமும் காரணம்.

அவர்களுடைய அறியாமை எதனாலாகியது என்பது ?—கூறுவோம் :

௨௫. 𑌨𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃 ।
* 𑌮𑍂𑌢𑍋𑌽𑌯𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌲𑍋𑌕𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

𑌨 𑌅𑌹𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯, 𑌕𑍇𑌷𑌾𑌂𑌚𑌿𑌦𑍇𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 । 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃, 𑌯𑍋𑌗𑌃 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 𑌘𑌟𑌨𑌂, 𑌸𑍈𑌵 𑌮𑌾𑌯𑌾 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾—𑌤𑌯𑌾 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃 𑌸𑌂𑌛𑌨𑍍𑌨𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌤 𑌏𑌵 𑌚 𑌮𑍂𑌢𑍋 𑌲𑍋𑌕𑌃 𑌅𑌯𑌂 𑌨 𑌅𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌅𑌜𑌂 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂 ॥ ௨௫ ॥

𑌯𑌯𑌾 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌲𑍋𑌕𑌃 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿, 𑌨 𑌅𑌸𑍌 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾 𑌮𑌦𑍀𑌯𑌾 𑌸𑌤𑍀 𑌮𑌮 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌅𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑌃 𑌮𑌾𑌯𑌾 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 । 𑌯𑌤𑌃 𑌏𑌵𑌮𑍍 𑌅𑌤𑌃—

௨௬. 𑌵𑍇𑌦𑌾𑌹𑌂 𑌸𑌮𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌨 ॥

𑌅𑌹𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦 𑌜𑌾𑌨𑍇 𑌸𑌮𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌸𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿, 𑌤𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑍇𑌦 𑌅𑌹𑌮𑍍 । 𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌨 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌂 𑌮𑌚𑍍𑌛𑌰𑌣𑌂 𑌏𑌕𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 ; 𑌮𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑍇𑌦𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑍇𑌵 𑌨 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑍇 ॥ ௨௬ ॥

---

௨௫. யோகமாயையினால் நன்றாக மூடப்பட்டுள்ள யான் எல்லோர்க்கும் வெளிப்படையாக (விளங்குகிறேன்) இல்லை. இந்த மயங்கிய உலகமானது என்னை, பிறப்பில்லாதவனாகவும் அழிவில்லாதவனாகவும் அறிகிறதில்லை.

நான் எல்லாஜனங்களுக்கும் வெளிப்படையாக(க் காணப்படுகிறேன்) இல்லை : எனது பக்தர்களான சிலர்க்கே யான் வெளிப்படையாக இருக்கிறேன் என்பது கருத்து. யோகம் - (முக்)குணங்களின் சேர்க்கை. அதுதான் - மாயை என்பது. யோகமாகிய மாயை - யோகமாயை. அந்தயோகமாயையினால் (யான்) நன்றாக மூடப்பட்டிருக்கின்றேன் : நிரம்ப மறைக்கப்பட்டிருக்கின்றேன் என்றபடி. ஆதலால்தான், மயக்கமுற்ற இவ்வுலகம் என்னை, பிறப்பில்லாதவனாகவும் அழிவில்லாதவனாகவும் அறிவதில்லை. (௨௫)

உலகமானது எந்த யோகமாயையினால் சூழப்பட்டுள்ள என்னை அறிவதில்லையோ, அந்த யோகமாயையானது என்னுடையதாயிருக்குமளவிலே, (அந்த)மாயையையுடைய ஈச்வரனான என்னுடைய அறிவைத் தடுக்கமுடியாது. உதாரணமாக, (உலகத்திலே இந்திரஜால)மாயையுடைய வேறொருவனுக்குங்கூட (அவனுடைய அவ்விந்திரஜால)மாயையானது (அவனது அறிவைத் தடுத்து மயக்காது). அதுபோல என்க. இவ்வாறிருத்தலால்,

௨௬. அர்ஜுன ! சென்றுபோயினவையும், நிகழ்கின்றவையும், வரப்போகின்றவையுமான பொருள்களை யான் அறிகிறேன். என்னையோ ஒருவனும் அறிவதில்லை.

என்னையே அடைக்கலமாகக்கொண்ட என்பக்தனொருவனைத் தவிர (வேறு) எவனும் என்னை அறியமாட்டான். என்னுடைய உண்மையை அறிவதில்லை ; ஆதலினால்தான் என்னை வழிபடுவதில்லை. (௨௬)

𑌕𑍇𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌾𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌇𑌤𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌿𑌦𑌮𑌾𑌹—

௨௭. 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 ।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌂 𑌸𑌰𑍍𑌗𑍇 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥

𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 𑌇𑌚𑍍𑌛𑌾 𑌚 𑌦𑍍𑌵𑍇𑌷𑌶𑍍𑌚 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍀𑌤𑌿 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌃 𑌤𑍇𑌨 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑍇𑌨 । 𑌕𑍇𑌨𑍇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌿𑌦𑌮𑌾𑌹—𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑍇𑌨 𑌇𑌤𑌿 । 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌃 𑌮𑍋𑌹𑌃 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌮𑍋𑌹𑌃 । 𑌤𑌾𑌵𑍇𑌵 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌵𑌤𑍍 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑍌 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍈𑌃 𑌸𑌮𑍍𑌬𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑍌 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌅𑌭𑌿𑌧𑍀𑌯𑍇𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌦𑌾 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑍌 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌬𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌕𑍌 𑌭𑌵𑌤𑌃, 𑌤𑌦𑌾 𑌤𑍌 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌵𑌶𑌾𑌪𑌾𑌦𑌨𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌣𑌂 𑌮𑍋𑌹𑌂 𑌜𑌨𑌯𑌤𑌃 । 𑌨 𑌹𑌿 𑌇𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑌦𑍋𑌷𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾𑌭𑍂𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌬𑌹𑌿𑌰𑌪𑌿; 𑌕𑌿𑌮𑍁 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌃 𑌸𑌂𑌮𑍂𑌢𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌬𑌹𑍁𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑍋𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑍇𑌤 𑌇𑌤𑌿 ।

மற்றும், பிறக்கின்ற ஸகலபூதங்களும், எனது உண்மையை அறிதற்குத் தடையாயுள்ள எதனால் தடுக்கப்பட்டுக்கொண்டு என்னை அறிவதில்லை? என ஆலோசிக்குமிடத்து இதனைக் கூறுகிறார் :

௨௭. பகைவரைத் தவிக்கச்செய்யும் பாரத! பிறக்கும்பொழுதே(யே) ஸகல பூதங்களும் விருப்புவெறுப்புக்களால் உண்டாகும் த்வந்தமயக்கத்தால் மோகத்தை அடைகின்றன.

விருப்புவெறுப்புக்களால் உண்டாகின்றஎதனால்?—என,(அவற்றால்உண்டாகும் அச்)சிறப்புப்பொருளை நோக்குமிடத்து, “த்வந்தமயக்கத்தால்”என்றஇதனைக் கூறுகிறார். த்வந்தங்களாலாகும் மயக்கம் - த்வந்தமயக்கம். குளிர்வெப்பங்கள்போல ஒன்றற்கொன்று மாறுபட்டவையாய், இன்பதுன்பங்களையும் அவற்றின்காரணமான (குளிர்வெப்பமுதலிய)வற்றையும் பற்றிவருபவையாய், காலத்திற்கேற்ப ஒவ்வொரு பிராணியோடும் கூடுகின்ற [தமக்கு வாய்க்கும் ஸமயங்களிலே, ஒவ்வொரு பிராணிக்கும் அடிக்கடி திரும்பத் திரும்பக் கிளைக்கும்]விருப்பு வெறுப்புக்கள் என்ற அவைகள்தான் “த்வந்தங்கள்” என்னும் சொல்லால் கூறப்படுகின்றன. அங்கே[ஒவ்வொரு பிராணியினிடத்தும்] விருப்பு வெறுப்புக்கள், இன்பதுன்பங்களும் அவற்றின் காரணங்களும் வந்தடைவதனால் (தமது) வடிவத்தைப் பெற்று [தோன்றி] நிற்கும்பொழுது, அந்த (விருப்பு வெறுப்புக்கள்) இரண்டும் ஸகலப்பிராணிகளுடைய அறிவைத் தம்வசப்படுத்திக்கொண்டு, அவ்வழியாக,பரமார்த்த ஆத்மாவைப்பற்றிய ஞானம் உண்டாவதற்குத் தடைசெய்வதான மயக்கத்தைப் பிறப்பிக்கின்றன. விருப்புவெறுப்புக்களால் வசப்படுத்தப்பட்ட சித்தத்தினையுடையவனுக்கு வெளியிலுங்கூட ஒரு பொருளைப் பற்றிய அறிவு உள்ளபடி உண்டாவதில்லையன்றோ ; அவைபுகுந்துகிடக்கும் புத்தியையுடையவனாய் மயக்கமுற்றிருப்பவனுக்கு, (அஹங்காரம்முதலிய) பலதடைகளையுடைய

அத: தேந இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந, பாரத பாரதாந்வயஜ, ஸர்வபூதாநி ஸம்மோஹிதாநி ஸந்தி ஸம்மோஹம் ஸம்மூடதாம் ஸர்கே ஜந்மநி—உத்பத்திகாலே இத்யேதத்—யாந்தி கச்சந்தி ஹே பரந்தப। மோஹவசாந்யேவ ஸர்வபூதாநி ஜாயமாநாநி ஜாயந்தே இத்யபிப்ராய:। யத ஏவம் அத: தேந த்வந்த்வமோஹேந ப்ரதிபத்தப்ரஜ்ஞாநாநி ஸர்வபூதாநி ஸம்மோஹிதாநி மாம் ஆத்மபூதம் ந ஜாநந்தி; அத ஏவ ஆத்மபாவேந மாம் ந பஜந்தே॥ ௨௭॥

கே புந: அநேந த்வந்த்வமோஹேந நிர்முக்தா: ஸந்த: த்வாம் விதித்வா யதாசாஸ்த்ரம் ஆத்மபாவேந பஜந்தே இத்யபேக்ஷிதம் அர்த்தம் தர்ஶயந்நாஹ—

௨௮. யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம்।
தே த்வந்த்வமோஹநிர்முக்தா: பஜந்தே மாம் த்ருடவ்ரதா:॥

யேஷாம் து புந: அந்தகதம் ஸமாப்தப்ராயம் க்ஷீணம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம் புண்யம் கர்ம ஸத்த்வஶுத்திகாரணம் வித்யதே யேஷாம் தே புண்யகர்மாண: தேஷாம் புண்யகர்மணாம், தே த்வந்த்வமோஹநிர்முக்தா: யதோக்தேந த்வந்த்வமோஹேந நிர்முக்தா: பஜந்தே மாம் பரமாத்மாநம் த்ருடவ்ரதா: "ஏவமேவ பரமார்த்தம், நாந்யதா" இத்யேவம் ஸர்வபரித்யாகவ்ரதேந நிஶ்சிதவிஜ்ஞாநா: த்ருடவ்ரதா: உச்யந்தே॥ ௨௮॥

உள்ளேயுள்ள ஆத்மாவினிடத்து அறிவு உண்டாகமாட்டாதென்று கூறவும் வேண்டுமோ? ஆகவே, பரதகுலத்தில் தோன்றிய பரந்தப! பிறக்கும்பொழுதே(யே) ஸகலப்பிராணிகளும் மயக்கப்பட்டு, (அந்த) மயங்கிய நிலையை அடைகின்றன. பிறக்கின்ற எந்தப்பிராணிகளும் மயக்கத்திற்கு வசமாகியே பிறக்கின்றனஎன்பது கருத்து. இவ்வாறுள்ளதனுல், அந்த த்வந்தமயக்கத்தால் அறிவு தடைப்பட்டு மயக்கப்பெற்ற ஸகலபூதங்களும் ஆத்மாவாகவுள்ள என்னை அறிவதில்லை; ஆதலால்தான், என்னை ஆத்மாவாகத்தொழுவதில்லை. (௨௭)

பகவானை வழிபடுதல் ப்ரஹ்மாநுபவஞானத்தைக் கொடுக்கும்.

ஆனுல், எவர்கள் இந்த த்வந்தமயக்கததால் விடப்பட்டவராய் உங்களை அறிந்து ஆத்மாவாக சாஸ்திரப்படி தொழுகிறுர்கள்?—என்னும் (வினுவிற்கு) எதிர்பார்க்கப்பட்ட விஷயத்தை [விடையை] உணர்த்தும்பொருட்டு கூறுகிறுர்:

௨௮. ***ஆனுல், நல்வினையுடைய எந்த ஜனங்களுக்குப் பாவமானது முடிவை அடைந்துள்ளதோ, அவர்கள் த்வந்தமயக்கத்தால் விடப்பட்டவராய் த்ருடமான விரதமுள்ளவராய் என்னை வழிபடுகிறுர்கள்.***

ஆனுல், சித்தசுத்திக்குக் காரணமான நல்வினையானது எந்த ஜனங்கட்கு உள்ளதோ, அவர்களுடைய பாவமானது பெரும்பாலும முடிந்து தேய்ந்துள்ளது. அவர்கள் கீழ்க்கூறிய த்வந்தமயக்கததால் விடப்பட்டவராய் த்ருடவிரதராய் என்னைப் பரமாத்மாவாகத் தொழுகிறுர்கள். எல்லாவற்றையும் முற்றத் துறத்தலென்னும் விரதத்தோடு, "பரம்பொருளின் உண்மை இப்படித்தான் உள்ளது, வேறுவிதமாக இல்லை" என இவ்வாறு அநுபவஅறிவை நிச்சயித்துக்கொண்டவர்கள் - த்ருடவிரதர்கள் எனப்படுகிறுர்கள். (௨௮)

𑌤𑍇 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௯. 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌮𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑌤𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 ।
𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍁𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑌾𑌖𑌿𑌲𑌮𑍍 ॥

𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌜𑌰𑌾𑌮𑌰𑌣𑌯𑍋𑌃 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌤𑍍𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌯𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇 𑌤𑍇 𑌯𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌤𑌤𑍍 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍 𑌵𑌿𑌦𑍁𑌃, 𑌕𑌰𑍍𑌮 𑌚 𑌅𑌖𑌿𑌲𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௨௯ ॥

௩௦. 𑌸𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌮𑌾𑌂 𑌸𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌂 𑌚 𑌯𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌮𑌾𑌂 𑌤𑍇 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌸𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌅𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌚 𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌂, 𑌸𑌹 𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑍇𑌨 𑌸𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌚 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃, 𑌸𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌂 𑌚 𑌸𑌹 𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌸𑌾𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃, 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌰𑌣𑌕𑌾𑌲𑍇 𑌅𑌪𑌿 𑌚 𑌮𑌾𑌂 𑌤𑍇 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿 ॥ ௩௦ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

அவர்கள் எதற்காகத் தொழுகிறார்கள் என்பது ?—கூறுவோம் :

௨௯. **மூப்பிறப்புக்கள் ஒழிதற்காக எவர்கள் என்னை ஆச்ரயித்து முயலுகின்றார்களோ, அவர்கள் அந்த ப்ரஹ்மத்தையும், ஸகலஅத்யாத்மத்தையும், ஸகலகர்மத்தையும் அறிகிறார்கள்.**

மூப்பும் இறப்பும் நீங்குதற்காக எவர்கள் பரமேச்வரனான என்னை அடைக்கலமாகக்கொண்டு, என்னிடத்தே சித்தம்ஒருநிலைப்பட்டவராய் முயலுகின்றார்களோ, அவர்கள் பரப்ரஹ்மத்தையே அறிகிறார்கள் ; உள்ளேயுள்ள ஆத்மாவைப்பற்றிய அந்த ஸகலஉண்மையையும் அறிகிறார்கள் ; கர்மம் முழுவதையும் அறிகிறார்கள். (௨௯)

௩௦. **எவர்கள் என்னை அதிபூதத்தோடும் அதிதைவத்தோடும் கூடியவனாகவும் அதியஜ்ஞத்தோடு கூடியவனாகவும் அறிகிறார்களோ, அவர்கள் மரணகாலத்திலும் மனம் ஒருநிலைப்பட்டவராய் என்னை அறிகிறார்கள்.**

ஸ்ரீமகாபாரதத்திலே, வ்யாஸராருளிச்செய்த நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக ப்ரஹ்மவித்யையாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுனஸம்வாதத்திலே விஜ்ஞானயோகம்என்னும் ஏழாம் அத்தியாயம் முற்றும்.

(எட்டாம் அத்தியாயத்தைப் பார்க்க.) (௩௦)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றும்.

அத

அஷ்டமோऽத்யாய: அப்யாஸயோக: ||

'தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நம்' இத்யாதிநா பகவதா அர்ஜுநஸ்ய ப்ரஶ்நபீஜாநி உபக்ஷிப்தாநி | அத: தத்ப்ரஶ்நாய அர்ஜுந உவாச—

அர்ஜுந உவாச ||

க. கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம |
அதிபூதம் ச கிம் ப்ரோக்தம் அதிதைவம் கிமுச்யதே ||

உ. அதியஜ்ஞ: கதம் கோऽத்ர தேஹேऽஸ்மிந் மதுஸூதந |
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோऽஸி நியதாத்மபி: ||

ஏதேஷாம் ப்ரஶ்நாநாம் யதாக்ரமம் நிர்ணயாய ஸ்ரீபகவாநுவாச—

ஸ்ரீபகவாநுவாச ||

ங. அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோऽத்யாத்மமுச்யதே |
பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்மஸம்ஜ்ஞித: ||

எட்டாவது அத்தியாயம் : அப்யாஸயோகம்.

சித்தம் ஒருநிலைப்பட்டு அறியவேண்டிய பொருள்கள் ஏழு.

பகவான், அர்ஜுனன் வினவுதற்குக் காரண(மான விஷய)ங்களை "அவர்கள் அந்த ப்ரஹ்மத்தை அறிகிறார்கள்" (எ - உகூ) என்பதுமுதலியவற்றால் உபதேசித்தருளினார். ஆகவே, அர்ஜுனன் அவற்றைக் கேட்கும்பொருட்டுக் கூறலாயினன் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

க. புருஷோத்தம! (க) அந்த ப்ரஹ்மமென்பது யாது? (உ) அத்யாத்மமென்பது யாது? (ங) கர்மமென்பது யாது? (ச) அதிபூதமென்றதும் யாது? (ரு) எதனை அதிதைவம் என்கிறார்கள்?

உ. மதுஸூதந! (சு) அதியஜ்ஞமென்பது இங்கு இச்சரீரத்தில் யாது? எவ்வாறுள்ளது? (எ) அன்றியும், மனம் ஒருநிலைப்பட்டவர்களாலே சாகும்ஸமயத்திலும் நீங்கள் எவ்வாறு அறியத்தக்கவராகிறீர்?

இவ்வினாக்களை நிச்சயித்தற்காக [அவற்றின் விடைகளை உறுதியாக உணரும்பொருட்டு] ஸ்ரீபகவான் அருளிச்செய்யலானார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

ங. (க) ப்ரஹ்மமென்பது அழியாதது, (யாவற்றினும்) மேலானது. (உ) (ப்ரஹ்ம)ஸ்வரூபத்தை அத்யாத்மம் என்கிறார்கள். (ங) கர்மமென்னும்பெயருடையது பூதங்களாகிய பொருள்கட்கு உத்பத்தியைச் செய்யும் தியாகம் [யாகம், தாநம், ஹோமம் என்க.]

௪. अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ॥

௫. अन्तकाले च मामेव स्मरन्मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥

अक्षरं न क्षरतीति अक्षरं परमात्मा, 'एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि' इति श्रुतेः । ओङ्कारस्य च 'ओमित्येकाक्षरं ब्रह्म' इति परेण विशेषणादग्रहणम् । परमम् इति च निरतिशये ब्रह्मणि अक्षरे उपपन्नतरं विशेषणम् । तस्यैव परस्य ब्रह्मणः प्रतिदेहं प्रत्यगात्मभावः स्वभावः स्वो भावः स्वभावः अध्यात्मम् उच्यते । आत्मानं देहम् अधिकृत्य प्रत्यगात्मतया प्रवृत्तं परमार्थब्रह्मावसानं वस्तु स्वभावः अध्यात्मम् उच्यते अध्यात्मशब्देनाभिधीयते । भूतभावोद्भवकरः भूतानां भावः भूतभावः, तस्य उद्भवः भूतभावोद्भवः तं करोतीति भूतभावोद्भवकरः, भूतवस्तूत्पत्तिकरः इत्यर्थः । विसर्गः विसर्जनं देवतोद्देशेन चरुपुरोडाशादेः द्रव्यस्य परित्यागः; स एष विसर्गलक्षणो यज्ञः कर्मसंज्ञितः कर्म-

---

௪. (ச) அதிபூதமென்பது அழியும் பொருள். (ரு) அதிதைவமென்பது புருஷன். உடம்பையுடையவரில் உத்தம! (சா) அதியஜ்ஞமென்பது இச்சரீரத்தில் நானேதான்.

ரு. (எ) எவன்சாகும்ஸமயத்திலும் என்னையே நினைக்கின்றவனுய்ச் சரீரத்தை விட்டுப் போகின்றுனே, அவன் என்நிலையை அடைகின்றுன். இதிற் சந்தேகமில்லை.

(க) அழியாததென்பது - அக்ஷரம். (அது) பரமாத்மா; (என்பதை,) "கார்க்கி! இந்தஅழியாப்பொருளினுடைய கட்டளையிலன்றே (ஸூர்யனும் சந்திரனும், மண்ணும் விண்ணும் நிலைபெற்றுநிற்கின்றன)" (பி - ங - அ - கூ) என்னும்சுருதியினுல் (அறிக). "ப்ரஹ்மமாகிய ஓம் என்கிற ஓரக்ஷத்தை" (அ - கங)என(ப்ரஹ்மமென்னும்)வருமொழியினுல் ஓங்காரத்தை விசேஷித்தலின், (அக்ஷரம் என்பதற்கு - இங்கே ஓங்காரம் என்று பொருள்)கொள்ளக்கூடாது. அன்றியும், "மேலானது" என்னும் விசேஷணமானது (ஓங்காரம்முதலிய) யாவற்றினும் மேம்பட்ட அழிவிலா ப்ரஹ்மத்தின்விஷயத்திலே நன்றுகப் பொருந்தியுள்ளது.

(உ) அந்த பரப்ரஹ்மமானது உடம்புதோறும் உள்ளேயுள்ள ஆத்மாவாயிருத்தலை அத்யாத்மம் என்கிறுர்கள். (அத்யாத்மம் - உடம்பிலிருப்பது. ஆத்மா - உடம்பு, சரீரம்.) சரீரத்தைப்பற்றி உள்ளேயுள்ள ஆத்மாவாகத் தலைப்பட்டு, முடிவிலே உண்மையான ப்ரஹ்மமாகவேயுள்ள பொருளானது 'அத்யாத்மம்* என்னும் சொல்லால் கூறப்படுகின்றது.

(ங) தியாகமென்பது - தேவதைகளைக் குறித்து சரு, புரோடாசம்முதலிய பொருள்களைக் கொடுத்தல். (அதுதான்) ஸ்தாவர ஜங்கமப் பொருள்களை உண்டாக்குவது. ஆகவே, இந்தத் தியாகமென்னும் யாகமானது கர்மமென்னும் பெயருடைத்து,

𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌹𑌿 𑌬𑍀𑌜𑌰𑍂𑌪𑌾𑌤𑍍 𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌉𑌦𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥ ௩ ॥

𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌜𑌾𑌤𑌮𑍍 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 । 𑌕𑍋𑌽𑌸𑍌? 𑌕𑍍𑌷𑌰𑌃 𑌕𑍍𑌷𑌰𑌤𑍀𑌤𑌿 𑌕𑍍𑌷𑌰𑌃 𑌵𑌿𑌨𑌾𑌶𑍀, 𑌭𑌾𑌵𑌃 𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌜𑌨𑌿𑌮𑌤𑍍 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 𑌅𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑌿, 𑌪𑍁𑌰𑌿 𑌶𑌯𑌨𑌾𑌤𑍍 𑌵𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌃, 𑌸𑌃 𑌅𑌧𑌿𑌦𑍈𑌵𑌤𑌮𑍍 । 𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿𑌨𑍀 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾, '𑌯𑌜𑍍𑌞𑍋 𑌵𑍈 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌸 𑌹𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌅𑌹𑌮𑍇𑌵, 𑌅𑌤𑍍𑌰 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍇𑌹𑍇 𑌯𑍋 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌃; 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌹𑌿 𑌦𑍇𑌹𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌦𑍇𑌹𑌸𑌮𑌵𑌾𑌯𑍀 𑌇𑌤𑌿 𑌦𑍇𑌹𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰 ॥ ௪ ॥

𑌅𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌰𑌣𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌸𑌃 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌯𑌾𑌤𑌿 । 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌅𑌤𑍍𑌰 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌰𑍍𑌥𑍇 𑌸𑌂𑌶𑌯𑌃, 𑌯𑌾𑌤𑌿 𑌵𑌾 𑌨 𑌵𑌾 𑌇𑌤𑌿 ॥ ௫ ॥

𑌨 𑌵𑌿𑌶𑍇𑌷𑍍𑌯 𑌮𑌮𑍈𑌵 𑌅𑌯𑌂 𑌨𑌿𑌯𑌮𑌃 । 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿?—

அதாவது கர்மமென்னும் சொல்லால் கூறப்படுவது. வித்தாயுள்ள இதிலிருந்தன்றோ ஸ்தாவர ஜங்கமப்பொருள்கள் மழைமுதலிய கிரமத்தால் உண்டாகின்றன. (௩ - ௧௪ ஐப் பார்க்க.) (௩)

(௪) **அதிபூதமென்பது** - பிராணிவர்க்கத்தைப் பற்றிநிற்பது.—அது யாது ?- அழியும் பொருள். (பொருள் -) பிறப்புற்ற எப்பொருளும் என்றபடி.

(௫) **புருஷன்** - எதையும் நிரம்ப வியாபித்திருப்பவன், அல்லது சரீரத்தில் தங்கியிருப்பவன் : ஸூர்யமண்டலத்திலுள்ள ஹிரண்யகர்பபன் : எல்லாப் பிராணிகளுடைய இந்திரியங்கட்கு அருள்புரிபவன் [அவ்விந்திரியங்களைச் செம்மையான நிலையிலே நிறுத்துபவன்]. அவன் - அதிதைவதம் என்க.

(௬) **அதியஜ்ஞ** மென்பது - " எல்லா யாகங்களையும் அபிமானிக்கின்ற விஷ்ணுவென்னும் தேவதை. (இதனை,) " யஜ்ஞமே விஷ்ணு " (தை - ஸம் - ௧ - ௭ - ௪) என்னும் சுருதியினால் (அறிக). அந்தவிஷ்ணுவே நான்தான். இச்சரீரத்தில் எந்த யாகம் (உள்ளதோ), அதற்கு நான் யஜ்ஞதேவதை. யாகமானது சரீரத்தால் செய்துமுடிக்கத்தக்கதாதலின், சரீரத்தோடு ஒற்றித்திருப்பதாம் ; ஆகவே சரீரத்தை இடமாகக்கொண்டது [அதிலே தங்கியிருப்பது என்றபடி]. (௪)

என்னையே - பரமேச்வரனான விஷ்ணுவையே. என் நிலையை - விஷ்ணுவினுடைய [எங்குமுள்ள பொருளினுடைய] உண்மை நிலையை. இவ்விஷயத்திலே, அடைவானோ அல்லது அடையமாட்டானோ என்னும் சந்தேகமில்லை. (௫)

பகவானை இடைவிடாது தியானித்தல் அவச்யம் வேண்டியது.

இவ்வொழுங்கானது என்னைப்பற்றியதுமாத்திர மன்று ; அங்ஙன மென்ன வெனில்—

௬. 𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌭𑌾𑌵𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 ॥

𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌯𑌂 𑌯𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌅𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌯𑍋𑌗𑌕𑌾𑌲𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 𑌭𑌾𑌵𑌮𑍇𑌵 𑌏𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌭𑌾𑌵𑌃 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌸 𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑌯𑌾 𑌅𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌃 𑌯𑍇𑌨 𑌸𑌃 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 𑌸𑌨𑍍 ॥ ௬ ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌾𑌵𑌨𑌾 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍—

௭. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌯𑍁𑌧𑍍𑌯 𑌚 ।
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 । 𑌯𑍁𑌧𑍍𑌯 𑌚 𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌕𑍁𑌰𑍁 । 𑌮𑌯𑌿 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌅𑌰𑍍𑌪𑌿𑌤𑍇 𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍀 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌸 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌨𑍍 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑌥𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍇𑌷𑍍𑌯𑌸𑌿 𑌆𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌅𑌸𑌂𑌶𑌯𑌃 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௭ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚

௮. 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 ।
𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ॥

V.B. SUBRAHMANYASARMA TAMIL PANDIT

---

௬. கௌந்தேய ! (ஒருவன் தனது வாழ்வின்) முடிவிலே எந்தெந்தப் பொருளை நினைந்து சரீரத்தை விடுகின்றானோ, அதனைப்பற்றிய பாவனையை எப்பொழுதும் பாவித்து[ஸம்பாதித்து]க் கொண்டவனாய் அதனையே அடைகிறான்.

பொருளை - (யாதாயினும் ஓர்) சிறப்புத்தெய்வத்தை. முடிவிலே - பிராணன் (உடம்பை விட்டுப்) பிரிந்துபோங்காலத்திலே. அதனையே அடைகிறான் - நினைத்த பொருளையேயன்றி வேறு (பொருளை) அடைவதில்லை. அதனைப்பற்றிய பாவனையை எப்பொழுதும் பாவித்துக்கொண்டவனாய் - (அந்தத் தெய்வவிஷயமான வாஸனையை இடைவிடாது) சிந்தித்துப் பயிற்சிசெய்துகொண்டவனாய். (௬)

கடைசியாயுள்ள எண்ணமானது அடுத்த சரீரத்தை அடைதற்கு இவ்வாறு காரணமாகின்றது [வரும்சரீரம் இன்னதென்பதை நிச்சயப்படுத்துகின்றது]:

௭. ஆதலின், நீ எக்காலங்களிலும் என்னைச் சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும் ; அன்றியும், போர்புரியவேண்டும். நீ என்னிடத்தே மனத்தையும் புத்தியையும் வைத்தவனாய் என்னையே அடைவாய். ஸம்சயமில்லை.

சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும் - சாஸ்திரப்படி (தியானஞ்செய்யவேண்டும்). போர்புரியவேண்டும் - ஸ்வதருமமாகிய யுத்தத்தையும் செய்யவேண்டும். என்னிடத்தே - வாஸுதேவனிடத்தே. என்னையே அடைவாய் - நீ தியானஞ்செய்தபிரகாரம் என்னையே வந்தடைவாய். இதில் சம்சயமில்லை. (௭)

பகவானைத் தியானஞ்செய்யவேண்டும்.

மேலும்,

௮. பார்த்த ! அப்யாஸமென்னும் யோகத்தைக் கூடி வேறொன்றிலும் செல்லாத மனத்தோடு திவ்யமான பரமபுருஷனை முறைப்படி தியானிப்பவன் (அப்பரமபுருஷனையே) அடைகிறான்.

अभ्यासयोगयुक्तेन — मयि चित्तसमाधानविषयसन्तते सजातीयप्रत्ययावृत्तिलक्षणः विलक्षणप्रत्ययानन्तरितः अभ्यासः, स चायं योगः तेन युक्तं तदेव ह्यभ्यस्तं योगिनश्चेतः, तेन चेतसा नान्यगामिना न ह्यन्यत् विषयान्तरं गन्तुं शीलं यस्येति नान्यगामि तेन नान्यगामिना परमं निरतिशयं पुरुषं दिव्यं दिवि सूर्यमण्डलस्थं याति गच्छति हे पार्थ अनुचिन्तयन् शास्त्राचार्योपदेशमनुध्यायन्नित्यर्थः ॥ ८ ॥

किंविशिष्टं च पुरुषं याति इति? उच्यते —

९. कविं पुराणमनुशासितारम्
अणोरणीयांसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिन्त्यरूपम्
आदित्यवर्णं तमसः परस्तात् ॥

कविं क्रान्तदर्शिनं सर्वज्ञं, पुराणं चिरन्तनम्, अनुशासितारं सर्वस्य जगतः प्रशासितारम्, अणोः सूक्ष्मादपि अणीयांसं सूक्ष्मतरम् अनुस्मरेत् अनुचिन्तयेत् यः कश्चित्, सर्वस्य कर्मफलजातस्य धातारं विधातारं विचित्रतया प्राणिभ्यो विभक्तारं विभज्य दातारम्, अचिन्त्यरूपं न कस्य रूपं विज्ञानेऽपि केनचित् चिन्तयितुं शक्यते इति अचिन्त्यरूपः, तम् आदित्यवर्णम् आदित्यस्येव

சித்தத்தை வைத்திருப்பதற்கு இடமாயுள்ள என்னைமாத்திரம்பற்றிய ஒரே எண்ணமானது, இடையே வேறுஎண்ணம் தோன்றப்பெறாது, அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக வருவதென்பது - அப்யாஸம். அதுதான் யோகமென்பது. யோகியினுடைய சித்தமானது அதையே மேற்கொண்டது. யாவற்றினும் மேலானவனும் ஸூர்யமண்டலத்திலுள்ள[அங்கு விசேஷமாக விளங்குகின்ற] புருஷனை, வேறு விஷயங்களிற் செல்லும் வழக்கமில்லாத அந்தமனத்தினால் சாஸ்திரம் ஆசார்யன் இவர்களுடைய உபதேசத்தின்படி தியானஞ்செய்கிறவன், பார்த்த ! (அப்புருஷனையே) அடைகிறான். (அ)

இனி, (அவன்) எத்தகைய புருஷனை அடைகிறான் என்பது ?—கூறுவோம் :

௯. **கவியாய்ப், பழம்பொருளாய், ஆளுபவனாய், அணுவைக்காட்டிலும் அணுவாய், ஸகலத்தையும் அமைப்பவனாய், நினைக்கமுடியாத இயல்பினனாய், ஸூர்யனைப் போன்ற ஒளியுள்ளவனாய், இருட்டிற்கு அப்பால் உள்ளவனை எவன் இடைவிடாது தியானிக்கின்றானோ, (அவன் அத்தகைய புருஷனை) அடைகிறான்.**

கவி - சென்றவை, வருபவை முதலியவற்றையெல்லாம் அறியுந்தன்மையன், முற்றுமுணர்ந்தவன். **ஆளுபவன்** - ஸகலஜகத்தையும் ஆளுபவன். **ஸகலத்தையும் அமைப்பவன்** - கர்மங்கள், (அவற்றின்)பயன்கள் என்பவற்றையெல்லாம் பிராணிகட்குப் பற்பலவிதமாக வகுத்துக் கொடுப்பவன். இவனுக்கு வடிவம் உள்ளதாயினும், (அது இப்படித்தான் என்று) ஒருவனாலும் நினைக்கவொண்ணாதது. (இவன்) **ஸூர்ய**

𑌨𑌿𑌤𑍍𑌯𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑌰𑍍𑌣𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌮𑍍 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍 𑌮𑍋𑌹𑌾𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 𑌪𑌰𑌂 𑌤𑌮𑍍 '𑌅𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 𑌯𑌾𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌣 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 ॥ ௯ ॥

𑌕𑌿𑌂 𑌚—

௧௦. 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌽𑌚𑌲𑍇𑌨
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 ।
𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍
𑌸 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌰𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾 𑌅𑌚𑌲𑍇𑌨 𑌚𑌲𑌨𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌭𑌜𑌨𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌤𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌬𑌲𑌂 𑌯𑍋𑌗𑌬𑌲𑌂 𑌸𑌮𑌾𑌧𑌿𑌜𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌚𑌯𑌜𑌨𑌿𑌤𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑍋𑌗𑌬𑌲𑌂, 𑌤𑍇𑌨 𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑍃𑌦𑌯𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑍇 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑌤𑌃 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌗𑌾𑌮𑌿𑌨𑍍𑌯𑌾 𑌨𑌾𑌡𑍍𑌯𑌾 𑌭𑍂𑌮𑌿𑌜𑌯𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌃 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑍍 𑌆𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍, 𑌸𑌃 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌯𑍋𑌗𑍀 '𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍍 𑌉𑌪𑍈𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑍍𑌯𑍋𑌤𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ॥ ௧௦ ॥

𑌯𑍋𑌗𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌨𑍁𑌗𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑌹𑍇𑌣𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌇𑌦𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍇𑌨

னுடைய ஒளிபோன்றுள்ள நித்யஅறிவுஒளியையுடையவன் : அறியாமை என்னும் மயக்கஇருட்டைக் கடந்துநிற்பவன். எவனொருவன் அவனை இடைவிடாது தியானிக்கின்றானோ, (அவன் அவனை) "சிந்திக்கின்றவனாய் (அப்புருஷனை) அடைகிறான்" (௮ - ௮) என முந்தின(சுலோகத்)தோடு கூட்டுக. (௯)

மேலும்,

௧௦. **சஞ்சலமற்ற மனத்தோடும், பக்தியோடும், யோகவலிமையோடும் கூடிய அவன், சாகுங்காலத்திலே பிராணனை இருபுருவங்கட்குமிடையே செவ்வையாக நிறுத்தி அந்தத் திவ்வியமான பரமபுருஷனை அடைகிறான்.**

யோகத்தின் வலிமையென்பது - சித்தம் அலையாது நிற்றல் ; (அது) ஸமாதியினாலாகும் பயிற்சியினாலுண்டாவது. முதலில் ஹிருதயபத்மத்திலே சித்தத்தை வசப்படுத்தி, பின்பு, மேலேசெல்லும் (ஸுஷும்நை என்னும்) நாடியினால், நிலத்தை (யும் மற்றை நான்கு பூதங்களையும்) படிப்படியாக வென்று, பிராணனை இருபுருவங்கட்குமிடையே ஸாவதானனாய் நிறுத்தி, இவ்வாறு அந்த ஞானியாகிய யோகியானவன் "கவியாய், பழம்பொருளாய்" (௮ - ௯) என்பன முதலிய லக்ஷணத்தையும் ஒளிவடிவத்தையும் உடைய அந்தப் பரமபுருஷனைச் சேர்கிறான். (௧௦)

ப்ரணவத்தால் பகவானைத் தியானித்தல்.

யோகமார்க்கத்தைப் பின்பற்றுதலாலேயே—ப்ரஹ்மவித்யை இல்லாமலுங்கூட—ப்ரஹ்மமானது அடையப்படுகின்றது என இவ்வாறாக அமைந்தவளவிலே, இதனைக் கூறுவோம் : (இங்கு இது உணரத்தக்கது :—மோக்ஷத்தைத் தருவது ப்ரஹ்ம

உபாயேந ச ப்ரதிபித்ஸிதஸ்ய ப்ரஹ்மணோ வேதவிதநாதிவிஶேஷணவிஶேஷ்யஸ்ய அபிதாநம் கரோதி பகவாந்—

கக. யதக்ஷரம் வேதவிதோ வதந்தி
விஶந்தி யத்யதயோ வீதராகா: ।
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே ॥

வித்யையேயன்றி யோக மன்று. 223,224 - ஆம் பக்கங்களிலுள்ள குறிப்பைப் பார்க்க. ப்ரஹ்மவித்யை யென்பது - ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்று என்பதை அநுபவத்தால் காண்பது ; இது, ' தத் த்வமஸி ' முதலிய வேதாந்த மஹாவாக்கியங்களால் உண்டாவது. ப்ரஹ்மவித்யை, ப்ரஹ்மஞானம், ஸம்யக்தர்சநம், ஸம்யக்ஞானம், ப்ரஹ்மாத்மைக்ய ஸாக்ஷாத்காரம், பரமார்த்தஞானம், பரமார்த்ததர்சநம என்பன - ஒருபொருட்சொற்கள் இனி, ஸமாதியானது லயபூர்வக ஸமாதி, பாத[வாய]பூர்வக ஸமாதியென இருவகைத்து. லயம் - ஒடுங்குதல். பாத[வாய]ம் - அழிதல். அவற்றுள், முந்தினது - ஆகாசத்தினுள் காற்றும், காற்றினுள் நெருப்பும், நெருப்பினுள் நீரும், நீரினுள் நிலமுமாக இவ்வாறு அந்தந்தக் காரணத்துள் அந்தந்தக் காரியம் ஒடுங்கிநிற்றலோடு கூடிய ஸமாதி. பிந்தினது - அஜ்ஞானமும் அதன்காரியமும் அழிதலோடு கூடிய ஸமாதி. இவ்விரண்டனுள், யோகநூலார் கொண்டது - லயபூர்வக ஸமாதியாம்; வேதாந்த நூலார் கொண்டது - பாத[வாய]பூர்வக ஸமாதியாம். லயபூர்வக ஸமாதியிலே ' தத் த்வமஸி ' முதலான வேதாந்தமஹாவாக்கியங்களுடைய அர்த்தஞானம் [ப்ரஹ்மவித்யை] இல்லாமையால், காரணகாரியமிரண்டும்[அஜ்ஞானமும் அதன்காரியமும்] அழியவில்லை. ஸுஷுப்தியில்போல அவை ஒடுங்கிநிற்றலால், யோகசாஸ்திரங்கூறுகின்ற லயபூர்வக ஸமாதியானது மீண்டும் பிறவியை விளைக்குமென்க. மற்று, வேதாந்தசாஸ்திரங்கூறுகின்ற பாத[வாய]பூர்வக ஸமாதியோ அப்படியன்று. ' தத் த்வமஸி ' முதலான வேதாந்தமஹாவாக்கியங்களா லுண்டாகும் ப்ரஹ்மாத்மைக்ய ஸாக்ஷாத்காரமாகிய ஞாநாக்நியினால் அஜ்ஞானமும் அதன்காரியமுமாகிய காரணகாரிய மிரண்டும் மறுபடியும் முளையாதபடி எரிக்கப்பட்டமையால், பாத[வாய]பூர்வக ஸமாதியானது மீண்டும் பிறவியைக் கொடுக்க இயலாது. இனி, " யோகமார்க்கத்திற் புகுந்த மத்யமாதிகாரியும், ஸாங்க்யமார்க்கத்திற் புகுந்த உத்தமாதிகாரியுமாகிய இருவரும் முறையே தியானயோகத்தின் முதிர்ச்சியினாலும், நிதித்யாஸநத்தின் முதிர்ச்சியினாலும் வேதாந்த மகாவாக்கியங்களினால்தான் மோக்ஷத்தை அடைகிறார்கள் என்பது - உபநிஷத்துக்களின் ரஹஸ்யம் " என்பதை நுட்பமாக ஆராய்ந்துகொள்க.)

மீண்டும் (அ - கரு) கூறப்படுகின்ற (ப்ரணவமாகிய) உபாயத்தினால் (யோகியானவன்) அடையக்கருதியதாய், வேதத்தை அறிந்தவர்கள் கூறுதல் [வேதத்தை அறிந்தவர்களால் " அழியாததாகச் சொல்லப்படுகின்ற " என்பது] முதலானவிசேஷணங்கட்கு விசேஷ்யமாயுள்ள ப்ரஹ்மத்திற்குப் பகவான் பெயரிடுகிறார் :

கக. வேதத்தை அறிந்தவர்கள் எதனை அழியாததாகக் கூறுகிறார்களோ, யதிகள் ஆசைநீங்கியவர்களாய் எதனைப் புகுகின்றார்களோ, எதனை (அறிய) விரும்புகிறவர்கள் ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்கிறார்களோ, அந்த நிலையை (யான்) உனக்குச் சுருக்கமாய்க் கூறுவேன்.

𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌨 𑌕𑍍𑌷𑌰𑌤𑍀𑌤𑌿 𑌅𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌃 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌃 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿, '𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌗𑌾𑌰𑍍𑌗𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾 𑌅𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌶𑍇𑌷𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌅𑌭𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 '𑌅𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑌨𑌣𑍁' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 । 𑌕𑌿𑌞𑍍𑌚— 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌸𑌤𑍍𑌯𑌾𑌂 𑌯𑌤𑍍 𑌯𑌤𑌯𑌃 𑌯𑌤𑌨𑌶𑍀𑌲𑌾𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌾𑌃 𑌵𑍀𑌤𑌃 𑌰𑌾𑌗𑌃 𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌤𑍇 𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌾𑌃 । 𑌯𑌚𑍍𑌚 𑌅𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌃—'𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍇𑌷𑌃—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌗𑍁𑌰𑍌 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌆𑌚𑌰𑌨𑍍𑌤𑌿, 𑌤𑌤𑍍 𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌖𑍍𑌯𑌂 𑌪𑌦𑌂 𑌪𑌦𑌨𑍀𑌯𑌂 𑌤𑍇 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 𑌤𑍇𑌨 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ॥ ௧௧ ॥

'𑌸 𑌯𑍋 𑌹 𑌵𑍈 𑌤𑌦𑍍𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌨𑍍𑌤𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤 𑌕𑌤𑌮𑌂 𑌵𑌾𑌵 𑌸 𑌤𑍇𑌨 𑌲𑍋𑌕𑌂 𑌜𑌯𑌤𑍀𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌸 𑌹𑍋𑌵𑌾𑌚 । 𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮 𑌪𑌰𑌂 𑌚𑌾𑌪𑌰𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌦𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌃' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 '𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑍇𑌣 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤...𑌸 𑌸𑌾𑌮𑌭𑌿𑌰𑍁𑌨𑍍𑌨𑍀𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌵𑌚𑌨𑍇𑌨, '𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 '𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿

வேதத்தின் பொருளை அறிந்தவர்கள் அக்ஷரத்தை [அழியாப்பொருளை] 'புத்தி முதலியவற்றால் உணரத்தக்க எத்தகைய சிறப்புத்தன்மையும் இல்லாததாகக் கூறுகிறார்கள். (இதனை,) "கார்க்கி! (நீ அறியவேண்டியது எதுவோ,) அந்த அக்ஷரம் இதுதான்; ப்ரஹ்மத்தை அறிந்தவர்கள் '(அது) ஸ்தூலமன்று, ஸூக்ஷ்மமன்று' என்பது முதலியவற்றைக் கூறுகிறார்கள்" (பி ௩ - ௮ - ௮) என்னும்சுருதியினால்(அறிக). அன்றியும், ஆசைநீங்கியவராய் முயலுந்தன்மையரான துறவிகள் மெய்யறிவு கைவந்தவுடன் (அழியாப் பொருளைப்) புகுகிறார்கள் [அப்பொருளாக இருக்கிறார்கள்]. மேலும், அக்ஷரத்தை அறிய விரும்புகிறவர்கள் ஆசார்யனிடத்து ப்ரஹ்மசர்யத்தை [குருகுலவாஸம் முதலியவற்றை] அநுஷ்டிக்கிறார்கள்; "அறிய" என்பது - (இவ்) வாக்கியத்தில் தொக்கி நிற்கின்றது. நீ அடையவேண்டிய அந்த அக்ஷரமென்னும் பெயருடைய நிலையைச் சுருக்கமாய்ச் சொல்வேன். (௧௧)

"பகவானே! மனிதரில் (அதிகாரியானவன்) எவனோ, அவன் சாகுங்காலம் வரையிலும் ஓங்காரத்தைத் தியானஞ் செய்கிறான்; அவன் அதனால் எந்த லோகத்தை அடைகிறான் என்பது?—அவர் [பிப்பலாதர்] அவனுக்கு [ஸத்யகாமனுக்கு]ச் சொல்லுகிறார்: ஸத்யகாம! ஸகுணமும் நிர்க்குணமுமான இந்த ப்ரஹ்மமானது ஓங்காரந்தான்" (ப்ர - ௫ - ௧, ௨) என்று தொடங்கி, "மூன்றுமாத்திரைகளையுடைய[அ, உ, ம் என்னும் மூன்றெழுத்துக்களாலாகிய] இந்த ஓங்காரமென்னும் அக்ஷரத்தினாலேயே எவன் இப்பரமபுருஷனைத் தியானஞ்செய்கின்றானோ...அவன் ஸாமக[[illegible]]ானங்களால் மேலே ப்ரஹ்மலோகத்திற்குக் கொண்டுபோகப்படுகிறான்" (ப்ர - ௫ - ௫) என்பது முதலாகவுள்ள வசனத்தினாலும், "தருமத்தைத் தவிரவும், அதர்மத்தைத் தவிரவும் (நீ எதனைக் காண்கிறாயோ, அதனை எனக்குச் சொல்லு)" (கட - ௨ - ௧௪) என்று தொடங்கி, "வேதங்களெல்லாம் எந்த நிலையைக் கூறுகின்றனவோ, தவங்களெல்லாம்

𑌤𑌪𑌾𑌂𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌯𑌦𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 । 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌦𑌂 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌣 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑍍𑌯𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 ॥’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌚 𑌵𑍇𑌦𑍈𑌃 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌾𑌚𑌕𑌰𑍂𑌪𑍇𑌣, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌾, 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑌨𑍍𑌦𑌮𑌧𑍍𑌯𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑍍𑌯 𑌓𑌂𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍, 𑌤𑌦𑍇𑌵 𑌇𑌹𑌾𑌪𑌿 ‘𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑍍’ ‘𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿’ 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌪𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌓𑌂𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌫𑌲𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌂 𑌯𑍋𑌗𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑌹𑌿𑌤𑌂 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌃 𑌉𑌤𑍍𑌤𑌰𑍋 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇—

௧௨. 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌹𑍃𑌦𑌿 𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯 𑌚 ।
𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌾𑌧𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌯𑍋𑌗𑌧𑌾𑌰𑌣𑌾𑌮𑍍 ॥

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵 𑌚 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍—

௧௩. 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌦𑍇𑌹𑌂 𑌸 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌤𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑍌, 𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 **𑌸𑌂𑌯𑌮𑍍𑌯** 𑌸𑌂𑌯𑌮𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 **𑌮𑌨𑌃 𑌹𑍃𑌦𑌿** 𑌹𑍃𑌦𑌯𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑍇

எதனைச் சொல்லுகின்றனவோ, எதனை விரும்புகிறவர்கள் ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்கிறார்களோ, அந்த நிலையை உனக்குச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் : ‘இது, ஓம் என்பதுதான்’ ” (கட - ௨ - ௧௪) என்பது முதலாகவுள்ள வசநங்களாலும் (ப்ரணவஉபாஸநமானது கூறப்பட்டுள்ளது). ப்ரஹ்மத்தை உணர்த்தும் சொல்லாகவாவது, விக்கிரகம்போல அறிகுறியாகவாவது (கொள்ளப்பட்ட) ஓங்காரமானது மந்தமான புத்தியையும் நடுத்தரமான புத்தியையும் உடையவர்கள் பரப்ரஹ்மத்தை அறிதற்கு ஸாதநமாகக் கருதப்பட்டிருக்கின்றது. (எந்த ஓங்காரத்தினுடைய) அந்தத் தியானமானது பிற்காலத்திலே முக்தியைக் கொடுப்பதாகக் கூறப்பட்டதோ, அதேதான் இங்கும் [இவ்வத்தியாயத்திலும்] (கூறப்படுவது). “கவியாய்” (அ - ௯) எனவும், “வேதத்தை அறிந்தவர்கள்” (அ - ௧௧) எனவும் எடுத்துக்கூறப்பட்ட பரப்ரஹ்மத்தை அறிதற்குக் கீழ்க் கூறியபடி ஸாதநமாயுள்ள ஓங்காரத்தின் உபாஸநமானது (அதாவது) பிற்காலத்தில் முக்தியைக் கொடுப்பதாய் யோகத்திலே (சித்தம்) உறுதியாக நிற்றலோடு கூடிய தியானமானது உபதேசிக்கவேண்டியது. முக்கியமான (ஓங்காரத்தியானத்)தை ஒட்டிவந்த மற்றுஞ் (சில விஷயங்களும் உபதேசிக்கத்தக்கன). என இவ்வாறான விஷயங்களையுடையதாய் மேல்வரும் நூலானது தொடங்கப்படுகின்றது :

௧௨. எல்லா வழிகளையும் அடைத்து, மனத்தை ஹிருதயத்தினுள் தடுத்து ஒடுக்கி, தனது பிராணனைத் தலையிலே நிறுத்தி, யோகதாரணையிற் புகுந்தவனாய்,

அங்கேயே [தலையிலேயே] (பிராணனை வைத்து) நிறுத்துபவனாய்,

௧௩. ப்ரஹ்மமாகிய ஓம் என்ற ஓரக்ஷரத்தை உச்சரிப்பவனாய், என்னை இடைவிடாது நினைப்பவனாய் எவன் சரீரத்தை விட்டுப் போகின்றானோ, அவன் உயர்ந்த நிலையைப் பெறுகிறான்.

உணர்ச்சிக்கு வழிகளாயுள்ள எல்லா (இந்திரியங்களையும், அடக்கி) மனத்தை

நிருத்ய நிரோதம் க்ருத்வா ஹ்ருதயபுண்டரீகே வசீக்ருத்ய, தத்ர வசீக்ருதேந மநஸா ஹ்ருதயாத் ஊர்த்வகாமிந்யா நாட்யா ஊர்த்வம் ஆருஹ்ய மூர்த்நி ஆதாய ஆத்மந: ப்ராணம் ஆஸ்தித: ப்ரவ்ருத்த: யோகதாரணாம் தாரயிதும் ॥ ௧௨ ॥

ஓம் இதி ஏகாக்ஷரம் ப்ரஹ்ம ப்ரஹ்மண: அபிதாநபூதம் ஓங்காரம் வ்யாஹரந் உச்சாரயந், ததர்த்தபூதம் மாம் ஈச்வரம் அநுஸ்மரந் அநுசிந்தயந் ய: ப்ரயாதி ம்ரியதே ஸ: த்யஜந் பரித்யஜந் தேஹம் சரீரம்—'த்யஜந்தேஹம்' இதி ப்ரயாணவிசேஷணார்த்தம், தேஹத்யாகேந ப்ரயாணம் ஆத்மந: ந ஸ்வரூபநாசேநேத்யர்த்த:—ஸ: ஏவம் த்யஜந் யாதி கச்சதி பரமாம் ப்ரக்ருஷ்டாம் கதிம் ॥

கிஞ்ச—

௧௪. அநந்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச: ।
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்யயுக்தஸ்ய யோகிந: ॥

அநந்யசேதா: ந அந்யவிஷயே சேத: யஸ்ய ஸ: அயம் அநந்யசேதா: யோகீ ஸததம் ஸர்வதா ய: மாம் பரமேச்வரம் ஸ்மரதி நித்யச: । 'ஸததம்' இதி நைரந்தர்யம் உச்யதே, 'நித்யச:' இதி தீர்க்ககாலத்வம் உச்யதே । ந ஷண்மாஸம் ஸம்வத்ஸரம் வா—கிம் தர்ஹி?—யாவஜ்ஜீவம் நைரந்தர்யேண ய: மாம் ஸ்மரதீத்யர்த்த: ।

ஹ்ருதயபத்மத்தில் ஒடுக்கி=அலையாது நிற்கச்செய்து, அங்கு (இவ்வாறு) வசப்படுத்தப்பட்ட மனத்தோடு, ஹ்ருதயத்திற்கு மேலேசெல்லும் (ஸுஷும்னை என்னும்) நாடியினால் (ஹ்ருதயத்திற்கு) மேலே ஏறி, பிராணவாயுவைத் தலையிலே நிறுத்தி, யோகதாரணையை நிலைபெறச்செய்யத் தலைப்பட்டவனாய், (௧௨)

ப்ரஹ்மத்தின் பெயராகிய ஓங்கார மென்னும் ஓர் அக்ஷரத்தை உச்சரிப்பவனாய், அ(ந்த ஓங்காரத்)தின் பொருளாகிய ஈச்வரனான என்னை(யும்) இடைவிடாது தியானிப்பவனாய் எவன் சரீரத்தை விட்டு இறந்துபோகின்றானோ, அவன் இவ்வாறு (சரீரத்தை) விடுபவனாய் மேலான கதியை அடைகிறான். (தாரணை - மனத்தை ஒன்றிலேநிலையாக நிறுத்துதல். அக்ஷரம் - அசை). "சரீரத்தை விட்டு" என்பது - போகுதலை விசேஷித்தற்காக [போகும்விதத்தைக் காட்டுதற்காக](க் கூறப்பட்டது). போகுதலென்பது சரீரத்தை விடுவதனால் (அமைவதே)யன்றி ஆத்மஸ்வரூபம் அழிதலாலன்று என்பது பொருள் என்க. (௧௩)

பகவானை அடைந்தவர்கட்கு மீண்டும் பிறவி இல்லை.

மேலும்,

௧௪. பார்த்த! எவன் வேறொன்றிலே மனமில்லாதவனாய் என்னை எப்பொழுதும் நீடித்து நினைக்கின்றானோ, அந்த எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதாய் அடையத்தக்கவன்.

வேறுவிஷயத்திலே மனமில்லாத எந்த யோகியானவன் பரமேச்வரனான என்னை எப்பொழுதும் நீடித்துநினைக்கின்றானோ,—"எப்பொழுதும்" எனவே, இடையறாமையானது உணர்த்தப்படுகின்றது. "நீடித்து" எனவே, நெடுங்காலமானது உணர்த்தப்படுகின்றது; ஆறுமாதமாவது, ஒருவருஷமாவது அன்று. மற்று என்னவெனில், எவன் என்னைத் (தனது) உயிர்வாழ்க்கைமுழுதும் இடைவிடாது நினைக்

तस्य नित्ययुक्तस्य योगिनः सुलभः सुखेन लभ्यः हे पार्थ नित्यसमाहितचित्तस्य योगिनः । यतः एवम्, अतः अनन्यचेताः सन् मयि सदा समाहितः भवेत् ॥ १४ ॥

तव सौलभ्येन किं स्यात् इति ? उच्यते ; शृणु तत् यत् मम सौलभ्येन भवति—

१५. मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥

माम् उपेत्य माम् ईश्वरम् उपेत्य मद्भावम् आप्य पुनर्जन्म पुनरुत्पत्तिं नाप्नुवन्ति न प्राप्नुवन्ति । किंविशिष्टं पुनर्जन्म न प्राप्नुवन्ति इति ? तद्विशेषणमाह—दुःखालयं दुःखानाम् आध्यात्मिकादीनाम् आलयम् आश्रयम्, आलीयन्ते यस्मिन् दुःखानि इति दुःखालयं जन्म । न केवलं दुःखालयम्, अशाश्वतम् अनवस्थितस्वरूपं च । नाप्नुवन्ति ईदृशं पुनर्जन्म महात्मानः यतयः संसिद्धिं मोक्षाख्यां परमां प्रकृष्टां गताः प्राप्ताः । ये पुनः मां न प्राप्नुवन्ति ते पुनः आवर्तन्ते ॥ १५ ॥

किं पुनः त्वत्तः अन्ये प्राप्ताः पुनः आवर्तन्ते इति ? उच्यते—

இன்றுமே என்றபடி ; அந்த எப்பொழுதும் மனம்ஒருநிலைபபட்ட யோகிக்கு நான் எளிதாய் அடையத்தக்கவன். இங்ஙனமாகவே, (ஒருவன்) வேறொன்றிலே மனமில்லாதவனாய் என்னிடத்து எப்பொழுதும் ஒருநிலைப்பட்டிருக்கவேண்டுமென்க. (கச)

உங்களுடைய எளிதாய் அடையக்கூடிய தன்மையினால் ["நீங்கள் பக்தர்களுக்கு எளிதாய் அடையத்தக்கவர்" என்பதனால்] ஆவதென்ன என்பது ?—கூறுவோம் : என்னுடைய எளிதாய் அடையக்கூடிய தன்மையினால் எது ஆகின்றதோ, அதனைக் கேள் :

கரு. (உபாஸகர்கள்) என்னை அடைந்தபின்பு, துன்பங்கட்கு இடமாயும் நிலையற்றதாயுமுள்ள மறுபிறப்பை அடைவதில்லை ; (ஏனெனில், அவர்கள்) மஹாத்மாக்களாய் மேலான மோக்ஷத்தை அடைந்துவிட்டார்கள்.

(அவர்கள்) ஈச்வரனை என்னை அடைந்து என் நிலையைப் பெற்றபின்பு, மறுபிறப்பைப் பெறுவதில்லை எப்படிப்பட்ட மறுபிறப்பைப் பெறுவதில்லை என்பது ?—அதன் விசேஷணத்தைக் கூறுகிறார் : பிறப்பென்பது - ஆத்யாத்மிகம் முதலிய துன்பங்கட்குத் தங்குமிடம் ; துன்பங்கட்குத் தங்குமிடமாத்திரமன்று, நிலையில்லாத் தன்மையதுமாம். மஹாத்மாக்களான யதிகள் மோக்ஷமென்னும் மேலான ஸித்தியைப் பெற்றவராய் இப்படிப்பட்ட மறுபிறபபை அடைவதில்லை. ஆனால், எவர்கள் என்னை அடைவதில்லையோ, அவர்கள் மீண்டும் திரும்பிவருகிறார்கள் [மறுபடியும் பிறக்கிறார்கள்]. (மஹாத்மாக்கள் - ரஜஸ் தமோகுணங்கள் நீங்கிச் சுத்தமாய்த் தெளிந்துள்ள ஸத்துவ குணத்தைமாத்திரமுடையவர்கள். "என்னை அடைந்தபின்பு......மோக்ஷத்தை அடைந்துவிட்டார்கள்" எனவே, ஸகுணப்ரஹ்மஉபாஸகர்கட்குக் கிரமமுக்தியானது [காலக்கிரமத்தால், காலதாமதத்தால் மோக்ஷமானது] காட்டப்பட்டது.) (கரு)

ஆனால், உங்களைக்காட்டிலும் வேறொன்றை அடைந்தவர்கள் மீண்டும் திரும்பி

கசு. 𑌆𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍁𑌵𑌨𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

அர்ஜுநம் பீதம் உபலப்ய, உபஸம்ஹ்ருத்ய விஶ்வரூபம், ப்ரியவசநேந ஆஶ்வாஸயந் ஶ்ரீபகவாந் உவாச—

ஶ்ரீபகவாநுவாச ॥

௪௭. மயா ப்ரஸந்நேந தவார்ஜுநேதம்
ரூபம் பரம் தர்ஶிதமாத்மயோகாத் ।
தேஜோமயம் விஶ்வமநந்தமாத்யம்
யந்மே த்வதந்யேந ந த்ருஷ்டபூர்வம் ॥

மயா ப்ரஸந்நேந, ப்ரஸாதோ நாம த்வயி அநுக்ரஹபுத்தி:, தத்வதா ப்ரஸந்நேந மயா தவ ஹே அர்ஜுந இதம் பரம் ரூபம் விஶ்வரூபம் தர்ஶிதம் ஆத்மயோகாத் ஆத்மந: ஐஶ்வர்யஸ்ய ஸாமர்த்யாத் தேஜோமயம் தேஜோராஶிமயம் விஶ்வம் ஸமஸ்தம் அநந்தம் அந்தரஹிதம் ஆதௌ பவம் ஆத்யம் யத் ரூபம் மே மம த்வதந்யேந த்வத்த: அந்யேந கேநசித் ந த்ருஷ்டபூர்வம் ॥ ௪௭ ॥

மம ரூபதர்ஶநேந க்ருதார்த்த ஏவ த்வம் ஸம்வ்ருத்த: இதி தத் ஸ்தௌதி—

௪௮. ந வேதயஜ்ஞாத்யயநைர்ந தாநை:
ந ச க்ரியாபிர்ந தபோபிருக்ரை: ।
ஏவம்ரூப: ஶக்ய அஹம் ந்ருலோகே
த்ரஷ்டும் த்வதந்யேந குருப்ரவீர ॥

பகவான் வஸுதேவபுத்திரவடிவத்தைக் கைக்கொள்ளுதல்.

ஸ்ரீபகவான் அர்ஜுனன் அஞ்சியதைக் கண்டு, விச்வரூபத்தை நிறுத்திவிட்டு இனிய வார்த்தையினால் (அவனைத்) தேற்றுகிறவராய் அருளிச்செய்யலானார் :

௪௭. அர்ஜுந ! ப்ரஸந்நமாகவுள்ள என்னாலே, இந்த மேலான வடிவமானது உனக்கு எனது யோகத்தால் காட்டப்பட்டது. ஒளிமயமாய், எல்லாமாய், எல்லையில்லாததாய், முதலிலுள்ளதாய் என்னுடைய எந்த (வடிவம் உள்ளதோ, அது உன்னைக் காட்டிலும் வேறொருவனாலும் முன் பார்க்கப்பட்டதில்லை.

ப்ரஸாதமென்பது - உன்மீது அநுக்கிரகபுத்தி [உன்னை ஈடேற்றவேண்டும் என்னும் கருத்து]. அதனையுடையவன் - ப்ரஸந்நமாகவுள்ளவன். இந்த மேலானவடிவமானது - விச்வரூபமானது. யோகத்தால் - ஆளுந்தன்மையின் வலிமையினால். (௪௭)

" என்னுடைய (விச்வ)ரூபக்காட்சியினாலே நீ பேறுபெற்றவனாகவே ஆகிவிட்டாய்" என்று அதனை [அக்காட்சியை]ப் புகழ்கின்றார் :

௪௮. கௌரவரில் சிறந்த வீரனே ! மநுஷ்யஉலகிலே உன்னைக்காட்டிலும் வேறொருவன் இத்தகைய வடிவமுள்ள என்னை, வேதங்கள் யஜ்ஞங்கள் இவற்றைப் படித்தலால் பார்க்கமுடியாது ; தானங்களால் முடியாது ; கர்மங்களாலும் முடியாது ; கடுமையான தவங்களாலும் முடியாது.

𑌨 𑌵𑍇𑌦𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌮𑌪𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌃 𑌯𑌥𑌾𑌵𑌚𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌶𑍍𑌚—𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍇𑌨𑍈𑌵 𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌸𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌮𑍍—𑌤𑌥𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍈𑌃 𑌤𑍁𑌲𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌦𑌿𑌭𑌿𑌃, 𑌨 𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌃 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃, 𑌨 𑌅𑌪𑌿 𑌤𑌪𑍋𑌭𑌿𑌃 𑌉𑌗𑍍𑌰𑍈𑌃 𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌘𑍋𑌰𑍈𑌃, 𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌃 𑌯𑌥𑌾 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌅𑌹𑌂 𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌃 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌃 𑌅𑌹𑌂 𑌨𑍃𑌲𑍋𑌕𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑍇𑌨 𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑍇𑌨 𑌕𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌵𑍀𑌰 ॥ ௪௮ ॥

௪௯. 𑌮𑌾 𑌤𑍇 𑌵𑍍𑌯𑌥𑌾 𑌮𑌾 𑌚 𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑍋
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌂 𑌘𑍋𑌰𑌮𑍀𑌦𑍃𑌙𑍍𑌮𑌮𑍇𑌦𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌭𑍀𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾𑌃 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂
𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯 ॥

𑌮𑌾 𑌤𑍇 𑌵𑍍𑌯𑌥𑌾 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍 𑌤𑍇 𑌭𑌯𑌂, 𑌮𑌾 𑌚 𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑌃 𑌵𑌿𑌮𑍂𑌢𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑌾, 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯 𑌰𑍂𑌪𑌂 𑌘𑍋𑌰𑌮𑍍 𑌈𑌦𑍃𑌕𑍍 𑌯𑌥𑌾𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌮𑌮 𑌇𑌦𑌮𑍍 । 𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌭𑍀𑌃 𑌵𑌿𑌗𑌤𑌭𑌯𑌃, 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾𑌃 𑌚 𑌸𑌨𑍍 𑌪𑍁𑌨𑌃 𑌭𑍂𑌯𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌂 𑌤𑌵 𑌇𑌷𑍍𑌟𑌂 𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯 ॥

𑌸𑌞𑍍𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥

௫௦. 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌜𑍁𑌨𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾
𑌸𑍍𑌵𑌕𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌭𑍂𑌯𑌃 ।

வேதங்கள் - நான்கு. படித்தல் - நியமமாக ஓதுதல்.—வேதங்களைப் படிப்பதனாலேயே யஜ்ஞங்களைப் படிப்பது(ம் தானே) அமைந்ததாதலின், யஜ்ஞங்களைப் படித்தல் என வேறாக எடுத்துக்கூறுதல் - யஜ்ஞங்களுடைய அறிவை உணர்த்துதற்காக என்க. ("வேதத்தைப் படித்தலென்பது - அர்த்தஞானமின்றி அதனை வாய்ப்பாடமாகச் சொல்லுதல்" என்பது - சிலர்கொள்கை. ஆகவே, அர்த்தஞானம் அவச்யமென்று விதித்தற்காக அவ்வாறு கூறவேண்டியதாயிற்று.—ஆ.). தானங்களால் - துலாதானம் [ஒருவன் தனது நிறைக்குச் சரியான தங்கத்தைப் பிராமணனுக்குத் தானங்கொடுத்தல்] முதலியவற்றால். கர்மங்களால் - சுருதிமுதலியவற்றில் விதித்த அக்நிஹோத்ரம் முதலியவற்றால். தவங்களால் - சாந்திராயணம் முதலியவற்றால். இத்தகைய வடிவத்தை - கீழ்க்காட்டிய விச்வரூபத்தை. (௪௮)

௪௯. என்னுடைய இத்தகைய இக்கோரவடிவத்தைப் பார்த்து, உனக்குப் பயம் உண்டாகாமலிருக்கட்டும் ; மயங்கிய தன்மையும் உண்டாகாமலிருக்கட்டும். நீ பயம் நீங்கியவனாய், மனம்மகிழ்ந்தவனாய் மீண்டும் என்னுடைய இந்த அதேவடிவத்தை நன்றாகப் பார்.

இத்தகைய - கீழ்க்காட்டிய. அதே வடிவத்தை - நான்கு கைகளையுடையதாய், சங்கு சக்கிரம் கதை இவற்றை ஏந்தியதாய், உனக்குப் பிரியமாயுள்ள வடிவை. (௪௯)

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

௫௦. வாஸுதேவன் இவ்வாறு அர்ஜுனனுக்கு அத்தகைய (வார்த்தையைக்) கூறி, மீண்டும் தனது வடிவைக் காண்பித்தார். அன்றியும், மஹாத்மாவானவர், நடுங்கி

ஆச்வாஸயாமாஸ ச பீதமேநம்
பூத்வா புந: ஸௌம்யவபுர்மஹாத்மா ||

இதி வாஸுதேவ: அர்ஜுநம் யதோக்தம் வசநம் உக்த்வா, ஸ்வகம் வஸுதேவஸ்ய க்ருஹே ஜாதம் ரூபம் தர்சயாமாஸ தர்சிதவாந் பூய: புந: | ஆச்வாஸயாமாஸ ச ஆச்வாஸிதவாந் பீதம் ஏநம், பூத்வா புந: ஸௌம்யவபு: ப்ரஸந்நதேஹ: மஹாத்மா || ௫0 ||

அர்ஜுந உவாச ||

௫௧. த்ருஷ்ட்வேதம் மாநுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜநார்த்தந |
இதாநீமஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிம் கத: ||

த்ருஷ்ட்வா இதம் மாநுஷம் ரூபம் மத்ஸகம் தவ ஸௌம்யம் ஜநார்த்தந இதாநீம் அதுநா அஸ்மி ஸம்வ்ருத்த: ஸஞ்ஜாத:—கிம்?—ஸசேதா: ப்ரஸந்நசித்த: ப்ரக்ருதிம் ஸ்வாபாவ்யம் கத: ச அஸ்மி || ௫௧ ||

ஸ்ரீபகவாநுவாச ||

௫௨. ஸுதுர்தர்சமிதம் ரூபம் த்ருஷ்டவாநஸி யந்மம |
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சநகாங்க்ஷிண: ||

ஸுதுர்தர்சம் ஸுஷ்டு து:கேந தர்சநம் அஸ்ய இதி ஸுதுர்தர்சம் இதம் ரூபம் த்ருஷ்டவாந் அஸி யத் மம, தேவா: அபி அஸ்ய மம ரூபஸ்ய நித்யம் ஸர்வதா தர்சநகாங்க்ஷிண: ; தர்சநேப்ஸவோऽபி ந த்வமிவ த்ருஷ்டவந்த:, ந த்ரக்ஷ்யந்தி ச இதி அபிப்ராய: || ௫௨ ||

நிற்கின்ற இவனை, மறுபடியும் சாந்தவடிவினராகித் தேற்றினார்.

தனது வடிவை - வஸுதேவரது வீட்டிலே தோன்றிய வடிவத்தை. (௫0)

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௫௧. ஜநார்த்தந! உம்முடைய இந்த சாந்தமான மநுஷ்யவடிவத்தைப் பார்த்து, இப்பொழுது மனந்தெளிந்தவனாகவும், ஸ்வபாவத்தை [தனது இயற்கைநிலையை] அடைந்தவனாகவும் ஆகியுள்ளேன்.

மநுஷ்யவடிவத்தை - எனது தோழனாகவுள்ள இனிய வடிவத்தை. (௫௧)

விச்வரூபக்காட்சியைப் பெறுதற்கு பக்திதான் கருவி.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௫௨. என்னுடைய எந்தவடிவத்தைப் பார்த்திருக்கின்றாயோ, (அந்த) இவ்வடிவமானது - பார்ப்பதற்கு மிகவும் அரிது. தேவர்களுங்கூட இவ்வடிவத்தைப் பார்ப்பதிலே என்றும் ஆவலுள்ளவர்.

(தேவர்கள் இவ்வடிவத்தைப்) பார்க்க விரும்புபவராயினும், நீ (பார்த்திருப்பது)போல, பார்த்ததே இல்லை ; பார்க்கப்போவதும் இல்லை என்பது கருத்து. (௫௨)

𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍?—

௫௩. 𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾 ।
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥

𑌨 𑌅𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌃 𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚 𑌇𑌜𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌃 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌃 𑌯𑌥𑌾𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑍍 𑌅𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾 ॥ ௫௩ ॥

𑌕𑌥𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌶𑌕𑍍𑌯𑌃 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௫௪. 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁 —𑌕𑌿𑌂𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌯𑌾 𑌇𑌤𑌿? 𑌆𑌹—𑌅𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌅𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑍂𑌤𑌯𑌾—𑌭𑌗𑌵𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌨 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌯𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌾 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌕𑌰𑌣𑍈𑌃 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍 𑌨 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌯𑌯𑌾, 𑌸𑌾 𑌅𑌨𑌨𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃, 𑌤𑌯𑌾 𑌅𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌃 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌃 𑌹𑍇 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃—𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃—𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃, 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌚 𑌗𑌨𑍍𑌤𑍁𑌂, 𑌪𑌰𑌂𑌤𑌪 ॥ ௫௪ ॥

𑌅𑌧𑍁𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌾𑌰𑌭𑍂𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯-

எதனுல்?—

௫௩. (நீ) என்னை எப்படிப் பார்த்திருக்கிருயோ, (அப்படி ஒருவராலும்) இத்தகைய நான் வேதங்களால் காணக்கூடியவன் அல்லேன் : தவத்திஞல் அல்லேன் : தானத்திஞல் அல்லேன் : யஜ்ஞத்திஞல் அல்லேன்.

இத்தகைய - கீழ்க்கூறிய விதமாயுள்ள. (௫௩)

மற்று, எவ்வாறு (நீங்கள் காணத்) தக்கவர் என்பது ?—கூறுவோம் :

௫௪. ஆனுல், பகைவரைத் தவிக்கச்செய்யும் அர்ஜுன! அன்னியமாகாத பக்தியினுல், இத்தகைய என்னை (ஒருவன்) அறியவும், உண்மையில் பார்க்கவும், நுழையவும் கூடும்.

ஆனுல், பக்தியினுல் (ஒருவன் என்னைக் காணக்கூடும்).—எத்தகைய (பக்தியினுல்) என்பது ?—கூறுகிருர் : வேருகாத (பக்தியினுல்). எது பகவானைத்தவிர வேறிடத்து ஒருபொழுதும் இல்லையோ, அதுவே வேருகாத பக்தி. எல்லா இந்திரியங்களாலும் வாஸுதேவனைக்காட்டிலும் வேருனது எதனுல் உணரப்படவில்லையோ, அது வேருகாத பக்தி. அந்த வேருகாத [வேறொன்றில் செல்லாது, பகவான் ஒருவரிடத்திலேயே உறுதியாக ஒருநிலைப்பட்ட] பக்தியினுல், விச்வரூபவிதமாயுள்ள என்னை (ஒருவன்) சாஸ்திரங்களால் அறியக்கூடும். (அவன் என்னை) சாஸ்திரங்களால் அறிதற்கு மாத்திரம் அல்லன். (என்னை) உள்ளபடி நேரேகாணவும், மோக்ஷத்தை அடையவும் கூடும். (௫௪)

கீதை உபதேசிக்கின்ற உபதேசங்களின் ஸாரத்திரட்டு.

கீதாசாஸ்திரம் முழுதற்கும் ஸாரமாய், முக்தியைக் கொடுக்கும் உபதேசமா

𑌸𑌾𑌰𑍍𑌥𑌃 𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑍇𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌙𑍍𑌗𑍃𑌹𑍍𑌯 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௫௫. 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌨𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍋 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸𑌂𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌵𑍈𑌰𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑌸𑍍𑌸 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍁 𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌦𑌰𑍍𑌶𑌨𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌏𑌕𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 𑌮𑌦𑍀𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮, 𑌤𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑍀𑌤𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 । 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌃—𑌕𑌰𑍋𑌤𑌿 𑌹𑌿 𑌭𑍃𑌤𑍍𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌕𑌰𑍍𑌮, 𑌨 𑌤𑍁 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾 𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ; 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌪𑌰𑌮𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌃, 𑌅𑌹𑌂 𑌪𑌰𑌮𑌃 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌅𑌯𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌃 । 𑌤𑌥𑌾 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌸𑌾𑌹𑍇𑌨 𑌚 𑌭𑌜𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 । 𑌸𑌂𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌧𑌨𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌰𑌕𑌲𑌤𑍍𑌰𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌭𑍋𑌗𑍇𑌷𑍁 𑌸𑌂𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌸𑍍𑌨𑍇𑌹𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 । 𑌨𑌿𑌰𑍍𑌵𑍈𑌰𑌃 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌵𑍈𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑌾𑌵𑌰𑌹𑌿𑌤𑌃 𑌶𑌤𑍍𑌰𑍂𑌣𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌪𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 । 𑌯𑌃 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑌃 𑌸𑌃 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿, 𑌅𑌹𑌮𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌾 𑌗𑌤𑌿𑌃, 𑌨 𑌅𑌨𑍍𑌯𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌕𑌾𑌚𑌿𑌤𑍍 𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌯𑌂 𑌤𑌵 𑌉𑌪𑌦𑍇𑌶𑌃 𑌮𑌯𑌾 𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 𑌹𑍇 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 𑌇𑌤𑌿 ॥ ௫௫ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌏𑌕𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

னது - (ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்புவோர்களால்) அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று, இப்பொழுது ஒருங்கேதிரட்டி அருளிச்செய்யப்படுகின்றது :

௫௫. எனக்காகக் கர்மத்தைச் செய்பவனாய், என்னையே மேலாகக் கொண்டவனாய், என்னுடைய பக்தனாய், பற்றில்லாதவனாய், ஸகலப்பிராணிகளிடத்தும் வைரம் நீங்கியவனாய் எவன் இருக்கின்றானோ, பாண்டவ ! அவன் என்னை வந்தடைகிறான்.

ஸ்ரீமகாபாரதத்திலே, வ்யாஸருளிச்செய்த நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையிலே பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக ப்ரஹ்மவித்யையாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே, விச்வரூபதர்சந யோகம் என்னும் பதினோராம் அத்தியாயம் முற்றும்.

பி. வேலைக்காரன் யஜமானனுக்காகத் தொழிலைச் செய்கிறான் ; மற்று, தான் இறந்தபின்பு அடையவேண்டிய மேலான கதி (அவனே) என்று யஜமானனை அடைவதில்லை. இவனோ, எனக்காகவே தொழிலைச் செய்பவனாய், என்னையே மேலான கதியாக அடைகிறானென்க. அவ்வாறே,(இவன்) எல்லாவிதத்தாலும் முழுமனத்தோடும் முழுமுயற்சியோடும் என்னையே தொழுகிறான் ஆதலால், எனது பக்தனென்க. பற்றில்லாதவன் - திரவியம், மக்கள், சிநேகிதர், மனைவி, உறவினர், போகங்கள் இவர்களின்மீது பிரியமும் ஆசையும் இல்லாதவன். ஸகலப்பிராணிகளிடத்தும் வைரம்நீங்கியவன் - தனக்கு முற்றும் கெடுதியைச் செய்துவருபவரிடத்துங்கூடப் பகைமையில்லாதவன். எவன் இப்படிப்பட்டவனோ, அவன் என்னை வந்தடைகிறான். நானே அவனுக்கு மேலான கதி ; (என்னைத்தவிர) வேறொரு கதியும் இல்லை. பாண்டவ ! நான் உனக்கு உபதேசித்த உபதேசம் இதுவாம். (௫௫)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌃 ॥

𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌷𑍁 𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌷𑍁 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌅𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂; 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑍇𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌚 𑌉𑌪𑌾𑌸𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌤𑍁 𑌐𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌆𑌦𑍍𑌯𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌦𑌾𑌤𑍍𑌮𑌰𑍂𑌪𑌂 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑍍 𑌉𑌪𑌾𑌸𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌤𑍍𑌵𑌯𑌾। 𑌤𑌚𑍍𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌉𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌸𑌿 '𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿। 𑌅𑌤𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌨𑌯𑍋𑌃 𑌉𑌭𑌯𑍋𑌃 𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌰𑌬𑍁𑌭𑍁𑌤𑍍𑌸𑌯𑌾 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌇𑌤𑌿 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

க. 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌯𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌯𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍇 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ॥

'𑌏𑌵𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑌾𑌮𑍃𑌶𑌤𑌿 '𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌨𑍈𑌰𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑍇𑌣 𑌭𑌗𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑍌

பன்னிரண்டாம் அத்தியாயம் : பக்தியோகம்.

ஈச்வரனைத் தொழுபவர் உயர்ந்தவரா ? அக்ஷரத்தைத் தொழுபவர் உயர்ந்தவரா ?

இரண்டாம் அத்தியாயம்முதல் விபூதி(அத்தியாயம்)வரையிலுமுள்ள அத்தியாயங்களுள், பலவகையான எந்த உபாதிகளும் ஒழிந்ததாய், அழியாப்ரஹ்மமாயுள்ள பரமாத்மாவை உபாஸித்தல் உபதேசிக்கப்பட்டது. ஸகலத்தையும் அமைப்பதிலே வல்லமையும், ஸகலத்தையும் அறிவதிலே ஸாமர்த்தியமும் உள்ளவராய், ஸத்துவகுணத்தை உபாதியாகப் பெற்றவராய், பிரபஞ்சத்தை ஆளுகின்ற உம்மையும் உபாஸித்தலானது ஆங்காங்கு உபதேசிக்கப்பட்டது. ஆனால், விச்வரூபஅத்தியாயத்தினுள், ஸகலஜகத்தின் வடிவமாய், முதலிலுள்ளதான உம்முடைய ஈச்வரவடிவானது, உபாஸித்தற்காகவே உம்மால் காட்டப்பட்டது. அன்றியும், அதனைக் காட்டியபின்பு, "எனக்காகக் கர்மத்தைச் செய்பவனாய்" (கக - ருரு) என்றுதொடங்கும்(திருவாக்கை) அருளிச்செய்திருக்கிறீர்கள். ஆகவே, நான் இவ்விரண்டுவகைகளுள் மேலானதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் கருத்தோடு உம்மை வினவுகின்றேன் என அர்ஜுனன் கூறலாயினன் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

க. எவர்கள் இவ்வாறு எப்பொழுதும் ஒருங்கிலைப்பட்ட பக்தராய் உம்மைத் தொழுகிறார்களோ ; மற்றும், எவர்கள் வெளிப்படையாகஇல்லாத அழியாப்பொருளைத் (தொழுகிறார்களோ) ; அவர்களுள், யோகத்தை விசேஷமாக அடைந்தவர்கள் யார் ?

" இவ்வாறு " என்பது - " எனக்காகக் கர்மத்தைச் செய்பவனாய் " (கக - ருரு) என்று தொடங்குகின்ற முந்தின அடுத்தசுலோகத்தினால் கூறப்பட்ட விஷயத்

𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍇 𑌅𑌰𑍍𑌥𑍇 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌯𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌅𑌨𑌨𑍍𑌯𑌶𑌰𑌣𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌯𑌥𑌾𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍇𑌤𑍇 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 ; 𑌯𑍇 𑌚 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌅𑌪𑌿 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍈𑌷𑌣𑌾𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌃 𑌯𑌥𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂, 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌕𑌰𑌣𑌗𑍋𑌚𑌰𑌮𑍍— 𑌯𑌤𑍍 𑌹𑌿 𑌕𑌰𑌣𑌗𑍋𑌚𑌰𑌂 𑌤𑌤𑍍 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌞𑍍𑌜𑍇𑌃 𑌧𑌾𑌤𑍋𑌃 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ; 𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌮𑍍 𑌶𑌿𑌷𑍍𑌟𑍈𑌶𑍍𑌚 𑌉𑌚𑍍𑌯𑌮𑌾𑌨𑍈𑌃 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑍈𑌃 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂, 𑌤𑌤𑍍 𑌯𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍇𑌤𑍇—𑌤𑍇𑌷𑌾𑌮𑍍 𑌉𑌭𑌯𑍇𑌷𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑍇 𑌯𑍋𑌗𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃, 𑌕𑍇 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌯𑍋𑌗𑌵𑌿𑌦𑌃 ? 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧ ॥

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚 । 𑌯𑍇 𑌤𑍁 𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌕𑌾𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍈𑌷𑌣𑌾𑌃, 𑌤𑍇 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑍁 ; 𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌯𑌤𑍍 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍 𑌉𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 । 𑌯𑍇 𑌤𑍁 𑌇𑌤𑌰𑍇—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௨. 𑌮𑌯𑍍𑌯𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌮𑌨𑍋 𑌯𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌪𑌰𑌯𑍋𑌪𑍇𑌤𑌾𑌸𑍍𑌤𑍇 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌾 𑌮𑌤𑌾𑌃 ॥

ளைதக் குறிக்கின்றது. இவ்வாறு எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட - பகவானுக்காகக் கர்மம்(செய்தல்)முதலான கீழ்க்கூறிய விஷயத்திலே ஒருநிலைப்பட்டவராய் இடைவிடாது தலைப்பட்டுள்ள என்றபடி. எந்தப் பக்தர்கள் (தமக்கு) வேறு அடைக்கலமில்லாதவராய், கீழேகாட்டிய விச்வரூபத்தை(க்கொண்ட) உம்மைத் தியானிக்கிறார்களோ ; மற்றும்,எல்லா உபாதிகளும் ஒழிந்துள்ளமையால் இந்திரியங்களுக்கு எட்டாததாய், மேலே (௧௨ - ௩) சிறப்பித்துக்கூறிய அழியாப்பொருளான ப்ரஹ்மத்தை வேறு எவர்கள் எல்லாஆசைகளையும் விட்டு, எல்லாக்கர்மங்களையும் துறந்து (தியானிக்கிறார்களோ; அவர்கள் அவ்வாறு இருதிறத்தாரென்க). —எது இந்திரியங்கட்கு எட்டுவதோ, அது வெளிப்படை எனப்படுகின்றது; (வி என்னும் உபஸர்க்கத்தையுடைய) அஞ்ஜ் என்னும் வினைப்பகுதிக்கு அது[வெளிப்படுத்தப்பட்டபொருள்]செயப்படுபொருளாதலின். இந்த அழியாப் பொருளோ, அதற்கு மாறானது [புலப்படாதது].—(தனக்கென்று) சிறப்பாயமைந்து, (இனி ௧௩ - ௩ல்) கூறப்படுகின்ற விசேஷணங்களையுடைய அந்த (நிர்க்குண ப்ரஹ்மத்தை) எவர்கள் தியானிக்கிறார்களோ ; (இன்னும், எவர்கள் ஸகுணப்ரஹ்மத்தைத் தியானிக்கிறார்களோ ; அவ்விருவகுப்பினருள், யோகத்தை [ஸமாதியை] விசேஷமாக அடைந்தவர்கள் யார் ? (௧)

ஸகுண ப்ரஹ்மத்தைத் தொழுபவர்கள்.

ஸ்ரீபகவான் கூறலாயினர் : எவர்கள் மெய்யறிவுகூடி, ஆசைகள் நீங்கி, அழியாப்பொருளைத் தொழுகிறார்களோ,அவர்கள் இப்பொழுது இருக்கட்டும். அவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியது எதுவோ, அதனை மேலே சொல்லுவோம். மற்று, மற்றையவர்கள் எவர்களோ, (அவர்களைப்பற்றி இங்கே கூறுவோம்) :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௨. எவர்கள் என்னிடத்து மனத்தைச் செலுத்தி, உயர்ந்த நம்பிக்கையோடுகூடி, எப்பொழுதும் ஒருநிலைப்பட்டவராய் என்னைத் தொழுகிறார்களோ, அவர்கள் எனது அபிப்பிராயத்தில் மேலான யோகிகள் [யோகத்தை விசேஷமாக அடைந்தவர்கள்].

मयि विश्वरूपे परमेश्वरे आवेश्य समाधाय मनः ये भक्ताः सन्तः मां सर्वयोगेश्वराणाम् अधीश्वरं सर्वज्ञं विमुक्तरागादिक्लेशतिमिरदृष्टिं नित्ययुक्ताः अतीतानन्तराध्यायान्ते उक्तन्यायेन सततयुक्ताः सन्तः उपासते श्रद्धया परया प्रकृष्टया उपेताः ते मे मम युक्ततमाः मताः इति । मच्चित्ततया हि ते अहोरात्राणि अतिवाहयन्ति, अतो युक्तं तान् प्रति युक्ततमा इति वक्तुम् ॥ ௨ ॥

किम् इतरे युक्ततमाः न भवन्ति ? न ; किं तु तान् प्रति यत् वक्तव्यं तत् शृणु —

௩. ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते ।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥

௪. संनियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥

ये तु अक्षरम् अनिर्देश्यम् अव्यक्तम्, अव्यक्तत्वात् अशब्दगोचरम् इति न निर्देष्टुं शक्यते, अतः अनिर्देश्यम् अव्यक्तं न केनापि प्रमाणेन

எவர்கள் விச்வரூபத்தைக்கொண்ட பரமேச்வரனை என்னிடத்து மனத்தை வைத்து, பக்தர்களாகி, முந்தின அடுத்த அத்தியாயமுடிவிலுள்ள சுலோகத்தில் உபதேசிக்கப்பட்ட உபதேசத்தை ஒழுங்காக அநுஷ்டிப்பதனால் எப்பொழுதும் ஒருநிலைப்பட்டவராகி, யோகத்தை ஆளுபவர்க்கெல்லாம் தலைமைஈச்வரனாய் முற்றும்உணர்ந்தவனாய் ஆசைமுதலிய தீங்குகளுக்கு(க் காரணமான அறியாமை என்னும்) இருட்டினாலாகும் பொய்யறிவு நீங்கிய என்னை உயர்ந்த நம்பிக்கையோடு கூடித் தொழுகிறார்களோ, அவர்கள் மேலான யோகிகள் என்று நான் எண்ணுகின்றேன். நிச்சயமாக, அவர்கள் என்னை இடைவிடாது சிந்தித்தலால் பகல் இரவுகளை கழிக்கிறார்கள் ; பகலிலும் இரவிலும் என்னை அதிகமாகத் தியானிக்கிறார்கள். ஆதலால், அவர்களைப்பற்றி மேலான யோகிகள் என்று கூறுவது பொருந்தும்மென்க. (௨)

நிர்க்குண ப்ரஹ்மத்தைத் தொழுபவர்கள்.

மற்றையோர்கள் மேலான யோகிகள் அல்லரோ ? — நிற்க. — ஆனால், அவர்களைப்பற்றிச் சொல்லவேண்டியது எதுவோ, அதனைக் கேட்பாயாக :

௩, ௪. மற்று, எவர்கள் இந்திரியக்கூட்டத்தைச் செவ்வையாய் அடக்கி, எப்பொழுதும் ஸமபுத்தியுள்ளவராய், ஸகலப்பிராணிகளுடைய நன்மையிலே கருத்துடையவராய், குறிப்பிட்டுக்காட்டிஉணர்த்தமுடியாததும், வெளிப்படையாக இல்லாததும், எங்குமுள்ளதும், நினைக்கவொண்ணாததும், கூடஸ்தமும், அசையாததுமுமான அழியாத நித்யப்பொருளை எங்கும் தொழுகிறார்களோ, அவர்கள் என்னையே வந்தடைகிறார்கள்.

அழியாப்பொருளானது வெளிப்படையாக இல்லாமையினால், சொல்லுக்கு எட்டாதது ; எனவே, ஒருவராலும் அதனை குறிப்பிட்டுக்காட்டி உணர்த்தமுடியாது. (அது) அறிதற்குக் கருவியாயுள்ள எதற்கும் புலப்படாதது; ஆகவே, (இன்னதென்று)

व्यज्यत इति अव्यक्तं पर्युपासते परि समन्तात् उपासते । उपासनं नाम यथाशास्त्रम् उपास्यस्य अर्थस्य विषयीकरणेन सामीप्यम् उपगम्य तैलधारावत् समानप्रत्ययप्रवाहेण दीर्घकालं यत् आसनं तत् उपासनम् आचक्षते । अक्षरस्य विशेषणम् आह उपास्यस्य — सर्वत्रगं व्योमवत् व्यापि अचिन्त्यं च अव्यक्तत्वात् अचिन्त्यम् — यत् हि करणगोचरं तत् मनसाऽपि चिन्त्यं, तद्विपरीतत्वात् अचिन्त्यम् अक्षरम् — कूटस्थं, दृश्यमानगुणम् अन्तर्दोषं वस्तु कूटम् । 'कूटरूपम्' 'कूटसाक्ष्यम्' इत्यादौ कूटशब्दः प्रसिद्धो लोके । तथा च अविद्याद्यनेकसंसारबीजम् अन्तर्दोषवत् मायाव्याकृतादिशब्दवाच्यतया 'मायां तु प्रकृतिं विद्यात् मायिनं तु महेश्वरम्' 'मम माया दुरत्यया' इत्यादौ प्रसिद्धं यत् तत् कूटं, तस्मिन् कूटे स्थितं कूटस्थं तदध्यक्षतया । अथवा राशिरिव स्थितं कूटस्थम् । अत एव अचलम् । यस्मात् अचलं, तस्मात् ध्रुवं नित्यम् इत्यर्थः ॥ ३ ॥

संनियम्य संयम्य उपसंहृत्य इन्द्रियग्रामम् इन्द्रियसमुदायं, सर्वत्र सर्वस्मिन् काले समबुद्धयः समा तुल्या बुद्धिः येषाम्

குறிக்கமுடியாதது. (ஆசைநீங்கி மெய்யறிவு கூடியவர்கள் அதனை) எங்கும் உபாஸிக்கிறார்கள்.—சாஸ்திரப்படி உபாஸிக்கவேண்டிய பொருளை (தியானத்திற்கு) விஷயமாகும்படி செய்துகொள்வதனால் (அதனுடைய) ஸமீபத்தை அடுத்து, எண்ணெயின் தாரைபோல (இடையறுத் தொடர்ச்சியான) ஒரே எண்ணத்தின் ஓட்டத்தோடு நீண்ட காலம் இருத்தல் எதுவோ, அதனை - உபாஸநம் [உபாஸித்தல், தொழுதல்] என்கிறார்கள். உபாஸிக்கவேண்டிய அழியாப்பொருளின் சிறப்பை அருளிச்செய்கிறார் :—(அழியாப்பொருள்) எங்குமுள்ளது, ஆகாசம்போல வியாபித்திருப்பது. வெளிப்படையாக இல்லாமையினால், நினைக்கவொண்ணாதது. எது இந்திரியங்கட்கு எட்டுவதோ, அது மனத்தாலும் நினைக்கக்கூடியது. அழியாப்பொருளோ, அதற்கு மாறுயுள்ளதனால் நினைக்கமுடியாதது. கூடஸ்தமானது. கூடமென்பது - (வெளிப்)பார்வைக்குக்குணமும், உள்ளே குற்றமும் உடையபொருள். "கூடரூபம் [கள்ளவடிவம், பொய்வடிவம், போலிவடிவம்]," "கூடஸாக்ஷ்யம் [பொய்ஸாக்ஷி]" என்பன முதலியவற்றிலே, கூடமென்னும் சொல் உலகத்தினுள் வழங்குகின்றது. அவ்வண்ணமே, பல ஸம்ஸாரத்திற்கு விதையாய், உள்ளே குற்றமுடையதாய், மாயை அவ்யாகிருதம் முதலிய சொற்களால் கூறப்பட்டு "பிரகிருதியை மாயையாகவும், மாயையுடையவனை மஹேச்வரனாகவும் அறியவேண்டும்" (ச்வே - ச - ௧௦), "என்னுடைய மாயை கடத்தற்கு அரிது" (எ - ௧௪) என்பன முதலியவற்றுள் வழங்கியுள்ள அவித்யை முதலானது எதுவோ, அது - (இங்கே) கூடமாம். அந்தக்கூடத்தினுள் அதற்குத் தலைமையான கண்காணியாய் நிற்பதனால், கூடஸ்தமென்க.—அல்லது, குவியல்போல நிற்பது - கூடஸ்தமென்க. (கூடம் - குவியல்.) ஆகவே, (அழியாப்பொருள்) அசையாதது. அசையாதது ஆதலால், நித்யமானது என்றபடி. (௩)

எவர்கள் இந்திரியக்கூட்டத்தை நன்றாக ஒடுக்கி, வேண்டியன வந்தபொழுதும் வேண்டாதன வந்தபொழுதும் எக்காலத்தும் ஒப்பநிற்கும் புத்தியையுடையவராய்,

𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌤𑍇 𑌸𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 । 𑌤𑍇 𑌯𑍇 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌾𑌃 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃 । 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 "𑌮𑌾𑌂 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿" 𑌇𑌤𑌿; '𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌨 𑌹𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌾𑌂 𑌸𑌤𑌾𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌤𑍍𑌵𑌮𑍍 𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

𑌕𑌿𑌨𑍍𑌤𑍁—

௫. 𑌕𑍍𑌲𑍇𑌶𑍋𑌽𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌗𑌤𑌿𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌂 𑌦𑍇𑌹𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ॥

𑌕𑍍𑌲𑍇𑌶𑌃 𑌅𑌧𑌿𑌕𑌤𑌰𑌃—𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 𑌅𑌧𑌿𑌕 𑌏𑌵 𑌕𑍍𑌲𑍇𑌶𑌃, 𑌅𑌧𑌿𑌕𑌤𑌰𑌸𑍍𑌤𑍁 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌾𑌂 𑌦𑍇𑌹𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌃—𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇 𑌆𑌸𑌕𑍍𑌤𑌂 𑌚𑍇𑌤𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 𑌤𑍇𑌷𑌾𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌸𑌕𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 । 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑌤𑌿𑌃 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌦𑍇𑌹𑌵𑌦𑍍𑌭𑌿𑌃 𑌦𑍇𑌹𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌦𑍍𑌭𑌿𑌃 𑌅𑌵𑌾𑌪𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌤𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌃 𑌅𑌧𑌿𑌕𑌤𑌰𑌃 ॥ ௫ ॥

𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑌾𑌂 𑌯𑌦𑍍 𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌤𑌦𑍍 𑌉𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌦𑍍 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌃—

ஸகலப்பிராணிகளுடைய நன்மையிலே கருத்துள்ளவராய் இத்தகையோராக இருக்கின்றார்களோ, அவர்கள் என்னையே வந்தடைகிறார்கள். "அவர்கள் என்னை வந்தடைகிறார்கள்" என்று அவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஏனெனில், "ஞானியோ, எனது ஆத்மாதான் (என்பது என்)கருத்து" (எ - கஅ) என்று கூறப்பட்டுள்ளது. பகவானுடைய வடிவமாகவே உள்ளவர்களை, மேலான யோகிகள் என்றாவது, மேலான யோகிகள் அல்லர் என்றாவது கூறவேண்டியதில்லையன்றோ. (௪)

ஆனால்,

௫. **அவ்யக்தத்தினிடத்தில் மனம்பற்றிய அவர்கட்குப் பிரயாசம் மிக்க அதிகமானது. ஏனெனில், அவ்யக்தமான கதியானது தேகாபிமானமுடையவர்களால் அரிதாக அடையப்படுகின்றது.**

எனக்காகக் கர்மம் (செய்தல்) முதலியவற்றின்மேல் கருத்துடையவர்களுக்குப் பிரயாசம் அதிகமேயாயினும், ஆனால், வெளிப்படையாக இல்லாத (நிர்க்குணப்ரஹ்மத்)தினிடத்தில் மனம்படிந்தவராய், அழியாப்பொருள்வடிவினராய்ப் பரம்பொருளைக் காண்பவர்க்கு தேகாபிமானத்தை விடவேண்டியதனாலாகும் பிரயாசம் மிகவும் அதிகமென்க. ஏனெனில், நிர்க்குணப்ரஹ்மமான அழியாப்பொருளாகிய கதியானது தேகாபிமானமுடையவர்களால் அடைதற்கு அரிது. ஆகவே [தேகாபிமானத்தை விடவேண்டியதனால்], பிரயாசம் மிகவும் அதிகமாம். (௫)

ஈச்வரனைத் தொழுதலால் முக்திபெறுதல்.

அழியாப்பொருளைத் தொழுபவர்களுடைய வாழ்க்கையின் நடக்கை எதுவோ, அதனை மேலே [கஉ - கங-முதலானவற்றிலே] கூறுவோம். (இப்பொழுது ஸகுணப்ரஹ்மஉபாஸகர்களைப்பற்றிக் கூறுவோம் :)

௬. யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸம்ந்யஸ்ய மத்பரா: ।
அநந்யேநைவ யோகேந மாம் த்யாயந்த உபாஸதே ॥

தேஷாம் கிம்?—

௭. தேஷாமஹம் ஸமுத்தர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் ।
பவாமி ந சிராத்பார்த்த மய்யாவேஶிதசேதஸாம் ॥

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஈஶ்வரே ஸம்ந்யஸ்ய மத்பரா: அஹம் பர: யேஷாம் தே மத்பரா: ஸந்த: அநந்யேநைவ அவித்யமாநம் அந்யத் ஆலம்பநம் விஶ்வரூபம் தேவம் ஆத்மாநம் முக்த்வா யஸ்ய ஸ: அநந்ய: தேந அநந்யேநைவ—கேந?—யோகேந ஸமாதிநா மாம் த்யாயந்த: உபாஸதே ॥ ௬ ॥

தேஷாம் மதுபாஸநைகபராணாம் அஹம் ஈஶ்வர: ஸமுத்தர்தா—குத: இதி? ஆஹ—ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் ம்ருத்யுயுக்த: ஸம்ஸார: ம்ருத்யுஸம்ஸார:, ஸ ஏவ ஸாகர இவ ஸாகர:, துஸ்தரத்வாத், தஸ்மாத் ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் அஹம் தேஷாம் ஸமுத்தர்தா பவாமி ந சிராத்—கிம் தர்ஹி?—க்ஷிப்ரமேவ ஹே பார்த்த மயி ஆவேஶிதசேதஸாம் மயி விஶ்வரூபே ஆவேஶிதம் ஸமாஹிதம் சேத: யேஷாம் தே மயி ஆவேஶிதசேதஸ: தேஷாம் ॥ ௭ ॥

யத: ஏவம் தஸ்மாத்—

௮. மய்யேவ மந ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேஶய ।
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்ஶய: ॥

---

௬. மற்று, எவர்கள் எல்லாக் கர்மங்களையும் என்னிடத்துஅர்ப்பித்து, என்னையே மேலாகக்கொண்டவராய் வேறே (ஓர்பிடிப்பும்) இல்லாத யோகத்தினால் என்னைத் தியானிக்கின்றவர்களாய்த் தொழுகிறார்களோ,

அவர்கட்கு என்ன?

௭. பார்த்த! என்னிடத்து மனத்தைச் செலுத்திய அவர்களை யான், சாவோடு கூடிய ஸம்ஸாரக்கடலினின்றும் தாமதமின்றிக் கரையேற்றுகிறவனாயிருக்கின்றேன்.

என்னிடத்து - ஈச்வரனிடத்து. வேறே இல்லாத - விச்வரூபத்தைக்கொண்ட கடவுளாகிய என்னைத்தவிர வேறொன்றையுமே பிடிப்பாக [உபாஸித்தற்கு விஷயமாக]க் கொள்ளாத.—(அத்தகைய) எதனால்?—ஸமாதியினால். (௬)

என்னைத் தொழுவதிலேயே முற்றும் கருத்தூன்றிய அவர்களை ஈச்வரனாகிய நான் கரையேற்றுகின்றவன்.—எதனினின்றும் என்பது?—கூறுகிறார்: சாவொடு கூடிய ஸம்ஸாரக்கடலினின்றும். அது - கடல் போல, கடப்பதற்கு அரிதாயுள்ளமையினால், கடலென்க. சாவோடு கூடிய அந்த ஸம்ஸாரக்கடலினின்றும் நான் அவர்களை வெகுகாலமாகாமலே மேலே தூக்கி எடுக்கின்றேன்.—அப்பொழுது என்ன?—சீக்கிரமாகவே (என்றபடி). என்னிடத்து மனத்தைச் செலுத்திய - விச்வரூபத்தைக் கொண்ட என்னிடத்து மனம் ஒருநிலைப்பட்ட. (௭)

இவ்வாறிருத்தலால்,

௮. என்னிடத்தேயே மனத்தை நிறுத்து; என்னிடத்துப் புத்தியைச் செலுத்து. இதற்குமேல் என்னிடத்தேயே வாழ்வாய்; ஸம்ஸயம் இல்லை.

𑌮𑌯𑌿 𑌏𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌮𑌨𑌃 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 𑌆𑌧𑌤𑍍𑌸𑍍𑌵 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯 । 𑌮𑌯𑌿 𑌅𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑍀𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌚 𑌮𑌯𑌿 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯 । 𑌤𑌤𑌃 𑌤𑍇 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿? 𑌶𑍃𑌣𑍁—𑌨𑌿𑌵𑌸𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌨𑌿𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇𑌨 𑌮𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌮𑌯𑌿 𑌵𑌾𑌸𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 𑌏𑌵 𑌅𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌪𑌾𑌤𑌾𑌤𑍍 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 । 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃, 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 ॥ ௮ ॥

௯. 𑌅𑌥 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 𑌮𑌯𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 ।
𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨 𑌤𑌤𑍋 𑌮𑌾𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌪𑍍𑌤𑍁𑌂 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ॥

𑌅𑌥 𑌏𑌵𑌂 𑌯𑌥𑌾 𑌅𑌵𑍋𑌚𑌂 𑌤𑌥𑌾 𑌮𑌯𑌿 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌤𑍁𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍 𑌅𑌚𑌲𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌷𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌤𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑍇𑌨, 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌆𑌲𑌮𑍍𑌬𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌮𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌃, 𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍇𑌣 𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑍍 𑌇𑌚𑍍𑌛 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌸𑍍𑌵 𑌆𑌪𑍍𑌤𑍁𑌂 𑌹𑍇 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ॥ ௯ ॥

௰. 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌪𑍍𑌯𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑍋 𑌭𑌵 ।
𑌮𑌦𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇 𑌅𑌪𑌿 𑌅𑌸𑌮𑌰𑍍𑌥𑌃 𑌅𑌸𑌿 𑌯𑌦𑌿, 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑌃 𑌭𑌵, 𑌮𑌦𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮, 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌃 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑌃, 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸-

---

மனத்தை = (உனது) நோக்கங்களாயும், எண்ணங்களாயுமுள்ளவற்றை, விச்வரூபத்தைக்கொண்ட ஈச்வரனை என்னிடத்திலேயே வைத்துவிடு. நிர்ணயத்தைச் செய்கின்ற புத்தியையும் என்னிடத்து வைத்துவிடு.—அவற்றால் உனக்கு ஆவதென்ன என்பது? —கேள்: இச்சரீரம் மாய்ந்தபின்பு, நீ நானாக என்னிடத்து நிச்சயமாய் வாழ்தலைச் செய்யவேசெய்வாய் [நானாகவே இருப்பாய்]. இதில் ஸம்சயம் கொள்ளாதே. (அ)

அப்யாஸயோகம்.

௯. சித்தத்தை என்னிடத்து உறுதியாக நிலைப்படுத்த முடியாவிட்டால், அப்பொழுது தநஞ்ஜய ! அப்யாஸயோகத்தினால் என்னை அடைய நாடவேண்டும்.

யான் கூறியபடி, நீ என்னிடத்து மனத்தை அசையாது நிறுத்த வல்லவனல்லனாயின், பின்பு, விச்வரூபத்தைக்கொண்ட என்னை அப்யாஸயோகத்தினால் நாடவேண்டும். அப்யாஸமென்பது - எல்லாப்புறங்களினின்றும் சித்தத்தை இழுத்து, அடிக்கடி ஓரே (பிரதிமைமுதலிய) பிடிப்பிலே நிறுத்துதல். அதனால் வரும் யோகம் - அப்யாஸயோகம். (இது - மனம்) ஒருநிலைப்படுதல் என்னும் யோகமாம். (௯)

பகவானுக்குத் தொண்டுசெய்தல்.

௰. அப்யாஸ(யோக)த்திலும் ஸாமர்த்தியமில்லாதவனாய் இருக்கிறாய் (என்றால்), எனக்காகக் கர்மங்களை(ச் செய்தலை)யே முக்கியமாகக்கொண்டிரு. எனக்காகக் கர்மங்களைச் செய்கிறவனாயினும், ஸித்தியைப் பெறுவாய்.

நீ அப்யாஸமில்லாமலே [அப்யாஸயோகத்தைப் பயிற்சிசெய்யாமலே] கர்மங்களைமாத்திரம் என்பொருட்டுச் செய்கிறவனாயினும், மனம் திருந்துதல், ஒருநிலைப்படு

सेन विना अपि कर्माणि केवलं मदर्थं कुर्वन् सिद्धिं सत्त्वशुद्धियोग-
ज्ञानप्राप्तिद्वारेण अवाप्स्यसि ॥ १० ॥

११. अथैतदप्यशक्तोऽसि कर्तुं मद्योगमाश्रितः ।
सर्वकर्मफलत्यागं ततः कुरु यतात्मवान् ॥

अथ पुनः एतदपि यत् उक्तं मत्कर्मपरमत्वं तत् कर्तुं अशक्तः असि मद्योगं आश्रितः, मयि क्रियमाणानि कर्माणि संन्यस्य यत् करणं तेषां अनुष्ठानं सः मद्योगः, तं आश्रितः सन्—सर्वकर्मफलत्यागं सर्वेषां कर्मणां फलसंन्यासं सर्वकर्मफलत्यागं ततः अनन्तरं कुरु यतात्मवान् संयतचित्तः सन् इत्यर्थः ॥ ११ ॥

इदानीं सर्वकर्मफलत्यागं स्तौति—

१२. श्रेयो हि ज्ञानमभ्यासाज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात्कर्मफलत्यागस्त्यागाच्छान्तिरनन्तरम् ॥

श्रेयः हि प्रशस्यतरं ज्ञानम्—कस्मात्? — अविवेकपूर्वकात् अभ्यासात्। तस्मादपि ज्ञानात् ज्ञानपूर्वकं ध्यानं विशिष्यते। ज्ञानवतो ध्यानात् अपि कर्मफलत्यागः, 'विशिष्यते' इति अनुष-

---

தல், (உண்மை) கண்டுணர்தல் என்பவற்றை முறையே அடைந்து, பின்பு ஸித்தியை [ப்ரஹ்மத்தின் நிலையை]ப் பெறுவாய். (௧0)

கர்மத்தின் பயனை எதிர்நோக்காமை.

௧௧. **இதனையும் செய்யச் சக்தியற்றனையாயின் அப்பொழுது என்விஷயமான யோகத்தை அடைக்கலமாகக்கொண்டு, மனத்தை அடக்கியவனாய் எல்லாக் கர்மங்களுடைய பயனை விட்டிடுதலைச் செய்யக்கடவாய்.**

இதனையும் - என்பொருட்டுக் கர்மங்களை(ச் செய்வதை) முக்கியமாகக் கொள்ளுதலாகிய (கீழ்க்) கூறிய (உபதேசம்) எதுவோ, அதனையும். செய்யப்படுகின்ற கர்மங்களை என்னிடத்து அர்ப்பித்து, அவற்றை அநுஷ்டித்தல் எதுவோ, அது-என்விஷயமான யோகம். **விட்டிடுதலை** - துறந்திடுதலை. **அப்பொழுது** - பின்பு. (௧௧)

எல்லாக் கர்மங்களுடைய பயனை விட்டிடுதலைப் புகழ்கின்றார் :

௧௨. **அறிவு அப்யாஸத்தினும் சிறந்ததன்றோ ; தியானம் அறிவினும் மேலாகின்றது ; கர்மத்தின் பயனை விட்டிடுதல் தியானித்தினும் (மேலாகின்றது). விட்டிடுதலினின்றும் ஒழிவு உடனே (வருகின்றது.)**

அறிவு சிறந்ததன்றோ.—எதனைக்காட்டிலும் ?—அறியாமையொடு கூடிய அப்யாஸத்தைக்காட்டிலும். (**அறிவென்பது** - சாஸ்திரத்தினாலும், யுக்தியினாலும் ஆத்மாவை நிச்சயித்தல். **அப்யாஸமென்பது** - (௧)அறிவைப் புகட்டுகின்ற நூற்பொருளை அடிக்கடி கேட்டு ஆராய்ச்சிசெய்தல் ; அல்லது, (௨) உறுதியோடு கூடி தியானத்தை அப்யஸித்தல்.—ஆ.) அந்த அறிவைக்காட்டிலும் அறிவோடமைந்த தியானம் மேலாகின்றது. அறிவுள்ளவனுடைய தியானத்தைக்காட்டிலும் கர்மத்தின்பயனை விட்டிடுதல் "மேலாகின்றது" என ஒட்டுக. (௧௨ - ௧௧ல் உள்ள "மனத்தை அடக்கியவ

ஜ்யதே | ஸர்வகர்மபலத்யாகாத் பூர்வவிசேஷணவத: சாந்தி: உபசம: ஸஹேதுகஸ்ய ஸம்ஸாரஸ்ய அநந்தரமேவ ஸ்யாத், ந து காலாந்தரம் அபேக்ஷதே ||

அஜ்ஞஸ்ய கர்மணி ப்ரவ்ருத்தஸ்ய பூர்வோபதிஷ்டோபாயாநுஷ்டாநாசக்தௌ ஸர்வகர்மணாம் பலத்யாக: ச்ரேய:ஸாதநம் உபதிஷ்டம், ந ப்ரதமமேவ | அதச்ச 'ச்ரேயோ ஹி ஜ்ஞாநமப்யாஸாத்' இத்யுத்தரோத்தரவிசிஷ்டத்வோபதேசேந ஸர்வகர்மபலத்யாக: ஸ்தூயதே, ஸம்பந்நஸாதநாநுஷ்டாநாசக்தௌ அநுஷ்டேயத்வேந ச்ருதத்வாத் ||

கேந ஸாதர்ம்யேண ஸ்துதித்வம்? 'யதா ஸர்வே ப்ரமுச்யந்தே' இதி ஸர்வகாமப்ரஹாணாத் அம்ருதத்வம் உக்தம்; தத் ப்ரஸித்தம் | காமாச்ச ஸர்வே ச்ரௌதஸ்மார்தஸர்வகர்மணாம் பலாநி | தத்த்யாகேந ச விதுஷ: த்யாநநிஷ்டஸ்ய அநந்தரைவ சாந்தி: | இதி ஸர்வகாமத்யாகஸாமாந்யம் அஜ்ஞகர்மபலத்யாகஸ்ய அஸ்தி இதி தத்ஸாமாந்யாத் ஸர்வகர்மபலத்யாகஸ்துதி: இயம் ப்ரரோசநார்தா |

ளுய்" என்னும்) முற்கூறிய விசேஷணத்தோடு கூடி, இவ்வாறு கர்மத்தின் பயனை விட்டிடுவதிலிருந்து, காரண(மாகிய அஜ்ஞான)த்தோடு ஸம்ஸாரம் ஒழிந்திடுதல் உடனேயே உண்டாகும்; காலாந்தரத்தை வேண்டுவதில்லை [காலதாமதம் இல்லை].

கர்மத்தை மேற்கொண்டுள்ள அஜ்ஞானிக்கு முன்னர் உபதேசிக்கப்பட்ட ஸாதநங்களை அநுஷ்டிக்கத் திறமையில்லாவளவிலே ஸகலகர்மங்களுடைய பயனை விட்டிடுதலானது மோக்ஷத்திற்கு வழி என்று உபதேசிக்கப்பட்டது; (ஆனால்) முதலிலே அன்று[முந்தினதை அநுஷ்டிக்கச்சக்தியுள்ளவளவிலே பிந்தினதை அநுஷ்டிக்கவேண்டும் என்று கூறப்படவில்லை]. ஆகவே, "அறிவு அப்யாஸத்திலும் சிறந்ததன்றோ" என்பது முதலாகப் பிந்தினது பிந்தினது மேலானது என உபதேசிப்பதனால் ஸகல கர்மங்களுடைய பயனை விட்டிடுதலானது புகழப்படுகின்றது; (முக்திக்கு) அமைந்த (நிர்க்குண ப்ரஹ்மஉபாஸநம் முதலான)ஸாதநங்களை அநுஷ்டிக்கச் சக்தியில்லாவள விலே (ஸகலகர்மங்களுடைய பயனை விட்டிடுதலை) அநுஷ்டிக்கவேண்டும் என்று உப தேசிக்கப்பட்டமையாலென்க.

(வினு) :—(விட்டிடுதல் மேலானது என்னும் திருவாக்கானது) எத்தன்மையி னுல் புகழ்ச்சியாகின்றது?

(விடை) :—"(கர்மங்கள்) எல்லாம் எப்பொழுது விடப்படுகின்றனவோ, (அப் பொழுது மனிதன் சாகாதவனுகிறுன்)" (கட - ௬ - ௧௪) என ஆசாவிஷயங்களனைத் தையும் விட்டொழிவதனுல், சாகாமை கூறப்பட்டது; அன்றியும், அது (பிரு - ௪ - ௪ - ௬ முதலானவற்றில்) பிரஸித்தமாயுள்ளது. இனி, ஆசாவிஷயங்களெல்லாம் - சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் கூறப்பட்ட ஸகலகர்மங்களுடைய பயன்களாயுள்ளவை. தியானத்திலே நிலைத்த ஞானிக்கு, அவற்றை விடுவதனுல் ஒழிபு உடனேயே வருகின்றது. எனவே, ஆசாவிஷயங்களனைத்தையும் விட்டிடுதலாகிய பொதுத்தன்மையானது அஜ்ஞானி கர்மங்களுடைய பயனை விட்டிடுவதற்கும் உள்ளது என்று அப்பொதுத்தன்மையினுல், ஸகலகர்மங்களுடைய பயனை விட்டிடுதலைப் புகழ்வதாம். இ(ப்பு

𑌯𑌥𑌾 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃 𑌪𑍀𑌤𑌃 𑌇𑌤𑌿 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂𑌤𑌨𑌾𑌃 𑌅𑌪𑌿 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌤𑍍𑌵𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌤𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 ॥

𑌏𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌮𑌭𑌿𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌚 𑌆𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌭𑍇𑌦𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍇 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇 𑌚𑍇𑌤𑌃𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌯𑍋𑌗𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌿 𑌚 । ‘𑌅𑌥𑍈𑌤𑌦𑌪𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿’ 𑌇𑌤𑌿 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍂𑌚𑌨𑌾𑌤𑍍 𑌨 𑌅𑌭𑍇𑌦𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌕𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌨𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 । ‘𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑍇𑌵’ 𑌇𑌤𑌿 𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑌾𑌂 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌇𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌪𑌾𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌧𑍀𑌨𑌤𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 ‘𑌤𑍇𑌷𑌾𑌮𑌹𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍍𑌤𑌾’ 𑌇𑌤𑌿 । 𑌯𑌦𑌿 𑌹𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌃 𑌤𑍇 𑌮𑌤𑌾𑌃, 𑌅𑌭𑍇𑌦𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌵-

---

கழ்ச்சியான)து - (கேட்போருக்கு) ருசியை உண்டாக்கி (அவர்கள் கர்மங்களுடைய பயனை விட்டிடுதலைப்) பின்பற்றும்படி செய்வதற்கு ஆவதென்க. உதாரணமாக, அகஸ்தியனென்னும் பிராமணனால் கடலானது குடிக்கப்பட்டது என்று இப்பொழுதுள்ள பிராமணர்களும், பிராமணரென்னும் பொதுத்தன்மையினால் புகழப்படுகிறார்கள்.

இவ்வாறாக, கர்மயோகமானது - கர்மத்தின்பயனை விட்டிடுவதனால் முக்திக்கு ஸாதநமாம் என்று உபதேசிக்கப்பட்டது. (கர்மங்களின் பயன்கள் = காமங்கள் = ஆசாவிஷயங்கள். கர்மங்களின்பயன்களைத் துறக்கின்ற அஜ்ஞானிக்கும், ஆசாவிஷயங்களைத் துறக்கின்ற ஞானிக்கும் உள்ள பொதுத்தன்மையை இவ்வாறு கண்டு கொள்க.) (கஉ)

நிர்க்குண ப்ரஹ்மத்தைத் தொழுபவரது வாழ்க்கையின் நடக்கை.

இங்கே, ஆத்மாவுக்கும் ஈச்வரனுக்கும் பேதத்தை வைத்துக்கொண்டு, விச்வரூபத்திலே ஈச்வரனிடத்து மனம் ஒருநிலைப்படுதலாகிய யோகமும், ஈச்வரன்பொருட்டுக் கர்மத்தை அநுஷ்டித்தல் முதலானவையும் உபதேசிக்கப்பட்டன. (கர்மயோகத்தை) "இதனையும் செய்யச் சக்தியில்லாதவனாயின்" (கஉ - கக) என அஜ்ஞானத்தின்செய்கையாகக் குறிப்பிப்பதனால், (ஆத்மாவுக்கும் ஈச்வரனுக்கும்) பேதத்தைக் காணாதவனாய் அழியாப்பொருளைத் தொழுபவனுக்குக் கர்மயோகமானது பொருந்தாது என்று காட்டுகிறார். அவ்வாறே, பகவான், அழியாப்பொருளை உபாஸித்தல் கர்மயோகிக்குப் பொருந்தாமையைக் காட்டுகிறார். அழியாப்பொருளைத் தொழுபவர்க்குக்கைவல்யம் கைகூடுவதிலே, "அவர்கள் என்னையே அடைகிறார்கள்" (கஉ-ச) என சுதந்திரத்தைக் கூறிப், பின்பு, மற்றையோர்க்கு, "நான் அவர்களைக் கரையேற்றுகிறவன்" (கஉ - எ) எனப் பரதந்திரத்தை = ஈச்வரனைச் சார்ந்துநிற்றலை உணர்த்தியுள்ளார். அவர்கள் ஈச்வரனுடைய ஆத்மாவாகவே இருக்கின்றார் எனக் கொண்டவழி, அவர்கள் (ஆத்மாவுக்கும் ஈச்வரனுக்கும்) பேதமின்மையைக் கண்டறிந்தவராதலால் அழியாப்பொருள் வடிவினராகவே உள்ளாரென்பதாம்.

रूपाः सन्त इति समुद्धरणकर्मविषयवचनं तान् प्रति न समञ्जसं स्यात् । यस्माच्च अर्जुनस्य अत्यन्तमेव हितैषी भगवान् तस्य सम्यग्दर्शनानन्वितं कर्मयोगं भेददृष्टिमन्तमेव उपदिशति । न चात्मानं ईश्वरं प्रमाणतः बुद्ध्वा कस्यचित् गुणभावं जिगमिषति कश्चित्, विरोधात् । तस्मात् अक्षरोपासकानां सम्यग्दर्शननिष्ठानां संन्यासिनां त्यक्तसर्वैषणानां 'अद्वेष्टा सर्वभूतानां' इत्यादिधर्मपूगं साक्षादमृतत्वकारणं वक्ष्यामीति प्रवर्तते—

௧௩. अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहंकारः समदुःखसुखः क्षमी ॥

௧௪. सन्तुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पितमनोबुद्धिर्यो मद्भक्तः स मे प्रियः ॥

अद्वेष्टा सर्वभूतानां सर्वेषां भूतानां न द्वेष्टा, आत्मनः दुःखहेतुमपि न किञ्चित् द्वेष्टि, सर्वाणि भूतानि आत्मत्वेन

ஆகவே, (அத்தகையோரைக்) கரையேற்றுதலென்னும் தொழிலுக்கு விஷயமாக [கரையேற்றப்படுபவராக]க் கூறுதல் அவர் விஷயத்திலே பொருந்தியதாகாது. மற்றும் [இனி வரும் காரணத்தாலும்], அர்ஜுனனுக்கு மிகுதியும் நலத்தைவிரும்புகின்ற பகவான் மெய்யறிவோடுகூடாததும் பேதப்பார்வையையேயுடையதுமான [ஆத்மா வேறு, ஈச்வரன் வேறு என்னும் வேற்றுமையான எண்ணமேஉள்ளதுமான] கர்மயோகத்தை அவனுக்கு உபதேசிக்கிறார் (௬ - ௧௫). அன்றியும், பிரமாணங்களால் ஆத்மாவை ஈச்வரனாக அறிந்தபின்பு, ஒருவன் (வேறு) ஒருவனுக்குக் கீழ்ப்படிதலை அடைய விரும்பமாட்டான்; விரோதத்தால் [ஆளப்படுந்தன்மையும், ஆளுந்தன்மையும் ஒருவனிடத்து ஒருங்கே இருக்கமுடியாவாதலால்.—ஆ. ஆளப்பட்டவன் - கீழ்ப்பட்டவன். ஆளுபவன் - ஈச்வரன்.] ஆதலால், (பின்வரும் விசேஷணங்களனைத்தையும் அஜ்ஞானியான கர்மயோகியானவன் பின்பற்றமுடியாதவனாதலால்), மெய்யறிவிலே நிலைத்த துறவிகளாய் ஆசைகளனைத்தையும் விட்டவராய் அழியாப்பொருளைத் தொழுபவர்க்கு, சாகாமைக்கு நேரே ஸாதநமாய் "எந்தப் பிராணியையும் பகையாதவனும்" (௧௨ - ௧௩) என்பதுமுதலாயுள்ள விசேஷணத்தொகுதியைக் கூறுவேன் என்று (பகவான்) மேற்கொள்ளுகிறார்:

௧௩. எந்தப் பிராணியையும் பகையாதவனும், நண்பனாயிருப்பவனும், தயையுள்ளவனும், மமகாரம் நீங்கியவனும், அஹங்காரம் ஒழிந்தவனும், துன்பஇன்பங்களை ஸமமாகக்கொண்டவனும், பொறுமையுடையவனும்,

௧௪. எப்பொழுதும் திருப்தியுள்ளவனும், அடங்கிய ஸ்வபாவத்தையும் உறுதியான நிச்சயத்தையும் உடையவனுமான யோகியாய் என்னிடத்து மனம் புத்தி இவற்றைச் செலுத்திய என்பக்தன் எவனோ, அவன் எனக்குப் பிரியமானவன்.

(அவன்) ஒன்றையும், தனக்கு வருத்தத்தைச் செய்வதையுங்கூடப் பகைப்பதில்லை; எல்லாப் பொருள்களையும் தானாகவே பார்க்கிறான். (அவன் எல்லார்க்கும்)

पश्यति । मैत्र्यं मित्रभावः, मैत्रः मित्रतया वर्तते इति स मैत्रः । करुणः एव च, करुणा कृपा दुःखितेषु दया, तद्वान् करुणः, सर्वभूताभयप्रदः, संन्यासी इत्यर्थः । निर्ममः ममप्रत्ययवर्जितः । निरहंकारः निर्गताहंप्रत्ययः । समदुःखसुखः, समे दुःखसुखे द्वेषरागयोः अप्रवर्तके यस्य सः समदुःखसुखः । क्षमी क्षमावान्, आक्रुष्टः अभिहतो वा अविक्रियः एव आस्ते ॥ ௧௩ ॥

संतुष्टः सततं नित्यं, देहस्थितिकारणस्य लाभे अलाभे च उत्पन्नालंप्रत्ययः । तथा गुणवल्लाभे विपर्यये च संतुष्टः सततं योगी समाहितचित्तः । यतात्मा संयतस्वभावः । दृढनिश्चयः, दृढः स्थिरः निश्चयः अध्यवसायः यस्य आत्मतत्त्वविषये सः दृढनिश्चयः । मय्यर्पितमनोबुद्धिः संकल्पविकल्पात्मकं मनः, अध्यवसायलक्षणा बुद्धिः, ते मय्येव अर्पिते स्थापिते यस्य संन्यासिनः सः मय्यर्पितमनोबुद्धिः । यः ईदृशः मद्भक्तः सः मे प्रियः । 'प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः' इति सप्तमे अध्याये सूचितं, तदिह प्रपञ्च्यते ॥ ௧௪ ॥

கரு. यस्मान्नोद्विजते लोको लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैर्मुक्तो यः स च मे प्रियः ॥

நண்பனு யிருக்கிறன். (அவன்) துயருற்றவரிடத்துத் தயையுள்ளவன், எல்லாப் பிராணிகட்கும் அபயமளித்தவன், ஸந்யாஸி என்றபடி. மமகாரம் நீங்கியவன் - "(இது) எனது" என்னும்எண்ணமில்லாதவன். அஹங்காரம் ஒழிந்தவன் - "நான்" என்னும் எண்ணம் நீங்கியவன். அவன்-வெறுப்புவிருப்புக்களைச் செய்கின்ற துன்பஇன்பங்களைச் சமமாகக்கொண்டவன். பொறுமையுள்ளவன்; வைதாலும், அடித்தாலும் மாறுபாடில்லாமலே [கோபம் முதலியவற்றை அடையாமலே] நிற்கின்றனென்க. (கங)

எப்பொழுதும் திருப்தியுள்ளவன், சரீரம் நிலைத்தற்கு இடம்பாடு கிடைப்பதிலும், கிடையாமையிலும், போதுமென்னும் எண்ணம் உண்டாகப்பெற்றவன். அவ்வாறே, நல்லது கிடைப்பதிலும், (அதற்கு) மாறான திலும் [கிடையாமையிலும்] திருப்திவந்தவன். ("எப்பொழுதும்" என்பதை ஒவ்வொரு விசேஷணத்தோடும் கூட்டுக.— ஆ.) எப்பொழுதும் யோகி,சித்தம் ஒருநிலைப்பட்டவன். ஸ்வபாவத்தை [தேகத்தையும், இந்திரியங்களையும்] அடக்கியவன். ஆத்மஉண்மையின் விஷயத்திலே நிச்சயம் நிலைத்தவன். அந்த ஸந்யாஸியானவன் - நோக்கங்களும் எண்ணங்களுமாகிய மனத்தையும், நிர்ணயிக்குந்தன்மையதான புத்தியையும் என்னிடத்தேயே நிறுத்தியவன். எவன் என்னுடைய இத்தகைய பக்தனே, அவன் எனக்குப் பிரியமானவன். "நான் ஞானிக்கு மிகவும் பிரியமானவன்; அவனும் எனக்குப் பிரியமானவன்" (எ - கஎ) என ஏழாம் அத்தியாயத்துள் குறிப்பிக்கப்பட்டது. அது இங்கு விரித்துரைக்கப்படுகின்றது. (கச)

கரு. உலகம் எவனிடத்தினின்றும் வருந்துவதில்லையோ; அன்றியும், எவன் உலகத்தினின்றும் வருந்துவதில்லையோ; எவன் மகிழ்வு, பொறாமை, அச்சம், கலக்கம் என்பவை நீங்கியவனோ; அவன்தான் எனக்குப் பிரியமானவன்.

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌨 𑌉𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍇 𑌨 𑌉𑌦𑍍𑌵𑍇𑌗𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌨 𑌸𑌂𑌤𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌸𑌂𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑌿 𑌲𑍋𑌕𑌃, 𑌤𑌥𑌾 𑌲𑍋𑌕𑌾𑌤𑍍 𑌨 𑌉𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍇 𑌚 𑌯𑌃, 𑌹𑌰𑍍𑌷𑌾𑌮𑌰𑍍𑌷𑌭𑌯𑍋𑌦𑍍𑌵𑍇𑌗𑍈𑌃, 𑌹𑌰𑍍𑌷𑌶𑍍𑌚 𑌅𑌮𑌰𑍍𑌷𑌶𑍍𑌚 𑌭𑌯𑌂 𑌚 𑌉𑌦𑍍𑌵𑍇𑌗𑌶𑍍𑌚 𑌤𑍈𑌃 𑌹𑌰𑍍𑌷𑌾𑌮𑌰𑍍𑌷𑌭𑌯𑍋𑌦𑍍𑌵𑍇𑌗𑍈𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃—𑌹𑌰𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌲𑌾𑌭𑍇 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌃 𑌰𑍋𑌮𑌾𑌞𑍍𑌚𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌪𑌾𑌤𑌾𑌦𑌿𑌲𑌿𑌙𑍍𑌗𑌃, 𑌅𑌮𑌰𑍍𑌷𑌃 𑌅𑌸𑌹𑌿𑌷𑍍𑌣𑍁𑌤𑌾, 𑌭𑌯𑌂 𑌤𑍍𑌰𑌾𑌸𑌃, 𑌉𑌦𑍍𑌵𑌿𑌗𑍍𑌨𑌤𑌾, 𑌤𑍈𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌯𑌃 𑌸 𑌚 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ கரு ॥

கசு. 𑌅𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌃 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌦𑌕𑍍𑌷 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑍋 𑌗𑌤𑌵𑍍𑌯𑌥𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌯𑍋 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥

𑌅𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌃 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌷𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌃 𑌅𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌃 𑌨𑌿𑌃𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 । 𑌶𑍁𑌚𑌿𑌃, 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌨 𑌆𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌚 𑌶𑍌𑌚𑍇𑌨 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 । 𑌦𑌕𑍍𑌷𑌃, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑍇𑌷𑍁 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌦𑍍𑌯𑌃 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍁𑌂 𑌸𑌮𑌰𑍍𑌥𑌃 । 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌃 𑌨 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌦𑍇𑌃 𑌪𑌕𑍍𑌷𑌂 𑌭𑌜𑌤𑍇 𑌯𑌃 𑌸𑌃 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌃 । 𑌗𑌤𑌵𑍍𑌯𑌥𑌃 𑌗𑌤𑌭𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀, 𑌆𑌰𑌭𑍍𑌯𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌆𑌰𑌮𑍍𑌭𑌾𑌃 𑌇𑌹𑌾𑌮𑍁𑌤𑍍𑌰𑌫𑌲𑌭𑍋𑌗𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌕𑌾𑌮𑌹𑍇𑌤𑍂𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌃, 𑌤𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑍀𑌲𑌮𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌯𑌃 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸𑌃 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ கசு ॥

𑌕𑌿𑌂𑌚—

கஎ. 𑌯𑍋 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 ।
𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌯𑌃 𑌸 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥

எவனிடத்தினின்றும் - எந்த ஸந்யாஸியினிடத்தின்றும். **மகிழ்வு** - விரும்பிய பொருள் கிடைத்தவளவிலே மனம் [அகக்கரணம்] பூரித்தல்; (அது) - மயிர்சிலிர்த்தல், கண்ணீர்சொரிதல் முதலியவற்றால் குறிப்பிக்கப்படுவது. (கரு)

கசு. அபேக்ஷையில்லாதவனாய், பரிசுத்தமானவனாய், ஸாமர்த்தியமுடையவனாய், உதாஸீநனாய், அச்சமற்றவனாய், எல்லாமுயற்சிகளையும் விட்டொழிபவனான என் பக்தன் எவனோ, அவன் எனக்குப் பிரியன்.

அபேக்ஷையில்லாதவன் - தேகம், இந்திரியங்கள், விஷயங்கள், (இவற்றின்) கூட்டரவுமுதலியவற்றின்மேல் அவாஇல்லாதவன். பரிசுத்தமானவன் - வெளிப்பரிசுத்தமும், உள்பரிசுத்தமும் உடையவன். ஸாமர்த்தியமுடையவன் - கார்யங்கள் சடக்கென்று நேர்ந்தவழி, (அவற்றை) உடனே நேராக அறிய(வும்,செய்யவும்) வல்லவன். நண்பன் முதலான ஒருவனுடைய பக்கத்தையும் எவன் சார்வதில்லையோ, அவன் - உதாஸீநன். எல்லாமுயற்சிகளையும் விட்டொழிபவன் - விரும்பியவற்றைத் தருபவையாய், இம்மைமறுமைக்கான செய்கைகளை முற்றத் துறந்திடுந்தன்மையன். (கசு)

மேலும்,

கஎ. எவன் மகிழ்வதில்லையோ, வெறுப்பதில்லையோ, வருந்துவதில்லையோ, விரும்புவதில்லையோ; எவன் நல்லனவற்றையும், தீயனவற்றையும் விட்டொழிபவனோ, பக்தியுள்ளவனோ; அவன் எனக்குப் பிரியன்.

𑌯𑌃 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑌿 𑌇𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌, 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌, 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌯𑍋𑌗𑍇, 𑌨 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿, 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍀 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑍀𑌲𑌂 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌯𑌃 𑌸 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ॥ ௧௭ ॥

௧௮. 𑌸𑌮𑌃 𑌶𑌤𑍍𑌰𑍌 𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌤𑌥𑌾 𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑌯𑍋𑌃 ।
𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍁 𑌸𑌮𑌃 𑌸𑌙𑍍𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ॥

𑌸𑌮𑌃 𑌶𑌤𑍍𑌰𑍌 𑌚 𑌮𑌿𑌤𑍍𑌰𑍇 𑌚, 𑌤𑌥𑌾 𑌮𑌾𑌨𑌾𑌪𑌮𑌾𑌨𑌯𑍋𑌃 𑌪𑍂𑌜𑌾𑌪𑌰𑌿𑌭𑌵𑌯𑍋𑌃, 𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇𑌷𑍁 𑌸𑌮𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌙𑍍𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌶𑍍𑌚 ॥ ௧௮ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௧௯. 𑌤𑍁𑌲𑍍𑌯𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍍𑌮𑍌𑌨𑍀 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 ।
𑌅𑌨𑌿𑌕𑍇𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌤𑌿𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨𑌰𑌃 ॥

𑌤𑍁𑌲𑍍𑌯𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 𑌨𑌿𑌨𑍍𑌦𑌾 𑌚 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌶𑍍𑌚 𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑍀 𑌤𑍇 𑌤𑍁𑌲𑍍𑌯𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌤𑍁𑌲𑍍𑌯𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃 । 𑌮𑍌𑌨𑍀 𑌮𑍌𑌨𑌵𑌾𑌨𑍍 । 𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌨𑌾 ; 𑌤𑌥𑌾 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍—

"𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑌾𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑍋 𑌯𑍇𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌦𑌾𑌶𑌿𑌤𑌃 ।
𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌵𑌚𑌨𑌶𑌾𑌯𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥"

𑌇𑌤𑌿 । 𑌕𑌿𑌞𑍍𑌚—𑌅𑌨𑌿𑌕𑍇𑌤𑌃 𑌨𑌿𑌕𑍇𑌤𑌃 𑌆𑌶𑍍𑌰𑌯𑌃 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌨𑌿𑌯𑌤𑌃 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌅𑌨𑌿𑌕𑍇𑌤𑌃, '𑌨𑌾𑌗𑌾𑌰𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 । 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌷𑌯𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑌿𑌃 𑌸𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌤𑌿𑌃 । 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌨𑌰𑌃 ॥ ௧௯ ॥

எவன் வேண்டியவை வந்தவழி மகிழ்வதில்லையோ, வேண்டாதன வந்தவழி வெறுப்பதில்லையோ, பிரியமானதை இழக்குங்கால் வருந்துவதில்லையோ, கிடையாததை விரும்புவதில்லையோ, நல்வினைகளையும் தீவினைகளையும் முற்றத்துறக்கும்இயல்பினனாய் பக்தியையுடையவனோ, அவன் எனக்குப் பிரியன். (௧௭)

௧௮. (இவன்) பகைவனிடத்தும், நண்பனிடத்தும் ஒப்பநிற்பவன்; அவ்வாறே, மானத்திலும் அவமானத்திலும், குளிரிலும் வெப்பத்திலும், இன்பத்திலும் துன்பத்திலும் ஒப்பநிற்பவன்; (எங்கும்) பற்றில்லாதவன்.

அன்றியும்,

௧௯. இகழ்ச்சி புகழ்ச்சிகளை ஸமமாகக்கொண்டவனும், மௌனமுடையவனும், எதனாலாயினும் திருப்திவந்தவனும், வீடில்லாதவனும், மனம்நிலைத்தவனும், பக்தியுள்ளவனுமான மனிதன் எனக்குப் பிரியன்.

மௌனமுடையவன் - வாயை அடக்கினவன். எதனாலாயினும் திருப்திவந்தவன் - சரீரம் நிலைத்தற்குக்காரணமான (தவிர்க்கமுடியாத உணவுமுதலிய) வற்றினால் மாத்திரம் திருப்தியுள்ளவன்; அவ்வாறே, "எதனையாயினும் உடுப்பவன், எதனையாயினும் உண்பவன், எங்கேயாயினும் படுப்பவன்; (எவன் இவ்வாறு) இருக்கின்றானோ, அவனைத் தேவர்கள் ப்ராஹ்மணன் என்கிறார்கள்" (மகா - சா - மோ - உசரு - கஉ) என்று கூறப்பட்டுளது. வீடில்லாதவன் - (தனக்கென்று) அமைந்த தங்குமிடமில்லாதவன்; "வீட்டின்மேல் (பற்று) இல்லை" என்பதுமுதலான வேறொரு ஸ்மிருதியினாலென்க. மனம் நிலைத்தவன் - பரம்பொருளைப்பற்றிய கருத்து நிலைத்தவன். (௧௯)

‘𑌅𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌅𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌸𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑌿—

௨௦. 𑌯𑍇 𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑌿𑌦𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌤𑍀𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇 𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌯𑍇 𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑌪𑍇𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌤𑍍 𑌅𑌮𑍃𑌤𑌂 𑌚 𑌤𑌤𑍍, 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌇𑌦𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 ‘𑌅𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 𑌅𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌾𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑌮𑌃 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌾 𑌗𑌤𑌿𑌃 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑌾𑌃 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑍍 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 𑌤𑍇 𑌅𑌤𑍀𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 । ‘𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑍋𑌽𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌯𑌤𑍍 𑌸𑍂𑌚𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌯 𑌇𑌹 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑌂 ‘𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌤𑍀𑌵 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃’ 𑌇𑌤𑌿 । 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌮𑍃𑌤𑌮𑍍

உண்மைஅறிவிலே உறுதியாகநிற்பவராய் அழியாப்பொருளைத் தொழுகின்ற துறவிகட்கு "எந்தப் பிராணியையும் பகையாதவன்" (௧௨ - ௧௩) எனத் தொடங்கிய ஒழுக்கமனைத்தையும் முடிக்கிறார் :

௨௦. **எவர்கள் நம்பிக்கையுள்ளவராய், என்னையே மேலாகக்கொண்ட பக்தர்களாய், தருமத்தின் நீங்காத கீழ்க்கூறிய இந்த அமிருதத்தை உண்மையாகவே அநுஷ்டிக்கிறார்களோ, அவர்கள் எனக்கு மிகவும் பிரியர்கள்.**

ஸ்ரீமகாபாரதத்திலே, வ்யாஸரருளிச்செய்த நூறுயிரக்கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக உபநிஷத்துக்களாக ப்ரஹ்மவித்யையாக யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே பக்தியோகம் என்னும் பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றும்.

எவர்கள் - ஸந்யாஸிகள். **தருமத்தின் நீங்காத** - ஒழுக்கத்தின் நீங்காத [நல்லொழுக்கம் நிரம்பிய]. சாகாமைக்கு ஸாதநமாதலால், (பகையின்மை, அவாவின்மை, பொறுமை முதலியவை) அமிருதமென்க. (அமிருதம் - சாகாமை, முக்தி என்றபடி. இவ்வாறாக, "**அமிருதத்தை**" என்பதற்கு - பகையின்மைமுதலிய மோக்ஷஸாதநங்களை எனப் பொருள்கொள்க.) **கீழ்க்கூறிய** - "எந்தப்பிராணியையும் பகையாதவன்" (௧௨ - ௧௩) என்பதுமுதலாகக் கூறப்பட்ட. **என்னையே மேலாகக்கொண்ட** - கீழ்க்கூறிய அழியாப்பொருளாகிய என்னையே யாவற்றினும்மேலான கதியாகக்கொண்ட. **பக்தர்களாய்** - உண்மையறிவென்னும் உயர்ந்த பக்தியிற் சென்றவராய். "நான் ஞானிக்கு மிகவும் பிரியமானவன்" (எ - ௧௭) என்று எது குறிப்பிக்கப்பட்டதோ, அது விரித்துரைத்து, "அவர்கள் எனக்கு மிகவும் பிரியர்கள்" (௧௨ - ௨௦) என இங்கே முடிக்கப்பெற்றது. நல்லொழுக்கம்நிரம்பிய கீழ்க்கூறிய இந்த மோக்ஷஸாதநங்களை அநுஷ்டிப்பவன் எங்குமுள்ள பரமேச்வரனாகிய பகவானுக்கு மிகவும் பிரியனாகிறான்

इदं धर्म्यामृतम् अनुतिष्ठन् भगवतः विष्णोः परमेश्वरस्य अतीव प्रियः भवति तस्मात् इदं धर्म्यामृतं मुमुक्षुणा यत्नतः अनुष्ठेयं, विष्णोः प्रियं परं धाम जिगमिषुणा ; इति वाक्यार्थः ॥ २० ॥

इति श्रीमद्भगवद्गीताभाष्ये द्वादशोऽध्यायः ॥

ஆதலால், (ஸம்ஸாரத்தினின்றும்) விடுபட விரும்பியவனாய் விஷ்ணுவிற்குப் பிரியமான உயர்ந்த நிலையை அடையக் கருதுபவன் நல்லொழுக்கம்நிரம்பிய இம்மோக்ஷஸாதநங்களை முயற்சியொடு அநுஷ்டிக்கவேண்டும் ; என்பது - (இப்)பிரகரணத்தின் பொருளென்க. (௨0)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑌃 ॥

𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌦𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍀 𑌸𑍂𑌚𑌿𑌤𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯, 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌅𑌷𑍍𑌟𑌧𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌅𑌪𑌰𑌾 𑌸𑌂𑌸𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌾, 𑌪𑌰𑌾 𑌚 𑌅𑌨𑍍𑌯𑌾 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾; 𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌜𑌗𑌦𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌲𑌯𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌲𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌦𑍍𑌵𑌯𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌤𑌦𑍍𑌵𑌤𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌧𑌾𑌰𑌣𑌾𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

𑌅𑌤𑍀𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌚 ‘𑌅𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌨𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌯𑌥𑌾 𑌤𑍇 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌕𑍇𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌧𑌰𑍍𑌮𑌾𑌚𑌰𑌣𑌾𑌤𑍍 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑌿? 𑌏𑌵𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌯𑌮𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

பதின்மூன்ரும் அத்தியாயம்: க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞவிபாகயோகம்.

இவ்வத்தியாயத்திற் கூறப்படுகின்ற முக்கிய விஷயம்.

ஏழாம் அத்தியாயத்தினுள், பரமேச்வரனுக்கு இரண்டு பிரகிருதிகள் குறிப்பிக்கப்பட்டன; (அவற்றுள், ஒன்று) முக்குணவடிவமாய் எட்டுவகையாக வேறுபட்டது, ஸம்ஸாரத்திற்குக் காரணமாதலால் தாழ்ந்தது; மற்றையதோ உயர்ந்தது, உயிராயிருப்பது, க்ஷேத்ரத்தை [ஜடப்பொருளை] அறிவதாகி ஈச்வரவடிவமாயுள்ளது. பிரபஞ்சம் தோன்றுதற்கும் நிலைத்தற்கும் மறைதற்கும் காரணமாதலை ஈச்வரன் இப்பிரகிருதிகளால் அடைகிருன் [உலகம் உண்டாதல் முதலியவற்றிற்கு ஈச்வரன் இந்த இரண்டு பிரகிருதிகளாலும் காரணமாகிருன்]. இனி, க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் [க்ஷேத்ரத்தை அறிவது] என்னும் இரண்டு பிரகிருதிகளை உணர்த்தும்வழியாக அவற்றையுடைய ஈச்வரனது உண்மையை நிச்சயமாக நிர்ணயிக்கும்பொருட்டு, க்ஷேத்ரத்தைப்பற்றிய அத்தியாயம் தொடங்கப்படுகின்றது.

சென்ற அடுத்த அத்தியாயத்தினுள் "எந்தப்பிராணியையும் பகையாதவன்" (௧௨ - ௧௩) என்பது முதல் (அந்த) அத்தியாய முடிவுவரை, மெய்யறிவுள்ள துறவிகட்கு நிஷ்டையானது, அவர்கள் ஒழுகும்விதமானது கூறப்பட்டது.

(வினு) :— ஆனல், அவர்கள் எத்தகைய மெய்யறிவைக் கூடியவர்களாய்க் கீழ்க்கூறிய ஒழுக்கங்களை அனுஷ்டிப்பதனல் பகவானுக்குப் பிரியமானவராக ஆகிருர்கள் என்பது?

(விடை) :—இத்தகைய விஷயத்தையும் உடையதாய் இவ்வத்தியாயம் தொடங்கப்படுகின்றது. (ஆகவே, விடையை இவ்வத்தியாயத்தினுள் காண்க.)

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌶𑍍 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌵𑌿𑌷𑌯𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌪𑌰𑌿𑌣𑌤𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌭𑍋𑌗𑌾𑌪𑌵𑌰𑍍𑌗𑌾𑌰𑍍𑌥𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑌯𑌾 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌸𑌂𑌘𑌾𑌤𑌃 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌤𑌦𑍍 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌉𑌵𑌾𑌚 ॥

௧. 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌏𑌤𑌦𑍍𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

‘𑌇𑌦𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌶𑌿𑌨𑌷𑍍𑌟𑌿 ‘𑌶𑌰𑍀𑌰𑌮𑍍’ 𑌇𑌤𑌿 । 𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌕𑍍𑌷𑌤𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍, 𑌕𑍍𑌷𑌯𑌾𑌤𑍍, 𑌕𑍍𑌷𑌰𑌣𑌾𑌤𑍍, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌦𑍍𑌵𑌾 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 𑌇𑌤𑌿—‘𑌇𑌤𑌿’ 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌶𑌬𑍍𑌦𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌕𑌃—𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 𑌅𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌯𑌃 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿, 𑌆𑌪𑌾𑌦𑌤𑌲𑌮𑌸𑍍𑌤𑌕𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍇𑌨 𑌔𑌪𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨 𑌵𑌾 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑍋𑌤𑌿 𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃, 𑌤𑌂 𑌵𑍇𑌦𑌿𑌤𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 ‘𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃’ 𑌇𑌤𑌿—‘𑌇𑌤𑌿’ 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌶𑌬𑍍𑌦𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌕𑌃 𑌏𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍—𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 । 𑌕𑍇 ? 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 𑌤𑍌 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍌 𑌯𑍇 𑌵𑌿𑌦𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

உடலும், ஆத்மாவும்.

இனி, முக்குணவடிவமான பிரகிருதியானது-சரீரங்கள், இந்திரியங்கள், இந்திரியவிஷயங்கள் என்ற எல்லாவற்றினுடைய உருவமாகப் பரிணமித்து, போகம் மோக்ஷம் என்னும் பயன்களைப் புருஷன் செய்துகொள்ளவேண்டியதனால் தேகம் இந்திரியம் முதலியவடிவமாக ஒருங்குசேர்க்கப்படுகின்றது. அத்தகைய இச்சேர்க்கை தான், இச்சரீரம். ஆகவே, பகவான் இதனைக் கூறலாயினர் :

பகவான் சொல்லுகின்றார் :

௧. கௌந்தேய ! இது (அதாவது) சரீரம் “ க்ஷேத்ரம் ” என்று வழங்கப்படுகின்றது. இதனை எவன் அறிகின்றானோ, அவனை “ க்ஷேத்ரஜ்ஞன் ” என்று அவர்களையுணர்ந்தவர்கள் கூறுகிறார்கள்.

“இது” என்னும் ஸர்வநாமத்தால் கூறப்பட்டதை “சரீரம்” என விசேஷிக்கிறார். (இடைச்சொல்லால் வரும் அது, இது முதலான பெயர்களை ‘ஸர்வநாமம்’ என்பர் வடநூலார்.) கௌந்தேய! (இது)-கெடுதியினின்றும் பாதுகாக்கப்படுவதனாலும், அழிவதனாலும், தேய்வதனாலும், வயலில் (நெல்) போல, இதில் கர்மத்தின்பயன் விளைவதனாலும் க்ஷேத்ரம் என்று கூறப்படுகின்றது.—“ என்று ” என்னும்சொல் - (க்ஷேத்ரம் என்னும்)சொல்லையே அர்த்தமாகக்கொண்டது.—இச்சரீரமாகிய க்ஷேத்ரத்தையெவன் அறிகின்றானோ, உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை அறிவினால் எட்டுகின்றானோ, இயற்கையுணர்வினாலாவது, உபதேசஉணர்வினாலாவது (தன்னினும்) வேறாக விஷயப்படுத்திஉணர்கின்றானோ, அந்த உணர்பவனை க்ஷேத்ரஜ்ஞன் எனக் கூறுகிறார்கள்.—யார் ?—அந்த க்ஷேத்ரத்தையும்,க்ஷேத்ரஜ்ஞனையும் அறிந்தவர்கள்.—“என்று”என்னும் சொல் - முன்போல, (க்ஷேத்ரஜ்ஞன் என்னும்)சொல்லையே அர்த்தமாகக்கொண்டது.

एवं क्षेत्रक्षेत्रज्ञौ व्याख्यातौ । किम् एतावन्मात्रेण ज्ञानेन ज्ञातव्यौ इति ? नेति उच्यते—

२. क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥

क्षेत्रज्ञं यथोक्तलक्षणं चापि मां परमेश्वरम् असंसारिणं विद्धि जानीहि । सर्वक्षेत्रेषु यः क्षेत्रज्ञः ब्रह्मादिस्तम्बपर्यन्तानेकक्षेत्रोपाधिप्रविभक्तः, तं निरस्तसर्वोपाधिभेदं सदसदादिशब्दप्रत्ययागोचरं विद्धि इति अभिप्रायः । हे भारत यस्मात् क्षेत्रक्षेत्रज्ञेश्वरयाथात्म्यव्यतिरेकेण न ज्ञानगोचरम् अन्यत् अवशिष्टम् अस्ति, तस्मात् क्षेत्रक्षेत्रज्ञयोः ज्ञेयभूतयोः यत् ज्ञानं, क्षेत्रक्षेत्रज्ञौ येन ज्ञानेन विषयीक्रियेते, तत् ज्ञानं सम्यग्ज्ञानम् इति मतम् अभिप्रायः मम ईश्वरस्य विष्णोः ॥

ननु सर्वक्षेत्रेषु एक एव ईश्वरः, न अन्यः तद्व्यतिरिक्तः भोक्ता विद्यते चेत्, ततः ईश्वरस्य संसारित्वं प्राप्तम्; ईश्वरव्यति-

---

ஆத்மாவும், பகவானும் உண்மைநிலையிலே ஒன்று.

இவ்வாறு க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞரிருவரும் விவரிக்கப்பெற்றார்கள். (அவர்கள்) இவ்வளவுமாத்திரமான அறிவைக்கொண்டே அறியத்தக்கவரா என்பது?—அல்லர் எனக் கூறப்படுகின்றது [உடம்பை அறிபவனை ஆத்மா அந்தஉடம்பினின்றும் வேறு என்ற இவ்வளவு அறிவுமாத்திரம் போதுமோ? எனின், போதாது. மற்றென்னவெனின், கூறுவோம்]:

௨. பாரத ! எல்லாக்ஷேத்ரங்களிலும் (உள்ள) க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி. க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய அறிவு எதுவோ, அது(தான்) என்னால் அறிவாகக் கருதப்பட்டுள்ளது.

கீழ்க்கூறிய க்ஷேத்ரஜ்ஞனை - (பிறந்து இறந்து உழலும்) உலகப்பிராணியல்லாத பரமேச்வரனாகிய நான் என்றும் அறிந்துகொள்: எவன் எல்லாக்ஷேத்ரங்களிலும் க்ஷேத்ரஜ்ஞனாய், ப்ரஹ்மாமுதல் புல்வரையிலுமுள்ள க்ஷேத்ரங்களாகிய பல உபாதிகளால் பலவாறு வேறுபட்டிருக்கின்றானோ, அவனை - உபாதிகளுடைய எத்தகைய வேற்றுமையும் அற்றவனாகவும், 'உள்ளது', 'இல்லது' முதலிய சொற்களுக்கும் நினைப்பிற்கும் எட்டாதவனாகவும் தெரிந்துகொள் என்பது கருத்து. ஏ! பாரத! க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன், ஈச்வரன் இவர்களுடைய உள்ளபடியான தன்மையைத்தவிர அறியவேண்டியது வேறொன்றும் மிஞ்சிநிற்பதில்லை ஆதலின், அறியப்படும் பொருள்களாகிய க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கள் எந்த அறிவினால் அறியப்படுகிறார்களோ, அந்த அறிவு - மெய்யறிவு என்பது, எங்குமுள்ள பொருளாகிய ஈச்வரனான என்னுடைய கருத்து.

ஸம்ஸாரமும், ஸம்ஸாரியும் அறியாமையினால்ஆனவை.

(ஸம்ஸாரம் - பிறந்து இறந்து உழலுதல். இதனையுடையவன் - ஸம்ஸாரி.)

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், எல்லாக்ஷேத்ரங்களிலும் ஈச்வரன் ஒருவன் தான் இருக்கிறானேயன்றி, அவனிலும் வேறான போக்தா [அநுபவிப்பவன்] மற்றொருவன் இல்லை எனின்,—அப்பொழுது ஈச்வரன் ஸம்ஸாரி என்று ஆகும்; அல்லது, ஈச்

श्वरेण वा संसारिणः अन्यस्य अभावात् संसाराभावप्रसङ्गः । तदु-भयम् अनिष्टं, बन्धमोक्षतद्धेतुशास्त्रानर्थक्यप्रसङ्गात्, प्रत्यक्षादि-प्रमाणविरोधाच्च — प्रत्यक्षेण तावत् सुखदुःखतद्धेतुलक्षणः संसारः उपलभ्यते; जगद्वैचित्र्यात् च पुण्यपापनिमित्तः संसारः अनुमीयते । सर्वम् एतत् अनुपपन्नम् आत्मेश्वरैक्ये ॥

न; ज्ञानाज्ञानयोः अन्यत्वेन उपपत्तेः — 'दूरमेते विपरीते विषूची अविद्या या च विद्येति ज्ञाता' । तथा तयोः विद्याविद्ययोः स्वरूपभेदः विपाकः निर्दिष्टः 'श्रेयश्च प्रेयश्च' इति — विद्याविषयं श्रेयः, प्रेयस्तु अविद्याकार्यम् इति । तथा च व्यासः — 'याविमौ पन्थानौ' इत्यादि, 'इमौ द्वावेव पन्थानौ' इत्यादि च । इह च द्वे निष्ठे उक्ते । अविद्या च कार्येण सह हातव्या इति श्रुतिस्मृतिन्यायेभ्यः अवगम्यते । श्रुतयः तावत् — 'इह चेदवेदीदथ सत्यमस्ति न चेदिहावेदीन्महती विनष्टिः' 'तमेवं विद्वानमृत इह भवति । नान्यः पन्था विद्यतेऽयनाय' 'विद्वा-

---

வரனைத்தவிர வேறு ஸம்ஸாரி இல்லாமையினால், ஸம்ஸாரம் இல்லையாதல் வேண்டும். அவை இரண்டும் ஏற்காதவை ; ஏனெனில், (அப்பொழுதும்) பந்தத்தையும், மோக்ஷத்தையும், அவற்றின் காரணங்களையும் பற்றிய நூல்கள் வீணுதல் வேண்டும் ; அன்றியும், (ஸம்ஸாரமில்லையென்பது) பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்கட்கு விரோதமாகும். மேலும், பிரபஞ்சத்திலே வெவ்வேறான வேற்றுமையைக் காண்பதனால், புண்யபாவங்களாலாகும் ஸம்ஸாரமானது அநுமானிக்கப்படுகிறது. ஆத்மாவும், ஈச்வரனும் ஒன்றுதான் என்றவழி, இதெல்லாம் பொருந்தாது.

ஹக்கட்டியிலே நெருப்பு [வெளிப்படுவது] போல, அதில் [தேகேந்திரியச் சேர்க்கையில்] வெளிப்பட்ட அகக்கரணப்போக்கு: [பழுக்கக்காய்ந்த ஓர் உலோஹக்கட்டியிலே நெருப்பு வெளிப்படுவதுபோல, தேகேந்திரியச் சேர்க்கையிலே புத்திவிருத்தி வெளிப்படுகின்றது. நெருப்பு அதிலே வெளிப்பட்டதாய், அவ்வுலோஹக்கட்டியையே நெருப்பென்று கொள்ளும்படிசெய்கின்றது. அவ்வண்ணமே, ஆத்மஅறிவானது, ஸ்வரூபஞானமானது, புத்திவிருத்தியில் வெளிப்பட்டதாய், அப்புத்திவிருத்தியையே ஆத்மாவாக உணர்த்துகின்றது. ஆகவே, ஸ்வரூபஅறிவினுடைய போலித்தோற்றத்தினால் வியாபிக்கப்பெற்ற அப்புத்திவிருத்திதான் உணர்ச்சியென்பது.—ஆ. இங்கே, "கொள்ளும்படி செய்கின்றது" என்பதும், "உணர்த்துகின்றது" என்பதும் - உபசாரவழக்கு.] அறியப்படும்பொருளாதலால் அதுவும் [அவ்வுணர்ச்சியும்] க்ஷேத்ரமாம். அகக்கரணத்தன்மையனைத்திற்கும் உபலக்ஷணத்திற்காக விருப்பு முதலியவற்றைக் கொள்க; ஏனெனில், கூறப்பட்டுள்ள அதனை முடிக்கிறார் [பகவான் இங்குக் கூறிவந்த க்ஷேத்ரத்தை முடிக்கின்றாராதலின், விருப்பு முதலிய சொற்கள் தமது இனமாகிய நினைப்பு முதலிய அகக்கரணத்தன்மையனைத்தையும் உணர்த்துவதற்காகக் கூறப்பட்டன என்க.—ஆ.] இந்த க்ஷேத்ரமானது மஹத் [புத்தி] முதலான விகாரத்தோடு கூறப்பட்டது. (௬)

ஆத்மஞானத்தைக் கொடுக்கும் ஒழுக்கங்கள்.

எந்த க்ஷேத்ரவேறுபாடுகளெல்லாவற்றினுடைய சேர்க்கையானது இச்சரீரமாகிய க்ஷேத்ரம் (கங - க) எனக் கூறப்பட்டதோ, அந்த க்ஷேத்ரமானது மஹாபூதங்கள் முதலிய பிரிவுகளாக வேறுபட்டதாய்த் திண்மைவரை விரித்துரைக்கப்பட்டது (கங - ரு, ௬). க்ஷேத்ரஜ்ஞனுடைய சிறப்பியல்புகள் இனிக் கூறப்படும். வல்லமைபொருந்திய எந்த க்ஷேத்ரஜ்ஞனைப்பற்றிய அறிவினால் சாகாமை கிடைக்கின்றதோ, அவனைப் பகவான் "அறியவேண்டியது எதுவோ, அதனைக் கூறுவேன்" (கங - கஉ) என்பதுமுதலாகத் தாமே விசேஷமாய் அருளிச்செய்வர். ஆனால், இப்பொழுது, அறிவிற்கு ஸாதகமான பணிவுமுதலாகிய ஒழுக்கத்தை (அருளிச்செய்கிறார்). எது இருந்தால் (ஒருவன்) அறியவேண்டியதை அறிதற்குத் தக்கோனாகவும், உரிமையுள்ளவனாகவும் ஆகிறானோ; எதனுள் கருத்தூன்றிய துறவியானவன் ஞானநிஷ்டன்

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌦𑍍 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌵𑌿𑌦𑌧𑌾𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍—

எ. 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑌹𑌿𑌂𑌸𑌾 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌂 𑌶𑍌𑌚𑌂 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥

𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍—𑌮𑌾𑌨𑌿𑌨𑌃 𑌭𑌾𑌵𑌃 𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑍍𑌲𑌾𑌘𑌨𑌮𑍍, 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍—𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑌣𑌂 𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌤𑌦𑌭𑌾𑌵𑌃 𑌅𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌅𑌹𑌿𑌂𑌸𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑍀𑌡𑌨𑌮𑍍 । 𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌪𑌰𑌾𑌪𑌰𑌾𑌧𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 । 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 𑌋𑌜𑍁𑌭𑌾𑌵𑌃 𑌅𑌵𑌕𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑍋𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑍁𑌃 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌣 𑌸𑍇𑌵𑌨𑌮𑍍 । 𑌶𑍌𑌚𑌂 𑌕𑌾𑌯𑌮𑌲𑌾𑌨𑌾𑌂 𑌮𑍃𑌜𑍍𑌜𑌲𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌮𑍍 ; 𑌅𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌨𑌸𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌮𑌲𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑌨𑌯𑌨𑌂 𑌶𑍌𑌚𑌮𑍍 । 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌭𑌾𑌵𑌃, 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌏𑌵 𑌕𑍃𑌤𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌪𑌕𑌾𑌰𑌕𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌸𑌂𑌘𑌾𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌏𑌵 𑌨𑌿𑌰𑍋𑌧𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥ எ ॥

[ஞானவழியிலே நிலைத்தவன்] எனப்படுகின்றானே ; அந்தப் பணிவு முதலான ஒழுக்கத்தைப் பகவான் அருளிச்செய்கிறார் : (அவ்வொழுக்கம்) ஞானத்திற்குக் கருவியாதலால், ஞானம் என்னும்சொல்லால் கூறப்படுவது [அவ்வொழுக்கத்திற்கே ஞானம் என்று பெயர்].

எ. பணிவு, ஒடுக்கவணக்கம், தீங்கின்மை, பொறுமை, நேர்மை, ஆசார்யனைத்தொழுதல், பரிசுத்தம், உறுதியான தன்மை, தன்னடக்கம் (இவை - கைக்கொள்ளவேண்டிய ஒழுக்கங்களாம்).

(மானமென்பது - மறைந்த கர்வம். அதனையுடையவன் - மானி.) மானியின் தன்மை - தற்புகழ்ச்சி. அஃதின்மை - பணிவு. தனது ஒழுக்கத்தை(ப் பெருமைமுதலியவற்றிற்காக)ப் பிரஸித்தப்படுத்துதல் - டம்பமுடையவனது இயல்பு. அஃதின்மை - டம்பமில்லாமை = ஒடுக்கவணக்கம். தீங்கின்மை - பிராணிகளை ஹிம்ஸியாமை. பொறுமை - பிறர்பிசகு நேர்ந்தவழி (பிறர் தீங்கு செய்தவழி மனம்) மாறுபடாமை. நேர்மை - நேரான தன்மை, கோணலின்மை [மனத்திலுள்ளபடி வியவகரித்தல், பிறரை வஞ்சித்தலின்மை]. ஆசார்யனைத் தொழுதல் - மோக்ஷத்திற்கு உபாயங்களை உபதேசித்தருளும் ஆசார்யனை, பணிவிடை முதலியன செய்து தொழுதல். பரிசுத்தமென்பது - (வெளிப்பரிசுத்தம், உள்பரிசித்தம் என இருவகைத்து. அவற்றுள், வெளிப்பரிசுத்தமென்பது) - உடம்புஅழுக்குக்களை மண்ணினாலும், நீரினாலும் கழுவுதல் ; உள்பரிசுத்தமோ - பிரதிகூலத்தைப் பாவிப்பதனால் [உருவம்முதலிய விஷயங்களிலுள்ள தீங்குகளை உற்றுநோக்கும் நோக்கையே பயிற்சி செய்வதனால்] ஆசைமுதலிய மனஅழுக்குக்களைப் போக்குதல். உறுதியான தன்மை - மோக்ஷவழியிலேயே உறுதிசெய்துநிற்றல். தன்னடக்கம் என்பது - தனக்கு [தான் ஈடேறுதற்கு] உதவி செய்வதனால் தான் என்னும் சொல்லால் கூறப்படும் தேகேந்திரியச்சேர்க்கையை அடக்குதல் : இயற்கையாகவே எல்லாவழியிலும் செல்லுகின்ற (தேகேந்திரியங்களை) நல்வழியிலேயே தடுத்து நிறுத்துதல். (ஒருவன் தன்னை ஈடேற்றிக்கொள்ளுதற்குச் சரீரமே முதல்கருவி ; எப்படியெனில்,— சரீரத்தினால் நித்யகர்மங்களை அநுஷ்டிக்க, அதனால் புண்ய முண்டாக, அதனால் பாவம் தேய, அதனால் புத்தி திருந்த, அதனால் ஞானம் பிறக்க, அதனால் முக்திபெறுதலாம் என நோக்கிக்கொள்க). (எ)

கிஞ்ச—

அ. இந்த்ரியார்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவ ச ।
ஜந்மம்ருத்யுஜராவ்யாதிது:கதோஷாநுதர்ஶநம் ॥

இந்த்ரியார்தேஷு ஶப்தாதிஷு த்ருஷ்டாத்ருஷ்டேஷு ஸதோஷேஷு விராக-பாவோ வைராக்யம் । அநஹங்கார: அஹங்காராபாவ: ஏவ ச । ஜந்மம்ருத்யு-ஜராவ்யாதிது:கதோஷாநுதர்ஶநம்—ஜந்ம ச ம்ருத்யுஶ்ச ஜரா ச வ்யாதயஶ்ச து:கானி ச தேஷு ஜந்மாதிது:காந்தேஷு ப்ரத்யேகம் தோஷாநுதர்ஶநம் । ஜநநி கர்பவாஸயோநித்வாரநிஸ்ஸரணம் தோஷ: । தஸ்ய அநுதர்ஶநம் அநுஸந்தா-நம் । ததா ம்ருத்யௌ தோஷாநுதர்ஶநம் । ததா ஜராயாம் ப்ரஜ்ஞாஶக்திதேஜோ-நிரோததோஷாநுதர்ஶநம், பரிபூததா சேதி । ததா வ்யாதிஷு ஶிரோ-ரோகாதிஷு தோஷாநுதர்ஶநம் । ததா து:கேஷு ஆத்யாத்மிகாதிபௌதி-காதிதைவிகநிமித்தேஷு ॥

அத வா— து:கான்யேவ தோஷ: து:கதோஷ: தஸ்ய ஜந்மாதிஷு பூர்வவத் அநுதர்ஶநம்—து:கம் ஜந்ம, து:கம் ம்ருத்யு:, து:கம் ஜரா, து:கம் வ்யாதய: । து:கநிமித்தத்வாத் ஜந்மாதய: து:கானி, ந புந: ஸ்வரூபேணைவ து:கம் இதி ॥

மேலும்,

அ. இந்திரிய விஷயங்களின்மேல் அவாவின்மையும், அஹங்காரமின்மையும், பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி, துன்பம் என்பனவற்றிலே தீமையை உணர்தலும் (ஞானத்திற்கு அந்தரங்கமான வழிகளாம்.)

இந்திரியவிஷயங்களின்மேல் அவாவின்மை - ஓசைமுதலிய இம்மைமறுமைப் போகங்களிலே ஆசையின்மை. (தற்புகழ்ச்சி இல்லையாயினும், " நான் மேலானவன் " என்று மனத்திலுதிக்கும் செருக்கு - அஹங்காரமென்பது. அஃதின்மை) - அஹங்காரமின்மை. பிறப்பு..... உணர்தல் - பிறப்புமுதலாகத் துன்பம் ஈறாகவுள்ளவற்றில் ஒவ்வொன்றிலும் தீங்கைக் காணுதல். கருப்பையினுள் வாழ்தலும், யோநியின்வழியாக வெளிவருதலும் பிறப்பிலே தீங்கு; அதனைக் காணுதல் - அதனை ஆலோசித்தல். அவ்வாறே, இறப்பில் (எல்லா மர்மஸ்தாநங்களையும் அறுத்தலாகிய) தீங்கை ஆலோசித்தல். அவ்வாறே, மூப்பில் அறிவு தடுமாறுதலும், வலிமை குன்றுதலும், ஒளிமழுங்குதலுமாகிய தீங்கை ஆலோசித்தல்; அலக்ஷ்யமாக ஏளனஞ்செய்யப்பெறுதலும் (மூப்பிலே தீங்கு) என்க. அவ்வண்ணமே, தலைவலிமுதலிய நோய்களிலே தீங்கை ஆலோசித்தல். அவ்வாறே, தன்னைப்பற்றியும், பிறஉயிர்களைப்பற்றியும், தெய்வத்தைப்பற்றியும் வரும் துன்பங்களிலே (தீங்கை ஆலோசித்தல்).

அல்லது, (வேறுவிதமாக உரைகொள்ளலாம்):—துன்பங்களே தீங்கு; அதனைப் பிறப்பு முதலியவற்றில் முன்போல ஆலோசித்தல்; பிறப்பு - துன்பமாம்: இறப்பு - துன்பமாம்: மூப்பு - துன்பமாம்: நோய்கள் - துன்பமாம். பிறப்பு முதலியன துன்பத்திற்குக் காரணமாதலால் துன்பங்களேயன்றி தமது வடிவமாகவே துன்பங்களல்ல [அவற்றின்வடிவமே துன்பவடிவமன்று] என்க.

एवं जन्मादिषु दुःखदोषानुदर्शनाद्देहेन्द्रियविषयभोगेषु वैराग्यमुपजायते । ततः प्रत्यगात्मनि प्रवृत्तिः करणानामात्मदर्शनाय । एवं ज्ञानहेतुत्वाज्ज्ञानमुच्यते जन्मादिदुःखदोषानुदर्शनम् ॥ அ ॥

किञ्च—

கூ. असक्तिरनभिष्वङ्गः पुत्रदारगृहादिषु ।
नित्यं च समचित्तत्वमिष्टानिष्टोपपत्तिषु ॥

असक्तिः—सक्तिः सङ्गनिमित्तेषु विषयेषु प्रीतिमात्रं, तदभावः असक्तिः । अनभिष्वङ्गः अभिष्वङ्गाभावः । अभिष्वङ्गो नाम सक्तिविशेष एव अनन्यात्मभावनालक्षणः ; यथा अन्यस्मिन् सुखिनि दुःखिनि वा "अहमेव सुखी दुःखी च," जीवति मृते वा "अहमेव जीवामि मरिष्यामि च" इति । क्व इति? आह—पुत्रदारगृहादिषु पुत्रेषु दारेषु गृहेषु—'आदि'ग्रहणादन्येष्वपि अत्यन्तेष्टेषु दासवर्गादिषु । तच्चोभयं ज्ञानार्थत्वाज्ज्ञानमुच्यते । नित्यं च समचित्तत्वं तुल्यचित्तता—

இவ்வாறாக, பிறப்புமுதலியவற்றிலே துன்பமென்னும்தீங்கை உணர்வதனால் தேகம், இந்திரியங்கள், விஷயங்கள் இவற்றினுடைய போகங்களின்மேல் அவாவின்மை பிறக்கின்றது. அதனால் இந்திரியங்கள் ஆத்மாவைக் காணும்பொருட்டு உள்ளேயுள்ள ஆத்மாவை நோக்கிச் செல்லுதல் (கூடும்). இவ்வாறாக, பிறப்புமுதலியவற்றில் துன்பமென்னும்தீங்கை உணர்தல் ஞானத்தைத்தருவதாதலால் ஞானம் எனப்படுகின்றது. (அ)

அன்றியும்,

கூ. மக்கள் மனைவி வீடு முதலானவர்மீது பற்றின்மையும், அபிமானமின்மையும், வேண்டியனவும் வேண்டாதனவும் வருவதிலே எப்பொழுதும் ஒரேமனமுள்ள தன்மையும் (ஞானத்திற்கு அந்தரங்கமான கருவிகளாம்).

பற்று என்பது - பற்றுக்குக் காரணமான பொருள்களிலே பிரியம்மாத்திரம். அஃதின்மை - பற்றின்மை. அபிமானமென்பது - வேறாகாத தன்னைப் பாவித்தலாகிய [பற்றுவைக்கப்பட்டபொருளும் தானும் ஒன்றெனப்பாவித்தலாகிய] மிகுதியான ஓர் வகைப் பற்றேதான். உதாரணமாக, வேறொருவன் இன்பத்தையேனும் துன்பத்தையேனும் உடையவனாயிருக்குமளவிலே, "நானே இன்பத்தையுடையவன், நானே துன்பத்தையுடையவன்" (என்பதையும், வேறொருவன்) வாழுமளவிலாயினும், சாகுமளவிலாயினும், "நானே வாழ்கின்றேன், நானே சாகின்றேன்" என்பதை(யும் காண்க. இத்தகைய பற்றின்மை - அபிமானமின்மை).—எங்கே என்பது? —கூறுகிறார்: —மக்கள், மனைவி, வீடு முதலானோர்மீது. "முதலானவர்" என்றதனால் - மிகவும் பிரியமான மற்றைய வேலைக்காரஜனம் முதலானோரிடத்தும் என்க. அவையிரண்டும் [பற்றின்மையும், அபிமானமின்மையும்] ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞானம் எனப்படுகின்றன. எப்பொழுதும் ஒரேமனமுள்ளதன்மை எதிலே என்பது? —வேண்டியனவும் வேண்

𑌷𑍁?—𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑌯𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌯𑌃 𑌤𑌾𑌸𑍁 𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 𑌇𑌷𑍍𑌟𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 𑌨 𑌹𑍃𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌨 𑌕𑍁𑌪𑍍𑌯𑌤𑌿 𑌚 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌷𑍁 । 𑌤𑌚𑍍𑌚 𑌏𑌤𑌤𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌮𑌚𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ॥௯॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௰. 𑌮𑌯𑌿 𑌚𑌾𑌨𑌨𑍍𑌯𑌯𑍋𑌗𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑌿𑌤𑍍𑌵𑌮𑌰𑌤𑌿𑌰𑍍𑌜𑌨𑌸𑌂𑌸𑌦𑌿 ॥

𑌮𑌯𑌿 𑌚 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇 𑌅𑌨𑌨𑍍𑌯𑌯𑍋𑌗𑍇𑌨—𑌅𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 "𑌨 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌤𑌃 𑌸 𑌏𑌵 𑌨𑌃 𑌗𑌤𑌿𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌨𑌨𑍍𑌯𑌯𑍋𑌗𑌃, 𑌤𑍇𑌨 𑌭𑌜𑌨𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌨 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌰𑌣𑌶𑍀𑌲𑌾 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑍀, 𑌸𑌾 𑌚 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 । 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌅𑌶𑍁𑌚𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌪𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌰𑌹𑌿𑌤𑌃 𑌅𑌰𑌣𑍍𑌯𑌨𑌦𑍀𑌪𑍁𑌲𑌿𑌨𑌦𑍇𑌵𑌗𑍃𑌹𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑍋 𑌦𑍇𑌶𑌃, 𑌤𑌂 𑌸𑍇𑌵𑌿𑌤𑍁𑌂 𑌶𑍀𑌲𑌮𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑍀, 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌃 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 '𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌹𑌿 𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 । 𑌤𑌤𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑌨𑌾 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑍇 𑌸𑌂𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌵𑌿𑌵𑌿𑌕𑍍𑌤𑌦𑍇𑌶𑌸𑍇𑌵𑌿𑌤𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌰𑌤𑌿𑌃 𑌅𑌰𑌮𑌣𑌂 𑌜𑌨𑌸𑌂𑌸𑌦𑌿, 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌶𑍂𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌨𑍀𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌸𑌤𑍍 𑌸𑌮𑌵𑌾𑌯𑌃 𑌜𑌨𑌸𑌂-

---

டாதனவும் வருவதிலே. வேண்டியவை வருவதிலே மகிழ்வதில்லை; வேண்டாதவை வருவதிலேயும் மனங்கொதிப்பதில்லை. ஆதலால், எப்பொழுதும் இந்த ஒரேமனமுள்ள தன்மை ஞான(ஸாதந)மாம். (௯)

இன்னும்,

௰. அநந்யயோகத்தினால் என்னிடத்துப் பிறழாதபக்தியும், தனிமையான இடத்தைச் சார்பவனாதலும், ஜனக்கூட்டத்தில் அருவருப்பும் (ஞானத்திற்கு ஸாதநங்களாம்).

என்னிடத்து - ஈச்வரனிடத்து. அநந்ய யோகமென்பது - வேறுநினைப்பில்லாமை, ஒரேஸமாதி : (அதாவது,) "பகவான் வாஸுதேவனைக்காட்டிலும் வேறொருவன் இல்லை ; ஆதலால், அவனேதான் நமக்கு அடைக்கலம்" என இவ்வாறு நிச்சயமாயுள்ள பிறழாதபுத்தி. அதனால் (பகவானைத்) தொழுதல் - பிறழாத பக்தி. அதுவும் ஞான (ஸாதந)மாம். இயற்கையினாலாயினும், (மெழுகிப்பெருக்கிச்) சுத்திசெய்வதனாலாயினும் அசுத்தம்முதலியன இல்லாததும், பாம்பு திருடன் புலி இவர்களினின்றும் பயம்முதலியன இல்லாததுமான வனம்,ஆற்றுமணல், தேவாலயம் முதலியது - தனிமையான இடம். அதனைச் சார்பவனாதல் - அதனைச் சாருந்தன்மையனாதல். தனிமையான இடத்திலன்றோ மனம் தெளிகின்றது ; ஆகவே, ஆத்மாமுதலியதைத் தியானித்தல் தனிமையிலே நன்கு உண்டாகின்றது. ஆதலால், தனிஇடத்தைச் சார்பவனாதல் ஞானம் எனப்படுகின்றது. ஜனக்கூட்டமென்பது - (இங்கே,) சீர்திருந்திய அறிவில்லாதவராய்ச் சிறியோரான [ஒழுங்கில்லாத] ஸாமான்னிய ஜனங்களின் கூட்டம் ; சீர்திருந்

ஸதி; ந ஸம்ஸ்காரவதாம் விநீதாநாம் ஸம்ஸதி, தஸ்யா: ஜ்ஞாநோபகாரகத்வாத்। அத: ப்ராக்ருதஜநஸம்ஸதி அரதி: ஜ்ஞாநார்தத்வாத் ஜ்ஞாநம் ॥ ௧௦ ॥

கிஞ்ச—

௧௧. அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்ததர்ஶநம் ।
ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்தம் அஜ்ஞாநம் யததோ'ந்யதா ॥

அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் ஆத்மாதிவிஷயம் ஜ்ஞாநம் அத்யாத்மஜ்ஞாநம், தஸ்மிந் நித்யபாவ: நித்யத்வம்। அமாநித்வாதீநாம் ஜ்ஞாநஸாதநாநாம் பாவநாபரிபாகநிமித்தம் தத்த்வஜ்ஞாநம், தஸ்ய அர்த: மோக்ஷ: ஸம்ஸாரோபரம:; தஸ்ய ஆலோசநம் தத்த்வஜ்ஞாநார்ததர்ஶநம்; தத்த்வஜ்ஞாநபலாலோசநே ஹி தத்ஸாதநாநுஷ்டாநே ப்ரவ்ருத்தி: ஸ்யாத் இதி। ஏதத் அமாநித்வாதி தத்த்வஜ்ஞாநார்ததர்ஶநாந்தம் உக்தம் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம், ஜ்ஞாநார்தத்வாத்। அஜ்ஞாநம் யத் அத: ஏதஸ்மாத் யதோக்தாத் அந்யதா விபர்யயேண — மாநித்வம் தம்பித்வம் ஹிம்ஸா அக்ஷாந்தி: அநார்ஜவம் இத்யாதி அஜ்ஞாநம் விஜ்ஞேயம் பரிஹரணாய, ஸம்ஸாரஸ்ய ப்ரவ்ருத்திகாரணத்வாத் இதி ॥ ௧௧ ॥

யதோக்தேந ஜ்ஞாநேந ஜ்ஞாதவ்யம் கிம்? இத்யாகாங்க்ஷாயாம் ஆஹ—'ஜ்ஞேயம் யத்தத்' இத்யாதிநா—

திய அறிவுடையவராய் ஒழுங்குள்ளவரது கூட்டமன்று; ஏனெனில், (அது) ஞானத்திற்கு உதவிசெய்யுமென்க. ஆகவே, ஸாமான்னிய ஜனக்கூட்டத்தில் அருவருப்பானது ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞான(ஸாதந)மாம். (௧௦)

மற்றும்,

௧௧. **ஆத்மாவைப்பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிற்றலும், உண்மையறிவின் பயனை நோக்குதலும் (ஞானத்திற்கு ஸாதநமாம்). இது ஞானமென்று கூறப்பட்டது. இதனினும் வேறாக எது உள்ளதோ, (அது) அஜ்ஞானமாம்.**

ஆத்மாவைப்பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிற்றல் - ஆத்மாமுதலியவற்றைப் பற்றிய அறிவிலே எப்பொழுதும் நிலைத்துநிற்றல். உண்மையறிவானது, பணிவு (௧௩ - ௭) முதலான ஞானஸாதநங்களுடைய பயிற்சியின் பரிபக்குவத்தினால் வருவது. அதனுடைய பயன் - மோக்ஷம், ஸம்ஸாரம் ஒழிதல்; அதனை ஆலோசித்தல் - உண்மையறிவின் பயனை நோக்குதல் என்பது. உண்மையறிவின் பயனை ஆலோசிக்குமளவிலன்றோ அதன் ஸாதநங்களை அநுஷ்டிப்பதில் தலைப்படுதல் கூடும்; ஆகவே, (உண்மையறிவின் பயனை ஆலோசித்தல் பயனுடைத்தென்க). "பணிவு" முதலாக "உண்மையறிவின்பயனைநோக்குதல்" ஈறாகக் கூறப்பெற்ற இது ஞானத்திற்குப் பயன்படுதலால் ஞானம் எனப்பட்டது. கீழ்க்கூறிய இதற்கு மாறான செருக்குடைமை, டம்பமுடைமை, ஹிம்ஸை, பொறுமையின்மை, நேர்மையின்மை முதலியன ஸம்ஸாரம் உண்டாதற்குக் காரணமாதலால், (அவற்றை) நீக்கவேண்டி (அவை) அஜ்ஞானமென்று அறிக என்பதாம். (௧௧)

அறியவேண்டியபொருள் ப்ரஹ்மம்.

கீழ்க்கூறிய ஞானத்தினால் [அறிவினால்] அறியவேண்டியபொருள் யாது?— என வேண்டிநிற்குமிடத்து "அறியவேண்டியபொருள்" (௧௩ - ௧௨) என்பது முதலாக (அதனைக்) கூறுகிறார்:

𑌨𑌨𑍁 𑌯𑌮𑌾𑌃 𑌨𑌿𑌯𑌮𑌾𑌶𑍍𑌚 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌯𑌃 । 𑌨 𑌏𑌤𑍈𑌃 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 । 𑌨 𑌹𑌿 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌵 𑌚, 𑌯𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌤𑌦𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌹𑌿 𑌅𑌨𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇, 𑌯𑌥𑌾 𑌘𑌟𑌵𑌿𑌷𑌯𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 ॥

𑌨 𑌏𑌷 𑌦𑍋𑌷𑌃, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌹𑌿 𑌅𑌵𑍋𑌚𑌾𑌮 ; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌹𑌕𑌾𑌰𑌿𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 ॥

௧௨. 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾𑌽𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ।
𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌤𑍍𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑍇𑌣 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 । 𑌕𑌿𑌂𑌫𑌲𑌂 𑌤𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌰𑍋𑌚𑌨𑍇𑌨 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌃 𑌅𑌭𑌿𑌮𑍁𑌖𑍀𑌕𑌰𑌣𑌾𑌯 𑌆𑌹—𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌅𑌮𑍃𑌤𑌮𑍍 𑌅𑌶𑍍𑌨𑍁𑌤𑍇, 𑌨 𑌪𑍁𑌨𑌃 𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌤𑍍 𑌆𑌦𑌿𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌆𑌦𑌿𑌮𑌤𑍍 𑌨 𑌆𑌦𑌿𑌮𑌤𑍍 𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌤𑍍—𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍?—𑌪𑌰𑌂 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, '𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌮𑍍 ॥

𑌅𑌤𑍍𑌰 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 '𑌅𑌨𑌾𑌦𑌿 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌪𑌦𑌂 𑌛𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿, 𑌬𑌹𑍁𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌣𑌾 𑌉𑌕𑍍𑌤𑍇 𑌅𑌰𑍍𑌥𑍇 𑌮𑌤𑍁𑌪𑌃 𑌆𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌂 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 । 𑌅𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌚 𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌿—𑌅𑌹𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌖𑍍𑌯𑌾 𑌪𑌰𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍍 𑌇𑌤𑌿 ॥

(ஆக்ஷேபம்) :—ஆயின், பணிவுமுதலியன யம நியமங்களாம் [ஓர்வகையான தன்னடக்கமாம்]. அவற்ருல் அறியவேண்டியபொருள் அறியப்படுவதில்லை. பணிவுமுதலியன ஒருபொருளை நிர்ணயிப்பதாக [அறிவதாக]க் காணப்படவில்லை. அன்றியும், எந்தவிடத்திலும், அறிவு எதனைப்பற்றியதோ, அந்த அறியவேண்டியபொருளை அதுதான் [அந்த அறிவுதான்] அறிவதாகக் காணப்படுகின்றது. ஒன்றைப்பற்றிய அறிவினுல் வேறொன்று அறியப்படமாட்டாது; உதாரணமாக, குடத்தைப்பற்றிய அறிவினுல் தீ(அறியப்படமாட்டாது).

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று; ஏனெனில், (பணிவுமுதலாயின) ஞானத்தைத் தருவனவாதலால், ஞானம் எனப்படுகின்றன எனக் கூறியுள்ளோம்: (அவை) ஞானத்திற்குத் துணைக்காரணமாதலாலும் (ஞானம் என்க):

௧௨. அறியவேண்டியபொருள் எதுவோ, (ஒருவன்)எதனை அறிந்து சாகாமையை அடைகின்ருனே, அதனை விரித்துரைப்பேன். பரப்ராஹ்மமானது ஆதியில்லாதது; அது ஸத் [உள்ளது]எனப்படுவதில்லை, அஸத்[இல்லது]எனப்படுவதில்லை.

அறியவேண்டியபொருள் எதுவோ, அதனை உள்ளபடி தெளிவாக உரைப்பேன்.—கேட்பவனுக்கு ருசியை உண்டாக்கி, ஆவலோடு கேட்கும்படி செய்தற்பொருட்டு அதற்குப் பயன் இன்னதென்று அருளிச்செய்கிருர் :—அறியவேண்டிய பொருளை அறிந்து (ஒருவன்) சாகாமையைப் பெறுகிருன்; மீளவும் இறப்பதில்லை என்பது பொருள். ஆதியில்லாதது.—அது யாது ?—யாவற்றினும் மேம்பட்ட ப்ரஹ்மம், ''அறியவேண்டியபொருள்'' என்று பிரகிருதத்தில் பேசப்படுவது.

அர்த்தத்தை அன்மொழித்தொகை உணர்த்த, மதுப் என்னும்விகுதி அர்த்தமின்றி நிற்றலாகிய குற்றம் வரும் என்று, இதில் சிலர் ''அநாதி,'' ''மத்பரம்'' எனப் பதம் பிரிக்கிருர்கள். ''(ப்ரஹ்மம்) முதலில்லாதது ; நான் அதனுடைய வாஸுதேவனென்னும் பராசக்தி'' என அர்த்தவேறுபாட்டையும் காட்டுகிருர்கள்.

सत्यमेवमपुनरुक्तं स्यात्, अर्थश्चेत् संभवति । न त्वर्थः संभवति, ब्रह्मणः सर्वविशेषप्रतिषेधेनैव विजिज्ञापयिषितत्वात् ' न सत्तन्नासदुच्यते ' इति । विशिष्टशक्तिमत्त्वप्रदर्शनं, विशेषप्रतिषेधश्च इति विप्रतिषिद्धम् । तस्मात् मतुपः बहुव्रीहिणा समानार्थत्वेऽपि प्रयोगः श्लोकपूरणार्थः ॥

अमृतत्वफलं ज्ञेयं मया उच्यते इति प्ररोचनेन अभिमुखीकृत्य आह — न सत् तत् ज्ञेयम् उच्यते, न अपि असत् तत् उच्यते ॥

ननु महता परिकरेण उद्घुष्य ' ज्ञेयं प्रवक्ष्यामि ' इति, अननुरूपम् उक्तं ' न सत्तन्नासदुच्यते ' इति ॥

न, अनुरूपमेव उक्तम् । कथम्? — सर्वासु हि उपनिषत्सु ज्ञेयं ब्रह्म ' नेति नेति ' ' अस्थूलमनणु ' इत्यादिविशेषप्रतिषेधेनैव निर्दिश्यते " न इदं तत् " इति, वाचः अगोचरत्वात् ॥

(ஆனால், நாம் கூறுவோம்): — உண்மை; அர்த்தம் கூடுமாயின், கூறினது கூறல் இவ்வாறாக ஆகாது. மற்று, அர்த்தம் அமையாது; "அது ஸத் எனப்படுவதில்லை, அஸத் எனப்படுவதில்லை" என எல்லாச் சிறப்பியல்புகளையும் மறுத்தே ப்ரஹ்மத்தை விவரமாயுணர்த்தப்புகுந்தமையின் என்க. (தனக்கென்றுரிய ஓர்வகைச்) சிறப்புச்சக்தியையுடையதாக ப்ரஹ்மத்தை உணர்த்துதலும், சிறப்பியல்புகளை மறுத்தலும் என்பவை (தம்முள்)விரோதமாம். ஆகவே, அன்மொழித்தொகையொடு மதுப் என்னும்விகுதிக்கு அர்த்தம் ஸமமாகஇருந்தாலும், (அவ்விகுதியை) வழங்கினது - சுலோகத்தை நிரப்புதற்கானதாம் என்க.

ப்ரஹ்மம் சொல்லிறந்தும், நினைப்பிறந்தும் எட்டாதது.

சாகாமை என்னும் பயனையுடைய அறியவேண்டியபொருளை யான் கூறுகின்றேன் என்று (கேட்பவனுக்கு) ருசியை உண்டாக்கி, ஆவலோடு கேட்கும்படிசெய்து சொல்லுகிறார்:—அந்த அறியவேண்டியபொருள் ஸத் எனப்படுவதில்லை, அது அஸத் எனப்படுவதும் இல்லை.

(ஆக்ஷேபம்):—அப்படியானால், "அறியவேண்டியபொருளைத் தெளிவாகக் கூறுவேன்" எனத் தொண்டையினின்றும் பெரிய சத்தமாக உரத்துக் கத்தி, பின்பு, "அது ஸத் எனப்படுவதில்லை, அஸத் எனப்படுவதில்லை" எனக்கூறுவது ஏற்கத்தக்கதன்று.

(ஸமாதானம்):—அப்படியன்று; ஏற்கத்தக்கதேதான் கூறப்பட்டது.—எப்படி? —அறியவேண்டியபொருளாகிய ப்ரஹ்மமானது எல்லா உபநிஷத்துக்களிலும் "இப்படியன்று, இப்படியன்று" (பி - உ - ௩ - ௬), "ஸ்தூல மன்று, அணு அன்று" (பி - ௩ - ௮ - ௮)என இவைபோன்ற சிறப்பியல்புகளை மறுத்தே,"அது இது அன்று" எனக்குறிப்பிட்டுக்காட்டி உணர்த்தப்படுகின்றது; சொல்லுக்கு எட்டாததலின்.

𑌨𑌨𑍁, 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿, 𑌯𑌤𑍍 𑌵𑌸𑍍𑌤𑍁 '𑌅𑌸𑍍𑌤𑌿'𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌥 𑌅𑌸𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌨𑍋𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌂 𑌚—"𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌤𑍍" "𑌅𑌸𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌨𑍋𑌚𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 𑌚 ॥

𑌨 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

𑌨𑌨𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌾𑌃 𑌏𑌵 । 𑌤𑌤𑍍𑌰 𑌏𑌵𑌂 𑌸𑌤𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌪𑌿 𑌅𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌾 ॥

𑌨, 𑌅𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌉𑌭𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌦𑍍𑌧𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑌮𑍍𑌯𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌘𑌟𑌾𑌦𑌿𑌕𑌂, 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌾 । 𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌅𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌶𑌬𑍍𑌦𑍈𑌕𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌗𑌮𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌨 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 𑌉𑌭𑌯𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌷𑌯𑌮𑍍, 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 '𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌉𑌕𑍍𑌤𑌂—𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, '𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌤𑍍' '𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿—𑌨 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍, '𑌅𑌨𑍍𑌯𑌦𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌥𑍋 𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌦𑌧𑌿' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 ॥

(ஆக்ஷேபம்) :—ஆயின், எப்பொருள் 'உள்ளது' என்னும்சொல்லால் சொல்லப்படுகின்றதோ, அது உள்ளது; அறியவேண்டியபொருளை 'உள்ளது' என்னும் சொல்லால் சொல்லமுடியாதாயின், அது இல்லை. அன்றியும், "அது அறியவேண்டியபொருள்" என்பதும், "(அதனை) உள்ளது என்னும்சொல்லால் சொல்லமுடியாது" என்பதும் (தம்முள்) விரோதமாம்.

(ஸமாதாநம்) :—இல்லை என்பதில்லை; இல்லைஎன்னும்உணர்வினால் குறிக்கப்படாமையின்.

(ஆக்ஷேபம்) :—ஆயின், எல்லா உணர்ச்சிகளும் "உள்ளது" "இல்லை" என்னும் உணர்ச்சிகளைச் சார்ந்தவையேதான். அவை இவ்வாறுள்ளவளவிலே, அறியவேண்டியபொருளும் - உள்ளதென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல், இல்லையென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல் கூடும்.

(ஸமாதாநம்):—அப்படியன்று; (ப்ரஹ்மமானது) இந்திரியங்கட்கு எட்டாமையினால், (உள்ளது, இல்லையென்னும்) இரண்டுஉணர்வுகளையும் தழுவிய உணர்வினால் குறிக்கப்படாமையின். இந்திரியங்களால் உணரக்கூடிய குடம்முதலிய பொருள் எதுவோ, அதுவன்றோ உள்ளதென்னும் உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல், இல்லையென்னும்உணர்வைத் தழுவிய உணர்வினால் குறிக்கப்படுவதாதல் கூடும். அறியவேண்டியபொருளாகிய இதுவோ இந்திரியங்கட்கு எட்டாமையினால் சப்த[சுருதி]ப்பிரமாணமொன்றினாலேயே அறியத்தக்கதாம்; ஆகவே, குடம்முதலியனபோல, (உள்ளது, இல்லைஎன்னும்) இரண்டுஉணர்வுகளையும்தழுவிய உணர்வினால்குறிக்கப்படுவதில்லை; எனவே, "அது உள்ளது அன்று, இல்லது அன்று" எனக் கூறப்படுகின்றது.

இனி, "அது அறியவேண்டிய பொருள்" எனவும், "அது உள்ளது அன்று இல்லது அன்று" எனவும் விரோதமாகக் கூறப்படுகின்றது (எனப்பிரதிவாதி) கூறியதற்கு (மறுமொழி வருமாறு):—விரோதமில்லை; ஏனெனில், "அது - அறியப்பட்டபொருளினும் வேறுதான்; அன்றியும், அறியப்படாத பொருளுக்கும் அப்பால் உள்ளது" (கே - உ - ங) எனச் சுருதி (கூறுகின்றது).

ஶ்ருதிரபி விருத்தார்தா இதி சேத் — யதா யஜ்ஞாய ஶாலாமாரப்ய 'யத்யமுஷ்மிந் லோகே(அ)ஸ்தி வா ந வேதி' இத்யேவமாதி இதி சேத் —

ந; விதிதாவிதிதாப்யாமந்யத் இதி ஶ்ருதே: அவஶ்யவிஜ்ஞேயார்தப்ரதிபாதநபரத்வாத் । 'யத்யமுஷ்மிந்' இத்யாதி து விதிஶேஷ: அர்தவாத: ॥

உபபத்தேஶ்ச ஸதாதிஶப்தை: ப்ரஹ்ம நோச்யதே இதி । ஸர்வோ ஹி ஶப்த: அர்தப்ரகாஶநாய ப்ரயுக்த:, ஶ்ரூயமாணஶ்ச ஶ்ரோத்ருபி:, ஜாதிக்ரியாகுணஸம்பந்தத்வாரேண ஸங்கேதக்ரஹணஸவ்யபேக்ஷ: அர்தம் ப்ரத்யாயயதி; நாந்யதா, அத்ருஷ்டத்வாத் । தத் யதா — 'கௌ:' 'அஶ்வ:' இதி வா ஜாதித:, 'பசதி' 'படதி' இதி வா க்ரியாத:, 'ஶுக்ல:' 'க்ருஷ்ண:' இதி வா குணத:, 'தநீ' 'கோமாந்' இதி வா ஸம்பந்தத: । ந து ப்ரஹ்ம ஜாதிமத், அத: ந ஸதாதிஶப்தவாச்யம் । நாபி குணவத் — யேந குணஶப்தேந உச்யேத — நிர்குணத்வாத் ।

(ஆக்ஷேபம்):—சுருதியும் விரோதமான அர்த்தமுடையதாம் எனில்,—உதாரணமாக, யாகத்திற்கு மண்டபத்தை அமைத்தபின்பு, "மறுமையிலே (நன்மை) உண்டோ இல்லையோ என்பதை (எவன் அறிகின்றான் ?)" (தை - ஸம் - சு - க - க) என(ச் சந்தேகிக்கும் சுருதியை)ப்போல எனின்,—(ஒத்துக்கொண்ட பிரமாணத்திற்கு விரோதமான சுருதியை ஏற்றுக்கொள்ளக்கூடாது எனின்,—)

(ஸமாதானம்):— அப்படியன்று ; "(ப்ரஹ்மம்) - அறியப்பட்டதினும், அறியப்படாததினும் வேறு" என்னும்சுருதியானது, அவச்யம் அறியவேண்டிய பொருளை அறிவிக்கிறதின்றமையின். ("ப்ரஹ்மமானது உள்ளேயுள்ள ஆத்மாதான்" என்னும் உண்மையை அந்தச்சுருதி உணர்த்துவதனால் பிரமாணமாம் ; ஆகவே, அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.—ஆ.) ஆனால், "மறுமையிலே" (தை - ஸம் - சு - க - க) என்று தொடங்கும் (சுருதியானது) விதியின் சேஷமான அர்த்தவாதமாம். (ஆகவே, இதனை உதாஹரித்தல் சரியன்று ; அர்த்தவாதமாதலால்.—ஆ. சேஷம், அர்த்தவாதம் என்றவற்றின் விவரங்களை 21, 59 - ஆம் பக்கங்களில் காண்க.)

மேலும், ப்ரஹ்மமானது 'உள்ளது' முதலான சொற்களால் கூறப்படுவதில்லை என்பது யுக்தியினாலும்(தெரியவருகின்றது). ஒவ்வொருசொல்லும் ஒருபொருளைக் காட்டுவதற்காக வழங்கப்பெற்று, கேட்பவர்களால் கேட்கப்படும்பொழுது, ஜாதி தொழில் குணம் ஸம்பந்தம் என்றவற்றின் வழியாகத் தொடர்பின் பற்றை வேண்டிநிற்பதாய் [ஜாதி, தொழில் முதலியவற்றைத் தழுவியதாய்] ஒருபொருளைக் காட்டுகின்றது. (அது அப்பொருளைக் காட்டுவது) வேறுவிதமாக அன்று ; காணப்படாமையின். அது வருமாறு:—'ஆ' 'குதிரை' என்பவை - ஜாதியினாலும், 'சமைப்பவன்' 'படிப்பிப்பவன்' என்பவை - தொழிலினாலும், 'வெண்மை' 'கருமை' என்பவை - குணத்தினாலும், 'பணமுள்ளவன்' 'பசுக்களுள்ளவன்' என்பவை - (பணம், பசுக்கள் என்றவற்றின்)ஸம்பந்தத்தினாலும்(அமைந்தசொற்களாம். ஆகவே, குதிரை முதலியன'குதிரை உள்ளது' 'குதிரை இல்லை' என 'உள்ளது' முதலான சொற்களால் ஜாதிமுதலியவற்றைக்கொண்டு குறிக்கப்படுகின்றன.) ஆனால், ப்ரஹ்மத்திற்கு ஜாதி இல்லை ; ஆதலால்,

𑌨𑌾𑌪𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 '𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 | 𑌨 𑌚 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍀, 𑌏𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌅𑌦𑍍𑌵𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑍇𑌨 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 ; '𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑍍𑌯𑌃 || ௧௨ ||

𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌶𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌕𑌰𑌣𑍋𑌪𑌾𑌧𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌨𑍍 𑌤𑌦𑌾𑌶𑌙𑍍𑌕𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑍍 𑌆𑌹—

௧௩. 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 |

'உள்ளது' முதலிய சொற்களால் கூறத்தக்கதில்லை: குணசப்தத்தினால் [பண்புச்சொல்லினால்] கூறப்படும்படியான குணமும் இல்லை; நிர்க்குணமாதலின்: தொழிலைப்பற்றிய சொல்லினாலும் குறிப்பிக்கப்படுவதில்லை; தொழிலில்லாததாதலின்; "உறுப்பில்லாதது, வினையில்லாதது, சாந்தமானது" (ச்வே - ௬ - ௧௯)என்னும் சுருதியினாலென்க. அன்றியும், (ப்ரஹ்மத்திற்கு எதனோடும்) தொடர்பு இல்லை; ஏனெனில், (அது) ஒன்றாயுள்ளது: இரண்டாவதில்லாதது: (இந்திரியங்கட்கு) எட்டாதது: ஆத்மாவாயிருப்பது[தான் எனப்படுவது]. (ஆகவே, அது) ஒருசொல்லினாலும் கூறப்படுவதில்லையென்பது நேரென்க. "எதனின்றும் [எதனை அடைதல்முடியாது] சொற்கள் திரும்புகின்றனவோ" (தை-உப-௨-௪-௧)என்பது முதலிய சுருதிகளாலும் (அது உணர்த்தப்படுகின்றது). (௧௨)

எல்லா முயற்சிக்கும் ப்ரஹ்மம் மூலகாரணம்.

அறியவேண்டியபொருளான(ப்ரஹ்மமான)து உள்ளதென்னும் சொல்லுக்காவது எண்ணத்திற்காவது எட்டாமையினால் இல்லையென்னும் சங்கை வர, எல்லாப் பிராணிகளுடைய இந்திரியங்களாகிய உபாதிகளைக்கொண்டு அது [ப்ரஹ்மம்] உள்ளதென்பதை நிரூபிப்பவராய் அச்சங்கையை நீக்கும்பொருட்டுக் கூறுகிறார்: [ஒருவிதமான தன்மையும் இல்லாததாய் சொல்லிற்கும் மனத்திற்கும் எட்டாததோர் பொருளைக்காணவில்லை; மற்று, இதற்குமாறானதை, ஏதாவதொரு தன்மையைப்பெற்றதாய் சொல்லிற்கும் மனத்திற்கும் எட்டுகின்ற பொருளை, த்வைதத்தைக் காண்கிறோம். ஆகவே, ப்ரஹ்மமானது வெறும் பாழாம் என்னும் சங்கை வர, ஸமாதானம் வருமாறு:—அது பாழன்று; ஏனெனில், அது - (1) உள்ளேயுள்ள ஆத்மாவாயுள்ளது: (2) இந்திரியங்களுடைய முயற்சிக்கும் பிறவற்றிற்கும் காரணமானது: (3) கற்பிக்கப்பட்ட த்வைதம் விளங்குதற்கு அடிஆதாரமாயுள்ளது: (4) பிரபஞ்சத்தை ஆளுவது; ஆகவே, அது உள்ளதென்க. இனி "வண்டிமுதலியன தாமே செல்லமாட்டா; அவைபோல, ஜடப்பொருளான உடம்பு முதலியவற்றுள் உணர்வு இல்லாவிட்டால், அவை தாமாகவே செல்லமாட்டா, முயலமாட்டா, ஒருதொழிலைச்செய்யமாட்டா; ஆகவே, அவற்றுள் சேதநப் பொருள் இருக்கவேண்டும்" என்னும் அநுமானத்தால் (1) "ப்ரஹ்மம் உள்ளேயுள்ள ஆத்மாவாயுள்ளது" என்பதை முதலில் அருளிச்செய்கிறார்:—ஆ.]

௧௩. அது எங்கும் கை கால்களையுடையது: எங்கும் கண்களையும், தலைகளை

ஸவ௯்தஶ்ருதிமல்லோகெ ஸவ௯மாவ்ருத்ய திஷ்டதி ॥

ஸவ௯தঃ பாணயঃ பாதாஶ்ச யஸ்ய ஐதி ஸவ௯தঃபாணிபாதம் தஜ் ஜ்ஞெயம் । ஸவ௯ப்ராணிகரணோபாதிபிঃ க்ஷேத்ரஜ்ஞஸ்ய அஸ்திதவம் விபாவ்யதெ । க்ஷேத்ரஜ்ஞஶ்ச க்ஷேத்ரோபாதிதঃ உச்யதெ । க்ஷேத்ரம் ச பாணிபாதாதிபிঃ அநேகதா பிந்நம் । க்ஷேத்ரோபாதிபேதக்ருதம் ச விஶேஷஜாதம் மித்யைவ க்ஷேத்ரஜ்ஞஸ்ய, ஐதி தபநயநேந ஜ்ஞெயத்வம் உக்தம் ‘ந ஸத்தந்நாஸது்ச்யதெ’ ஐதி உபாதிக்ருதம் மித்யாரூபமபி அஸ்தித்வாதிகமாய ஜ்ஞெயதர்மவத் பரிகல்ப்ய உச்யதெ ‘ஸவ௯தঃபாணிபாதம்’ ஐத்யாதி । ததா ஹி ஸம்ப்ரதாயவிதாம் வசநம்— ‘அத்யாரோபாபவாதாப்யாம் நிஷ்ப்ரபஞ்சம் ப்ரபஞ்ச்யதெ ।’ ஐதி । ஸவ௯த்ர ஸவ௯தேஹாவயவத்வேந கம்யமாநாঃ பாணிபாதாதயঃ ஜ்ஞெயஶக்திஸத்பாவநிமித்தஸ்வகாயா௯ঃ ஐதி ஜ்ஞெயஸத்பாவலிங்காநி “ஜ்ஞெயஸ்ய” ஐதி உபசாரதঃ உச்யந்தெ ।

யும், முகங்களையும் உடையது : எங்கும் செவிகளையுடையது ; உலகத்தில் ஸகலத்தை யும் வியாபித்து நிற்கின்றது.

அறியவேண்டியபொருளுக்குக் கைகளும் கால்களும் எவ்விடத்தும் உள்ளன. க்ஷேத்ரஜ்ஞன் இருக்கிறானென்பது - எல்லாபிராணிகளுடைய இந்திரியங்களாகிய உபாதிகளால் மெய்ப்பிக்கப்படுகின்றது. (ஏனெனில், ஜடப்பொருளான இந்திரியங்கள் சேதநத்தை முன்னிடப்பெறாது முனைக்கமுடியா.) அன்றியும், (உள்ளேயுள்ள சேதநமானது) க்ஷேத்ரமாகிய உபாதியினால் க்ஷேத்ரஜ்ஞனெனக் கூறப்படுகின்றது. க்ஷேத்ரமோ கை கால் முதலியவற்றால் பலவாறு வேறுபட்டிருப்பது. க்ஷேத்ரமாகிய உபாதியின் பேதத்தினாலான வேற்றுமையெல்லாம் க்ஷேத்ரஜ்ஞனுக்குப்பொய்ம்மையேதான்; எனவே, அவற்றை நீக்கி (ப்ரஹ்மத்தை) அறியவேண்டுமென்பது - “அது உள்ளது எனப்படுவதில்லை, இல்லது எனப்படுவதில்லை” (௧௩ - ௧௨) எனக் கூறப்பட்டது. உபாதிகளாலானது பொய்வடிவமுள்ளதாயினும், (ப்ரஹ்மத்தின்) இருப்பைத்தெரிவிப்பதற்காக, அறியவேண்டியபொருளான (அதன்) தன்மைபோலக் கற்பனைசெய்து “எங்கும் கை கால்களையுடையது” என்பது முதலானது கூறப்படுகின்றது. அவ்வண்ணமே, ஸம்பிரதாயத்தை அறிந்தவருடைய—“அத்வைத(மான தனி)ப்பொருளானது அத்யாரோபத்தினாலும் அபவாதத்தினாலும், ஏற்றுதலாலும் விலக்குதலாலும் விவரிக்கப்படுகின்றது” என்னும்திருவாக்கு உள்ளதாம்(அத்யாரோபம் என்பது-பாம்பல்லாத கயிற்றிலே பாம்பை ஏற்றுதல்போல, உண்மைப்பொருளிலே உண்மையல்லாப்பொருளை ஏற்றுதல். அபவாதமென்பது -கயிற்றின்பொய்த்தோற்றமாகிய பாம்பு கயிறுமாத்திரமாக நிற்பதுபோல, உண்மைப்பொருளின் பொய்த்தோற்றமாகிய பிரபஞ்சம் உண்மைப்பொருள்மாத்திரமாகநிற்றல்.) எவ்விடத்தும் எல்லாஉடம்புகளது உறுப்புக்களாகத் தெரிகின்ற கைகால்கள் முதலியவை, அறியவேண்டியபொருளான (ப்ரஹ்மத்தின்) சக்தி இருப்பதனால் [அதனுடைய வெறும் சந்நிதிமாத்திரத்தினால்] தமக்கு முயற்சிஉண்டாகப் பெறுகின்றன ; எனவே, அறியவேண்டியபொருள் இருத்தற்கு (அவை)அடையாளங்களாம் ; (ஆகவே, அவை) “அறியவேண்டியபொருளுக்குச் சொந்தமானவை” என்று உபசாரவழக்கினால் கூறப்படுகின்றன.—அவ்வாறே மற்

𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑍇𑌦𑌮𑍍 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌂 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌅𑌕𑍍𑌷𑍀𑌣𑌿 𑌶𑌿𑌰𑌾𑌂𑌸𑌿 𑌮𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌿𑌶𑌿𑌰𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ; 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌤𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂, 𑌤𑌤𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌤𑍍 𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌿𑌕𑌾𑌯𑍇 ; 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌆𑌵𑍃𑌤𑍍𑌯 𑌸𑌂𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇, 𑌨 𑌚𑌲𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௩ ॥

𑌉𑌪𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑌾𑌦𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑌾𑌽𑌽𑌶𑌙𑍍𑌕𑌾 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌰𑍍𑌥𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌰𑌮𑍍𑌭𑌃—

௧௪. 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚 𑌤𑌾𑌨𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌿, 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑍇 𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌨𑌸𑍀—𑌜𑍍𑌞𑍇𑌯𑍋𑌪𑌾𑌧𑌿𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍—𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌹𑌣𑍇𑌨 𑌗𑍃𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 । 𑌅𑌪𑌿 𑌚, 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑍋𑌪𑌾𑌧𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣𑍈𑌵 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌪𑌿 𑌉𑌪𑌾𑌧𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑌰𑌣𑍋𑌪𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑍈𑌃 𑌅𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑌵𑌣𑌵𑌚𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌅𑌵𑌭𑌾𑌸𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑌾𑌭𑌾𑌸𑌂, 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍈𑌃 𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌮𑌿𑌵 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ; ‘𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍀𑌵 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍀𑌵’

றையதை உரைத்துக்கொள்க.—(ப்ரஹ்மமானது)உலகத்திலே, ப்ராணிவர்க்கத்திலே எல்லாவற்றையும் வியாபித்துநிற்கின்றது, நிலைபெறுகின்றது, அசைவதில்லை என்றபடி. (௧௩)

ப்ரஹ்மத்திற்கு எத்தகைய தன்மையும் இல்லை.

உபாதிகளான கைகால்முதலிய இந்திரியங்களை ஏற்றுவதனால் "அறியவேண்டியபொருளுக்கு அவை (உண்மையாகவே) உண்டு" என்னும்சங்கை வரக்கூடாதென்பதற்காக (இச்)சுலோகம் தொடங்கப்படுகின்றது :

௧௪. எல்லா இந்திரியங்களுடைய செய்கைகளினால் விளங்குவது ; (ஆனால்) எல்லா இந்திரியங்களும் இல்லாதது : (ஒன்றையும்) பற்றாதது ; ஆனால், எல்லாவற்றையும் தாங்குவது : குணங்களில்லாதது ; ஆனால், குணங்களை அநுபவிப்பது.

எல்லா இந்திரியங்கள் - ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள்என்னும்பெயருடைய செவிமுதலிய இந்திரியங்கள். "எல்லா இந்திரியங்கள்" என்றதனால் - புத்தி, மனம் என்ற அகக்கரணங்களையும் கொள்க ; அறியவேண்டியபொருளுக்கு உபாதியாய்நிற்றலானது (செவிமுதலியவற்றோடு) ஸமமாயிருத்தலின். மேலும், அகக்கரண உபாதியின் வழியாகவேதான் செவிமுதலியவையும் உபாதியாகின்றன ; ஆகவே, (அறியவேண்டியபொருளானது) - அகக்கரணம், புறக்கரணம் என்னும்உபாதிகளாய் எல்லாஇந்திரியங்களது செய்கைகளான நிச்சயித்தல், நினைத்தல், கேட்டல், மொழிதல் முதலியவற்றால் வெளிப்படுகின்றது : அந்த அறியவேண்டிய பொருளானது எல்லா இந்திரியங்களது செய்கைகளால் தொழிற்பட்டிருப்பதுபோலும் என்றபடி ; "தியானிப்பதுபோலும், அசைவதுபோலும்" (பி - ௪ - ௩ - ௭)என்னும் சுருதியினாலென்க.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌕𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 𑌨 𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌅𑌤𑌃 𑌆𑌹—𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌰𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌤𑌃 𑌨 𑌕𑌰𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍈𑌃 𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 । 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌅𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃—'𑌅𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌦𑍋 𑌜𑌵𑌨𑍋 𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸 𑌶𑍃𑌣𑍋𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌣𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 𑌸𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍋𑌪𑌾𑌧𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑍍𑌯𑌭𑌜𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌨 𑌤𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍇𑌵 𑌜𑌵𑌨𑌾𑌦𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 । '𑌅𑌨𑍍𑌧𑍋 𑌮𑌣𑌿𑌮𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌵𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌅𑌰𑍍𑌥𑌃 ॥

𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌸𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 । 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌏𑌵𑌂, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌚𑍍𑌚𑍈𑌵 । 𑌸𑌦𑌾𑌸𑍍𑌪𑌦𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍁𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾𑌦𑌯𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌰𑌾𑌸𑍍𑌪𑌦𑌾𑌃 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍃𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌇𑌤𑌿 ॥

—மற்று, எக்காரணத்தினால், "(ப்ரஹ்மம் வாஸ்தவமாகத்) தொழிற்படுவதே இல்லை" எனக் கொள்ளப்படுகின்றது? என்பது.—இதில் கூறுகிறார்: எல்லாஇந்திரியங்களும் இல்லாதது, எத்தகைய கருவியும் இல்லாதது என்பது பொருள். ஆகவே, அந்த அறிய வேண்டியபொருள் இந்திரியங்களுடைய தொழில்களால் தொழிற்படுவதில்லை[இந்திரியங்கள் தொழிற்படும்பொழுது, அது, தான் வாஸ்தவமாகவே தொழிற்படுவதில்லை]. ஆனால், "அது கைகால்களில்லாததாய் விரைந்துசெல்வது, பற்றிப்பிடிப்பது; கண்ணில்லாததாய்ப் பார்க்கின்றது; செவியில்லாததாய்க் கேட்கின்றது" (ச்வே - ௩ - ௧௯) என்றுதொடங்குகின்ற இம்மந்திரம் எதுவோ, அது - "அந்த அறியவேண்டியபொருள்எல்லாஇந்திரியங்களாகிய உபாதிகளின் செய்கைகளுக்கு அனுகூலத்தைஅடைவதிலே[அநுகூலமாய் நடக்கும்]வலிமையுள்ளது" என இவ்வாறான அர்த்தத்தைக்காட்டுவதேயன்றி, "(ப்ரஹ்மத்திற்கு)வாஸ்தவமாகவே விரைந்துசெல்லுதல் முதலியதொழில்கள் உண்டு" என்னும்பொருளை எடுத்துக்காட்டுவதன்று. "குருடன் ரத்நத்தைக் கண்ணுற்றான்"(தை-ஆ-௧-௧௧)என்பது முதலான மந்திரத்தின் அர்த்தம்போல, அந்த மந்திரத்திற்கும் அர்த்தமாம். (அர்த்தவாதத்திற்குச் சொல்அர்த்தத்தைக் கொள்ளாது, பிரகிருதத்திற்குஇணங்கப் பொருள் கொள்ளவேண்டும்.—ஆ.)

ப்ரஹ்மம், பொய்ம்மையான தோற்றத்திற்கு ஆதாரமான உண்மை.

அந்த அறியவேண்டியபொருள் எல்லா இந்திரியங்களும் இல்லாதது ஆதலால், எதனோடும் ஒட்டுதலில்லாதது; இவ்வாறிருந்தாலும், ஸகலத்தையும் தாங்குவதே தான். எல்லாவற்றிற்கும் ஸத்தன்றோ ஆதாரமானது; ஸத்என்னும் எண்ணமானது எங்கும் தொடர்ச்சியாயிருத்தலின். கானல்நீர்முதலியனவுங்கூட ஆதாரமில்லாதவையாய் இல்லை. (ஸத்-உள்ளது, உண்மை. கற்பிக்கப்பட்ட குடம், மரம் முதலியவை "குடம் உள்ளது," "மரம் உள்ளது" என உள்ளதென்னும் உணர்வினால் அறியப்படுகின்றன. அவ்வாறே, "கானல்ஜலம் உள்ளது" என உள்ளதென்னும்புத்தியினால் கானல்ஜலமும் அறியப்படுகின்றது. கற்பிக்கப்பட்ட ஒவ்வொருபொருளும் இவ்வாறாக "உள்ளது" என்பதைத் தழுவிய அறிவினால் அறியப்படுகின்றது. ஆதலால், ஸத்என்னும் புத்தியானது எவ்விடத்தும் தொடர்ச்சியாயிருக்கின்றதெனக் காண்க.) ஆகவே, ப்ரஹ்மம் எல்லாவற்றையும் தாங்குகின்றது என்பதாம்.

𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌦𑌂 𑌚 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌦𑌿𑌮𑌶𑌾𑌰𑌂—𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌾𑌂𑌸𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌤𑍈𑌃 𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌪𑌿 𑌸𑌤𑍍 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌸𑌾𑌂 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌮𑍋𑌹𑌾𑌕𑌾𑌰𑌪𑌰𑌿𑌣𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃 𑌚 𑌅𑌨𑍁𑌭𑌵𑌿𑌤𑍃 𑌤𑌚𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௪ ॥

கிஞ்ச—

௧௫. 𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌂 𑌚𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 𑌚 𑌤𑌤𑍍 ॥

𑌬𑌹𑌿𑌃 𑌅𑌶𑌰𑌿𑌰𑌿𑌣𑌃 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌅𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌸𑍍𑌯 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌅𑌵𑌯𑌿𑌨𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌬𑌹𑌿𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌦𑍇𑌹𑌸𑍍𑌯𑍈𑌵 𑌅𑌵𑌯𑌿𑌨𑌃 𑌪𑍃𑌥𑌕𑍍 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । ‘𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌶𑍍𑌚’ 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌶𑌯𑌿𑌷𑍍𑌯𑍇 𑌅𑌹𑌾𑌪𑍇 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌅𑌚𑌰𑌂 𑌚𑌰𑌮𑍇𑌵 𑌚, 𑌯𑌤𑍍 𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 𑌦𑍇𑌹𑌾𑌹𑌾𑌵𑌸𑍍𑌥𑌿, 𑌤𑌦𑍇𑌵 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂, 𑌯𑌥𑌾—𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌕𑍋𑌚𑌾𑌭𑌾𑌵𑌃 ॥

குணங்களை அறிவது ப்ரஹ்மம்.

“அறியவேண்டியபொருள் உள்ளது” என்று தெரிதற்கு இதுவும் ஒருவேறு வழியாம் : (ப்ரஹ்மம்), ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களில்லாததாயினும், ஓசைமுதலான வழியினல் [ஓசை, உருவம், ருசிமுதலான இந்திரியவிஷயங்களால்] இன்பவடிவமாகவும் துன்பவடிவமாகவும் மயக்கவடிவமாகவும் மாறிய ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களை அநுபவிப்பது ; அந்த அறியவேண்டியபொருள் (அவற்றை) உணர்வது என்பது பொருள். (௧௪)

எல்லாம் ப்ரஹ்மம்.

௧௫. பூதங்கட்கு வெளியானது, உள்ளுமானது : ஸ்தாவரமானது, ஜங்கமமுமானது : அது நுண்மையானதாதலால் அறிதற்கு அரியது : அது தூரத்திலுள்ளது, ஸமீபத்திலும் (உள்ளது).

அறியாமையினுல் ஆத்மாவாகக் கொள்ளப்பட்டதாய், தோல்வரையுள்ளதான உடம்பை உத்தேசித்து, அதனையே எல்லையாகக்கொண்டு வெளி எனப்படுகின்றது. அவ்வாறே, உள்ளேயுள்ள ஆத்மாவை உத்தேசித்து உடம்பையே எல்லையாகக் கொண்டு உள் எனப்படுகின்றது. (பூதங்கட்கு வெளியிலுள்ள பொருள்களும் ப்ரஹ்மந்தான், உள்ளேயுள்ளபொருளும் ப்ரஹ்மந்தான் என்றபடி.) “வெளியானது, உள்ளுமானது” என்றமையினுல், இடையிலே (ஒன்றும்) இல்லாமையாகவே, இதனைக் கூறுகிறார் :— “ஸ்தாவரமானது, ஜங்கமமுமானது.” ஜங்கம ஸ்தாவரமான உடம்புத்தோற்றமும் எதுவோ, அது(வும்)தான் அறியவேண்டிய பொருள் [ப்ரஹ்மம்] ; கயிற்றிலே பாம்புத்தோற்றம்போல. (வெளியிலுள்ள பொருள்கட்கும் உள்ளேயுள்ள ஆத்மாவிற்கும் நடுவிலே பூதவடிவமாய்ப் பலபலவித உடம்புகளாகத் தோற்றுகின்றதும்ப்ரஹ்மம்தான். கயிற்றிலே பாம்புத்தோற்றம் அடங்கிநிற்பதுபோல,ப்ரஹ்மத்திலே உடம்புத்தோற்றம் அடங்கிநிற்கின்றது. ஆகவே, நடுவும் ப்ரஹ்மமாம் எனக் கண்டுகொள்க.—ஆ.)

यदि अचरं चरमेव च स्यात् व्यवहारविषयं सर्वं ज्ञेयं, किमर्थं "इदम्" इति सर्वैः न विज्ञेयम् इति? उच्यते—सत्यं सर्वाभासं तत्; तथापि व्योमवत् सूक्ष्मम्। अतः सूक्ष्मत्वात् स्वेन रूपेण तत् ज्ञेयमपि अविज्ञेयम् अविदुषाम्। विदुषां तु—'आत्मैवेदं सर्वम्' 'ब्रह्मैवेदं सर्वम्' इत्यादिप्रमाणतः नित्यं विज्ञातम्। अविज्ञाततया दूरस्थं, वर्षसहस्रकोट्यापि अविदुषाम् अप्राप्यत्वात्। अन्तिके च तत्, आत्मत्वात् विदुषाम् ॥ १५ ॥

किञ्च—

१६. अविभक्तं च भूतेषु विभक्तमिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥

अविभक्तं च प्रतिदेहं व्योमवत् तत् एकम्। भूतेषु सर्वप्राणिषु विभक्तमिव च स्थितम्, देहेष्वेव विभाव्यमानत्वात् ॥

भूतभर्तृ च भूतानि बिभर्तीति तत् ज्ञेयं भूतभर्तृ च स्थितिकाले। प्रलयकाले ग्रसिष्णु ग्रसनशीलम्। उत्पत्तिकाले प्रभविष्णु च प्रभवनशीलं, यथा—रज्ज्वादिः सर्पादेः मिथ्याकल्पितस्य ॥ १६ ॥

ப்ரஹ்மத்தை அறிகிறவர்கள் ஞானிகளேதான்.

(வி்ன):—ஸ்தாவரமும் ஜங்கமுமேயானவியவகாரப்பொருள்களெல்லாம் அறியவேண்டியபொருளா(ன ப்ரஹ்மமா)யின், ஏன் (அது) "இது" என(ச் சுட்டி)எல்லாராலும் அநுபவித்தறியப்படவில்லை ? என்பது.

(விடை) :—கூறுவோம் : உண்மை, அது எல்லாத்தோற்றமாயுள்ளது ; ஆயினும், ஆகாசம்போல, நுண்மையானது [இந்திரியங்கட்குப் புலப்படாதது]. ஆகவே, அது தன்வடிவத்தால் அறியத்தக்கதாயினும், நுண்மையாயிருப்பதனுல் அஜ்ஞானிகட்கு அறியப்படாததாம். மற்று, ஞானிகட்கோ "இதெல்லாம் ஆத்மாதான்" (பி - உ - ச - சு), "இதெல்லாம் ப்ரஹ்மம்தான்" (பி - உ - ரு - க) என்பனமுதலியப் பிரமாணங்களால் எப்பொழுதும் அறியப்பட்டது. அறியப்படாமையினுல் அது தூரத்திலுள்ளது ; ஆயிரங்கோடி வருஷங்களாலும் அஜ்ஞானிகட்கு அடையமுடியாததாதலின். அது ஸமீபத்திலுள்ளது; ஞானிகட்கு(த் தமது சொந்த) ஆத்மாவாயிருத்தலின்.

ப்ரஹ்மம் எல்லாவற்றிலுமுள்ள ஒரேஆத்மாதான்.

அன்றியும்,

கசு. அந்த அறியவேண்டியபொருள் வேருகவகுக்கப்படாதது ; ஆயினும், பூதங்களிடத்து வேருகவகுக்கப்பட்டதுபோலும் உள்ளது : மற்றும், பூதங்களைத் தாங்குவது ; விழுங்குவது : மேலும், உண்டாக்குவது.

அது உடம்புதோறும் வேவ்வேருன தன்று ; ஆகாசம்போல ஒன்ருயுள்ளது. ஒவ்வொரு பிராணியினிடத்தும் வேவ்வேருயுள்ளதுபோல(த் தோற்றுகின்றது) ; உடம்புகளிலேயே தெரியப்படுகின்றமையின் [சரீரங்களிலேதான் வெளிப்படையாகப் புலப்படுகின்றமையின்].

ப்ரஹ்மம் பிரபஞ்சத்திற்குக் காரணம்.

அந்த அறியவேண்டியபொருள் - (பிரபஞ்சம்)இருக்கும்பொழுது பூதங்களைத் தாங்குவதாம் ; மறையும்பொழுதும், (அவற்றை) விழுங்குந்தன்மையதாம் ; உண்டாகும்பொழுது, (அவற்றை) உண்டாக்கும் இயல்பினதுமாம் ; பொய்யாகக் கற்பிக்கப்பெற்ற பாம்புமுதலியவற்றை கயிறுமுதலானவை (உண்டாக்குவது) போல. (கசு)

𑌕𑌿𑌞𑍍𑌚 — 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌪𑌿 𑌸𑌤𑍍 𑌨 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌚𑍇𑌤𑍍, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌤𑌤𑍍 𑌤𑌮𑌃 𑌤𑌰𑍍𑌹𑌿? 𑌨। 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿? —

௧௭. 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌮𑌪𑌿 𑌤𑌜𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑍍𑌯𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ॥

𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾𑌮𑍍 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍍 𑌅𑌪𑌿 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌆𑌤𑍍𑌮𑌚𑍈𑌤𑌨𑍍𑌯-𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌾 𑌇𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 𑌹𑌿 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌜𑍍𑌯𑍋𑌤𑍀𑌂𑌷𑌿 𑌦𑍀𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇, '𑌯𑍇𑌨 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑌪𑌤𑌿 𑌤𑍇𑌜𑌸𑍇𑌦𑍍𑌧𑌃' '𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑍍𑌯𑌃; 𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌶𑍍𑌚 𑌇𑌹𑍈𑌵 — '𑌯𑌦𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌗𑌤𑌂 𑌤𑍇𑌜𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑍇𑌃। 𑌤𑌮𑌸𑌃 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑍍 𑌅𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌃 𑌦𑍁𑌃𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌵𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌤𑌮𑍍𑌭𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 𑌆𑌹 — 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿; 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 '𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍; 𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑍍𑌯𑌮𑍍, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌸𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌮𑍍𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌜𑍍𑌞𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍। 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌯𑌮𑌪𑌿 𑌹𑍃𑌦𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑍌,

---

ப்ரஹ்மம் எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்வது.

(ஆக்ஷேபம்) :—அறியவேண்டியபொருள் எங்கும் உள்ளதாயிருந்தும், உணரப்படவில்லையானால், அங்ஙனம் (அது) இருளேதான் ?

(ஸமாதானம்) :—அப்படியன்று ; மற்றென்னவெனின்,—

இன்னும்,

௧௭. அது ஒளிகட்கும் ஒளியாய் இருட்டிற்கு அப்பால்உள்ளது எனப்படுகின்றது. அறிவு, அறியவேண்டியபொருள், அறிவினால் அடையப்படுவது (என்ற இம்மூன்றும்) எல்லாருடைய ஹிருதயத்தினுள்ளும் விசேஷமாயுள்ளன.

அந்த அறியவேண்டியபொருள் ஸூர்யன் முதலிய ஒளிகட்கும் ஒளியாம். (வெளியிலுள்ள ஸூர்யன்முதலியனவும், உள்ளேயுள்ள புத்திமுதலியனவுமான ஜடப்பொருள்களைப் பிரகாசிக்கச் செய்வதனாலும் ப்ரஹ்மம் உள்ளதென்க.—ஆ.) ஆத்மஅறிவுஒளியினால் பிரகாசிப்பிக்கப்பெற்றன்றோ ஸூர்யன்முதலான ஒளிகள் ஒளிர்கின்றன ; "ஸூர்யன் எந்த ஒளியினால் ஒளிசெய்விக்கப்பெற்று ஒளிவீசுகின்றானோ" (தை - ப்ரா - ௩ - ௧௨ - ௯), "இதெல்லாம் அதனுடைய ஒளியினால் விளங்குகின்றது" (ச்வே - ௬ - ௧௪)என்பனமுதலியன மந்திரங்களாலும், இங்கேயே "ஸூர்யனைச் சேர்ந்த ஒளி எதுவோ" (௧௫ - ௧௨) என்பதுமுதலிய ஸ்மிருதியினாலும் என்க. (ப்ரஹ்மம்) இருட்டிற்கு அப்பால் உள்ளது, அஜ்ஞானத்தால் பற்றப்படாதது எனப்படுகின்றது,

அறியவேண்டியபொருளும், கருவியும், பயனும் ஒவ்வொருவனுடைய ஹிருதயத்திலும் உள்ளன.

ஞானம் முதலியவற்றைச் சம்பாதித்தல் மிகக்கஷ்டமென்று நினைத்து மனத்தளர்ச்சியுற்ற(அர்ஜுனனை) உற்சாகப்படுத்த [மனத்திடமுண்டாக]க் கூறுகிறார் :— அறியவேண்டிய ஞானம் என்பது - பணிவுமுதலானது (௧௩ - ௭, ௮, ௯, ௧0, ௧௧). அறியவேண்டிய பொருள் என்பது - "எது" என்பதுமுதலாக(௧௩ - ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௧௬, ௧௭)கூறப்பெற்றது. (அறியவேண்டியதை)அறிந்தவிடத்து, (அதுவே, அந்த)அறியவேண்டிய பொருளே அறிவின்பயனும் ; ஆதலின், அறிவினால் அடையத்தக்கது எனப்படுகின்

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌜𑌾𑌤𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌵 𑌹𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௭ ॥

𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 𑌅𑌯𑌂 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇—

௧௮. 𑌇𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌚𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।
𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌯𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥

𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 𑌮𑌹𑌾𑌭𑍂𑌤𑌾𑌦𑌿 𑌧𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌂, 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌨𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍍, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌚 ‘𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌤𑍍 𑌤𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ‘𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌨𑍍𑌤𑌮𑍍, 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 । 𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑍍 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌗𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 𑌉𑌕𑍍𑌤𑌃 ॥

𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌕𑌃 𑌅𑌧𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇— 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇 𑌪𑌰𑌮𑌗𑍁𑌰𑍌 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑍇 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌃 𑌯𑌤𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌿 𑌵𑌾 “𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸𑌃 𑌏𑌤𑌤𑍍 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂

றது; மற்று, அது அறியப்படுகின்றபொருளாகவுள்ளவளவிலே அறியவேண்டிய பொருளாம் [ப்ரஹ்மத்தை அறியவேண்டியநிலைமையிலே, அது அறியப்படுகின்ற பொருள்; அப்பொழுது அது அறியவேண்டிய பொருளாம் என்க]. அந்த இம்மூன்றும் எல்லாப்பிராணிகளுடைய ஹிருதயத்தில், புத்தியில் விசேஷமாய் உள்ளன; அதனுள்ளேயன்றோ இம்மூன்றும் புலப்படுகின்றன. (ஆகவே, அவை தேசாந்தரத்தில் வெகுதூரத்தில் இல்லையெனத் தெளிக.) (௧௭)

பக்தியோடு மெய்யறிவைத் தேடவேண்டும்.

கீழ்க்கூறிய விஷயங்களை முடிக்கும்பொருட்டாய் இச்சுலோகம் தொடங்கப் படுகின்றது:

௧௮. இவ்வாறு க்ஷேத்ரமும், ஞானமும், அறியவேண்டியபொருளும் சுருக்கமாகக் கூறப்பட்டன. என்பக்தன் இதனை அறிந்து எனது நிலைக்குத் தக்கோனாகிறான்.

க்ஷேத்ரமானது-மஹாபூதம்முதலாக(௧௩-௫)உறுதியானதன்மை ஈறாக(௧௩-௬) சுருக்கமாய்க் கூறப்பட்டது. அவ்வாறே, ஞானமானது - பணிவுமுதலாக(௧௩-௭)உண்மையறிவை நோக்குதல் ஈறாக(௧௩-௧௧)சுருக்கமாய்க் கூறப்பட்டது. மேலும், அறியவேண்டியபொருளானது - "எது" (௧௩-௧௨) என்பதுமுதலாக "அப்பால்உள்ளது எனப்படுகின்றது" (௧௩-௧௭) என்பதுஈறாகச் சுருக்கமாய்க் கூறப்பட்டது. வேதப் பொருளெல்லாம் இவ்வளவுதான்; கீதாப்பொருளெல்லாமும் இவ்வளவுதான்; (அது இவ்வாறு சுருக்கி)முடித்துக்கூறப்பட்டது.

(வினா):—எவன் இந்தமெய்யறிவிலே உரிமையுள்ளவனாகிறான்? என்பது.

(விடை):—கூறுவோம்:—என்னுடைய பக்தன்: முற்றும்உணர்ந்த பரமேச்வரனை பரமாசார்யனாகிய வாஸுதேவனை என்னிடத்து எல்லாஆத்மஎண்ணத்தையும் வைத்தவன் [பகவானை எல்லாவற்றினுடைய ஆத்மாவாகக்கொண்டவன்]: எதனைக் காண்கின்றானோ, கேட்கின்றானோ, அல்லது தொடுகின்றானோ, "(அது)எல்லாமே பகவான் வாஸுதேவன்" என இத்தகைய கொள்கை புகுந்துகிடக்கும்புத்தியை

विज्ञाय, मद्भावाय मम भावः मद्भावः तस्मै मद्भावाय उपपद्यते मोक्षं गच्छति ॥ १८ ॥

तत्र सप्तमे अध्याये ईश्वरस्य द्वे प्रकृती उपन्यस्ते परापरे क्षेत्रक्षेत्रज्ञलक्षणे; 'एतद्योनीनि भूतानि' इति च उक्तम्। क्षेत्रक्षेत्रज्ञप्रकृतिद्वययोनित्वं कथं भूतानाम् इति? अयम् अर्थः अधुना उच्यते—

१९. प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृतिसम्भवान्॥

प्रकृतिं पुरुषं चैव ईश्वरस्य प्रकृती, तौ प्रकृतिपुरुषौ उभावपि अनादी विद्धि, न विद्यते आदिः ययोः तौ अनादी। नित्येश्वरत्वात् ईश्वरस्य तत्प्रकृत्योः अपि युक्तं नित्यत्वेन भवितुम्। प्रकृतिद्वयवत्त्वमेव हि ईश्वरस्य ईश्वरत्वम्। याभ्यां प्रकृतिभ्याम् ईश्वरः जगदुत्पत्तिस्थितिप्रलयहेतुः ते अनादी सत्यौ संसारस्य कारणम्॥

"न आदी अनादी" इति तत्पुरुषसमासं केचित् वर्णयन्ति। तेन हि किल ईश्वरस्य कारणत्वं सिध्यति। यदि पुनः प्रकृतिपुरुषावेव नित्यौ स्याताम्, तत्कृतमेव जगत्, न ईश्वरस्य जगतः कर्तृत्वम् इति॥

யுடையவன். அந்த என்பக்தன் கீழ்க்கூறிய மெய்யறிவைப் பெற்று எனதுநிலைக்கு உரியவனாகிறான்; மோக்ஷத்தை அடைகிறான். (௧௮)

பிரகிருதியும், புருஷனும் நித்தியமானவை.

இனி, ஏழாம் அத்தியாயத்தினுள் தாழ்ந்ததும் உயர்ந்ததுமான "க்ஷேத்ரம்" "க்ஷேத்ரஜ்ஞன்" என்னும் இரண்டுப்பிரகிருதிகள் ஈச்வரனுக்கு விவரிக்கப்பட்டன; அன்றியும், "பூதங்கட்கு இவை பிறப்பிடம்" (எ - கூ) எனவும் கூறப்பட்டது. க்ஷேத்ரம், க்ஷேத்ரஜ்ஞன் என்னும் இரண்டுப்பிரகிருதிகளும் பூதங்கட்குப் பிறப்பிடமாதல் எப்படி? —என்னும் (வினவைச் சங்கித்து) இவ்விஷயத்திற்கு இங்ஙனம் விடைகூறப்படுகின்றது:

௧௯. பிரகிருதி, புருஷன் இரண்டனையும் அநாதியாக அறிந்துகொள். விகாரங்களையும் குணங்களையும் பிரகிருதியினின்றும் பிறந்தவையாகத் தெரிந்துகொள்.

பிரகிருதியும் புருஷனும் ஈச்வரனுடைய பிரகிருதிகள். அந்தப்பிரகிருதி புருஷன் என்றஇரண்டிற்கும் ஆதி இல்லை, முதல் இல்லை (என்று நீ) அறியக்கடவாய். ஈச்வரன் நித்தியமானவன் ஆதலால், அவனது பிரகிருதிகளும் நித்தியமாயிருத்தல் நேர். இரண்டுப் பிரகிருதிகளையும் உடையவனாதலேயன்றோ ஈச்வரன் ஈச்வரனாயிருத்தலென்பது. பிரபஞ்சம் உண்டாதற்கும், நிலைத்தற்கும், அழிதற்கும் ஈச்வரன் எந்த இரண்டுபிரகிருதிகளால் காரணமாகின்றானோ, அந்த இரண்டும் அநாதியாய் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்.

சிலர் "(அப்பிரகிருதிகள்) ஆதியானவையல்ல" என, தத்புருஷஸமாஸத்தைச் சொல்லுகிறார்கள். அதனால், ஈச்வரன் காரணமாதல் அமைகின்றதாம். மற்று, பிரகிருதி புருஷன் இரண்டுமே நித்தியமானவையாயின், பிரபஞ்சம் அவற்றாலேயே படைக்கப்பட்டது; ஈச்வரன் பிரபஞ்சத்திற்குக் கர்த்தாவாகமாட்டான் என்று (ஆகும்).

𑌤𑌨𑍍𑌨 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍; 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌈𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌅𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍, 𑌸𑌂𑌸𑌾𑌰𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑍇 𑌅𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍, 𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 ।

𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌪𑍁𑌨𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍋𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌏𑌤𑌦𑍍 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌕𑌥𑌮𑍍 ?— 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌮𑍋𑌹𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌕𑌾𑌰𑌪𑌰𑌿𑌣𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌨𑍍, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌕𑌾𑌰𑌕𑌾𑌰𑌣𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌮𑌾𑌯𑌾, 𑌸𑌾 𑌸𑌂𑌭𑌵𑍋 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌾𑌨𑍍 ॥ ௧௯ ॥

𑌕𑍇 𑌪𑍁𑌨𑌃 𑌤𑍇 𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌃 𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹—

௨௦. 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌹𑍇𑌤𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

அது சரியன்று; ஏனெனில், பிரகிருதியும் புருஷனும் உண்டாவதற்குமுன் ஆளப்படும்பொருளொன்றும் இல்லாமையினால் ஈச்வரன்[ஆளுபவன்]ஈச்வரனில்லை என்றாகும்: அன்றியும், மோக்ஷமில்லை என்றாகும் : சாஸ்திரம் வீண் என்றாகும் :பந்தமும், மோக்ஷமும் இல்லையென்றாகும் : (பிரகிருதி, புருஷன் என்றவற்றின் சார்பு இல்லாமலே ஈச்வரன் ஸம்ஸாரத்திற்குக் காரணமாயின், முக்தர்களும் மீண்டும் ஸம்ஸாரத்தில் வந்து உழலுதலைத் தடுத்தற்கு ஒன்றுமில்லை. ஆகவே,மோக்ஷத்தைக்கூறும் நூல் வீணாம். மற்றும், எப்பொழுதாவது பந்தமும்,மோக்ஷமும் இல்லையாயின், பின்பு அவை உண்டாதற்குக் காரணமும் இல்லை.—ஆ.)

பிரகிருதியும், புருஷனும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்.

மற்று, ஈச்வரனுடைய பிரகிருதிகள் நித்தியமானவையாயின், இதெல்லாம் பொருந்தியதாகும்.—எப்படி ?—வேறுபாட்டிற்குக் காரணமான ஈச்வரசக்தியாய், முக்குணவடிவமான மாயையானது - புத்திமுதலாக உடம்புஈறாகவுள்ளவையாய் மேலே கூறப்படும் விகாரங்கட்கும், இன்ப துன்ப மயக்க எண்ணங்களின் வடிவங்களாய் மாறியுள்ளவையாய் மேலே கூறப்படும் குணங்கட்கும் பிறப்பிடம் என்று அறிந்துகொள் : (அவை) பிரகிருதியின் வேறுபாடு எனத்தெரிந்துகொள். (பிரகிருதிக்கு ஆதியில்லாவளவிலே, விகாரங்களும் குணங்களும் அப்பிரகிருதியின் கார்யமாதலால், ஆத்மா நிர்விகாரி எனவும், நிர்க்குணம் எனவும் பெறப்படுகின்றன.—ஆ.) (௧௯)

ஆனால், பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய அந்த விகாரங்களும், குணங்களும் யாவை ? என்பது.—கூறுகிறார் :

௨௦. காரியத்தையும், கருவிகளையும் உண்டாக்குவதிலே பிரகிருதி - காரணம் எனப்படுகின்றது. இன்பதுன்பங்களை அநுபவிப்பதிலே புருஷன் – காரணம் எனப்படுகிறான்.

கார்யகரணகர்த்ருத்வே—கார்யம் ஶரீரம், கரணாநி தத்ஸ்தாநி த்ரயோதஶ । தேஹாரம்பகாணி பூதாநி பஞ்ச விஷயாஶ்ச ப்ரக்ருதிஸம்பவாஃ விகாராஃ பூர்வோக்தாஃ இஹ கார்யக்ரஹணேந க்ருஹ்யந்தே । குணாஶ்ச ப்ரக்ருதிஸம்பவாஃ ஸுகது:கமோஹாத்மகாஃ கரணாஶ்ரயத்வாத் கரணக்ரஹணேந க்ருஹ்யந்தே । தேஷாம் கார்யகரணாநாம் கர்த்ருத்வம் உத்பாதகத்வம் யத் தத் கார்யகரணகர்த்ருத்வம், தஸ்மிந் கார்யகரணகர்த்ருத்வே ஹேதுஃ காரணம் ஆரம்பகத்வேந, ப்ரக்ருதிஃ உச்யதே । ஏவம் கார்யகரணகர்த்ருத்வேந ஸம்ஸாரஸ்ய காரணம் ப்ரக்ருதிஃ ॥

'கார்யகாரணகர்த்ருத்வே' இத்யஸ்மிந்நபி பாடே—கார்யம், யத் யஸ்ய பரிணாமஃ தத் தஸ்ய கார்யம் விகாரஃ, விகாரி காரணம், தயோஃ விகாரவிகாரிணோஃ கார்யகாரணயோஃ கர்த்ருத்வே—இதி தாந்யேவ கார்யகாரணாநி உச்யந்தே । அதவா—ஷோடஶ விகாராஃ கார்யம், ஸப்த ப்ரக்ருதிவிக்ருதயஃ காரணம், தேஷாம் கர்த்ருத்வே ஹேதுஃ ப்ரக்ருதிஃ உச்யதே, ஆரம்பகத்வேநைவ ॥

புருஷஸ்ய ஸம்ஸாரஸ்ய காரணம் யதா ஸ்யாத் தத் உச்யதே—புருஷ-

கார்யமென்பது - சரீரம். கருவிகள் என்பன - (ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்துகர்மேந்திரியங்கள், மனம், புத்தி, அஹங்காரம் எனப்)பதின்மூன்று. "கார்யம்" என்றதனால் - (வீடுகட்டுவதுபோல) சரீரத்தைக் கட்டுகின்ற ஐந்து பூதங்களும், பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய கீழ்க்கூறிய விகாரங்களான ஐந்து இந்திரிய விஷயங்களும் இங்குக் கொள்ளப்படுகின்றன. "கருவிகள்" என்றமையினால் - பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடைய இன்ப துன்ப மயக்கவடிவுள்ள குணங்களும் கொள்ளப்படுகின்றன ; கருவிகள் (அவற்றிற்குத்) தங்குமிடமாதலின். அந்தக் கார்யத்தையும் கருவிகளையும் [சரீரம்முதலியவற்றையும், இன்பதுன்பம் முதலியவற்றையும்] உண்டாக்கும் விஷயத்திலே பிரகிருதியானது காரணம் எனப்படுகின்றது ; (அவற்றை) உண்டாக்குவதாதலின். இவ்வாறாக, பிரகிருதியானது கார்யத்தையும் கருவிகளையும் செய்வதாதலால் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்க.

"கார்யத்தையும், காரணத்தையும் உண்டாக்குவதிலே" என்ற இப்பாடத்திலும் (இவ்வாறு பொருள்கொள்க) :—எது எதனுடைய வேறுபாடோ, அது அதனுடைய கார்யம், விகாரம். விகாரத்தையுடையது - விகாரி : காரணம் என்க. அந்த விகாரவிகாரியான கார்யகாரணத்தை உண்டாக்கும்விஷயத்திலே (பிரகிருதி காரணமாம்) என அவையே [கீழே உரைத்துள்ள கார்யமும், கருவிகளுமே] கார்யகாரணங்கள் எனப்படுகின்றன. அல்லது, (வேறுவிதமாக உரையிடலாம் :—இந்திரியங்கள் பத்து, மனம் ஒன்று, இந்திரியவிஷயங்கள் ஐந்து ஆகப்) பதினாறு விகாரங்களும் கார்யமாம். (மஹத், அஹங்காரம்,ஐந்து தந்மாத்ரங்கள் என மூலப்) பிரகிருதியின் விகாரங்கள் ஏழும் காரணமாம். அவற்றை உண்டாக்கும் விஷயத்திலே பிரகிருதி காரணம் எனப்படுகின்றது ; (அவற்றையெல்லாம்) உண்டாக்குவதேயாதலின்.

இனி, புருஷன் ஸம்ஸாரத்திற்கு எவ்வாறு காரணமாகிறானோ, அது கூறப்படுகின்றது : புருஷன், ஜீவன், க்ஷேத்ரஜ்ஞன், போக்தா என்பன - ஒருபொருளுள்ள

ஷ: ஜீவ: க்ஷேத்ரஜ்ஞ: போக்தா இதி பர்யாய:, ஸுகது:கானாம் போக்யானாம் போக்த்ருத்வே ச உபலப்த்ருத்வே ஹேது: உச்யதே ॥

கதம் புன: அநேந கார்யகாரணகர்த்ருத்வேந ஸுகது:கபோக்த்ருத்வேந ச ப்ரக்ருதிபுருஷயோ: ஸம்ஸாரகாரணத்வம் உச்யதே இதி?

அத்ர உச்யதே—கார்யகாரணஸுகது:கரூபேண ஹேதுபலாத்மநா ப்ரக்ருதே: பரிணாமாபாவே, புருஷஸ்ய ச சேதநஸ்ய அஸதி ததுபலப்த்ருத்வே, குத: ஸம்ஸார: ஸ்யாத்? யதா புந: கார்யகாரணஸுகது:கஸ்வரூபேண ஹேதுபலாத்மநா பரிணதயா ப்ரக்ருத்யா போக்யயா புருஷஸ்ய தத்விபரீதஸ்ய போக்த்ருத்வேந அவித்யாரூப: ஸம்யோக: ஸ்யாத், ததா ஸம்ஸார: ஸ்யாத் இதி। அத: யத் ப்ரக்ருதிபுருஷயோ: கார்யகாரணகர்த்ருத்வேந ஸுகது:கபோக்த்ருத்வேந ச ஸம்ஸாரகாரணத்வம் உக்தம், தத் யுக்தம் ॥

க: புந: அயம் ஸம்ஸாரோ நாம?

ஸுகது:கஸம்போக: ஸம்ஸார:। புருஷஸ்ய ஸுகது:கானாம் ஸம்போக்த்ருத்வம் ஸம்ஸாரித்வம் இதி ॥ ௨0 ॥

சொற்கள். அநுபவிக்கப்படும் இன்பதுன்பங்களை உணரும்விஷயத்திலே புருஷன் காரணமாகக் கூறப்படுகிறான். (இங்குக் கூறப்பட்ட ஜீவன் - ஸோபாதிக ஜீவன், உபாதியுள்ளஜீவன். அவன் வாஸ்தவத்திலே நிருபாதிகன், உபாதியில்லாதவன், ப்ரஹ்மமாயிருப்பவன் என்பதையும் நோக்கிக்கொள்க.)

(ஆக்ஷேபம்) :—ஆனால், கார்யகாரணங்களை உண்டாக்குவதும், இன்பதுன்பங்களை அநுபவிப்பதுமாகிய இவற்றினால் பிரகிருதியும் புருஷனும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாதல் எப்படிச் சொல்லப்படுகின்றது ? என்பது.

(ஸமாதானம்) :—இதில்கூறுவோம் : தேகேந்திரியங்களாக, இன்பதுன்பங்களாக காரணகாரியங்களாகப் பிரகிருதிக்கு வேறுபாடு இல்லாவளவிலே, உணர்வுப்பொருளான புருஷனுக்கு அவற்றை உணர்தலென்பதும் இல்லாவளவிலே, ஸம்ஸாரம் எங்கிருந்துவரும் ? (வாராது. ஏனெனில், என்றும் விடுபட்ட ஆத்மாவிற்கு ஸம்ஸாரம் தானாகவே இல்லையென்பதாம்.—ஆ.) ஆனால், தேகேந்திரியங்களாக, இன்ப துன்பங்களாக, காரணகார்யங்களாக வேறுபட்டு அநுபவிக்கப்படும் பிரகிருதியோடு அதற்கு மாறான புருஷனுக்கு அநுபவிக்குந்தன்மையினால் அவித்யாவடிவமாகிய ஸம்பந்தம் எப்பொழுது இருக்குமோ, அப்பொழுது ஸம்ஸாரம் இருக்குமென்க. ஆகவே, பிரகிருதியும் புருஷனும் (முறையே) தேகேந்திரியங்களை உண்டாக்குவதனாலும், இன்பதுன்பங்களை அநுபவிப்பதனாலும் ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்று எது கூறப்பட்டதோ, அது நேர்.

(ஆக்ஷேபம்) :—ஆனால், இந்த ஸம்ஸாரமென்பது யாது ? (அவிகாரியான ஆத்மாவிற்கு ஸம்ஸாரம் தகாது.—ஆ.)

(ஸமாதானம்) :—ஸம்ஸாரமென்பது - இன்பதுன்பங்களை அநுபவித்தல். ஸம்ஸாரியாயிருத்தலென்பது - புருஷன் இன்பதுன்பங்களை அநுபவிப்பனாதலாம். (இன்பத்தையேனும், துன்பத்தையேனும் நேரே உணர்தல் - போகம் என்பது. நிர்விகாரமாகவே, பார்த்தபடியே பார்த்துநிற்கும்பொருளுக்கு அப்போகந்தான் ஸம்ஸாரமாம். அத்தகையபோகமுடைமை - இது ஸம்ஸாரியாயிருத்தலென்பது.—ஆ) (௨0)

𑌯𑌚𑍍𑌚 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌤𑍍𑌵𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌂, 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌚𑍍𑌚 𑌕𑌿𑌂𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௧. 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑍋 𑌹𑌿 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 ।
𑌕𑌾𑌰𑌣𑌂 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌯 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 ॥

𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍌 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌯𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑌰𑌿𑌣𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌃—𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌗𑌤𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃—𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍, 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇—𑌉𑌪𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃—𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌤𑌃 𑌜𑌾𑌤𑌾𑌨𑍍 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌮𑍋𑌹𑌾𑌕𑌾𑌰𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 "𑌸𑍁𑌖𑍀, 𑌦𑍁𑌃𑌖𑍀, 𑌮𑍂𑌢𑌃, 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌃, 𑌅𑌹𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑍍 । 𑌸𑌤𑍍𑌯𑌾𑌮𑌪𑌿 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌮𑍋𑌹𑍇𑌷𑍁 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌭𑍁𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌸𑌙𑍍𑌗𑌃 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌃 𑌸𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮𑌨𑌃, '𑌸 𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 । 𑌤𑌦𑍇𑌤𑌦𑌾𑌹—𑌕𑌾𑌰𑌣𑌂 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌃 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌸𑌙𑍍𑌗𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌃 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁, 𑌸𑌚𑍍𑌚 𑌅𑌸𑌚𑍍𑌚 𑌸𑌦𑌸𑌤𑍀, 𑌤𑌯𑍋𑌃 𑌯𑍋𑌨𑌯𑌃 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌯𑌃, 𑌤𑌾𑌸𑍁 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿, 𑌤𑍇𑌷𑍁 𑌸𑌦𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌨𑍍𑌮𑌸𑍁 𑌵𑌿𑌷𑌯𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌗𑍁𑌣𑌸𑌙𑍍𑌗𑌃 ॥

அறியாமையும், அபிமாநமும் ஸம்ஸாரியாயிருத்தற்குக் காரணம்.

ஸம்ஸாரியாயிருத்தலென்பது - புருஷன் இன்பதுன்பங்களை அநுபவிப்பவனாதல் என எது கூறப்பட்டதோ, அது [அவற்றை அநுபவித்தலானது] அவனுக்கு எதனாலாவது? என்பது. கூறுவோம் :

௨௧. பிரகிருதியில் தங்கிய புருஷன் பிரகிருதியினின்றும் தோன்றிய குணங்களை அநுபவிக்கிறான். இவனுக்குக் குணங்களிலேயுள்ள பற்றானது நல்லனவும் தீயனவுமான பிறவிகளிலே பிறத்தற்குக் காரணம்.

அநுபவிக்கின்ற புருஷன், தேஹேந்திரியவடிவமாக வேறுபட்ட அவித்யையென்னும் பிரகிருதியில் தங்கிநிற்பவன் : பிரகிருதியை [உடம்பு இந்திரியங்களின் சேர்க்கையை] ஆத்மாவாகக்கொண்டவன் என்பது ; ஆதலால், இன்பவடிவாகவும், துன்பவடிவாகவும், மயக்கவடிவாகவும் பிரகிருதியினின்றும் தோன்றியகுணங்களை "நான் இன்பமுடையவன், துன்பமுடையவன், மயங்கியவன், அறிவுள்ளவன்" என இவ்வாறு அநுபவிக்கிறான் : உணர்கிறான் என்பது பொருள். அவித்யை (பிறப்பிற்குக் காரணமாய்) இருந்தாலும், அநுபவிக்கப்படுகின்ற இன்பம்துன்பம் மயக்கம் என்ற குணங்களின்மீது பற்றானது, தானென்னும் எண்ணமானது [அக்குணங்களே ஆத்மா என்னும் நினைப்பு] எதுவோ, அது - இப்புருஷனது பிறப்பிற்கு முக்கியகாரணமாம்; "அவன் எதனை விரும்புகிறவனாய் இருக்கின்றானோ, அதனை [அதற்கான உபாயத்தைத் தேடவேண்டுமென்று] கொள்கிறவனாகிறான்" (பி - ௪ - ௪ - ௫) என்னும்சுருதியினாலென்க. அந்த இதனை அருளிச்செய்கிறார் :—அநுபவிப்பவனுக்குக் குணங்களின்மீதுள்ள அபிமானமானது - நல்லபிறவிகளிலும், தீயபிறவிகளிலும் பிறக்கும்விஷயத்திலே காரணம்.

अथ वा — सदसद्योनिजन्मसु अस्य संसारस्य कारणं गुणसङ्गः, इति संसारपदं अध्याहार्यम् ॥

सद्योनयः देवादियोनयः । असद्योनयः पश्वादियोनयः । सामर्थ्यात्, सदसद्योनयः मनुष्ययोनयोऽपि अविरुद्धाः द्रष्टव्याः ॥

एतत् उक्तं भवति — प्रकृतिस्थत्वाख्या अविद्या, गुणेषु च सङ्गः कामः, संसारस्य कारणमिति । तच्च परिवर्जनाय उच्यते । अस्य च निवृत्तिकारणम् — ज्ञानवैराग्ये ससंन्यासे गीताशास्त्रे प्रसिद्धम् । तच्च ज्ञानं पुरस्तात् उपन्यस्तं क्षेत्रक्षेत्रज्ञविषयं 'यत् ज्ञात्वाऽमृतमश्नुते' इति । उक्तं च अतद्भावपरित्यागेन अतद्भावाध्यारोपेण च ॥

तस्यैव पुनः साक्षात् निर्देशः क्रियते —

அல்லது, "நல்ல பிறவிகளிலும், தீய பிறவிகளிலும் பிறக்கும்விஷயத்திலே, குணங்களின்மீதுள்ள பற்றுனது இவனது ஸம்ஸாரத்திற்குக் காரணமாம்" என ஸம்ஸாரமென்னும் சொல்லைவருவி(த்துரை)க்க.

நல்ல பிறவிகள் - தேவர்முதலான பிறவிகள். தீய பிறவிகள் - பசுமுதலான பிறவிகள். நல்லவையும் தீயவையுமான மனுஷ்யப்பிறவிகளும் விரோதப்படாதவை என ஆற்றலால் கண்டுகொள்க. (ஆற்றல் - சப்தசக்தி. நல்லனவும் தீயனவுமான இருபிறவிகளையும் உணர்த்துகின்ற சொல்லின் சக்தியினுல் - நன்மையும் தீமையும் கலந்து அவ்விருபிறவிகட்கும் இடையிலுள்ள மனிதப்பிறவி தொனிக்கப்படுகின்றது. அதனை இங்கே கொள்ளுதல் ஒருநியாயத்திற்கும் விரோதமில்லை. ஆகவே, மானிடப் பிறவியையும் கூட்டிக்கொள்க.)

இது சொல்லப்பட்டதாகின்றது :— பிரகிருதியில் தங்கியுள்ள தன்மை அவித்யை. குணங்களில் பற்று - காமம். (இவையிரண்டும்) ஸம்ஸாரத்திற்குக் காரணமாம் என்பது. (அவித்யை - உபாதாநகாரணம். காமம் - நிமித்தகாரணம்.—ஆ.)

ஆத்மஅறிவு ஸம்ஸாரத்தை ஒழிக்கும்.

அது நீக்குவதற்காகக் கூறப்படுகின்றது [அவித்யை, காமம் என்றஅவ்விரு விதக் காரணத்தையும் நீக்கவேண்டுமென்று உபதேசிக்கப்படுகின்றது]. இவ்விரண்டும் ஒழிதற்குக்காரணம் துறவோடுகூடிய ஞான வைராக்கியங்கள். (அவை) கீதாசாஸ்திரத்தினுள் தெளிவாய் உபதேசிக்கப்பட்டுள்ளன: க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களைப்பற்றிய அந்தஅறிவு "எதனை அறிந்து சாகாமையைப் பெறுகின்றனே" (கஉ - கஉ) என முன்னர் விரித்துரைக்கப்பட்டது; மேலும், வேறுனவற்றை நீக்குவதனுலும் (கங - கஉ) அதன்தன்மையல்லாதவற்றை ஏற்றுவதனுலும் (கங - கங) கூறப்பட்டது. (உக)

ஆத்மாவினுடைய வாஸ்தவத்தன்மை.

மீளவும் அதனையே நேரே குறிப்பிட்டு உணர்த்துதல் செய்யப்படுகின்றது [முக்தியைக் கொடுப்பதாகப் பிரகிருதத்தில் பேசப்பட்டுவரும் ஞானத்தை நேரே உணர்த்தும்பொருட்டு இச்சுலோகம் எழுகின்றது.—ஆ.]:

22. 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌽𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑌰𑌃 ॥

𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑌮𑍀𑌪𑌸𑍍𑌥𑌃 𑌸𑌨𑍍 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃 । 𑌯𑌥𑌾 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌜𑍍𑌞𑌕𑌰𑍍𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑍇𑌷𑍁 𑌤𑌟𑌸𑍍𑌥𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃; 𑌯𑌜𑍍𑌞𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍁𑌶𑌲𑌃 𑌋𑌤𑍍𑌵𑌿𑌗𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌗𑍁𑌣𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌂 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾, 𑌤𑌦𑍍𑌵𑌚𑍍𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍇𑌷𑍁 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 । 𑌅𑌥𑌵𑌾 — 𑌦𑍇𑌹𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌰𑌃; 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌃 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌦𑍇𑌹𑌃, 𑌤𑌤𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌰𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍 𑌸𑌮𑍀𑌪𑍇 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾, 𑌯𑌤𑌃 𑌪𑌰𑌃 𑌅𑌨𑍍𑌤𑌰𑌤𑌮𑌃 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾; 𑌸𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑍇𑌨 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 । 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌵𑌦𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑌣𑌾𑌚𑍍𑌚 𑌉𑌪𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 । 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 — 𑌅𑌨𑍁𑌮𑍋𑌦𑌨𑌮𑍍 𑌅𑌨𑍁𑌮𑌨𑌨𑌮𑍍, 𑌕𑌰𑍍𑌤𑍃𑌷𑍁 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌪𑌰𑌿𑌤𑍋𑌷𑌃, 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌾 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 𑌚 । 𑌅𑌥 𑌵𑌾, 𑌅𑌨𑍁𑌮𑌨𑍍𑌤𑌾 — 𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑌣𑌪𑍍𑌰-

---

22. இந்த உடம்பினுள் (உள்ள) மேலான புருஷன் கிட்டநின்று பார்ப்பவன்; அநுமதிப்பவன், தாங்குபவன், அநுபவிப்பவன், மேலான ஈச்வரன், பரமாத்மாஎன்றும் கூறப்பெற்றவன்.

கிட்டநின்று பார்ப்பவன்-ஸமீபத்திலே நின்று தான் தொழிற்படாதவனாய்ப்பார்ப்பவன், (ஸந்நிதிமாத்திரத்தால் ஸாக்ஷியாயிருப்பவன், கண்காணியாயிருப்வன். இங்கே, பார்ப்பதென்பது-பார்த்தலென்னும் தொழிலன்று; தொழிலில்லாத ஸந்நிதிமாத்திரமேதான்என்க.—ஆ.) ரித்விக்குக்களும் யஜமானனும் யாககர்மங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுது, யாகவித்யையில் மிகவும்தேர்ச்சிபெற்ற பொதுவான வேறொருவன் (அவற்றில்) தலைப்படாதவனாய் ரித்விக் யஜமானர்களுடைய செய்கையின் குணத்தையும் குற்றத்தையும் எவ்வாறு நோக்கிக்கொண்டிருக்கிறானோ, அதுபோல, உடம்பு இந்திரியங்களின் செய்கைகளில் தலைப்படாத அந்நியனாய். அவற்றினும் வேறானவனாய், அந்த உடம்புஇந்திரியங்களையும், அவற்றின் செய்கைகளையும் கிட்டநோக்கிக்கொண்டிருப்பவன் - கிட்டநின்று பார்ப்பவன். அல்லது, (இவ்வாறு கொள்ளலாம்) :— உடம்பு, கண், மனம், புத்தி என்பன - பார்க்கும்பொருள்கள்; அவற்றுள், வெளியிலுள்ள பார்க்கும்பொருள் - உடம்பு. அதுதொடங்கி மிகவும் உள்ளேயுள்ளதும், மிகச்சமீபத்திலிருந்து பார்ப்பதும் - ஆத்மா; ஏனெனில், மிகவும் உள்ளேயுள்ள பார்க்கும்பொருள் (அதனினும்) வேறு இல்லை. அது மிகச்சமீபத்திலிருந்து [இடையீடில்லாது] பார்ப்பதாயிருத்தலால், கிட்டநின்று பார்க்கும்பொருளாம். அல்லது, யாகத்தை மேல்பார்ப்பவன்போல, (இந்த ஆத்மா அறிவுமாத்திர வடிவமாய்) எல்லாவற்றையும் மேல்பார்ப்பதனால், மேல்பார்க்கும் பொருளென்க. **அநுமதித்தல்** - அநுமோதித்தல், (தாமாகத் தொழில்களைச் செய்கிறவர்கள் அவற்றைச்) செய்யும்போது, அவரது செய்கைகளிலே சந்தோஷித்தல்; அதனைச் செய்பவன் - **அநுமதிப்பவன்.** அல்லது, (ஆத்மாவான புருஷன்) உடம்பு இந்திரியங்களின் செய்கைகளில் தான் செல்

வ்யாப்ருதேஷு ஸ்வயம் அவ்யாப்ருதோऽபி வ்யாப்ருத இவ தத்ஸந்நிதிமாத்ரேண விபாவ்யதே, தேந அநுமந்தா। அத²வா — வ்யாப்ருதாந் ஸ்வவ்யாபாரேஷு தத்ஸாக்ஷிபூ⁴த꞉ கதா³சித³பி ந நிவாரயதி இதி அநுமந்தா। ப⁴ர்தா — ப⁴ரணம் நாம தே³ஹேந்த்³ரியமநோபு³த்³தீ⁴நாம் ஸம்ஹதாநாம் சைதந்யாத்மபாரார்த்²யேந நிமித்தபூ⁴தேந சைதந்யாபா⁴ஸாநாம் யத் ஸ்வரூபதா⁴ரணம் தத் சைதந்யாத்மக்ருதமேவ இதி ப⁴ர்தா ஆத்மா உச்யதே। போ⁴க்தா — அக்³ந்யுஷ்ணவத் நித்யசைதந்யஸ்வரூபேண பு³த்³தே⁴꞉ ஸுக²து³꞉க²மோஹாத்மகா꞉ ப்ரத்யயா꞉ ஸர்வவிஷயவிஷயா꞉ சைதந்யாத்மக்³ரஸ்தா இவ ஜாயமாநா꞉ விப⁴க்தா꞉ விபா⁴வ்யந்தே இதி போ⁴க்தா ஆத்மா உச்யதே। மஹேஶ்வர꞉ — ஸர்வாத்மத்வாத் ஸ்வதந்த்ரத்வாச்ச மஹாந் ஈஶ்வரஶ்ச இதி மஹேஶ்வர꞉। பரமாத்மா — தே³ஹாதீ³நாம் பு³த்³த்⁴யந்தாநாம், ப்ரத்யகா³த்மத்வேந கல்பிதாநாம் அவித்³யயா, பரம꞉ உபத்³ரஷ்ட்ருத்வாதி³லக்ஷண꞉ ஆத்மா இதி பரமாத்மா। ஸ꞉ அத꞉ "பரமாத்மா" இத்யநேந ஶப்³தே³ந அபி உக்த꞉ கதி²த꞉ ஶ்ருதௌ। க்வ அஸௌ? — அஸ்மிந் தே³ஹே புருஷ꞉ பர꞉ அவ்யக்தாத், "உத்தம꞉ புருஷஸ்த்வந்ய꞉ பரமாத்மேத்யுதா³ஹ்ருத꞉" இதி ய꞉ வக்ஷ்யமாண꞉ ॥ ௨௨ ॥

லாதவனாயினும், சென்றவன்போல அவற்றிற்கு அநுகூலமாக [அவற்றிற்குத் துணையாகத் தொழிற்பட்டவன்போலக்] காணப்படுகிறான்; அதனால், *அநுமதிப்பவன்* என்க.—அல்லது, தம்தம்செய்கைகளில் சென்றுள்ளவர்கட்கு ஸாக்ஷியாயுள்ள (அவன்) அவர்களைத் தடுப்பதில்லையாதலால், *அநுமதிப்பவன்* என்க. *தாங்குதலென்பது* - சைதந்யத்தின் தோற்றங்களாய் ஒருங்குசேர்ந்துள்ள உடம்பு இந்திரியங்கள் மனம் புத்தி என்பன, சைதந்யமான ஆத்மாஎன்னும் உண்மைப்பொருள் காரணமாகத் தமது வடிவங்களைத் தாங்கிக்கொண்டிருத்தல் எதுவோ,அது. (அது) சைதந்யமான ஆத்மாவினாலானதேயாதலின், ஆத்மாவான (புருஷன்) *தாங்குபவன்* எனப்படுகிறான். (சைதந்யம்- அறிவுப்பொருள். கயிறுஎன்னும்காரணமில்லாவிடில், கயிற்றின்தோற்றமான பாம்பிற்கு நிலைப்பு இல்லை; ஆகவே, பாம்பைத் தாங்குவது கயிறு என்க. அதுபோல, இங்கு நோக்கிக்கொள்க.) இன்ப துன்ப மயக்க வடிவங்களாய், எல்லாவிஷயங்களையும்பற்றியவையான புத்தியின்உணர்ச்சிகள் உண்டாகும்போது சைதந்யமான ஆத்மாவினால் விழுங்கபெற்றவைபோல(க் காணப்பட்டு), நெருப்புச்சூடுபோல [நெருப்பு, சூடுவடிவமாயிருப்பதுபோல] எப்பொழுதும் அறிவுவடிவான (ஆத்மாவினால்) வெவ்வேறாகத் தெளிவாய்ப் புலப்படுகின்றன; ஆதலால், ஆத்மா *அநுபவிப்பவன்* எனப்படுகிறான். எல்லாவற்றினுடைய ஆத்மாவாகவும், சுதந்திரமாகவும் இருத்தலால் (அவன்) *மேலான ஈச்வரனும்.* அறியாமையினால் உள்ளேயுள்ள ஆத்மாவாகக் கற்பிக்கப்பட்டவையாய் உடம்புமுதலாக அவ்யக்தம்ஈறாகவுள்ளவற்றிற்கு அவன் உயர்ந்தஆத்மா, கிட்டநின்று பார்த்தல்முதலிய லக்ஷணங்களுள்ள மேலான ஆத்மா; ஆகவே, பரமாத்மா என்க. ஆதலால், அவன் *"பரமாத்மா"* என்ற இச்சொல்லினாலும் சுருதியினுள் கூறப்பெற்றவன்.—அவன் எங்கே இருக்கிறான்? — "உயர்ந்தபுருஷன்" (கடு - கஎ) என இனிக் கூறப்படுவன் எவனோ, (அந்தப்) *புருஷன்* அவ்யக்தத்தைக் கடந்துநிற்பவனாய் *இச்சரீரத்தில் இருக்கின்றான்.*

(௨௨)

‘𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿’ 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌃, 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌯 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑌶𑍍𑌚, 𑌤𑌮𑍍 𑌏𑌤𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍍—

௨௩. 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌚 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑌹 ।
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌸 𑌭𑍂𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

𑌯𑌃 𑌏𑌵𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑍇𑌨 ‘𑌅𑌯𑌮𑍍 𑌅𑌹𑌮𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿’ 𑌇𑌤𑌿, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌚 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌮𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑍍𑌵𑌵𑌿𑌕𑌾𑌰𑍈𑌃 𑌸𑌹 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌮𑍍 𑌅𑌭𑌾𑌵𑌮𑍍 𑌆𑌪𑌾𑌦𑌿𑌤𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾’ 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌸𑌃 𑌭𑍂𑌯𑌃 𑌪𑌤𑌿𑌤𑍇 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌵𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑍇 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯 𑌨 𑌅𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 𑌨 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨 𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌅𑌪𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 𑌕𑌿𑌮𑍁 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌃 𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 ॥

𑌨𑌨𑍁— 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌾𑌭𑌾𑌵𑌃 𑌉𑌕𑍍𑌤𑌃, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌕𑍃𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍, 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑌭𑌾𑌵𑌿𑌨𑌾𑌂 𑌚, 𑌯𑌾𑌨𑌿 𑌚 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌚, 𑌫𑌲𑌮𑍍 𑌅𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌶𑍋 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌇𑌤𑌿, 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿, 𑌕𑍃𑌤𑌵𑌿𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑍋 𑌹𑌿 𑌨 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌇𑌤𑌿, 𑌯𑌥𑌾

ஆத்ம அறிவின் பயன்.

“ க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி ” (கங - உ) எனக் கூறப்பட்ட (விஷயம்) விரித்துரைத்து முடிக்கப்பெற்றது. அந்தக் கீழ்க்கூறிய லக்ஷணங்களுள்ள இவ்வாத்மாவாகிய

௨௩. புருஷனையும், பிரகிருதியையும் குணங்களோடுகூட எவன் இவ்வாறு அறிகின்றானோ, அவன் எப்படி இருந்தாலும் மீளவும் பிறப்பதில்லை.

எவன் புருஷனை கீழ்க்கூறியவாறு [ஜீவன், ஈச்வரன்முதலிய கற்பனைகளைத் திற்கும் ஆதாரமாக] “இதோ நான் இருக்கிறேன்” என்று ஆத்மாவாக நேரே அறிகிறானோ ; கீழ்க்கூறிய [ஆதியில்லாததாய், இன்னதென்று சொல்லுதற்கு வாராததாய், அநர்த்தங்களைத்திற்கும் அடிக்காரணமான] அவித்யையென்னும்பிரகிருதியையும் அதன்வேறுபாடுகளையும் அறிகிறானோ, (அதாவது அது) ஞானத்தினால் நீக்கப்பட்டதாக, இல்லாமையை அடைவிக்கப்பெற்றதாக [இல்லாமற்போனதாக] அறிகிறானோ; அவன் எவ்வாறு இருந்தாலும் [விதிப்படி நடந்தாலும், விலக்கியதைச் செய்தாலும்] மீண்டும்பிறப்பதில்லை, ஞானியினுடைய இச்சரீரம் மாய்ந்தபின்பு வேறோர்சரீரத்திற்கு உண்டாவதில்லை, வேறோர்சரீரத்தை எடுப்பதில்லை என்பது பொருள். (“எப்படியிருந்தாலும்” என்பதிலுள்ள) உம் என்னும்சொல்லினால் - தனது நல்லொழுக்கத்திலுள்ளவன் பிறக்கமாட்டானெனக் கூறவும்வேண்டுமோ ? என்பது கருத்து.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், ஞானம்பிறந்தபின்பு மறுபிறப்பின்மை கூறப்பட்டது. ஆயினும், ஞானமுண்டாதற்கு முன் செய்யப்பட்ட கர்மங்களும், (அதற்குப்) பிற்காலத்திலுள்ள கர்மங்களும், சென்ற பல பிறப்புக்களில் செய்யப்பட்டவை எவையோ அக்கர்மங்களும பயனைக் கொடாது அழிதல் பொருந்தாமையின், (இன்னும்) மூன்று ஜன்மங்கள் உண்டு. ஏனெனில், செய்தன அழிதல் ஏலாதாதலின் (கர்மங்கள் பயனைத் தராது அழியா). உதாரணமாக, பயனிலே [அதனைக் கொடுப்பதிலே] தலைப்

𑌸𑌹𑍈𑌵 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌆𑌰𑌬𑍍𑌧𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 । 𑌨 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌆𑌰𑌭𑍇𑌰𑌨𑍍 ; 𑌸𑌂𑌹𑌤𑌾𑌨𑌿 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌏𑌕𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌆𑌰𑌭𑍇𑌰𑌨𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑌵𑌿𑌨𑌾𑌶𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌅𑌨𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌂 𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌇𑌦𑌮𑍍 𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 '𑌨 𑌸 𑌭𑍂𑌯𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥

𑌨 ; '𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿' '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿' '𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌮𑍍' '𑌇𑌷𑍀𑌕𑌾𑌤𑍂𑌲𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌦𑍂𑌯𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 । 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌃 '𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵-

---

பட்டு (இப்பொழுதுள்ள) பிறப்பை விளைத்த கர்மங்கள் (ஞானத்தால் அழியமாட்டா). மேலும், கர்மங்கட்கு வேற்றுமை காணப்படவில்லை. ஆகவே, மூவகைக்கர்மங்களும் மூன்றுஜன்மங்களை விளைக்கவேண்டும் ; எல்லாம் ஒருங்குகூடியாயினும் ஒருஜன்மத்தை விளைக்கவேண்டும். இல்லாக்கால், செய்தன அழியுமளவிலே, எங்குமே நிச்சயமின்மையாகும் ; சாஸ்திரம் வீணுதலும் வேண்டும். ஆதலால், "அவன் மீளவும் பிறப்பதில்லை" என்றஇது நேரில்லாது கூறப்பட்டது. (க. இப்பொழுதுள்ள உடம்பை உண்டாக்கிப் பயனைக்கொடுப்பது ஒன்று. உ. இப்பொழுதுள்ள ஜன்மத்தில் ஞானமுண்டாதற்கு முன்செய்யப்பட்டது ஒன்று. ங. ஞானமுண்டானதற்குப் பின் செய்யப்படுவது ஒன்று. ச. சென்ற பல பிறவிகளில் செய்தது ஒன்று. என நான்குவகைப்பட்ட கர்மங்களெல்லாம் அஜ்ஞானத்தினாலானமையின் அவற்றுள் ஒன்றற்கொன்று வித்தியாசமில்லை. ஆகவே, முதல்வகைக் கர்மமானது ஞானமுண்டானபின்பும் தனதுபயனைக் கொடுக்குமாறுபோல, "அநுபவியாது கர்மம் தேயாது" என்னும்நியாயப்படி பிந்தின மூவகைக்கர்மங்களும் ஓரோர்வகைக்கு ஓரோர்ஜன்மமாக மூன்று ஜன்மங்களை அதிகமாகக் கொடுக்கவேண்டும் ; அல்லது, அவையெல்லாம் ஒருங்குசேர்ந்தாயினும் ஒரு ஜன்மத்தைக் கொடுக்கவேண்டும். இனி, செய்தன அநுபவிக்கப்படாது அழியுமாயின், முதல்வகைக்கர்மமுந்தான் பயனைக் கொடுப்பதென்பதில் நிச்சயமில்லை என்றும், கர்மத்தைப்பற்றிய சாஸ்திரம் வீண் என்றும் ஆகும். ஆகவே, "அவன் மீண்டும் பிறப்பதில்லை" என்பது சரியில்லை.—ஆ.)

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; "இவனுடைய கர்மங்கள் தேய்கின்றன" (மு - உ - உ - அ), "ப்ரஹ்மத்தை அறிகிறான், ப்ரஹ்மமாகவே ஆகிறான்" (மு - ங - உ - கூ), "(எவ்வளவுகாலம்வரை இச்சரீரத்தினின்றும் நீங்கவில்லையோ) அவனுக்கு அவ்வளவே தாமதம்" (சா - கூ - கச - உ), கர்மங்களெல்லாம் நாணல்பூப்பஞ்சுபோல எரிக்கப்படுகின்றன" (சா - ரு - உச - ங) என்பனமுதலிய நூற்றுக்கணக்கான சுருதிகளாலென்க. இங்கேயும், கர்மங்களெல்லாம் எரிந்துபோதலானது - "எவ்வாறு விறகுகளை" (ச - ஙஎ) என்பது முதலாகக் கூறப்பட்டுள்ளது ; மேலும், (அதனைப் பகவான்) அருளிச்செய்வர். (ஸம்ஸாரத்தினின்றும் நீங்கவிரும்பி ஞானத்திலே நிலைத்தவனை, தருமங்களையும் அதருமங்களையும் விட்டொழியும்படி கஅ - கூகூல் உபதேசிக்கிறார். இதனால் - ஞானத்தால் கர்மம் எரிந்துபோதல் குறிக்கப்படுகின்றது.—ஆ.) இன்னும்,

काष्ठादेः, वस्त्रादेश्च । उपपत्त्या च — अविद्याकर्मशेषबीजनिमित्तानि हि कर्माणि जन्मान्तरारम्भकाणि; इहापि च 'साहंकाराभिसन्धीनि कर्माणि संसारकाणि, न त्वितराणि' इति तत्र तत्र भगवतोक्तम् ।

"बीजान्यग्न्युपदग्धानि न रोहन्ति यथा पुनः ।

ज्ञानदग्धैस्तथा क्लेशैर्नात्मा संपद्यते पुनः ॥" इति च ॥

अस्तु तावत् ज्ञानोत्पत्तेः उत्तरकालीनानां कर्मणां ज्ञानेन नाशः, ज्ञानसहभावित्वात् । न त्विह जन्मनि ज्ञानोत्पत्तेः प्राक् कृतानां कर्मणाम् अतीतानेकजन्मकृतानां च नाशो युक्तः ॥

न; 'सर्वकर्माणि' इति विशेषणात् ।

ज्ञानोत्तरकालभाविनामेव सर्वकर्मणाम् इति चेत् —

न; संकोचकारणाभावात् ।

யுக்தியினாலும் (இது விளங்குகின்றது) :—(எல்லாத் தீங்குகட்கும்) விதைகளான அவித்யை காமம் (முதலிய) குற்றங்களால வரும் கர்மங்களன்றோ வேறுஜன்மத்தின் முளையைக் கிளைக்கச்செய்கின்றன. (அநாதியான அவித்யையும், அதுபற்றி நான் எனமதிக்கும் அஹங்காரமும, அதுபற்றி எனக்கு இதுவேண்டும் என்னும அவாவும் முதலிய குற்றங்கள் ஸகல அநர்த்தங்கட்கும் வித்துக்களாக, அவைகாரணமாகவரும் நல்வினை தீவினைகள் அஜ்ஞானிக்குப பிறவியை விளைக்கின்றன. அக்குற்றங்களாகிய விதைகளெல்லாம் ஞானத்தால் வறுக்கப்பெற்றுநிற்கும் ஞானியின் கர்மங்களோ, தோற்றம் மாத்திரமான வடிவுள்ளவை. ஆகலான், அப்போலிக்கர்மங்கள் உடம்பை உண்டாக்க முடியா. உதாரணமாக, எரிந்துபோன ஆடை உடுப்பதற்குப் பயன்படா.—ஆ.) மற்றும், பகவானால் இங்கேயும், "அகங்காரத்தோடும் ஆசையோடும் கூடிய கர்மங்கள் பயனை விளைப்பவை" என ஆங்காங்கு அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது. "தீயினால் வறுக்கப்பட்ட விதைகள் மீண்டும் முளையாதவாறுபோல, அறிவினால் வறுக்கப்பட்ட (அவித்யைமுதலிய) குற்றங்களால் உடம்பு மீளவும் உண்டாகாது" என்றும்(கூறப்பட்டுள்ளது).

(ஆக்ஷேபம்) :—இனி, ஞானமுண்டானதற்குப் பிற்காலத்தில் செய்யப்பட்ட கர்மங்கள் ஞானத்தோடு உடன்நிகழ்வனவாதலால் ஞானத்தால எரிந்துபோதல் இருக்கட்டும். மற்று, இப்பிறப்பிலே ஞானமுண்டாதற்கு முன்செய்யப்பட்ட கர்மங்களும், சென்ற பல பிறவிகளில் செய்யப்பட்ட கர்மங்களும் (ஞானத்தினால்) எரிந்துபோதல் தகாது.

(ஸமாதானம்) :—அப்படியன்று ; "எல்லாக்கர்மங்களையும்" (ச - ஙஎ) என விசேஷித்தலால்.

(ஆக்ஷேபம்) :—ஞானத்திற்குப் பிற்காலத்திலுள்ள எல்லாக்கர்மங்களுந்தான் (ஞானத்தால் எரிந்துபோகும்) எனில்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று ; (அவ்வாறு) வரையறுத்தற்குக் காரணம் இலாதாதலின்.

௨௫. 𑌅𑌨𑍍𑌯𑍇𑌤𑍍𑌵𑍇𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑍇𑌭𑍍𑌯 𑌉𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚𑌾𑌤𑌿𑌤𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 ॥

𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌨—𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃 𑌵𑌿𑌷𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌮𑌨𑌸𑌿 𑌉𑌪𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯, 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌿, 𑌏𑌕𑌾𑌗𑍍𑌰𑌤𑌯𑌾 𑌯𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂, 𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌂; 𑌤𑌥𑌾, “𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍀𑌵 𑌬𑌕𑌃 𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍀𑌵 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀…𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍀𑌵 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌃” 𑌇𑌤𑌿 𑌉𑌪𑌮𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌾𑌤𑍍। 𑌤𑍈𑌲𑌧𑌾𑌰𑌾𑌵𑌤𑍍 𑌸𑌨𑍍𑌤𑌤𑌃 𑌅𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂; 𑌤𑍇𑌨 𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑍇𑌨 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍇𑌨 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑍇𑌨 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨—𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌂 𑌨𑌾𑌮 “𑌇𑌮𑍇 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌜𑌸𑍍𑌤𑌮𑌾𑌂𑌸𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃, 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌗𑍁𑌣𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾” 𑌇𑌤𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂; 𑌏𑌷𑌃 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑌃, 𑌤𑍇𑌨 ‘𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾’ 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 । 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨— 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌯𑍋𑌗𑌃, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌰𑍍𑌪𑌣𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌯𑍋𑌗𑌾𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌯𑍋𑌗𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌗𑍌𑌣𑌤𑌃; 𑌤𑍇𑌨 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌚 𑌅𑌪𑌰𑍇 ॥ ௨௪ ॥

---

௨௫. மற்று, வேறுசிலர் இவ்வாறு அறியாதவராய்ப் பிறரிடம் கேட்டுத் தொழுகிறார்கள் ; கேட்டதையே சிறந்த கதியாகக்கொண்ட [அதனையே கடைப்பிடித்த] அவர்களுங்கூட இறப்பைக் கடந்தேவிடுகிறார்கள்.

தியானமென்பது - ஓசைமுதலிய விஷயங்களினின்றும் செவிமுதலிய இந்திரியங்களை ஒரேநோக்காக மனத்தினுள் இழுத்து ஒடுக்கி, மனத்தையும் உள்ளேயுள்ள அறிவுப்பொருளினிடத்து ஒடுக்கி (அப்பொருளையே) சிந்தித்தல் எதுவோ, அது ; அவ்வண்ணமே, "கொக்கு தியானிப்பதுபோலும், பூமி தியானிப்பதுபோலும்,...... மலைகள் தியானிப்பதுபோலும்" (சா - எ - கூ - க) என உவமைகளை எடுத்தாளுவதனாலென்க. எண்ணெயின் தாரைபோலத்தொடர்ச்சியான இடையறாத எண்ணம் - தியானமாம். யோகிகள் [உத்தமாதிகாரிகள்] அந்தத்தியானத்தினால் தமது உள்ளறிவினாலேயே (அதாவது) தியானத்தால் சீர்திருந்திய அகக்கரணத்தினாலே புத்தியினுள் ஆத்மாவை, உள்ளேயுள்ள அறிவுப்பொருளை (ப்ரஹ்மமாக)க் காண்கிறார்கள்.—ஸாங்க்யமென்பது - "இவை(யெல்லாம்)ஸத்துவம், ரஜஸ், தமஸ்என்னும் குணங்கள் ; ஆத்மா அவற்றின்செய்கைகட்கு ஸாக்ஷியாய், நித்யமாய், குணங்கட்கு வேறுயுள்ளது" எனச் சிந்தித்தல். இது - ஸாங்க்யமென்னும் யோகமாம். (ஸாங்க்யம் - ஆராய்ச்சியால் பிறக்கும் அறிவு. இது யோகத்தைத் தருவதனால், யோகம் எனப்படுகின்றது.—ஆ.) சிலர் [மத்யமாதிகாரிகள்] அந்த ஸாங்க்யயோகத்தினால் "ஆத்மாவை அகக்கரணத்தினால் காண்கிறார்கள்" எனத் தொடரும்.—கர்மமென்பதே யோகம் ; ஈச்வரார்ப்பணஎண்ணத்தோடு அநுஷ்டிக்கப்படும் கர்மமானது யோகத்திற்காவதனால் உபசாரவழக்கைக்கொண்டு யோகம் எனப்படுகின்றது. (கர்மம் சித்தத்தைச் சுத்தப்படுத்துவதனால் யோகத்திற்கு, சித்தம் ஒருநிலைப்படுதற்குக்காரணமாம்.—ஆ.) சிலர் [மந்தாதிகாரிகள்] அக்கர்மயோகத்தினால் மனம்திருந்தி ஞானமுண்டாதல் வழியாக (ஆத்மாவைக் காண்கிறார்கள்.) (௨௪)

அந்யே து ஏதேஷு விகல்பேஷு அந்யதமேநாபி ஸாதநம் யதோக்தம் ஆத்மாநம் அஜாநந்த: அந்யேப்ய: ஆசார்யேப்ய: ஶ்ருத்வா "இதமேவ சிந்தய" இதி உக்தா: உபாஸதே ஶ்ரத்ததாநா: ஸந்த: சிந்தயந்தி । தே(அ)பி ச அதிதரந்த்யேவ அதிக்ரமந்த்யேவ ம்ருத்யும் — ம்ருத்யுயுக்தம் ஸம்ஸாரமித்யேதத் — ஶ்ருதிபராயணா: ஶ்ருதி: ஶ்ரவணம் பரம் அயநம் கமநம் மோக்ஷமார்கப்ரவ்ருத்தௌ பரம் ஸாதநம் யேஷாம் தே ஶ்ருதிபராயணா: ; கேவலபரோபதேஶப்ரமாணா: ஸ்வயம் விவேகரஹிதா: இத்யபிப்ராய: । கிமு வக்தவ்யம் 'ப்ரமாணம் ப்ரதி ஸ்வதந்த்ரா: விவேகிந: ம்ருத்யுமதிதரந்தி' இதி ॥ ௨௫ ॥

'க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி' இதி க்ஷேத்ரஜ்ஞேஶ்வரைகத்வவிஷயம் ஜ்ஞாநம் மோக்ஷஸாதநம் 'யஜ்ஜ்ஞாத்வா(அ)ம்ருதமஶ்நுதே' இத்யுக்தம், தத் கஸ்மாத் ஹேதோரிதி? தத்தேதுப்ரதர்ஶநார்தம் ஶ்லோக: ஆரப்யதே । யஸ்மாத்—

௨௬. யாவத்ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம் ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப ॥

யாவத் யத் **கிஞ்சித் ஸஞ்ஜாயதே** ஸமுத்பத்யதே **ஸத்த்வம்** வஸ்து— கேந விஶேஷேண? இதி ஆஹ—**ஸ்தாவரம் ஜங்கமம்** ச **க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்** ஜாயதே இத்யேவம் **வித்தி** ஜாநீஹி ஹே **பரதர்ஷப** ॥

---

*இவ்வகைகளுள் ஏதாவதொன்றினாலும் கீழ்க்கூறியவாறு ஆத்மாவை அறியமாட்டாத மற்றையோர் [மிகவும் மந்தர்களான அதிகாரிகள்] பிறரிடத்தினின்றும் = ஆசார்யரிடத்தினின்றும் கேட்டு, "இதனை இவ்வாறு தியானிக்க" என உபதேசிக்கப்பட்டவராய்த் தொழுகிறார்கள், நம்பிக்கையொடு தியானிக்கிறார்கள். அவர்களும் சாதலை, அதாவது சாதலோடமைந்த ஸம்ஸாரத்தைக் கடந்துவிடுகிறார்கள். **கேட்டதையே சிறந்தகதியாகக்கொண்ட** - கேட்டதையே, மோக்ஷவழியில்செல்லுதற்கு மேலான கருவியாகக்கொண்ட; கேவலம் பிறரது உபதேசத்தையே பிரமாணமாகவுடைய, தாமாகப் பகுத்தறியும் திறமையில்லாத என்பது கருத்து. "பிரமாணவிஷயத்திலே சுதந்திரராய் [பிரமாணங்களைத் தாமாகவே ஊகித்துணர்பவராய்]ப் பகுத்தறியும் சக்தியுள்ளவர் சாவினைக் கடந்துவிடுகிறார்கள்" எனக் கூறவும் வேண்டுமோ?* (௨௫)

ஆத்மாவைத்தவிர ஒன்றும் இல்லை.

"க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி" (௧௩ - ௨) என க்ஷேத்ரஜ்ஞனும் [ஆத்மாவும்] ஈச்வரனும் ஒன்று என்பதைப்பற்றிய அறிவானது "எதனை அறிந்து சாகாமையைப் பெறுகின்றனோ" (௧௩ - ௧௨) என முக்திக்கு ஸாதகமாகக் கூறப்பட்டது. அது எக்காரணத்தால் [அவ்வறிவு எதனால் அவ்வாறுள்ளது]? என்பது.—அக்காரணத்தை விளக்கும்பொருட்டு (இச்) சுலோகம் தொடங்கப்படுகின்றது :—ஏனெனில்,

௨௬. ***பாதரிற் சிறந்தோனே! ஸ்தாவரமும் ஜங்கமுமான யாதொருபொருள் உண்டாகின்றதோ, அதெல்லாம் க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் என்றவர்களுடைய ஸம்பந்தத்தால் (உண்டாவதாக) அறிந்துகொள்.***

[எல்லாம் க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் இவர்களுடைய ஸம்பந்தத்தால் பிறப்பது; க்ஷேத்ரஜ்ஞனாகிய பரமாத்மாவிற்குப் புறம்பாக ஒருபொருளும் இல்லை. ஆகவே, ஆத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்னும்உணர்வே மோக்ஷத்தைத் தருவதென்க.—ஆ.]

*பொருள்கள் எவ்வேற்றுமையோடு பிறக்கின்றது? என்பது.—கூறுகிறார்: **ஸ்தாவரம், ஜங்கமம்** (என்னும் வேற்றுமையோடு பிறக்கின்றன).*

𑌕𑌃 𑌪𑌨𑌃 𑌅𑌯𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌃 ? 𑌨 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌰𑌜𑍍𑌜𑍍𑌵𑍇𑌵 𑌘𑌟𑌸𑍍𑌯 𑌅𑌵𑌯𑌵𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌆𑌕𑌾𑌶𑌵𑌤𑍍 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑌵𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌃, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌭𑌾𑌵𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌇𑌤𑌿 ॥

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇— 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌵𑌿𑌷𑌯𑌵𑌿𑌷𑌯𑌿𑌣𑍋𑌃 𑌭𑌿𑌨𑍍𑌨𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌯𑍋𑌃 𑌇𑌤𑌰𑍇𑌤𑌰𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌭𑌾𑌵𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌃, 𑌰𑌜𑍍𑌜𑍁𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌸𑌰𑍍𑌪𑌰𑌜𑌤𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌵𑌤𑍍 । 𑌸𑌃 𑌅𑌯𑌂 𑌅𑌧𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 । 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌲𑌕𑍍𑌷𑌣𑌭𑍇𑌦𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌰𑍂𑌪𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌤𑍍, 𑌮𑍁𑌞𑍍𑌜𑌾𑌦𑌿𑌵 𑌇𑌷𑍀𑌕𑌾𑌂, 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌜𑍍𑌯 '𑌨 𑌸𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌸𑌦𑍁-

---

(ஆக்ஷேபம்) :—க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுக்குக் கருதப்பட்ட இச்சம்பந்தம் யாது ? [அவர்களது சம்பந்தம் எப்படிப்பட்டதென்று கொள்ளப்பட்டது ?] இனி, உறுப்புக்கள் ஒன்றோடொன்று சேர்தல்வழியாக வரும் ஸம்யோகமென்னும் ஓர்வகைச்சம்பந்தம் கயிற்றோடு குடத்திற்கு(உண்டாவது)போல, க்ஷேத்ரத்தோடு க்ஷேத்ரஜ்ஞனுக்கு (அத்தகைய சம்பந்தம்) நிகழாது ; (க்ஷேத்ரஜ்ஞனை ஆத்மா) ஆகாசம்போல, உறுப்பில்லாத தாகலின். அன்றியும், (நூல் ஆடைகட்கு இருப்பதுபோல,) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு ஸமவாயம் [ஒற்றித்தல், நீக்கமின்றிநிற்றல்] என்னும் ஸம்பந்தமும் இல்லை ; ஒன்றற்கொன்று கார்யகாரணத்தன்மையை[கார்யகாரணமென்பதை] ஏற்றுக்கொள்ள முடியாதாதலின் என்க.

(ஸமாதாநம்) :—கூறுவோம் : கயிறு, இப்பிமுதலியவற்றிற்கு - அவற்றைப் பகுத்தறியாமையினால் ஏற்றப்பட்ட பாம்பு, வெள்ளி முதலியவற்றின் சம்பந்தம்போல, வெவ்வேறு தன்மையுள்ள விஷய விஷயிகளான க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு - க்ஷேத்ரம் இன்னது, க்ஷேதரஜ்ஞன் இன்னான் என்பதைப் பகுத்தறியாமையினால் அமைவதாகி ஒன்றிலொன்றையும், அவற்றின் தன்மைகளையும் ஏற்றுதலாகிய சம்பந்தமாம் [தலைதடுமாற்றமாக ஒன்றில் மற்றொன்றை மயங்குதல் என்னும் ஸம்பந்தமாம்]. (குடத்தைக் கண் கண்டது என்றவிடத்து, குடம்போலஇருப்பது - விஷயம் ; கண்போல இருப்பது - விஷயி. பிரகிருதத்தில், க்ஷேத்ரம் - விஷயம் ; க்ஷேத்ரஜ்ஞன் - விஷயி,) க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கட்கு அந்த(த் தடுமாற்றமாக)ஏற்றுதலாகிய இச்சம்பந்தமானது மயக்க உணர்வாய் உள்ளது. சாஸ்திரப்படி க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களது லக்ஷணங்களையும் வேற்றுமைகளையும் அறிவதோடு, இன்னது என்று முன் எடுத்துக் காட்டப்பட்ட க்ஷேத்ரத்தினின்றும் கீழ்க்கூறிய லக்ஷணங்களுள்ள க்ஷேத்ரஜ்ஞனை, முஞ்ஜையென்னும் புல்லினின்று நடுத்தாளைப் (பிரிப்பது)போலப்பிரித்து, "அது உள்ளதன்று ; இல்லதன்று எனப்படுகின்றது" (கங - கஉ) என்பதனால் உபாதிவேற்றுமையனைத்தும்

வ்)டெத ' ஐ-த்)டெந நிரஸ்தஸவெ-்ரவாயிவிஶெஷம் ஜெ்ஞயம் ஬்)ஹ்ம ஸ்வா-ூெவெண யஃ வஶ்)தி, க்ஷெத்ரம் ச 8யாநிஶி-்தஹஸ்திஹ8்)ாதிவக் ஸ்வப்நத்ஷ்-வஸ்து-வக் மாயவ-்நமராதிவக் "அஸதெவ ஸதிவ அவஹாஸதெ" ஐதி ஏவம் நிஶ்சிதவிஜ்ஞாநஃ யஃ, தஸ்) யதொக்தஸம்யக்தஶ-்நவிரொயாக் அவமத்தி மித்யாஜ்ஞாநம் । தஸ்) ஜந்மஹெதொஃ அவமமாக் 'ய ஏவம் வெத்தி வா-ுா-ஷம் ப்ரக்ருதிம் ச ம-மெணஃ ஸஹ' ஐ-த்)டெந "விகாக் ஸ-ுயஃ ந அஜிஜாயதெ" ஐதி யக் உக்தம் தக் உபபந்நம் உக்தம் ॥ உகூ ॥

'ந ஸ ஸ-ுயொ஽ஜிஜாயதெ' ஐதி ஸம்யக்தஶ-்நஹலம் அவித்யாதிஸம்ஸார-பீஜநிவ்ருத்திதாரெண ஜந்மாஸாவஃ உக்தஃ । ஜந்மகாரணம் ச அவித்யாநிமித்தகஃ க்ஷெத்ரக்ஷெத்ரஜ்ஞஸம்யொமஃ உக்தஃ ; அதஃ தஸ்)ாஃ அவித்யாயாஃ நிவ-்தகம் ஸம்யக்தஶ-்நம் உக்தமவி ஶ-்ஃ ஶஷ்தாந்தரெண உச்யதெ—

உஎ. ஸமம் ஸவெ-்ஷு ஸ-ுதெஷு திஷ்டந்தம் வரமெஶ்வரம் ।
விநஶ்யத்ஸ்வவிநஶ்யந்தம் யஃ வஶ்யதி ஸ வஶ்யதி ॥

ஸமம் நிவி-்ஶெஷம் திஷ்டந்தம் ஸ்திதிம் க-வ-்ந்தம்—க்வ ?—ஸவெ-்ஷு ஸமஸ்தெஷு ஸ-ுதெஷு ஬்ரஹ்மாதிஸ்தாவராந்தெஷு ப்ராணிஷு—கம் ?—

ஒழிந்த அறியவேண்டிய ப்ரஹ்மத்தை எவன் ஸ்வரூபத்தால் காண்கிருனே [அநுபவிக்கின்ருனே]; அன்றியும், ஜாலத்தால் படைக்கப்பட்ட யானை மாளிகை முதலியன போலவும், கனவில் கண்ட பொருள்போலவும், கந்தர்வநகரம் [மனத்தாற் கற்பனை செய்யப்பட்ட ஆகாசபட்டணம்]போலவும் " இல்லாததேயான க்ஷேத்ரம் உள்ளது போலத் தோற்றுகின்றது" என இவ்வாறு மெய்ப்பிக்கப்பெற்ற அறிவினனாய் எவன் இருக்கின்ருனே ; அவனுக்கு மயக்கஉணர்வு கீழ்க்கூறிய மெய்யுணர்வின் விரோதத்தால் போய்விடுகின்றது. அவனுக்குப் பிறப்பிற்குக் காரணம் போய்விடுவதனுல் - "ஞானி மீளவும் பிறப்பதில்லை" என "எவன் இவ்வாறு" (கங - உங)என்பதனுல் எது கூறப்பட்டதோ அது நேராகக் கூறப்பட்டது. (உசு)

எங்கும் ஆத்மா ஒன்றுதான்.

" அவன் மீளவும் பிறப்பதில்லை" (கங - உங) என மெய்யுணர்வின் பயனுனது அறியாமைமுதலிய ஸம்ஸாரவித்துக்கள் ஒழிந்திடுதல்மூலமாகப் பிறப்பின்மையானது கூறப்பட்டது ; பிறவிக்குக் காரணமாய் அவித்யையினுலாகும் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸம்பந்தமும் கூறப்பட்டது. ஆதலால் அந்தஅவித்யையைப் போக்கும் மெய்யுணர்வு கூறப்பெற்றதாயினும், மீண்டும் வேறுசொற்களால் கூறப்படுகின்றது :

உஎ. எல்லாப்பொருள்களுள்ளும் ஸமமாக இருக்கின்றவனும், அழிவனவற்றுள் அழியாதவனுமான பரமேச்வரனை எவன் காண்கின்ருனே, அவன் காண்கின்ருன்.

வேற்றுமையில்லாது நிலைகொள்ளுகின்ற—எதனுள் ?—ப்ரஹ்மாமுதலாகஸ்தாவரம் ஈருகவுள்ளப் பிராணிகளுள்.—(நிலைக்கொள்ளுகின்ற)யாரை ?—பரமேச்வரனை.

परमेश्वरं देहेन्द्रियमनोबुद्ध्यव्यक्तात्मनः अपेक्ष्य परमश्च असौ ईश्वरश्च ईशनशीलश्च इति परमेश्वरः, तं सर्वेषु भूतेषु समं तिष्ठन्तम्। तानि विशिनष्टि 'विनश्यत्सु' इति, तं च परमेश्वरम् 'अविनश्यन्तम्' इति, भूतानां परमेश्वरस्य च अत्यन्तवैलक्षण्यप्रदर्शनार्थम्। कथम्?—सर्वेषां हि भावविकाराणां जनिलक्षणः भावविकारो मूलम्; जन्मोत्तरकालभाविनः अन्ये सर्वे भावविकाराः विनाशान्ताः; विनाशात् परो न कश्चित् अस्ति भावविकारः, भावाभावात्। सति हि धर्मिणि धर्माः भवन्ति। अतः अन्त्यभावविकाराभावानुवादेन पूर्वभाविनः सर्वे भावविकाराः प्रतिषिद्धाः भवन्ति सह कार्यैः। तस्मात् सर्वभूतैः वैलक्षण्यम् अत्यन्तमेव परमेश्वरस्य सिद्धम्, निर्विशेषत्वम्, एकत्वं च। यः एवं यथोक्तं परमेश्वरं पश्यति, सः पश्यति॥

ननु सर्वोऽपि लोकः पश्यति, किं विशेषणेन? इति।

सत्यं पश्यति; किं तु विपरीतं पश्यति। अतः विशिनष्टि—स

(அப்படிப்பட்டவனைக் காண்பவன் மெய்யுணர்வுள்ளவன்.) பரமேச்வரன் உடம்பு, இந்திரியங்கள், மனம், புத்தி, அவ்யக்தம் [காரணசரீரம், அவித்யை], ஜீவன் என்றவற்றை நோக்க மேலானவன், ஆளுந் தன்மையுள்ளவன். அவன் எல்லாப்பிராணிகளுள்ளும் ஒரேவிதமாக நிற்கின்றான். அவற்றை "அழிவனவற்றுள்" என விசேஷிக்கின்றார். பிராணிகட்கும் பரமேச்வரனுக்கும் முற்றும் வேற்றுமையைக் காட்டும்பொருட்டு அப்பரமேச்வரனை "அழியாதவனும்" என விசேஷிக்கின்றார்.—எவ்வாறு?—எல்லாப் பாவவிகாரங்கட்கும் பிறப்பென்னும்பாவவிகாரம் அடிக்காரணம். (பாவவிகாரம் - பொருள்கட்குரிய நிலைவேறுபாடு. பிறத்தல், இருத்தல், வளர்தல், முதிர்தல், தேய்தல், அழிதல் என்பன - பாவவிகாரங்களாம்.) அழிதலை முடிவாகக்கொண்ட மற்றைய எல்லாப் பாவவிகாரங்களும் பிறப்பிற்குப் பிற்காலத்து உண்டாகின்றவை. அழிதற்குப் பிற்பட்ட வேறோர் பாவவிகாரம் இல்லை; பொருளே இல்லாமற்போதலின். பொருளுள்ளவிடத்தன்றோ (அதன்) தன்மைகள் உண்டு [இருக்கக்கூடும்]. ஆகவே, கடைப்பட்ட பாவவிகாரம் இல்லாமற்போதலை அநுவதிப்பதனால்-அதற்குமுன்உண்டாகின்ற பாவவிகாரங்களெல்லாம் அவற்றின் கார்யத்தோடுகூட மறுக்கப்பட்டவையாகின்றன. ஆதலால், பரமேச்வரன் எல்லாப்பிராணிகளோடும் முற்றுமே வேறுபட்டவன் எனவும், வேறுபாடு [பாவவிகாரம்] இல்லாதவன் எனவும், ஒருவன்தான் எனவும் அமைந்தன. எவன் இவ்வாறு கீழ்க்கூறிய பரமேச்வரனைக் காண்கிறானோ, அவன் (நேரே) காண்கிறான்.

(ஆக்ஷேபம்):—அப்படியானால், உலகெல்லாந்தான் காண்கின்றது. (அவன் காண்கிறான் என) விசேஷித்துரைப்பதனால் என்ன? என்பது.

(ஸமாதாநம்):—உண்மை; காண்கின்றது; மற்று, மாறாகக் காண்கின்றது. ஆதலால் விசேஷித்துரைக்கிறார் "அவன்தான் காண்கிறான்" என்று. திமிரத்தால்

स एव पश्यतीति। यथा तिमिरदृष्टिः अनेकं चन्द्रं पश्यति, तम् अपेक्ष्य एकचन्द्रदर्शी विशिष्यते — स एव पश्यतीति; तथा इहापि एकम् अविभक्तं यथोक्तम् आत्मानं यः पश्यति, सः विभक्तानेकात्मविपरीतदर्शिभ्यः विशिष्यते — स एव पश्यतीति। इतरे पश्यन्तोऽपि न पश्यन्ति, विपरीतदर्शित्वात् अनेकचन्द्रदर्शिवत् इत्यर्थः ॥ உஎ ॥

यथोक्तस्य सम्यग्दर्शनस्य फलवचनेन स्तुतिः कर्तव्या, इति श्लोकः आरभ्यते —

उअ. समं पश्यन्हि सर्वत्र समवस्थितमीश्वरम्।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम्॥

समं पश्यन् उपलभमानः हि यस्मात् सर्वत्र सर्वभूतेषु समवस्थितं तुल्यतया अवस्थितम् ईश्वरम्, अतीतानन्तरश्लोकोक्तलक्षणम् इत्यर्थः — समं पश्यन् किम्? — न हिनस्ति हिंसां न करोति आत्मना स्वेनैव स्वम् आत्मानम्। ततः तदहिंसनात् याति परां प्रकृष्टां गतिं मोक्षाख्याम्।

ननु नैव कश्चित् प्राणी स्वयं स्वम् आत्मानं हिनस्ति। कथम्

[ஓர்வகைக்கண்நோயினல்]பார்வை மழுங்கியவன் அநேக சந்திரர்களைக் காண்கிருன். அவனை நோக்க, ஒருசந்திரனைக் காண்பவனை "அவன்தான் காண்கிருன்" என விசேஷித்துரைக்குமாறுபோல, இங்கும், வேறுவேருயில்லாத கீழ்க்கூறிய ஒரே ஆத்மாவை எவன் காண்கின்ருனே, அவன் - வேறு வேருன அநேக ஆத்மாக்களைத் தவருகக் காண்பவரைக்காட்டிலும் " அவன்தான் காண்கிருன் " என விசேஷித்துரைக்கப்படுகின்ருன். மற்றையோர்கள் காண்பவராயினும், காண்பவரல்லர் ; அநேக சந்திரர்களைக் காண்பவன்போல, தவருகக் காண்கின்றமையின் ; என்பதுபொருள். (உஎ)

ஆத்ம உணர்வு மோக்ஷத்தைத் தரும்.

கீழ்க்கூறிய மெய்யுணர்விற்குப் பயனைக்கூறிப் புகழ்ச்சி செய்யவேண்டும் என (இச்)சுலோகம் தொடங்கப்படுகின்றது :

உஅ. **எங்கும் ஒப்பநிற்கின்ற ஈச்வரனை ஸமமாகக் காண்கிறவன் தன்னைத் தன்னல் ஹிம்ஸிப்பதில்லை ; அதனல் மேலான கதியை அடைகிருன்.**

எல்லாப்பிராணிகளுள்ளும் ஒப்பநிற்கின்ற ஈச்வரனை, அதாவது,சென்ற அடுத்த சுலோகத்தில் லக்ஷணம் கூறப்பெற்றவனை ஸமமாக [ஒரேவடிவுள்ளவனுக]க் கண்டுணர்பவன் என்ன (செய்வதில்லை) ?—தன்னைத் தானே ஹிம்ஸிப்பதில்லை, கொல்வதில்லை ; அதனை [ஆத்மாவை] ஹிம்ஸியாமையினல், மோக்ஷமென்னும்பெயருடைய உயர்ந்த கதியைப் பெறுகிருன் [ஆத்மாவின் வாஸ்தவத்தன்மையை மறைக்கின்ற அஜ்ஞானத் திரையும், பொய்யுணர்வுத்திரையும் அழிந்தவுடன், எல்லாவற்றினும் மேம்பட்ட கதியான உயர்ந்த புருஷார்த்தமாகிய பரமாநந்தத்தை ஞானி அநுபவிக்கிருன்.—ஆ.]

(ஆக்ஷேபம்) :—அப்படியானல், எந்தப்பிராணியுமேதான் தன் ஆத்மாவை ஹிம்ஸிப்பதில்லை. "அக்நியைப் பிரதிஷ்டைசெய்தல் நிலத்தில் கூடாது, ஆகாசத்தில்

உச்யதே அப்ராப்தம் 'ந ஹிநஸ்தி' இதி? யதா 'ந ப்ருதிவ்யாம் நாந்தரிக்ஷே ந திவ்யக்நிஶ்சேதவ்ய:' இத்யாதி ॥

நைஷ தோஷ:. அஜ்ஞாநாத் ஆத்மதிரஸ்காரணோபபத்தே: । ஸர்வோ ஹி அஜ்ஞ: அத்யந்தப்ரஸித்தம் ஸாக்ஷாத் அபரோக்ஷாத் ஆத்மாநம் திரஸ்க்ருத்ய அநாத்மாநம் ஆத்மத்வேந பரிக்ருஹ்ய, தமபி தர்மாதர்மௌ க்ருத்வா உபாத்தம் ஆத்மாநம் ஹத்வா அந்யம் ஆத்மாநம் உபாதத்தே நவம், தமபி ஹத்வா அந்யம், இத்யேவம் உபாத்தமுபாத்தம் ஆத்மாநம் ஹந்தி, இதி ஆத்மஹா ஸர்வ: அஜ்ஞ: । யஸ்து பரமார்த்தாத்மா, அஸாவபி ஸர்வதா அவித்யயா ஹத இவ, வித்யமாநபலாபாவாத், இதி ஸர்வே ஆத்மஹந: ஏவ அவித்வாம்ஸ: । யஸ்து இதர: யதோக்தாத்மதர்ஶீ, ஸ: உபயதாபி ஆத்மநா ஆத்மாநம் ந ஹிநஸ்தி । தத: யாதி பராம் கதிம், யதோக்தம் பலம் தஸ்ய பவதி இத்யர்த்த: ॥ ௨௮ ॥

'ஸர்வபூதஸ்தம் ஸமம் பஶ்யந் ந ஹிநஸ்தி ஆத்மநா ஆத்மாநம்'

கூடாது, ஸ்வர்க்கத்தில் கூடாது" (தை - ஸம் - ரு - உ - எ) என்பது முதலியனபோல, "ஹிம்ஸிப்பதில்லை" என வாராததை எப்படிக் கூறுகிறார்? (அக்நிகுண்டத்தை நிலத்தில் கட்டக்கூடுமாதலின், அக்நியை நிலத்தில் பிரதிஷ்டைசெய்யக்கூடாது என்பது ஏற்கும். ஆனல், அக்நிகுண்டத்தை ஆகாசத்திலாயினும், ஸ்வர்க்கத்திலாயினும் அமைக்கமுடியாதாதலின், பிந்தின இரண்டுமறுப்புக்களும் ஏற்கா. ஆதலால், அவற்றிற்குச் சொல்அர்த்தத்தைக் கொள்ளக்கூடாது. அதுபோல, இங்கும் "ஹிம்ஸிப்பதில்லை" என்பதற்குச் சொல்அர்த்தத்தைக் கொண்டால் பொருத்தமில்லை.—ஆ.)

(ஸமாதாநம்):—இது குற்றமன்று; அஜ்ஞாநிகள் ஆத்மாவை அசட்டைசெய்தல் கூடுமாதலின். (யாவர்க்கும்) நன்ருகத்தெரிந்துள்ளதாய் நேரே பிரத்தியக்ஷமாயுள்ள ஆத்மாவை அஜ்ஞாநிகளெல்லாம் அசட்டைசெய்து, ஆத்மா அல்லாததை [உடம்புமுதலியவற்றை] ஆத்மாவாகக் கொண்டு, நல்வினை தீவினைகளைச் செய்து தன்னுடைதாக்கிக்கொண்ட அந்த ஆத்மாவையும் [உடம்புமுதலியவற்றையும்] கொன்று, வேருேர் புதிய ஆத்மாவைத் தன்னுடையதாக்கிக்கொள்கிருர்கள்; அதனையும் கொன்று வேருென்றைத் தனதாக்கிக்கொள்கிருர்கள்; என இவ்வாறு தேடித்தேடித் தனக்குத் தனக்கென்று உரித்தாக்கிக்கொண்ட ஆத்மாவைக் கொல்கிருர்கள்; எனவே, அஜ்ஞாநிகளெல்லாம் ஆத்மாவைக்கொல்பவர்களென்க. மற்று, உண்மையான ஆத்மா எதுவோ, அதுவுங்கூட எப்பொழுதும் அவித்தையினுல் கொல்லப்பட்டதுபோலும்; உள்ள பயன் இல்லாமையினுல் [நித்யமாயுள்ள ப்ரஹ்மாநந்தத்தை அநுபவியாமையினுல்]. ஆதலால் அஜ்ஞாநிகளெல்லாம் ஆத்மாவைக் கொல்பவர்களேதான். ஆனல், கீழ்க்கூறிய ஆத்மாவைக் காண்கின்ற மற்றையவன் எவனே, அவன் இருவகையாலும் தன்னைத் தான் கொல்வதில்லை; ஆகவே, உயர்ந்தகதியை அடைகிருன்: கீழ்க்கூறிய பயன் அவனுக்கு உண்டு என்பது பொருள். (உஅ)

தொழிலைச் செய்வது பிரகிருதிதான்; ஆத்மா அன்று.

"எல்லாப்பிராணிகளுள்ளும் உள்ள ஈச்வரனை ஸமமாகக் காண்கிறவன் தன்னைத் தன்னுல் கொல்வதில்லை" எனக் கூறப்பட்டது. தமது குணம், செய்கை இவற்

𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑌸𑌤𑍍 𑌸𑍍𑌵𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑍈𑌲𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌭𑍇𑌦𑌭𑌿𑌨𑍍𑌨𑍇𑌷𑍁 𑌆𑌤𑍍𑌮𑌸𑍁, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌾𑌶𑌙𑍍𑌕𑍍𑌯 𑌆𑌹—

௨௯. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈𑌵 𑌚 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌤𑌥𑌾𑌽𑌽𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾— 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌮𑌾𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾, ‘𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌤𑍍, 𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑍈𑌵 𑌚 —𑌨 𑌅𑌨𑍍𑌯𑍇𑌨 —𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌾𑌕𑌾𑌰𑌪𑌰𑌿𑌣𑌤𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃𑌕𑌾𑌯𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌨𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌉𑌪𑌲𑌭𑌤𑍇, 𑌤𑌥𑌾 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌮𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌧𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂, 𑌸𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌸𑌃 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑍀 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃, 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑍍𑌯 𑌅𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑍇𑌵 𑌭𑍇𑌦𑍇 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௯ ॥

𑌪𑍁𑌨𑌰𑌪𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌯𑌤𑌿—

௩௦. 𑌯𑌦𑌾 𑌭𑍂𑌤𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌮𑍇𑌕𑌸𑍍𑌥𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌤 𑌏𑌵 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌤𑌦𑌾 ॥

றின் வேற்றுமைகளால் வெவ்வேறாக வேறுபட்ட அநேக ஆத்மாக்கள் உள்ளனவாத லால், அது [ஸமமாகப்பார்த்தல்] பொருந்தாது என்பதைச்சங்கித்து அருளிச்செய் கிறார் :

௨௯. எவன் கர்மங்களை எவ்வாற்றாலும் பிரகிருதியினாலேயே செய்யப்படுகின்ற வையாகக் காண்கிறானோ; அவ்வண்ணமே, ஆத்மாவை அகர்த்தாவாக(க் காண்கிறா னோ); அவன் காண்கிறான்.

பிரகிருதியென்பது - பகவானுடைய மாயை, முக்குணவடிவமாயுள்ளது; "மா யைப் பிரகிருதியாக அறியவேண்டும்" (ச்வே-ச-க௦) என்னும் மந்திரவர்ணத்தாலெ ன்க. "பிரகிருதிதான் [ஈச்வரனது சக்திதான்]-மொழிமனமெய்களால் செய்யப்படும் தொழில்களைச் செய்துமுடிக்கின்றது; வேறு அன்று, மஹத்முதலான கார்யகாரண ங்களாகவேறுபட்ட (பிரதாநமன்று,ஸாங்க்யர்கள் கூறும் பிரகிருதியன்று" எனவும்,) "க்ஷேத்ரஜ்ஞனை ஆத்மா அகர்த்தா, உபாதிகளெல்லாமில்லாதவன்" எனவும் எவன் உணர்கின்றானோ, அவன் மெய்ப்பொருளைக்கண்டுணர்ந்தவன் என்பது கருத்து. ஆகாசத்திற்கு பேதம்(இல்லாதது)போல, நிர்க்குணமாய் அகர்த்தாவாய் வேற்றுமை யில்லாப் பொருளுக்கு பேதம் உண்டு என்பதற்குப் பிரமாணம் அமையவில்லை என்பது பொருள். (௨௯)

ஆத்மா எல்லாவற்றிற்கும் பிறப்பிடம், இருப்பிடம்.

மீண்டும் அந்தமெய்யுணர்வையே விரித்துரைக்கின்றார் (பிரகிருதியும், அதன் வேறுபாடுகளும் புருஷனுக்குப் புறம்பாகவே உள்ளன என்னும் ஸாங்க்யர்கொள்கை யை மறுத்தற்கு இச்சுலோகம் எழுகின்றது) :

௩௦. எப்பொழுது (ஒருவன்) பிராணிகளுடைய தனித்தனியான தன்மையை ஒன்றிலிருப்பதாகக் காண்கின்றானோ; அன்றியும், அதனினின்றே [ஒன்றிலிருந்தே] விரிவதாக(க் காண்கின்றானோ); அப்பொழுது ப்ரஹ்மமாகிறான்.

𑌯𑌦𑌾 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌭𑍂𑌤𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌂 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌾𑌵𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 𑌏𑌕𑌸𑍍𑌥𑌮𑍍, 𑌅𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌮𑍍 𑌅𑌨𑍁 𑌆𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 "𑌆𑌤𑍍𑌮𑍈𑌵 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌤𑌤 𑌏𑌵 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌵 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌕𑌾𑌸𑌮𑍍 "𑌆𑌤𑍍𑌮𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌆𑌤𑍍𑌮𑌤 𑌆𑌶𑌾 𑌆𑌤𑍍𑌮𑌤𑌃 𑌸𑍍𑌮𑌰 𑌆𑌤𑍍𑌮𑌤 𑌆𑌕𑌾𑌶 𑌆𑌤𑍍𑌮𑌤𑌸𑍍𑌤𑍇𑌜 𑌆𑌤𑍍𑌮𑌤 𑌆𑌪 𑌆𑌤𑍍𑌮𑌤 𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑍋𑌽𑌨𑍍𑌨𑌮𑍍" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍈𑌃 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌂𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌲𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௩௦ ॥

𑌏𑌕𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇 𑌤𑌦𑍍𑌦𑍋𑌷𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌇𑌦𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௩௧. 𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌯𑌮𑌵𑍍𑌯𑌯𑌃 ।
𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ॥

𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍—𑌅𑌨𑌾𑌦𑍇𑌃 𑌭𑌾𑌵𑌃 𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌮𑍍, 𑌆𑌦𑌿𑌃 𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌤𑌤𑍍 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌅𑌨𑌾𑌦𑌿 । 𑌯𑌤𑍍 𑌹𑌿 𑌆𑌦𑌿𑌮𑌤𑍍 𑌤𑌤𑍍 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌨𑌾 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 ; 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌨𑌿𑌰𑌵𑌯𑌵 𑌇𑌤𑌿 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑌗𑍁𑌣𑍋 𑌹𑌿 𑌗𑍁𑌣𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 ; 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 ; 𑌇𑌤𑌿

ஒருவன் சாஸ்திரம், ஆசார்யன் இவர்களது உபதேசத்திற்கு இணங்க, பொருள்களின் வேற்றுமையானது, வகுப்பானது ஒரே ஆத்மாவினிடத்து உள்ளது என ஏககாலத்துக் காண்கின்றானோ, (கற்பிக்கப்பட்டதெல்லாம் ஆதாரததிற்குப் புறம்பாக இல்லை எனத் தெளிந்து) "இதெல்லாம் ஆத்மாதான்" என ஆத்மாவை பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றானோ ; மற்றும், "உயிர் ஆத்மாவினின்றும் உள்ளது : ஆசை ஆத்மாவினின்றும் உள்ளது : காதல் ஆத்மாவினின்றும் உள்ளது . ஆகாசம் ஆத்மாவினின்றும் உள்ளது : ஒளி ஆத்மாவினின்றும் உள்ளது : நீர் ஆத்மாவினின்றும் உள்ளது : தோற்றமும் மறைவும் ஆத்மாவினின்றும் உள்ளன : உணவு ஆத்மாவினின்றும் உள்ளது" (சா - ௭ - ௨௬ - ௧) என இவைபோன்ற விதங்களாக(ப் பொருள்கள்) அந்த ஆத்மாவினின்றே தோன்றிவிரிதலை எக்காலத்துக் காண்கிறானோ ; அக்காலத்து ப்ரஹ்மமே ஆகிறான் [எங்கும் நிறைந்தவனாகிறான்]. (௩௦)

வினைகளின் பயன்களால் ஆத்மா தாக்கப்படுவதில்லை.

ஒரே ஆத்மாவானது எல்லாத்தேகங்களுடைய ஆத்மாவாயின் [எல்லா உடம்புகளிலுமுள்ள ஆத்மாவாயிருந்தால்], அவற்றது குற்றங்களோடு ஸம்பந்தம் அமைய வேண்டும் [அவற்றால் ஆத்மா தாக்கப்படவேண்டும்] ; எனவே, (இச்சங்கையை நீக்குதற்பொருட்டு) இதனை அருளிச்செய்கிறார் :

௩௧. *இந்தப் பரமாத்மா அநாதியாதலால், நிர்க்குணமாதலால் அழிவில்லாதது ; கௌந்தேய ! உடம்புகளுள் உள்ளதாயினும், செய்வதில்லை, பற்றப்படுவதில்லை.*

ஆதியென்பது - காரணம். எதற்கு ஆதியில்லையோ அது அநாதி. எதற்குக் காரணம் உள்ளதோ, அது தன் வடிவததால [தானாக] அழிகின்றது. இதுவோ காரணமில்லாப்பொருளாதலால் உறுப்பில்லாதது ; எனவே, அழிவதில்லை. குணமுள்ளது குணம்தேய்தலால் அழிகின்றது. இதுவோ நிர்க்குணமாதலாலும் அழிவதில்லை. இவ்

𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌅𑌯𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃, 𑌨 𑌅𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌯𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃 । 𑌯𑌤 𑌏𑌵𑌂, 𑌅𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿, 𑌶𑌰𑍀𑌰𑍇𑌷𑍁 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌃 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮 । 𑌤𑌦𑌕𑌰𑌣𑌾𑌦𑍇𑌵 𑌤𑌤𑍍𑌫𑌲𑍇𑌨 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑍋 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾, 𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌅𑌕𑌰𑍍𑌤𑌾, 𑌅𑌤𑌃 𑌨 𑌫𑌲𑍇𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥

𑌕𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌚? 𑌯𑌦𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌦𑍇𑌹𑍀 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌚, 𑌤𑌤𑌃 𑌇𑌦𑌮𑍍 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑍇𑌶𑍍𑌵𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌂 '𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 । 𑌅𑌥 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑍋 𑌦𑍇𑌹𑍀, 𑌕𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌚? 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 ; 𑌪𑌰𑍋 𑌵𑌾 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌚 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍋𑌕𑍍𑌤𑌮𑍍 𑌔𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑍈𑌃 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌰𑍍𑌹𑌤𑌬𑍌𑌦𑍍𑌧𑍈𑌶𑍍𑌚 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌅𑌯𑌂 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍋 𑌭𑌗𑌵𑌤𑍈𑌵 𑌉𑌕𑍍𑌤𑌃—'𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇' 𑌇𑌤𑌿 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋 𑌹𑌿 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌚 𑌇𑌤𑌿

வாறுக இந்தப்பரமாத்மா அழிவில்லாதது ; இதற்கு அழிவில்லையென்க. இவ்வாறுள்ளதனால்,—(இது) சரீரங்களுள் உள்ளதாயினும், சரீரங்களில்தான் ஆத்மா புலப்படுதலாகின்றது எனச் சரீரங்களிலுள்ளதாகக் கூறப்படுகின்றதாயினும்,—தொழிலைச்செய்வதில்லை ; அதனைச் செய்யாமையினலேயே அதன்பயனால் பற்றப்படுவதில்லை. எவன் செய்பவனோ, அவன் கர்மத்தின்பயனால் பற்றப்படுகிறான் [தாக்கப்படுகிறான்] ; இதுவோ அகர்த்தா, செய்யாதது ; ஆகவே, பயனால் பற்றப்படுவதில்லை என்பதுபொருள்.

(ஆக்ஷேபம்) :—ஆனால், தேகங்களில் யார் செய்கிறான் ? பற்றவும்படுகிறான் ? இனி, பரமாத்மாவினும் வேறான ஓர்தேகியானவன் செய்கிறான், பற்றவும்படுகிறான் ஆயின், அப்பொழுது இது, "க்ஷேத்ரஜ்ஞனை நானாகவும் அறி" (கங - உ) என்பது முதலியவற்றால் க்ஷேத்ரஜ்ஞனும் ஈச்வரனும் ஒன்று எனக் கூறியது பொருந்தாது. (தேகி - தேகத்தையுடையவன், உடம்போடுநிற்பவன்.) ஈச்வரனைக்காட்டிலும் வேறான ஓர்தேகி இல்லையாயின், யார் செய்கிறான் ? பற்றவும்படுகிறான் ? என்பதைச் சொல்ல வேண்டும் ; அல்லது, (ஈச்வரன்தான் என்றால், அங்ஙனமவன்) பரம்பொருளல்லன் எனக் கூறுக. (செய்யுந்தன்மையும், அநுபவிக்குந்தன்மையும் ஈச்வரனுக்கு இருக்குமாயின், அவனும் நம்மைபோல, ஈச்வரனாகமாட்டான்.—ஆ.) பகவான் கூறியதான உபநிஷத்துக்களின் கொள்கையானது எவ்வாற்றாலும் அறியவும் சொல்லவும் முடியாதது என வைசேஷிகர்களாலும், ஸாங்கியர்களாலும், ஆர்ஹதர்களாலும், பௌத்தர்களாலும் தள்ளப்பட்டது.

(ஸமாதானம்) :—அவ்விஷயத்திலே, பகவான் "ஸ்வபாவமே தொழிற்படுகின்றது" (ரு - கச) என்ற இப்பரிகாரத்தை [விடையை]த் தாமே அருளிச்செய்திருக்கின்றார். (பரம்பொருள் செய்வதென்பதும், அநுபவிப்பதென்பதும் உண்மையிலேஇல்லை. செய்கையும், அநுபவமும் அவித்யையினால் அதற்கு ஏற்றப்படுகின்றன. ஆதலால், பகவானது உபதேசம் நேரான உண்மையாம்.—ஆ.) "செய்கிறான், பற்றவும்படுகிறான்"

வ்யவஹாரோ பவதி, ந து பரமார்த்தத ஏவ தஸ்மிந் பரமார்த்ததஸ் து ஸ நாஸ்தி । அத ஏவ, ஏதஸ்மிந் பரமார்த்தஸாம்க்யதர்ஶநே ஸ்திதாநாம் ஜ்ஞாநநிஷ்டாநாம் பரமஹம்ஸபரிவ்ராஜகாநாம் திரஸ்க்ருதாவித்யாவ்யவஹாராணாம் கர்மாதிகாரோ நாஸ்தி இதி தத்ர தத்ர தர்ஶிதம் பகவதா ॥ ௩௧ ॥

கிமிவ ந கரோதி ந லிப்யத இதி? அத்ர த்ருஷ்டாந்தமாஹ—

௩௨. யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத் ஆகாஶம் நோபலிப்யதே ।
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாऽऽத்மா நோபலிப்யதே ॥

யதா ஸர்வகதம் ஸர்வவ்யாபி ஸௌக்ஷ்ம்யாத் ஸூக்ஷ்மபாவாத் ஆகாஶம் கம் ந உபலிப்யதே ந ஸம்பத்யதே, ஸர்வத்ர அவஸ்திதோ தேஹே ததா ஆத்மா ந உபலிப்யதே ॥ ௩௨ ॥

கிஞ்ச—

௩௩. யதா ப்ரகாஶயத்யேக꞉ க்ருத்ஸ்நம் லோகமிமம் ரவி꞉ ।
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்நம் ப்ரகாஶயதி பாரத ॥

யதா ப்ரகாஶயதி அவபாஸயதி ஏக꞉ க்ருத்ஸ்நம் லோகம் இமம் ரவி꞉ ஸவிதா ஆதித்ய꞉, ததா தத்வத் மஹாபூதாதி த்ருத்யந்தம் க்ஷேத்ரம் ஏக꞉ ஸந் ப்ரகாஶயதி—க꞉?— க்ஷேத்ரீ பரமாத்மா இத்யர்த꞉ ।

என்னும்வியவஹாரமானது அவித்யாமாத்திரவடிவமேதான் [வெறும் மயக்கம்மாத்திரந்தான்]. மற்று, அது [செய்கையும், அநுபவமும்] அப்பரமாத்மாவினிடத்து உண்மையாகவே இல்லை. ஆதலால்தான், இந்தமெய்யுணர்வுக்கொள்கையிலே நிலைத்து, ஞானத்திலே உறுதியாக நிற்பவராய், அவித்யையையும் அதன் வியவகாரங்களையும் அசட்டைசெய்துள்ள பரமஹம்ஸத் துறவிகட்குக் கர்மத்தில் அதிகாரமில்லையென ஆங்காங்குப் பகவானால் உணர்த்தப்பட்டுள்ளது. (௩௧)

எதுபோல, செய்வதில்லை? பற்றப்படுவதில்லை? என்பதற்குத் திருஷ்டாந்தம் கூறுகிறார்:

௩௨. எல்லாவற்றிலுமுள்ள ஆகாசமானது நுண்மையினால் [நுண்ணிய தன்மையை யுடையதாதலால்] (சேறுமுதலியவற்றால்) கறைப்படுத்தப்படாதவாறுபோல, சரீரத்தில் எங்குமுள்ள ஆத்மா(எதனாலும்)கறைப்படுத்தப்படுவதில்லை.

ஆத்மா எல்லாவற்றையும் விளங்கச்செய்கின்றது.

மேலும், (விளங்கச்செய்யும்பொருளான ஆத்மாவானது விளங்கச்செய்யப்படும்பொருள்களின் தன்மைகளால் தாக்கப்படமாட்டாது எனஅருளிச்செய்கிறார்-ஆ.)

௩௩. ஓரே ஸூர்யன் இவ்வுலகத்தையெல்லாம் விளங்கச்செய்யுமாறுபோல, பாரத! க்ஷேத்ரமுடையவன் க்ஷேத்ரத்தையெல்லாம் விளங்கச்செய்கிறான்.

அவ்யக்தம்முதலாக ஸ்தாவரம்ஈறாகவும், மஹாபூதங்கள்முதலாக உறுதியான தன்மைஈறாகவும் (௧௩ - ௫, ௬) உள்ள க்ஷேத்ரங்களை ஒருவனாயிருந்தே விளங்கச்செய்கிறான்.—யார்? —க்ஷேத்ரத்தையுடையவன், பரமாத்மா என்பது பொருள்.—

ரவிர்த்ருஷ்டாந்த: அத்ர ஆத்மந: உபயார்தேऽபி பவதி ரவிவத் ஸர்வக்ஷேத்ரேஷு ஏக ஏவ ஆத்மா, அலேபகச்ச இதி ॥ ௩௩ ॥

ஸமஸ்தாத்யாயார்தோபஸம்ஹாரார்த: அயம் ஶ்லோக:—

௩௪. க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோரேவமந்தரம் ஜ்ஞாநசக்ஷுஷா ।
பூதப்ரக்ருதிமோக்ஷம் ச யே விதுர்யாந்தி தே பரம் ॥

இதி ஶ்ரீமஹாபாரதே ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஶ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகஶாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுநஸம்வாதே க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாகயோகோ நாம த்ரயோதஶோऽத்யாய: ॥

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ: யதாவ்யாக்யாதயோ: ஏவம் யதாப்ரதர்ஶிதப்ரகாரேண அந்தரம் இதரேதரவைலக்ஷண்யவிஶேஷம் ஜ்ஞாநசக்ஷுஷா ஶாஸ்த்ராசார்யப்ரஸாதோபதேஶஜநிதம் ஆத்மப்ரத்யயிகம் ஜ்ஞாநம் சக்ஷு:, தேந ஜ்ஞாநசக்ஷுஷா, பூதப்ரக்ருதிமோக்ஷம் ச, பூதாநாம் ப்ரக்ருதி: அவித்யாலக்ஷணா அவ்யக்தாக்யா, தஸ்யா: பூதப்ரக்ருதே: மோக்ஷணம் அபாவகமநம் ச யே விது: விஜாநந்தி, யாந்தி கச்சந்தி தே பரம் பரமாத்மதத்த்வம் ப்ரஹ்ம, ந புந: தேஹம் ஆததத இத்யர்த: ॥ ௩௪ ॥

இதி ஶ்ரீமத்பகவத்கீதாபாஷ்யே த்ரயோதஶோऽத்யாய: ॥

ஸூர்யதிருஷ்டாந்தமானது இங்கு ஆத்மாவிற்கு இருவிதத்தாலும் பயன்படுவதாகின்றது : (1) ஸூர்யன்போல, ஆத்மாவானது எல்லாக்ஷேத்ரங்களிலும் ஒன்றேதான் ; (2) ஸூர்யன்போல, (ஒன்றிலும்) ஒட்டாததுமாம் என்க. (௩௩)

விஷயத்தை முடித்தல்.

அத்தியாயம்முழுவதிலும் உபதேசித்த விஷயத்தை முடிக்கும்பொருட்டாய் இச்சுலோகம்(வருகின்றது) :

௩௪. எவர்கள் க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களது வேற்றுமையையும், பிராணிகளுடைய பிரகிருதி நீங்குதலையும், ஞானக்கண்ணாலே இவ்வாறு உணர்கிறார்களோ, அவர்கள் பரம்பொருளை அடைகிறார்கள்.

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸ ரருளிச்செய்த நூறாயிரக்கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்ம வித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே, க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் என்னும் பதின்மூன்றும் அத்தியாயம் முற்றும்.

கீழே விரித்துரைக்கப்பட்ட க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்கட்கு ஒன்றற்கொன்றுள்ள வேற்றுமையின்பேதத்தை ஞானக்கண்ணினால் (அதாவது) சாஸ்திரம் ஆசார்யன் இவர்களது உபதேசத்தால் உண்டானதாய் ஆத்மாவை உணர்த்தும் அறிவாகிய கண்ணினால், எவர்கள் கீழ்க்காட்டியபிரகாரம் அறிகிறார்களோ ; பிராணிகளது அவித்யையாகிய அவ்யக்தமென்னும்பிரகிருதி இல்லாமற்போவதையும் அறிகிறார்களோ ; அவர்கள் பரமாதமஉண்மையான ப்ரஹ்மத்தை அடைகிறார்கள், மீண்டும் உடம்பை எடுப்பதில்லை என்பது பொருள். (௩௪)

ஸ்ரீமத் பகவத்கீதா பாஷ்யத்தில் பதின்மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌗𑍁𑌣𑌤𑍍𑌰𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑌃 ॥

𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌮𑌿𑌤𑌿? 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 '𑌪𑌰𑌂 𑌭𑍂𑌯𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

𑌅𑌥𑌵𑌾—"𑌈𑌶𑍍𑌵𑌰𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌃 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌂, 𑌨 𑌤𑍁 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌿𑌵 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌯𑍋𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌰𑍍𑌥𑌮𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌤𑍍𑌵𑌂 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌂𑌗𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌗𑍁𑌣𑍇 𑌕𑌥𑌂 𑌸𑌂𑌗𑌃 ? 𑌕𑍇 𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌃 ? 𑌕𑌥𑌂 𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 ? 𑌗𑍁𑌣𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ? 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍, 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌰𑍍𑌥𑌮𑍍 𑌚 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

க. 𑌪𑌰𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌰𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌿𑌤𑍋 𑌗𑌤𑌾𑌃 ॥

பதினான்காம் அத்தியாயம்: குணத்ரயவிபாகயோகம்.

இவ்வத்தியாய விஷயம்.

உண்டாகும் பொருளெல்லாம் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களுடைய ஸம்பந்தத்தால் உண்டாகின்றன எனக் கூறப்பட்டது.—அது எப்படி? என்பது.—அதனை விளக்கும் பொருட்டு "முநிகளெல்லாம்" (கச-க) என்று தொடங்குகின்ற (இந்த) அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது:

அல்லது, (முந்தின அத்தியாயத்திற்கும் இவ்வத்தியாயத்திற்குமுள்ள ஸம்பந்தத்தை இவ்வாறுகொள்ளலாம்) : "க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்கள் ஈச்வரனுக்கு அதீனமாய் நின்றே பிரபஞ்சத்திற்குக் காரணமாம்; ஆனால், சாங்கியர்கட்குப்போல, சுதந்திரமாய் நின்றே (அவை பிரபஞ்சத்திற்குக் காரணம்) அல்ல" என்ற இத(னைக் காட்டுவத)ற்காக, பிரகிருதியில் தங்கிநிற்றலும் [தான் அப்பிரகிருதியே என மயங்குதலும்], குணங்களின்மீது பற்றும் [ஓசைமுதலிய விஷயங்களின்மேல் விடாப்பிடியும்], ஸம்ஸாரத்திற்குக் காரணம் எனக் கூறப்பட்டது (கங - உக).—எந்த குணத்தில் எப்படிப் பற்று? குணங்களென்பன யாவை? எவ்வாறு கட்டுறுத்துகின்றன? குணங்களினின்றும் விடுபடுதல் எவ்வாறும்? விடுபட்டவனுடைய லக்ஷணத்தைச் சொல்லவேண்டும்.—என்னும் இத்தகைய விஷயத்தைப் பகவான் அருளிச்செய்யலானார்:

பிரபஞ்ச வரலாற்றை அறியவேண்டும்.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார்:

க. முநிகளெல்லாம் எதனை உணர்ந்து இதனினின்றும் மேம்பட்ட ஸித்தியை அடைந்துள்ளாரோ, (அதனை,) அறிவுகளுள் சிறந்த மேலான அறிவை (யான்) மீளவும் உரைப்பேன.

परं — 'ज्ञानम्' इति व्यवहितेन संबन्धः — भूयः पुनः, पूर्वेषु सर्वेष्वध्यायेषु असकृदुक्तमपि, प्रवक्ष्यामि । तच्च परं, परवस्तुविषयत्वात् । किं तत्? — ज्ञानं सर्वेषां ज्ञानानाम् उत्तमम्, उत्तमफलत्वात् । 'ज्ञानानाम्' इति न अमानित्वादीनाम्; किं तर्हि? — यज्ञादिज्ञेयवस्तुविषयाणाम् इति । तानि न मोक्षाय, इदं तु मोक्षाय; इति परोत्तमशब्दाभ्यां स्तौति श्रोतृबुद्धिरुच्युत्पादनार्थम् । यत् ज्ञात्वा यत् ज्ञानं ज्ञात्वा प्राप्य मुनयः संन्यासिनः मननशीलाः सर्वे परां सिद्धिं मोक्षाख्याम् इतः देहबन्धनात् ऊर्ध्वं गताः प्राप्ताः ॥

तस्याश्च सिद्धेः ऐकान्तिकत्वं दर्श्यते —

உ. इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥

इदं ज्ञानं यथोक्तम् उपाश्रित्य — ज्ञानसाधनम् अनुष्ठाय इत्येतत् — मम परमेश्वरस्य साधर्म्यं मत्स्वरूपताम् आगताः प्राप्ताः इत्यर्थः । न तु समानधर्मता साधर्म्यं, क्षेत्रज्ञेश्वरयोः भेदानभ्युपगमात् गीताशास्त्रे । फलवादश्च अयं स्तुत्यर्थम् उच्यते । सर्गे

"பரம்" என்பதை "ஜ்ஞாநம்" என ஒதுங்கிநிற்பதனோடு கூட்டுக. (ஞானமானது) முந்தின அத்தியாயங்களில் ஒருமுறைக்குப்பலமுறை கூறப்பட்டதாயினும், (அதனை நான்) மறுபடியும் கூறுவேன். அது மேலானது; பரம்பொருளைப்பற்றியதாதலின்.—அது யாது?—ஞானமென்பது. (அது) ஞானங்களெல்லாவற்றிலும் சிறந்தது; சிறந்த பயனையுடையதாதலின். "ஞானங்களுள்" என்பது - பணிவுமுதலியவற்றை (கங - எ, அ, கூ, க0) (குறிப்பது)இல்லை. மற்றென்னவெனின், யாகத்தையும் அதுபோன்ற அறியவேண்டிய விஷயங்களையும் பற்றிய (ஞானங்களைக் குறிப்பது) என(க் கொள்க.) அவை மோக்ஷத்திற்காவதில்லை; இதுவோ மோக்ஷத்திற்காவது. ஆதலால், கேட்போரது மனத்தில் ருசி பிறக்கும்பொருட்டு "மேலான" "சிறந்த" என்னும் சொற்களால் (இதனைப்) புகழ்கின்றார். அந்த அறிவைப பெற்றுத் துறவிகளாய்ச் சிந்திக்குந்தன்மையரெல்லாம் இந்தத் தேகபந்தத்தினின்றும் விடுபடுதலென்னும்பெயருடைய மேலான ஸித்தியை அடைந்துள்ளார்கள். (க)

அந்த ஸித்தியானது தவறாது (முக்தியைத் தரும்) எனப்படுகின்றது:

உ. **(அவர்கள்) இந்த ஞானத்தை அடைந்து எனது ஒற்றுமையைப் பெற்றுள்ளார்கள்; சிருஷ்டியிலும் பிறப்பதில்லை; பிரளயத்திலும் கலங்குவதில்லை.**

(அவர்கள்) கீழ்க்கூறிய இந்த ஞானத்தை அடைந்து, அதாவது ஞானஸாதநங்களை அநுஷ்டித்து, பரமேச்வரனை எனது ஒற்றுமையை, என்வடிவமாதலைப் பெற்றிருக்கிறார்கள். ஒற்றுமையென்பது - ஒப்புமையன்று; க்ஷேத்ரஜ்ஞனுக்கும் ஈச்வரனுக்கும் பேதத்தை கீதாசாஸ்திரத்தினுள் ஏற்றுக்கொள்ள இயலாதாதலின். (இரண்டு பொருள்களுள், ஒன்றற்கொன்று பேதமுள்ளவழி, இரண்டிற்கும் பொதுவாயுள்ள சிலதன்மைகளால் ஒபபுமை கூடும். பேதமில்லாவழி, இரண்டும் ஒன்றும் என ஆலோசிக்க.) இந்தப் பலவாதமானது (முக்தியாகிய முக்கியமான பயனைக் கூறுதலா

அபி ஸ்ருஷ்டிகாலேऽபி ந உபஜாயந்தே ந உத்பத்யந்தே | ப்ரலயே ப்ரஹ்மணோऽபி விநாசகாலே ந வ்யதந்தி ச வ்யதாம் ந ஆபத்யந்தே, ந ச்யவந்தி இத்யர்த꞉ ॥ ௨ ॥

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோக꞉ ஈத்ருச꞉ பூதகாரணம் இத்யாஹ—

௩. மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந்கர்பம் ததாம்யஹம் |
ஸம்பவ꞉ ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத ॥

மம ஸ்வபூதா மதீயா மாயா த்ரிகுணாத்மிகா ப்ரக்ருதி꞉ யோநி꞉ ஸர்வபூதாநாம் காரணம் | ஸர்வகார்யேப்ய꞉ மஹத்த்வாத் காரணத்வாச்ச ஸ்வவிகாராணாம், மஹத் ப்ரஹ்ம இதி யோநிரேவ விசிஷ்யதே | தஸ்மிந் மஹதி ப்ரஹ்மணி யோநௌ கர்பம் ஹிரண்யகர்பஸ்ய ஜந்மந꞉ பீஜம், ஸர்வபூதஜந்மகாரணம் பீஜம், ததாமி நிக்ஷிபாமி க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞப்ரக்ருதித்வயசக்திமாந் ஈச்வர꞉ அஹம்—அவித்யாகாமகர்மோபாதிஸ்வரூபாநுவிதாயிநம் க்ஷேத்ரஜ்ஞம் க்ஷேத்ரேண ஸம்யோஜயாமி இத்யர்த꞉ | ஸம்பவ꞉ உத்பத்தி꞉ ஸர்வபூதாநாம் ஹிரண்யகர்போத்பத்தித்வாரேண தத꞉ தஸ்மாத் கர்பாதாநாத் பவதி ஹே பாரத ॥

னது, ஞானத்தைப்) புகழும்பொருட்டென்க. (அவர்கள்) படைப்புக்காலத்திலும் உண்டாவதில்லை; பிரளயத்திலும், ப்ரஹ்மா அழியுங்காலத்திலுங்கூட கலங்குவதில்லை, கலக்கமடைவதில்லை, நிலைகுலைவதில்லை என்பது பொருள். (௨)

பிரபஞ்சம் தோன்றிவிரிதல்.

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞருடைய இத்தகைய கூட்டரவானது பொருள்கள் (எல்லாம் உண்டாதற்குக்)காரணம் என அருளிச்செய்கிறார்:

௩. எனது கருப்பையானது பெரிய ப்ரஹ்மம்; அதனுள் யான் கருத்தரிக்கின்றேன்; பாரத! எல்லாப்பொருள்கட்கும் பிறப்பு அதனினின்றும் உண்டாகின்றது.

கருப்பையென்பது - எனக்குச் சொந்தமான என்னுடைய மாயை: முக்குண வடிவமான பிரகிருதி: பொருள்களெல்லாவற்றிற்கும் காரணம். (காரணமான அது தனது) கார்யங்களெல்லாவற்றினும் பெரியதாகலால் "பெரிய" எனவும், தனது வேறுபாடுகட்குக் காரணமாதலாலும் அவற்றை ஓங்கிவளரச்செய்வதனாலும் "ப்ரஹ்மம்" எனவும் கருப்பையே விசேஷிக்கப்படுகின்றது. இரண்டு சக்திகளை, க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞன் என்னும் இரண்டுப்பிரகிருதிகளை உடைய ஈச்வரனாகிய யான் அந்தப் பெரிய ப்ரஹ்மமாகிய கருப்பையினுள் கர்ப்பத்தை, கருவை, ஹிரண்யகர்ப்பன் உண்டாதற்கு விதையை, பொருள்களெல்லாம் தோன்றுதற்குக்காரணமான வித்தை வைக்கின்றேன்: அவித்யை, காமம், கர்மம என்னும் உபாதிகளின் வடிவங்களைப் பின்பற்றியுள்ள [அவற்றின் வாஸனைகளோடு ஒட்டிஒழுகுகின்ற] க்ஷேத்ரஜ்ஞனை க்ஷேத்ரத்தோடு சேர்க்கின்றேன் என்பது (தேர்ந்த)பொருள். பாரத! அந்தக் கர்ப்பாதானத்தினின்றும் ஹிரண்யகர்ப்பன் பிறத்தல்மூலமாக எல்லாப்பொருள்களும் உண்டாதல் அமைகின்றது. (வாஸனைகளோடு கூடி, நெல்முதலிய உணவு வடிவமாய்த் தன்னுள் ஒடுங்கியுள்ள மகனை உடம்பொடு கூட்டுவித்தற்பொருட்டுக் கருப்பையினுள் தகப்பன் ரேதஸை விடுதல்மூலமாகக் கர்ப்பத்தை வைக்கிறான். அங்ஙனம் கருதிரண்டபிண்டமாதல் முதலிய நிலைமைகள் உண்டாக, அந்தக் கர்ப்பாதானத்தினின்றும் மகன் பிறக்கின்றான். அதுபோல, அவித்யைமுதலியவற்றின் வாஸனைகளோடு கூடி, பிரளயகாலத்திலே என்னிடத்தில் ஒடுங்கியுள்ள க்ஷேத்ரஜ்ஞனை, சிருஷ்டிசமயத்தில், அவன் அநு

௪. 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌸𑌮𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌃 ।
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾 ॥

𑌦𑍇𑌵𑌪𑌿𑌤𑍃𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌪𑌶𑍁𑌮𑍃𑌗𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌦𑍇𑌹𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃 𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑌾𑌵𑌯𑌵𑌾𑌃 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌃, 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌂 𑌯𑍋𑌨𑌿𑌃 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌅𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌗𑌰𑍍𑌭𑌾𑌧𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾 ॥ ௪ ॥

𑌕𑍇 𑌗𑍁𑌣𑌾𑌃 ? 𑌕𑌥𑌂 𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 ? 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇—

௫. 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌃 ।
𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌦𑍇𑌹𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌃 𑌤𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌂𑌨𑌾𑌮𑌾𑌨𑌃 । ‘𑌗𑍁𑌣𑌾𑌃’ 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌰𑌿𑌭𑌾𑌷𑌿𑌕𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃, 𑌨 𑌰𑍂𑌪𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 𑌗𑍁𑌣𑌾𑌃 । 𑌨 𑌗𑍁𑌣𑌗𑍁𑌣𑌿𑌨𑍋𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑌤𑍍𑌰 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌗𑍁𑌣𑌾 𑌇𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ; 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑍀𑌵 । 𑌤𑌮𑌾𑌸𑍍𑌪𑌦𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 ‘𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿’ 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 𑌭𑌗𑌵-

---

பவிக்கவேண்டிய உடம்பொடு கூட்டுவித்தற்பொருட்டுப் பிரகிருதியினுள் சிதாபாஸனென்னும் ரேதஸை விடுதல்மூலமாக மாயாவிருத்தியாகிய கர்ப்பத்தை நான் வைக்கிறேன். அங்ஙனம் ஆகாசம், காற்று, ஒளிமுதலியவை தோன்றுதலென்னும் நிலைமைகள் உண்டாக, அந்தக் கர்ப்பாதானத்தினின்றும் ஹிரண்யகர்பபன்முதலிய பொருள்கள் பிறக்கின்றன.—ம.) (௩)

௪. கௌந்தேய! எல்லாக் கருப்பைகளிலும் எந்த உருவங்கள் உண்டாகின்றனவோ, அவற்றிற்குப் பெரிய ப்ரஹ்மம் கருப்பை. நான் விதைகொடுக்கும் தந்தை.

எல்லாக் கருப்பைகளிலும் - தேவர், பிதிருக்கள், மனிதர், ஆடுமாடுகள், விலங்குகள் முதலியவற்றிலும். உருவங்கள் - பெரியசிறிய உறுப்புகள் ஒருங்கே அமைந்துள்ள உடம்புவடிவமான உருவங்கள். அவ்வுருவங்கட்கு எல்லாநிலைமைகளுமுள்ள பெரிய ப்ரஹ்மம்[பிரகிருதி]காரணம். ஈச்வரனாகிய நான் விதையைக் கொடுக்கும் தந்தை, கர்ப்பாதானத்தைச் செய்பவன். (௪)

குணங்கள், அபிமானமுள்ள ஜீவனைக் கட்டுறுத்துகின்றன.

குணங்கள் யாவை? எவ்வாறு கட்டுறுத்துகின்றன? என்பது.—கூறுவோம்:

௫. ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் குணங்கள் பிரகிருதியைப் பிறப்பிடமாகவுடையவை; மஹாபாஹோ! அழிவில்லாததேஹியை தேகத்தில் இறுக்கிக்கட்டுகின்றன.

(குணங்கள்) ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் பெயருடையவை. ‘‘குணங்கள்’’ என்பது - பரிபாஷையினால் வந்த சொல். (அவை) நிறம்முதலியனபோல, திரவியத்தை [ஒருபொருளை]ச் சார்ந்துள்ள பண்புகளல்ல. (குணங்களென்பன - பிரகிருதியின் வடிவமேயாதலால், எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ளவை; ஆகவே, திரவியத்தைச் சார்ந்திரா.—ஆ) இங்குச் சொல்லக் கருதியது - குண குணிகளின் வேற்றுமையன்று [குணம் வேறாயுள்ளது, குணத்தையுடைய குணி வேறாயுள்ளது என்பது அன்று]. ஆதலால், பண்புகள் (திரவியங்கட்கு அதீனமாயிருப்பது) போல, (குணங்கள்) அவித்யாவடிவுள்ளவையாதலால் க்ஷேத்ரஜ்ஞனுக்கு எப்பொழுதும் அதீனமானவை(என்றுகுணங்கள் எனப்படுகின்றன. அவை)க்ஷேத்ரஜ்ஞனைக் கட்டுறுத்துகின்றனபோலும்; அவனை

𑌨𑍍𑌮𑌾𑌯𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌇𑌵 𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋, 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍌 𑌸𑌮𑌰𑍍𑌥𑌤𑌰𑍌 𑌆𑌜𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑍌 𑌬𑌾𑌹𑍂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃, 𑌹𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌦𑍇𑌹𑍇 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌂 𑌦𑍇𑌹𑌵𑌨𑍍𑌤𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑍍—𑌅𑌵𑍍𑌯𑌯𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 '𑌅𑌨𑌾𑌦𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 ॥

𑌨𑌨𑍁 "𑌦𑍇𑌹𑍀 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌤𑍍, 𑌕𑌥𑌮𑍍 𑌇𑌹, '𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇?

𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌅𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌇𑌵𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 '𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌇𑌵' 𑌇𑌤𑌿 ॥ ௫ ॥

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

ஸூ. 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 ।
𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌚𑌾𑌨𑌘 ॥

𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌮𑌣𑌿𑌃 𑌇𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑍍 𑌅𑌨𑌾𑌮𑌯𑌂 𑌨𑌿𑌰𑍁𑌪𑌦𑍍𑌰𑌵𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 । 𑌕𑌥𑌮𑍍? —𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 "𑌸𑍁𑌖𑍀 𑌅𑌹𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌷𑌯𑌭𑍂-

---

ஆதாரமாகக்கொண்டு தம்மைநிலைப்படுத்திக்கொள்கின்றன ; ஆகவே, "கட்டுறுத்துகின்றன" எனக் கூறப்படுகின்றது. அவை அழிவில்லாத தேகியை, தேகத்தையுடையவனை [உடம்பையே ஆத்மாவாகக் கொண்டவனை—ஆ.] தேகத்தில் இறுக்கிக்கட்டுகின்றனபோலும். (ஒருபாத்திரத்திலுள்ள நீரானது தனக்கு உண்டாகும் அசைவென்னும் விகாரத்தை, பிரதிபிம்பமயக்கத்தால் ஆகாசத்திலுள்ள ஸூர்யனுக்கு நிகழ்வதுபோலக் காட்டுகின்றது ; அதாவது, அசையும் ஜலமானது ஸூர்யனை அசைவதுபோலத் தோற்றுவிக்கின்றது. அதுபோல, குணங்கள் தமக்கு உண்டாகும் விகாரங்களை ஆத்மாவிற்கு நிகழ்வனபோலக் காட்டுகின்றன.—ம.) மஹாபாஹோ - முழந்தாளளவு நீண்ட வலிய பெரிய கைகளுடையவன். (ஆத்மாவிற்கு) அழிவின்மையானது "அநாதியாதலால்" (௧௩ - ௩௧) என்று தொடங்கும் சுலோகத்தினால் கூறப்பட்டது.

(ஆக்ஷேபம்) :—ஆயின், "தேகியானவன் கறைப்படுத்தப்படுவதில்லை" (௧௩ - ௩௧) எனக் கூறப்பட்டது. அது இங்கே 'கட்டுறுத்துகின்றன' என எவ்வாறு வேறுவிதமாகக் கூறப்படுகின்றது ?

(ஸமாதானம்) ;—"கட்டுறுத்துகின்றனபோலும்" எனப் போலும் என்னும் சொல்லினால் (அதனை) யாம் பரிகரித்துள்ளோம். (௫)

குணங்களது இயல்பும், செய்கைகளும்.

இனி, ஸத்துவம்முதலியவற்றுள் ஸத்துவகுணத்திற்கே முதலில் லக்ஷணம் கூறுகிறார் :

ஸூ. *அவற்றுள், ஸத்துவகுணம் மாசற்றதாதலால் துலக்கமானது, தொந்தரையில்லாதது ; பாவமற்றோனே ! இன்பப்பற்றினால் (ஒருவனைக்) கட்டுகின்றது ; அறிவுப்பற்றினாலும் (அவனைக்) கட்டுகின்றது.*

ஸத்துவகுணமானது பளிங்குக்கற்போல ஸ்வச்சமாயுள்ளதனால் துலக்கமாயுள்ளது, தொந்தரையில்லாதது. (ஸத்துவம் ஸ்வச்சமானது, மறைப்பனவற்றை விலக்கவல்லது. ஆதலால், துலக்கமானது-அறிவுப்பொருளைத் தோற்றுவிப்பது. தொந்தரையில்லாதது-ஸ்வச்சமாய் நின்று இன்பத்தை வெளிப்படுத்துவது. அது ஆத்மாவைக்) கட்டுகின்றது.—எவ்விதத்தால் ?—"யான் இன்பமுடையவன்" என்னும் ஸுகப்பற்

तस्य सुखस्य विषयिणि आत्मनि संश्लेषापादनमेव । "ममैव सुखं जातम्" इति भ्रान्त्यैव सुखे सञ्जनम् । सैषा अविद्या । न हि विषयधर्मः विषयिणो भवति । इच्छादि च धृत्यन्तं क्षेत्रस्यैव विषयस्य धर्मः इति उक्तं भगवता । अतः अविद्ययैव स्वकीयधर्मभूतया विषयविषय्यविवेकलक्षणया अस्वात्मभूते सुखे सञ्जयति इव, असङ्गं सक्तमिव करोति, असुखिनं सुखिनमिव । तथा ज्ञानसङ्गेन च, — ज्ञानमिति सुखसाहचर्यात् क्षेत्रस्यैव विषयस्य अन्तःकरणस्य धर्मः, नात्मनः; आत्मधर्मत्वे सङ्गानुपपत्तेः बन्धानुपपत्तेश्च । सुखे इव ज्ञानादौ सङ्गो मन्तव्यः । अनघ अपाप ॥ ६ ॥

௭. *रजो रागात्मकं विद्धि तृष्णासङ्गसमुद्भवम् ।*
तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ॥

रजः रागात्मकं—रञ्जनात् रागः गैरिकादिवत्—विद्धि जानीहि तृष्णासङ्गसमुद्भवं तृष्णा अप्राप्ताभिलाषः, आसङ्गः प्राप्ते विषये मनसः प्रीतिलक्षणः संश्लेषः, तृष्णाऽऽसङ्गयोः समुद्भवं तृष्णाऽऽसङ्ग-

---

றினால், விஷயமான இன்பத்தை விஷயியான ஆத்மாவினிடத்து ஒட்டுமாறுசெய்வத னால்தான் என்க. "எனக்கே ஸுகம் பிறந்துள்ளது" என இன்பத்தால் பற்றுக் கொள்ளுதல் மயக்கந்தான். ஆதலால், இது அவித்யையாம். விஷயத்தின் தன்மையா னது விஷயிக்குவாராதன்றோ. அன்றியும், ஆசைமுதலாக உறுதியான தன்மை ஈறாக வுள்ளதெல்லாம்) க்ஷேத்ரமேயான விஷயத்தின் தன்மை எனப் பகவான் அருளிச் செய்துள்ளார். ஆகவே, (ஸத்வகுணமானது ஆத்மாவை), தனது[ஆத்மாவினது]தன் மைபோன்றதாய், விஷயவிஷயிகளைப் பகுத்தறியாமை யென்னும் அவித்யையினாலே யே, தானல்லாத[ஆத்மா அலலாத]இன்பத்திலே பற்றச்செய்கின்றதுபோலும்: பற் றில்லாததைப்பற்றுக்கொண்டதுபோலச் செய்கின்றது: இன்பமில்லாததை இன்பமு டையதுபோலச்செய்கின்றது. அவ்வண்ணமே, அறிவுபபற்றினாலும்(ஆத்மாவை ஸத் துவகுணம கட்டுகின்றது). அறிவென்பது-(இங்கே)இன்பத்தோடுஉடன்கூறப்பெற் றமையினால், க்ஷேத்ரமேயான விஷயமாகிய அகக்கரணத்தினது தன்மைதான்; ஆத்மா வினது தன்மையன்று; ஆதவாவினது தன்மையாயின், பற்றும் பந்தமும் அமையாவா தலின். இன்பத்திற்போல, அறிவுமுதலியவற்றில் பற்றை ஆலோசிததுக்கொள்க. (இன்பத்தில் பற்று உண்டாவதுபோலவே, அறிவு செல்வம் முதலியவற்றிலும் பற்று உண்டாதலை நோக்கிக்கொள்க. இங்குக்கூறப்பட்ட இன்பமும், அறிவும் - விருத்தி ஸுகமும், விருத்திஞானமுமேயன்றி,ஸ்வரூபாநந்தமும், ஸ்வரூபஞானமு மல்லவெனக் காண்க.) (௬)

௭. *ரஜோகுணத்தை ராகவடிவுள்ளதாக [காமவடிவுள்ளதாக] ஆசைக்கும் பற்றுக்கும் பிறப்பிடமாகத் தெரிந்துகொள் ; கௌந்தேய ! அது கர்மபப்பற்றினால் தேகி யைக் கட்டுகின்றது.*

ரஜோகுணமானது ராகமென்னும் வடிவுடையது. காவிக்கல் (ஆடைக்கு நிறங் கொடுப்பது)போல, ரஜஸானது ஆத்மாவிற்கு நிறங்கொடுப்பதனால், (அநாதம விஷ யங்களை அவாவச்செய்வதனால், அதனை) ராகம் என்க. (ராகம் - காமம்.) ஆசை யென்பது - கிடையாத பொருளின்மேல் அவா. பற்று என்பது - கிடைத்தபொருளின் மேல் மனத்திற்குப் பிரியம் என்னும் ஒட்டு. கர்மப்பற்று - இம்மைமறுமைக்கான கர்

𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍। 𑌤𑌤𑍍 𑌰𑌜𑌃 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑍇𑌨, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌸𑌂𑌜𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌤𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌃, 𑌤𑍇𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌰𑌜𑌃 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑍍 ॥ ௭ ॥

௮. 𑌤𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍋𑌹𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥

𑌤𑌮𑌃 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌗𑍁𑌣𑌃 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌮𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌜𑌾𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿, 𑌮𑍋𑌹𑌨𑌂 𑌮𑍋𑌹𑌕𑌰𑌮𑍍 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌕𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌹𑌿𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌹𑌵𑌤𑌾𑌮𑍍। 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌶𑍍𑌚 𑌆𑌲𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌃 𑌤𑌾𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌲𑌸𑍍𑌯𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌭𑌿𑌃 𑌤𑌤𑍍 𑌤𑌮𑌃 𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥ ௮ ॥

𑌪𑍁𑌨𑌃 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௯. 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍁𑌖𑍇 𑌸𑌂𑌜𑌯𑌤𑌿 𑌰𑌜𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍇 𑌸𑌂𑌜𑌯𑌤𑍍𑌯𑍁𑌤 ॥

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑍁𑌖𑍇 𑌸𑌂𑌜𑌯𑌤𑌿 𑌸𑌂𑌶𑍍𑌲𑍇𑌷𑌯𑌤𑌿, 𑌰𑌜𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌹𑍇 𑌭𑌾𑌰𑌤 '𑌸𑌂𑌜𑌯𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍃𑌤𑌂 𑌵𑌿𑌵𑍇𑌕𑌮𑍍 𑌆𑌵𑍃𑌤𑍍𑌯 𑌆𑌚𑍍𑌛𑌾𑌦𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌮𑌃 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌆𑌵𑌰𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍇 𑌸𑌂𑌜𑌯𑌤𑌿 𑌉𑌤— 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌮𑍍 ॥ ௯ ॥

மங்களில் பற்றுக்கொள்ளுதல், அவற்றில் அழுந்திக்கிடத்தல். அதனால் ரஜோகுணமானது தேகியை, உடம்பொடுநிற்கும் ஆத்மாவைக் கட்டுகின்றது. [அகர்த்தாவாகவே, தொழிற்படாதவனுகவே உள்ள ஆத்மாவை - "நான் செய்கிறேன்" என்னும் அபிமானத்தால் செலுத்துகின்றது.—ஆ.] (௭)

௮. ***தமோகுணமோ, அஜ்ஞானத்தினின்றும் பிறப்பதாக, எல்லாத்தேகிகளையும் மயக்குவதாகத் தெரிந்துகொள்; பார்த்த! அது அஜாக்கிரதை, சோம்பல், உறக்கம் என்றவற்றால் (தேகியைக்) கட்டுகின்றது.***

மூன்றாவதான தமோகுணமானது (ஆவரணசக்தியாகிய) அஜ்ஞானத்தினின்றும் பிறந்து எல்லாத் தேகிகளையும் மயக்குவது, மயக்கத்தைச் செய்வது, பகுத்தறிவின்மையை உண்டாக்குவது. (௮)

மீண்டும், குணங்களது செய்கையைச் சுருக்கிக் கூறுகிறார்:

௯. ***பாரத! ஸத்துவம் இன்பத்திலும், ரஜஸ் தொழிலிலும் பற்றச்செய்கின்றன; தமஸோ, (இவற்றிற்கு) எதிராக, அறிவை மறைத்து அஜாக்கிரதையில் பற்றச் செய்கின்றது.***

ரஜஸ் தொழிலில் "பற்றச்செய்கின்றது" எனத் தொடரும். தமோகுணமானது தனது ஆவரணவடிவத்தால், மறைக்குந்தன்மையினால் - ஸத்துவகுணத்தாலான பகுத்தறிவை மறைத்து அஜாக்கிரதையில் பற்றச்செய்கின்றது. அஜாக்கிரதை - செய்யவேண்டியன வந்தவழி, (அவற்றைச்) செய்யாமை. (௯)

உக்தம் கார்யம் கதா குர்வந்தி குணா இதி? உச்யதே—

கo. ரஜஸ்தமஶ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத ।
ரஜ: ஸத்த்வம் தமஶ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ்ததா ॥

ரஜ: தமஶ்ச உபாவபி அபிபூய ஸத்த்வம் பவதி உத்பவதி வர்ததே யதா, ததா லப்தாத்மகம் ஸத்த்வம் ஸ்வகார்யம் ஜ்ஞாநஸுகாதி ஆரபதே ஹே பாரத । ரஜோ குண: ஸத்த்வம் தமஶ்ச உபாவபி அபிபூய வர்ததே யதா, ததா கர்ம க்ருஷ்யாதி ஸ்வகார்யம் ஆரபதே । தமஆக்யோ குண: ஸத்த்வம் ரஜஶ்ச உபாவபி அபிபூய வர்ததே யதா, ததா ஜ்ஞாநாவரணாதி ஸ்வகார்யம் ஆரபதே ॥

யதா யோ குண: உத்பூத: பவதி, ததா தஸ்ய கிம் லிங்கம் இதி? உச்யதே—

கக. ஸர்வத்வாரேஷு தேஹேऽஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே ।
ஜ்ஞாநம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்த்வமித்யுத ॥

ஸர்வத்வாரேஷு— ஆத்மந: உபலப்தித்வாராணி ஶ்ரோத்ராதீநி, ஸர்வாணி கரணாநி, தேஷு ஸர்வேஷு த்வாரேஷு அந்த:கரணஸ்ய புத்தே: வ்ருத்தி:

குணங்கள் (கீழ்க்) கூறிய செய்கைகளை எப்பொழுது செய்கின்றன ? என்பது.- கூறுவோம் : (வி௵ :—அவை தம்தம் செய்கைகளை ஒரேகாலத்து ஒருங்கே செய்கின்றனவா ? அல்லது, வெவ்வேறு காலத்து மாறிமாறிச் செய்கின்றனவா ? ஒரேகாலத்தாயின், ஒன்றற்கொன்று விரோதமாகச் செய்கின்றனவா ? அல்லது, ஒத்துச்செய்கின்றனவா ?—விடை:—அவை தம்தம்செய்கைகளை வெவ்வேறுகாலத்து மாறிமாறிச் செய்கின்றன.—ஆ.)

கo. பாரத ! ஸத்துவம் ரஜஸையும், தமஸையும் கீழ்ப்படுத்தி எழுகின்றது ; ரஜஸ் ஸத்துவத்தையும், தமஸையும் (கீழ்ப்படுத்தி எழுகின்றது) ; அவ்வாறே, தமஸ் ஸத்துவத்தையும், ரஜஸையும் (கீழ்ப்படுத்தி எழுகின்றது).

எப்பொழுது ஸத்துவகுணமானது ரஜோகுணம் தமோகுணம் இரண்டனையும் கீழ்ப்படுத்தி ஓங்கி வளர்கின்றதோ, அப்பொழுது, தான் மேலிட்டு அறிவு, இன்பம் முதலிய தன்செய்கையைச் செய்கின்றது. அவ்வாறே, எப்பொழுது ரஜோகுணமானது ஸத்துவகுணம் தமோகுணம் இரண்டனையும் கீழ்ப்படுத்தி ஓங்கிவளர்கின்றதோ, அப்பொழுது, தன்கார்யமான வேளாண்மைமுதலிய செய்கையைச்செய்கின்றது. அவ்வண்ணமே, எப்பொழுது தமஸ்என்னும்குணமானது ஸத்துவகுணம் ரஜோகுணம் இரண்டனையும் கீழ்ப்படுத்தி ஓங்கிஎழுகின்றதோ, அப்போழுது, அறிவை மறைத்தல் முதலிய தன்செய்கையைச் செய்கின்றது. (கo)

இப்போழுது இன்னகுணம் ஓங்கியுள்ளது என்பதை அறியும்விதம்.

எப்பொழுது எக்குணம் மேலிட்டுள்ளதோ, அப்பொழுது அதற்கு என்ன அடையாளம் ? என்பது.—கூறுவோம் :

கக. எப்பொழுது இச்சரீரத்தில் எல்லாவாயில்களிலும் அறிவென்னும்பிரகாசம் உண்டாகின்றதோ, அப்பொழுது ஸத்துவம் ஓங்கியுள்ளது என அறியலாம்.

செவிமுதலிய இந்திரியங்களெல்லாம் ஆத்மாவிற்கு அறியும்வழிகளாம். அந்த எல்லாவழிகளுள்ளும் அகக்கரணம் நிரம்பச்செல்லுதலானது, புத்திவிருத்தி வியாபித்தலானது - பிரகாசமென்பது, விளக்கமென்பது, துலக்கமென்பது. அதுவே

प्रकाशः देहे अस्मिन् सर्वद्वारेषु उपजायते। तदेव ज्ञानम्। यदा वस्तुप्रकाशो ज्ञानाख्यः उपजायते, तदा ज्ञानप्रकाशेन लिङ्गेन विद्यात् विवृद्धं उद्रिक्तं सत्त्वं इति उत अपि ॥ ११ ॥

रजसः उद्रिक्तस्य इदं चिह्नम्—

१२. लोभः प्रवृत्तिरारम्भः कर्मणामशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥

लोभः परद्रव्यजिहीर्षा, प्रवृत्तिः प्रयत्नं सामान्यचेष्टा, आरम्भः—कस्य?—कर्मणाम्, अशमः अनुपशमः, हर्षरागादिप्रवृत्तिः; स्पृहा सर्वसामान्यवस्तुविषया तृष्णा—रजसि गुणे विवृद्धे एतानि चिह्नानि जायन्ते हे भरतर्षभ ॥ १२ ॥

१३. अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥

अप्रकाशः अविवेकः, अत्यन्तम् अप्रवृत्तिश्च प्रवृत्त्यभावः तत्कार्यम्, प्रमादो मोह एव च तत्कार्ये, अविवेकः विपरीतज्ञानं मोहः। तमसि गुणे विवृद्धे एतानि चिह्नानि जायन्ते हे कुरुनन्दन ॥ १३ ॥

मरणद्वारेणापि यत्फलं प्राप्यते, तदपि सङ्गरागहेतुकं सर्वं गुणकृतमेव इति आह—

தான் - அறிவென்பது. இவ்வாறாக, எப்பொழுது அறிவென்னும் வெளிச்சமானது இச்சரீரத்தில் எல்லா இந்திரியங்களுள்ளும் உண்டாகின்றதோ, அப்பொழுது, அறிவுப்பிரகாசமாகிய குறியினால் "ஸத்துவகுணம் ஓங்கியுள்ளது" என அறியலாகும். ()

ரஜோகுணம் மேலிட்டுநிற்குமிடத்து இது அடையாளமாம்:—

கஉ. பரதரிற் சிறந்தோனே! ரஜஸ் ஓங்கியுள்ளவிடத்து உலோபம், முயற்சி, தொழில்களைச்செய்தல், ஓய்வின்மை, ஆசை இவை உண்டாகின்றன.

உலோபம்-பிறர்பொருளை வெளவக் கருதல். முயற்சி-பொதுவானப் பிரயத்தினம். செய்தல்.—எவற்றை?—கார்யங்களை. ஓய்வின்மை-மகிழ்ச்சி, பற்றுமுதலியவற்றுள் புகுந்துசெல்லுதல். ஆசை-ஸாமான்னியமான எல்லாப்பொருள்களையும் பற்றியஆசை. ரஜோகுணம் மேலிட்டிருக்குங்கால், இவைகுறிகளாக உண்டாகின்றன[காணப்படுகின்றன]. (கஉ)

கங. குருநந்தந! தமஸ் ஓங்கியுள்ளவிடத்து விளங்காமை, முயற்சியின்மை, தவறுதல், மயக்கம் இவை உண்டாகின்றன.

விளங்காமை - பகுத்தறிவின்மை. முயிற்சியின்மை-முற்றும் ஊக்கமின்மை; (இது) அந்த(ப் பகுத்தறிவின்மையின்)கார்யம். தவறுதலும், மயக்கமும் அதன்[பகுத்தறிவின்மையின்]கார்யங்களாம். விவேகமின்மை - மயங்கியதன்மை என்றபடி. (கங)

குணங்களாலாகும் பிறவிகள்.

இறப்புவழியாகவும் எந்தப்பயன் அடையப்படுகின்றதோ, அதெல்லாம் பற்றினாலும், ஆசையினாலும் வருவதாய் குணங்களாலாவதேதான் என உணர்த்தும்பொருட்டு அருளிச்செய்கிறார்:

௧௪. 𑌯𑌦𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑍍 ।
𑌤𑌦𑍋𑌤𑍍𑌤𑌮𑌵𑌿𑌦𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌮𑌲𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ॥
௧௫. 𑌰𑌜𑌸𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 ।
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌲𑍀𑌨𑌸𑍍𑌤𑌮𑌸𑌿 𑌮𑍂𑌢𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥

𑌯𑌦𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌤𑍁 𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌮𑌰𑌣𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌾, 𑌤𑌦𑌾 𑌉𑌤𑍍𑌤𑌮𑌵𑌿𑌦𑌾𑌂—𑌮𑌹𑌦𑌾𑌦𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌦𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍—𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌅𑌮𑌲𑌾𑌨𑍍 𑌮𑌲𑌰𑌹𑌿𑌤𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑍀𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 ॥ ௧௪ ॥

𑌰𑌜𑌸𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌮𑌰𑌣𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌸𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇। 𑌤𑌥𑌾 𑌤𑌦𑍍𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌲𑍀𑌨𑌃 𑌮𑍃𑌤𑌃 𑌤𑌮𑌸𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍇 𑌮𑍂𑌢𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌪𑌶𑍍𑌵𑌾𑌦𑌿𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ ௧௫ ॥

𑌅𑌤𑍀𑌤𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௬. 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂 𑌫𑌲𑌮𑍍 ।
𑌰𑌜𑌸𑌸𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌦𑍁𑌃𑌖𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌫𑌲𑌮𑍍 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯—𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌸𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃—𑌆𑌹𑍁𑌃 𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌮𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌂 𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 । 𑌰𑌜𑌸𑌸𑍍𑌤𑍁—𑌰𑌾𑌜𑌸𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌾𑌤𑍍—𑌫𑌲𑌮𑌪𑌿 𑌦𑍁𑌃𑌖𑌮𑍇𑌵, 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑌾𑌜𑌸𑌮𑍇𑌵। 𑌤𑌥𑌾 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌤𑌾𑌮𑌸𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌅𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 ॥ ௧௬ ॥

---

௧௪. தேகியானவன், ஸத்துவம் மேலிட்டவழி சாதலை அடைந்தால், உயர்ந்தவற்றை அறிந்தவருடைய மாசற்ற உலகங்களைச் சேர்கிறான்.

௧௫. ஒருவன் ரஜோகுணத்தில் சாதலைப்பெற்று கர்மப்பற்றுள்ளவருள் பிறக்கிறான். அவ்வண்ணமே, தமோகுணத்தில் இறந்தவன் மயங்கியபிறவிகளுள் பிறக்கிறான்.

தேகி-ஆத்மா. உயர்ந்தவற்றை - மஹத் முதலிய தத்துவங்களை. மாசற்ற உலகங்களை-(ரஜஸ் தமஸ் உண்டாதலில்லாத ப்ரஹ்மலோகம் முதலியவற்றை.—ஆ.)(௧௪)

ரஜோகுணம் மேலிட்டிருக்கும்பொழுது சாதலை அடைந்தால், கர்மபற்றுடைய மனிதர்களுள் பிறக்கிறான். அதுபோலவே. தமோகுணம் மேலிட்டிருக்கும்பொழுது இறந்தவன் பசுமுதலிய அறிவிலாப் பிறவிகளில் பிறக்கிறான். (௧௫)

சென்ற சுலோகங்களில் கூறிய விஷயத்தையே சுருக்கிச் சொல்லுகிறார் :

௧௬. நல்வினையான கர்மத்திற்கு மாசற்ற ஸாத்விகப் பயன் என்கிறார்கள் ; ரஜஸுக்கோ துன்பம் பயன் ; தமஸுக்கு அறியாமை பயன்.

ஸாத்விக கர்மத்திற்கு ஸாத்விகமேயான [ஸத்துவகுணத்தாலான] பரிசுத்தமான [ரஜஸ் தமஸ் அழுக்கில்லாத] பயன் என்று ஆன்றோர்கூறுகிறார்கள். ரஜஸ் என்பதற்கு - ராஜஸகர்மம் என்று பொருள் ; (இப்)பிரகரணம் கர்மத்தைப்பற்றியதாதலின், ராஜஸகர்மத்தின் பயனும் துன்பமேதான், ராஜஸமேதான்[ரஜோகுணத்தாலானதேதான்] ; (கார்யமானது) காரணத்தை ஒத்துநிற்குமாதலின். தமஸுக்கு - தாமஸகர்மமான அதர்மத்திற்கு. (௧௬)

கிஞ்ச குணேப்யோ பவதி—

17. ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் ரஜஸோ லோப ஏவ ச ।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞானமேவ ச ॥

ஸத்த்வாத் ஆத்மகாத் ஸஞ்ஜாயதே வஸ்துதத்த்வே ஜ்ஞானம், ரஜஸோ லோப ஏவ ச, ப்ரமாதமோஹௌ ப்ரமாதஸ்ச மோஹஸ்ச ப்ரமாதமோஹௌ ச தமஸோ குணாத் பவத:, அஜ்ஞானமேவ ச பவதி ॥ 17 ॥

கிஞ்ச—

18. ஊர்த்வம் கச்சந்தி ஸத்த்வஸ்தா: மத்யே திஷ்டந்தி ராஜஸா: ।
ஜகன்யகுணவ்ருத்தஸ்தா: அதோ கச்சந்தி தாமஸா: ॥

ஊர்த்வம் கச்சந்தி தேவலோகாதிஷு உத்பத்யந்தே ஸத்த்வஸ்தா: ஸத்த்வகுண-வ்ருத்தஸ்தா: । மத்யே திஷ்டந்தி மனுஷ்யேஷு உத்பத்யந்தே ராஜஸா: । ஜகன்யகுண-வ்ருத்தஸ்தா: ஜகன்யஸ்ச அஸௌ குணஸ்ச ஜகன்யகுண: தம:, தஸ்ய வ்ருத்தம் நித்ராऽऽ-லஸ்யாதி, தஸ்மின் ஸ்திதா: ஜகன்யகுணவ்ருத்தஸ்தா: தாமஸா: அத: கச்சந்தி பஸ்வாதி-யோனிஷு உத்பத்யந்தே தாமஸா: ॥ 18 ॥

"புருஷஸ்ய ப்ரக்ருதிஸ்தத்வரூபேண தேஹாத்மாபிமானேன போக்யேஷு குணேஷு ஸுகது:கமோஹாத்மகேஷு 'ஸுகீ து:கீ மூட: அஹம் அஸ்மி' இத்யேவம்ரூப: ய: ஸங்க: ஸ: காரணம் புருஷஸ்ய ஸதஸத்யோனிஜன்மப்ராப்திலக்ஷணஸ்ய ஸம்ஸாரஸ்ய" இதி ஸாமான்யேன ப்ரதிபாதி-

குணங்களின் செய்கைகளைச் சுருக்கிக்கூறுதல்.

மேலும், குணங்களினின்றும் (எது) உண்டாகின்றதோ, (அதனை அருளிச் செய்கிறார்) :

17. *அறிவு ஸத்துவத்தினின்றும் பிறக்கின்றது : உலோபம் ரஜஸினின்று (பிறக்கின்றது) : அஜாக்கிரதையும், மயக்கமும் தமஸினின்றும் பிறக்கின்றன, அறியாமையுந்தான் (பிறக்கின்றது).*

ஸத்துவம் மேலிட்டவிடத்து அறிவு உண்டாகின்றது. ....(17)

அன்றியும்,

18. *ஸத்துவத்திலுள்ளவர்கள் மேலே செல்லுகிறார்கள் : ராஜஸர்கள் நடுவில் நிற்கிறார்கள் : கடைப்பட்ட குணவொழுக்கத்திலுள்ள தாமஸர்கள் கீழே செல்லுகிறார்கள்.*

ஸத்துவகுண ஒழுக்கத்திலுள்ளவர்கள் தேவலோகம் முதலியவற்றுள் பிறக்கிறார்கள். ராஜஸர்கள், ரஜோகுணஒழுக்கத்திலுள்ளவர்கள் மனிதர்களில் பிறக்கிறார்கள். கடைப்பட்ட தமோகுண ஒழுக்கங்களான உறக்கம் சோம்பல்முதலியவற்றிலுள்ள மூடர்களான தாமஸர்கள் பசுமுதலிய பிறவிகளுள் பிறக்கிறார்கள். (18)

குணங்களினின்றும் மெய்யறிவினால் நீங்குதல்.

"பிரகிருதியில் நிற்றலாகிய [பிரகிருதியையே ஆத்மாவாக மயங்குதலாகிய] மயக்கவுணர்வுள்ள புருஷனுக்கு இன்ப துன்ப மயக்கவடிவங்களால் அநுபவிக்கப்படும் குணங்களின்மேல் 'நான் இன்பமுடையவனாயிருக்கிறேன், துன்பமுடையவனாயிருக்கிறேன், மூடனாயிருக்கிறேன்' என இத்தகைய பற்று எதுவோ, அது நல்லன தீயனவான பிறவிகளில் பிறப்பைப் பெறுதலாகிய புருஷனது ஸம்ஸாரத்திற்குக் காரண

ध्याये यत् सूत्रं, तत् इह 'सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृतिसंभवाः' इति आरभ्य गुणस्वरूपं, गुणवृत्तं, स्ववृत्तेन च गुणानां बन्धकत्वं, गुणवृत्तनिबद्धस्य च पुरुषस्य या गतिः, इत्येतत् सर्वं मिथ्याज्ञानमूलं बन्धकारणं विस्तरेण उक्त्वा, अधुना सम्यग्दर्शनात् मोक्षो वक्तव्यः इति आह भगवान्—

௧௯. नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥

न अन्यं कार्यकरणविषयाकारेण परिणतेभ्यः गुणेभ्यः कर्तारम् अन्यं यदा द्रष्टा विद्वान् सन् अनुपश्यति, "गुणा एव सर्वावस्थाः सर्वकर्मणां कर्तारः" इत्येवं पश्यति, गुणेभ्यश्च परं गुणव्यापारसाक्षिभूतं वेत्ति, मद्भावं मम भावं वासुदेवत्वं वासुदेवः सर्वम्" इत्येवं पश्यन् सन् सः द्रष्टा अधिगच्छति ॥ ௧௯ ॥

कथं सः अधिगच्छति इति ? उच्यते—

௨௦. गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥

மாம்'' என முந்தின அத்தியாயத்துள் எது சுருக்கமாகக் கூறப்பட்டதோ, அதனை இங்கே "ஸத்துவம், ரஜஸ்'' (௧௪ - ௫) எனத்தொடங்கி, குணங்கள் இன்னவை என்பதும், குணங்களது செய்கையும், குணங்கள் தமது செய்கைகளால் கட்டுறுத்துவதும், குணங்களது செய்கையால் கட்டுண்ட புருஷனுக்கு யாது கதியோ (அதுவும்) ஆகிய இவையனைத்தையும், மயக்கஅறிவை வேராகவுடையவையாய்ப் பந்தத்திற்குக் காரணமானவற்றையும் விரித்துரைத்து, இப்பொழுது, மோக்ஷம் மெய்யறிவினால் (ஆவது என) உபதேசித்தற்பொருட்டு பகவான் அருளிச்செய்கிறார் :

௧௯. **காண்பவன் குணங்களைக்காட்டிலும் வேறானகர்த்தாவை எப்பொழுது காணவில்லையோ, மேலும், (ஆத்மாவை) குணங்கட்குப் புறம்பாக அறிகின்றானோ, (அப்பொழுது) அவன் என்நிலையைப் பெறுகிறான்.**

உடம்பு, இந்திரியங்கள், இந்திரியவிஷயங்கள் என்றவற்றின்வடிவமாய் மாறி நிற்கும் குணங்களைக்காட்டிலும் வேறான கர்த்தாவை, மெய்யறிவு கூடியவழி (எவன்) காணவில்லையோ, "எல்லாச் செய்கைகட்கும் எல்லாத்தன்மைகளுமுடைய [அந்தந்த உடம்புமுதலியவையாக மாறிநிற்கின்ற] குணங்களேதான் கர்த்தாக்கள்'' என இவ்வாறு காண்கின்றானோ, (ஆத்மாவை) குணங்கட்கும் அவற்றது செய்கைகட்கும் ஸாக்ஷியாக உணர்கின்றானோ, அவன் "எல்லாம் வாஸுதேவன்'' எனக் காண்பவனாய், என்நிலையை, வாஸுதேவனாயிருத்தலை அடைகின்றான். (அங்ஙனமவனுக்கு, தான் நிர்குண ப்ரஹ்மமென்பது வெளியாகின்றது.—ஆ.) (௧௯)

அவன் எவ்வாறு அடைகிறான் ? என்பது.—கூறுவோம் :

௨௦. **தேகியானவன் உடம்பிற்குக் காரணமான இந்த முக்குணங்களையும் கடந்து, பிறப்பு இறப்பு மூப்புத் துன்பங்களால் விடப்பெற்றவனாய் சாகாமையைப் பெறுகிறான்.**

𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌅𑌤𑍀𑌤𑍍𑌯 𑌜𑍀𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌮𑌾𑌯𑍋𑌪𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌦𑍇𑌹𑍀 𑌦𑍇𑌹𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌹𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌬𑍀𑌜𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑍈𑌃 𑌜𑌨𑍍𑌮 𑌚 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌜𑌰𑌾 𑌚 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌚 𑌜𑌨𑍍𑌮𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌜𑌰𑌾𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌿 𑌤𑍈𑌃 𑌜𑍀𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌅𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇, 𑌏𑌵𑌂 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௦ ॥

𑌜𑍀𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌅𑌤𑍀𑌤𑍍𑌯 𑌅𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇, 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌬𑍀𑌜𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑌭𑍍𑌯, 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

௨௧. 𑌕𑍈𑌰𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑍇𑌤𑌾𑌨𑌤𑍀𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌕𑌿𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 𑌕𑌥𑌂 𑌚𑍈𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌗𑍁𑌣𑌾𑌨𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

𑌕𑍈𑌃 𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌃 𑌚𑌿𑌹𑍍𑌨𑍈𑌃 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌨𑍍 𑌅𑌤𑍀𑌤𑌃 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑍋 𑌕𑌿𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 𑌕𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌆𑌚𑌾𑌰𑌃 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑌾𑌚𑌾𑌰𑌃 𑌕𑌥𑌂 𑌕𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍 𑌅𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௨௧ ॥

𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌤𑍍𑌵𑍋𑌪𑌾𑌯𑌂 𑌚 𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌨 𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌦𑍍𑌵𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 𑌯𑌤𑍍 𑌤𑌾𑌵𑌤𑍍 “𑌕𑍈𑌃 𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌃 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿” 𑌇𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌶𑍃𑌣𑍁—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௨௨. 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌮𑍋𑌹𑌮𑍇𑌵 𑌚 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵 ।
𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌨 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 ॥

ஞானியான தேகியானவன் மாயையாகிய உபாதிவடிவங்களாய் உடம்பு உண்டாதற்கு வித்துக்களான கீழ்க்கூறிய இந்த முக்குணங்களையும் உயிர்வாழும்பொழுதேயே கடந்து, பிறப்பிறப்புமூப்புத்துன்பங்களால் உயிர்வாழும்பொழுதேயே விடப்பட்டவனாய்ச் சாகாமையைப பெறுகிறான் : இவ்வாறாக என்னிலையை அடைகின்றான் என்றபடி. (௨௦)

விடுபட்டவனுடைய அடையாளங்கள்.

உயிரோடிருக்குமளவிலேயே குணங்களைக் கடந்து சாகாமையைப் பெறுகிறான் எனவே, வினவிற்கு இடம் வாய்க்கப்பெற்று அர்ஜுனன் கூறலாயினன் :

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

௨௧. பிரபுவே ! இந்த முக்குணங்களையும் கடந்திருப்பவன் என்ன அடையாளங்களுள்ளவனாகிறான் ? என்னஒழுக்கமுடையவன் ? மேலும், எவ்வாறு இந்தமுக்குணங்களையும் கடந்துவிடுகிறான் ?

குணங்களைக் கடந்தவனது அடையாளத்தையும், குணங்களைக்கடந்தவனாதற்கு வழியையும் இச்சுலோகத்தினுள் அர்ஜுனனால் கேட்கப்பட்ட பகவான் இரண்டு வினவிற்கும் மறுமொழி கூறலானார். முதலில், “குணங்களைக்கடந்தவன் என்ன அடையாளங்களுள்ளவனாயிருக்கிறான் ?” என்பது எதுவோ, அதனைக் கேட்பாயாக :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௨௨. பாண்டவ! விளக்கமென, முயற்சியென, மயக்கமென வந்தவற்றை(அவன்) வெறுப்பதில்லை ; போனவற்றை விரும்புவதில்லை.

ப்ரகாசம் ச ஸத்த்வகார்யம், ப்ரவ்ருத்திம் ச ரஜ:கார்யம், மோஹமேவ ச தம:கார்யம்; இத்யேதானி ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி ஸம்யக்விஷயபாவேன உத்பூதானி "மம தாமஸ: ப்ரத்யயோ ஜாத:, தேன அஹம் மூட:; ததா ராஜஸீ ப்ரவ்ருத்தி: மம உத்பந்நா து:காத்மிகா, தேன அஹம் ரஜஸா ப்ரவர்தித: ப்ரசலித: ஸ்வரூபாத்; கஷ்டம் மம வர்ததே ய: அயம் ஸ்வரூபாவஸ்தாநாத் ப்ரம்ச:; ததா ஸாத்த்விகோ குண: ப்ரகாசாத்மா மாம் விவேகித்வம் ஆபாதயந் ஸுகே ச ஸஞ்ஜயந் பத்நாதி" இதி தானி த்வேஷ்டி அஸம்யக்தர்சித்வேன। தத் ஏவம் குணாதீதோ ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி। யதா ச ஸாத்த்விகாதி: புருஷ: ஸத்த்வாதிகார்யாணி ஆத்மானம் ப்ரதி ப்ரகாச்ய நிவ்ருத்தானி காங்க்ஷதி, ந ததா குணாதீதோ நிவ்ருத்தானி காங்க்ஷதி இத்யர்த:। ஏதத் ந பரப்ரத்யக்ஷம் லிங்கம்। கிம் தர்ஹி?— ஸ்வாத்மப்ரத்யக்ஷத்வாத் ஆத்மார்தமேவ ஏதத் லக்ஷணம்। ந ஹி ஸ்வாத்மவிஷயம் த்வேஷம் காங்க்ஷாம் வா பர: பச்யதி ॥ ௨௨ ॥

அத இதானீம் "குணாதீத: கிமாசார:?" இதி ப்ரச்னஸ்ய ப்ரதிவசனமாஹ—

௨௩. உதாஸீனவதாஸீனோ குணைர்யோ ந விசால்யதே ।
குணா வர்தந்த இத்யேவ யோ(அ)வதிஷ்டதி நேங்கதே ॥

விளக்கமென்பது - ஸத்துவத்தின் கார்யம். முயற்சியென்பது - ரஜஸின் கார்யம். மயக்கமென்பது - தமஸின் கார்யம். (இவையெல்லாம் ஒரோர் தனித்தனிப்) பொருளாகச் செவ்வனே புலப்பட்டவழி இவற்றை வெறுப்பதில்லை. மெய்யுணர்வில்லாமையினாலன்றோ "எனக்குத் தாமஸமான எண்ணம் உண்டாகியுள்ளது, அதனால் நான் மயங்கியுள்ளேன்; அவ்வாறே, எனக்கு ராஜஸமான முயற்சி துன்பவடிவமாய் உண்டாகியுள்ளது, அந்த ரஜஸினால் நான் அசைக்கப்பெற்று தன்னிலையினின்றும் தவறியுள்ளேன்; தன்னிலையினின்றும் இந்தத்தவறுதல் எதுவோ, (அது) எனக்குத்தொல்லையாயிருக்கின்றது; அவ்வண்ணமே, பிரகாசவடிவமான ஸாத்விககுணமானது என்னைப் பகுத்தறிவுடையவனாகச் செய்வதோடு இன்பத்தையும் பற்றச்செய்வதாய்க் கட்டுறுத்துகின்றது" என (ஒருவன்) அவற்றை வெறுக்கிறான். ஆகவே, குணங்களைக் கடந்தவன் வந்தவற்றை இவ்வாறு வெறுப்பதில்லை. அன்றியும், ஸாத்விகன் [ஸத்துவகுணமுள்ளவன்] முதலான புருஷன், ஸத்துவகுணம்முதலியவற்றின் கார்யங்களாய் ஆத்மாவிற்குக் காட்டிமறைந்தவற்றை விரும்புமாறுபோல, குணங்களைக் கடந்தவன் போனவற்றை விரும்புவதில்லை என்பதுபொருள்.—இந்தஅடையாளம் பிறர்க்குத் தெரிவதன்று. மற்றென்னவெனின்,—தனக்குத தெரியுமாதலால் தனக்காகத்தான் இவ்வடையாளமென்க. தன்னைப்பற்றிய வெறுப்பையாயினும், விருப்பையாயினும் பிறனொருவன் தெரியமாட்டானன்றோ [ஒருவனிடத்துள்ள வெறுப்புவிருப்புக்களை வேறொருவன் உணரமுடியாதன்றோ]. (௨௨)

விடுபட்டவனுடைய வாழ்க்கையின் நடக்கை.

இனி இப்பொழுது "குணங்களைக்கடந்தவன் என்ன ஒழுக்கமுடையவன்?" என்னும்வினாவிற்கு மறுமொழி அருளிச்செய்கிறார்:

௨௩. எவன் உதாஸீனன்போல வீற்றிருப்பவனாய்க் குணங்களால் அசைக்கப்பெறுவதில்லையோ, எவன் "குணங்கள் செய்கின்றன" என்றே உறுதியாகநிற்கின்றானோ, அசைவதில்லையோ, (அவன் குணங்களைக் கடந்தவன்).

உதாஸீநவத் யதா உதாஸீந: ந கஸ்யசித் பக்ஷம் பஜதே, ததா அயம் குணாதீதத்வோபாயமார்கே அவஸ்தித: ஆஸீந: ஆத்மவித் குணை: ய: ஸம்ந்யாஸீ ந விசால்யதே விவேகதர்சநாவஸ்தாத: । ததேதத் ஸ்புடீகரோதி— குணா: கார்யகரணவிஷயாகாரேண பரிணதா: அந்யோந்யஸ்மிந் வர்தந்தே இதி ய: அவதிஷ்டதி—சந்தோபங்கபயாத் பரஸ்மைபதப்ரயோக:— 'யோ(அ)நுதிஷ்டதி' இதி வா பாடாந்தரம்—ந இங்கதே ந சலதி, ஸ்வரூபாவஸ்த ஏவ பவதி இத்யர்த: ॥ உ௩ ॥

கிஞ்ச—

உ௪. ஸமது:கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்மகாஞ்சந: ।
துல்யப்ரியாப்ரியோ தீர: துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: ॥

ஸமது:கஸுக: ஸமே து:கஸுகே யஸ்ய ஸ: ஸமது:கஸுக:, ஸ்வஸ்த: ஸ்வே ஆத்மநி ஸ்தித: ப்ரஸந்ந:, ஸமாநி லோஷ்டாச்மகாஞ்சநாநி யஸ்ய ஸ: ஸமலோஷ்டாச்மகாஞ்சந:, துல்யப்ரியாப்ரிய: ப்ரியம் ச அப்ரியம் ச துல்யே ஸமே யஸ்ய ஸ: அயம் துல்யப்ரியாப்ரிய:, தீர: தீமாந், துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: நிந்தா ச ஆத்மஸம்ஸ்துதிச்ச நிந்தாத்மஸம்ஸ்துதீ, துல்யே நிந்தாத்மஸம்ஸ்துதீ யஸ்ய யதே: ஸ: துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி: ॥ உ௪ ॥

உதாஸீநன் [உபேக்ஷயுள்ளவன்] என்பான் ஒருவனது பக்கத்தையும் சாராதவாறுபோல, ஆத்மாவை அறியும்துறவியான இவன், குணங்களைக் கடந்தவனாதற்கு ஸாதநமான வழியிலே [மெய்யுணர்விலே] நிலைத்து வீற்றிருப்பவனாய் விவேகப்பார்வையான நிலையினின்றும் குணங்களால் அசைக்கப்படுவதில்லை. அந்த இதனை விளக்குகிறார் :—உடம்பு, இந்திரியங்கள், இந்திரியவிஷயங்கள் என்றவற்றின் வடிவங்களாய் வேறுபட்டுநிற்கும் குணங்கள் (தம்முள்) ஒன்றிலொன்று தொழிற்படுகின்றன எனக் கொண்டு உறைத்துநிற்கிறான், அசைவதில்லை, தன்நிலையிலுள்ளவனாகவே இருக்கிறான் என்பது(தேர்ந்த)பொருள்.—'அவதிஷ்டதி' என்பதை - சுலோகம் இடர்ப்படுதலஞ்சி பரஸ்மைபதத்தில் வழங்கலாயிற்று.—''அநுஷ்டிக்கிறான்'' என்றும் வேறோர் பாடம். (இங்கே, அநுஷ்டாநமென்பது - மெய்யறிவினால் தள்ளுண்டுபோன போலிக்கர்மத்தை யெனக. உதாஸீந திருஷ்டாந்தமானது - ஆத்மாவை அறிபவன் ''ஆத்மா நிர்விகாரி'' என்னும்அறிவினால் தன்னைக் கர்மங்கட்குக் கர்த்தாவாகக் கொள்ளாது, தான் தொழிற்படுதலின்றி நிற்கும் தனிநிலையை விளக்குகின்றது.—ஆ.) (உ௩)

அன்றியும்,

உ௪. (இவன்) இன்பதுன்பங்களை ஸமமாகக்கொண்டவன் : தன்னிடத்து வாழ்பவன் : மண்ணாங்கட்டி, கல், தங்கம்இவற்றை ஸமமாகக்கொண்டவன் : வேண்டியதையும், வேண்டாததையும் ஸமமாகக்கொண்டவன் : ஞானமுள்ளவன் : இகழ்ச்சியையும் தற்புகழ்ச்சியையும் ஸமமாகக்கொண்டவன்.

இந்த யதியானவன் தன்னிடத்து வாழ்பவன், ஆத்மாவினிடத்து நிற்பவனாய்த் தெளிந்துள்ளவன் [தன்நிலையினின்றும் தவறாது அவிகாரியாயிருப்பவன்.—ஆ.] (உ௪)

கத²ம் "கத²ம் ச த்ரீந் கு³ணாந் அதிவர்ததே?" இத்யஸ்ய ப்ரஶ்நஸ்ய ப்ரதிவசநமாஹ—

௨௬. மாம் ச யோ(அ)வ்யபி⁴சாரேண ப⁴க்தியோகே³ந ஸேவதே ।
ஸ கு³ணாந் ஸமதீத்யைதாந் ப்³ரஹ்மபூ⁴யாய கல்பதே ॥

மாம் ச ஈஶ்வரம் நாராயணம் ஸர்வபூ⁴தஹ்ருத³யாஶ்ரிதம் யோ யதி: கர்மீ வா அவ்யபி⁴சாரேண ந கதா³சித் யோ வ்யபி⁴சரதி ப⁴க்தியோக³:— ப⁴ஜநம் ப⁴க்தி:, ஸைவ யோக³:— தேந விவேகவிஜ்ஞாநாத்மகேந ப⁴க்தியோகே³ந— ஸ ஹி ப⁴க்தியோக³: ஸமவதா⁴நாத்ஸம்ப்ரஸாதா³ஜ்ஜா ப⁴வதி— ஸேவதே, ஸ: கு³ணாந் ஸமதீத்ய ஏதாந் யதோ²க்தாந் ப்³ரஹ்மபூ⁴யாய, ப⁴வநம் பூ⁴ய:, ப்³ரஹ்மபூ⁴யாய ப்³ரஹ்மப⁴வநாய மோக்ஷாய கல்பதே ஸமர்தோ² ப⁴வதி இத்யர்த²: ॥ ௨௬ ॥

கத²ம் கல்பதே? உச்யதே—

௨௭. ப்³ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டா²ஹம் அம்ருதஸ்யாவ்யயஸ்ய ச ।
ஶாஶ்வதஸ்ய ச த⁴ர்மஸ்ய ஸுக²ஸ்யைகாந்திகஸ்ய ச ॥

இதி ஶ்ரீமஹாபா⁴ரதே ஶதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீ⁴ஷ்மபர்வணி ஶ்ரீமத்³ப⁴க³வத்³கீ³தாஸூபநிஷத்ஸு ப்³ரஹ்மவித்³யாயாம் யோக³-

---

இனி, "முக்குணங்களையும் எப்படிக் கடந்துவிடுகிறான்?" என்னும் இவ்வினவிற்கு மறுமொழி அருளிச்செய்கிறார்:

௨௬. ***மேலும், எவன் பிறழாதபக்தியோகத்தினால் என்னைத்தொழுகின்றானோ, அவன் இக்குணங்களைச் செவ்வனே கடந்து, ப்ரஹ்மமாயிருத்தற்குத் தக்கவனாகிறான்.***

எந்தத் துறவி[யதி]யானவன், அல்லதுகர்மியானவன் எல்லாப்பிராணிகளுடைய ஹிருதயத்தினுள் தங்கியுள்ள நாராயணனாகிய ஈச்வரனான என்னை, பிறழாத பக்தி யோகத்தினால், ஒருகாலும் தவறாத பக்தியென்னும் யோகத்தினால், பகுத்தறியும் உணர்வாகிய பக்தியோகத்தினால் தொழுகின்றானோ, அவன் கீழ்க்கூறிய இக்குணங்களை நன்றாகக் கடந்து, ப்ரஹ்மமாயிருத்தற்குத் தகுந்தவனாகிறான், மோக்ஷத்தை யடைய உரியவனாகிறான். அந்தப்பக்தியோகமானது பகவானது அநுக்கிரகமென்னும் அருளினாலன்றோ உண்டாவதாயுள்ளது. (பக்தியோகமென்பது - பரமப்பிரேமையாகிய பேரன்பு என்னும்யோகம். பக்தியோகத்தால் பகவானைத்'தொழுதலென்பது - வெளியே சித்தத்தைவிடாது, எப்பொழுதும் பகவானை இடைவிடாது தியானித்தல். பகவானுடைய அநுக்கிரகத்தால் மெய்யுணர்வு பிறக்கின்றது; பிறக்கவே, ஞானி உயிரோடிருக்கும் பொழுதேயே மோக்ஷத்தை அடைந்துவிடுகிறான்.—ஆ.) (௨௬)

ஆத்மா ஒன்றுதான்.

இது [ஞானி ப்ரஹ்மமேதான் என்பது] எதனால்? என்பது.—கூறுவோம்:

௨௭. ***ஏனெனில், யான் இறவாததாய் வேறுபாடில்லதாய் சாச்வதமான தருமமும் தவறாத இன்பமுமான ப்ரஹ்மத்திற்கு இருப்பிடம்.***

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸரருளிச்செய்த நூறாயிரக்கிரந்தஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்யை

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌗𑍁𑌣𑌤𑍍𑌰𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌅𑌹𑌮𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌅𑌹𑌮𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾 । 𑌕𑍀𑌦𑍃𑌶𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 ?— 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌅𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌃 𑌅𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌅𑌵𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌧𑌰𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌸𑍍𑌯 𑌆𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌐𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌸𑍍𑌯 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌿𑌣𑌃 𑌅𑌮𑍃𑌤𑌾𑌦𑌿𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾, 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌤𑌯𑌾 𑌨𑌿𑌶𑍍𑌚𑍀𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌯𑌯𑌾 𑌚 𑌈𑌶𑍍𑌵𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌸𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌅𑌹𑌮𑍍, 𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍋𑌃 𑌅𑌨𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌵𑌾𑌚𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 । 𑌤𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌃 𑌅𑌹𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌆𑌶𑍍𑌰𑌯𑌃 । 𑌕𑌿𑌂𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 ? — 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯

யாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுன ஸம்வாதத்திலே குணத்ரய விபாகயோகம் என்னும் பதினான்காம் அத்தியாயம் முற்றும்.

ஏனெனில், உள்ளேயுள்ள ஆத்மாவான நான் ப்ரஹ்மமான பரமாத்மாவிற்கு இருப்பிடம் [ப்ரஹ்மம் என்னைக்காட்டிலும் வேறன்று, நான் ப்ரஹ்மமான ஆத்மா தான் என்றபடி].—எத்தகைய ப்ரஹ்மத்திற்கு ? —அழிவுந்தன்மையில்லதாய், அவிகாரியாய், நித்யமான தருமமாய் (அதாவது) ஞானயோகமென்னும் தருமத்தால் அடையத்தக்கதாய், தவறுத இன்பவடிவமான (ப்ரஹ்மத்திற்கு). சாகாமைமுதலிய இயல்பானதாய்ப் பேராநந்தவடிவமான பரமாத்மாவிற்கு உள்ளேயுள்ள ஆத்மா இருப்பிடம் ; (ஆகவே, அது) பரமாத்மாவாக மெய்யறிவினுல் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆதலால், இந்த (உண்மைதான்) " ப்ரஹ்மமாயிருத்தற்குத் தக்கவனுகிறுன் " (கச - உசு) எனக் கூறப்பட்டது.

ப்ரஹ்மம் எந்த ஈச்வரசக்தியால் பக்தர்களை அநுக்கிரகித்தல் முதலியவற்றிற்காக அமைந்து தலைப்படுகின்றதோ, அந்தச் சக்தி ப்ரஹ்மமேயான நான்தான் ; ஏனெனில், சக்தியும் சக்தியையுடைய பொருளும் வேறல்ல [ஒன்றுதான்] ; என்பது கருத்து.

அல்லது, (இவ்வாறு கொள்ளினும், அமையும். ஸகுண ப்ரஹ்மமே) ப்ரஹ்மமென்னும் சொல்லால் சொல்லக்கூடியதாதலால், ப்ரஹ்மமென்பது - ஸவிகல்பமான [ஸகுண] ப்ரஹ்மமென்க. சொல்லமுடியாத நிர்விகல்பமான [நிர்க்குணமான] யான் அந்த ப்ரஹ்மத்திற்கு இருப்பிடம், தங்குமிடம்.—எப்படிப்பட்ட(அந்த ப்ரஹ்மத்

அபரிணாமஸ்ய அவ்யயஸ்ய ச அவ்யாஹதஸ்ய। கிஞ்ச— ஶாஶ்வதஸ்ய ச நித்யஸ்ய தர்மஸ்ய ஜ்ஞாநநிஷ்டாலக்ஷணஸ்ய ஸாத்வஸ்ய தஜ்ஜநிதஸ்ய ஐகாந்திகஸ்ய ஸுகா- நந்தஸ்ய ச, 'ப்ரதிஷ்டா அஹம்' இதி அநுவர்த்ததே ॥ ௨௭ ॥

இதி ஶ்ரீபகவத்கீதாபாஷ்யே சதுர்தஶோऽத்யாய: ॥

திற்கு) ? —சாகுந்தன்மையில்லதாய் விகாரமில்லாததற்கு. மேலும், ஞானநிஷ்டை என்னும் ஸநாதந தருமத்திற்கும், அதனினின்று பிறப்பதாய்த் தவறாது அமைகின்ற ஆநந்தத்திற்கும் " யான் இருப்பிடம் " எனத் தொடர்கின்றது. (உஎ)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

பஞ்சதஶோऽத்யாய: புருஷோத்தமயோக: ॥

யஸ்மாத் கர்மிணாம் ப்ராணிநாம் கர்மபலம், ஜ்ஞாநிநாம் ச ஜ்ஞாநபலம், அத: பக்தியோகேந மாம் யே ஸேவந்தே தே மம ப்ரஸாதாத் ஜ்ஞாநப்ராப்திக்ரமேண குணாதீதா: மோக்ஷம் கச்சந்தி। கிமு வக்தவ்யம் க்ருத்ஸ்ந: தத்த்வமேவ ஸாக்ஷாத் விஜாநந்த: இதி। அத: பகவாந் அர்ஜுநேந அப்ருஷ்டோऽபி க்ருத்ஸ்நம் தத்த்வம் விவக்ஷு: உவாச ‘ஊர்த்வமூலம்’ இத்யாதி ॥

தத்ர தாவத் வ்ருக்ஷரூபகல்பநயா வைராக்யஹேதோ: ஸம்ஸாரஸ்வரூபம் வர்ணயதி। விரக்தஸ்ய ஹி ஸம்ஸாராத் பகவத்தத்த்வஜ்ஞாநே அதிகார:, ந அந்யஸ்யேதி ॥

ஸ்ரீபகவாநுவாச ॥

௧. ஊர்த்வமூலமத:ஶாகமஶ்வத்தம் ப்ராஹுரவ்யயம் ।
சந்தாம்ஸி யஸ்ய பர்ணாநி யஸ்தம் வேத ஸ வேதவித் ॥

பதினைந்தாம் அத்தியாயம்: புருஷோத்தமயோகம்.

ஸம்ஸாரவிருக்ஷம்.

பிராணிகளது கர்மத்தின் பயனும், ஞானிகளது ஞானத்தின் பயனும் என்னைச் சார்ந்துநிற்பனவாதலால், எவர்கள் என்னைப் பக்தியோகத்தால் தொழுகிறார்களோ, அவர்கள் எனது அநுக்கிரகத்தினால் ஞானத்தையடைதல்வழியாகக் குணங்களைக் கடந்தவராய் மோக்ஷத்தைப் பெறுகிறார்கள். ஆத்மாவினுடைய உண்மையையே நேராக அறிகிறவர்களைப்பற்றிக் கூறவும்வேண்டுமோ? என்க. ஆகவே, பகவான், அர்ஜுனனால் வினவப்படாததாயினும் [அவன் கேட்காமலிருந்தாலும்] ஆத்மாவினது உண்மையை விவரிக்கக்கருதியவராய் “சந்தஸ்கள் எதற்கு” (கரு-க) என்பது முதலியவற்றை அருளிச்செய்யலானார் :

இனி முதலில், விருக்ஷமாக உருவகஞ்செய்து [ஞானமென்னும் கோடரியினால் வெட்டக்கூடியதாதலால், மரமாக ரூபகாலங்காரப்படுத்தி], வைராக்கியம் பிறக்கும்பொருட்டு ஸம்ஸாரம் இன்னதென்பதை விரித்துரைக்கிறார் ; ஏனெனில்,—பகவானுடைய உண்மையை அறிவதிலே - ஸம்ஸாரத்தினின்றும் ஆசைநீங்கியவனுக்கு அதிகாரமேயன்றி மற்றையோனுக்கு இல்லை என்று.

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

க. சந்தஸ்கள் எதற்கு இலைகளோ,(அந்த) அச்வத்தத்தை - மேலே வேரும், கீழே கிளைகளும்உடையதாக, அழிவற்றதாகக் கூறுகிறார்கள். எவன் அதனை அறிகிறானோ, அவன் வேதங்களை அறிபவன்.

ऊर्ध्वमूलं कालतः सूक्ष्मत्वात् कारणत्वात् नित्यत्वात् महत्त्वाच्च ऊर्ध्वम् उच्यते ऊर्ध्वमिति ब्रह्म अव्यक्तमायाशक्तिमत्, तत् मूलम् अस्येति सोऽयं संसारवृक्षः ऊर्ध्वमूलः। श्रुतेश्च — 'ऊर्ध्वमूलोऽवाक्शाख एषोऽश्वत्थः सनातनः' इति। पुराणे च —

"अव्यक्तमूलप्रभवस्तस्यैवानुग्रहोत्थितः।
बुद्धिस्कन्धमयश्चैव इन्द्रियान्तरकोटरः॥
महाभूतविशाखश्च विषयैः पत्रवांस्तथा।
धर्माधर्मसुपुष्पश्च सुखदुःखफलोदयः॥
आजीव्यः सर्वभूतानां ब्रह्मवृक्षः सनातनः।
एतद्ब्रह्मवनं चैव ब्रह्मवृक्षस्य तस्य तत्॥
एतच्छित्त्वा च भित्त्वा च ज्ञानेन परमासिना।
ततश्चात्मरतिं प्राप्य तस्मान्नावर्तते पुनः॥"

इत्यादि। तम् ऊर्ध्वमूलं संसारं मायामयं वृक्षम् आहुः। अधः महदहंकारतन्मात्रादयः शाखा इव अस्य अधः भवन्तीति सोऽयम् अधःशाखः, तम् अधःशाखम्। न श्वोऽपि स्थाता इति अश्वत्थः तं क्षणप्रध्वंसिनम् अश्व-

---

அவ்யக்தமென்னும் மாயாசக்தியுடைய ப்ரஹ்மமானது காலத்தால் நுண்ணியதும், காரணமும், நித்யமும், பெரிதும் [எங்குமுள்ளதும்] ஆதலால், "மேல்" எனக் கூறப்படுகின்றது. (கூடஸ்தமான [நிர்விகாரியான] ப்ரஹ்மம் காரணமாகாதாதலால், மாயாசக்தியுடைய ப்ரஹ்மமென்றார். அது நித்யப்பொருளாய், எல்லாக்காரியங்கட்கும் நியதமாய் முன்நிற்குங்காரணமாதலால், காலத்தால் நுண்ணியதென்க.—ஆ.) "மேலே வேரும், கீழே கிளைகளும்உடைய இந்த அச்வத்தம் என்றுமுள்ளது" (கட - ௩ - ௨ - க) என்னுஞ்சுருதியினாலுமென்க. புராணத்திலும், "ப்ரஹ்மவிருக்ஷமானது, ப்ரஹ்மந்தங்கியுள்ள விருக்ஷமானது அவ்யக்தமாகிய வேரைப் பிறப்பிடமாகப்பெற்றது: அதனது வலிமையினாலேயே ஓங்கிவளர்ந்துள்ளது: புத்தியாகிய அடிமரமாகவேஉள்ளது: இந்திரியத்துவாரங்களாகிய பொந்துகளையும், (நிலம், நீர் முதலிய) மஹாபூதங்களாகிய பலகொப்புக்களையும், விஷயங்களாகிய இலைகளையும் கிளைகளையும், நல்வினை தீவினைகளாகிய அழகிய புஷ்பங்களையும், இன்ப துன்பங்களாகிய பழமுண்டாதலையும் உடையது: எல்லாப்பிராணிகட்கும் பிழைப்பைத் தருவது: (ஞானத்தாலன்றி பிறவற்றால் வெட்டமுடியாததுஆதலால்)என்றுமுள்ளது இது ப்ரஹ்மத்திற்குத் தங்குமிடம். அது அந்த ப்ரஹ்மவிருக்ஷத்தின்(ஸாரம். ப்ரஹ்மத்திற்குப்புறம்பாக ஸம்ஸாரத்திற்கு நிலைப்பு இல்லை என்றபடி.—ஆ.). ஞானமாகிய வலிய கோடரியினால் இதனை வெட்டிப் பிளந்து,பின்பு, ஆத்மஆநந்தத்தைப் பெற்று அதனின்று மீண்டும் திரும்புவதில்லை" என்பதுமுதலியவற்றை(க் காண்க). மயக்கமயமான ஸம்ஸாரத்தை மேலே வேருடைய விருக்ஷமாகக் கூறுகிறார்கள். மஹத், அஹங்காரம், தந்மாத்திரங்கள் முதலியவை இதனது கிளைகள்போலக் கீழேஉள்ளன. அச்வத்தம் - நாளைக்குக்கூடநில்லாதது, கணப்பொழுதுள் அழியுந்தன்மையது; (ஆகவே,

𑌤𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 ; 𑌅𑌵𑍍𑌯𑌯𑌂—𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑌾𑌯𑌾𑌯𑌾𑌃 𑌅𑌨𑌾𑌦𑌿𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍋𑌽𑌯𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌃 𑌅𑌵𑍍𑌯𑌯𑌃 । 𑌅𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌹𑌿 𑌸𑌃 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 । 𑌤𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌇𑌦𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌮𑍍—𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌛𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑍀𑌵 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 । 𑌯𑌥𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌿 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌿, 𑌤𑌥𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌪𑌰𑌿𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌃, 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌤𑌦𑍍𑌧𑍇𑌤𑍁𑌫𑌲𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌸𑌮𑍂𑌲𑌂 𑌯𑌃 𑌤𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌃 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍, 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌨 𑌹𑌿 𑌸𑌮𑍂𑌲𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌣𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌪𑌿 𑌅𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌤𑍍 𑌇𑌤𑌿 𑌸𑌮𑍂𑌲𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 ॥

𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌅𑌪𑌰𑌾 𑌅𑌵𑌯𑌵𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

ஸம்ஸாரத்தை) அச்வத்தம் என்கிறார்கள். ஸம்ஸாரமாயை அநாதிகாலமாகத் தலைப்பட்டுள்ளமையால், அந்த இச்சம்சாரவிருக்ஷம் அழிவற்றதென்க. ஏனெனில், அது முதலும்முடிவும்இல்லாததாகிய உடம்புமுதலியவற்றின்தொடர்ச்சியைச் சார்ந்திருப்பதாக(யாவர்க்கும்)தெரிந்துளது. அதே ஸம்ஸாரவிருக்ஷத்திற்கு இது வேறோர் விசேஷணம் :—"சந்தஸ்கள் எதற்கு இலைகளோ" (என்பது). ரிக் யஜுஸ் ஸாமமென்னும்சந்தஸ்கள் மறைத்தலால், பாதுகாத்தலால் ஸம்ஸாரவிருக்ஷத்திற்கு இலைகள் போன்றுள்ளன. இலைகள் மரத்தைப் பாதுகாத்தற்காக இருக்குமாறுபோல,வேதங்கள் [கர்மகாண்டங்கள்] ஸம்ஸாரமரத்தைப் பாதுகாத்தற்காக உள்ளன ; நல்வினைகளையும், தீவினைகளையும், அவற்றின் காரணங்களையும், பயன்களையும் உணர்த்தும் பொருட்டுள்ளனவாதலின் என்க. (இலைகள் மரத்திலுள்ள குற்றத்தை மறைத்து, மரத்தைப் பாதுகாப்பதுபோல, கர்மகாண்டங்கள் ஸம்ஸாரத்திலுள்ள குற்றத்தை மறைத்து, ஸம்ஸாரத்தைப் பாதுகாக்கின்றன.—ஆ.) கீழ்உரைத்தபடி ஸம்ஸாரவிருக்ஷத்தை வேரோடு எவன் அறிகின்றானோ, அவன் வேதங்களை அறிந்தவன், வேதங்கள் உபதேசிக்கும் பொருளை அறிந்தவன் என்பது பொருள். நிச்சயமாக,இந்த ஸம்ஸாரவிருக்ஷத்தைக்காட்டிலும்,அதனது வேரைக்காட்டிலும் அறியவேண்டியபொருள் வேறு அணுவளவுங்கூட மிச்சமில்லை; ஆகவே, எல்லாவேதப்பொருளையும் அறிந்தவன், முற்றுமுணர்ந்தவன் என ஸம்ஸாரவிருக்ஷத்தை வேரோடு அறிதலைப் புகழ்கின்றார். (கங்கைநதிக்கரையிலே காற்றினால் வேர்ப்பிடுங்காகப் பிடுங்கித் தலைகீழாகச் சாய்க்கப்பெற்ற ஒருபெரிய அரசமரத்தை உபமானமாகக்கொண்டு இவ்வுருவகம் செய்யப்பட்டது.—ம. "அழகிய கையாகிய மலரினையும்,அடியாகிய தளிரினையும்,கண்ணாகிய வண்டினையும்...........உடையதாய் ஓர் கொடி உளது" என்றவிடத்து, பெண் என்று வெளிப்படையாகக் கூறாமல் கொடி என்றுமாத்திரம் கூறியிருப்பதுபோல, ஸம்ஸாரமென்றுகூறாமல் அச்வத்தம் என்றுமாத்திரம் கூறப்பட்டது.) (க)

அதே ஸம்ஸாரவிருக்ஷத்தின் உறுப்புக்கட்கு வேறுகற்பனை சொல்லப்படுகின்றது [அதனுடைய உறுப்புக்களை வேறுவகையாக வர்ணிக்கிறார்] :

उ. अधश्चोर्ध्वं प्रसृतास्तस्य शाखाः
गुणप्रवृद्धा विषयप्रवालाः ।
अधश्च मूलान्यनुसन्ततानि
कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥

अधः मनुष्यादिभ्यो यावत् स्थावरम्, ऊर्ध्वं च यावत् ब्रह्मणः विश्वसृजो धाम इत्येतदन्तं यथाकर्म यथाश्रुतं ज्ञानकर्मफलानि, तस्य वृक्षस्य शाखा इव शाखाः प्रसृताः प्रगताः, गुणप्रवृद्धाः गुणैः सत्त्वरजस्तमोभिः प्रवृद्धाः स्थूलीकृताः उपादानभूतैः, विषयप्रवालाः विषयाः शब्दादयः प्रवाला इव देहादिकर्मफलेभ्यः शाखाभ्यः अङ्कुरीभवन्तीव, तेन विषयप्रवालाः शाखाः । संसारवृक्षस्य परं मूलम् उपादानकारणं पूर्वम् उक्तम् । अध इदानीं कर्मजनितरागद्वेषादिवासनाः मूलानीव भूयोभूयःप्रवृत्तिकारणानि अर्वाग्भावीनि तानि अधश्च—देवाद्यपेक्षया—मूलानि अनुसन्ततानि अनुप्रविष्टानि कर्मानुबन्धीनि कर्म भूयोभूयोऽपेक्षणम् अनुबन्धः पश्चाद्भावी, येषाम् उद्भूतिम् अनु उद्भवति, तानि कर्मानुबन्धीनि मनुष्यलोके विशेषतः । अत्र हि मनुष्याणां कर्माधिकारः प्रसिद्धः ॥ उ ॥

உ. அதனுடைய கொப்புக்கள் கீழேயும் மேலேயும் பரவியுள்ளன: குணங்களால் ஓங்கிவளர்ந்திருக்கின்றன: விஷயங்களாகிய தளிர்களையுடையன. கீழேயும் மநுஷ்ய உலகிலே, வேர்கள் கர்மத்தை விளைப்பனவாய்த் தொடர்ச்சியாக விரிந்துள்ளன.

(கீழ் என்பது - மத்யமனான மனுஷ்யன் முதலாக அதமமான ஸ்தாவரம்வரையுள்ளது. மேல் என்பது - அந்தமத்யமனான மனுஷ்யன்முதலாக உத்தமனான ப்ரஹ்மாவரையுள்ளது.) மநுஷ்யன்முதல் ஸ்தாவரம்வரையிலும், (அந்தமனுஷ்யன் முதல்) பிரபஞ்சத்தைப் படைக்கும் ப்ரஹ்மாவின் இருப்பிடம் என்றஇதுவரையிலும் கர்மத்திற்குத் தக்கவாறு, ஞானத்திற்குத் தக்கவாறு கர்மத்தின்பயனாகவும் ஞானத்தின் பயனாகவும் (எந்தப் பிறவிகள் உள்ளனவோ, அவை) அந்தமரத்தின் கிளைகள்போல விரிந்துள்ளன; முதற்காரணமான ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களால் ஸ்தூலமாகி[பருத்து]உள்ளன. ஓசைமுதலிய விஷயங்கள் கர்மத்தின் பயனான உடம்புமுதலிய கிளைகளினின்றும் தளிர்கள்போல முளைக்கொள்ளுகின்றன போலும்; ஆகவே, விஷயங்கள் கிளைகளின் தளிர்களென்க.—ஸம்ஸாரவிருக்ஷத்திற்கு முதற்காரணமான ஆணிவேர் முன்னர்க் கூறப்பட்டது. இனி இப்பொழுது, கர்மத்தின்பயனலானவையாய் விருப்புவெறுப்புமுதலியவற்றைப்பற்றிய வாஸனைகள் நல்வினை தீவினைகளிற் செல்லுதற்குக் காரணமாய் இடையில்[பக்கத்தில்]வெடிக்கும் வேர்கள்போல(க் கூறப்படுகின்றன). தேவர்முதலானோர்களைநோக்கக் கீழேயுள்ள மநுஷ்யஉலகிலே, அந்தவேர்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து விரிந்துள்ளன, ஒன்றிலொன்று புகுந்துகிடக்கின்றன. நல்வினைதீவினையாகிய கர்மமானது எவை உண்டாதலை ஒட்டி நிகழ்கின்றதோ, அந்தவேர்கள் மநுஷ்யலோகத்திலே, மனிதசரீரத்திலே கர்மத்தைப் பின்பு விசேஷமாக விளைக்கின்றன; ஏனெனில், மநுஷ்யர்களுக்குக் கர்மத்திலே அதிகாரம் இங்கே அமைந்துள்ளது. (உ)

𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌂 𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍃𑌕𑍍𑌷𑌃—

௩. 𑌨 𑌰𑍂𑌪𑌮𑌸𑍍𑌯𑍇𑌹 𑌤𑌥𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇
𑌨𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨 𑌚𑌾𑌦𑌿𑌰𑍍𑌨 𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌮𑍇𑌨𑌂 𑌸𑍁𑌵𑌿𑌰𑍂𑌢𑌮𑍂𑌲𑌮𑍍
𑌅𑌸𑌙𑍍𑌗𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌦𑍃𑌢𑍇𑌨 𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 ॥

௪. 𑌤𑌤𑌃 𑌪𑌦𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑌵𑍍𑌯𑌂
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌗𑌤𑌾 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌯𑌃 ।
𑌤𑌮𑍇𑌵 𑌚𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇
𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑍀 ॥

𑌨 𑌰𑍂𑌪𑌮𑌸𑍍𑌯 𑌇𑌹 𑌯𑌥𑌾 𑌉𑌪𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌨𑍈𑌵 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌮𑌰𑍀𑌚𑍍𑌯𑍁𑌦𑌕𑌮𑌾𑌯𑌾𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌨𑌗𑌰𑌸𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ; 𑌦𑍃𑌷𑍍𑌟𑌨𑌷𑍍𑌟𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋 𑌹𑌿 𑌸𑌃 𑌇𑌤𑌿 । 𑌅𑌤 𑌏𑌵 𑌨 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌨 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌵𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌥𑌾 𑌨 𑌚 𑌆𑌦𑌿𑌃, "𑌇𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌅𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃" 𑌇𑌤𑌿 𑌨 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌚 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌮𑌧𑍍𑌯𑌮𑌸𑍍𑌯 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌮𑍇𑌨𑌂

மரத்தை வெட்டி மேலான கதியை நாடுக.

மற்று, (இங்கு) வர்ணிக்கப்பெற்ற இந்த ஸம்ஸாரவிருக்ஷம் எதுவோ,

௩. அதனுடைய உருவம் அவ்வாறு இங்குக் காணப்படவில்லை ; முடிவு(காணப்பட)வில்லை ; முதலும்(காணப்பட)வில்லை ; இருப்பு(க் காணப்பட)வில்லை. நன்கு வேரூன்றிய இந்த அச்வத்தத்தை, பற்றின்மையென்னும் திண்ணியகோடரியினால் வெட்டி,

௪. அதற்குமேலே,—எதனுள் சென்றவர்கள் மீண்டும் திரும்பிவருவதில்லையோ, அந்த நிலையைத் தேடவேண்டும். "(ஸம்ஸாரவிருக்ஷம்) தொன்றுதொட்டு தலைப்பட்டுவருதல் எவனிடத்தினின்றும் தோன்றிற்றோ, அந்தமுதல்வனை புருஷனையே அடைக்கலமாக அடைகின்றேன்" (என நாடவேண்டும்).

கீழே வருணித்தபடி இதனது உருவம் இங்கே புலப்படவேயில்லை ; கனவோடும், கானல்நீரோடும், இந்திரஜாலத்தாலான ஆகாசபட்டணத்தோடும் ஒப்பநிற்றலின். ஏனெனில், அது பார்க்கும்பொழுதேயே அழியுந்தன்மையதாம் என்க. ("ஸம்ஸாரவிருக்ஷமானது விருப்புமுதலியவற்றால் தலைப்பட்டு அநாதியாயிருப்பதனால் தானே அழியமாட்டாது ; அன்றியும், ஒருவராலும் வெட்டமுடியாதது" என்னும்சங்கை வர,—அவ்விருக்ஷமானது கீழேவருணித்தபடி பிரத்தியக்ஷமாகத் தெரியாவிட்டாலும் சாஸ்திரத்தால் அநுமானிக்கப்படுகின்றது எனவும், ஆகவே ஞானத்தால் வெட்டக்கூடியது எனவும் அருளிச்செய்தனர்.—ஆ.) ஆதலால், முடிவு இல்லை, எல்லை இல்லை. (மயக்கமும், வாஸனையும், கர்மமும் ஒன்றையொன்று கிளப்பிக்கொண்டிருத்தலால்,ஞானமில்லாது இவற்றிற்கு முடிவு இல்லை.—ஆ.) அவ்வாறே, "இதுமுதல் இது தலைப்பட்டது" என ஒருவராலும் முதலும் அறியப்படவில்லை. இன்னும், இதனுடைய இருப்பும், நிலைப்பும், நடுவும் ஒருவனாலும் அறியப்படவில்லை. நன்றாக

யதோக்தம் ஸுவிரூடமூலம் ஸுஷ்டு விரூடானி விரோஹம் கதானி மூலானி யஸ்ய தம் ஏனம் ஸுவிரூடமூலம் அஸங்கஶஸ்த்ரேண, அஸங்க: அஸங்கதா புத்ரவித்தலோகைஷணாப்ய: வ்யுத்தானம், தேன அஸங்கஶஸ்த்ரேண த்ருடேன பரமாத்மாபிமுக்யநிஶ்சயத்ருடீக்ருதேன புன: புன: விவேகாப்யாஸாஶ்மநிஶிதேன சித்த்வா ஸம்ஸாரவ்ருக்ஷம் ஸபீஜம் உத்த்ருத்ய ॥ ௩ ॥

தத: பஶ்சாத் யத் பதம் வைஷ்ணவம் தத் பரிமார்கிதவ்யம், பரிமார்கணம் அன்வேஷணம், ஜ்ஞாதவ்யம் இத்யர்த: । யஸ்மின் பதே கதா: ப்ரவிஷ்டா: ந நிவர்தந்தி ந ஆவர்தந்தே பூய: புன: ஸம்ஸாராய । கதம் பரிமார்கிதவ்யம் இதி? ஆஹ — தமேவ ச ய: பதஶப்தேன உக்த: ஆத்யம் ஆதௌ பவம் ஆத்யம் புருஷம் ப்ரபத்யே இதி ஏவம் பரிமார்கிதவ்யம், தச்சரணதயா இத்யர்த: । க: அஸௌ புருஷ: இதி? உச்யதே — யத: யஸ்மாத் புருஷாத் ஸம்ஸாரமாயாவ்ருக்ஷப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா நிஸ்ஸ்ருதா, ஐந்த்ரஜாலிகாதிவ மாயா, புராணீ சிரந்தனீ ॥

கதம்பூதா: தத் பதம் கச்சந்தி இதி? உச்யதே—

௫. நிர்மானமோஹா ஜிதஸங்கதோஷா:
அத்யாத்மநித்யா விநிவ்ருத்தகாமா: ।

வேரூன்றிய கீழ்க்கூறிய இந்த அச்வத்தமென்னும் ஸம்ஸாரவிருக்ஷத்தை - பரமாத்ம நோக்கஉறுதியினால் திண்மையாக்கப்பெற்றதாய், விவேகப்பயிற்சியென்னும் சாணைக் கல்லிலே அடிக்கடி தீட்டப்பட்டதாய், மக்கள் செல்வம் உலகவாழ்க்கை என்றஇவற்றின்மேல் ஆசையைத் துறத்தலாகிய பற்றின்மையென்னும் கோடரியினால் வேரோடுவெட்டிப்பிடுங்கித் (தொலைக்கவேண்டும். ஸம்ஸாரத்தின் வேர் மிக்க உறுதியானது; ஆகவே, வைராக்கியத்தைப் பயிற்சிசெய்தல் வழியாகத் துறவைச் சார்ந்து, அவ்வேரை அறுக்க மிகுந்த முயற்சி செய்யவேண்டும்.) (௩)

அதற்கு [ஸம்ஸாரவிருக்ஷத்திற்கு] மேலேயுள்ள எங்குமுள்ள பொருளின் நிலை எதுவோ, எந்தஇடத்தில் புகுந்தவர்கள் மீண்டும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதில்லையோ, அதனைத்தேடவேண்டும், அறியவேண்டும் என்பது பொருள்.—எவ்வாறு தேடவேண்டும்? என்பது.—கூறுகிறார்: நிலைஎன்னும்சொல்லால் கூறப்பெற்றவன் எவனோ, அந்த முதல்வனான புருஷனை அடைகின்றேன் என இவ்வாறு தேடவேண்டும், அவனையே தஞ்சமாகக்கொண்டு (அறியவேண்டும்) என்றபடி.—இப்புருஷன் யார்? என்பது.—கூறுவோம்: இந்திரஜாலக்காரனிடத்தினின்று (பொய்த்தோற்றங்கள் வெளிப்படுவது)போல, ஸம்ஸாரமாயாமரம் தலைப்படுதல் எந்தப்புருஷனிடத்தினின்று தொன்றுதொட்டு வெளிப்பட்டிருக்கின்றதோ, (அந்தப் புருஷன்.) (௪)

எங்குமுள்ள பொருளை அடையும்வழி.

எப்படிப்பட்டவர்கள் அந்நிலையை அடைகிறார்கள்? என்பது.—கூறுவோம்:

௫. செருக்கும் மயக்கமும் நீங்கியவராய், பற்றென்னும்தீங்கை வென்றவராய், ஆத்மாவினிடத்து எப்பொழுதும் வாழ்பவராய், முற்றும் ஆசையொழிந்தவராய், இன்

द्वन्द्वैर्विमुक्ताः सुखदुःखसंज्ञैः
गच्छन्त्यमूढाः पदमव्ययं तत् ॥

निर्मानमोहाः मानश्च मोहश्च मानमोहौ, तौ निर्गतौ येभ्यः ते निर्मानमोहाः मानमोहवर्जिताः । जितसङ्गदोषाः सङ्ग एव दोषः सङ्गदोषः जितः सङ्गदोषः यैः ते जितसङ्गदोषाः । अध्यात्मनित्याः परमात्मस्वरूपालोचननित्याः तत्पराः । विनिवृत्तकामाः विशेषतो निर्लेपेन निवृत्ताः कामाः येषां ते विनिवृत्तकामाः यतयः संन्यासिनः । द्वन्द्वैः प्रियाप्रियादिभिः विमुक्ताः सुखदुःखसंज्ञैः परित्यक्ताः गच्छन्ति अमूढाः मोहवर्जिताः पदम् अव्ययं तत् यथोक्तम् ॥

तदेव पदं पुनः विशेष्यते—

௬. न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥

तत् धाम इति व्यवहितेन धाम्ना सम्बध्यते—तत् धाम तेजोरूपं पदं न भासयते सूर्यः आदित्यः सर्वावभासनशक्तिमत्त्वेऽपि सति । तथा न शशाङ्कः चन्द्रः, न पावकः न अग्निः अपि । यत् धाम वैष्णवं पदं गत्वा प्राप्य न निवर्तन्ते, यच्च सूर्यादिः न भासयते तत् धाम परमं विष्णोः मम पदम् ॥ ௬ ॥

பதுன்பமென்னும்பெயருடைய த்வந்தங்களால் விடப்பெற்றவராய் மயங்காதவர்கள் அந்த அழிவிலா நிலையை அடைகிறார்கள்.

செருக்கு - (நான் என மதிக்கும் அஹங்காரமுனைப்பு). மயக்கம் - (அவிவேகம்). ஆத்மாவினிடத்து எப்பொழுதும் வாழ்பவர் - பரமாத்மாவின் ஸ்வரூபத்தை ஆலோசிப்பதிலே எப்பொழுதும் உள்ளவர், அதிலேயே கருத்துடையவர். முற்றும் ஆசையொழிந்தவர் - ஆசைமுழுதும் கசடற நீங்கியவர், யதிகள், துறவிகள். த்வந்தங்களால் - வேண்டியது வேண்டாதது முதலியவற்றால். மயங்காதவர்கள் - மயக்கமில்லாதவர்கள்[மெய்யறிவுகூடியவர்கள்—ஆ]. அந்த - கீழ்க்கூறிய. (௫)

அந்த நிலை எங்குமுள்ளபொருளின் ஸ்வரூபம்.

அதேநிலையை மீண்டும் சிறப்பித்துக் கூறுகிறார் :

௬. அதனை ஸூர்யன் பிரகாசிக்கச்செய்வதில்லை : சந்திரன் (பிரகாசிக்கச் செய்வது) இல்லை : தீ (பிரகாசிக்கச்செய்வது) இல்லை. எதனை அடைந்து திரும்பிவருவதில்லையோ, அது என்னுடைய மேலான இடம்.

தத் தாம என ஒதுங்கிநிற்கும் தாமவென்பதனோடு இயையும். ஸூர்யன் எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்ய வல்லமையுடையவனாயினும், ஒளிவடிவான அந்த இடத்தைப் பிரகாசிக்கச்செய்வதில்லை. அவ்வண்ணமே, சந்திரனும் தீயும் (அதனைப் பிரகாசிக்கச்செய்வதில்லை). எங்குமுள்ளபொருளினுடைய எந்நிலையை அடைந்து திரும்பிவருதலில்லையோ, மேலும் ஸூர்யன்முதலானோர்கள் எதனைப் பிரகாசிக்கச் செய்வதில்லையோ, அது - எங்குமுள்ள்பொருளான எனது மேலான இடம். (௬)

"யத் கத்வா ந நிவர்தந்தே" இத்யுக்தம். ஸர்வா ஹி கதி: ஆகத்யந்தா, ஸம்யோகா: விப்ரயோகாந்தா: இதி ப்ரஸித்தம். கதம் உச்யதே "தத் யாதாநாம் நாஸ்தி நிவ்ருத்தி:" இதி? ஶ்ருணு தத்ர காரணம்—

எ. மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: ।
மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி ॥

மமைவ பரமாத்மந: நாராயணஸ்ய, அம்ஶ: பாக: அவயவ: ஏகதேஶ: இதி அநர்தாந்தரம், ஜீவலோகே ஸம்ஸாரே ஜீவபூத: கர்தா போக்தா இதி ப்ரஸித்த: ஸநாதந: சிரந்தந:; யதா ஜலஸூர்யக: ஸூர்யாம்ஶ: ஜலநிமித்தாபாயே ஸூர்யமேவ கத்வா ந ததோ நிவர்ததே; யதா வா கடாத்யுபாதிபரிச்சிந்ந: கடாத்யாகாஶ: ஆகாஶாம்ஶ: ஸந் கடாதிநிமித்தாபாயே ஆகாஶம் ப்ராப்ய ந நிவர்ததே; இத்யேவம். அத: உபபந்நம் உக்தம் 'யத்கத்வா ந நிவர்தந்தே' இதி ॥

உபாதியினுல் ஜீவன் பரம்பொருளினுடைய அம்சம்போலும்.

"எதனை அடைந்து திரும்பிவருதலில்லையோ" (கு - சு) எனக் கூறப்பட்டது. ஆயின், போக்குஎன்பதெல்லாம் வரவை முடிவாகக்கொண்டதன்ருே; சேர்க்கைகள் பிரிவுகளை முடிவாகவுடையவை என்பது (யாவர்க்கும்) தெரிந்திருக்கின்றது. "அந்தஇடத்தைச் சென்றவர்கட்குத் திரும்பிவருதலில்லை" என எப்படிக் கூறப்படுகின்றது? —அதில் காரணத்தைக் கேட்பாயாக:

எ. என்னுடையதேயான அம்சமானது ஜீவர்களுடைய உலகில் ஜீவனுகி எப்பொழுதுமுள்ளது; மனத்தை ஆருவதாகக்கொண்டவையாய், பிரகிருதியில் தங்கிநிற்கும் இந்திரியங்களை இழுக்கின்றது.

அம்சம், பாகம், அவயவம் [உறுப்பு], ஏகதேசம் என்பன - வெவ்வேறு பொருளில்லாதவை [ஒரேபொருளுள்ளவை]. பரமாத்மாவான நாராயணனுகிய என்னுடையதேயான அம்சமானது ஸம்ஸாரத்திலே தொன்றுதொட்டுவரும் ஜீவனுகியுள்ளது, கர்த்தா[செய்பவன்] போக்தா[அநுபவிப்பவன்] என (உடம்புதோறும்) அமைந்துள்ளது. எப்படி நீரில் பிரதிபலித்த ஸூர்யனை ஸூர்யாம்சமானது, (உண்மை)ஸூர்யனுடைய அம்சமானது நீராகிய காரணம் போனவழி ஸூர்யனையே சென்று அவனிடத்தினின்றும் திரும்பிவருவதில்லையோ; அல்லது, எப்படி குடம்முதலியஉபாதிகளால் வரையறுக்கப்பட்டதான குடம்முதலியவற்றின் ஆகாசமானது ஆகாசத்தின் அம்சமாய் நின்று, குடம்முதலியகாரணம் போனவழி, ஆகாசத்தை அடைந்து திரும்பிவருவதில்லையோ; அப்படிப்போல. (1. நீரில் பிரதிபலிக்கும் ஸூர்யன்கள் விண்ணிலுள்ள ஸூர்யனது அம்சங்கள். நீரில்லாமற்போனவழி, அவை ஸூர்யனைச் சென்று அவனிடத்தினின்று மீண்டும் திரும்பிவருவதில்லை; அதாவது, அவை அந்தஸூர்யனுகவே இருக்கின்றன. 2. குடம்முதலியவற்றின் ஆகாசங்கள் மஹாகாசத்தின் அம்சங்கள். குடம்முதலியன உடைந்தவழி, அவை மஹாகாசத்தை அடைந்து அதனினின்று மீளவும் திரும்பிவருவதில்லை; அதாவது, அவை மஹாகாசமாகவே இருக்கின்றன. இவைபோல, ஜீவனுக்கும் உபாதியில்லாமற்போனவழி, அது - உபாதியற்ற தன்நிலையை, ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைந்து அதனினின்று மீண்டும் திரும்பிவருவதில்லை; அதாவது, அது ப்ரஹ்மமாகவே இருக்கின்றது.). ஆகவே, "எதனை அடைந்து திரும்பிவருதலில்லையோ" (கு - சு) எனக் கூறியது நேரென்க.

कथं निरवयवस्य परमात्मनः अंशः अवयवः एकदेशः अंशः इति ? सावयवत्वे च विनाशप्रसङ्गः अवयवविभागात् ॥

नैष दोषः, अविद्याकृतोपाधिपरिच्छिन्नः एकदेशः अंश इव कल्पितो यतः । दर्शितश्च अयमर्थः क्षेत्राध्याये विस्तरशः ॥

स च जीवो मदंशत्वेन कल्पितः कथं संसरति उत्क्रामति च इति ? उच्यते—मनःषष्ठानि इन्द्रियाणि श्रोत्रादीनि प्रकृतिस्थानि स्वस्थाने कर्णशष्कुल्यादौ प्रकृतौ स्थितानि कर्षति आकर्षति ॥ ७ ॥

कस्मिन् काले ? —

அ. शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाशयात् ॥

यच्चापि यदाऽपि उत्क्रामति शरीरात् देहादिसंघातस्वामी जीवः, तदा 'कर्षति' इति श्लोकस्य द्वितीयपादः अर्थवशात् प्रथमं सम्ब-

---

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், உறுப்புக்களில்லாத பரமாத்மாவிற்கு உறுப்பென்பது, ஏகதேசமென்பது, அம்சமென்பது ஏது? உறுப்புகளையுடையதாயின், உறுப்புக்கள் பிரிந்திடுவதனால் அழிவு வரவேண்டும்.

(ஸமாதானம்) :—இது குற்றமன்று (இந்த ஆக்ஷேபத்திற்கு இடமில்லை) ; ஏனெனில், அவித்யையினாலான உபாதியினால் வரையறுக்கப்பட்ட ஏகதேசமானது, அம்சம்போல (மனத்தால்) எண்ணிவைத்துக்கொள்ளப்படுகின்றது. (குடத்தால் வரையறுக்கப்பெற்ற ஏகதேசமான ஆகாசத்தை மஹாகாசத்தின் அம்சம்போல மனத்தாற் கற்பித்துக்கொள்ளுமாறுபோல என்க). அன்றியும், இவ்விஷயமானது க்ஷேத்ர (கங்-ஆம்) அத்தியாயத்தினுள் விரிவாகக்காட்டப்பட்டது (ஜீவன் உண்மையிலே பரம்பொருளினுடைய அம்சமில்லையென்றும், ஜீவன் உண்மையிலே ப்ரஹ்மம்தான் என்றும் காட்டப்பட்டன.—ஆ).

ஜீவன் உடம்பினுள் வாழும்விதமும், அதனை விட்டுப்போதும் வகையும்.

எனது அம்சமாகக் கற்பிக்கப்பட்ட அந்தஜீவன் எவ்வாறு (உலகத்து) வாழ்கிறான்? (அதனை) விட்டும் செல்கிறான்? என்பது. [ஜீவன் பரமாத்மாவாயின், அவனை ஸம்ஸாரி என்றலும், இவ்வுலகை விட்டுப்போகிறான் என்றலும் எப்படி?—ஆ.]—கூறுவோம்: மனத்தை ஆறுவதாகக்கொண்டவையாய், தமது இருப்பிடமான காதுத்துவாரம்முதலிய பிரகிருதியில் தங்கிநிற்கும் செவிமுதலிய இந்திரியங்களை சுற்றிலும் இழுக்கின்றது[ஜீவன் மனத்தோடுகூட இந்திரியங்களையும் கவர்ந்து செல்கிறான்].

எப்பொழுது (அவன் அவற்றைக் கவர்ந்திடுகிறான்)?

அ. **(உடம்புமுதலியவற்றை) ஆளுபவன் வெளியிற் செல்லும்பொழுது, (கவர்ந்திடுகிறான். அவன் வேறோர்) உடம்பைப்பெறும்பொழுது, காற்று நாற்றங்களை (அவற்றது) இருப்பிடத்தினின்றும் (எடுத்துக்கொண்டுபோவது)போல, இவற்றை எடுத்துக்கொண்டு போகிறான்.**

உடம்புமுதலியவற்றினுடைய சேர்க்கையின் சொந்தக்காரனான ஜீவன் எப்பொழுது வெளியிற்செல்கின்றானோ, அப்பொழுது (அவன் மனத்தையும், இந்திரியங்களையும்) "கவர்ந்திடுகிறான்" எனச் சுலோகத்தின் இரண்டாம் பாதத்தை அர்த்தத்

𑌯𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌦𑌾 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌾𑌤𑍍 𑌶𑌰𑍀𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 𑌅𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌏𑌤𑌾𑌨𑌿 𑌮𑌨𑌃𑌷𑌷𑍍𑌠𑌾𑌨𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌾𑌤𑌿 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌯𑌾𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 — 𑌕𑌿𑌮𑌿𑌵 𑌇𑌤𑌿? 𑌆𑌹 — 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌿𑌵 𑌆𑌶𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑍇𑌃 ॥ ௮ ॥

𑌕𑌾𑌨𑌿 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌾𑌨𑌿 𑌇𑌤𑌿? —

௯. 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚 𑌰𑌸𑌨𑌂 𑌘𑍍𑌰𑌾𑌣𑌮𑍇𑌵 𑌚 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌯𑌂 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌪𑌸𑍇𑌵𑌤𑍇 ॥

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌗𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 𑌰𑌸𑌨𑌂 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌘𑍍𑌰𑌾𑌣𑌮𑍇𑌵 𑌚, 𑌮𑌨𑌶𑍍𑌚 𑌷𑌷𑍍𑌠𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌮𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌣 𑌸𑌹, 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌦𑍇𑌹𑌸𑍍𑌥𑌃 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌨𑍍 𑌉𑌪𑌸𑍇𑌵𑌤𑍇 ॥ ௯ ॥

𑌏𑌵𑌂 𑌦𑍇𑌹𑌗𑌤𑌂 𑌦𑍇𑌹𑌾𑌤𑍍—

௰. 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌮𑍂𑌢𑌾 𑌨𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌃 ॥

𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌦𑍇𑌹𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌪𑌾𑌤𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌦𑍇𑌹𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑍀𑌂𑌶𑍍𑌚 𑌉𑌪𑌲𑌭𑌮𑌾𑌨𑌂 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌅𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 𑌅𑌨𑍁𑌗𑌤𑌂 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌏𑌵𑌂-

---

தின் வலிமையினுல் முதலில் ஒட்டுக. (அவன்) எப்பொழுது முந்தின சரீரத்தினின்றும் வேறுசரீரத்தை அடைகின்றனே, அப்பொழுது, மனத்தைஆருவதாகக்கொண்ட இந்திரியங்களைப் பற்றிக்கொண்டு செவ்வனே செல்கிருன்.—எதுபோல? என்பது.—கூறுகிறுர்: காற்று நாற்றங்களை (அவற்றது) இருப்பிடமான புஷ்பம்முதலியவற்றினின்றும் (கவர்ந்துசெல்வது)போல. (அ)

அங்ஙனம் அவை யாவை? என்பது—

௯. **இவன் செவி, கண், மெய், நாக்கு, மூக்கு என்பவற்றையும், மனத்தையும் சார்ந்து விஷயங்களை நுகர்கின்றுன்.**

உடம்பொடுநிற்பவன் ஆருவதான மனத்தை, தனித்தனியே (ஒவ்வொரு) இந்திரியத்தோடுங்கூட சார்ந்து ஓசைமுதலிய விஷயங்களை அநுபவிக்கின்றுன். (௯)

ஆத்மா ஞானகண்ணுக்குத்தான் புலப்படும்.

இவ்வாறு உடம்பிலுள்ளவனும், உடம்பினின்று

௰. **வெளியிற்செல்பவனும், (உடம்பினுள்) தங்கிநிற்பவனும், அநுபவிப்பவனும், குணங்களோடு கூடியவனுமான (இவனை), மயங்கியவர்கள் அறிவதில்லை. ஞானக்கண்ணுடையோர்கள் பார்க்கிருர்கள்.**

முன்எடுத்த உடம்பை விடுபவனையும், உடம்பினுள் வாழ்பவனையும், ஓசைமுதலியவிஷயங்களை நுகர்பவனையும், இன்பம் துன்பம் மயக்கம் என்னும்பெயர்களையுடைய குணங்களோடு அமைந்தவனையுமுள்ள (ஜீவனை அஜ்ஞானிகள் அறிவதில்லை). பார்வைக்கு விஷயமாதலை முற்றும் பெற்று இவ்வாறிருந்தாலும் [ஜீவன் எல்லாநிலைமைகளிலும் இவ்வாறு பார்க்கக்கூடியவனுய் மிகவும் ஸமீபத்திலிருந்தாலும்], இம்மை

भूतमपि एनम् अत्यन्तदर्शनगोचरप्राप्तं विमूढाः दृष्टादृष्टविषय-
भोगबलाकृष्टतया अनेकधा मूढाः न अनुपश्यन्ति — अहो !
कष्टं वर्तते इति अनुक्रोशति भगवान् — ये तु पुनः प्रमाणजनित-
ज्ञानचक्षुषः ते एनं पश्यन्ति ज्ञानचक्षुषः, विविक्तदृष्टयः इत्यर्थः॥

केचित्तु —

கக. यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥

यतन्तः प्रयत्नं कुर्वन्तः योगिनश्च समाहितचित्ताः एनं प्रकृतम् आत्मानं पश्यन्ति "अयम् अहम् अस्मि" इति उपलभन्ते आत्मनि स्वस्यां बुद्धौ अवस्थितम् । यतन्तोऽपि शास्त्रादिप्रमाणैः, अकृतात्मानः असंस्कृतात्मानः तपसा इन्द्रियजयेन च, दुश्चरितात् अनुपरताः, अशान्तदर्पाः, प्रयत्नं कुर्वन्तोऽपि न एनं पश्यन्ति अचेतसः अविवेकिनः॥

यच्च पदं सर्वस्य अवभासकमपि अग्न्यादित्यादिकं ज्योतिः न अवभासयते, यच्च प्राप्ताः मुमुक्षवः पुनः संसाराभिमुखाः न निवर्तन्ते, यस्य च पदस्य उपाधिभेदम् अनुविधीयमानाः जीवाः — घटाकाशा-

---

மறுமைகளிலேயுள்ள விஷயபோகத்தின் வன்மையினால் மனம் கவரப்பெற்றுப் பலவாறு மயங்கியுள்ளவர்கள் இவனை உணர்வதில்லை [இன்னானென்று அறிவதில்லை].— ஆ! (இஃதென்ன) கஷ்டமாயிருக்கின்றது! எனப் பகவான் இரங்குகிறார்.—ஆனால், ஞானக்கண் எவர்கட்கு பிரமாணத்தினால் உண்டாகியுள்ளதோ, அந்தஞானக்கண்ணுடையோர்கள், அதாவது பகுத்தறியும் பார்வையுள்ளவர்கள் இவனைப் பார்க்கிறார்கள் [இன்னானென்று அறிகிறார்கள்]. (கO)

யோகமில்லாது ஆத்மஅறிவு இல்லை.

(ஞானக்கண் என்பது - அறிவிற்குக் கருவியாய், யுக்திபொருந்திய சாஸ்திரம். ஆகவே, யுக்தியோடமைந்த அந்தக் கேவல சாஸ்திரத்தினால்மாத்திரம் ஆத்மாவைக் காணமுடியுமோ? எனின்—முடியாது என அருளிச்செய்கிறார்.—ஆ.) ஆனால், சில

கக. முயலும் யோகிகள் தம்மிடத்துள்ள இவனைக் காண்கிறார்கள். புத்தி திருந்தாத அவிவேகிகள் முயல்பவராயினும், இவனைக் காண்பதில்லை.

(சிரவண மநநமென்னும்) முயற்சியைச் செய்கின்றவராய்ச் சித்தம்ஒருநிலைப் பட்டவர்கள் பிரகிருதத்தில் பேசிவருகின்ற இவனை, தம் புத்தியிலுள்ள ஆத்மாவை "இதோ நானிருக்கின்றேன்" என உணர்வதில்லை. தவத்தாலும், இந்திரியவெற்றியாலும் மனந்திருந்தாதவராய், தீயொழுக்கத்தினின்றும் ஒழியாதவராய், செருக்கடங்காதவரான அவிவேகிகள் சாஸ்திரம் முதலிய பிரமாணங்களால் முயற்சிசெய்பவராயினும் இவனைக் காண்பதில்லை. (புத்தி சுத்தமாகாத அவிவேகிகட்கு சிரவணம்முதலியன இருந்தாலும், பயன்படா என்பதாம்.—ஆ.) (கக)

பகவான் - யாவற்றையும் விளங்கச்செய்கின்ற சைதந்யஒளி.

நெருப்பு, ஸூர்யன்முதலிய ஒளிகள் எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்வனவாயினும், எந்த நிலையைப் பிரகாசிக்கச்செய்வதில்லையோ; மேலும், எதனை அடைந்த முமுக்ஷுக்கள் [ஸம்ஸாரத்தினின்றும் விடுபட விரும்புவோர்கள்] மீண்டும் ஸம்ஸாரத்தை நோக்கித் திரும்புவதில்லையோ; அன்றியும், குடாகாசம்முதலியன மஹாகாசத்தினது (அம்சங்களாயிருப்பது) போல, பற்பல [அந்தந்த] உபாதிகட்குத் தக்க

दयः इव आकाशस्य—अंशाः, तस्य पदस्य सर्वात्मत्वं सर्वव्यवहारास्पदत्वं च विवक्षुः चतुर्भिः श्लोकैः विभूतिसंक्षेपमाह भगवान्—

१२. यदादित्यगतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥

यत् आदित्यगतम् आदित्याश्रयं—किं तत्?—तेजः दीप्तिः प्रकाशः जगत् भासयते प्रकाशयति अखिलं समस्तम्; यत् चन्द्रमसि शशभृति तेजः अवभासकं वर्तते, यच्च अग्नौ हुतवहे, तत् तेजः विद्धि विजानीहि मामकं मदीयं मम विष्णोः तत् ज्योतिः ॥

अथवा— यत् आदित्यगतं तेजः चैतन्यात्मकं ज्योतिः यत् चन्द्रमसि, यच्च अग्नौ वर्तते तत् तेजः विद्धि मामकं मदीयं विष्णोः तत् ज्योतिः ॥

ननु स्थावरेषु जङ्गमेषु च तत् समानं चैतन्यात्मकं ज्योतिः । तत्र कथम् इदं विशेषणम्—'यदादित्यगतम्' इत्यादि ?

नैष दोषः; सत्त्वाधिक्यात् आविस्तरत्वोपपत्तेः । आदित्यादिषु हि सत्त्वम् अत्यन्तप्रकाशम् अत्यन्तभास्वरम्; अतः तत्रैव आविस्तरं ज्योतिः इति तत् विशिष्यते, न तु तत्रैव तत् अधिकम् इति । यथा हि

வாறு அமைந்துள்ள ஜீவன்கள் எந்த நிலையினுடைய அம்சங்களாய் உள்ளனவோ; அந்த நிலையானது [ப்ரஹ்மமானது] எல்லாவற்றினுடைய ஆத்மா எனவும், எல்லாவிய வகாரங்கட்கும் அடிஆதாரம் எனவும் சொல்லக்கருதியவராய்ப் பகவான் விபூதியின் சுருக்கத்தை [தாம் எங்கும் வெளிப்பட்டுநிற்றலைச் சுருக்கமாய்] நான்கு சுலோகங் களால் அருளிச்செய்கிறார்:

௧௨. எந்த ஒளி ஸூர்யனைச் சார்ந்து நின்று, உலகையெல்லாம் பிரகாசிக்கச் செய்கின்றதோ; எது சந்திரனிடத்தும், எது தீயினிடத்தும் உள்ளதோ; அந்த ஒளியை என்னுடையதாகத் தெரிந்துகொள்.

எது ஸூர்யனைச் சார்ந்துள்ளதோ, அது யாது?—ஒளி, காந்தி, பிரகாசம். அல்லது, "ஒளி = அறிவுவடிவான ஜ்யோதிஸ்" (எனவும் கொள்ளலாம்).

(ஆக்ஷேபம்):—ஆயின், அறிவுவடிவான அவ்வொளி ஸ்தாவரங்களிலும், ஜங்கமங்களிலும் ஒருநிகராக உள்ளது. ஆகவே, "எது ஸூர்யனைச் சார்ந்துநின்று" என்பது முதலான இவ்விசேஷணம் (பொருந்துமாறு) எப்படி?

(ஸமாதாநம்):—இது குற்றமில்லை (இவ்வாக்ஷேபத்திற்கு இடமில்லை; ஸூர்யன்முதலியவற்றில்) ஸத்துவகுணம் மிகுதியாயிருத்தலால், (அறிவுவடிவான ஒளி அவற்றில்) நிரம்பப் புலப்படுதல் அமையுமாதலின் ஸூர்யன்முதலானவற்றிலன்றோ ஸத்துவகுணம் மிகத் துலக்கமாயுள்ளது, மிகப் பளபளப்பாயுள்ளது. ஆதலால், அவற்றில்தான் ஒளி நிரம்பப் புலப்படுகின்றது; எனவே, அது விசேஷித்துக்கூறப்படுகின்றது. மற்று, அது [ஒளி] அவற்றுள்தான் அதிகமாயுள்ளது என்று அன்று. உதா

𑌲𑍋𑌕𑍇, 𑌮𑍁𑌖𑌾𑌕𑌾𑌰𑍇 𑌸𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿, 𑌨 𑌕𑌾𑌷𑍍𑌠𑌕𑍁𑌡𑍍𑌯𑌾𑌦𑍌 𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿,
𑌆𑌦𑌰𑍍𑌶𑌾𑌦𑍌 𑌤𑍁 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑍇 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌤𑌰𑍇 𑌚 𑌤𑌾𑌰𑌤𑌮𑍍𑌯𑍇𑌨 𑌆𑌵𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿; 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 ‖ ௧௨ ‖

𑌕𑌿𑌞𑍍𑌚 —

௧௩. 𑌗𑌾𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍋𑌜𑌸𑌾 ।
𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌮𑌿 𑌚𑍌𑌷𑌧𑍀𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌸𑍋𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 ‖

𑌗𑌾𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌗𑌤𑍍 𑌅𑌹𑌮𑍋𑌜𑌸𑌾 𑌬𑌲𑍇𑌨; 𑌯𑌤𑍍 𑌬𑌲𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 𑌐𑌶𑍍𑌵𑌰𑌂 𑌜𑌗𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌰𑌣𑌾𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌂, 𑌯𑍇𑌨 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌗𑍁𑌰𑍍𑌵𑍀 𑌨 𑌅𑌧𑌃 𑌪𑌤𑌤𑌿, 𑌨 𑌵𑌿𑌦𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 𑌚 । 𑌤𑌥𑌾 𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑌃 — ‘𑌯𑍇𑌨 𑌦𑍍𑌯𑍌𑌰𑍁𑌗𑍍𑌰𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚 𑌦𑍃𑌢𑌾’ 𑌇𑌤𑌿, ‘𑌸 𑌦𑌾𑌧𑌾𑌰 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 । 𑌅𑌤𑌃 𑌗𑌾𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌚𑌰𑌾𑌚𑌰𑌾𑌣𑌿 𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑌿 । 𑌕𑌿𑌞𑍍𑌚 — 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌤𑌾𑌃 𑌓𑌷𑌧𑍀𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌯𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌮𑌿 𑌪𑍁𑌷𑍍𑌟𑌿𑌮𑌤𑍀𑌃 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁𑌮𑌤𑍀𑌶𑍍𑌚 𑌕𑌰𑍋𑌮𑌿 𑌸𑍋𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌸𑍋𑌮𑌃 𑌸𑌨𑍍 𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌰𑌸𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌰𑌸𑌾𑌨𑌾𑌮𑌾𑌕𑌰𑌃 𑌸𑍋𑌮𑌃 । 𑌸 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌰𑌸𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌓𑌷𑌧𑍀𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌰𑌸𑌾𑌨𑍍 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌯𑌨𑍍 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿 ‖ ௧௩ ‖

𑌕𑌿𑌞𑍍𑌚 —

ரணமாக, உலகத்திலே, முகவடிவம் ஒன்றுயிருந்தாலும், முகமானது மரம், சுவர் முதலியவற்றுள் தோன்றுவதில்லை; மற்று, துலக்கமாயும், அதிகத்துலக்கமாயுமுள்ள கண்ணுடிமுதலியவற்றுள் ஏற்றத்தாழ்ச்சியாக [அவற்றது சுத்தத்திற்குத் தக்கபடி] தோன்றுகின்றது. அதுபோல என்க. (௧௨)

பகவான் எல்லாவற்றையும் தாங்கிநிற்கிறர்.

மேலும்,

௧௩. யான் பூமியைப் புகுந்து வலிமையினுல் பொருள்களைத் தாங்குகிறேன்; அன்றியும், சுவைவடிவான சந்திரனுகி பயிர்களெல்லாவற்றையும் வளர்க்கின்றேன்.

யான் பூமியினுள் புகுந்து பிரபஞ்சத்தை வலிமையினுல் தாங்குகிறேன். அவ்வலிமை காமமும் விகாரமும் அற்றது, ஈசவ்வரனுடையது, பிரபஞ்சத்தைத் தாங்கும் பொருட்டுப் பூமியினுள் சென்றிருப்பது; பாரமான பூமியானது அதனுல் (மண்ணுங்கட்டிபோலக்) கீழேவிழுவதில்லை, (மணல்போல) உதிர்ந்திடுவதும் இல்லை. அவ்வண்ணமே, மந்திரவர்ணம் “விசாலமானவிண்ணும், மண்ணும் எதனுல் உறுதியாகத் தாங்கப்பட்டுள்ளனவோ” (தை - ஸம் - ச - க - அ) எனக்(கூறுகின்றது); “அவன் பூமியை உறுதியாகத் தாங்கினுன்” (தை - ஸம் - ச - க - அ) என்பது முதலானதும் (அதற்குஇணங்க உள்ளது). அன்றியும், சுவைவடிவினனும் ரஸத்தன்மையுள்ள சந்திரனுகி, பூமியில் முளைக்கும் நெல், கோதுமைமுதலிய பயிர்களையெல்லாம் வளமும் ருசியும் பொருந்தியவையாகச் செய்கிறேன். சந்திரன் சுவைகட்கெல்லாம் இருப்பிடம். எல்லாச்சுவைவடிவினனுன அவனன்றே எல்லாப்பயிர்களையும் தனது ரஸத்தைச் செலுத்தி வளர்க்கின்றுன். (௧௩)

பகவான் பிராணிகளுள் ஜீரணித்தும் அக்நியா யிருக்கிறர்.

அன்றியும்,

கச. அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாச்ரித: ।
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம் ॥

அஹமேவ வைச்வாநர: உதரஸ்த: அக்நி: பூத்வா— 'அயமக்நிர்வைச்வாநரோ யோऽயமந்த: புருஷே யேநேதமந்நம் பச்யதே' இத்யாதிச்ருதே:— வைச்வாநர: ஸந் ப்ராணிநாம் ப்ராணவதாம் தேஹம் ஆச்ரித: ப்ரவிஷ்ட: ப்ராணாபாநஸமாயுக்த: ப்ராணாபாநாப்யாம் ஸமாயுக்த: ஸம்யுக்த: பசாமி பக்திம் கரோமி அந்நம் அசநம் சதுர்விதம் போஜ்யம் பக்ஷ்யம் சோஷ்யம் லேஹ்யம் ச "போக்தா வைச்வாநர: அக்நி:, அக்நேர் போஜ்யம் அந்நம் ஸோம:, ததேதத் உபயம் அக்நீஷோமௌ ஸர்வம்" இதி பச்யத: அந்நதோஷலேப: ந பவதி ॥ கச ॥

கிஞ்ச—

கரு. ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச ।
வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத்வேதவிதேவ சாஹம் ॥

ஸர்வஸ்ய ச ப்ராணிஜாதஸ்ய அஹம் ஆத்மா ஸந் ஹ்ருதி புத்தௌ ஸம்-

கச. யான் வைச்வாநரனாகி, பிராணிகளுடைய உடம்பைச் சார்ந்து, பிராணன் அபானன் இவற்றோடு கூடி நால்வகையான உணவைச் செரிக்கின்றேன்.

வைச்வாநரன் - வயிற்றிலுள்ள தீ; "இந்த நெருப்பு வைச்வாநரன்; அந்த இது மனிதனுள்ளே இருக்கின்றது; அதனால் இவ்வுணவு செரிக்கப்படுகின்றது" (பி - ரு - ரு - க) என்பதுமுதலான சுருதியினா லென்க. சார்ந்து - புகுந்து. கூடி - (பிராணன் அபானன இவற்றால் கொளுத்தப்பெற்று—ஆ.) நால்வகை உண்டியாவன - (சோறுமுதலிய) உண்டலும், (கறிமுதலிய) தின்றலும், (நீர்முதலிய) பருகலும், (தேன்முதலிய) நக்கலுமாம். "உண்பவன் வைச்வாநரனென்னும் அக்நி; (இந்த அக்நியால் உண்ணப்படும் உணவு ஸோமன் [சந்திரன்]; அந்த இவ்விரண்டுமாகிய எல்லாம் அக்நி ஸோமர்கள்" எனப் பார்ப்பவனுக்கு உணவின் குற்றம் ஒட்டுவதில்லை. (போஜனகாலத்திலே "உண்பவனும் உண்ணப்படுவதுமாகிய உலகெல்லாம் அக்நி ஸோமர்கள்" என உண்பவனை வைச்வாநரனாகவும், உண்ணப்படுவதை ஸோமனாகவும் கொண்டு தியானிப்பவனாய் உண்பவனுக்கு, உணவினாலான கெடுதி இல்லை. என, இடையேநேர்ந்த இந்தத் தியானத்தைப் பயனைக் கூறி உணர்த்துகிறார்.—ஆ.) (கச)

பகவான் எல்லாருடைய ஹிருதயத்துள்ளும் வஸிக்கின்றார்.

மற்றும்,

கரு. யான் எல்லாருடைய ஹிருதயத்தினுள்ளும் தங்கியிருப்பவன்; நினைவும், அறிவும், (அவற்றின்) கேடும் என்னிடமிருந்து (வருகின்றன); எல்லாவேதங்களாலும் அறியவேண்டியவன் நானே; வேதாந்தத்தைச் செய்தவனும், வேதங்களை அறிந்தவனும் நானே.

நான் எல்லாப்பிராணிகளுடைய புத்தியினுள்ளும் ஆத்மாவாய்த் தங்கியுள்ளவன் [அவர்களது ஹிருதயத்திலே நல்லதாயிருப்பதையும், தீயதாயிருப்பதையும் ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருப்பவன்]. ஆகவே, நினைவும் அறிவும் அவற்றின்

ந்நிவிஷ்ட꞉ । அத꞉ மத்த꞉ ஸ்ம்ருதி꞉ ஸர்வப்ராணினாம் ஸ்ம்ருதி꞉ ஜ்ஞானம் ததபோஹனம் ச; யேஷாம் புண்யகர்மணாம் புண்யகர்மானுரோதேன ஜ்ஞானஸ்ம்ருதீ பவத꞉ ததா பாபகர்மணாம் பாபகர்மானுரூபேண ஸ்ம்ருதிஜ்ஞானயோ꞉ அபோஹனம் ச அபாயனம் ச । வேதைஶ்ச ஸர்வை꞉ அஹமேவ பரமாத்மா வேத்ய꞉ வேதிதவ்ய꞉ । வேதாந்தக்ருத் வேதாந்தார்தஸம்ப்ரதாயக்ருத் இத்யர்த꞉, வேதவித் வேதார்தவித் ஏவ ச அஹம் ॥ ௧௫ ॥

பகவத꞉ ஈஶ்வரஸ்ய நாராயணாக்யஸ்ய விபூதிஸங்க்ஷேப꞉ உக்த꞉ விஶிஷ்டோபாதிக்ருத꞉ 'யதாதித்யகதம் தேஜ꞉' இத்யாதினா । அத அனந்தரம் தஸ்யைவ க்ஷராக்ஷரோபாதிப்ரவிபக்ததயா நிருபாதிகஸ்ய கேவலஸ்ய தத்த்வநிர்திதாரயிஷயா உத்தரோ க்ரந்த꞉ ஆரப்யதே । தத்ர ஸர்வமேவ அதீதானாகதாத்யாயார்தஜாதம் த்ரிதா ராஶீக்ருத்ய ஆஹ—

௧௬. த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச ।
க்ஷர꞉ ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே ॥

கேடும் எல்லாப்பிராணிகட்கும் ஆத்மாவாகிய [கர்மங்களையெல்லாம் மேற்பார்த்து வருபவனும், பிரபஞ்சமாகிய யந்திரத்தின் ஸூத்ரதாரனுமான] என்னிடமிருந்து (வருகின்றன. நினைவு - சென்ற பிறவிகளில் அநுபவித்ததின் நினைவு. அறிவு - இடம், காலம், இயற்கை என்றவற்றால் தூரத்திலுள்ள பொருள்களை அறிதல். அவற்றின் கேடு - நினைவும், அறிவும் போய்விடுதல்.—ஆ.) நல்வினையுடைய அவர்களது நல்வினைக்குத் தக்கபடி அறிவும் நினைவும் உண்டாகின்றன; அவ்வாறே, தீவினையுடையவரது தீவினைக்குத் தக்கபடி நினைவும் அறிவும் போய்விடுதலாகின்றது. எல்லாவேதங்களாலும் அறியவேண்டியவன் பரமாத்மாவான நானே. வேதாந்தத்தைச் செய்தவனும், அதாவது, வேதாந்தவிஷய ஸம்பிரதாயத்தைச் செய்தவனும் [வேதாந்த உபதேசத்தை அமைத்துப் பரம்பரையாக வரச்செய்தவனும்], வேதப்பொருளை அறிந்தவனும் நானே. (௧௫)

பகவான் - அழியும் பிரபஞ்சத்திற்கும், அழியாப் பிரபஞ்சத்திற்கும் அப்பால் உள்ளவர்.

நாராயணனென்னும் திருநாமமுடைய ஈச்வரனான பகவானுக்குச் சிறந்த உபாதிகளால் [ஸூர்யன்முதலியவற்றால்.—ஆ.] ஆன பெருமையானது "எந்த ஒளி" (௧௫ - ௧௨) என்பதுமுதலியவற்றால் சுருக்கமாய்க் கூறப்பட்டது. இனி, இப்பொழுது, அதுவே அழிவதும் அழியாததுமான உபாதிகளைக்காட்டிலும் முற்றும் வேறுபட்டுள்ளமையால் நிருபாதிகமான (உபாதியில்லாத அத்) தனிப்பொருளின் உண்மையை இன்னதென்று நிச்சயிக்கவேண்டும் என்னும் கருத்தோடு பின்வரும் சுலோகங்கள் தொடங்கப்படுகின்றன. அங்ஙனம், சென்ற அத்தியாயங்களிலும் வரும் அத்தியாயங்களிலும் உணர்த்திய விஷயங்களெல்லாவற்றையுமே மூவகையாக ராசிப்படுத்தி [மூன்று வகுப்பாகப் பிரித்து] அருளிச்செய்கிறார் :

௧௬. க்ஷரம் [அழிவது] எனவும், அக்ஷரம் [அழியாதது] எனவும் உலகில் இவ்விரண்டு புருஷர்கள் இருக்கிறார்கள் ; க்ஷரமென்பது - எல்லாப்பொருள்களுமாம் ; கூடஸ்தம் - அக்ஷரம் எனப்படுகின்றது.

𑌦𑍍𑌵𑍌 𑌇𑌮𑍌 𑌪𑍃𑌥𑌗𑍍𑌰𑌾𑌶𑍀𑌕𑍃𑌤𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌇𑌤𑌿 𑌉𑌚𑍍𑌯𑍇𑌤𑍇 𑌲𑍋𑌕𑍇 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇—𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌰𑌤𑍀𑌤𑌿 𑌕𑍍𑌷𑌰𑌃 𑌵𑌿𑌨𑌾𑌶𑍀 𑌇𑌤𑌿 𑌏𑌕𑍋 𑌰𑌾𑌶𑌿𑌃; 𑌅𑌪𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌅𑌕𑍍𑌷𑌰𑌃 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌃, 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌮𑌾𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌃, 𑌕𑍍𑌷𑌰𑌾𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌬𑍀𑌜𑌮𑍍, 𑌅𑌨𑍇𑌕𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌜𑌨𑍍𑌤𑍁𑌕𑌾𑌮𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑍌 𑌤𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌇𑌤𑌿? 𑌆𑌹 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍—𑌕𑍍𑌷𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿, 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌵𑌿𑌕𑌾𑌰𑌜𑌾𑌤𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌃 𑌕𑍂𑌟𑌃 𑌰𑌾𑌶𑌿𑌃 𑌰𑌾𑌶𑌿𑌰𑌿𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 । 𑌅𑌥𑌵𑌾—𑌕𑍂𑌟𑌃 𑌮𑌾𑌯𑌾 𑌵𑌞𑍍𑌚𑌨𑌾 𑌜𑌿𑌹𑍍𑌮𑌤𑌾 𑌕𑍁𑌟𑌿𑌲𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌃, 𑌅𑌨𑍇𑌕𑌮𑌾𑌯𑌾𑌵𑌞𑍍𑌚𑌨𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌬𑍀𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨 𑌕𑍍𑌷𑌰𑌤𑌿 𑌇𑌤𑌿 𑌅𑌕𑍍𑌷𑌰𑌃 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௬ ॥

𑌆𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌰𑍋𑌪𑌾𑌧𑌿𑌦𑍍𑌵𑌯𑌦𑍋𑌷𑍇𑌣 𑌅𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌬𑍁𑌦𑍍𑌧𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃—

௧௭. 𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌉𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍁 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌆𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌇𑌤𑌿—𑌪𑌰𑌮𑌶𑍍𑌚 𑌅𑌸𑍌 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍍𑌯𑌃, 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵-

---

இருவகுப்பாகத் தனித்தனி பிரிக்கப்பட்டுள்ள இவ்விரண்டு(பொருள்களும்) ஸம்ஸாரத்தில் "புருஷர்கள்" எனப்படுகின்றன. (இவை புருஷனை சைதந்யத்திற்கு உபாதிகளாதலால், "புருஷர்கள்" எனக் கூறப்படுகின்றன.—ஆ.) அழிவதென்பது ஓர்வகுப்பு; மற்றொன்று அழியாதது: அதற்கு [முந்தினதற்கு] மாறானது: (அதாவது) பகவானுடைய மாயாசக்தி: க்ஷரமென்னும்பெயருடைய புருஷன் உண்டாதற்கு வித்து: பிறந்திறந்துஉழலும் பல பிராணிகளுடைய ஆசை கர்மம் முதலியவற்றின் வாஸனைகட்குத் தங்குமிடம்: அக்ஷரமான புருஷன் எனப்படுகின்றது.—அவ்விருபுருஷர்களும் யார்? என்பது.—பகவான் தாமே அருளிச்செய்கிறார்: க்ஷரமென்பது - எல்லாப்பொருளுந்தான், விகாரக்கூட்டமான ஸகலமுந்தான் என்றபடி. குவியல்போல உள்ளது - கூடம். அல்லது, கூடம், மாயை, வஞ்சனை, கோணல், வக்கிரம் என்பன - ஒருபொருளுள்ள சொற்கள். கூடஸ்தம் - மாயை, வஞ்சனைமுதலாகப் பலவிதமாயுள்ளது. ஸம்ஸாரவிதைக்கு முடிவில்லையாததால் [அவ்விதை ப்ரஹ்மஞானத்தாலன்றி அழியாதாதலால்.—ஆ.], (மாயாசக்திவடிவமான காரணோபாதியானது) அழியாதது எனப்படுகின்றது. (௧௬)

வேறொருவன் இந்த க்ஷர அக்ஷரங்களினும் வேறானவனாய், க்ஷரம் அக்ஷரம் என்னும் இருஉபாதிகளுடைய தீங்கினால் கலக்கப்படாதவனாய், இயல்பாகவே நித்யனாய் சுத்தனாய் புத்தனாய் முக்தனாய் (இருக்கிறான் என அருளிச்செய்கிறார்):

௧௭. மற்று, எந்த நிர்விகாரியான ஈச்வரன் மூவுலகையும் புகுந்து தாங்குகின்றானோ, (அந்த) வேறொருவன் "மேலான புருஷன்" "பரமாத்மா" எனக் கூறப்படுகிறான்.

ஆனால், (எல்லாவற்றினும்) மேம்பட்ட புருஷன் இவற்றைக்காட்டிலும் முற்றும் வேறானவன், பரமாத்மா. இவன் அவித்யையினாலான [அஜ்ஞானத்தால் கற்பிக்கப்பட்ட] உடம்புமுதலிய ஆத்மாக்களைக்காட்டிலும் மேலானவன்; ஆத்மா, எல்லாப்

பூதாநாம் ப்ரத்யக்சேதந:, இத்யத: பரமாத்மா இதி — உதாஹ்ருத: உக்த: வேதா-ந்தேஷு | ஸ ஏவ விசிஷ்யதே — ய: லோகத்ரயம் பூர்புவஸ்ஸ்வராக்யம் ஸ்வகீ-யயா சைதந்யபலசக்த்யா ஆவிச்ய ப்ரவிச்ய பிபர்தி ஸ்வரூபஸத்பாவ-மாத்ரேண பிபர்தி தாரயதி அவ்யய: ந அஸ்ய வ்யய: வித்யதே இதி அவ்யய: — க:? — ஈச்வர: ஸர்வஜ்ஞ: நாராயணாக்ய: ஈசநசீல: ॥ ௧௭ ॥

யதாவ்யாக்யாதஸ்ய ஈச்வரஸ்ய "புருஷோத்தம:" இத்யேதத் நாம ப்ரஸித்தம் | தஸ்ய நாமநிர்வசநப்ரஸித்த்யா அர்தவத்த்வம் நாம்நோ தர்சயந் "நிரதி-சய: அஹம் ஈச்வர:" இதி ஆத்மாநம் தர்சயதி பகவாந் —

௧௮. யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: |
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥

யஸ்மாத் க்ஷரம் அதீத: அஹம் ஸம்ஸாரமாயாவ்ருக்ஷம் அச்வத்தாக்யம், அக்ஷ-ராதபி ஸம்ஸாரமாயாவ்ருக்ஷபீஜபூதாதபி ச உத்தம: உத்க்ருஷ்டதம: ஊர்த்வ-தமோ வா, அத: தாப்யாம் க்ஷராக்ஷராப்யாம் உத்தமத்வாத் அஸ்மி லோகே வேதே ச ப்ரதித: ப்ரக்யாத: புருஷோத்தம: இதி ஏவம் மாம் பக்தஜநா: விது: | கவய: காவ்யாதிஷு ச இதம் நாம நிபத்நந்தி ॥ ௧௮ ॥

பிராணிகட்கும் உள்ளேயுள்ள அறிவுப்பொருள்; ஆகவே, வேதாந்தங்களில் [உப நிஷத்துக்களில்] "பரமாத்மா" எனக் கூறப்படுகிறான். அவனையே சிறப்பித்துக் கூறுகிறார்: அவன் பூர்லோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம் என்னும் பெயருடைய மூவுலகையும் [பிரபஞ்சமனைத்தையும்] சைதந்யவலிமையிலுள்ள சக்தியினால், தனது மாயையினால், புகுந்து ஸ்வரூபத்தினுடைய கேவல இருப்பினால் [தன்னுடைய வெறும் இருப்பினால்] தாங்குகிறான். இவன் விகாரமில்லாதவன்.—யார்? —ஈச்வரன், முற்று முணர்ந்தவன், நாராயணனென்னும் திருநாமமுடையவன், ஆளுந்தன்மையன். (௧௭)

கீழ் விரித்துரைக்கப்பட்ட ஈச்வரனுக்கு "புருஷோத்தமன்" என்னும் இப் பெயர் பிரஸித்தமாயுள்ளது. அவனுடைய பெயரின் சொல்லிலக்கணமும் அர்த்தமும் (யாவர்க்கும்) தெரிந்துள்ளதனால், (அப்) பெயர் அர்த்தமுள்ளது எனக்காட்டிப், பகவான் "யான் (யாவற்றினும்) மேலான ஈச்வரன்" எனத் தன்னை உணர்த்துகிறார்:

௧௮. யான் க்ஷரத்தைக் கடந்தவன்; அன்றியும், அக்ஷரத்திலும் மேலானவன்; ஆகவே, உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமனாகப் பிரஸித்தனாயுள்ளேன்.

நான் அச்வத்தமென்னும் பெயருடைய ஸம்ஸாரமாயாமரத்தைக் கடந்துள்ளவன்; அன்றியும், ஸம்ஸாரமாயாமரத்தின் வித்தாயுள்ள அக்ஷரத்தைக்காட்டிலும் மேலானவன்; அல்லது, (அதற்கு) மேலேயுள்ளவன். ஆதலால், (நான் உத்தமனான புருஷனென்க). அந்த க்ஷர அக்ஷரங்களினும் உயர்ந்தவனாதலால், உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமன் என்று பிரஸித்தனாயிருக்கின்றேன். பக்தஜனங்கள் என்னை இவ்வாறு அறிகிறார்கள். மற்றும், கவிகளும் காவ்யம்முதலியவற்றுள் இப்பெயரை அமைக்கிறார்கள். (௧௮)

अथ इदानीं यथोदितपुरुषोत्तमज्ञानं यो वेद, तस्य इदं फलम् उच्यते —

१९. यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्वविद्भजति मां सर्वभावेन भारत ॥

यो मां यथोक्तविशेषणं यथोक्तेन प्रकारेण असंमूढः संमोहरहितः सन् जानाति 'अयम् अहम् अस्मि' इति पुरुषोत्तमम्, सः सर्ववित् — सर्वं वेत्ति — भजति मां सर्वभावेन सर्वप्रकारविहिततया मे भारत ॥ १९ ॥

अस्मिन् अध्याये भगवत्तत्त्वज्ञानं मोक्षफलम् उक्त्वा, अथ इदानीं तत् स्तौति —

२०. इति गुह्यतमं शास्त्रमिदमुक्तं मयानघ ।
एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत ॥

इति श्रीमहाभारते शतसाहस्र्यां संहितायां वैयासिक्यां भीष्मपर्वणि श्रीमद्भगवद्गीतासु उपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे पुरुषोत्तमयोगो नाम पञ्चदशोऽध्यायः ॥

ஆத்ம அறிவின் பெருமை.

இனி இப்பொழுது, கீழே விரித்துரைக்கப்பட்ட ஆத்மாவை எவன் அறிகின்றானோ, அவனுக்கு இப்பயன் கூறப்படுகின்றது :

௧௯. எவன் புருஷோத்தமனான என்னை, மயங்காதவனாய் இவ்வாறு அறிகின்றானோ, அவன், பாரத ! எல்லாவற்றையும் அறிந்தவனாய் முழுமனத்தோடு என்னைத் தொழுகிறான்.

எவன் கீழ்க்கூறிய விசேஷணங்களையுடைய ஈச்வரனாகிய புருஷோத்தமனான என்னை, மயக்கமில்லாதவனாய் "யான் இதோ இருக்கின்றேன்" எனக் கீழ்க்கூறியவாறு அறிகின்றானோ, அவன் முற்றும் உணர்ந்தவனாகி, ஸகலத்திற்கும் ஆத்மாவான (என்னிடத்துப் பதிந்த) மனத்தோடு என்னைத் தொழுகிறான். (௧௯)

இவ்வத்தியாயத்தினுள், "பகவானது உண்மையைப்பற்றிய அறிவிற்கு மோக்ஷம் பயன்" எனக் கூறிப், பின்பு, இங்ஙனம் அதனைப் புகழ்கின்றார் :

௨௦. பாவமற்றோனே ! மிக ரஹஸ்யமான இந்த சாஸ்திரம் என்னால் இவ்வாறு கூறப்பட்டது. பாரத ! (ஒருவன்) இதனை அறிந்து அறிவுள்ளவனாகவும், செய்யவேண்டியதைச் செய்தவனாகவும் ஆவன்.

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸரருளிச்செய்த நூறாயிரக்கிரந்தஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே புருஷோத்தமயோகம் என்னும் பதினைந்தாம் அத்தியாயம் முற்றும்.

𑌇𑌤𑌿 𑌏𑌤𑌤𑍍 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌗𑍋𑌪𑍍𑌯𑌤𑌮𑌮𑍍, 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍— 𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍?— 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌗𑍀𑌤𑌾𑌖𑍍𑌯𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 ‘𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍’ 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇; 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌅𑌯𑌮𑍇𑌵 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌇𑌹 ‘𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌤𑍍। 𑌸𑌰𑍍𑌵𑍋 𑌹𑌿 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌸𑌮𑌾𑌸𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌃। 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥 𑌏𑌵, 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌶𑍍𑌚 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌇𑌹 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃। ‘𑌯𑌸𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦 𑌸 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍’ ‘𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃’ 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍। 𑌇𑌦𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌮𑌯𑌾 𑌹𑍇 𑌅𑌨𑌘 𑌅𑌪𑌾𑌪। 𑌏𑌤𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑌥𑌾𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍— 𑌨 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾— 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌶𑍍𑌚 𑌭𑌾𑌰𑌤— 𑌕𑍃𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌃 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌃; 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌜𑌨𑍍𑌮𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑍇𑌨 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌨 𑌯𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑍇 𑌕𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃; 𑌨 𑌚 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃। ‘𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌖𑌿𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌯𑌤𑍇’ 𑌇𑌤𑌿 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍।

‘𑌏𑌤𑌦𑍍𑌧𑌿 𑌜𑌨𑍍𑌮𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌤𑌤𑍍𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑍋 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾॥’ 𑌇𑌤𑌿 𑌚 𑌮𑌾𑌨𑌵𑌂 𑌵𑌚𑌨𑌮𑍍॥

𑌯𑌤𑌃 𑌏𑌤𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑌸𑌿 𑌅𑌤𑌃 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌃 𑌤𑍍𑌵𑌂 𑌭𑌾𑌰𑌤! 𑌇𑌤𑌿 ॥ ௨௦ ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌶𑌙𑍍𑌕𑌰𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

இது மிகவும் ரஹஸ்யமானது.—அது யாது ?— சாஸ்திரம். கீதையென்னும் பெயருடைய (நூல்)முழுதும் "சாஸ்திரம்" எனப்படுவதாயினும், இதே அத்தியாயத்தைப் புகழும்பொருட்டு இங்கு "சாஸ்திரம்" எனக் கூறுகிறார் ; பிரகிருதவிஷயத்தினால் (இவ்வாறு கொள்க). கீதாசாஸ்திரவிஷயமனைத்துமன்றோ இவ்வத்தியாயத்தினுள் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கேவலம் கீதாசாஸ்திரவிஷயம்மாத்திரம் அன்று ; மற்று, எல்லாவேதப்பொருளும் இங்கு முடிந்துள்ளது. "எவன் அதனை அறிகின்றானோ, அவன் வேதப்பொருளை அறிந்தவன்" (௧௫ - ௧), "எல்லாவேதங்களாலும் அறியவேண்டியவன் நானே"(௧௫ - ௧௫)என்றும் கூறப்பட்டுளது. (ஒருவன்) கீழ்உணர்த்தப்பெற்ற விஷயங்களுடைய இச்சாஸ்திரத்தை உணர்ந்து அறிவுள்ளவனாவன் ; வேறுவிதமாக (அப்படி) ஆகமாட்டான். செய்யவேண்டியதைச் செய்தவனாகவும் ஆவன் ; உயர்ந்த பிறவியில் பிறந்த பிராமணனால் செய்யவேண்டியது எதுவோ, அஃதெல்லாம் பகவானுடைய உண்மையை அறிந்தவளவிலே செய்யப்பட்டதாகும் என்றபடி. ஒருவனால் செய்யவேண்டியது வேறுவிதமாக முடிவுபெறாது என்பது கருத்து. "(ஒன்றுகூட) மிச்சமில்லாத எல்லாக்கர்மமும், பார்த்த ! ஞானத்தினுள் முடிந்துளது" (௪ - ௩௩) என்றும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது. அன்றியும், "இதுதான் ஜன்மத்தை நிறைவேற்றுதல், விசேஷமாகப் பிராமணனுக்கு ; ஏனெனில், த்விஜன் [இருபிறப்பாளன்] இதனை அடைந்து செய்யவேண்டியதைச் செய்தவனாகிறான் ; வேறுவிதமாக ஆகமாட்டான்" (மநு - ௧௨ - ௯௩) என்பது மநுவின் திருவாக்கு.

இந்தப் பரமார்த்தஉண்மையையென்னிடமிருந்துகேட்டிருக்கின்றாய் ஆதலால், பாரத! நீ கிருதார்த்தன் [பேறு பெற்றவன்] என்க. (௨௦)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌦𑍈𑌵𑌾𑌸𑍁𑌰𑌸𑌂𑌪𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌗𑌃 ॥

𑌦𑍈𑌵𑍀 𑌚𑌾𑌸𑍁𑌰𑍀 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌚 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌯𑌃 𑌨𑌵𑌮𑍇 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌸𑍂𑌚𑌿𑌤𑌾𑌃 । 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌯 '𑌅𑌭𑌯𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌃 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌸𑌾𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌦𑍈𑌵𑍀 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃, 𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌯 𑌚𑌾𑌸𑍁𑌰𑍀 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀 𑌚 𑌇𑌤𑌿, 𑌦𑍈𑌵𑍍𑌯𑌾𑌃 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇, 𑌇𑌤𑌰𑌯𑍋𑌃 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌯 𑌚—

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥

௧. 𑌅𑌭𑌯𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌦𑌾𑌨𑌂 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌤𑌪 𑌆𑌰𑍍𑌜𑌵𑌮𑍍 ॥

𑌅𑌭𑌯𑌮𑍍 𑌅𑌭𑍀𑌰𑍁𑌤𑌾 । 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌂𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍇𑌷𑍁 𑌪𑌰𑌵𑌞𑍍𑌚𑌨𑌾𑌮𑌾𑌯𑌾𑌽𑌨𑍃𑌤𑌾𑌦𑌿𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌨𑌂, 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨

பதினாரும் அத்தியாயம் : தைவாஸுரஸம்பத்விபாகயோகம்.

ஞானமார்க்கத் தன்மை.

பிராணிகளது இயல்புகள் தைவமெனை, ஆஸுரமெனை, ராக்ஷஸமெனை ஒன்பதாம் அத்தியாயத்தினுள் (௯ - ௧௨, ௧௩) குறிப்பிக்கப்பட்டன. அவற்றை விரிவாக எடுத்துக்காட்ட, "பயமின்மை, மனத்தூய்மை" (௧௬ - ௧) என்றுதொடங்கும் அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது. (கர்மத்தால் குறிக்கப்படுவனவாய், ஸம்ஸாரமரத்தினுடைய பக்கவேர்களாய் (௧௫ - ௨), முந்தின கர்மத்திற்கேற்ப மநுஷ்யசரீரத்திலே வெளிப்படுகின்ற ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்னும் வாஸனைகள் - முறையே தைவத்தன்மை, ஆஸுரத்தன்மை, ராக்ஷஸத்தன்மை எனப்படுகின்றன.—ஆ.) "அவற்றுள், தைவத்தன்மை ஸம்ஸாரத்தினின்றும் நீங்குதற்காவது ; ஆஸுரமும், ராக்ஷஸமுமான தன்மை (அதனுள்) கட்டுண்டுகிடத்தற்காவது" என, கைப்பற்றுதற்குத் தைவத்தன்மையும், கைவிடுதற்கு மற்றையவற்றையும் உணர்த்துதலை அருளிச் செய்கிறார் :

ஸ்ரீபகவான் சொல்லலுற்றார் :

௧. **பயமின்மை, மனத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் உறைத்துநிற்றல், ஈகை; அடக்கம், நற்செய்கை, தன்னுடையதை ஓதுதல், தவம், நேர்மை.**

பயமின்மை - பயமில்லாத் தன்மை [சாஸ்திரம் உபதேசித்த விஷயத்திலே சிறிதும் ஸந்தேகமில்லாது அதனை அநுஷ்டிப்பதிலே உறுதியாகநிற்றல்.—ஆ. அல்லது, "நான் யாதொரு உடைமையுமில்லாதவனாய்த் தனியே எப்படி வாழ்வேன்" என்னும் பயமின்மை.—ம.]. மனத்தூய்மை - அகக்கரணத்தின் பரிசுத்தம் [மனத்தின் மாசற்றதன்மை] ; நடக்கைகளில், பிறரைவஞ்சித்தல் கள்ளம் பொய் முதலியவற்றை விட்டிடுதல் ; சுத்தத்தன்மையோடு[யோக்கியமாக, நியாயமாக]ஒழுகுதல் என்றபடி. (பிறரை வஞ்சித்தல் - கபடமாகப் பிறரை வசப்படுத்தல். கள்ளம் - மனத்திலொரு

𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃—𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑌶𑍍𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌵𑌗𑌮𑌃, 𑌅𑌵𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑍇𑌣 𑌏𑌕𑌾𑌗𑍍𑌰𑌤𑌯𑌾 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌾𑌽𑌪𑌾𑌦𑌨𑌂 𑌯𑍋𑌗𑌃, 𑌤𑌯𑍋𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑌯𑍋𑌃 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑌾 । 𑌏𑌷𑌾 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌾 𑌦𑍈𑌵𑍀 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀 𑌸𑌂𑌪𑌤𑍍 । 𑌯𑌤𑍍𑌰 𑌯𑍇𑌷𑌾𑌮𑍍 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍀 𑌸𑌾 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌦𑌾𑌨𑌂 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑌿 𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌗𑌃 𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍍 । 𑌦𑌮𑌶𑍍𑌚 𑌬𑌾𑌹𑍍𑌯𑌕𑌰𑌣𑌾𑌨𑌾𑌮𑍍 𑌉𑌪𑌶𑌮𑌃—𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌉𑌪𑌶𑌮𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌯𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍌𑌤𑌃 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌃, 𑌸𑍍𑌮𑌾𑌰𑍍𑌤𑌶𑍍𑌚 𑌦𑍇𑌵𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑌿𑌃, 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌦𑍍𑌯𑌧𑍍𑌯𑌯𑌨𑌮𑍍 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 । 𑌤𑌪𑌃 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌂 𑌶𑌾𑌰𑍀𑌰𑌾𑌦𑌿 । 𑌆𑌰𑍍𑌜𑌵𑌂 𑌚 𑌋𑌜𑍁𑌤𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥ க ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

உ. *𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌸𑌤𑍍𑌯𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌪𑍈𑌶𑍁𑌨𑌮𑍍 ।*
𑌦𑌯𑌾 𑌭𑍂𑌤𑍇𑌷𑍍𑌵𑌲𑍋𑌲𑍁𑌪𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑌾𑌰𑍍𑌦𑌵𑌂 𑌹𑍍𑌰𑍀𑌰𑌚𑌾𑌪𑌲𑌮𑍍 ॥

𑌅𑌹𑌿𑌂𑌸𑌾 𑌅𑌹𑌿𑌂𑌸𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌪𑍀𑌡𑌾𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 । 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍃𑌤𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌯𑌥𑌾𑌭𑍂𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌚𑌨𑌮𑍍 । 𑌅𑌕𑍍𑌰𑍋𑌧𑌃 𑌪𑌰𑍈𑌃 𑌆𑌕𑍍𑌰𑍁-

---

விதமும், வெளியி லொருவிதமுமாக வியவகரித்தல் —ஆ.) ஞானமென்பது - சாஸ்திரத்தினின்றும், ஆசார்யனிடத்தினின்றும் ஆத்மாமுதலியபொருள்களைத் தெரிந்துகொள்ளுதல். யோகமென்பது - தெரிந்துகொண்டவற்றைத் தன்னால் உணரப்படுவனவாகச் செய்துகொள்ளுதல், இந்திரியம் முதலியவற்றை ஒடுக்கி ஒருமுகப்படுத்தனது அநுபவத்திற்குவருமாறு செய்துகொள்ளுதல். அந்த ஞானயோகங்களிலே உறைத்துநிற்றல் - அவற்றில் உறுதியாகநிற்றல். இது [பயமின்மையும், மனத்தூய்மையும், ஞானயோகங்களில் நிலைத்து நிற்றலும்] முதன்மையானது, தைவத்தன்மையென்பது, ஸாத்விகத்தன்மையென்பது. எதிலே உரிமையுள்ள எவர்கட்கு எந்தத்தன்மை உள்ளதோ, (அதிலே அவர்கட்கு) அது ஸாத்விகத்தன்மை எனப்படுகின்றது. (தைவத்தன்மையென்பனவற்றுள், சில - ஞானயோகிகட்கே உரியவை ; சில - கர்மயோகிகட்கே உரியவை ; சில இருவர்க்கும் பொதுவானவை. என்பதை ஆராய்க.) **ஈகை** - உண்டிமுதலியவற்றைச் சக்திக்குஏற்ப பகுத்துக்கொடுத்தல். **அடக்கம்**-வெளி இந்திரியங்களை அடக்குதல் ; அகக்கரண அடக்கத்தைக் கூறுவர் (கஃ - உ). **நற்செய்கை** - வேதத்தில் விதித்த அக்நிஹோத்ரம் முதலியவையும், ஸ்மிருதியில் விதித்த தேவயஜ்ஞம் முதலியவையு மென்க. **தன்னுடைய (வேதத்)தை ஓதுதல்** - மறுமைக்காக ரிக்வேதம் முதலியவற்றை ஓதுதல். **தவம்** - சரீரத்தைப்பற்றியது முதலாக இனிக் கூறப்படுவது. **நேர்மை** - எப்பொழுதும் நேரான தன்மை [விச்வாசத்தோடு கேட்பவரிடத்துத் தனக்குத் தெரிந்தவற்றை மறையாமை.—ம.]. (க)

மேலும்,

உ. ***ஹிம்ஸியாமை, உண்மை, கோபமின்மை, துறவு, ஒழிபு, புறங்கூறாமை, பிராணிகளிடத்துக் கருணை, அவாவின்மை, மென்மை, நாணம், சேஷ்டையின்மை.***

ஹிம்ஸியாமை - பிராணிகளை வருத்துதலில்லாமை. **உண்மை** - அப்பிரியமாகவும், பொய்யாகவும் உள்ளதை நீக்கி நடந்த செய்தியைப் பார்த்தபடி கூறுதல். **கோபமின்மை** - பிறரால் வையப்பெற்றவன், அல்லது அடிக்கப்பெற்றவன (தனக்கு) வந்த

-क्रुष्टस्य अभिहतस्य वा प्राप्तस्य क्रोधस्य उपशमनम्। त्यागः संन्यासः—पूर्वं दानस्य उक्तत्वात्। शान्तिः अन्तःकरणस्य उपशमः। अपैशुनं परस्मै पररन्ध्रप्रकटीकरणं पैशुनं, तदभावः अपैशुनम्। दया भूतेषु दुःखितेषु। अलोलुप्त्वम् इन्द्रियाणां विषयसंनिधौ अविक्रिया। मार्दवं मृदुता अक्रौर्यम्। ह्रीः लज्जा। अचापलम् असति प्रयोजने वाक्पाणिपादादीनाम् अव्यापारयितृत्वम् ॥ ௨ ॥

किञ्च—

௩. तेजः क्षमा धृतिः शौचमद्रोहो नातिमानिता ।
भवन्ति सम्पदं दैवीमभिजातस्य भारत ॥

तेजः प्रागल्भ्यं, न त्वग्गता दीप्तिः। क्षमा आक्रुष्टस्य ताडितस्य वा अन्तर्विक्रियानुत्पत्तिः—उत्पन्नायां विक्रियायां उपशमनम् अक्रोधः इति अवोचाम। इत्थं क्षमायाः अक्रोधस्य च विशेषः। धृतिः देहेन्द्रियेषु अवसादं प्राप्तेषु तस्य प्रतिषेधकः अन्तःकरणवृत्तिविशेषः, येन उत्तम्भितानि करणानि देहश्च न अवसीदन्ति। शौचं द्विविधं, मृज्जलकृतं बाह्यम्, आभ्यन्तरं च मनोबुद्ध्योः नैर्मल्यं मायारागादिका-

கோபத்தைத் தணித்துக்கொள்ளுதல். முன்னர் ஈகையைக் கூறியுள்ளமையால், "த்யாகம் - துறவு" என்க. புறங்கூறுதலென்பது - பிறனுக்குப் பிறனது குற்றங்களை வெளிப்படுத்தல், (காணாதவழி இகழ்ந்துரைத்தல்) ; அஃதின்மை - **புறங்கூறாமை. கருணை** - துன்புற்ற பிராணிகளின்மேல் இரக்கம். **அவாவின்மை** - விஷயங்களுடைய முன்னிலையிலே இந்திரியங்கட்கு விகாரமின்மை. மென்மை - மெல்லிய தன்மை, வெடுவெடுப்பின்மை, கடுமையின்மை. **நாணம்** - (தனக்குஒவ்வாத இழிந்த கர்மங்களில் நாணுதல்). **சேஷ்டையின்மை** - பயனில்லாவழி, வாய் கை கால் முதலியவற்றைத் தொழிற்படுத்தாமை. (௨)

அன்றியும்,

௩. **ஒளி, பொறுமை, நிறை, பரிசுத்தம், துரோகமின்மை, தருக்கின்மை,— பார்த! (இவையெல்லாம்) தைவத்தன்மையைக் கொண்டு பிறந்தவனுக்கு நிகழ்கின்றன.**

ஒளி யென்பது - திட்பம், திண்மை, ஆண்மை, ஆளுந்தன்மை [மாதர் சிறுவர் முதலிய மூடர்களால் தாக்கப்பெறாமை—ம.]; ஆனால், மெய்யிலுள்ள [உடம்பிலுள்ள] காந்தியன்று. **பொறுமை** - வையப்பெற்றவனுக்கு, அல்லது அடிக்கப்பெற்றவனுக்கு மனக்கலக்கமுண்டாகாமை. "கலக்கமுண்டானவிடத்துத், தணிதல் - கோபமின்மை" எனக் கூறியுள்ளோம். இவ்வாறாகப் பொறுமைக்கும், கோபமின்மைக்கும் வேறுபாடென்க. **நிறை** - உடம்பும் இந்திரியங்களும் சோர்வுற்றவளவில், அதனை [அச்சோர்வை]ப் போக்குகின்ற ஓர்வகை அகக்கரணப்போக்கு ; அதனால் உடம்பும், இந்திரியங்களும் தாங்கப்பெற்றுத் தளர்ந்திடுவதில்லை. **பரிசுத்தம்** - இருவகைத்து. மண்ணினாலும், நீரினாலுமாவது - வெளிப்பரிசுத்தம் ; உள்பரிசுத்தமென்பது - மனமும், புத்தியும் மாசற்றுநிற்றல் ; கள்ளமும், காமமும்முதலிய கலக்கமில்லாமை. இவ்வாறாகச்

ലുഷ്യാഭാവഃ; ഏവം ദ്വിവിധം ശൗചം । അദ്രോഹഃ പരജിഘാംസാഭാവഃ അഹിംസനം । നാതിമാനിതാ അത്യർഥം മാനഃ അതിമാനഃ, സ യസ്യ വിദ്യതേ സഃ അതിമാനീ, തദ്ഭാവഃ അതിമാനിതാ, തദഭാവഃ നാതിമാനിതാ ആത്മനഃ പൂജ്യതാതിശയഭാവനാഭാവ ഇത്യർഥഃ । ഭവന്തി അഭയാദീനി ഏതദന്താനി സമ്പദമഭിജാതസ്യ—കിംവിശിഷ്ടാം സമ്പദം?—ദൈവീം, ദേവാനാം യാ സമ്പത് താമഭിജാതസ്യ ദേവവിഭൂത്യർഹസ്യ ഭാവികല്യാണസ്യ ഇത്യർഥഃ, ഹേ ഭാരത ॥

അഥ ഇദാനീമ് ആസുരീ സമ്പദ് ഉച്യതേ—

൪. ദമ്ഭോ ദർപോഽതിമാനശ്ച ക്രോധഃ പാരുഷ്യമേവ ച ।
അജ്ഞാനം ചാഭിജാതസ്യ പാർഥ സമ്പദമാസുരീം ॥

ദമ്ഭഃ ധർമധ്വജിത്വം । ദർപഃ വിദ്യാധനസ്വജനാദിനിമിത്തഃ ഉത്സേകഃ । അതിമാനഃ പൂർവോക്തഃ । ക്രോധശ്ച, പാരുഷ്യമേവ ച പരുഷവചനം—യഥാ കാണം "ചക്ഷുഷ്മാൻ," വിരൂപം "രൂപവാൻ," ഹീനാഭിജനം "ഉത്തമാഭിജനഃ" ഇത്യാദി । അജ്ഞാനം ച അവിവേകജ്ഞാനം കർതവ്യാകർതവ്യാദിവിഷയമിഥ്യാപ്രത്യയഃ । അഭിജാതസ്യ പാർഥ—കിമഭിജാതസ്യ ഇതി? ആഹ—സമ്പദമാസുരീം അസുരാണാം സമ്പത് താമഭിജാതസ്യ ഇത്യർഥഃ ॥ ൪ ॥

சுத்தமென்பது இருவகைத்தாம். **துரோகமின்மை** - பிறரைக் கெடுக்கக் கருதாமை, கெடுதி செய்யாமை. **தருக்கின்மை** - (தன்னை) மிக்கு மதித்தலின்மை; (யாவரும்) தன்னை உயர்த்திமதிக்கவேண்டும் என்னும் எண்ணமில்லாமை என்றபடி.—பயமின்மைமுதலாக இதுவரையிலுள்ளவைகள் தன்மையைக் கொண்டு பிறந்தவனுக்கு உண்டாகின்றன.—எத்தகைய தன்மையை ?—தேவர்கட்குரிய தன்மையை. பாரத ! தேவர்களது தன்மை எதுவோ, அதனைக் கொண்டு பிறந்தவனுக்கு, அதாவது தேவப் பெருமைக்கு உரியவனாய் இனிமேல் மங்களமுண்டாகப்பெறும் (மனிதனுக்கு இவை உண்டாகின்றன). (௩)

அஜ்ஞானமார்க்கத் தன்மை.

இனி இப்பொழுது ஆஸுரத்தன்மையை அருளிச்செய்கிறார் :

௪. **டம்பமும், செருக்கும், (தன்னை) மிக்கு மதித்தலும், கோபமும், துடுக்கும், அறிவின்மையும் பார்த்த ! ஆஸுரத்தன்மையைக் கொண்டு பிறந்தவனுக்கு (இருக்கின்றன).**

டம்பம் - நற்குணநற்செய்கையுள்ளவனைக் கள்ளமாய் நடித்தல். **செருக்கு** - கல்வி, பொருள், தன்ஜனங்கள்முதலானோராலாகும் கொழுப்பு. **(தன்னை) மிக்கு மதித்தல்** - முன்கூறப்பட்டது. **துடுக்கு** - கொடுஞ்சொல் ; உதாரணமாக, குருடனைக் கண்ணுடையவனெனவும், அவலட்சணமுடையவனை அழகுள்ளவனெனவும், இழிபுறப்புடையவனை உயர்பிறப்புடையவனெனவும், பிறவற்றையும் நேரே துடுக்காகப்பேசுதல். **அறிவின்மை** - பகுத்துணர்வின்மை, செய்யவேண்டியவிஷயம் முதலியவற்றைத் தவறுகக் கொள்ளுதல். பார்த்த ! கொண்டு பிறந்தவனுக்கு (இவை இருக்கின்றன).—எதனைக்கொண்டு பிறந்தவனுக்கு ? என்பது.—கூறுகிறார் : **அஸுரரது தன்மையினைக் கொண்டு பிறந்தவனுக்கு** என்க. (௪)

அநயோ: ஸம்பதோ: கார்யமாஹ—

௫. தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா ।
மா ஶுச: ஸம்பதம் தைவீமபிஜாதோ஽ஸி பாண்டவ ॥

தைவீ ஸம்பத் யா, ஸா விமோக்ஷாய ஸம்ஸாரபந்தநாத் । நிபந்தாய நியத: பந்தோ நிபந்த: அதோகதிப்ராப்தய ஆஸுரீ ஸம்பத் மதா அபிப்ரேதா । ததா ராக்ஷஸீ ச । தத்ர ஏதது³க்தம் ஶ்ருத்வா அர்ஜுநஸ்ய அந்தர்கதம் பாவம் "கிமஹம் ஆஸுரீஸம்பத்யுக்த: ? கிம் வா தைவீஸம்பத்யுக்த: ?" இதி விசாரணாரூபமாலக்ஷ்ய ஆஹ பகவாந்—மா ஶுச: ஶோகம் மா கார்ஷீ: । ஸம்பதம் தைவீமபிஜாத: அஸி அபிலக்ஷ்ய ஜாதோ஽ஸி, பாவிகல்யாணஸ்த்வமஸி இத்யர்த:, ஹே பாண்டவ ॥ ௫ ॥

௬. த்வௌ பூதஸர்கௌ லோகே஽ஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச ।
தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த: ஆஸுரம் பார்த மே ஶ்ருணு ॥

அஸ்மிந் லோகஸம்ஸாரே பூதஸர்கௌ பூதாநாம் மநுஷ்யாணாம் ஸர்கௌ ஸ்ருஷ்டீ—ஸ்ருஜ்யத இதி ஸர்க:, பூதாந்யேவ ஸ்ருஜ்யமாநாநி தைவாஸுரஸம்பத்யுக்தாநி இதி த்வௌ பூதஸர்கௌ இத்யுச்யதே, 'த்வயா ஹ தேவ

இவ்விருதன்மையின் பயன்கள்.

இவ்விருதன்மைகளுடைய பயனைக் கூறுகிறார் :

௫. தைவத்தன்மை விடுபடுதற்காகவும், ஆஸுரத்தன்மை கட்டுண்டுகிடத்தற்காகவும் கருதப்பட்டுள்ளன. பாண்டவ ! வருந்தாதே ; தைவத்தன்மையைக் கொண்டு பிறந்திருக்கிறாய்.

தைவத்தன்மை எதுவோ, அது ஸம்ஸாரக்கட்டினின்றும் விடுபடுதற்காவதென்க. ஆஸுரத்தன்மை, (ஸம்ஸாரத்தினுள்) தவறாது கட்டுண்டுகிடத்தற்காவதென்க. அவ்வாறே, ராக்ஷஸத்தன்மையுமென்க. அங்ஙனமிவ்வாறுள்ளவளவிலே, "நான் ஆஸுரத்தன்மையுடையவனோ ? அல்லது, தைவத்தன்மையுடையவனோ?" என இவ்வாறு ஆலோசித்தலாகிய அர்ஜுனனுடைய உள்ளேயுள்ள கருத்தைக் கண்டு பகவான் அருளிச்செய்கிறார் :—பாண்டவ ! வருத்தத்தைக்கொள்ளாதே ; தைவத்தன்மையைக்கொண்டு பிறந்திருக்கிறாய், உனக்கு இனிமேல் மங்களமுண்டாகும் என்றபடி. (௫)

ஆஸுரத்தன்மையர்கள்.

௬. இவ்வுலகிலே மநுஷ்யசிருஷ்டிகள் தைவமாகவும், ஆஸுரமாகவும் இரண்டென்க. தைவ(சிருஷ்டி) விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது ; பார்த்த! ஆஸுர (சிருஷ்டியை) என்னிடமிருந்து கேள்.

இவ்வுலகிலே, அதாவது ஸம்ஸாரத்திலே மனிதர்களது சிருஷ்டி இருவகைத்து. மனிதர்களே படைக்கப்படும்பொழுது தைவத்தன்மையும், ஆஸுரத்தன்மையும் பொருந்தியவர்கள் என மனிதசிருஷ்டி இரண்டு எனக் கூறப்படுகின்றது ; " பிர

ப்ராஜாபத்யா தேவாஶ்சாஸுராஶ்ச' இதி ஶ்ருதே:—லோகே அஸ்மிந், ஸம்ஸாரே இத்யர்த: ; ஸர்வேஷாம் த்வைவித்யோபபத்தே: । கௌ தௌ பூதஸர்கௌ இதி? உச்யதே—ப்ரக்ருத ஏவ தைவ: ஆஸுர: ஏவ ச । உக்தயோரேவ புந: அநுவாதே ப்ரயோஜநம் ஆஹ—தைவ: பூதஸர்க: 'அபயம் ஸத்வஸம்ஶுத்தி:' இத்யாதிநா விஸ்தரஶ: விஸ்தரப்ரகாரை: ப்ரோக்த: கதித:, ந து ஆஸுர: இதி । அத: தத்பரிவர்ஜநார்தம் ஆஸுரம் பார்த மே மம வசநாத் உச்யமாநம் விஸ்தரஶ: ஶ்ருணு அவதாரய ॥ ௬ ॥

ஆ அத்யாயபரிஸமாப்தே: ஆஸுரீ ஸம்பத் ப்ராணிவிஶேஷணத்வேந ப்ரதர்ஶ்யதே, ப்ரத்யக்ஷீகரணேந ச ஶக்யதே தஸ்யா: பரிவர்ஜநம் கர்துமிதி—

எ. ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச ஜநா ந விதுராஸுரா: ।
ந ஶௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே ॥

ப்ரவ்ருத்திம் ச ப்ரவர்தநம், யஸ்மிந் புருஷார்தஸாதநே கர்தவ்யே ப்ரவ்ருத்தி: தாம், நிவ்ருத்திம் ச ஏதத்விபரீதாம், யஸ்மாத் அநர்தஹேதோ: நிவர்திதவ்யம் ஸா நிவ்ருத்தி: தாம் ச, ஜநா: ஆஸுரா: ந விது: ந ஜாநந்தி । ந

ஜாபதியினுல் படைக்கப்பட்டவர்கள் தேவர்களாகவும் அஸுரர்களாகவும் இருவகுப்பினரன்றோ " (பிரு - க - ௩ - க) என்னும்சுருதியினுலென்க ; யாவர்க்கும் இருவகையே [எதாவதொன்றே] அமையுமாதலால், (மனிதசிருஷ்டி இருவகைத்து. ஆஸுரத்தன்மையினுள் ராக்ஷஸத்தன்மை அடங்கியதென்றறிக.—இருதிறமான) அம்மனிதசிருஷ்டி யாவை ? என்பது.—கூறுவோம் : பிரகிருதத்தில் பேசிவருகின்ற தைவமும், ஆஸுரமும்தான். சொன்னவற்றையே மீண்டும் சொல்வதற்குப் பயன் கூறுகிறுர் : மனிதர்களுடைய தைவசிருஷ்டியானது "பயமின்மை, மனத்தூய்மை" (கசு - க) என்பது முதலாக விரிவாய்க் கூறப்பட்டுளது ; மற்று, ஆஸுர(சிருஷ்டி கூறப்பட)வில்லை என்பதாம். ஆகவே, பார்த்த ! அதனை நீக்க ஆஸுரத்தை விரிவாய்க் கூறுகிறேன் ; என்வார்த்தையினுல் கேட்டுத் தெரிந்துகொள். (சு)

அத்தியாயமுடிவுவரை ஆஸுரத்தன்மையை (சில) மனிதர்களுடைய விசேஷணமாக எடுத்துக்காட்டுகிறுர் ; (ஏனெனில், அவர்களிடத்து அதனை) நேராகக் கண்டவிடத்தன்றே அதனை விட்டிடுதலைச் செய்யக்கூடுமென்று :

எ. அஸுரத்தன்மையுள்ள ஜனங்கள், செய்வதையும் தவிர்வதையும் அறிவதில்லை ; அவர்களிடத்துச் சுத்தமில்லை : ஒழுக்கமுமில்லை : உண்மை இல்லை.

செய்வது என்பது-புருஷார்த்தத்திற்காக[தான்விரும்பியதைப்பெறுதற்காக]ச் செய்யவேண்டிய எந்த ஸாதநத்தைச் செய்தல் (வேண்டுமோ, அது : அதாவது, விதிக்கப்பட்ட தர்மம்). தவிர்வது என்பது - இதற்கு [செய்வதற்கு] மாறுனது, தீங்கிற்குக் காரணமான எதனைத் தவிர்க்கவேண்டுமோ, அது : (அதாவது,விலக்கப்பட்ட அதர்மம். இவ்விரண்டனையும்) அஸுரத்தன்மையரான ஜனங்கள் அறிவதில்லை. அவர்கள் கேவலம் செய்வது தவிர்வது என்பவற்றைமட்டும் அறிவதில்லையென்பதி

𑌶𑍌𑌚𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍀 𑌚 𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃—𑌨 𑌶𑍌𑌚𑌂 𑌨𑌾𑌪𑌿 𑌚 𑌆𑌚𑌾𑌰𑌃 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇—𑌅𑌸𑍁𑌰𑌾𑌃 𑌅𑌨𑌾𑌚𑌾𑌰𑌾𑌃 𑌮𑌾𑌯𑌾𑌵𑌿𑌨𑌃 𑌅𑌨𑍃𑌤𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌹𑌿 𑌆𑌸𑍁𑌰𑌾𑌃 ॥ ௭ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௮. 𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍇 𑌜𑌗𑌦𑌾𑌹𑍁𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 ॥

𑌅𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌯𑌮𑍍 𑌅𑌨𑍃𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 𑌤𑌥𑌾 𑌇𑌦𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑍍, 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂—𑌨 𑌅𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍌 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾, 𑌅𑌤𑌃 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌚 — 𑌇𑌤𑌿 𑌤𑍇 𑌆𑌸𑍁𑌰𑌾𑌃 𑌜𑌨𑌾𑌃 𑌜𑌗𑌤𑍍 𑌆𑌹𑍁𑌃 𑌅𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 — 𑌨 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌸𑌵𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌕𑌃 𑌅𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑌿𑌤𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑌃 𑌅𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌜𑌗𑌤𑍍 𑌆𑌹𑍁𑌃 । 𑌕𑌿𑌞𑍍𑌚— 𑌅𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌕𑌾𑌮𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌯𑍋𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 𑌜𑌗𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌂𑌭𑍂𑌤𑌮𑍍 । 𑌕𑌿𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌂—𑌕𑌾𑌮𑌹𑍇𑌤𑍁𑌕𑌮𑍇𑌵 𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌂; 𑌕𑌿𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌜𑌗𑌤𑌃 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍? 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌿 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌜𑌗𑌤𑌃 । "𑌕𑌾𑌮 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍" 𑌇𑌤𑌿 𑌲𑍋𑌕𑌾𑌯𑌤𑌿𑌕𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌇𑌯𑌮𑍍 ॥ ௮ ॥

ல்லை ; அவர்களிடத்துப் பரிசுத்தமும், நல்லொழுக்கமும், உண்மையும் இல்லை. அஸுரத்தன்மையர்கள் பரிசுத்தமில்லாதவர், நல்லொழுக்கமில்லாதவர், கள்ளமுடையவர், பொய்பேசுபவர் எனப் பிரஸித்தமன்றோ. (எ)

உலகத்தைப்பற்றி நாஸ்திகர் கொண்ட கொள்கை.

மற்றும்,

அ. **"உலகம் உண்மையில்லது : அடிஆதாரமில்லது : ஆளுபவனில்லது : ஒருவரோடொருவர் சேர்வதனு லுண்டானது : காமத்தால் வந்திருப்பது ; வேறு என்ன?" (என) அவர்கள் கூறுகிறார்கள்.**

"நாம் பொய்மயமாகவே இருக்குமாறுபோல, இவ்வுலகெல்லாம் பொய்மையாயுளது. இதற்கு தர்மமும் அதர்மமும் ஆதாரமாயில்லை ; ஆகலான் இது ஆதாரமில்லாதது. (வரைமுறைக்குக் காரணமான தர்மம் அதர்மம் என்னும் ஒழுங்கு இல்லை.) அன்றியும், தர்மஅதர்மங்களைச் சார்ந்து இதனை ஒழுங்குசெய்து ஆள்பவன் இல்லை ; ஆதலால், உலகம் ஆள்பவனில்லாததாம். மேலும், இவ்வுலகெல்லாம் - காமத்தால் தூண்டப்பெற்ற ஸ்திரீபுருஷர்கள் ஒருவரோடொருவர் புணர்வதனால் உண்டானது ; காமத்தையே காரணமாகக்கொண்டது, காமத்தாலேயே வந்திருப்பது. ஜகத்திற்கு வேறுகாரணம் என்ன?ஜகத்திற்கு வேறுகாரணமில்லை,(இந்திரியங்கட்குப்)புலப்படாத தருமம் அதருமம் முதலிய காரண மொன்றுமில்லை" என்று ஆஸுரத்தன்மையரான ஜனங்கள் கூறுகிறார்கள்.—"உயிருள்ள பிராணிகட்குக் காமமேதான் காரணம்" என்றஇது, லோகாயதிகரது [இந்திரியங்கட்குப் புலப்படுவதைமாத்திரம் ஒத்துக் கொள்கின்ற நாஸ்திகரது] கொள்கை. (அ)

௯. एतां दृष्टिमवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।
प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ॥

एतां दृष्टिम् अवष्टभ्य आश्रित्य नष्टात्मानः नष्टस्वभावाः विभ्रष्टपरलोकसाधनाः अल्पबुद्धयः विषयविषया अल्पैव बुद्धिः येषां ते अल्पबुद्धयः प्रभवन्ति उद्भवन्ति उग्रकर्माणः क्रूरकर्माणः हिंसात्मकाः । क्षयाय जगतः— 'प्रभवन्ति' इति सम्बन्धः । जगतः अहिताः, शत्रवः इत्यर्थः ॥ ௯ ॥

ते च—

௧௦. काममाश्रित्य दुष्पूरं दम्भमानमदान्विताः ।
मोहाद्गृहीत्वासद्ग्राहान्प्रवर्तन्तेऽशुचिव्रताः ॥

कामम् आश्रित्य अवष्टभ्य दुष्पूरम् अशक्यपूरणं दम्भमानमदान्विताः दम्भश्च मानश्च मदश्च दम्भमानमदाः तैः अन्विताः दम्भमानमदान्विताः मोहात् अविवेकतः गृहीत्वा उपादाय असद्ग्राहान् अशुभनिश्चयान् प्रवर्तन्ते लोके अशुचिव्रताः अशुचीनि व्रतानि येषां ते अशुचिव्रताः ॥ ௧௦ ॥

किंच—

௧௧. चिन्तामपरिमेयां च प्रलयान्तामुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ॥

நாஸ்திகருடைய வாழ்க்கை.

௯. **இக்கொள்கையைப் பிடித்துக் கெட்ட ஆத்மாக்களான அற்பபுத்திகள் கொடுந்தொழிலுள்ள சத்துருக்களாக உலகத்தைக் கெடுக்கக் கிளம்புகிறார்கள்.**

கெட்ட ஆத்மாக்களான - மறுமைக்கான ஸாதநங்களை இழந்த. அற்பபுத்திகள் - விஷயங்களைப்பற்றிய அற்பபுத்தியுள்ளவர் [கண்டதைக் கண்டபடி செய்பவர்.—ஆ.]. கொடுந்தொழிலுள்ள - ஹிம்ஸிக்கும் தன்மையுள்ள. உலகத்தைக் கெடுக்கக் "கிளம்புகிறார்கள்" என இயையும். சத்துருக்களாக - உலகத்திற்குப் பகைஞராக என்றபடி. (௯)

மேலும், அவர்கள்

௧௦. **நிரப்பமுடியாத அவாவினைக் கைப்பற்றி டம்பமும், கர்வமும், செருக்கும் உடையவராகித் தீயகொள்கைகளை மயக்கத்தால் பிடித்து அசுத்தமான விரதங்களைக் கொண்டவராய் (உலகில்) தலைப்படுகிறார்கள்.**

மயக்கத்தால் - அவிவேகத்தால், பகுத்தறிவின்மையால். (அசுத்தமான விரதங்கள் - வேதத்தில் விதிக்கப்படாத அசுத்தச்செய்கைகள்; அவை - சுடுகாட்டிற் சென்று அற்பதேவதையை ஆராதித்தல், வாமாகமத்தைத் தழுவி கள்குடித்தல், அதனால் பிறனும் பிறன்மனைவியும் மதிமயங்கிக் கூடுதல் முதலியன.) (௧௦)

அன்றியும், (அவர்கள்)

௧௧. **சாவினையே முடிவாகப்பெற்ற அளவிடவொண்ணாத கவலையையுடையவர்: காமநுகர்ச்சியையே மேலாகக்கொண்டவர்: இவ்வளவுதான் என நிச்சயித்தவர்.**

சிந்தாஂ சாபரிமேயாஂ ச ந பரிமாதுஂ ஶக்யதே யஸ்யாஃ சிந்தாயாஃ ஸா அபரிமேயா, தாஂ சாபரிமேயாஂ ப்ரலயாந்தாஂ மரணாந்தாஂ உபாஶ்ரிதாஃ, ஸதா சிந்தாபராஃ இத்யர்த்தஃ। காமோபபோகபரமாஃ, காம்யந்த இதி காமாஃ விஷயாஃ ஶப்தாதயஃ, ததுபபோகபரமாஃ "அயமேவ பரமஃ புருஷார்த்தோ யஃ காமோபபோகஃ" இத்யேவஂ நிஶ்சிதாத்மாநஃ, ஏதாவதிதி நிஶ்சிதாஃ ॥ ௧௧ ॥

௧௨. ஆஶாபாஶஶதைர்பத்தாஃ காமக்ரோதபராயணாஃ ।
ஈஹந்தே காமபோகார்த்தமந்யாயேநார்த்தஸஞ்சயாந் ॥

ஆஶாபாஶஶதைஃ ஆஶா க்யா பாஶாஃ தச்சதைஃ ஆஶாபாஶஶதைஃ பத்தாஃ ஸந்தஃ ஸதஃ ததஃ ஆக்ருஷ்யமாணாஃ, காமக்ரோதபராயணாஃ காமக்ரோதைகநிஷ்டாஃ, காமபோகார்த்தஂ காமோபபோகப்ரயோஜநாய ந தர்மார்த்தஂ அர்த்தஸஞ்சயாந் அந்யாயேந பரஸ்வாபஹரணாதிநா இத்யர்த்தஃ ॥

ஈத்ருஶஶ்ச தேஷாஂ அபிப்ராயஃ—

௧௩. இதமத்ய மயா லப்தமிதஂ ப்ராப்ஸ்யே மநோரதம் ।
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ॥

(கவலையென்பது - ஆசை அளவிறந்த பொருள்களின்மேல் செல்லுதலால் தான் அவற்றைத் தேடுதலையும், காப்பாற்றுதலையும், இவற்றிற்கான வழிகளையும் ஆலோசித்தல்.—ஆ.) அளவிடவொண்ணாத கவலையையுடையவர் - இவ்வளவென்று அளவிடமுடியாத கவலையினுள் எப்பொழுதும் அழுந்திக்கிடப்பவர் என்றபடி. காமநுகர்ச்சி - விரும்பப்படுகின்ற ஓசைமுதலியவிஷயங்களை அநுபவித்தல். (அவர்கள்) "காமநுகர்ச்சியென்பது எதுவோ, (அந்த) இதுவேதான் யாவற்றிலும் மேம்பட்ட புருஷார்த்தம் [அடையவேண்டிய பொருள்]" எனத் தமக்கு இவ்வாறு நிச்சயம்வந்தவர்கள். இவ்வளவுதான் என்று - ("இக்காமநுகர்ச்சியேதான் இன்பத்திற்கு முடிந்த எல்லை; மற்று, மறுமைஇன்பமென்பது இல்லை" என்று). (௧௧)

௧௨. (அவர்கள்) ஆசையென்னும் நூறு கயிறுகளால் கட்டுண்டு, காமத்தையும் கோபத்தையுமே சிறந்த அடைக்கலமாகக்கொண்டு, காமநுகர்ச்சிக்காகப் பணக்குவியல்களை அநியாயத்தால் தேட முயல்கிறார்கள்.

அவர்கள், ஆசைகளென்னும் பல கயிறுகளால் கட்டப்பெற்று இங்குமங்கும் இழுக்கப்படுகிறார்கள். காமநுகர்ச்சிக்காக - தருமகார்யத்திற்காக அன்றென்க. அநியாயத்தால் - பிறர்பொருளைக் கொள்ளையடித்தல் முதலியவற்றால் என்றபடி. (௧௨)

அஸுரத்தன்மையருடைய நோக்கங்கள்.

அவரது கருத்து இப்படிப்பட்டது :

௧௩. "இப்பொழுது இது என்னால் அடையப்பட்டது : இவ்விருப்பத்தைச் (சீக்கிரம்) பெறுவேன் : இது (என்வீட்டில்) இருக்கின்றது : இனி இந்தப்பணமும் எனக்கு வந்துசேரும்.

கச. असौ मया हतः शत्रुर्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽहमहं भोगी सिद्धोऽहं बलवान्सुखी ॥

கரு. आढ्योऽभिजनवानस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।
यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञानविमोहिताः ॥

इदं द्रव्यमद्य मया लब्धम् । इदं च अन्यत् प्राप्स्ये मनोरथं मनस्तुष्टिकरम् । इदं च अस्ति । इदमपि मे भविष्यति आगामिनि संवत्सरे पुनः धनं, तेन अहं धनी विख्यातः भविष्यामि ॥ கங ॥

असौ देवदत्तनामा मया हतः दुर्जयः शत्रुः । हनिष्ये च अपरान् अन्यान् अपि । किं एते करिष्यन्ति तपस्विनः? सर्वथापि नास्ति मत्तुल्यः । कथम्?—ईश्वरः अहम्, अहं भोगी । सर्वप्रकारेण च सिद्धः अहं सम्पन्नः पुत्रैः नप्तृभिः, न केवलं मानुषः बलवान् सुखी च अहमेव ॥ கச ॥

आढ्यः धनेन, अभिजनवान् सप्तपुरुषं श्रोत्रियत्वादिसम्पन्नः —तेनापि न मम तुल्यः अस्ति कश्चित् । कः अन्यः अस्ति सदृशः तुल्यः मया? किं च—यक्ष्ये यागेनापि अन्यान् अभिभविष्यामि, दास्यामि नटादिभ्यः, मोदिष्ये हर्षं च अतिशयं प्राप्स्यामि इति एवम् अज्ञानविमोहिताः अज्ञानेन विमोहिताः विविधम् अविवेकभावम् आपन्नाः ॥ கரு ॥

கச. "×இவன் என்னுல் கொல்லப்பட்டான்; இனி மற்றையோர்களையும் கொன்றுவிடுவேன்; நான் ஆளுபவன்; நான் அநுபவிப்பவன்; (எல்லாம்) அடையப்பெற்றவன்; நான் வலிமையுள்ளவன்; இன்பமுடையவன்.

கரு. "செல்வமுடையவனும், உயர்குலமுடையவனும் இருக்கின்றேன். என்னோடு ஒப்பானவன் வேறு எவன் இருக்கிறான்? யாகஞ்செய்வேன்; கொடுப்பேன்; மகிழ்வேன்" என (ஆஸுரத்தன்மையர்) அறிவின்மையால் பலவாறு மயங்கியுள்ளார்.

இது - திரவியம் [நிலம், தஙகம் முதலியன]. இவ்விருப்பத்தை - மனத்திற்கு ஸந்தோஷத்தைச் செய்கின்ற வேறொன்றை. இனி வரும்வருஷத்தில் இந்தப்பணம் என்னுடையதாகும்; அதனுல் நான் பணமுள்ளவனுகப் பிரஸித்தனுவேன். (கங)

நான் கொன்றுவிட்டேன் வெல்லுதற்கரிய இப்பகைவனை, தேவதத்தனென்னும் பெயருடைய இவனை யென்க. இனி மற்றையோர்களையும் கொன்றுவிடுவேன். எளியவரான இவர்கள் என்ன செய்யக்கூடும்? எவ்வாற்றுனும் எனக்கு ஒப்பானவன் இல்லை.—எப்படி?—நான் ஆளுபவன். நான் அநுபவிப்பவன். நான் எவ்விதத்தாலும் (எல்லாம்) அமையப்பெற்றவன்: மக்களையும், பேரன் பேத்திகளையும் உடையவன். நான் கேவலம்[ஸாதாரணமான]மநுஷ்யனல்லேன். நானொருவன்தான் வலிமையுள்ளவன், இன்பமுடையவன். (கச)

செல்வமுடையவன் - பணத்தால் செல்வமுள்ளவன். உயர்குலமுடையவன் - ஏழுதலைமுறையாக சுரோத்திரியர்கள் [வேதங்களைக் கற்றறிந்தவர்கள்] என்பதையும் மற்றுமிதுபோன்றவற்றையும் உடையவன். அதனுலும் எனக்கு ஒப்பானவன் ஒருவனும் இல்லை. மேலும், நான் யாகத்தாலும் பிறர்களைக் கீழ்படுத்துவேன்: கூத்தாடி முதலியவர்கட்குக் கொடுப்பேன்: மிக்க மகிழ்ச்சியுறுவேன். (அவர்கள்) இவ்வாறு பலவிதமான அவிவேகத்தன்மையை அடைந்தவர்கள். (கரு)

×சத்துருவான

கசு. அநேகசித்தவிப்ராந்தா: மோஹஜாலஸமாவ்ருதா: ।
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகே(அ)ஶுசௌ ॥

அநேகசித்தவிப்ராந்தா: உக்தப்ரகாரேண அநேகை: சித்தை: விவிதம் ப்ராந்தா: அநேகசித்தவிப்ராந்தா:, மோஹஜாலஸமாவ்ருதா: மோஹ: அவிவேக: அஜ்ஞாநம், ததேவ ஜாலமிவ ஆவரணாத்மகத்வாத், தேந ஸமாவ்ருதா: । ப்ரஸக்தா: காமபோகேஷு தஸ்மிந்நேவ நிமக்நா: ஸந்த: தேந உபசிதகல்மஷா: பதந்தி நரகே அஶுசௌ வைதரண்யாதௌ ॥ கசு ॥

கஎ. ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா: தநமாநமதாந்விதா: ।
யஜந்தே நாமயஜ்ஞைஸ்தே தம்பேநாவிதிபூர்வகம் ॥

ஆத்மஸம்பாவிதா: ஸர்வகுணவிஶிஷ்டதயா ஆத்மநைவ ஸம்பாவிதா: ஆத்மஸம்பாவிதா:, ந ஸாதுபி: । ஸ்தப்தா: அநம்ரா: । தநமாநமதாந்விதா: தநநிமித்த: மாந: மத:ச, தாப்யாம் தநமாநமதாப்யாம் அந்விதா: । யஜந்தே நாமயஜ்ஞை: நாமார்த்தை: யஜ்ஞை: தே தம்பேந யஷ்ட்ருதயா அவிதிபூர்வகம் விதிவிஹிதாங்கேதிகர்த்தவ்யதாரஹிதம் ॥ கஎ ॥

கஅ. அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் ச ஸம்ஶ்ரிதா: ।

கசு. பலஎண்ணங்களால் பலவாறு மயங்கியவராய், மயக்கமென்னும்வலையினால் மூடப்பெற்றவராய் [அதனுள் சிக்கிக்கொண்டவராய்], காமநுகர்ச்சிகளுள் அழுந்தியுள்ள (அவர்கள்) அருவருப்பான நரகத்தினுள் வீழ்கிறார்கள்.

பலஎண்ணங்களால் - (கீழ்க்) கூறியபடியுள்ள அநேக எண்ணங்களால். மயக்கமென்பது - விவேகமின்மை, அறிவின்மை. (மோகத்தினுடைய வழி)யடைப்பு வடிவமாயுள்ளதனால், அதுவே [மயக்கமே] வலைபோலும். (அவர்கள்) விஷய அநுபவங்களில் பற்றுக்கொண்டவராய், அவற்றுள்ளேயே சாய்ந்துகிடப்பவராய், அதனால் பாவமேறப் பெற்றவராய் வைதரணீமுதலிய அருவருப்பான நரகத்தினுள் வீழ்கிறார்கள். (கசு)

அஸுரத்தன்மையருடைய யாகங்கள்.

கஎ. தம்மாலேயே மதிக்கப்பெற்றவராய், இறுமாந்தவராய், பணத்தினாலான கர்வத்தோடும் செருக்கோடும் கூடிய அவர்கள் பெயர்மாத்திரமான யஜ்ஞங்களை விதிப்படியில்லாது செய்கிறார்கள். டம்பத்துக்காக

தம்மாலேயே மதிக்கப்பெற்றவர் - எல்லாநற்குணமும் பொருந்தியவராகத் (தம்மை)த் தாமே மதித்துக்கொண்டவர்; (ஆனால், அவ்வாறு) நல்லோர்களால் மதிக்கப்பெறாதவர். இறுமாந்தவர் - வணங்காஇயல்பினர். விதிப்படியில்லாது - விதிகளால் விதிக்கப்பட்ட அங்கங்களும், செய்யவேண்டிய முறைகளும் இல்லாதது. (பணத்தினாலான கர்வம் - பணத்திமிரினால், தன்னை உயர்ந்தோனாகக்கொள்ளுதல். பணத்தினாலான செருக்கு - பணத்திமிரினால், பெரியோரையும் தாழ்ந்தோராகக்கொள்ளுதல். அவர்கள் பெயருக்காக, ஸோமயாஜியென்னும்பெயர் முதலியவற்றைப் பெறுதற்காக உண்மையல்லாத நற்செய்கைகளைச் சிரத்தையில்லாது கள்ளஎண்ணத்தோடு செய்கிறார்கள் என்பது கருத்து.) (கஎ)

பகவானுடைய கட்டளைகளை அஸுரத்தன்மையர் அசட்டைசெய்தல்.

கஅ. (இவர்கள்) அகந்தையையும், வலிமையையும், மேட்டிமையையும்,

𑌮𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌪𑌰𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌕𑌾𑌃 ॥

𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌮𑍍 𑌅𑌹𑌂𑌕𑌰𑌣𑌮𑍍 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌃—𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍈𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑍈𑌶𑍍𑌚 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑍈𑌃 “𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮𑌾 𑌅𑌹𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇—𑌸𑌃 𑌅𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌃 𑌕𑌷𑍍𑌟𑌤𑌮𑌃, 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌾𑌣𑌾𑌂 𑌮𑍂𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚, 𑌤𑌮𑍍। 𑌤𑌥𑌾 𑌬𑌲𑌂 𑌪𑌰𑌾𑌭𑌿𑌭𑌵𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍। 𑌦𑌰𑍍𑌪𑌮𑍍—𑌦𑌰𑍍𑌪𑍋 𑌨𑌾𑌮 𑌯𑌸𑍍𑌯 𑌉𑌦𑍍𑌭𑌵𑍇 𑌧𑌰𑍍𑌮𑌮𑍍 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 𑌸𑌃 𑌅𑌯𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌾𑌶𑍍𑌰𑌯𑌃 𑌦𑍋𑌷𑌵𑌿𑌶𑍇𑌷𑌃। 𑌕𑌾𑌮𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌮𑍍। 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍍 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌮𑍍। 𑌏𑌤𑌾𑌨𑍍 𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌮𑌹𑌤𑍋 𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃। 𑌕𑌿𑌂 𑌚—𑌤𑍇 𑌮𑌾𑌮𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌪𑌰𑌦𑍇𑌹𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑍇 𑌪𑌰𑌦𑍇𑌹𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌷𑌨𑍍𑌤𑌃, 𑌮𑌚𑍍𑌛𑌾𑌸𑌨𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌦𑍍𑌵𑍇𑌷𑌃, 𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌃 𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌕𑌾𑌃 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌅𑌸𑌹𑌮𑌾𑌨𑌾𑌃 ॥ ௧௮ ॥

௧௯. 𑌤𑌾𑌨𑌹𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌨𑍍 ।
𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑍍𑌯𑌜𑌸𑍍𑌰𑌮𑌶𑍁𑌭𑌾𑌨𑌾𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 ॥

𑌤𑌾𑌨𑍍 𑌅𑌹𑌂 𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑍂𑌤𑌾𑌨𑍍 𑌸𑌾𑌧𑍁𑌦𑍍𑌵𑍇𑌷𑌿𑌣𑌃 𑌦𑍍𑌵𑌿𑌷𑌤𑌃 𑌚 𑌮𑌾𑌂 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇𑌷𑍁 𑌏𑌵 𑌅𑌨𑍇𑌕𑌨𑌰𑌕𑌸𑌂𑌸𑌰𑌣𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌷𑍁 𑌨𑌰𑌾-

---

காமத்தையும், கோபத்தையும் உடையவர் : தமது சரீரங்களிலும் பிறரது சரீரங்களிலுமுள்ள என்னைப் பகைக்கிறவர் : இடக்குப்பேசுகிறவர்.

அகந்தை - அஹங்கரித்தல், அஹங்காரம். "நான் உயர்ந்த ஆத்மா" என உள்ள குணங்களாலும், தன்னிடத்து ஏற்றிக்கொள்ளப்பட்ட இல்லாத குணங்களாலும் (தன்னை) மதித்துக்கொள்வது (எதுவோ), அது - அஹங்காரமென்பது : அவித்தையெனப்படுவது : (நீக்குதற்கு) மிகக்கஷ்டமானது : எல்லாக்குற்றங்கட்கும், எல்லாத்தீங்குச்செய்கைகட்கும் அடிக்காரணமானது. அவ்வாறே, **வலிமை**யென்பது - பிறரைக் கீழ்ப்படுத்தக் காரணமாய்க் காமத்தோடும் காதலோடும் கூடிநிற்பது. **மேட்டிமை** யென்பது - எது உண்டானவழி (ஒருவன்) அறத்தை மீறுகின்றானோ, அது. இது, அகக்கரணத்தில் தங்கியுள்ள ஓர்வகைக்குற்றம். **காமம்** - பெண்டிரைப்பற்றியது. **கோபம்** - வேண்டாதவற்றைப்பற்றியது. (அவர்கள்) இப்பெரிய குற்றங்களையும், இன்னும்வேறு பெரிய குற்றங்களையும் உடையவர். மேலும், அவர்கள் தமது சரீரங்களிலும், பிறரதுசரீரங்களிலும் அவர்களது நினைப்பிற்கும் செய்கைகட்கும் ஸாக்ஷியாயுள்ள ஈச்வரனாகிய என்னைப் பகைக்கிறவர்கள். பகைத்தல் - எனது கட்டளையை மீறிநடத்தல். (கட்டளையென்பது - சுருதியும், ஸ்மிருதியுமாம். மீறிநடத்தல் - அவற்றின்பொருளை அறியவும், அநுஷ்டிக்கவும் மனமில்லாதிருத்தல்.—ஆ.) **இடக்குப்பேசுகிறவர்** - நல்வழிநிற்பவருடைய நற்குணங்களைப் பொறாதவர். (௧௮)

ஆஸுரத்தன்மையர் சீரழிந்து வீழ்தல்.

௧௯. பகைப்பவரும், கொடியவரும், தீயவருமாயுள்ள அக் கடைப்பட்ட மனிதர்களை யான் உலகங்களிலே அஸுரருடைய யோநிகளிலேயே எப்பொழுதும் தள்ளுகின்றேன்.

பகைப்பவர் - நல்வழிக்கு எதிரிகளாய் நல்லோரைப் பகைப்பவர். **உலகங்களிலே** - பலநரகங்களில் உழன்றுதிரியும் ஸம்ஸாரவழிகளிலேயே. **தீவினையென்னும்**

𑌧𑌮𑌾𑌨𑍍 𑌅𑌧𑌰𑍍𑌮𑌦𑍋𑌷𑌵𑌤𑌾𑌨𑍍 𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿 𑌅𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑌨𑍍𑌤𑌤𑌮𑍍 𑌅𑌶𑍁𑌭𑌾𑌨𑍍 𑌅𑌶𑍁𑌭𑌕𑌰𑍍𑌮𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 𑌆𑌸𑍁𑌰𑍀𑌷𑍍𑌵𑍇𑌵 𑌕𑍍𑌰𑍂𑌰𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌸𑍁 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌸𑌿𑌂𑌹𑌾𑌦𑌿𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 — ‘𑌕𑍍𑌷𑌿𑌪𑌾𑌮𑌿’ 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 ॥ ௧௯ ॥

௨௦. 𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌮𑍂𑌢𑌾 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 ।
𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍈𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌧𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥

𑌆𑌸𑍁𑌰𑍀𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑍍 𑌆𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌃 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌨𑍍𑌮 𑌤𑌮𑍋𑌬𑌹𑍁𑌲𑌾𑌸𑍍𑌵𑍇𑌵 𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌅𑌧𑍋 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌮𑌾𑌮𑍍 𑌈𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌅𑌨𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌏𑌵, 𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌅𑌧𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌂 𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌤𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 । ‘𑌮𑌾𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯’ 𑌇𑌤𑌿 — 𑌨 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍌 𑌕𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌆𑌶𑌙𑍍𑌕𑌾 𑌅𑌸𑍍𑌤𑌿, 𑌅𑌤𑌃 — 𑌮𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌸𑌾𑌧𑍁𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௨௦ ॥

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌃 𑌆𑌸𑍁𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌪𑌦𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 𑌅𑌯𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍇 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌆𑌸𑍁𑌰𑍀𑌸𑌂𑌪𑌦𑍍𑌭𑍇𑌦𑌃 𑌅𑌨𑌨𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 । 𑌯𑌤𑍍𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍇𑌣 𑌪𑌰𑌿𑌹𑍃𑌤𑌶𑍍𑌚 𑌭𑌵𑌤𑌿, 𑌯𑌤𑍍 𑌮𑍂𑌲𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌅𑌨𑌰𑍍𑌥𑌸𑍍𑌯, 𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 —

௨௧. 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯𑍇𑌦𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌨𑌾𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।

குற்றமுடையவராதலால், கடைப்பட்ட மனிதரென்க. தீயவர் - தீயதொழில்களைச் செய்பவர். யோநிகளிலே - கொடுமைமயமான புலி, சிங்கம் முதலான பிறவிகளிலே. யொநிஷு என்பது - க்ஷிபாமி என்பதனோடு இயையும். (௧௯)

௨௦. *ஆஸுரயோநியை அடைந்தவர்கள் பிறவிதோறும் மயங்கியவராய் என்னை அடையாமலேயே கௌந்தேய! அதனினின்றும் கீழ்மையான நிலையை அடைகிறார்கள்.*

ஆஸுரயோநியை அடைந்தவர்கள் ஒவ்வொரு ஜன்மத்திலும் விவேகமற்றவராய், தமோகுணம்மிகுந்த பிறவிகளிலேயேபிறந்து கீழேசெல்லுகிறார்கள்; ஈச்வரனாகிய என்னை அடையாமலே, மிகவும் இழிந்த நிலைமையைப் பெறுகிறார்கள். என்னை அடையாமலே - என்னை அடையும் விஷயத்திலே யாதொரு சங்கையும் இல்லையாதலால், "நான் உபதேசித்த நல்வழியைச் செல்லாமலே" என்றபடி. (ஆஸுரத்தன்மை எல்லாநன்மைகட்கும் விரோதியாதலால், ஒருவன் சுதந்திரனாயிருக்கும்பொழுதேயே, ஒன்றற்குப் பரவசப்படுமாறுசெய்கின்ற பிறவியைப் பெறுதுள்ளவளவிலேயே, அவ்வாஸுரத்தன்மையை நீக்கவேண்டும்.—ஆ. அல்லாக்கால், விலங்குமுதலியவற்றின் உடம்புகளைப் பெற்றவழி முக்தி ஸாதநங்களை அநுஷ்டிக்கத் தகுதி இல்லையாதலால், ஆஸுரத்தன்மையினின்றும் நீங்குதல் ஒருகாலும் இயலாதென்க.—ம.) (௨௦)

நரகத்தினுடைய மூன்று வாசல்களையும் மிதிக்கக்கூடாது.

எல்லா ஆஸுரத்தன்மையின் சுருக்கமான இதனைக் கூறுகிறார்: ஆஸுரத்தன்மையின்பேதமெல்லாம் அளவிறந்தனவாயினும், மூவகைத்தான அதனுள் அடங்கி நிற்கின்றன. மேலும், எதனை நீக்குவதனால் (ஆஸுரத்தன்மை) நீக்கப்பட்டதாகின்றதோ, எது எல்லாத்தீங்குகட்கும் அடிக்காரணமோ, அந்த இதனை அருளிச்செய்கிறார்:

௨௧. **நரகத்தினுடைய இவ்வாசல், ஆத்மாவைக் கெடுப்பதாய் காமம் கோபம்**

कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥

त्रिविधं त्रिप्रकारं नरकस्य प्राप्तौ इदं द्वारं नाशनमात्मनः, यत् द्वारं प्रविशन्नेव नश्यति आत्मा; कस्मैचित् पुरुषार्थाय योग्यो न भवति इत्येतत्, उच्यते 'द्वारं नाशनमात्मनः' इति। किं तत्? — कामः क्रोधः तथा लोभः। तस्मात् एतत् त्रयं त्यजेत्। यतः एतत् द्वारं नाशनमात्मनः, तस्मात् कामादित्रयं त्यजेत् ॥ २१ ॥

त्यागस्तुतिरियम् —

२२. **एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः ।**
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ॥

एतैः विमुक्तः कौन्तेय तमोद्वारैः तमसः नरकस्य दुःखमोहात्मकस्य द्वाराणि कामादयः तैः एतैः त्रिभिः विमुक्तः नरः आचरति अनुतिष्ठति — किम्? — आत्मनः श्रेयः। यत्प्रतिबद्धः पूर्वं न आचचार, तदपगमात् आचरति। ततः तदाचरणात् याति परां गतिम्, मोक्षमपि इति ॥ २२ ॥

सर्वस्य एतस्य आसुरीसंपत्परिवर्जनस्य श्रेयआचरणस्य च शास्त्रं कारणम्। शास्त्रप्रमाणात् उभयं शक्यं कर्तुम्, न अन्यथा। अतः —

உலோபம் என்னும் மூவகைத்தானது. ஆதலால், இம்மூன்றனையும் விட்டொழிய வேண்டும்.

நரகத்தினுடைய வாசல் - நரகத்தை அடைதற்கு வாசல். அவ்வாசலைப் புகுந்தே ஆத்மா கேடுறுகிறான்; ஒருபுருஷார்த்தத்திற்கும் [ஒருநன்மையையாயினும் பெறுதற்கு] தக்கவனுகிறானில்லை ஆதலால், "வாசல் ஆத்மாவைக் கெடுப்பது" எனக் கூறப்படுகின்றது.—அது யாது? —காமமும், கோபமும், உலோபமும் என்க. ஆகவே, இம்மூன்றனையும் நீக்கவேண்டும். இவ்வாசல் ஆத்மாவைக் கெடுப்பதாதலால், காமம் முதலிய மூன்றனையும் விட்டிடவேண்டும். (உக)

இது (அவற்றைத்) துறந்திடுதலின் புகழ்ச்சி :

உஉ. **கௌந்தேய! நரகத்தினுடைய இம்மூன்றுவாசல்களாலும் விடப்பெற்ற மனிதன் தனக்கு நன்மையைச் செய்துகொள்கிறான்; அதனுல், உயர்ந்த நிலையை அடைகிறான்.**

நரகத்தினுடைய - துன்பமயக்கவடிவமான நரகத்தினுடைய. வாசல்கள் - காமம் முதலியன. (இவற்றின்நீங்கியவன்) எதனை அநுஷ்டிக்கிறான்? —தனக்கு நலத்தை. எதனுல் தடுக்கப்பெற்று முன் (தனக்கு நலத்தைச்) செய்துகொள்ளாதிருந்தானே, அது தொலைந்துவிட்டமையால் (அந்நலத்தைச்) செய்துகொள்கிறான். அதனைச் செய்துகொள்வதனுல் மோக்ஷத்தையும் பெறுகிறானென்க. (உம்மையினுல் - இம்மைஇன்பத்தையும் பெறுகிறான் என்றபடி.—ஆ.) (உஉ)

சாஸ்திரம் வாழ்க்கைக்கு வழிகாட்டி.

ஆஸுரத்தன்மையை நீக்கிக்கொள்ளலும், நன்மையை நாடிக்கொள்ளலுமாகிய இவையனைத்திற்கும் சாஸ்திரம் காரணம். சாஸ்திரப்பிரமாணத்தினுல் இரண்டனையும் செய்யக்கூடும்; வேறுவிதமாயன்று. ஆகவே,

௨௩. யஃ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய வர்ததே காமகாரத꞉ ।
ந ஸ ஸித்திமவாப்நோதி ந ஸுகம் ந பராம் கதிம் ॥

ய꞉ ஶாஸ்த்ரவிதிம் ஶாஸ்த்ரம் வேதா꞉, தஸ்ய விதிம் கர்தவ்யாகர்தவ்யஜ்ஞாபநகாரணம் விதிப்ரதிஷேதரூபம் உத்ஸ்ருஜ்ய த்யக்த்வா வர்ததே காமகாரத꞉ காமப்ரயுக்த꞉ ஸந், ந ஸ꞉ ஸித்திம் புருஷார்த்தயோக்யதாம் அவாப்நோதி, நாபி அஸ்மிந் லோகே ஸுகம், நாபி பராம் ப்ரக்ருஷ்டாம் கதிம் ஸ்வர்கம் மோக்ஷம் வா ॥ ௨௩ ॥

௨௪. தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।
ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥

து:கமிதி மந்வாநோ ய: கர்ம காயக்லேஶபயாத் ஶரீரேந்த்ரியாவஸாதபயாத் த்யஜேத், ஸ: க்ருத்வா ராஜஸம் ரஜோநிமித்தம் த்யாகம் நைவ த்யாகபலம் ஜ்ஞாநோத்பத்திகஸ்ய ஸர்வகர்மத்யாகஸ்ய பலம் மோக்ஷாக்யம் ந லபேத் நைவ லபேத ॥ ௮ ॥

க: புந: ஸாத்த்விக: த்யாக: இதி? ஆஹ—

மூ. கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந ।
ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக: ஸாத்த்விகோ மத: ॥

கார்யம் கர்தவ்யம் இத்யேவ யத் கர்ம நியதம் நித்யம் க்ரியதே [illegible] ஹே அர்ஜுந ஸங்கம் த்யக்த்வா பலம் ச ஏவ । யத:—நித்யாநாம் கர்மணாம் பலவத்த்வே [illegible] । அதவா—யத்யபி பலம் ந ஶ்ரூயதே நித்யஸ்ய கர்மண:, ததாபி நித்யம் கர்ம க்ருதம் க்ருதஸம்ஸ்காரம் ப்ரத்யவாயபரிஹாரம் வா பலம் கரோதி ஆத்மந: இதி கல்ப்யத ஏவ அஜ்ஞை:। தத்ர தாமபி கல்பநாம் நிவாரயதி 'பலம் த்யக்த்வா' இத்யநேந । அத: ஸாது உக்தம் 'ஸங்கம் த்யக்த்வா பலம் ச' இதி । ஸ: த்யாக: நித்யகர்மஸு ஸங்கபலபரித்யாக: ஸாத்த்விக: ஸத்த்வநிர்வ்ருத்த: மத: அபிப்ரேத: ॥

நநு கர்மபரித்யாக: த்ரிவித: ஸம்ந்யாஸ இதி ச ப்ரக்ருத: । தத்ர தாமஸோ ராஜஸஶ்ச உக்த: த்யாக: । கதம் இஹ ஸங்கபலத்யாக: த்ருதீயத்வேந

ராஜஸம் - ரஜோகுணத்தாலாவது. துறவின்பயனை-ஞானம் அமையப்பெற்று ஸகலகர்மங்களையும் விட்டிடுதலின் பயனாகிய மோக்ஷமென்பதை. (௮)

ஸாத்துவிகத்துறவு.

மற்று, ஸாத்துவிகத்துறவு யாது? என்பது—கூறுகிறார்:

மூ. செய்யவேண்டுமென்றே(அறிந்து), பற்றையும் பயனையும் விட்டு, அர்ஜுனா! நித்யகர்மத்தைச் செய்வது எதுவோ, அது ஸாத்துவிகத்துறவாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

நித்யகர்மங்கட்குப் பயனுண்டு என்னும் விஷயத்திலே பகவானுடைய இந்த ("பயனையும் விட்டு" என்னும்) திருவாக்கைப் பிரமாணமாகக் கூறியுள்ளோம்.—அல்லது, (இவ்வாறு கொள்ளலாம்.)—"நித்யகர்மத்திற்குச் சுருதியினுள் பயன் கூறப்படவில்லையாயினும், நித்யகர்மமானது செய்யப்பட்டவளவிலே தன்னை [செய்பவனை]ச் சீர்ப்படுத்துதலாகிய பயனையாவது, குற்றத்தை[செய்யாமையினாலாகும் பாவத்தை]ப் போக்குதலாகிய பயனையாவது தனக்குச்செய்கின்றது" என அஜ்ஞானி எண்ணவே எண்ணுகிறான். அங்கு அவ்வெண்ணத்தையும் "பயனைவிட்டு" என்பதனால் விலக்குகிறார். ஆகவே, "பற்றையும் பயனையும் விட்டு" என நன்கு கூறப்பட்டது. அந்தத் துறவானது, நித்யகர்மங்களின்மேல் பற்றையும் பயனையும் விட்டிடுதலானது ஸத்துவ குணத்தாலானது எனக் கொள்க.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், கர்மத்துறவானது மூவகைத்தான 'ஸந்யாஸம்' (௪அ - எ) எனப் பிரகிருதத்தில் பேசப்பட்டுவருகிறது. அவற்றுள், தாமஸத்துறவும், ராஜஸத்துறவும் கூறப்பட்டன. பற்றையும் பயனையும் விட்டிடுதல் இங்கு

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇? 𑌯𑌥𑌾 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌆𑌗𑌤𑌾𑌃, 𑌤𑌤𑍍𑌰 𑌷𑌡𑌙𑍍𑌗𑌵𑌿𑌦𑍌 𑌦𑍍𑌵𑍌, 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑍃𑌤𑍀𑌯𑌃 𑌇𑌤𑌿; 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 ॥

𑌨𑍈𑌷 𑌦𑍋𑌷𑌃, 𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌯 𑌚 𑌤𑍍𑌯𑌾𑌗𑌤𑍍𑌵𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌰𑌾𑌜𑌸𑌤𑌾𑌮𑌸𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌤𑍍𑌯𑌾𑌗𑌨𑌿𑌨𑍍𑌦𑌯𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇 ‘𑌸 𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍋 𑌮𑌤𑌃’ 𑌇𑌤𑌿 ॥ ௯ ॥

𑌯𑌸𑍍𑌤𑍁 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑌃 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌫𑌲𑌾𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌨𑌾 𑌅𑌕𑌲𑍁𑌷𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌮𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌂 𑌵𑌿𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌲𑍋𑌚𑌨𑌕𑍍𑌷𑌮𑌂 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌨𑌿𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇𑌨 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌯𑌥𑌾 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌆𑌹—

௧௦. 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑍍𑌯𑌕𑍁𑌶𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌶𑌲𑍇 𑌨𑌾𑌨𑍁𑌷𑌜𑍍𑌜𑌤𑍇 ।
𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌮𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑍇𑌧𑌾𑌵𑍀 𑌛𑌿𑌨𑍍𑌨𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

மூன்றாவதாக எப்படிக் கூறப்படுகின்றது? "மூன்று பிராமணர்கள் வந்தார்கள்; அவர்களில் இருவர் ஆறுசாஸ்திரங்களையும் அறிந்தவர்; மூன்றாமவன் க்ஷத்ரியன்" என்பது எப்படியோ, அதுபோல.

(ஸமாதானம்) :—இதுகுற்றமன்று [இந்த ஆக்ஷேபத்திற்கு இடமில்லை]; (இப்பிரகரணத்தின் கருத்தானது) துறவுப்பொதுமையினால் (பயனை விட்டிடுதலை) கொண்டாடும்பொருட்டாய் நிற்றலின். கர்மத்தை விட்டிடுதற்கும் பயனை எதிர்நோக்குதலை விட்டிடுதற்கும் விட்டிடுதலென்னும் பொதுமை உள்ளதன்றோ. ஆகவே, கர்மத்தை விட்டிடுதலை ராஜஸமாகத் தாமஸமாக இகழ்ந்துரைப்பதனால், கர்மத்தின் பயனை எதிர்நோக்குதலை விட்டிடுதலானது - " அது ஸாத்துவிகத்துறவாகக் கொள்ளபபட்டிருக்கின்றது " என ஸாத்துவிகமாகப் பாராட்டப்படுகின்றது. (௯)

பயனை எதிர்நோக்காது செய்தல் ஸகலகர்மத்துறவைத் தந்திட, ஞானநிஷ்டை கூடுகின்றது.

இனி, (கர்மத்திலே) உரிமையுள்ள எவன் பற்றையும், பயனை எதிர்நோக்குதலையும விட்டு, நித்யகர்மத்தைச் செய்கின்றானோ, அவனது அகக்கரணமானது பயன் மீதுள்ள ஆசைமுதலியவற்றால் கலக்கப்படுவதாகாது, நித்யகர்மங்களால் சீர்ப்படுத்தப்படுவதாய்த் திருந்துகின்றது. அது திருந்தித் தெளிந்ததாகி ஆத்மாவை ஆலோசிக்கத் தகுந்ததாகின்றது. நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதனால் அகக்கரணம் திருந்தியவனாய் ஆத்மஞானத்திற்கு எதிர்முகப்பட்டுநிற்கும் [ஆத்மஅறிவைத் தேடுதற்குச் சித்தனாயுள்ள] அவனுக்குப் படிப்படியாக அந்த [ஆத்மஞான] நிஷ்டை எவ்வாறு வருமோ, அதனைக் கூறவேண்டும் என அருளிச்செய்கிறார் :

௧௦. (பயனை) விட்டிடுதலையுடையவனாய், ஸத்துவம் நிறைந்தவனாய், அறிவுள்ளவனாய், ஸம்சயமற்றவன் நலமல்லாத செய்கையை வெறுப்பதில்லை ; நலமான (செய்கையின்மேல்) பற்றுக்கொள்வதில்லை.

ந த்வேஷ்டி அகுஶலம் அஶோபநம் காம்யம் கர்ம, ஶரீராரம்பத்வாரேண ஸம்ஸாரகாரணம், "கிம் அநேந?" இத்யேவம் । குஶலே ஶோபநே நித்யே கர்மணி "ஸத்த்வஶுத்திஜ்ஞாநோத்பத்திதந்நிஷ்டாஹேதுத்வேந மோக்ஷகாரணம் இதம்" இத்யேவம் ந அநுஷஜ்ஜதே, அநுஷங்கம் ப்ரீதிம் ந கரோதி இத்யர்த: । க: புந: அஸௌ? த்யாகீ, பூர்வோக்தேந ஸங்கபலத்யாகேந தத்வாந் த்யாகீ, ய: கர்மணி ஸங்கம் த்யக்த்வா தத்பலம் ச நித்யகர்மாநுஷ்டாயீ ஸ: த்யாகீ । கதா புந: அஸௌ அகுஶலம் கர்ம ந த்வேஷ்டி, குஶலே ச ந அநுஷஜ்ஜதே இதி? உச்யதே—ஸத்த்வஸமாவிஷ்ட: யதா ஸத்த்வேந ஆத்மாநாத்மவிவேகவிஜ்ஞாநஹேதுநா ஸமாவிஷ்ட: ஸம்வ்யாப்த:, ஸம்யுக்த: இத்யர்த: । அத ஏவ ச மேதாவீ மேதயா ஆத்மஜ்ஞாநலக்ஷணயா ப்ரஜ்ஞயா ஸம்யுக்த: தத்வாந் மேதாவீ । மேதாவித்வாதேவ சிந்நஸம்ஶய: சிந்ந: அவித்யாக்ருத: ஸம்ஶய: யஸ்ய "ஆத்மஸ்வரூபாவஸ்தாநமேவ பரம் நி:ஶ்ரேயஸஸாதநம், ந அந்யத் கிஞ்சித்" இத்யேவம் நிஶ்சயேந சிந்நஸம்ஶய: ॥

ய: அதிக்ருத: புருஷ: பூர்வோக்தேந ப்ரகாரேண கர்மயோகாநுஷ்டாநேந க்ரமேண ஸம்ஸ்க்ருதாத்மா ஸந் ஜந்மாதிவிக்ரியாரஹிதத்வேந நிஷ்க்ரியம் ஆத்மாநம் ஆத்மத்வேந ஸம்புத்த:, ஸ: ஸர்வகர்மாணி மநஸா ஸம்ந்யஸ்ய நைவ

நலமல்லாததை, உடம்பை உண்டாக்குதல் மூலமாய் ஸம்ஸாரத்திற்குக் காரணமான காம்யகர்மத்தை, "இதனால் என்ன?" என வெறுப்பதில்லை, நலமானதிலே, நித்தியகர்மத்திலே, "மனந்திருந்துதல், ஞானமுண்டாதல், அதிலே நிலைத்துநிற்றல் என்றவற்றைத் தருவதனால் இது முக்திக்குக்காரணம்" எனப் பற்றுக்கொள்வதில்லை, பிரியத்தைச் செய்வதில்லை என்றபடி.—மற்று, (இவ்வாறு செய்யாத) இவன் யார்?—முன்கூறிய துறவினால், பற்றையும்பயனையும் விட்டிடுவதனால் அதனை [விட்டிடுவதை] யுடையவன்; எவன் கர்மத்தின்மீது பற்றையும், அதன்பயனையும் விட்டு நித்யகர்மங்களை அனுஷ்டிப்பவனோ, அவன்.—நமைல்லாத கர்மத்தை இவன் எப்பொழுது வெறுப்பதில்லை? நலமானகர்மத்தின்மீதும் பற்றுக்கொள்வதில்லை? என்பது—கூறுவோம்: ஆத்மஅநாத்மாக்களைப் பகுத்தறியும் உணர்வைத் தருகின்ற ஸத்துவத்தோடு [மனத்தினது பெருந்தன்மையோடு] கூடியபொழுது என்க. அதனால்தான் [ஸத்துவம் அமைவதனால்தான்], ஆத்மஞானமென்னும் அறிவுள்ளவனாகிறான். அறிவுள்ளவனாதலால்தான், அவித்யையினாலான ஸம்சயமறப்பெறுகிறான்: "ஆத்மவடிவமாக(த் தன்னிலையில்) நிற்பதுதான் உறுதியான மேலான நன்மை; (மெய்யுணர்வுதான் அதற்கு) வழி; வேறோர்(வழி)இல்லை.—(ஆ.)" என இவ்வாறான நிச்சயத்தினால் ஸம்சயமற்றவனாகிறான்.

அதாவது - (கர்மத்திலே) உரிமையுள்ள எந்த மனிதன் முற்கூறியவாறு கர்மயோகத்தை அநுஷ்டிப்பதனால் வரவரச் சித்தம் சீர்திருத்தப்பெற்றவனாகி, பிறப்பு முதலிய விகாரங்களின்மையால் கர்மமில்லா ப்ரஹ்மத்தை ஆத்மாவாக அறிந்துகொண்டிருக்கின்றானோ, அவன் கர்மங்களெல்லாவற்றையும் மனத்தால் துறந்து (ஒன்

𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨 𑌕𑌾𑌰𑌯𑌨𑍍 𑌆𑌸𑍀𑌨𑌃 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑌨𑍇𑌨𑍈𑌵 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇𑌨 𑌉𑌕𑍍𑌤𑌮𑍍 ॥ ௧௦ ॥

𑌯𑌃 𑌪𑍁𑌨𑌰𑌧𑌿𑌕𑍃𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌦𑍇𑌹𑌭𑍃𑌦𑌜𑍍𑌞𑌃 𑌅𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌯𑌾 “𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾” 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌶𑍇𑌷𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌯 𑌅𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇 𑌏𑌵 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌨 𑌤𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌇𑌤𑌿 𑌏𑌤𑌮𑌰𑍍𑌥𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍁𑌮𑌾𑌹 —

௧௧. **𑌨 𑌹𑌿 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃 ।**
𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌸 𑌤𑍍𑌯𑌾𑌗𑍀𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

𑌨 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 **𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾**—𑌦𑍇𑌹𑌂 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍀𑌤𑌿 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑍍—𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌹𑌭𑍃𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇, 𑌨 𑌵𑌿𑌵𑍇𑌕𑍀 ; 𑌸 𑌹𑌿 ‘𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌮𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 । 𑌅𑌤𑌃 𑌤𑍇𑌨 𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾 𑌅𑌜𑍍𑌞𑍇𑌨 **𑌨 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍁𑌂** 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑌿𑌤𑍁𑌂 **𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌶𑍇𑌷𑌤𑌃** 𑌨𑌿𑌃𑌶𑍇𑌷𑍇𑌣 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 **𑌯𑌸𑍍𑌤𑍁** 𑌅𑌜𑍍𑌞𑌃 𑌅𑌧𑌿𑌕𑍃𑌤𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 **𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑍀** 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌭𑌿-

---

றையும்) செய்யவேசெய்யாது, செய்விக்காது வீற்றிருப்பவனும் நைஷ்கர்ம்யமென்னும் ஞானநிஷ்டையை, கர்மமற்றநிலையாகிய ஞானயோகத்தைப் பெறுகிறான் என்பது. முன்கூறிய கர்மயோகத்திற்கு இந்தசுலோகத்தினால் பயன் கூறப்பட்டது. (௧௦)

பயனை விட்டிடுதல்மாத்திரந்தான் அஜ்ஞானிகளால் செய்யக்கூடும்.

ஆனால், எவன் (கர்மத்திற்கு) உரியவனாய், உடம்பையே ஆத்மாவாகக்கொண்டுள்ளமையால் உடம்பைச் சுமந்துகொண்டிருப்பவனோ, அஜ்ஞானியோ, “ஆத்மா கர்த்தா” என்னும்அறிவு தள்ளுண்டுபோகாமையினால் “நான் கர்த்தா” என்னும் எண்ணத்தை உறுதிப்படுத்திக்கொண்டவனோ, அவனுக்கு - கர்மம்யாவற்றையும் விட்டிடுதல் இயலாதாதலால், கர்மத்தின்பயனை விட்டு(க்கர்மத்தைச்செய்வதிலேதான்), விதித்த கர்மங்களை அநுஷ்டிப்பதிலேதான் அதிகாரம் ; அவற்றை விட்டிடுவதில் அன்று. என்ற இவ்விஷயத்தை உணர்த்த அருளிச்செய்கிறார் :

௧௧. உடம்பையுடையவனால் கர்மங்களைமிச்சமில்லாது விட்டிட இயலாது ஆதலால், எவன் மற்றுக் கர்மத்தின்பயனை விடுபவனோ, அவன் “த்யாகி [விடுபவன்]” எனக் கூறப்படுகிறான்.

உடம்பே ஆத்மா என்னும் எண்ணமுள்ளவன் - உடம்பைச் சுமப்பவன், உடம்பை யுடையவன் எனப்படுகிறான் ; விவேகி [உடம்பையும், ஆத்மாவையும் பகுத்தறிபவன் உடம்பைச் சுமப்பவன்] அல்லன் ; ஏனெனில், “எவன்” (உ-௨௧) என்பது முதலியவற்றால் கர்த்தாவென்னும் அதிகாரத்தினின்றும் [அதனோடுகூடிக் கர்மத்தைச் செய்தலினின்றும்] அவன் நீக்கப்பட்டான். ஆகவே (பிரகிருதத்தின் பொருள் வருமாறு) :—உடம்பையுடைய அந்த அஜ்ஞானியினால் கர்மங்களை மிச்சமில்லாது அனைத்தையும் துறந்திடமுடியாது. ஆகவே, (கர்மத்திற்கு) உரிய எந்த அஜ்ஞானியானவன்

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌸𑌃 𑌤𑍍𑌯𑌾𑌗𑍀 𑌇𑌤𑌿 𑌅𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮𑍀 𑌅𑌪𑌿 𑌸𑌨𑍍 𑌇𑌤𑌿—𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑍈𑌵 𑌅𑌦𑍇𑌹𑌭𑍃𑌤𑌾 𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌰𑌹𑌿𑌤𑍇𑌨 𑌅𑌶𑍇𑌷𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍 ॥ ௧௧ ॥

𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌮𑍍, 𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௨. 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌫𑌲𑌮𑍍 ।
𑌭𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌨 𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ॥

𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌰𑌕𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍, 𑌇𑌷𑍍𑌟𑌂 𑌦𑍇𑌵𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍, 𑌮𑌿𑌶𑍍𑌰𑌮𑍍 𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌚, 𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍇𑌕𑌕𑌾𑌰𑌕𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌨𑌿𑌷𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌸𑌤𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌮𑍍 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜𑌾𑌲𑌮𑌾𑌯𑍋𑌪𑌮𑌂 𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌕𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑍋𑌪𑌸𑌰𑍍𑌪𑌿 𑌇𑌵—𑌫𑌲𑍍𑌗𑍁𑌤𑌯𑌾 𑌲𑌯𑌮𑍍 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌗𑌚𑍍𑌛𑌤𑍀𑌤𑌿 𑌫𑌲𑌨𑌿𑌰𑍍𑌵𑌚𑌨𑌮𑍍—𑌤𑌤𑍍 𑌏𑌤𑌤𑍍 𑌏𑌵𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌫𑌲𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌅𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌾𑌮𑍍 𑌅𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑌪𑌾𑌤𑌾𑌤𑍍 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍍 । 𑌨 𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥-

---

நித்யகர்மங்களைச் செய்யும்பொழுது கர்மத்தின்பயனை எதிர்நோக்குதலைமாத்திரம் துறந்திடுபவனே, அவன் கர்மியாயிருந்தாலும், " த்யாகீ [துறப்பவன்] " என்று சொல்லப்படுகிறான். என்பது புகழ்ச்சிக்கருத்தாலென்க [இவ்வாறுசொல்லுதல், கர்மத்தின் பயனை விட்டிடுதலைப் புகழும்பொருட்டென்க]. ஆகவே, கர்மங்களனைத்தையும் துறந்திடுதலானது உடம்பைச்சுமக்காதவனால், உடம்பே ஆத்மாஎன்னும் எண்ணமில்லாதவனால், உண்மையைக் காண்பவனால்தான் செய்யமுடியும். (௧௧)

இருவகைத் துறவிற்கும் இறந்தபின்பு வரும் பயன்கள்.

இனி, ஸகலகர்மத்துறவினால் [கர்மத்தைச்செய்தாலும், அதன்பயனை எதிர்நோக்குதலை விடுவதனால்.—ஆ.] எது வருமோ, அந்தப்பயன் யாது ? என்பது.— கூறுவோம் :

௧௨. **தீயதென, நல்லதென, கலந்ததெனக் கர்மத்தின் மூவகையான பயனும் துறவிகளல்லாதவர்கட்கு உண்டாகின்றன ; மற்றுத், துறவிகட்கு ஒருகாலத்துமில்லை.**

தீயது - நரகம், விலங்குமுதலாகியது. **நல்லது** - தேவர்முதலாகியது. **கலந்தது** - நல்லதும் தீயதும் சேர்ந்தது, மனிதராகியது **கர்மத்தின்** - நல்வினை தீவினை என்றவற்றின். (இவற்றின்) பயனானது வெளியிலுள்ள பல காரகங்களின் [கர்த்தா, கருவிமுதலியவற்றின்] செய்கைகளால் விளைந்திடுவதாய், அவித்யையின் தொழிலாய், இந்திரஜாலத்திற்கு ஒப்பானது ; பெரியமயக்கத்தைச் செய்வது ; உள்ளேயுள்ள ஆத்மாவை அணுகியிருப்பதுபோன்றுள்ளது. (பயனானது) ஸாரமில்லாததாய் லயத்தை, காணாமையை, மறைதலை அடைகின்றது என்பது - ஃபலம் என்னும்சொல்லுக்கு அவயவப்பொருள். துறவிகளல்லாதவர்கட்கு, பரமார்த்தஸந்யாஸிகளல்லாத [கர்மத்தின்பயனை விட்டிருந்தாலும், கர்மத்தைச் செய்தலை விடாத] கர்மிகளான அஜ்ஞானிகட்கு இத்தகைய அந்த மூவகைத்தான இப்பயன் உடம்புமாய்ந்தபின்பு உண்டாகின்றது; மற்றுப்,

संन्यासिनां परमहंसपरिव्राजकानां केवलज्ञाननिष्ठानां क्वचित् । न हि केवलसम्यग्दर्शननिष्ठा अविद्यादिसंसारबीजं न उन्मूलयति कदाचित् इत्यर्थः ॥ १२ ॥

अतः पारमार्थिकस्यैव अशेषकर्मसंन्यासित्वं संभवति, अविद्याध्यारोपितत्वात् आत्मनि क्रियाकारकफलानाम् ; न तु अज्ञस्य अधिष्ठानादीनि क्रियाकारकाणि आत्मत्वेनैव पश्यतः अशेषकर्मसंन्यासः संभवति । तदेतत् उत्तरैः श्लोकैः दर्शयति—

१३. पञ्चैतानि महाबाहो कारणानि निबोध मे ।
सांख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ॥

पञ्च एतानि वक्ष्यमाणानि हे महाबाहो कारणानि निर्वर्तकानि । निबोध मे इति उत्तरत्र चेतःसमाधानार्थं वस्तुवैषम्यप्रदर्शनार्थं च । तानि च कारणानि ज्ञातव्यतया स्तौति—सांख्ये ज्ञातव्याः पदार्थाः संख्यायन्ते यस्मिन् शास्त्रे तत् सांख्यं वेदान्तः । कृतान्ते इति तस्यैव विशेषणम्—कृतम् इति कर्म उच्यते, तस्य

பரமார்த்த ஸந்யாஸிகளான பரமஹம்ஸத் துறவிகட்கு, ஞானத்தில்மாத்திரம் நிலைத்தவர்க்கு(க் கீழ்க்கூறிய பயன்) எங்குமில்லை, கேவலமெய்யறிவு நிஷ்டையானது [வேறொன்றையும் சாராது, கேவல மெய்யுணர்வில்மாத்திரம் உறைத்துநிற்றலானது] அவித்யைமுதலான ஸம்ஸாரவிதையை அழிக்காதென்பது ஒருகாலும் இல்லையன்றோ என்பது பொருள். (௧௨)

ஆதலால், உண்மையைக் காண்பவனுக்குத்தான் கர்மமனைத்தையும் துறந்திடுதல் நிகழ்கின்றது ; செயலும், செய்பவனும், பயனும் ஆத்மாவினிடத்து அவித்யையினால் ஏற்றப்பட்டுள்ளமையின். ஆனால், செயலும் செய்பவனும் (செய்துமுடிக்கின்ற மற்றைக்)காரணங்களுமாகிய உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக் காண்கும் அஜ்ஞானிக்குக் கர்மமனைத்தையும் துறந்திடுதல் நிகழமாட்டாது. ஆகவே, இ(வ்விஷயத்)தைப் பின்வரும் சுலோகங்களால் எடுத்துக் காட்டுகிறார் :

ஒருதொழில் உண்டாகி முடிவுபெறுதற்குக் காரணங்கள்.

௧௩. உயர்தோள ! கர்மமுடிவுள்ள ஸாங்க்யத்திலே கூறப்பட்டவையாய், ஓரோர்தொழிலும் நிறைவேறுதற்கான இவ்வைந்து காரணங்களையும் என்னிடமிருந்து தெரிந்துகொள்.

இந்த - இனிக் கூறப்படுகின்ற. காரணங்கள் - (ஒருதொழிலைச்) செய்து முடிப்பவைகள். ‘‘ என்னிடமிருந்து தெரிந்துகொள் ’’ என, மேல்வருவனவற்றிலே (கேட்பவனது) மனத்தை ஒருப்படுத்தற்காகவும், (அப்) பொருள்களின் வேற்றுமையைக் காட்டுவதற்காகவும், அக்காரணங்களை அறியவேண்டிய பொருள்களாகப் பாராட்டுகிறார். ஸாங்க்யம் - அறியவேண்டியபொருள்கள் எந்தநூலினுள் உணர்த்தப்படுகின்றனவோ, அது : வேதாந்தம் [உபநிஷத்து]. க்ருதம்—எனக் கர்மம் உணர்த்தப்படுகின்

ண: பரிஸமாப்தி: யத்ர ஸ: க்ருதாந்த:, க்ருதாந்த: வேதாந்த: । 'யாவாநர்த்த உதபாநே' 'ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே' இதி க்ருத்ஸ்ந-ஜ்ஞாநே ஸஞ்ஜாதே ஸர்வகர்மணாம் நிவ்ருத்திம் ப்ரதர்ஶயதி । அத: தஸ்மிந் க்ருத்ஸ்நஜ்ஞா-நாய ஸாங்க்யே க்ருதாந்தே வேதாந்தே ப்ரோக்தாநி கதிதாநி ஸித்தயே நிஷ்-பத்தயே ஸர்வகர்மணாம் ॥ ௧௩ ॥

காநி தாநீதி உச்யதே—

௧௪. அதிஷ்டாநம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம் ।
விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா: தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥

அதிஷ்டாநம் இச்சாத்வேஷஸுகது:கஜ்ஞாநாதீநாம் அபிவ்யக்தே: ஆஶ்ரய: அதிஷ்டாநம் ஶரீரம், ததா கர்தா உபாதிலக்ஷண: போக்தா, கரணம் ச ஶ்ரோத்ராதி ஶப்தாத்யுபலப்தயே ப்ருதக்விதம் நாநாப்ரகாரம் தச் ச த்வாதஶஸங்க்யம், விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா: வாயவீயா: ப்ராணாபாநாத்யா: தைவம் சைவ தைவமேவ அத்ர ஏதேஷு பஞ்சஸு பஞ்சமம் பஞ்சாநாம் பூரணம் ஆதி-த்யாதி சக்ஷுராத்யநுக்ராஹகம் ॥ ௧௪ ॥

௧௫. ஶரீரவாங்மநோபிர்யத் கர்ம ப்ராரபதே நர: ।
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ: ॥

றது. "நீர்நிலையில்" (௨ - ௪௬), "கர்மமெல்லாம் பார்த்த! ஞானத்திலுள் மிச்சமில்லாது முடியப்பெறுகின்றன" (௪ - ௩௩) என்பது - ஆத்மஅறிவு பிறந்தவுடன் கர்மங்களெல்லாம் ஒழிந்திடுதலைக் காட்டுகின்றது. ஆகவே, ஆத்மஅறிவைக் கொடுக்கின்ற அந்த வேதாந்தமானது, ஞானசாஸ்திரமானது கர்மமுடிவுள்ளது, கர்மம்முடியப் பெறுவது என்க. அதனுள் கூறப்பட்ட ஐந்தும், ஒரொன்று செய்கையும் நிறைவேறுதற்கு(க் காரணங்களாம் என்றறிக). (௧௩)

அவை யாவை? என்பது.—கூறுவோம் :

௧௪. இடமும், அவ்வாறே கர்த்தாவும், பலவகையான கருவியும், தனித்தனியான பலவகைச் செய்கைகளுமாம்; இவற்றினுள், தைவமும் ஐந்தாவது.

இடம் - விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், அறிவுமுதலியன வெளிப்படுதற்கு இடமாயுள்ள உடம்பு. கர்த்தா - உபாதியினுடைய தன்மைகளையுடையவன் [புத்திமுதலியவற்றை அநுசரித்து அவற்றின் தன்மைகளை ஆத்மாவினிடத்துக் காண்பவன்.—ஆ.], அநுபவிப்பவன். பலவகையான கருவி - ஓசைமுதலியவற்றை உணர்தற்கான செவிமுதலியவை; அவை (ஞானேந்திரியங்கள் - ௫, கர்மேந்திரியங்கள் - ௫, மனம் - ௧, புத்தி - ௧, ஆகப்) பன்னிரண்டு. இவற்றினுள் - இந்நான்கினுள். தைவம் - கண்முதலியவற்றிற்கு அருள்புரிகின்ற ஆதித்யன் முதலியவை. (இந்திரியங்கள் எந்தெந்த தேவதைகளின் உதவியினால் தம்தம் தொழில்களை நடத்துகின்றனவோ, அந்தந்த தேவதைகள் என்றபடி.) (௧௪)

௧௫. மனிதன், நேரானதாக அல்லது மாறானதாகவுள்ள எந்தச் செய்கையை மெய்மொழிமனங்களால் செய்கின்றானோ, அதற்கு இந்த ஐந்தும் காரணங்களாம்.

शरीरवाङ्मनोभिः यत् कर्म त्रिभिः एतैः प्रारभते निर्वर्तयति नरः, न्याय्यं वा धर्म्यं शास्त्रीयं, विपरीतं वा अशास्त्रीयम् अधर्म्यं यच्चापि निमिषितचेष्टितादि जीवनहेतुः तदपि प्राक्कृतधर्माधर्मयोरेव कार्यमिति न्याय्यविपरीतयोरेव ग्रहणेन गृहीतं, पञ्च एते यथोक्ताः तस्य सर्वस्यैव कर्मणो हेतवः कारणानि ॥

ननु एतानि अधिष्ठानादीनि सर्वकर्मणां निर्वर्तकानि । कथम् उच्यते 'शरीरवाङ्मनोभिः यत् कर्म प्रारभते' इति ?—

नैष दोषः ; विधिप्रतिषेधलक्षणं सर्वं कर्म शरीरादित्रयप्रधानम् ; तदङ्गतया दर्शनश्रवणादि च जीवनलक्षणं त्रिधैव राशीकृत्य उच्यते शरीरादिभिः आरभ्यते इति । फलकालेऽपि तत्प्रधानैः

நேரானது - தருமம் பொருந்தியது, சாஸ்திரத்திற் கூறப்பெற்றது. மாறானது - சாஸ்திரத்திற்கு விரோதமானது, அதருமம் பொருந்தியது. உயிர்வாழ்வின் காரணமான இமைகொட்டல்முதலியன எவையோ, அவையும் முன்செய்யப்பட்ட தரும அதருமங்களின் செய்கையேயாதலால், "நேரானது, மாறானது" என்றமையினாலேயே கொள்ளப்பட்டன [குறிக்கப்பட்டன]. இந்த - கீழ்க்கூறிய. அதற்கு - கர்மமனைத்திற்குமே.

(ஆக்ஷேபம்) :—ஆயின், இந்த இடம்முதலியன (௧௮ - ௧௩, ௧௪) எல்லாக்கர்மங்களையும் செய்துமுடிப்பவை. "மெய்மொழிமனங்களால் எந்தச் செய்கையைச் செய்கின்றானோ" என எவ்வாறு கூறப்படுகின்றது? (இடம்முதலிய ஐந்தும் கர்மமெனப்படுகின்ற கர்மங்களெல்லாவற்றிற்குமே காரணமாதலால், காயிகம் வாசிகம் மாநஸிகம் என்னும்மூவகைக்கர்மத்திற்கும் காரணங்களாம் என்றல்பொருந்தவில்லை.)

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று [இந்தஆக்ஷேபத்திற்கு இடமில்லை]. விதிவிலக்குக்களாகிய எல்லாக்கர்மங்களும் மெய்முதலிய மூன்றனுள் (ஒன்றை) முக்கியமாகவுடையவை; உயிர்வாழ்வின்குறியாகிய பார்த்தல் கேட்டல் முதலியனவும் அவற்றின் துணையாகவுள்ளவை. (ஆகவே, எல்லாக்கர்மங்களும்) மூவகையாகவே வகுக்கப்பட்டு "மெய்முதலியவற்றால் செய்யப்படுகின்றன" எனக் கூறப்படுகின்றன. பயன் அநுபவிக்கும் காலத்திலும், அவற்றைத் தலைமையாகவுடைய கருவிகளைக்கொண்டே (ஒருகர்மத்தின் பயனானது) அநுபவிக்கப்படுகின்றது என ஐந்துமே காரணங்களாமென்பது முரண்படாதென்க. (மனமொழிமெய்கள் முக்கியமானவை; கண், செவி, முதலியன அவற்றிற்கு அங்கமானவை. ஒருதொழிலைச்செய்யுமிடத்து, மனமொழிமெய்களுள் ஏதாவதொன்று தலைமையாய் நின்று அதனை நடத்துகின்றது. உயிர்வாழ்வதனால் இயல்பாய் அமையும் பார்த்தல் கேட்டல் முதலிய கர்மங்கள் அப்பொழுது முந்தின முதல்வினையினுள் துணைவினைகளாய் அடங்குகின்றன. ஆதலால், கர்மங்களனைத்தையும் மூவகையாகப் பிரித்தது விரோதமில்லை. இனி, மனமொழிமெய்களால் செய்யப்படுகின்ற மூவகைக்கர்மத்தினுள்ளும் கர்மமெனப்படுகின்ற யாவையும் அடங்

ஸாதநை: புஜ்யதே இதி பஞ்சாநாமேவ ஹேதுத்வம் ந விருத்யதே இதி ॥

௧௬. தத்ரைவம் ஸதி கர்தாரமாத்மாநம் கேவலம் து ய: ।
பஶ்யத்யக்ருதபுத்தித்வாந் ந ஸ பஶ்யதி துர்மதி: ॥

தத்ர இதி ப்ரக்ருதேந ஸம்பத்யதே—ஏவம் ஸதி ஏவம் யதோக்தை: பஞ்சபி: ஹேதுபி: நிர்வர்த்யே ஸதி கர்மணி । 'தத்ரைவம் ஸதி' இதி உபபத்திகஸ்ய ஹேதுபாவேந ஸம்பத்யதே । தத்ர தேஷு ஆத்மாநந்தகேந அவித்யயா பரிஶுத்தை: க்ரியமாணஸ்ய கர்மண: "அஹமேவ கர்தா" இதி கர்தாரமாத்மாநம் கேவலம் ஶுத்தம் து ய: பஶ்யதி அவிசாராத்—கஸ்மாத்?—வேதாந்தாசார்யோபதேஶாபாவை: அக்ருதபுத்தித்வாத் அஸம்ஸ்க்ருதபுத்தித்வாத்—யோ(அ)பி தேஹாதிரிக்தாத்மதர்ஶீ ஆத்மாநமேவ கேவலம் கர்தாரம் பஶ்யதி, ஸோ(அ)பி அக்ருதபுத்தி: ஏவ—அத: அக்ருதபுத்தித்வாத் ந ஸ: பஶ்யதி ஆத்மாந: தத்த்வம் கர்மணோ வா இத்யர்த: । அத: துர்மதி:, குத்ஸிதா விபரீதா துஷ்டா அஜஸ்ரம் ஜநநமரணப்ரவ்ருத்திஹேதுபூதா மதி: அஸ்ய இதி துர்மதி: । ஸ: பஶ்யந்நபி ந பஶ்யதி, யதா தைமிரிக: அநேகம் சந்த்ரம், யதா வா

குமாறுபோல, கர்மத்தைச்செய்யும்பொழுதும் அதனதுபயனை அநுபவிக்கும்பொழுதும் உண்டாகின்ற காரணங்களனைத்தும், அந்தஇடம் முதலிய ஐந்தனுள்ளும் அடங்குதலைக் கண்டுகொள்க.) (௧௫)

ஆத்மா வினைக்குக் கர்த்தா என்பது வெறும்மயக்கம்.

௧௬. அவை இவ்வாறிருக்க, மற்று எவன் சுத்தமான ஆத்மாவை(தன்)அறிவு சீர்திருத்தப்பெறுமையினுல் கர்த்தாவாகக் காண்கிருனே, அந்தத் தாறுமாருன புத்தியன் காண்கிருனில்லை.

"அவை" என்பது - பிரகிருதத்தில் பேசிவரும் (கர்மத்தோடும்) இயையும். இவ்வாறிருக்க - கர்மமானது இவ்வாறு கீழ்க்கூறிய ஐந்து காரணங்களாலும் செய்யப்படுவதாயிருப்பதனுல். "அவை இவ்வாறிருக்க" என்பது - தாறுமாருன புத்தியுடைமைக்குக் காரணமாக இயையும். இனி, அவற்றை ஆத்மாவினும் வேறல்லவையாக [ஆத்மாவாகவே] அவித்யையினுல் கற்பித்துநிற்கும் அஜ்ஞானியானவன் அவற்ருல் செய்யப்படுகின்ற செய்கைக்கு "நான்தான் கர்த்தா" என, பரிசுத்தமான ஆத்மாவைக் கர்த்தாவாகக் காண்கிருன்.—எதனுல்? —வேதாந்தத்தால் புத்தி பயிற்றப்பெருதவன், ஆசார்யனது உபதேசத்தால் புத்தி சீர்திருத்தப்படாதவன், யுக்திகளால் புத்தி செம்மையாக்கப்படாதவன் ஆதலால். அன்றியும், எவன் "ஆத்மா உடம்புமுதலியவற்றினும் வேறு" என உரைப்பவனுய், சுத்தமான ஆத்மாவையே கர்த்தாவாகக் காண்கிருனே, அவனுங்கூடப் புத்தி சீர்திருத்தப் பெருதவனே என்க. ஆதலால், புத்தி சீர்திருத்தப்பெருமையினுல் அவன் ஆத்மாவினது உண்மையையாயினும், கர்மத்தினது உண்மையையாயினும் காண்கிருனில்லை என்பது பொருள்; ஆகவே [அவ்வுண்மையினைக் காணுமையினுல்], தீயதாகி தாறுமாருகிப் பொல்லாததாய் என்றும் பிறப்பைப்பெறுதற்குக் காரணமான புத்தியையுடையவன் என்க. திமிரமென்னும்கண்நோயுடையவன் அநேக சந்திரன்களை(க் காண்பது)

𑌅𑌭𑍍𑌰𑍇𑌷𑍁 𑌧𑌾𑌵𑌤𑍍𑌸𑍁 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌮𑍍, 𑌯𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌵𑌾𑌹𑌨𑍇 𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁 𑌧𑌾𑌵𑌤𑍍𑌸𑍁 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌮𑍍 ॥ ௧௬ ॥

𑌕𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌸𑍁𑌮𑌤𑌿𑌃 𑌯𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௧௭. 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌂𑌕𑍃𑌤𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌹𑌤𑍍𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸 𑌇𑌮𑌾𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌨 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

𑌯𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌨𑍍𑌯𑌾𑌯𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌨 𑌭𑌵𑌤𑌿 𑌅𑌹𑌂𑌕𑍃𑌤𑌃 “𑌅𑌹𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌭𑌾𑌵𑌃 𑌭𑌾𑌵𑌨𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃—“𑌏𑌤𑍇 𑌏𑌵 𑌪𑌞𑍍𑌚 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌯𑌃 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌃, 𑌨 𑌅𑌹𑌮𑍍, 𑌅𑌹𑌂 𑌤𑍁 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌭𑍂𑌤𑌃 ‘𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑍍𑌯𑌮𑌨𑌾𑌃 𑌶𑍁𑌭𑍍𑌰𑍋 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌃 𑌪𑌰𑌃’ 𑌕𑍇𑌵𑌲𑌃 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍—𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌉𑌪𑌾𑌧𑌿𑌭𑍂𑌤𑌾 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌅𑌨𑍁𑌶𑌯𑌿𑌨𑍀 𑌭𑌵𑌤𑌿—“𑌇𑌦𑌮𑌹𑌮𑌕𑌾𑌰𑍍𑌷𑌮𑍍, 𑌤𑍇𑌨 𑌅𑌹𑌂 𑌨𑌰𑌕𑌂 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿” 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨 𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇—𑌸 𑌸𑍁𑌮𑌤𑌿𑌃, 𑌸𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌅𑌪𑌿 𑌸𑌃 𑌇𑌮𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌇𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌃 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌨 𑌹𑌨𑍍𑌤𑌿

போலவும், அல்லது மேகங்கள் ஓடும்பொழுது சந்திரனை ஓடுவதாக(க் காண்பது) போலவும், அல்லது ஊர்திமேல் உட்கார்ந்திருப்பவன் பிற பொருள்கள் [தன்னைச் சுமந்து ஓடும் வண்டிமுதலியன] ஓடும்போது தன்னை ஓடுகிறவனாக(க் காண்பது) போலவும், அவன் காண்பவனாயினும் காண்கிறானில்லை. (கண்நோயுள்ளவன் அநேக சந்திரன்களைக் காண்பவனாயினும், சந்திரனை உண்மையாய்க் காண்பதில்லை, அதுபோல, பொல்லாதபுத்தியுள்ளவன் ஆத்மாவைக் கர்த்தாவாகக் காண்பவனாயினும், ஆத்மாவை உண்மையாய்க் காண்பதில்லை.—ஆ.) (௧௬)

ஆத்மாவை அகர்த்தாவாகக் கண்டு உணர்ந்தவனை, கர்மத்தின் பயன் தொடராது.

இனி, எவன் நேராகக் காண்கிறானோ, (அந்த) நற்புத்தியுள்ளவன் யார்? என்பது.—கூறுவோம்:

௧௭. **அஹங்கரித்த எண்ணம் எவனுக்கு இல்லையோ, எவனுடைய புத்தி கறைப்படுத்த [அழுக்கடைய]ப் பெறுவதில்லையோ, அவன் இப்பிராணிகளைக் கொன்றாலும், கொல்கிறானல்லன், கட்டப்படுகிறானல்லன்.**

அஹங்கரித்த எண்ணமானது, “யான் (வினைகளைச்) செய்பவன்” என்னும் இவ்வாறாகிய நினைப்பானது, சாஸ்திரத்தினாலும் ஆசார்யனது உபதேசத்தினாலும் யுக்திகளினாலும் மனம்சீர்திருத்தப்பெற்றவனுக்கு இல்லை. அவன், “அவித்யையினால் ஆத்மாவினிடத்துக் கற்பிக்கப்பட்ட உடம்புமுதலிய இவ்வைந்துந்தான் வினைகளையெல்லாம் செய்பவை; நான் அல்லன். நானோ அவற்றின் செய்கைகட்கு ஸாக்ஷியாயுள்ளவன், ‘மூச்சில்லாதவன், மனமில்லாதவன், பரிசுத்தமானவன், அழிவில்லாத மேலான பொருளினும் மேலானவன்’ (மு - ௨ - ௧ - ௨), தனியானவன், விகாரமற்றவன்” என இவ்வாறு கொள்கிறான் என்றபடி. எவனுடைய புத்தியானது, ஆத்மாவின் உபாதியான அகக்கரணமானது வருந்துவதில்லையோ, “நான் இதனைச் செய்தேன்; அதனால் நான் நரகத்தை அடையப்போகிறேன்” என இவ்வாறு எவனுடைய புத்தி அழுக்கடைவதில்லையோ, அவன் நற்புத்தியுள்ளவன், அவன் நேராகக்

ஹநநக்ரியாம் ந கரோதி, ந நிபத்யதே நாபி தத்பூர்வேண கர்மபலேந ஸம்பத்யதே ॥

நச ஹத்வாऽபி ந ஹந்தி இதி விப்ரதிஷித்தம் உச்யதே, யத்யபி ஸ்துதி: ।

நைஷ தோஷ:, லௌகிகபாரமார்த்திகத்ருஷ்ட்யபேக்ஷயா தது்பபத்தே: தேஹாத்மாபிமாநேந "ஹந்தா அஹம்" இதி லௌகிகீம் த்ருஷ்டிம் ஆஶ்ரித்ய 'ஹத்வாऽபி' இதி ஆஹ ; யதாவஸ்திதாம் பாரமார்த்திகீம் த்ருஷ்டிம் ஆஶ்ரித்ய 'ந ஹந்தி ந நிபத்யதே' இதி । ஏதத் உபயம் உபபத்யதே ஏவ ॥

நநு ச அதிஷ்டாநாதிபி: ஸம்பூய கரோதீத்யுக்த்வா, 'கர்தாரமாத்மாநம் கேவலம் து' இதி கேவலஶப்தப்ரயோகாத் ।

நைஷ: தோஷ:, ஆத்மந: அவிக்ரியஸ்வபாவஸ்யைவ அதிஷ்டாநாதிபி: ஸம்ஹத்ய கர்த்ருத்வோபபத்தே: । விக்ரியாவதோ ஹி கர்மஸு: ஸம்ஹநநம் ஸம்பவதி, ஸம்ஹத்ய வா கர்த்ருத்வம் ஸ்யாத் । ந து அவிக்ரியஸ்ய ஆத்மந: கேநசித் ஸம்ஹநநம் அஸ்தி இதி ந ஸம்பூய கர்த்ருத்வம் உபபத்யதே । அத: கேவலத்வம் ஆத்மந: ஸ்வாபாவிகமிதி கேவலஶப்த: அநுவாதமாத்ரம் । அவிக்ரியத்வம் ச ஆத்மந: ஶ்ருதிஸ்ம்ருதிந்யாயஸித்தம் । "அவிகார்யோऽயமுச்யதே" "குணைரே-

காண்கிறான். அவன் இந்த எல்லாப்பிராணிகளையும் கொன்றாலும், கொலைத்தொழிலைப் புரிகிறானல்லன் ; அன்றியும், அதனால் விளையும் தீவினைப்பயனினாலும் பற்றப்படுகிறானல்லன்.

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், புகழ்ச்சியாயிருந்தாலும் "கொன்றாலும், கொல்கிறானல்லன்" என மாறாகக் கூறப்படுகின்றது.

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று ; உலகநோக்கையும், உண்மைநோக்கையும் நோக்க அவை பொருந்துமாதலின் என்க. உடம்புமுதலியவையே ஆத்மா என்னும் எண்ணத்தினால் "கொல்பவன் நான்" என்னும் உலகநோக்கைக்கொண்டு "கொன்றாலும்" என்கிறார் ; கீழ்க்காட்டிய உண்மைநோக்கைக்கொண்டு "கொல்கிறானல்லன், கட்டப்படுகிறானல்லன்" என்கிறார். இவையிரண்டும் இவ்வாறாகப் பொருந்தவே பொருந்துகின்றன.

(ஆக்ஷேபம்) :—ஆயின், ஆத்மா உடம்புமுதலியவற்றோடு ஒருங்குசேர்ந்து செய்யவே செய்கின்றது ; "சுத்தமான ஆத்மாவைக் கர்த்தாவாகக் காண்கிறான்" (௧௮ - ௧௬) என "சுத்தமான" என்னுஞ்சொல்லை வழங்கியதனாலென்க.

(ஸமாதாநம்) :—இது குற்றமன்று ; ஏனெனில், ஆத்மாவிற்கு விகாரமின்மை இயல்பாதலால், உடம்புமுதலியவற்றோடு ஒருங்குசேர்தல் ஏலாது. விகாரமுடையதற்கன்றோ பிறவற்றோடு ஒருங்குசேர்தல் நிகழக்கூடும் ; ஒருங்குசேர்ந்தன்றோ கர்த்தாவாதலாகும். ஆனால், விகாரமில்லாத ஆத்மாவிற்கு ஒன்றனோடும் ஒருங்குசேர்தல் செல்லாதாதலால், ஒருங்குசேர்ந்து கர்த்தாவாதல் அமையாது. ஆகவே, தன்னந்தனிமையானது ஆத்மாவினுடைய இயல்பாதலால், "சுத்தமான" என்னுஞ்சொல் அநுவாதமாத்திரந்தான் (அவ்வியல்பினைக் குறிப்பதுதான்) என்க. மேலும், ஆத்மா அவிகாரியென்பது சுருதிகளினாலும், ஸ்மிருதிகளினாலும், யுக்திகளினாலும் பிரசித்தமாயுள்ளது. "இது விகாரப்படாதது" (௨ - ௨௫), "குணங்களாலேதான் வினைகள் செய்யப்படுகின்றன" (௩ - ௨௭), "உடம்பிலுள்ளதாயினும், செய்வதில்லை" (௧௩ -

𑌰𑍇𑌵 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑍇" "𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌅𑌸𑌕𑍃𑌤𑍍 𑌉𑌪𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌗𑍀𑌤𑌾𑌸𑍍𑌵𑍇𑌵 𑌤𑌾𑌵𑌤𑍍 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌷𑍁 𑌚 '𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍀𑌵 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍀𑌵' 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍁 । 𑌨𑍍𑌯𑌾𑌯𑌤𑌶𑍍𑌚—𑌨𑌿𑌰𑌵𑌯𑌵𑌸𑍍𑌯 𑌅𑌪𑌰𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌰𑌾𑌜𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 । 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌽𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑍈𑌵 𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿, 𑌨 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌆𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌾𑌣𑌿 𑌸𑍍𑌯𑍁𑌃 । 𑌨 𑌹𑌿 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑍇𑌣 𑌅𑌕𑍃𑌤𑌂 𑌆𑌗𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 । 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌗𑌮𑌿𑌤𑌂, 𑌨 𑌤𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 ; 𑌯𑌥𑌾 𑌰𑌜𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌯𑌾𑌃 ; 𑌯𑌥𑌾𑌵𑌾 𑌤𑌲𑌮𑌲𑌿𑌨𑌤𑍍𑌵𑌂 𑌬𑌾𑌲𑍈𑌃 𑌗𑌮𑌿𑌤𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌨 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 । 𑌤𑌥𑌾 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌽𑌪𑌿 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵, 𑌨 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤𑌂 "𑌅𑌹𑌂𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌲𑍇𑌪𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇" 𑌇𑌤𑌿 ॥

'𑌨𑌾𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌹𑌨𑍍𑌯𑌤𑍇' 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 '𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌹𑍇𑌤𑍁𑌵𑌚𑌨𑍇𑌨 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌂 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, '𑌵𑍇𑌦𑌾𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌦𑍁𑌷𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑍌 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃 𑌉𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌾𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌸𑌂𑌗𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌇𑌹 𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌪𑌿𑌂𑌡𑍀𑌕𑌰𑌣𑌾𑌯 "𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍

---

௩௧) என்பனமுதலியவை, முதலில் கீதையிலேயே ஒருமுறைக்குப்பலமுறை உணர்த்தப்பட்டிருக்கின்றன. "தியானிப்பதுபோலும், அசைவதுபோலும்" (பி - சு - ௩ - ௭) என இதுமுதலான சுருதிகளிலும், (ஆத்மாவிற்கு விகாரமில்லை எனக் கூறப்படுகின்றது). மற்றும், யுக்தியினாலும் (அது மெய்ப்பிக்கப்படுகின்றது):—" ஆத்மா என்னும் உண்மைப்பொருள் உறுப்புக்களில்லாதது, வேறொன்றைச் சாராதது[சுதந்திரமானது], விகாரமில்லாதது" என்பது - ராஜமார்க்கம் [விவாதமில்லா விஷயம்]. ஆத்மாவிற்கு விகாரம் உண்டு எனக்கொண்டாலும், தன்னுடைய விகாரந்தான் தனக்கு நிகழக்கூடும் ; உடம்புமுதலியவற்றின் செய்கைகட்கு ஆத்மா கர்த்தாவாகமாட்டாது. ஒருவனது செய்கையானது பிறனால் செய்யப்படாததாய் (அவனுக்கு) வரமுடியாதன்றோ [ஒருவன் செய்த செய்கையானது, அதனைச்செய்யாத பிறனொருவனைச் சேரமாட்டாதன்றோ]. மற்று, அவித்யையினால் அடைவிக்கப்பட்டது எதுவோ, அது அதனுடையதாகாது : இப்பி வெள்ளியாகாதவாறுபோல ; அல்லது, சிறுவர்களால் அவித்யையினால் ஏற்றப்பட்ட தளமும், அழுக்குடைமையும் ஆகாசத்தினுடையதாகாதவாறுபோல. அவ்வாறே, உடம்புமுதலியவற்றினது விகாரமும் அவற்றினுடையதேதான் ; ஆத்மாவினுடையதன்று. ஆதலால், " அஹங்கரித்தலும், புத்தி அழுக்குறுதலும் இல்லாமையினால் ஞானி கொல்கிறானல்லன், கட்டப்படுகிறானல்லன்" எனக் கூறியது நேரென்க.

" இது கொல்வதன்று, கொல்லப்படுவதன்று" (௨ - ௧௯) என மேற்கொண்டு, " பிறப்பதில்லை" (௨ - ௨௦) என்பதுமுதலாகக் காரணத்தைக் கூறும் திருவாக்கினால், ஆத்மாவிற்கு விகாரமில்லை எனக்கூறி, ஞானிக்குக் கர்மத்திலே அதிகாரம் ஒழிதலை நூல்தொடக்கத்தில் "எவன்" (௨ - ௨௧) எனச் சுருக்கமாய்க்கூறி, இடையே ஆங்காங்கு பிரசங்கம்செய்து விரிக்கப்பட்ட(அதனை, அக்கர்மஒழிபை), " அறிந்தவன் கொல்கிறானல்லன், கட்டப்படுகிறானல்லன்" என இங்கே நூலின் உபதேசங்

ந ஹந்தி ந நிபத்யதே" இதி । ஏவம் ச ஸதி தேஹாத்யஹங்காராபிமாநாநுவ்ருத்தஸ்ய அவித்யாக்ருதாசேஷகர்மஸந்யாஸோபபத்தேஃ ஸந்யாஸிநாம் அநிஷ்டாதி த்ரிவிதம் கர்மண: பலம் ந பவதி இதி யுக்தம்; தத்விபர்யயாச்ச இதரேஷாம் பவதி இத்யேதச்ச அபரிஹார்யம் இதி ஏஷ: கீதாசாஸ்த்ரார்த்த: உபஸம்ஹ்ருத: । ஸ ஏஷ: ஸர்வவேதார்த்தஸார: நிபுணமதிபி: பண்டிதை: விசார்ய ப்ரதிபத்தவ்ய: இதி தத்ர தத்ர ப்ரகரணவிபாகேந தர்சித: அஸ்மாபி: சாஸ்த்ரந்யாயாநுஸாரேண ॥ ௧௭ ॥

அத இதாநீம் கர்மணாம் ப்ரவர்த்தகம் உச்யதே—

௧௮. ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதநா ।
கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ: ॥

ஜ்ஞாநம் ஜ்ஞாயதே அநேந இதி ஸர்வவிஷயம் அவிசேஷேண உச்யதே । ததா ஜ்ஞேயம் ஜ்ஞாதவ்யம், ததபி ஸாமாந்யேநைவ ஸர்வம் உச்யதே । ததா பரிஜ்ஞாதா உபாதிலக்ஷண: அவித்யாகல்பித: போக்தா । இதி ஏதத் த்ரயம் அவிசேஷேண ஸர்வகர்மணாம் ப்ரவர்த்திகா த்ரிவிதா த்ரிப்ரகாரா கர்மசோதநா । ஜ்ஞாநாதீநாம் ஹி த்ரயாணாம் ஸந்நிபாதே ஹாநோபாதாநாதிப்ரயோஜந: ஸர்வ-

களைத் திரட்டிவைக்கும்பொருட்டு முடிக்கிறாரென்க. இவ்வாறானவளவிலே, உடம்பையுடையவன் என்னும் எண்ணம் அமையாதிருக்க, அவித்யையினாலான கர்மங்களெல்லாவற்றையும் துறந்திடுதல் கூடுமாதலின், துறவிகட்குக் கர்மத்தின் பயனானது, தீயதுமுதலாக (௧௮ - ௧௨) மூவகைப்பட்ட பயனானது இல்லையென்பது பொருந்தியது; அன்றியும், "அதற்கு மாறானது மற்றையோர்கட்கு உண்டு" என்பதும் விலக்க முடியாதது. என்றஇந்த கீதாசாஸ்திர உபதேசமானது முடிக்கப்பட்டுளது. ஆகவே, எல்லாவேதங்களும் உபதேசிக்கின்ற உபதேசங்களுடைய இந்த ஸாரத்தை, தேர்ந்த அறிவுள்ள ஞானிகள் ஆராய்ந்து உணரவேண்டும் என்று ஆங்காங்கு பிரகரணங்களைப் பிரித்து, சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும்இணங்க நாம் (இவ்விஷயத்தைக்) காட்டியுள்ளோம். (௧௭)

தொழிலுக்குத் தூண்டுகோல்.

இனி, இப்பொழுது, கர்மங்களைத் தூண்டுவதைக் கூறுகிறார் :

௧௮. கர்மத்தைத் தூண்டும்பொருளானது அறிவு, அறியப்படும்பொருள், அறிபவன் (என) மூவகைத்து. கர்மத்தினுடைய தங்குமிடமானது கருவி, செயப்படுபொருள், செய்பவன் என மூவகைத்து.

அறிவு எனப் பொதுவாக எல்லாவற்றையும் பற்றிய அறிவு உணர்த்தப்படுகின்றது. அவ்வாறே, அறியப்படும்பொருள் எனப் பொதுவாகவே எல்லாப்பொருளும் உணர்த்தப்படுகின்றன. அறிபவன் - உபாதியினது தன்மையையுடையவன், (புத்தி முதலிய உபாதிகளைப் பின்பற்றி, அவற்றின் தன்மைகளை ஆத்மாவினிடத்துக் காண்பவன்), அவித்யையினால் கற்பிக்கப்பட்டவன், அநுபவிப்பவன். என மூவகைத்தான இம்மூன்றும் பொதுவாகக் கர்மங்களெல்லாவற்றையும் கிளப்புகின்றவை. அறிவு முதலிய மூன்றும் சேர்ந்தவிடத்தன்றோ (ஒன்றைத்) தள்ளுதற்காகவும், கொள்ளுதற்காக

णं हि स्यात् । ततः पञ्चभिः अधिष्ठानादिभिः आरब्धं वाङ्मनःकायाश्रयभेदेन त्रिधा राशीभूतं त्रिषु करणादिषु संगृह्यते इत्येतत् उच्यते—करणं क्रियते अनेन इति बाह्यं श्रोत्रादि, अन्तःस्थं बुद्ध्यादि, कर्म ईप्सिततमं कर्तुः क्रियया व्याप्यमानम् (व्याप्यमाणम् इति पाठान्तरम्), कर्ता करणानां व्यापारयिता उपाधिलक्षणः इति त्रिविधः त्रिप्रकारः कर्मसंग्रहः—संगृह्यते अस्मिन्निति संग्रहः, कर्मणः संग्रहः कर्मसंग्रहः—कर्म एषु हि त्रिषु समवैति, तेन अयं त्रिविधः कर्मसंग्रहः ॥ १८ ॥

अथ इदानीं क्रियाकारकफलानां सर्वेषां गुणात्मकत्वात् सत्त्वरजस्तमोगुणभेदतः त्रिविधः भेदः वक्तव्यः इति आरभ्यते—

१९. ज्ञानं कर्म च कर्ता च त्रिधैव गुणभेदतः ।
प्रोच्यते गुणसंख्याने यथावच्छृणु तान्यपि ॥

ज्ञानं कर्म च—कर्म क्रिया, न कारकं पारिभाषिकम् ईप्सिततमं कर्म—कर्ता च निर्वर्तकः क्रियाणां त्रिधा एव—अवधारणं गुणव्यतिरिक्तजात्यन्तराभावप्रदर्शनार्थम्—गुणभेदतः सत्त्वादिभेदेन इत्यर्थः । प्रोच्यते कथ्यते गुणसंख्याने कापिले शास्त्रे—तदपि

வும், பிறவற்றிற்காகவும் ஒருசெய்கையைச் செய்யலாகும். ஆகவே, (கர்மமானது) உடம்புமுதலிய ஐந்திஞலும் செய்யப்பட்டு, மொழி மனம் மெய் என்னும் இடங்களின் பேதப்படி மூன்றுவகுப்பாகப் பிரிக்கப்பட்டு, கருவிமுதலிய மூன்றனுள்ளும் தங்கிநிற்கின்றது என்பதைக் கூறுகிருர் :—புறக்கருவி - செவிமுதலியன. அகக்கருவி - புத்திமுதலியன. செயப்படுபொருள் - அடையக்கருதியவற்றுள் மிகவும் விரும்பியது. கர்த்தாவினுடைய செய்கையினுல் வியாபிக்கப்படுவது, (அல்லது அடையப்படுவது). செய்பவன் - கருவிகளைத் தொழிற்படுத்துபவன், உபாதியினுடைய தன்மையைக் கொண்டவன். கர்மமானது இம்மூன்றனுள்ளுந்தான் தங்கிநிற்கின்றது ; ஆகவே, கர்மத்திற்கு இத்தங்குமிடம் மூவகைத்தாம் என்க. (௧அ)

துணங்கட்குத் தக்கபடி, தூண்டுகோல் மூவகைத்து.

இனி, இப்பொழுது,செய்கையும் செய்யும்பொருள்களும்பயனுமாகிய எல்லாம் குணவடிவமாயிருப்பதனுல், ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களின் பேதத்தால் மூவகையான பேதத்தை உணர்த்தவேண்டும் எனத் தொடங்குகிருர் :

௧௯. அறிவும், செயலும், செய்பவனும் குணசாஸ்திரத்தினுள் குணங்களின் பேதத்தால் மூவகையாகவே கூறப்படுகின்றது. அவற்றையும் உள்ளவாறு கேட்டுக் கொள்.

கர்மம் - செய்கை, தொழில், வினை ; பரிபாஷையான காரகமன்று, அடையக்கருதியவற்றுள் மிகவும் விரும்பியதான செயப்படுபொருளன்று. செய்பவன் - செய்கைகளைச் செய்துமுடிப்பவன். ("மூவகையாகவே" என்னும்) தேற்றமானது-குணங்கட்குப் புறம்பான வேறு வேற்றுமை இல்லை [அறிவுமுதலியவற்றுள், குணங்களாலான பேதத்தைத்தவிர வேறுவிதமான பேதமில்லை] என்பதை விளக்குதற்காக என்க. குணங்கள் - ஸத்துவம்முதலியன. குணசாஸ்திரத்தினுள் - கபிலருடைய நூலி

𑌗𑍁𑌣𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌨𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌗𑍁𑌣𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍇𑌵 । 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌕𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍇 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌤𑍇 𑌹𑌿 𑌕𑌾𑌪𑌿𑌲𑌾𑌃 𑌗𑍁𑌣𑌗𑍌𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑍇 𑌅𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌤𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌪𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑍇𑌨 𑌉𑌪𑌾𑌦𑍀𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 । 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌤𑌾𑌨𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌿 𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑌜𑌾𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌗𑍁𑌣𑌭𑍇𑌦𑌕𑍃𑌤𑌾𑌨𑌿 𑌶𑍃𑌣𑍁, 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍇 𑌅𑌰𑍍𑌥𑍇 𑌸𑌮𑌾𑌧𑌿𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 ॥ ௧௯ ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌤𑍍𑌵𑌮𑍍 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—

௨௰. 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑍇𑌨𑍈𑌕𑌂 𑌭𑌾𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ।
𑌅𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌮𑍍 ॥

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌦𑌿𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌏𑌕𑌂 𑌭𑌾𑌵𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁—𑌭𑌾𑌵𑌶𑌬𑍍𑌦𑌃 𑌵𑌸𑍍𑌤𑍁𑌵𑌾𑌚𑍀, 𑌏𑌕𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃—𑌅𑌵𑍍𑌯𑌯𑌂, 𑌨 𑌵𑍍𑌯𑍇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌵𑌾, 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨, 𑌤𑌂 𑌚 𑌭𑌾𑌵𑌮𑍍 𑌅𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍇𑌹𑌂, 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌦𑍇𑌹𑌭𑍇𑌦𑍇𑌷𑍁 𑌨 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁, 𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌤𑍍 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 𑌅𑌦𑍍𑌵𑍈𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌇𑌤𑌿 ॥ ௨௰ ॥

னுள். குணங்களை உணர்த்துகின்ற அந்நூலும் குணங்களது விஷயத்திலும், (அவற்றை) அநுபவிப்பவனது விஷயத்திலும் பிரமாணந்தான். "மெய்ப்பொருள் - ப்ரஹ்மம் ஒன்றுதான்" என்னும் விஷயத்திலே அது மாறுபடுகின்றது என்றாலும், கபிலரைப் பின்பற்றியவர்கள் குணங்களையும், குணங்களது செய்கைகளையும் உணர்த்துவதிலே தேர்ந்தவர்கள் என்று, இனிக் கூறப்படும் விஷயத்தைப் புகழும்பொருட்டாய் அந்நூலும் கொள்ளப்படுகின்றது என விரோதமில்லை. அறிவு முதலியவற்றையும், குணங்களின் பேதத்தாலான அ(ந்த அறிவுமுதலிய)வற்றின் பேதங்களெல்லாவற்றையும் சாஸ்திரத்திற்குஇணங்க யுக்திக்குப் பொருந்துமாறு கேள், இனிக்கூறப்படுகின்ற விஷயத்திலே மனம் அலையாதுநிற்றலைச் செய்துகொள் என்றபடி. (௧௯)

ஸாத்துவிக அறிவு.

இனி, அறிவு மூவகையாயுள்ளதை முதலில் உணர்த்துகிறார் :

௨௰. (ஒருவன்) எல்லாப் பொருள்களுள்ளும் ஓரேபொருளை, திரிபில்லாததை, வேறுவேறாயுள்ளவற்றில் வேறுவேறாயிராததை எதனால் காண்கின்றானோ, அந்த அறிவை ஸாத்துவிகமாகத் தெரிந்துகொள்.

எல்லாப்பொருள்களுள்ளும் - அவ்யக்தம்முதலாக ஸ்தாவரம் ஈறாகவுள்ள பொருள்களில். எதனால் - அறிவினால். 𑌭𑌾𑌵𑌂என்னும்சொல் - பொருளென்பதை உணர்த்துவது. ஓரேபொருளை - ஒன்றான ஆத்மா என்னும் பொருளை என்றபடி. திரிபில்லாததை - தானாகவாயினும், தனது இயல்பினாலாயினும் மாறுபடாததை; கூடஸ்தமானதை, விகாரமற்றதை என்றபடி. அந்த ஆத்மப்பொருளானது - வேறுவேறான உடம்புகளுள் வேறுவேறாயிராதது, உடம்புதோறும் வேறுபடாதது, ஆகாசம்போல இடையீடில்லாதது என்று பொருள். அத்வைதமான ஆத்மாவைப்பற்றிய அந்த நேரான மெய்யறிவை ஸாத்துவிகமென்று அறிந்துகொள். (௨௰)

𑌯𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑍈𑌤𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌅𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌰𑌾𑌜𑌸𑌾𑌨𑌿 𑌤𑌾𑌮𑌸𑌾𑌨𑌿 𑌚 𑌇𑌤𑌿 𑌨 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑌾𑌰𑍋𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑌯𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿—

௨௧. 𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑍁 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌨𑍍𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 ।
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌰𑌾𑌜𑌸𑌮𑍍 ॥

𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑍁 𑌭𑍇𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑌰𑍀𑌰𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌾𑌨𑍍 𑌪𑍃𑌥𑌕𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌭𑌿𑌨𑍍𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁—𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌯𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃—𑌤𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌰𑌜𑍋𑌗𑍁𑌣𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍍 ॥ ௨௧ ॥

௨௨. 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌦𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌸𑌕𑍍𑌤𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 ।
𑌅𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌵𑌦𑌲𑍍𑌪𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌤𑍍 𑌸𑌮𑌸𑍍𑌤𑌵𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌮𑌿𑌵 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌦𑍇𑌹𑍇 𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌦𑍌 𑌸𑌕𑍍𑌤𑌮𑍍 “𑌏𑌤𑌾𑌵𑌾𑌨𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑌾, 𑌨 𑌅𑌤𑌃 𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑌿” 𑌇𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌨𑌗𑍍𑌨𑌕𑍍𑌷𑌪𑌣𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌶𑌰𑍀𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑍀 𑌦𑍇𑌹-

---

ராஜஸ அறிவும், தாமஸ அறிவும்.

(தருக்கசாஸ்திரமுதலிய) த்வைத நூல்கள் எவையோ, அவை நேரானவையல்ல, ராஜஸமானவை, தாமஸமானவை ; எனவே, ஸம்ஸாரத்தைத் தொலைப்பதற்கு ஆகமாட்டா :

௨௧. *மற்று, எந்த அறிவானது எல்லாப்பொருள்களினுள்ளும் வெவ்வேறுவிதமான பல ஆத்மாக்களை வேற்றுமையாக அறிகின்றதோ, அந்த அறிவை ராஜஸமாகத் தெரிந்துகொள்.*

வேற்றுமையாக - பேதமாக, உடம்புதோறும் வேருக. *பல* - வேருன. *வெவ்வேறுவிதமான* - வேறுவேறுதன்மையுள்ள என்றபடி. *அறிகின்றதோ* - அறிவு கர்த்தாவாதல் செல்லாமையால், "எந்த அறிவினுல் (ஒருவன்) அறிகின்ருனே" எனப் பொருள் (கொள்க. விறகு சமைக்கின்றது என்பதுபோல, உபசார வழக்கென்க.) *ராஜஸம்* - ரஜோகுணத்தாலானது. (௨௧)

௨௨. *ஆனல், எது ஒரே கார்யத்தின்மேல் (அதுதான்)ஸகலமும்போலப் பற்றுக்கொண்டதாய், யுக்தியில்லாததாய், உண்மைப்பொருள் இல்லாததாய், அற்பமாயுள்ளதோ, அந்த (அறிவு) தாமஸமாகக் கூறப்பட்டிருக்கின்றது.*

(கார்யங்கள், பூதவிகாரங்கள் பலவாயிருக்க,) ஓரேகார்யமான உடம்பின்மேல், அல்லது வெளியிலே விக்கிரகம்முதலியவற்றின்மேல், "இவ்வளவுதான் [உடம்பு எவ்வளவோ, அவ்வளவுதான்] ஆத்மா ; அல்லது, இவ்வளவுதான் [விக்கிரகம் எவ்வளவோ, அவ்வளவுதான்] ஈச்வரன் ; இதற்குமேலில்லை" எனக்கொண்டு எல்லாவற்றையும்பற்றியதாய்ப் பரிபூர்ணமாயிருப்பதுபோலத் தாமஸஅறிவு அழுந்திக் கிடப்பது. உதாரணம், "உடம்பினுள் உள்ள ஜீவன் உடம்புஅளவினன்" என்பது -

பரிமாணோ ஜீவ:, ஈஶ்வரோ வா பாஷாணதார்வாதிமாத்ர: இத்யேவம் ஸகலே கார்யே ஸக்தம் அஹைதுகம் ஹேதுவர்ஜிதம் நிர்யுக்திகம், அதத்த்வார்த்தவத் அயதார்த்தபூதார்த்தவத்—யதார்த்தபூத: அர்த்த: தத்த்வார்த்த:, ஸ: அஸ்ய ஜ்ஞேயபூத: அஸ்தீதி தத்த்வார்த்தவத் ந தத்த்வார்த்தவத் அதத்த்வார்த்தவத்—அஹைதுகத்வாதேவ அல்பம் ச, அல்பவிஷயத்வாத் அல்பபலத்வாச்ச । தத் தாமஸம் உதாஹ்ருதம் । தாமஸாநாம் ஹி ப்ராணிநாம் அவிவேகிநாம் ஏவம்ரூபம் ஜ்ஞாநம் த்ருஶ்யதே ॥ ௨௨ ॥

அத கர்மண: த்ரைவித்யம் உச்யதே—

௨௩. நியதம் ஸங்கரஹிதம் அராகத்வேஷத: க்ருதம் ।
அபலப்ரேப்ஸுநா கர்ம யத் தத் ஸாத்த்விகம் உச்யதே ॥

நியதம் நித்யம் ஸங்கரஹிதம் ஆஸக்திவர்ஜிதம் அராகத்வேஷத: க்ருதம் ராகப்ரயுக்தேந த்வேஷப்ரயுக்தேந ச க்ருதம் ராகத்வேஷத: க்ருதம், தத்விபரீதம் அராகத்வேஷத: க்ருதம், அபலப்ரேப்ஸுநா பலம் ப்ரேப்ஸதீதி பலப்ரேப்ஸு: பலத்ருஷ்ண: தத்விபரீதேந அபலப்ரேப்ஸுநா கர்த்ரா க்ருதம் கர்ம யத் தத் ஸாத்த்விகம் உச்யதே ॥ ௨௩ ॥

௨௪. யத் து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந: ।
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸம் உதாஹ்ருதம் ॥

ஆடையில்லா வெற்றுடம்பினராகிய ஜைநரது (கொள்கை). அல்லது, "ஈச்வரன், (விக்கிரகவடிவமாயுள்ள)கல், மரம் முதலியவையேதான்" (என்பது - சிலர் கொள்கை). இவ்வாருகத் தாமஸஅறிவு ஓரேகாரியத்தின்மேல், பூதவிகாரத்தின்மேல் பற்றுக்கொண்டது : யுக்திக்குப் பொருந்தாதது : உண்மைப்பொருளில்லாதது, அறிய வேண்டியதை உள்ளபடி அறியாதது : யுக்திக்குப் பொருந்தாமையிஞலேதான் அற்பமானது, செல்லக்கூடிய இடமானது சொற்பமாயிருத்தலால் அற்பமானது, அல்லது அற்பமான பயனையுடைமையிஞல் அற்பமானது என்க. பகுத்தறிவில்லாத் தாமஸப் பிராணிகட்கன்ரே இத்தகைய அறிவு காணப்படுகின்றது. (௨௨)

ஸாத்துவிகச்செய்கை.

இனி, இப்பொழுது, கர்மம் மூவகையாயிருப்பதை உணர்த்துகிருர் :

௨௩. பயனையடையக் கருதாதவனுல் பற்றின்றி, விருப்பும் வெறுப்புமின்றிச் செய்யப்பட்ட நித்ய கர்மம் எதுவோ, அது ஸாத்துவிகம் எனப்படுகின்றது.

விருப்பும் வெறுப்புமின்றி - விருப்பிஞலும், வெறுப்பிஞலும் தூண்டப்பெருது. பயனைக்கருதாதவனுல் - பயனிலே அவாவில்லாத கர்த்தாவிஞல். (௨௩)

ராஜஸச் செய்கையும், தாமஸச் செய்கையும்.

௨௪. மற்று, சிரமம்மிக்கதான எந்தக் கர்மமானது காமங்களையடையக் கருதுவோனுலாவது, அஹங்காரமுடையவனுலாவது செய்யப்படுகின்றதோ, அது ராஜஸமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

யத்து காமேப்ஸுநா கர்மபலப்ரேப்ஸுநா இத்யர்த:, கர்ம ஸாஹங்காரேண இதி ந தத்த்வஜ்ஞாநாபேக்ஷயா — கிம் தர்ஹி? — லௌகிகஶ்ரோத்ரியநிரஹங்காராபேக்ஷயா। யோ ஹி பரமார்தநிரஹங்கார: ஆத்மவித், ந தஸ்ய காமேப்ஸுத்வப்ரயாஸபஹுலகர்த்ருத்வப்ராப்தி: அஸ்தி। ஸாத்த்விகஸ்யாபி கர்மண: அநாத்மவித் ஸாஹங்கார: கர்தா, கிமுத ராஜஸதாமஸயோ:। லோகே அநாத்மவிதபி ஶ்ரோத்ரியோ நிரஹங்கார: உச்யதே "நிரஹங்கார: அயம் ப்ராஹ்மண:" இதி। தஸ்மாத் ததபேக்ஷயைவ 'ஸாஹங்காரேண வா' இதி உக்தம்। புந:ஶப்த: பாதபூரணார்த:। க்ரியதே பஹுலாயாஸம் கர்ம மஹதா ஆயாஸேந நிர்வர்த்யதே, தத் கர்ம ராஜஸம் உதாஹ்ருதம் ॥ ௨௪ ॥

௨௫. அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமநவேக்ஷ்ய ச பௌருஷம் ।
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸமுச்யதே ॥

அநுபந்தம் பஶ்சாத்பாவி யத் வஸ்து ஸ: அநுபந்த: உச்யதே தம் ச அநுபந்தம், க்ஷயம் யஸ்மிந் கர்மணி க்ரியமாணே ஶக்திக்ஷய: அர்தக்ஷயோ வா ஸ்யாத் தம் க்ஷயம், ஹிம்ஸாம் ப்ராணிபாதாம், அநவேக்ஷ்ய ச பௌருஷம் புருஷகாரம் "ஶக்நோமி இதம் கர்ம ஸமாபயிதும்" இத்யேவம் ஆத்மஸாமர்த்யம், இத்யேதாநி அநுபந்தாதீநி அநவேக்ஷ்ய பௌருஷாந்தாநி மோஹாத் அவிவேகத: ஆரப்யதே கர்ம யத் தத் தாமஸம் தமோநிர்வ்ருத்தம் உச்யதே ॥ ௨௫ ॥

காமங்களை - கர்மங்களின் பயன்களை. "அஹங்காரமுடையவனால்" என்றது - மெய்யுணர்வைக்குறித்தன்று.—மற்று, என்ன ?—செருக்கில்லாத ஸாதாரண ச்ரோத்திரியனை [வேதங்களைக் கற்றறிந்தவனை]க் குறித்து என்க. ஏனெனில், எவன் சுத்தமாய் அஹங்காரமில்லாதவனோ, ஆத்மாவை அறிந்தவனோ, அவன் காமங்களைப் பெறவிரும்புவோனாதலும், பிரயாஸமிக்க கர்மங்களைச் செய்வோனாதலும் செல்லா. ஆத்மாவை அறியாதவன் ஸாத்துவிககர்மத்தையுங்கூட அஹங்காரத்தோடு செய்பவன் ; ராஜஸதாமஸ (கர்ம)ங்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ ! உலகத்திலே ச்ரோத்திரியன் ஆத்மாவை அறியாதவனாயினும், அஹங்காரமில்லாதவன் எனப்படுகிறான் ; " இப்பிராமணன் அஹங்காரமில்லாதவன் " என்பதை (உலகவழக்கினுள் காண்க). ஆகவே, அவனைக்குறித்தே " அஹங்காரமுடையவனாலாவது " எனக் கூறப்பட்டது. (௨௪)

௨௫. வினைவதையும், நஷ்டத்தையும், கெடுதியையும், திறமையையும் ஆலோசிக்காது மயக்கத்தாலே எந்தக் கர்மம் தொடங்கப்படுகின்றதோ, அது தாமஸம் எனப்படுகின்றது.

பின்னால் வரும் பொருள் எதுவோ, அது வினைவது எனப்படுகின்றது ; (இங்கே, தீங்கான பயனென்க). நஷ்டம் - எந்தக் கர்மத்தைச் செய்யுங்கால், வலிமைக்காயினும், பொருளுக்காயினும் குறைவு வருமோ, (அந்தக் கர்மத்தாலாகும் அக்குறைவு). கெடுதி - பிராணிகட்கு ஹிம்ஸை. திறமை - " இக்கர்மத்தை முடிக்க வல்லேன் " என்ற இத்தகையதான தனது சாமர்த்தியம். மயக்கத்தாலே - பகுத்தறிவின்மையாலே. தாமஸம் - தமோகுணத்தாலானது. (௨௫)

இதாநீம் கர்த்ருபேதஃ உச்யதே—

௨௬. முக்தஸங்கோऽநஹம்வாதீ த்ருத்யுத்ஸாஹஸமந்விதஃ ।
ஸித்த்யஸித்த்யோர்நிர்விகாரஃ கர்தா ஸாத்த்விக உச்யதே ॥

முக்தஸங்கஃ முக்தஃ பரித்யக்தஃ ஸங்கஃ யேந ஸஃ முக்தஸங்கஃ, அநஹம்வாதீ ந அஹம்வதநஶீலஃ, த்ருத்யுத்ஸாஹஸமந்விதஃ த்ருதிஃ தாரணம், உத்ஸாஹஃ உத்யமஃ தாப்யாம் ஸமந்விதஃ ஸம்யுக்தஃ த்ருத்யுத்ஸாஹஸமந்விதஃ, ஸித்த்யஸித்த்யோஃ க்ரியமாணஸ்ய கர்மணஃ ஃபலஸித்தௌ அஸித்தௌ ச ஸித்த்யஸித்த்யோஃ நிர்விகாரஃ—கேவலம் ஶாஸ்த்ரப்ரமாணேந ப்ரயுக்தஃ ந ஃபலராகாதிநா யஃ ஸஃ நிர்விகாரஃ உச்யதே । ஏவம்பூதஃ கர்தா யஃ ஸஃ ஸாத்த்விகஃ உச்யதே ॥ ௨௬ ॥

௨௭. ராகீ கர்மஃபலப்ரேப்ஸுர்லுப்தோ ஹிம்ஸாத்மகோऽஶுசிஃ ।
ஹர்ஷஶோகாந்விதஃ கர்தா ராஜஸஃ பரிகீர்திதஃ ॥

ராகீ ராகஃ அஸ்ய அஸ்தீதி ராகீ, கர்மஃபலப்ரேப்ஸுஃ கர்மஃபலார்தீ, லுப்தஃ பரத்ரவ்யேஷு ஸஞ்ஜாததృஷ்ணஃ, தீர்தாதௌ ஸ்வத்ரவ்யாபரித்யாகீ வா, ஹிம்ஸாத்மகஃ பரபீடாகரஸ்வபாவஃ, அஶுசிஃ பாஹ்யாப்யந்தரஶௌச-

---

ஸாத்துவிககர்த்தா.

இப்பொழுது, செய்பவருடைய பேதத்தைக் கூறுகிறார்:

௨௬. பற்றை விட்டவனாய், "நான்" என்றுகூறாதவனாய், உறுதியும் ஊக்கமும் உடையவனாய், நிறைவேறுவதிலும் நிறைவேறாமையிலும் மாறுபாடில்லாத கர்த்தா, ஸாத்துவிகன் எனப்படுகிறான்.

"நான்" என்றுகூறுபவன் - ("இதனை நான் செய்தேன், நான் செய்தேன்" என்பவன், இவ்வாறு சொல்லுந்தன்மையன்.) நிறைவேறுவது - செய்யப்படுகின்ற ஒருகாரியத்தின் பயன் கைக்குக்கிடைப்பது. எவன் சாஸ்திரப்பிரமாணத்தினால்மாத்திரம் தூண்டப்பட்டவனோ ["சாஸ்திரமே எனக்குப் பிரமாணம்; ஆகவே, அது கூறுகிறபடி கர்மத்தைச் செய்யவேண்டும்" என்பதனால்மாத்திரம் கர்மத்தைச் செய்யத் தூண்டப்படுகிறானோ], பயனிலே உள்ள ஆசையினாலும் பிறவற்றாலும் தூண்டப்படாதவனோ, அவன் மாறுபாடில்லாதவன், திரிபில்லாதவன் எனப்படுகிறான். இவ்வாறான கர்த்தா எவனோ, அவன் ஸாத்துவிகன் எனப்படுகிறான். (௨௬)

ராஜஸ கர்த்தாவும், தாமஸ கர்த்தாவும்.

௨௭. காமமுடையவனாய், கர்மத்தின் பயனைப் பெற விரும்புபவனாய், கடும்பற்றுள்ளவனாய், ஹிம்ஸிக்குந்தன்மையனாய், அசுத்தமானவனாய், மகிழ்ச்சியும் வருத்தமும் உள்ள கர்த்தா ராஜஸனாகக் கூறப்பட்டிருக்கிறான்.

கர்மத்தின் பயனைப் பெற விரும்புபவன் - கர்மத்தின் பயனை வேண்டுபவன் என்றபடி. கடும்பற்றுள்ளவன் - பிறருடைய பொருள்களின்மேல் ஆசையுண்டாகப் பெற்றவன், யோக்கியர் முதலானோர்கட்குத் தனது பொருளை ஈயாதவனுமாம் என்க. ஹிம்ஸிக்குந்தன்மையன் - பிறர்க்குத் துன்பத்தைச்செய்யும் இயல்பினன். அசுத்தமான

வர்ஜித:, ஹர்ஷஶோகாந்வித: இஷ்டப்ராப்தௌ ஹர்ஷ:, அநிஷ்டப்ராப்தௌ இஷ்டவியோகே ச ஶோக: தாப்யாம் ஹர்ஷஶோகாப்யாம் ஸமந்வித: ஸம்யுக்த:, தஸ்யைவ ச கர்மண: ஸம்பத்திவிபத்திப்யாம் ஹர்ஷஶோகௌ ஸ்யாதாம், தாப்யாம் ஸம்யுக்தோ ய: கர்தா ஸ: ராஜஸ: பரிகீர்தித: ॥ ௨௭ ॥

௨௮. அயுக்த: ப்ராக்ருத: ஸ்தப்த: ஶடோ நைஷ்க்ருதிகோऽலஸ: ।
விஷாதீ தீர்கஸூத்ரீ ச கர்தா தாமஸ உச்யதே ॥

அயுக்த: ந யுக்த: அஸமாஹித:, ப்ராக்ருத: அத்யந்தாஸம்ஸ்க்ருதபுத்தி: பாலஸம:, ஸ்தப்த: தண்டவத் ந நமதி கஸ்மைசித்; ஶட: மாயாவீ ஶக்திகூஹநகாரீ; நைஷ்க்ருதிக: பரவிபேதநபர:; அலஸ: அப்ரவ்ருத்திஶீல: கர்தவ்யேஷ்வபி, விஷாதீ விஷாதவான் ஸர்வதா அவஸந்நஸ்வபாவ:; தீர்கஸூத்ரீ ச கர்தவ்யாநாம் தீர்கப்ரஸாரண:, ஸர்வதா மந்தஸ்வபாவ:, யத் அத்ய ஶ்வோ வா கர்தவ்யம் தத் மாஸேநாபி ந கரோதி; யஶ்ச ஏவம்பூத: கர்தா ஸ: தாமஸ: உச்யதே॥

௨௯. புத்தேர்பேதம் த்ருதேஶ்சைவ குணதஸ்த்ரிவிதம் ஶ்ருணு ।
ப்ரோச்யமாநமஶேஷேண ப்ருதக்த்வேந தநஞ்ஜய ॥

வன் - வெளிப்பரிசுத்தமும், உள்பரிசுத்தமும் இல்லாதவன். மகிழ்ச்சி - வேண்டியது கிடைத்தவளவிலே மகிழ்தல். வருத்தம் - வேண்டாதது வந்தவிடத்தும், வேண்டியது போனவிடத்தும் வருந்துதல். அ(ப்படிப்பட்ட)வனுக்கே, கர்மம் நிறைவேறுவதனுல் மகிழ்வும், தவறுவதனுல் வருத்தமும் வரும். அவற்றையுடைய கர்த்தா எவனே, அவன் ராஜஸன் எனப்படுகிறுன். (௨௭)

௨௮. ஒருநிலைப்படாதவன், கசடனுயுள்ளவன், விறைப்புள்ளவன், கள்ளமுடையவன், பொல்லாதவன், சோம்புதலுடையவன், ஏக்கமுள்ளவன், காலதாமதம் செய்பவன்—(இத்தகைய) கர்த்தா தாமஸன் எனப்படுகிறுன்.

கசடன்-சிறிதுகூடப்புத்திதிருந்தாதவன், குழந்தைக்கு ஒப்பானவன். விறைப்புள்ளவன்-தடிபோல,ஒருவனுக்கும் வணங்கமாட்டான். கள்ளமுடையவன்-வலிமையை மறைப்பவன். பொல்லாதவன் - (ஒருவரோடு ஒருவர் சேராவண்ணம்)பிறரைப் பிரித்திடுவதிலே கருத்துடையவன். சோம்புதலுடையவன் - செய்யவேண்டியவற்றிலும் செல்லுதலில்லாத் தன்மையன். ஏக்கமுள்ளவன் - எப்பொழுதும் அயர்ந்த இயல்பினன். காலதாமதஞ்செய்பவன் - செய்யவேண்டியவற்றிற்குக் காலத்தை நீட்டிப்பவன், எப்பொழுதும் மந்தத்தன்மையன்; இன்றைக்காயினும், நாளைக்காயினும் செய்யவேண்டியது எதுவோ, அதனை ஒருமாசத்திலுங்கூடச் செய்வதில்லை. எவன் இத்தகைய கர்த்தாவோ, அவன் தாமஸன் எனப்படுகிறுன். (௨௮)

குணங்கட்குத் தக்கபடி, புத்தியும், உறுதியும் மூவகைத்து.

௨௯. குணங்கட்கேற்ப புத்தி தைரியங்களுடைய மூவகைத்தான பிரிவை (நான்)குறைவிலாது தனித்தனியே சொல்ல, தநஞ்ஜய ! கேட்டுக்கொள்.

பாஹ்ஸ: ஸெஷம் யூரதெவெருவ ஸெஷம் மாணத்: ஸதாஷிமாணத்: த்ரவியம் மூரணா—உக் ஸாஹெத்ராவடிரவஸ:। லொரவூா நம கயூா நூ கரெஸ- ஷெண நிரவஸெஷத: யமாவகு வ்யுமக்ஷெஷ விவெக்த: யநஜய—ஜ்ஜயெ ஊாநாஷம் மெஷவம் வ ம்ரஹத்ம் யநம் ஜிதவாந், தெந கஸள யநஜய: கஜர்நா: ॥ உகூ ॥

௩௦. ப்ரவ்ருத்திம் வ நிவ்ருத்திம் வ காய்யாகாயெ் ஹயாஹயெ ।
பநும் மொக்ஷம் வ யா வெத்தி பூஸ்ஷா பாயூ் ஸாத்திகீ ॥

ப்ரவ்ருத்திம் வ ப்ரவ்ருத்தி: ப்ரவத்நம் பநுஹெது: கம்மாூ:, நிவ்ரு- த்திம் வ நிவ்ருத்தி: மொக்ஷஹெது: ஸம்ந்யாஸமார்:—பநுமொக்ஷஸமாநவாக்ய- ஸ்வாக வ்ரவ்ருத்திநிவ்ருத்தீ கம்முஸம்நூாஸமாமை உதி கவமத்தெத—காய்யாகாயெ் விஹிதவுதிஷிஜெ கத்துவுாகத்தவெயூ காரணாகாரணெ உதெத்தகு—கஸ்யு ?— தெஸகாலாஷவஷெக்ஷயா ஆஷூாதூஷூாஷுாநாம் கம்முணாம் । ஹயாஹயெ பிஹெதி கஸாநிதி ஹயம், ந ஹயம் அஹயம், ஹயம் வ அஹயம் வ ஹயாஹயெ, ஆஷூாஷூயோ: ஹயாஹயயொ: காரணெ உத்யா: । பநும் ஸஹெதுகம் மொக்ஷம் வ ஸஹெ-

"ஸத்துவம்முதலிய குணங்கட்குத்தக்கபடி, புத்தியினுடைய மூவகைப்பிரி வையும், தைரியத்தினுடைய மூவகைப்பிரிவையும் கேள்" என்பது, (அதாவது, இச் சுலோகத்தின் முதற்பாதியானது, இனிக்கூறப்படுவதற்கு) ஸூத்ரமாய் நிற்பது. குறைவிலாது-முழுதும் உள்ளபடியென்க. தனித்தனியே - தெளிவாக. அர்ஜுனன் திக்விஜயத்திலே மனிதர்களுடைய மிகுந்த செல்வத்தையும், தேவர்களுடைய மிகுந்த செல்வத்தையும் ஜயித்துவந்தான் ; அதனால், இவன் தநஞ்ஜயன் என்க. (உகூ)

ஸாத்துவிகபுத்தி.

௩௦. பிரவிருத்தியையும் நிவிருத்தியையும், கார்யத்தையும் அகார்யத்தையும், பயத்தையும் பயமின்மையையும், பந்தத்தையும் மோக்ஷத்தையும் எது அறிகின்றதோ, பார்த்த ! அந்தப்புத்தி ஸாத்துவிகமானது.

பிரவிருத்தி யென்பது - (ஸம்ஸாரக்)கட்டுக்குக் காரணமான கர்மவழி. நிவிருத்தியென்பது - (அதனினின்றும்) தப்புதற்குக் காரணமான துறவுவழி. பந்த மோக்ஷங்களோடு ஒரேவாக்கியத்தை யுடைமையினால் [இவற்றைக் கூறியுள்ள வாக் கியத்திலேயே கூறப்பட்டுள்ளமையால்], பிரவிருத்தி கர்மவழி எனவும், நிவிருத்தி துறவுவழி எனவும் தெரியவருகின்றன. கார்யத்தையும், அகார்யத்தையும் - விதிக் கப்பட்டதையும், விலக்கப்பட்டதையும் : செய்யவேண்டியதையும், செய்யலாகாத தையும் : செய்தலையும், தவிர்தலையும் என்றபடி.—எவற்றை?—இடம் காலம் முதலிய வற்றிற்கேற்ப இம்மைமறுமைக்கான கர்மங்களை. பயத்தையும், பயமின்மையையும் - இம்மைமறுமைப்பயத்திற்கும், அஃதின்மைக்கும் காரணமானவற்றை என்றபடி.— பந்தத்தையும் - (இதனையும், இதனது) காரணங்களையும். மோக்ஷத்தையும் - (இதனை

தத்த்வம் யா வேத்தி விஜாநாதி புத்தி: ஸா பார்த்த ஸாத்த்விகீ । ஜ்ஞாநம் புத்தே: வ்ருத்தி: ; புத்திஸ்து வ்ருத்திமதீ । த்ருதிரபி வ்ருத்திவிஶேஷ: ஏவ புத்தே: ॥ ௩௦ ॥

௩௧. யயா தர்மமதர்மம் ச கார்யம் சாகார்யமேவ ச ।
அயதாவத் ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த்த ராஜஸீ ॥

யயா தர்மம் ஶாஸ்த்ரசோதிதம் அதர்மம் ச ப்ரதிஷித்தம் கார்யம் ச அகார்யம் ச பூர்வோக்தே ஏவ கார்யாகார்யே அயதாவத் ந யதாவத் ஸர்வத: நிர்ணயேந ந ப்ரஜாநாதி, புத்தி: ஸா பார்த்த ராஜஸீ ॥ ௩௧ ॥

௩௨. அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாऽऽவ்ருதா ।
ஸர்வார்த்தாந் விபரீதாம்ஶ்ச புத்தி: ஸா பார்த்த தாமஸீ ॥

அதர்மம் ப்ரதிஷித்தம் தர்மம் விஹிதம் இதி யா மந்யதே ஜாநாதி தமஸா ஆவ்ருதா ஸதீ, ஸர்வார்த்தாந் ஸர்வாநேவ ஜ்ஞேயபதார்த்தாந் விபரீதாம்ஶ்ச விபரீதாநேவ ஜாநாதி, புத்தி: ஸா பார்த்த தாமஸீ ॥ ௩௨ ॥

௩௩. த்ருத்யா யயா தாரயதே மந:ப்ராணேந்த்ரியக்ரியா: ।

யும், இதனது) காரணங்களையும். அறிவென்பது புத்தியின் விருத்தி [போக்கு]; மற்று, புத்தி யென்பது விருத்திகளையுடையது. தைரியமென்பதும் புத்தியினுடைய ஓர்வகைவிருத்தியேதான் என்க. (கஅ - உ௦, உக, உஉ-ல் கூறிய அறிவிற்கும், இங்குக் கூறிய புத்திக்கும் இவ்வாறு வேற்றுமை காண்க.) (௩௦)

ராஜஸ புத்தியும், தாமஸ புத்தியும்.

௩௧. (ஒருவன்) **எதனால் தர்மத்தையும் அதர்மத்தையும், கார்யத்தையும் அகார்யத்தையும் உள்ளபடியல்லாது அறிகின்றானோ, பார்த்த! அந்தப் புத்தி ராஜஸமானது.**

தர்மத்தை - சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதை. **அதர்மத்தை** - விலக்கப்பட்டதை. கார்யமும் அகார்யமும் முன் (கஅ - ௩௦) கூறப்பட்டவையேதான். **உள்ளபடியல்லாது** - ஒன்றும் நிச்சயமன்றி. (இங்குக்கூறிய தருமமும், அதர்மமும் அபூர்வத்தைக் குறிக்கின்றன. அபூர்வம் - கர்மங்கள்செய்யப்பெற்றபின்பு, தமது பயன் வெளிப்படும்வரை தாம் நிற்கின்றநிலை. கார்யம் அகார்யம் என்பன- கர்மங்களைச்செய்தலையும், செய்யாமையையும் குறிக்கின்றன. ஆகவே, கூறினது கூறல் இல்லை யென்க —ஆ.) (௩௧)

௩௨. **எது இருளால் மூடுண்டு, அதர்மத்தை தர்மமென்று எல்லாப்பொருள்களையும் மாறாகவே கொள்கின்றதோ, பார்த்த! அந்தப் புத்தி தாமஸமானது.**

அதர்மத்தை - மறுக்கப்பட்டதை. **தர்மம்** - விதிக்கப்பட்டது. **கொள்கின்றதோ** - அறிகின்றதோ. **எல்லாப்பொருள்களையும்** - அறியப்படுகின்ற ஒவ்வொரு பொருளையுமே. (௩௨)

ஸாத்துவிக உறுதி.

௩௩. **(ஒருவன்,) யோகத்தைத் தவறாத எந்த உறுதியினால் மனம், பிராண**

योगेनाव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ॥

धृत्या यया — अव्यभिचारिण्या इति व्यवहितेन सम्बन्धः — धारयते — किम्? — मनःप्राणेन्द्रियक्रियाः मनश्च प्राणाश्च इन्द्रियाणि च मनःप्राणेन्द्रियाणि, तेषां क्रियाः चेष्टाः, ताः उच्छास्त्रमार्गप्रवृत्तेः धारयते धारयति — धृत्या हि धार्यमाणाः उच्छास्त्रमार्गविषयाः न भवन्ति — योगेन समाधिना, अव्यभिचारिण्या, नित्यसमाध्यनुगतया इत्यर्थः। एतदुक्तं भवति — अव्यभिचारिण्या धृत्या मनःप्राणेन्द्रियक्रियाः धारयमाणः योगेन धारयतीति । या एवंलक्षणा धृतिः सा पार्थ सात्त्विकी ॥

௩௪. यया तु धर्मकामार्थान् धृत्या धारयतेऽर्जुन ।
प्रसङ्गेन फलाकाङ्क्षी धृतिः सा पार्थ राजसी ॥

यया तु धर्मकामार्थान् धर्मं च कामं च अर्थं च धर्मकामार्थान् तान् धर्मकामार्थान् धृत्या यया धारयते मनसि नित्यमेव कर्तव्य-

---

ன்கள், இந்திரியங்கள் என்றிவற்றின் செய்கைகளை அமர்த்துகின்றானோ, பார்த்த! அந்த உறுதி ஸாத்துவிகமானது.

அவ்யபிசாரிண்யா என்பதை - (த்ருத்யா என) ஒதுங்கிநிற்பதனோடு ஒட்டுக. (ஒருவன்) உறுதியினால் அமர்த்துகின்றான்.—எவற்றை?—மனம், பிராணன்கள், இந்திரியங்கள் இவற்றின் செய்கைகளை. சாஸ்திரத்திற்கு விரோதமான வழியிற் செல்லுதலினின்றும் அவன் அவற்றை மறித்து நிறுத்துகிறான். உறுதியினால் மறித்து நிறுத்தப்படும்பொழுதன்றோ அவை சாஸ்திரத்திற்கு விரோதமான வழியைப் பற்றமாட்டா. யோகத்தை - ஸமாதியை, ஒருநிலையை. தவறாத - (விட்டுநீங்காத), எப்பொழுதும் ஸமாதியைத்தொடர்ந்துள்ள என்றபடி.—இது கூறப்பட்டதாகின்றது: தவறாத உறுதியினால் மனம், பிராணன்கள், இந்திரியங்கள் இவற்றின்செய்கைகளை அடக்குவோன் யோகத்தால் (அவற்றை) அடக்குகின்றானென்க. (இச்செய்கைகளை அடக்குகிறவன் யோகத்தை, ப்ரஹ்மத்தினிடத்து ஸமாதியை, அதிலே ஒருமுகப்படுதலை விட்டுநீங்காத உறுதியினால் அவற்றை அடக்குகிறானென்பதாம். அல்லாக்கால், அந்த யோகத்தை விட்டுநீங்காமை இல்லாக்கால், அவற்றை அடக்குதல் தவறிவிடுமென்றவாறு.—ஆ.) எது இத்தகைய உறுதியோ, அது ஸாத்துவிகமானது. (௩௩)

ராஜஸ உறுதியும், தாமஸ உறுதியும்.

௩௪. **ஆனால், அர்ஜுந! பற்றினால் பயனை வேண்டுவோன் தருமத்தையும், காமத்தையும், பொருளையும் எந்த உறுதியினால் கொள்கின்றானோ, பார்த்த! அந்த உறுதி ராஜஸமானது.**

ஒருவன், அறம் பொருள் இன்பங்களை அவச்யம் தேடவேண்டியவையாக மனத்தில் நிச்சயித்துக்கொள்கின்றான்; அறம்முதலியவற்றுள் எதெதைச்செய்ய

र्थान् अवधारयति हे अर्जुन प्रसङ्गेन यस्य यस्य धर्मादेः धारणप्रसङ्गः तेन तेन प्रसङ्गेन फलाकाङ्क्षी च भवति यः पुरुषः, तस्य धृतिः या सा पार्थ राजसी ॥ ௩௪ ॥

௩௫. यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।
न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ॥

यया स्वप्नं निद्रां भयं त्रासं शोकं विषादं विषण्णतां मदं विषयसेवाम् आत्मनः बहुमन्यमानः मत्त इव मदं च मनसि नित्यमेव कर्तव्यरूपतया कुर्वन् न विमुञ्चति धारयत्येव दुर्मेधाः कुत्सितमेधाः पुरुषः यः, तस्य धृतिः या सा पार्थ तामसी मता ॥ ௩௫ ॥

गुणभेदेन क्रियाणां कारकाणां च त्रिविधो भेदः उक्तः। अथ इदानीं फलस्य सुखस्य त्रिविधो भेदः उच्यते —

௩௬. सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।
अभ्यासाद्रमते यत्र दुःखान्तं च निगच्छति ॥

सुखं तु इदानीं त्रिविधं शृणु समाधानं कुर्वन् इत्येतत् — मे मम भरतर्षभ । अभ्यासात् परिचयात् आवृत्तेः रमते रतिं प्रतिपद्यते यत्र यस्मिन् सुखानुभवे दुःखान्तं च दुःखावसानं दुःखोपशमं च निगच्छति निश्चयेन प्राप्नोति ॥ ௩௬ ॥

வேண்டுமென்று மனத்திற்கொள்ளுதலாகுமோ, அதனை ஒட்டிப் பயனை வேண்டுகிறவனும் ஆகிறான். அ(ப்படிப்பட்ட)வனுடைய உறுதி எதுவோ, அது ராஜஸமானது.()

௩௫. மடையனானவன் உறக்கத்தையும், அச்சத்தையும், வருத்தத்தையும், சோர்ந்துவிடுதலையும், காமக்கொழுப்பையும் எதனால் விடுவதில்லையோ, பார்த்த! அந்த உறுதி தாமஸமானது.

மடையன் தனது காமநுகர்ச்சியை மிக்கு மதிப்பவன்: கள்குடித்தவன் போன்றிருப்பவன்; உறக்கம்முதலியவற்றை எப்பொழுதுமே செய்யவேண்டுமென்று மனத்திற்கொள்பவன். அ(ப்படிப்பட்ட)வனுடைய உறுதி தாமஸமென்க. (௩௫)

குணங்கட்குத் தக்கபடி, ஸுகம் மூவகைத்து.

செய்கைகட்கும், செய்யும்பொருள்கட்கும் குணங்களினுடைய வேறுபாட்டால் மூவகைப்பேதம் கூறப்பட்டது. இனி, இப்பொழுது, (அவற்றின்) பயனாகிய ஸுகத்திற்கு மூவகைப்பேதத்தைக் கூறுகிறார்:

௩௬. இனி, (ஒருவன்) பழக்கத்தினால் எதிலே இன்புறுகின்றானோ, துன்ப முடிவையும் நிச்சயமாய்ப் பெறுகின்றானோ, (அது - ஸுகமென்பது.) பரதரிற் சிறந்தோனே! (அந்த) மூவகைத்தான ஸுகத்தை என்னிடமிருந்து கேட்டுக்கொள்.

கேட்டுக்கொள் - (கேட்பதிலே மனம்) ஒருப்படுதலைச்செய்துகொள் என்றபடி. பழக்கத்தினால் - வழக்கப்பட்டிருப்பதனால், அடிக்கடி ஊடாடுவதனால், அடுத்தடுத்துச்செய்வதனால். எதிலே - ஸுகஅநுபவத்திலே. முடிவை - ஒழிவை. (௩௬)

௩௭. யத்ததக்ரே விஷமிவ பரிணாமே(அ)ம்ருதோபமம் ।
தத் ஸுகம் ஸாத்த்விகம் ப்ரோக்தம் ஆத்மபுத்திப்ரஸாதஜம் ॥

யத் தத் ஸுகம் அக்ரே ப்ரதமம் ப்ரயோகவேலாயாம் ஜ்ஞாநவைரா-க்யத்யாநஸமாத்யாரம்பே க்ருச்ச்ராயாஸஸாத்யத்வாத் விஷமிவ து:கப்ராயம் பவதி, பரிணாமே ஜ்ஞாநவைராக்யாதிபரிபாகஜம் ஸுகம் அம்ருதோபமம், தத் ஸுகம் ஸாத்த்விகம் ப்ரோக்தம் விஜ்ஞை:, ஆத்மந: புத்தி: ஆத்மபுத்தி:, ஆத்ம-புத்தே: ப்ரஸாத: நைர்மல்யம் ஸலிலஸ்ய இவ ஸ்வச்சதா, தத: ஜாதம் ஆத்மபுத்தி-ப்ரஸாதஜம்। ஆத்மவிஷயா வா ஆத்மாவலம்பநா புத்தி: ஆத்மபுத்தி:, தத்ப்ரஸாத-ப்ரகர்ஷாத் ஜாதமித்யர்த்த: । தஸ்மாத் ஸாத்த்விகம் தத் ॥ ௩௭ ॥

௩௮. விஷயேந்த்ரியஸம்யோகாத் யத்ததக்ரே(அ)ம்ருதோபமம் ।
பரிணாமே விஷமிவ தத் ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ॥

விஷயேந்த்ரியஸம்யோகாத் ஜாயதே யத் ஸுகம் தத் ஸுகம் அக்ரே ப்ரயோகக்ஷணே அம்ருதோபமம் அம்ருதஸமம், பரிணாமே விஷமிவ, பலவீர்ய-ரூபப்ரஜ்ஞாமேதாதநோத்ஸாஹஹாநிஹேதுத்வாத் அதர்மஜநிதநரகாதி-

---

ஸாத்துவிகஸுகம்.

௩௭. எது முதலில் விஷம்போலவும், முடிவில் அமிருதம்போலவும் உள்ளதோ, அந்த ஸுகம் ஸாத்துவிகம் எனப்பட்டது ; அது தன்புத்தித்தெளிவினுலாவது.

முதலில் செல்லும்போது, ஞானம் வைராக்கியம் தியானம் ஸமாதி என்றிவற்றைச் செய்யத் தொடங்கும்போது மிகுந்தப் பிரயாஸத்தோடு கூடியதனால் [அவற்றைக் கொண்டுசெலுத்துதல் மிகப்பிரயாஸமாயிருத்தலால்], அந்தஸுகம் விஷம்போல முதலில் துன்பவடிவாயுள்ளது. முடிவிலே ஞானமுதிர்ச்சியாலும், வைராக்கிய முதிர்ச்சியாலும், (இவைபோன்ற) பிறவற்றாலும் வருகின்ற ஸுகமானது அமிருதத்திற்கு ஒப்பானது ; அறிவுடையோர் அந்தஸுகத்தை ஸாத்துவிகம் என்கிறார்கள். தெளிவு - அழுக்கின்மை, ஜலம்போல ஸ்வச்சமாயிருத்தல். தன்புத்தித்தெளிவினுலாவது - அகக்கரணத்தெளிவினால் வருவது ; அல்லது, ஆத்மாவைப்பற்றிய அறிவு மிகச்சுத்தமாகத் தெளிவதனால் வருவது என்க. ஆகவே [இவ்வாறு வருவதனால்], அந்தஸுகம் ஸாத்துவிகமாம். (௩௭)

ராஜஸஸுகம்.

௩௮. எது விஷயேந்திரியச் சேர்க்கையினால் முதலில் அமிருதம்போலவும், முடிவில் விஷம்போலவும் உள்ளதோ, அந்தப் பிரஸித்தமான ஸுகம் ராஜஸமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

விஷயங்களும் இந்திரியங்களும் சேர்வதனால் வந்த ஸுகம் உண்டாகின்றதோ அந்த ஸுகம் முதல்க்ஷணத்தில் அமிருதத்திற்கு ஒப்பாயிருக்கின்றது ; முடிவிலோ விஷம்போன்றது : சக்தி, வீரியம், அழகு, அறிவு, மேதை, பொருள், ஊக்கம் என்ற வற்றை அழிப்பதனாலும், அதர்மத்திற்கும் அதனாலான நரகம்முதலியவற்றிற்கும்

𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇 𑌅𑌧𑌰𑍍𑌮𑌤𑌤𑍍𑌫𑌲𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑍇𑌨 𑌵𑌿𑌷𑌮𑌿𑌵, 𑌤𑌤𑍍 𑌸𑍁𑌖𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௮ ॥

௩௯. 𑌯𑌦𑌗𑍍𑌰𑍇 𑌚𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑍇 𑌚 𑌸𑍁𑌖𑌂 𑌮𑍋𑌹𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ।
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌲𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍋𑌤𑍍𑌥𑌂 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌯𑌤𑍍 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌚 𑌅𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑍇 𑌚 𑌅𑌵𑌸𑌾𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌸𑍁𑌖𑌂 𑌮𑍋𑌹𑌨𑌂 𑌮𑍋𑌹𑌕𑌰𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌽𑌽𑌲𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍋𑌤𑍍𑌥𑌂 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 𑌚 𑌆𑌲𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌶𑍍𑌚 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌮𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍀𑌤𑌿 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌽𑌽𑌲𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍋𑌤𑍍𑌥𑌂, 𑌤𑌤𑍍 𑌤𑌾𑌮𑌸𑌮𑍍 𑌉𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௯ ॥

𑌅𑌥 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 𑌆𑌰𑌭𑍍𑌯𑌤𑍇—

௪௦. 𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌦𑍇𑌭𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ॥

𑌨 𑌤𑌤𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌜𑌾𑌤𑌮𑍍, 𑌅𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌾 𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌿, 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌤𑌃 𑌜𑌾𑌤𑍈𑌃 𑌏𑌭𑌿𑌃 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁—'𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿' 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌣 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 ॥ ௪௦ ॥

காரணமாதலாலும் அந்நுகர்ச்சி ஒய்ந்த முடிவிலே விஷம்போன்றுள்ளது. (சக்தி - சரீரேந்திரிய ஸாமர்த்தியம். வீரியம் - பராக்கிரமத்தாலான புகழ். அறிவு - கேட்டதைக் கிரகிக்கும் சக்தி. மேதை - கிரகித்ததை மறவாது வைத்துக்கொள்ளும் திறமை. பொருள் - பொன், நிலம் முதலியன.—ஆ.) (௩௮)

தாமஸஸுகம்.

௩௯. எந்த ஸுகமானது முதலிலும் முடிவிலும் தன்னை மயக்குவதாய், தூக்கம் சோம்பல் அசட்டை என்றிவற்றா லுண்டாவதோ, அது தாமஸமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

முடிவில் - முடிவிற்குப் பிற்பட்ட காலத்தில். மயக்குவது - மயக்கத்தைச் செய்வது. (௩௯)

எந்த அநாத்மப்பொருளும் குணமில்லாததாய் இல்லை.

இனி, இப்பொழுது, பேசிவரும் விஷயத்தை முடிக்கும்பொருட்டாய்ச் சுலோகம் தொடங்கப்படுகின்றது:

௪௦. பிரகிருதியினின்று பிறக்கின்ற இந்த முக்குணமும் இல்லாததாய் எது இருக்கலாமோ, அந்தப்பொருள் மண்ணிலாயினும், மறுபடி தேவர்களுள் விண்ணிலாயினும் இல்லை.

மண்ணில் - மனிதர் முதலானோர்களில். பொருள் - உயிருள்ள எல்லாப்பொருளும், உயிரில்லாத மற்றைப்பொருளும் என்க. குணம் - ஸத்துவம் முதலியன. 𑌯𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 என்பதை - 𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 என முந்தினதோடு கூட்டுக. (௪௦)

सर्वः संसारः क्रियाकारकफललक्षणः सत्त्वरजस्तमोगुणात्मकः अविद्यापरिकल्पितः समूलः अनर्थः उक्तः, वृक्षरूपकल्पनया च 'ऊर्ध्वमूलम्' इत्यादिना । "तं च असङ्गशस्त्रेण दृढेन छित्त्वा ततः पदं तत्परिमार्गितव्यम्" इति च उक्तम् । तत्र च सर्वस्य त्रिगुणात्मकत्वात् संसारकारणनिवृत्त्यनुपपत्तौ प्राप्तायाम्, यथा तन्निवृत्तिः स्यात् तथा वक्तव्यम्, सर्वश्च गीताशास्त्रार्थः उपसंहर्तव्यः, एतावानेव च सर्ववेदस्मृत्यर्थः पुरुषार्थमिच्छद्भिः अनुष्ठेयः इत्येवमर्थं 'ब्राह्मणक्षत्रियविशाम्' इत्यादिः आरभ्यते —

சக. ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च परन्तप ।
कर्माणि प्रविभक्तानि स्वभावप्रभवैर्गुणैः ॥

ब्राह्मणाश्च क्षत्रियाश्च विशश्च ब्राह्मणक्षत्रियविशः, तेषां ब्राह्मणक्षत्रियविशां शूद्राणां च — शूद्राणाम् असमासकरणम् एकजातित्वे सति वेदानधिकारात् — हे परन्तप कर्माणि प्रविभक्तानि इतरेतरविभागेन व्यवस्थापितानि — केन? — स्वभावप्रभवैर्गुणैः

செய்கைகளாகவும், செய்யும்பொருள்களாகவும், பயன்களாகவும் காணப்படுவதாய், ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்களினது வடிவமாயுள்ளதாய், அவித்யையினால் கற்பிக்கப்பட்ட ஸம்ஸாரமனைத்தும் அதனது வேரோடு தீங்காகக் கூறப்பட்டது; அன்றியும், விருக்ஷமாக உருவகஞ்செய்து, "மேலே வேரும்" (கரு - க) என்பதுமுதலாகக் கூறப்பட்டது. "பற்றின்மையாகிய உறுதியான கோடரியினால் அதனை வெட்டிப், பின்பு, அந்நிலையைத் தேடவேண்டும்" (கரு - ங, ச) எனவும் அருளிச்செய்யப்பட்டது அ(ந்த ஸம்ஸாரத்)திலே ஸகலமும் முக்குணவடிவமாயிருத்தலால், ஸம்ஸாரகாரணம் நீங்குதலென்பது அமையாது (என்னும் சங்கை) வரவே, அது நீங்குதல் எவ்வாறு அமையுமோ அதனைக் கூறவேண்டும் என்னுங்கருத்தோடும், கீதாசாஸ்திரப்பொருள் முழுவதையும் முடிக்கவேண்டும் என்னுங்கருத்தோடும், "எல்லாவேதப்பொருளும் எல்லாஸ்மிருதிப்பொருளும் இவ்வளவுதான்; புருஷார்த்தத்தை விரும்புவோர்களால் அநுஷ்டிக்கவேண்டியதும் இவ்வளவுதான்" என்பதை (எடுத்துக்காட்டும்) கருத்தோடும் "பரந்தப!" (கஅ - சக) என்பதுமுதலியவை தொடங்கப்படுகின்றன:

நான்கு வர்ணங்கட்குத் குணங்கட்குத் தக்கவாறு விதிக்கப்பட்ட கர்மங்கள்.

சக. ***பரந்தப! பிராமண க்ஷத்திரிய வைச்யர்கட்கும், சூத்திரர்கட்கும் ஸ்வபாவத்தாலுண்டாகும் குணங்கட்குஏற்ப கர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.***

ஒருபிறப்பாளர் [உபநயநமில்லாதோர்] ஆதலால், சூத்திரர்கட்கு வேதத்தில் அதிகாரமில்லை; ஆகவே, (மற்றையோர்களோடு இவர்களை) ஒரேதொகையில் கூறுமையென்க. கர்மங்கள் ஒன்றற்கொன்று வெவ்வேறாகப் பகிர்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றன.—எவற்றிற்குத் தக்கபடி?—ஸ்வபாவத்தினாலுண்டாகும் குணங்கட்குத்

ஸ்வபாவ: ஈஶ்வரஸ்ய ப்ரக்ருதி: த்ரிகுணாத்மிகா மாயா, ஸா ப்ரபவ: யேஷாம் குணானாம் தே ஸ்வபாவப்ரபவா:, தை: ஶமாதீனி கர்மாணி ப்ரவிபக்தானி ப்ராஹ்மணாநாம் ॥

அதவா ப்ராஹ்மணஸ்வபாவஸ்ய ஸத்த்வகுண: ப்ரபவ: காரணம், ததா க்ஷத்ரியஸ்வபாவஸ்ய ஸத்த்வோபஸர்ஜனம் ரஜ: ப்ரபவ:, வைஶ்யஸ்வபாவஸ்ய தமஉபஸர்ஜனம் ரஜ: ப்ரபவ:, ஶூத்ரஸ்வபாவஸ்ய ரஜஉபஸர்ஜனம் தம: ப்ரபவ: ப்ரஶாந்த்யைஶ்வர்யேஹாமூடஸ்வபாவதர்ஶனாத் சதுர்ணாம் ॥

அதவா—ஜன்மாந்தரக்ருதஸம்ஸ்கார: ப்ராணினாம் வர்தமானஜன்மனி ஸ்வகார்யாபிமுகத்வேன அபிவ்யக்த: ஸ்வபாவ:, ஸ ப்ரபவோ யேஷாம் குணானாம் தே ஸ்வபாவப்ரபவா: குணா:—குணப்ராதுர்பாவஸ்ய நிஷ்காரணானுபபத்தே: "ஸ்வபாவ: காரணம்" இதி காரணவிஶேஷோபாதானம் । ஏவம் ஸ்வபாவப்ரபவை: ப்ரக்ருதிப்ரபவை: ஸத்த்வரஜஸ்தமோபி: குணை: ஸ்வகார்யானுரூபேண ஶமாதீனி கர்மாணி ப்ரவிபக்தானி ॥

நநு ஶாஸ்த்ரப்ரவிபக்தானி ஶாஸ்த்ரேண விஹிதானி ப்ராஹ்மணாதீனாம் ஶமாதீனி கர்மாணி; கதம் உச்யதே ஸத்த்வாதிகுணப்ரவிபக்தானி இதி? ।

தக்கபடி. ஸ்வபாவமென்பது - ஈச்வரனுடைய பிரகிருதி, முக்குணவடிவமான மாயை. அதைப் பிறப்பிடமாகக்கொண்ட குணங்கட்குஏற்ப, அமைதிமுதலிய கர்மங்கள் பிராமணர்முதலானோர்கட்குப் பிரித்து அமைக்கப்பட்டிருக்கின்றன.

அல்லது (இவ்வாறு கொள்ளலாம்):—பிராமணஇயல்பிற்கு ஸத்துவகுணம் காரணம். அவ்வாறே, க்ஷத்திரியஇயல்பிற்கு ஸத்துவம்கீழ்ப்படிந்த ரஜோகுணம் காரணம். வைச்யஇயல்பிற்கு தமஸ்கீழ்ப்படிந்த ரஜோகுணம் காரணம். சூத்திர இயல்பிற்கு ரஜஸ்கீழ்ப்படிந்த தமோகுணம் காரணம். ஏனெனில், நான்கு (வகுப்பிற்கும் முறையே) அமைதியையும், ஆட்சியையும், முயற்சியையும், மயங்கியதன்மையையும் காண்கிறோம்.

அல்லது (இவ்வாறுகொள்ளலாம்):—ஸ்வபாவமென்பது - சென்ற பிறவிகளிற் செய்துகொள்ளப்பட்டதாய், பிராணிகட்கு இப்பொழுதுள்ள பிறவியிலே தனது பயனை விளைக்கத் தலைப்பட்டுநிற்கும் வாஸனை. குணங்கள் அதனைக் காரணமாகவுடையவை; குணங்கள்வெளிப்படுதற்குக்காரணமில்லாதிருத்தல் பொருந்தாதாதலின் வாஸனை காரணமென ஓர்வகைக்காரணத்தைக்கொள்க. (குணங்கள் வெளிப்படுதற்கு, பிரகிருதி - முதற்காரணம்; வாஸனை- துணைக்காரணம் என்பதாம்.-ஆ.) இவ்வாறாக, வாஸனையைத் துணைக்காரணமாகவும், பிரகிருதியை முதற்காரணமாகவும் உடைய ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்கட்குஏற்ப, தமது செய்கைக்குத் தக்கவாறு அமைதிமுதலிய கர்மங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(ஆக்ஷேபம்):—அப்படியானல், பிராமணர்முதலானோர்கட்கு அமைதிமுதலிய கர்மங்கள் சாஸ்திரத்தினல் வகுக்கப்பட்டு சாஸ்திரத்தினல் விதிக்கப்பட்டவை; "ஸத்துவம்முதலிய குணங்கட்குத் தக்கபடி வகுத்தமைக்கப்பட்டிருக்கின்றன" என்று எவ்வாறு கூறப்படுகின்றது?

நைஷ தோஷ:; ஶாஸ்த்ரேணாபி ப்ராஹ்மணாதீநாம் ஸத்த்வாதிகுண-விஶேஷாபேக்ஷயைவ ஶமாதீநி கர்மாணி ப்ரவிபக்தாநி, ந குணாநபேக்ஷயா, இதி ஶாஸ்த்ரப்ரவிபக்தாந்யபி கர்மாணி குணப்ரவிபக்தாநி இதி உச்யதே ॥ ௪௧ ॥

காநி புந: தாநி கர்மாணி இதி? உச்யதே—

௪௨. ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச ।
ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ராஹ்மம் கர்ம ஸ்வபாவஜம் ॥

ஶமதமௌ உக்தௌ யதாவ்யாக்யாதாவேவ, தப: யதோக்தம் ஶாரீராதி, ஶௌசம் வ்யாக்யாதம், க்ஷாந்தி: க்ஷமா, ஆர்ஜவம் ருஜுதா ஸைவ ச, ஜ்ஞாநம் விஜ்ஞாநம், ஆஸ்திக்யம் ஆஸ்திகபாவ: ஶ்ரூயமாணதா ஆகமார்த்தேஷு, ப்ராஹ்மம் கர்ம ப்ராஹ்மணஜாதே: கர்ம ஸ்வபாவஜம்—யத் உக்தம் ‘ஸ்வபாவப்ரபவை: குணை: ப்ரவிபக்தாநி’ இதி ததேவ உக்தம் ‘ஸ்வபாவஜம்’ இதி ॥ ௪௨ ॥

௪௩. ஶௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயநம் ॥
தாநமீஶ்வரபாவஶ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் ॥

ஶௌர்யம் ஶூரஸ்ய பாவ:, தேஜ: ப்ரகல்ப்யம், த்ருதி: தாரணம் ஸர்வாவஸ்தாஸு அநவஸாத: பவதி யயா த்ருத்யா உத்தம்பிதஸ்ய, தாக்ஷ்யம் தக்ஷஸ்ய பாவ:, ஸஹஸா ப்ரத்யுத்பந்நேஷு கார்யேஷு அவ்யாமோஹேந ப்ரவ்ருத்தி:,

---

(ஸமாதாநம்):—இது குற்றமன்று; பிராமணர்முதலானோர்கட்கு அமைதி முதலிய கர்மங்கள் ஸத்துவம்முதலான ஓரோர் குணத்தை நோக்கித்தான் சாஸ்திரத்திலும் வகுத்தமைக்கப்பட்டிருக்கின்றன; குணங்களை நோக்காமலே (விதிக்கப்பட)வில்லை. ஆகவே, கர்மங்கள் சாஸ்திரத்தினால் வகுத்தமைக்கப்பட்டிருந்தாலும், குணங்கட்குஏற்ப வகுத்தமைக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது. (௪௧)

மற்று, அக்கர்மங்கள் யாவை? என்பது—கூறுவோம்:

௪௨. அமைதியும், அடக்கமும், தவமும், சுத்தமும், பொறுமையும், நேர்மையும், அறிவும், அநுபவமும், ஆஸ்திகத்தன்மையும் ஸ்வபாவத்தாலாகின்றவையான பிராமணஜாதியின் கர்மங்கள்.

“அமைதியும்,” “அடக்கமும்” - கீழ் (௧௬ - ௧,௨) அர்த்தம் விவரிக்கப்பெற்றவை. தவம் - கீழ்க்கூறிய (௧௭ - ௧௪, ௧௫, ௧௬) சாரீரதபஸ் முதலியன. சுத்தம் - (கீழ்) விவரிக்கப்பட்டது. ஆஸ்திகத்தன்மை - சாஸ்திரவிஷயங்களில் நம்பிக்கையுடைமை. “ஸ்வபாவத்தாலாகும் குணங்கட்குஏற்ப வகுக்கப்பட்டிருக்கின்றன” (௧௮ - ௪௧) என எது உரைக்கப்பட்டதோ, அதுவேதான் “ஸ்வபாவத்தாலாகின்றவையான” எனக் கூறப்பட்டது. (௪௨)

௪௩. சூரத்தன்மையும், துணிபும், திட்பமும், கூர்மையும், போரில் ஓடாமையும், கொடையும், ஆட்சியும் ஸ்வபாவத்தாலாகின்றவையான க்ஷத்திரியஜாதியின் கர்மங்கள்.

திட்பம் - எந்தத்திண்மையினால் தாங்கப்பெற்றவனுக்கு, எந்தநிலைமையிலும் அயர்ந்திடாமை இருக்கின்றதோ, (அந்தத் திண்மை). கூர்மை - சுறுசுறுத்தவன் தன்மை; சடக்கென்று நேர்ந்த காரியங்களில் மயங்காது செல்லுதல். போரில் ஓடா

𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌅𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍 𑌅𑌪𑌰𑌾𑌙𑍍𑌮𑍁𑌖𑍀𑌭𑌾𑌵𑌃, 𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑍍𑌯𑌃 𑌦𑌾𑌨𑌂 𑌦𑍇𑌯𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌮𑍁𑌕𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑌤𑌾, 𑌈𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌃 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌃, 𑌪𑍍𑌰𑌭𑍁𑌶𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌕𑌟𑍀𑌕𑌰𑌣𑌮𑍍 𑌈𑌶𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿, 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌜𑌾𑌤𑍇𑌃 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥ ௪௩ ॥

௪௪. 𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ।
𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥

𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌕𑍃𑌷𑌿𑌶𑍍𑌚 𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌚 𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌮𑍍—𑌕𑍃𑌷𑌿𑌃 𑌭𑍂𑌮𑍇𑌃 𑌵𑌿𑌲𑍇𑌖𑌨𑌂, 𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌗𑌾𑌃 𑌰𑌕𑍍𑌷𑌤𑍀𑌤𑌿 𑌗𑍋𑌰𑌕𑍍𑌷𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑍋 𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌾𑌲𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑌣𑌿𑌕𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌯𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍—𑌵𑍈𑌶𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌵𑍈𑌶𑍍𑌯𑌜𑌾𑌤𑍇𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌵𑍈𑌶𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 । 𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍 ॥ ௪௪ ॥

𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌜𑌾𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌫𑌲𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃, '𑌵𑌰𑍍𑌣𑌾 𑌆𑌶𑍍𑌰𑌮𑌾𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌤𑌤𑌃 𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌦𑍇𑌶𑌜𑌾𑌤𑌿𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌯𑍁𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌤𑍍𑌤𑌸𑍁𑌖𑌮𑍇𑌧𑌸𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌯𑌃; 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌿-

---

மை - எதிரிகட்குப் புறங்கொடாமை. கொடை - பொருள்களின்மேல் கையிறுக்கமில்லாமை. **ஆட்சி** - ஆளுபவன் தன்மை; ஆளப்படுகிறவரிடத்துப் பிரபுசக்தியை வெளிப்படுத்தல், ஆளுந்திறமையை நடத்துதல். **க்ஷத்திரியஜாதியின் கர்மங்கள்** - க்ஷத்திரிய ஜாதிக்கு விதிக்கப்பட்ட கர்மங்கள். (௪௩)

௪௪. **வேளாண்மையும், பசுக்களைப் பரிபாலித்தலும், வியாபாரமும் ஸ்வபாவத்தினு லாகின்றவையான வைச்யஜாதியின் கர்மங்கள். மற்றும், சூத்திரஜாதியின் கர்மமானது ஸ்வபாவத்தா லாகின்றதாய், ஊழியத்தன்மையதா யுளது.**

வேளாண்மை - நிலத்தை உழுதல். **வியாபாரம்** - வாங்கல், விற்றல்முதலாகிய வாணிகர்தொழில். (௪௪)

தம்தம் கர்மத்தை அநுஷ்டித்தல் ஸித்தியைத் தரும்.

(அந்தந்த) வர்ணத்திற்கு விதிக்கப்பட்ட கர்மங்களை நேராக அநுஷ்டித்தபொழுது, இயற்கையினுல் [விதிக்கப்பட்டவை என்றதனுலேயே, மோக்ஷநோக்கு இல்லாது கர்மங்களை அநுஷ்டிப்பதனுல்—ஆ.] ஸ்வர்க்கத்தையடைதல் இவற்றின் பயனும்; " வர்ணத்தாரும், ஆச்ரமத்தாரும் தமது கர்மங்களில் அமர்ந்தவராய், மறுமையிலே கர்மத்தின்பயனை அநுபவித்து, பின்பு, (அக்கர்ம) மிச்சத்திற்குத் தக்கபடி சிறந்த நாடு, ஜாதி, குலம், தருமம், ஆயுள், கல்வி, ஒழுக்கம், செல்வம், இன்பம், அறிவு இவற்றையுடையவராய் பிறவியைப்பெறுகிறுர்கள் " (ஆ - உ - உ - உ, ௩) என்பதுமுதலான ஸ்மிருதிகளினுலென்க; மேலும், புராணத்தில், வர்ணத்தார்க்கும் ஆச்ரமத்

र्थश्रुतीनां च लोकफलभेदविशेषपराणाम्। कारणान्तरात्तु इदं वक्ष्यमाणं फलम् —

௪௫. स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु॥

स्वे स्वे यथोक्तलक्षणभेदे कर्मण्यभिरतः तद्द्वारः संसिद्धिं स्वकर्मानुष्ठानात् कल्मषक्षये सति कायेन्द्रियाणां ज्ञाननिष्ठायोग्यतालक्षणां संसिद्धिं लभते प्राप्नोति नरः अधिकृतः पुरुषः। किं स्वकर्मानुष्ठानत एव साक्षात् संसिद्धिः? — न। कथं तर्हि? स्वकर्मनिरतः सिद्धिं यथा येन प्रकारेण विन्दति, तच्छृणु॥ ௪௫॥

௪௬. यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम्।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः॥

यतः यस्मात् प्रवृत्तिः उत्पत्तिः चेष्टा वा यस्मात् अन्तर्यामिणः परमेश्वरात् भूतानां प्राणिनां स्यात्, येन परमेण सर्वम् इदं जगत् ततं व्याप्तं, स्वकर्मणा पूर्वोक्तेन प्रतिवर्णं तं परमात्मानम् अभ्यर्च्य पूजयित्वा कृपया केवलं ज्ञाननिष्ठायोग्यतालक्षणां सिद्धिं विन्दति मानवः॥ ௪௬॥

தார்க்கும் பல உலகங்களையும் பல பயன்களையும் சிறப்பித்துக்கூறுவதனாலுமென்க. ஆனால், இனிக்கூறப்படுகின்ற இப்பயனானது வேறோர்காரணத்தால் [மோக்ஷநோக்கோடு கர்மங்களை அநுஷ்டிப்பதனால்—ஆ.] ஆவதாம் :

௪௫. மனிதன் தன்தனக்குரிய கர்மத்தில் அமர்ந்தவனாய் ஸித்தியைப் பெறுகிறான். தன்கர்மத்தில் அமர்ந்தவன் எவ்வாறு ஸித்தியைப் பெறுகின்றானோ, அதனைக் கேள்.

தன்தனக்குரிய - கீழ்க்கூறிய லக்ஷணத்தையும் வேற்றுமையையும் உடைய. ஸித்தியை - தனக்குரிய கர்மங்களைச் செய்வதனால் அழுக்குத் தேய்ந்தவழி, உடம்பும் இந்திரியங்களும் ஞானத்திலே நிலைபெறுதற்கு, ஞானநிஷ்டைக்குத்தகுந்தவையாதலை. மனிதன் - (கர்மத்திற்கு) உரியபுருஷன்.—தனக்குரிய கர்மங்களைச் செய்வதனாலேயே ஸித்தி நேரே (கைகூடுமோ?—வினவுவோன், ஸித்திஎன்னும்சொற்கு மோக்ஷமென்னும் அர்த்தத்தைக்கொண்டு இங்கு இவ்வாறு ஸந்தேகிக்கிறான்.—ஆ.)—இல்லை.—அப்பொழுது எப்படி?—தனக்குரிய கர்மத்திலமர்ந்தவன் எவ்விதத்தால் ஸித்தியைப் பெறக்கூடுமோ, அதனைக் கேள் : (௪௫)

௪௬. பொருள்கட்கு எவனிடத்தினின்றும் பிரவிருத்தி (வருகின்றதோ), எவனால் இதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அவனை - மனிதன் தனக்குரியகர்மத்தால் பூஜித்து ஸித்தியைப் பெறுகிறான்.

பிரவிருத்தி - உற்பத்தி, அல்லது முயற்சி. எவனிடத்தினின்றும் - அந்தர்யாமியான [உள்ளே இருந்து ஆள்பவனான] ஈச்வரனிடத்தினின்றும். பொருள்கட்கு - பிராணிகட்கு. எவனை - ஈச்வரனை. இதெல்லாம் - பிரபஞ்சமெல்லாம். தனக்குரிய கர்மத்தால் - ஒவ்வொரு வர்ணத்திற்கும் கீழ்க்கூறியுள்ள கர்மத்தால். மனிதன் தனக்குரிய கர்மத்தால் ஈச்வரனைத் தொழுது, ஞானநிஷ்டைக்கு, ஞானத்திலே நிலைத்தற்குத் தகுந்தவனாதல்மாத்திரமாகிய ஸித்தியைப் பெறுகிறான் என்க. (௪௬)

यतः एवं अतः—

சஎ. श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥

श्रेयान् प्रशस्यतरः स्वो धर्मः स्वधर्मः विगुणोऽपि—इति अपिशब्दो द्रष्टव्यः— परधर्मात्स्वनुष्ठितात् । यत् उक्तं स्वभावजम् इति तदेव, उक्तं 'स्वभावनियतम्' इति—यथा विषजातस्य इव कृमेः विषं न दोषकरं, तथा स्वभावनियतं कर्म कुर्वन् न आप्नोति किल्बिषं पापम् ॥ சஎ ॥

स्वभावनियतं कर्म कुर्वाणो विषजः इव कृमिः किल्बिषं न आप्नोतीति उक्तं; परधर्मश्च भयावहः इति; अज्ञश्च 'न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत्' इति । अतः—

சஅ. सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ॥

सहजं सह जन्मनैव उत्पन्नं—किं तत्?—कर्म कौन्तेय सदोषमपि त्रिगुणात्मकत्वात् न त्यजेत् । सर्वारम्भाः आरभ्यन्त इति आरम्भाः,

---

இவ்வா றிருப்பதனால்,

சஎ. தனக்குரிய கர்மம் நலமில்லாத(தாயினும், தான்) நன்றாய் அநுஷ்டித்த பிறரது கர்மத்தினும் மிகவும் நல்லது. ஸ்வபாவத்தாலமைந்த கர்மத்தைச் செய்கிறவன் பாவத்தை அடையமாட்டான்.

"நலமில்லாததாயினும்" என "ஆயினும்" என்னும்சொல்லை (வருவித்துக்) காண்க. "ஸ்வபாவத்தாலாகின்ற" (கஅ-சஉ, சஙு, சச) எனக்கூறியது எதுவோ, அதுதான் "ஸ்வபாவத்தாலமைந்த" எனக் கூறப்பட்டது. விஷத்திற்பிறந்த புழு விற்கு விஷம் தீங்கைச் செய்யாதவாறுபோல, ஸ்வபாவத்தா லமைந்த கர்மத்தைச் செய்கிறவன் பாவத்தையடையா னென்க. (சஎ)

தனக்குரிய கர்மத்தை விடக்கூடாது.

விஷத்தில் பிறந்த புழுவானது (விஷத்தாலாகும் இறப்பை அடையாதவாறு) போல, ஸ்வபாவத்தாலமைந்த கர்மத்தைச் செய்கிறவன் பாவத்தை யடையமாட்டான் எனக் கூறப்பட்டது: மேலும், பிறரது தருமம் பயத்தை விளைப்பது எனவும் (கூறப்பட்டது): அன்றியும், ஆத்மாவை அறியாதவன் எவனும் கணப்பொழுதாயி னும் கர்மத்தைச் செய்யாதவனாய் இருக்கமாட்டான் எனவும் (கூறப்பட்டது). ஆகவே,

சஅ. கௌந்தேய! தீங்கொடு கூடியதாயினும், உடன்பிறந்த கர்மத்தை விடக் கூடாது. ஏனெனில், தீ புகையினால் (சூழப்படுவது)போல, எல்லாக்கர்மங்களும், தீங்கி னால் சூழப்பட்டிருக்கின்றன.

உடன்பிறந்தது-பிறவியொடுகூடவே உண்டானது.—அது யாது?—கர்மம். தீங் கொடு கூடியதாயினும் - மூக்குணவடிவாயிருத்தலால், கேடுள்ளதாயினும். "எல்லாக் கர்மங்களும" என்பதற்கு - "தனக்குரிய தருமமாக யாதொரு செய்கை உளதோ,

ஸர்வகர்மாணி இத்யேதத்—ப்ரகரணாத் யே கேசித் ஆரம்பா: ஸ்வதர்மா: பரத-ர்மாஶ்ச—தே ஸர்வே ஹி யஸ்மாத்—த்ரிகுணாத்மகத்வமத்ர ஹேது:—த்ரிகுணா-த்மகத்வாத் தோஷேண, தூமேந ஸஹஜேந அக்நிரிவ, ஆவ்ருதா: । ஸஹஜஸ்ய கர்மண: ஸ்வதர்மாக்யஸ்ய பரித்யாகேந பரதர்மாநுஷ்டாநேऽபி தோஷாத் நைவ முச்யதே; பயாவஹஶ்ச பரதர்ம: । ந ச ஶக்யதே அஶேஷத: த்யக்தும் அஜ்ஞேந கர்ம யத:, தஸ்மாத் ந த்யஜேத் இத்யர்த: ॥

கிம் அஶேஷத: த்யக்தும் அஶக்யம் கர்ம இதி ந த்யஜேத்? கிம் வா ஸஹஜஸ்ய கர்மண: த்யாகே தோஷோ பவதீதி?

கிம் சாத: ?—

யதி தாவத் அஶேஷத: த்யக்தும் அஶக்யம் இதி ந த்யாஜ்யம் ஸஹஜம் கர்ம, ஏவம் தர்ஹி அஶேஷத: த்யாகே குண ஏவ ஸ்யாத் இதி ஸித்தம் பவதி ।

ஸத்யம் ஏவம்; அஶேஷத: த்யாக ஏவ ந உபபத்யதே இதி சேத்—கிம் நித்யப்ரசலிதாத்மக: புருஷ:, யதா ஸாம்க்யாநாம் குணா:? கிம் வா க்ரியைவ

பிறர்க்குரிய தருமமாகவும் யாதொருசெய்கை உளதோ, அவையெல்லாம்" என,பிரகர
ணத்தினுல், பேசிவரும்விஷயத்தினுல் (பொருள்கொள்க). இதிலே [கர்மங்கள் கெடுதி
யுள்ளவையாயிருப்பதற்கு] முக்குணவடிவமாயிருத்தல் காரணம். எல்லாச்செய்கை
களும் முக்குணவடிவமாயிருப்பதனுல் தீங்கினுல் சூழப்பட்டிருக்கின்றன; உடன்பிறந்த
புகையினுல் நெருப்பு சூழப்படுவதுபோல. ஸ்வதருமமென்னும் பெயருடைய உடன்
பிறந்த கர்மத்தைவிட்டு, பிறரது தருமததை அநுஷ்டித்தாலும், தீங்கினின்றும் நீங்
கவேமாட்டான்; மேலும், பிறரது தருமம் பயத்தைத் தருவது; மற்றும், அஜ்ஞானி
யால் கர்மம்முழுவதையும் விட்டிடமுடியாது; ஆதலால், (கர்மத்தை) விடக்கூடாது
என்பது (தேர்ந்த) பொருள்.

கர்மத்தை முற்றும் விட்டிடுதல் நிகழக்கூடுமோ ?

கர்மம்முழுவதையும் விட்டிடுதல் அரிது என்பதனுல், (அதனை) விட்டிடக்கூடா
தா? அல்லது, உடன்பிறந்த கர்மத்தை விட்டிடுவதிலே குற்றம் [சாஸ்திரத்தில் விதி
த்த கர்மத்தை விட்டிடுவதனுல் பிரத்தியவாயம் வரும்] என்பதனுல், (அதனை விட்
டிடக்கூடாதா? என ஆராய்வோம்) :—

(ஆக்ஷேபம்);—இதனுல் என்ன? [இவ்வாராய்ச்சியினு லாவதென்ன?]

(ஸமாதாநம்) :—முதலில், முழுவதையும்விடுதல் அரிது என்றதனுல், உடன்
பிறந்த கர்மத்தை விடக்கூடாதாயின், அப்பொழுது இவ்வாறு முழுவதையும் விட்டிடு
வதிலே மேன்மையேதான் ஆகும் என அமைந்துளது. (கடலைக் கையிலெடுத்து
ஓரேவாயால் மடுத்தல் அரிதாதலால், இதனைச் செய்த அகஸ்தியருக்கு மேன்மை பிர
ஸித்தமாயுள்ளது என்பதை உதாரணமாக நோக்கிக்கொள்க. இதனுல் இவ்வா
ராய்ச்சி பயனுடைய தென்க.—ஆ.)

ஸாங்கிய பௌத்த வைசேஷிகருடைய கோள்கைகள்.

(ஆக்ஷேபம்) :—இவ்வாறு உண்மை; (கர்மம்முழுதையும் விட்டிடுதல் மேன்மை
யுடைத்து; ஆயினும்) முழுமையும் விட்டிடுதலே அமையாது என்றால்—ஸாங்கியர்
கட்கு (ஸத்துவம்முதலிய) குணங்கள்போல, ஆத்மா எப்பொழுதும் அசைந்துகொண்

𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌦𑍋𑌷𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌇𑌦𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌚𑍍𑌚 । 𑌕𑌥𑌮𑍍? — 𑌯𑌦𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌦𑍍𑌵𑍍𑌯𑌣𑍁𑌕𑌾𑌦𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌅𑌸𑌤𑍍, 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌕𑌂𑌚𑌿𑌤𑍍 𑌕𑌾𑌲𑌂 𑌪𑍁𑌨𑌃 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌅𑌸𑌦𑍇𑌵 𑌸𑌤𑍍 𑌜𑌾𑌯𑌤𑍇, 𑌸𑌦𑍇𑌵 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌭𑌾𑌵𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑌿 ; 𑌤𑌤𑍍𑌰 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌶𑌶𑌵𑌿𑌷𑌾𑌣𑌕𑌲𑍍𑌪𑌃 𑌸𑌮𑌵𑌾𑌯𑍍𑌯𑌸𑌮𑌵𑌾𑌯𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌖𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿। 𑌨 𑌚 𑌏𑌵𑌮𑍍 𑌅𑌭𑌾𑌵𑌃 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌚 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇, 𑌇𑌤𑌿 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍; 𑌅𑌸𑌤𑌾𑌂 𑌶𑌶𑌵𑌿𑌷𑌾𑌣𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑍍 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑍍 𑌘𑌟𑌾𑌦𑌯𑌃 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃, 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 𑌅𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑍁𑌮𑍍 ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—𑌅𑌸𑌤𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌸𑌤𑌶𑍍𑌚 𑌅𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌨 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍇𑌷𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ; "𑌸𑌤𑍍 𑌸𑌦𑍇𑌵, 𑌅𑌸𑌤𑍍 𑌅𑌸𑌦𑍇𑌵" 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑍍𑌯𑌣𑍁𑌕𑌾𑌦𑍇𑌃 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑌂-

(ஸமாதாநம்):—எல்லாப்பிரமாணத்தோடும் முரணுவதால், இது குற்றமுடைத்தேதான்.—எப்படி?—(த்வயணுகம் - இரண்டு அணுக்களாலானது.) இனி, த்வயணுகம் முதலியபொருளானது உண்டாவதற்குமுன்னர் முற்றுமே [சுத்தமாய்] இல்லாததனால், உண்டான பொருளும் சிறிதுகாலம் நின்று மீண்டும முற்றுமே இல்லாத்தன்மையையடைகின்றதனால்,—அவ்வாறுள்ளவளவிலே, இன்மையே உண்மையாகின்றது; உண்மையே இன்மையாதலைப் பெறுகின்றது; இல்பொருள் உள்பொருளாகின்றது; உள்பொருளும் இல்பொருளாகின்றது. என்பது (வைசேஷிகரது கொள்கை). அதிலே, இல்பொருள் (உள்பொருளாக) உண்டாகும்போது, உண்டாவதற்குமுன்னர் முயற்கொம்புபோன்றது; ஸமவாயி, அஸமவாயி, நிமித்தம் என்னும் பெயருடைய காரணங்களைச் சார்ந்து உண்டாகின்றது என்பதாம். மற்று, "இவ்வாறாக இல்பொருள் உண்டாகின்றது; காரணத்தையும் வேண்டுகின்றது" எனக்கூறுதல் செல்லாது; இல்பொருளான முயற்கொம்புமுதலியவற்றைக் காணாமையின். உண்டாகின்ற குடம்முதலியவை உள்பொருள்வடிவினவாயின், தோன்றுதற்குமாத்திரம் ஒருகாரணத்தை நாடி உண்டாகின்றன எனத் தெரிந்துகொள்ளலாகும்.

அன்றியும், இன்மைக்கும் உள்ளதன்மையும், உண்மைக்கும் இல்லாத்தன்மையும் உள்ளவளவிலே, பிரமாணத்தினுடைய வியவகாரத்திலும் (பிரமாணத்தால் நிச்சயிக்கப்படும்) பொருள்களினுடைய வியவகாரத்திலும் ஓரிடத்தும் ஒருத்தனுக்கும் நம்பிக்கை உண்டாகாது; "உண்மை உண்மையாகவே இருக்கும், இன்மை இன்மையாகவே இருக்கும்" என்னும்நிச்சயம் அமையாதாதலின்.

மற்றும், உண்டாகின்றது என த்வயணுகம்முதலிய பொருளுக்குத் தன்காரணங்களோடும்உள்ளதன்மையோடும்ஸம்பந்தத்தைக் கூறுகிறார்கள் (ஒருபொருள் ஒருகார்ய

𑌬𑌨𑍍𑌧𑌂 𑌚𑌾𑌹𑍁𑌃 । 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌰𑌸𑌤𑍍, 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑍈𑌃 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁𑌭𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑌯𑌾 𑌚 𑌸𑌮𑌵𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍇𑌨 𑌸𑌂𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 । 𑌸𑌂𑌬𑌦𑍍𑌧𑌂 𑌸𑌤𑍍 𑌕𑌾𑌰𑌣𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑍇𑌤𑌂 𑌸𑌤𑍍 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌥𑌮𑌸𑌤𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍, 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋 𑌵𑌾 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ? 𑌨 𑌹𑌿 𑌵𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋 𑌵𑌾 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌤𑌃 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨𑌨𑍁 𑌨𑍈𑌵𑌂 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑍈𑌃 𑌅𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 । 𑌦𑍍𑌵𑍍𑌯𑌣𑍁𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌸𑍍𑌵𑌕𑌾𑌰𑌣𑍇𑌨 𑌸𑌮𑌵𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 𑌸𑌤 𑌏𑌵 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿 ॥

𑌨; 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑍈𑌃 𑌕𑍁𑌲𑌾𑌲𑌦𑌣𑍍𑌡𑌚𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 𑌘𑌟𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌨 𑌚 𑌮𑍃𑌦 𑌏𑌵 𑌘𑌟𑌾𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 । 𑌤𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑌤 𑌏𑌵 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 𑌪𑌾𑌰𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌤𑍍 𑌇𑌷𑍍𑌟𑍋 𑌭𑌵𑌤𑌿 ॥

𑌨𑌨𑍁 𑌅𑌸𑌤𑍋𑌽𑌪𑌿 𑌸𑌮𑌵𑌾𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑍋 𑌨 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 ।

மாக உண்டாகும்போது தன் காரணங்களோடுகூடி, உள்ளதாய், உள்பொருளாய் ஆகின்றது என்கிறார்கள் வைசேஷிகர்கள்). அப்பொருள் உண்டாவதற்கு முன்னர் இல்லாததாய்ப், பின்னர், தன்காரணங்களுடைய செய்கையைத் தழுவி, தன்காரணங்களான பரமாணுக்களோடும் உள்ள தன்மையோடும் ஸமவாயமாகிய [நீக்கமின்றிநிற்றலாகிய] ஸம்பந்தத்தால சேரப்பெறுகின்றது; சேரப்பெறவே, காரணங்களோடு ஒற்றித்து நிற்பதாய், உள்ளதாய் ஆகின்றது.—அதிலே சொல்லவேண்டும் [இவ்வினுக்களைக் கேட்கவேண்டும்]: இல்லாததற்குத் தன்காரணமென்பது எப்படி இருக்கும்? அல்லது, ஒன்றனோடு தொடர்பாவது எப்படியாகும்? மலடிமகனுக்குத் தன்காரணத்தையாயினும் (அவன் பிறத்தற்குரிய ஏதுவையாயினும், அவனுக்கு) ஒன்றனோடு ஸம்பந்தத்தையாயினும் பிரமாணத்திற்குஏற்பக் கொள்ளமுடியாதன்றோ.

(ஆக்ஷேபம்):—ஆயின், இவ்வாறாக வைசேஷிகர்களால் இல்பொருளுக்குச் சம்பந்தம் கொள்ளப்படவில்லை. தம் காரணத்தோடு ஸமவாயமாகிய ஸம்பந்தமானது த்வயணுகம்முதலிய பொருள்களான உள்பொருள்கட்கேயன்றோ கூறப்படுகின்றது என்பதாம்.

(ஸமாதாநம்):—அப்படியன்று; ஸம்பந்தத்திற்கு முன்னர் (அவை) உள்ளனவாகக் கொள்ளாமையின். குடம்முதலியன - குயவன், தடி, சக்கிரம்முதலியவற்றினது செய்கைக்குமுன்னர் உள்ளனவாக வைசேஷிகர்களால் கொள்ளப்படவில்லையன்றோ. மேலும், மண்ணே குடம்முதலிய உருவத்தை யடைதலைக் கொள்வதில்லை. ஆகவே, பரிசேஷப்பிரமாணத்தால், இல்பொருளுக்கேதான் ஸம்பந்தம் கொள்ளப்பட்டதாகின்றது.

(ஆக்ஷேபம்):—ஆயின், இல்பொருளுக்கும் ஸமவாயமாகிய ஸம்பந்தம் விரோதப்படாது.

ந; வந்த்⁴யாபுத்ராதீ³நாம் அநுபலப்³தே⁴꞉। க⁴டாதே³ரேவ ப்ராக³பா⁴வஸ்ய ஸ்வகாரணஸம்ப³ந்தோ⁴ ப⁴வதி, ந வந்த்⁴யாபுத்ராதே³꞉ அபா⁴வஸ்ய தத்³வ்யேபி, இதி விஶேஷ꞉ அபா⁴வஸ்ய வக்தவ்ய꞉। ஏகஸ்ய அபா⁴வ꞉, த்³வயோ꞉ அபா⁴வ꞉, ஸர்வஸ்ய அபா⁴வ꞉, ப்ராக³பா⁴வ꞉, ப்ரத்⁴வம்ஸாபா⁴வ꞉, இதரேதராபா⁴வ꞉, அத்யந்தாபா⁴வ꞉ இதி லக்ஷணதோ ந கேநசித் விஶேஷோ த³ர்ஶயிதும் ஶக்ய꞉। அஸ்தி ச விஶேஷ꞉ க⁴டஸ்ய ப்ராக³பா⁴வ ஏவ கபாலாதி³பி⁴꞉ க⁴டபா⁴வம் ப்ரபத்³யதே, ஸம்ப³த்⁴யதே ச பா⁴வேந கபாலாத்மநா ஸ்வகாரணேந, ஸம்ப³ந்த⁴ஶ்ச ஸர்வவ்யவஹாரயோக்³யஶ்ச ப⁴வதி, ந து க⁴டஸ்யைவ ப்ரத்⁴வம்ஸாபா⁴வ꞉ அபா⁴வத்வே ஸத்யபி, இதி; ப்ரத்⁴வம்ஸாத்யந்தாபா⁴வாநாம் ந க்வசித் வ்யவஹாரயோக்³யத்வம், ப்ராக³பா⁴வஸ்யைவ உத்பத்த்யாதி³ஸர்வவ்யாபாரஸ்ய உத்தராதி³ வ்யவஹாராநுகூல்யம் இத்யேதத் அஸமஞ்ஜஸம்; அபா⁴வத்வாவிஶேஷாத் அத்யந்தப்ரத்⁴வம்ஸாபா⁴வயோரிவ ॥

நநு நைவ அஸத்³பி⁴꞉ ப்ராக³பா⁴வஸ்ய பா⁴வாபத்தி꞉ உச்யதே।

(ஸமாதாநம்):—அப்படியன்று: மலடிமகன்முதலியவற்றைக் காணுமையின்.
(அபாவம் - இன்மை, இல்பொருள்.) "அபாவமென்பது ஸமமாயிருந்தாலும், குடம்
முதலியவற்றினதுமுன்னபாவத்திற்குத்தான் தன்காரணத்தோடுஸம்பந்தமாகின்றது;
மலடிமகன்முதலியவற்றிற்கு இல்லை" என்றால், (ஒருஅபாவத்தினின்றும் மற்றோர்)
அபாவத்திற்கு வேற்றுமை கூறவேண்டும். ஒன்றின்மை, இரண்டின்மை, எல்லாமின்
மை, முன்னபாவம், அழிவுபாட்டபாவம்,ஒன்றினொன்றபாவம், முழுதுமபாவம்என்றி
வற்றிற்கு வேற்றுமையைக் குறிப்பிட்டுக் காட்ட ஒருவனாலும் இயலாது. வேற்றுமை
இல்லாவளவிலே, "குடத்தினுடைய முன்னபாவந்தான் குயவன் முதலிய பொருள்
களால் குடமாதலைப் பெறுகின்றது; கபாலம் [ஓடு] என்னும்பெயருடைய தன் கார
ணமான உள்பொருளோடு சேரப்பெறுகின்றது; சேரப்பெற்றதாய் (உண்டாதல்
முதலிய) எல்லாவியவகாரங்கட்கும் தக்கதாகின்றது; ஆனால், (இரண்டும்) அபாவமா
யிருந்தாலும், குடத்தினுடையதேயான அழிவுபாட்டபாவம் (அப்படி) இல்லை (அதா
வது-குடத்தினுடைய முன்னபாவமும் அழிவுபாட்டபாவமுமாகிய இரண்டும் அபாவ
மாயிருக்க, அவற்றுள், முந்தினது - குடமாகின்றது, காரணத்தோடு சேரப்பெறுகின்
றது, உண்டாதல்முதலிய வியவகாரங்கட்குத் தக்கதாயுள்ளது; பிந்தினதோ - குட
மாவதில்லை, காரணத்தோடு சேரப்பெறுவதில்லை, உண்டாதல்முதலிய வியவகாரங்
கட்குத் தக்கதாயில்லை)" என்பது ஒவ்வாதது. "அழிவுபாட்டபாவம்முதலிய அபா
வங்கள் (உண்டாதல்முதலிய) வியவகாரங்கட்கு எவ்விடத்தும் உரியவையில்லை; த்வய
ணுகம்முதலாக வழங்கப்படும் பொருள்களினுடைய முன்னபாவமேதான் உண்டா
தல்முதலிய வியவகாரங்கட்கு உரியதானது" என்பது ஒவ்வாதது; அபாவமாயிரு
த்தற்கு வேற்றுமையின்மையால், முழுதுமபாவமும் அழிவுபாட்டபாவமும்போல.
(முன்னபாவமானது அழிவுபாட்டபாவம்முதலியனபோல, தானும் அபாவமாயிருத்
தலால், உண்டாதல்முதலிய வியவகாரங்கட்கு உரியதாகாது என்றபடி.—ஆ.)
(ஆக்ஷேபம்):- ஆயினும், நாஸ்திகர் முன்னபாவத்திற்கு பாவம் வருவதாகச் சொ
ல்லவேஇல்லை [இல்லாதது இருப்பதாவதாகக் கொள்வதில்லை].

𑌭𑌾𑌵𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌭𑌾𑌵𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃; 𑌯𑌥𑌾 𑌘𑌟𑌸𑍍𑌯 𑌘𑌟𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃, 𑌪𑌟𑌸𑍍𑌯 𑌪𑌟𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌏𑌤𑌦𑌪𑌿 𑌅𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑌃 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌪𑌕𑍍𑌷𑌃 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌅𑌪𑍂𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌵𑍈𑌶𑍇𑌷𑌿𑌕𑌪𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌨 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌾𑌙𑍍𑌗𑍀𑌕𑌰𑌣𑍇𑌽𑌪𑌿 𑌅𑌭𑌿𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌤𑌿𑌰𑍋𑌭𑌾𑌵𑌯𑍋𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 ॥

𑌏𑌤𑍇𑌨 𑌕𑌾𑌰𑌣𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ॥

𑌪𑌾𑌰𑌿𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌤𑍍—𑌸𑌤𑍍 𑌏𑌕𑌮𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌨𑍇𑌕𑌧𑌾 𑌨𑌟𑌵𑌤𑍍 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 । 𑌇𑌦𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌮𑌤𑌂 𑌉𑌕𑍍𑌤𑌂 "𑌨𑌾𑌸𑌤𑍋 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌭𑌾𑌵𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑍍𑌲𑍋𑌕𑍇, 𑌸𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌅𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍, 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌇𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑌿𑌤𑌿 ॥

𑌕𑌥𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌵𑌿𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑍇 𑌅𑌶𑍇𑌷𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 𑌨 𑌉𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 𑌇𑌤𑌿?

(ஸமாதாநம்):—அப்பொழுது, இருப்பதுதான் இருப்பதாகின்றது என்க; உதாரணமாக, குடம் குடமாகின்றது; ஆடை ஆடையாகின்றது. இதுவும், இல்லாதது இருப்பதாவதுபோல, பிரமாணங்கட்கு முரணும்.

பரிணாமவாதமறுப்பு.

ஸாங்கியனுடைய பரிணாமக்கொள்கையும் எனிலோ, அதுவும் - முன்னில்லாத தன்மை உண்டாதலையும், (இருக்கின்ற தன்மை) அழிதலையும் கொள்வதனால், வைசேஷிகனுடைய (ஆரம்பக்) கொள்கையினும் வேறுபடுவதில்லை. தோற்ற மறைவுகளைக் கொள்ளுமிடத்தும், தோற்றம் உள்ளதெனவும் மறைவு இல்லதெனவும் ஆராயுங்கால், முன்போலவே பிரமாணங்கட்கு விரோதமாம். (இக்கொள்கையிலும், உள்ளது இல்லதாவதும், இல்லது உள்ளதாவதுமாகிய விரோதத்தை ஊகித்துப்பார்க்க.)

இதனால், "உண்டாதல்முதலான நிலைமைகள் காரணத்திற்குத்தான் இருக்கின்றன" என்பதும் மறுக்கப்பட்டது. (இருக்கின்ற நிலைமை கெட்டு வேறோர் நிலைமை வந்தவழி, உள்ளது இல்லதாதலையும் இல்லது உள்ளதாதலையும் நோக்கிக்கொள்க.)

பகவானுடைய விவர்த்தக்கொள்கை.

பரிசேஷப்ரமாணத்தினால்,—"உண்மைப் பொருளான ஓரேபொருள்தான், நடன்போல, உண்டாதல் அழிதல்முதலிய தன்மைகளோடு, (விகாரங்களோடு கூடிய பல பொருள்களாக) அவித்யையினால் பலவாறு கற்பனைசெய்யப்படுகின்றது" என்பதாம். உள்ளதென்னும்உணர்வு பிறழாமையினாலும், மற்றைய உணர்வுகள் பிறழ்வதனாலும் (உண்மைப்பொருள் ஒன்றுதான் உள்ளது) என்னும் பகவானுடைய இக்கொள்கையானது, "இன்மைக்கு உண்மை இல்லை" (௨ - ௧௬) என்ற இச்சுலோகத்தினுள் அருளிச்செய்யப்பட்டது.

ஞானிகள்தான் கர்மத்தை முற்றும் துறந்திடக்கூடும்.

(ஆக்ஷேபம்):—அங்ஙனம், ஆத்மா விகாரமில்லாததாயிருக்கையில், கர்மத்தை முற்றும் விட்டிடுதல் ஏலாதென்பது எப்படி?

யதி வஸ்துதர்மா: குணா:, யதி வா அவித்யாகல்பிதா:, தத்தர்ம: கர்ம ।
ததாபி ஆத்மநி அவித்யாத்யாரோபிதமேவ இதி அவித்வாந் 'ந ஹி கஶ்சித் க்ஷணமபி
அஶேஷத: த்யக்தும் ஶக்நோதி' இதி உக்தம் । வித்வாம்ஸ்து புந: வித்யயா அவித்யா-
யாம் நிவ்ருத்தாயாம் ஶக்நோத்யேவ அஶேஷத: கர்ம பரித்யக்தும், அவித்யாத்யா-
ரோபிதஸ்ய ஶேஷாநுபபத்தே: । ந ஹி தைமிரிகத்ருஷ்ட்யா அத்யாரோபி-
தஸ்ய த்விசந்த்ராதே: திமிராபகமேऽபி ஶேஷ: அவதிஷ்டதே । ஏவம் ச ஸதி
இதம் வசநம் உபபந்நம் 'ஸர்வகர்மாணி மநஸா' இத்யாதி, 'ஸ்வே ஸ்வே கர்மண்யபி-
ரத: ஸம்ஸித்திம் லபதே நர:' 'ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:'
இதி ச ॥ ௪௮ ॥

யா கர்மஜா ஸித்தி: உக்தா ஜ்ஞாநநிஷ்டாயோக்யதாலக்ஷணா, தஸ்யா:
பலபூதா நைஷ்கர்ம்யஸித்தி: ஜ்ஞாநநிஷ்டாலக்ஷணா ச வக்தவ்யேதி ஶ்லோக:
ஆரப்யதே—

௪௯. அஸக்தபுத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ்ப்ருஹ: ।
நைஷ்கர்ம்யஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸேநாதிகச்சதி ॥

(ஸமாதானம்) :—குணங்கள் மெய்ப்பொருளாயினும் ஆகுக ; அல்லது, அவித்
யையினுல் கற்பிக்கப்பெற்றவையாயினும் ஆகுக; அவற்றினது தன்மை கர்மமென்பது,
செய்கையென்பது, தொழிலென்பது. அது ஆத்மாவினிடத்து அவித்யையினுல் ஏற்
றப்பட்டதேதான். ஆகவே, அஜ்ஞானியான "எவனும் கணப்பொழுதாயினும் (கர்ம
த்தை) முற்றும் விட்டிடமாட்டுவானில்லை" (௩ - ௫) எனக்கூறப்பட்டது. மற்று, ஞா
னியோ, வித்யையினுல் அவித்யை நீங்கியுள்ளமையால் கர்மத்தை முற்றும் விட்டிட
மாட்டுவான்தான் ; அவித்யையினுல் ஏற்றப்பட்டதனுடைய சேஷம் செல்லாதாதலின்
[அதனுடைய மிச்சம் இராதாதலின்]. திமிரமுள்ள கண்பார்வையினுல் ஏற்றப்பட்ட
இரண்டு சந்திரன் முதலியவற்றினுடைய சேஷமானது திமிரம் நீங்கியுள்ளபொழுதும்
நில்லாதன்றோ. இவ்வாறுள்ளவளவிலே, "ஸகலகர்மங்களையும் மனத்தால் துறந்து"
(௫ - ௧௩) என்பதுமுதலான இத்திருவாக்குப் பொருந்தியது. "மனிதன் தன் தன்
கர்மத்திலமர்ந்தவனுய் ஸித்தியைப்பெறுகிறுன்" (௧௮ - ௪௫), "மனிதன் தனக்குரிய
கர்மத்தால் அவனைப் பூஜித்து ஸித்தியையடைகிறுன்" (௧௮ - ௪௬) என்பனவும்
(பொருந்தியனவாம்). (௪௮)

கர்மயோகஸித்தி ஞானயோகஸித்தியைத் தரும்.

கர்மத்தாலாகின்ற எந்த ஸித்தியானது, ஞானத்திலே நிலைத்தற்குத் தகுந்த
நிலைமையாகிய ஸித்தியானது கூறப்பட்டதோ, அதனது பயனை நைஷ்கர்ம்யஸித்
தியை, கர்மம்நீங்கிய நிலையை,ஞானநிஷ்டையாகிய ஸித்தியைக் கூறவேவேண்டும் என
(இச்)சுலோகம் தொடங்கப்படுகின்றது :

௪௯. எவ்விடத்தும் புத்திபற்றுதவனுய் அகக்கரணத்தை வென்று ஆசைபோ
யுள்ளவன் மேலான நைஷ்கர்ம்யஸித்தியை, (கர்மம்நீங்கிய நிலையை)ஸந்யாஸத்தால்
அடைகிறுன்.

𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌸𑌕𑍍𑌤𑌾 𑌸𑌙𑍍𑌗𑌰𑌹𑌿𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌅𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌕𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁, 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌜𑌿𑌤𑌃 𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌃 𑌜𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾, 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃 𑌵𑌿𑌗𑌤𑌾 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾 𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 𑌦𑍇𑌹𑌜𑍀𑌵𑌿𑌤𑌭𑍋𑌗𑍇𑌷𑍁 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌃 𑌵𑌿𑌗𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌃, 𑌯𑌃 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑌃 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌃 𑌸𑌃 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌬𑍋𑌧𑌾𑌤𑍍 𑌸𑌃 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌵𑌃 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂, 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌤𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌶𑍍𑌚 𑌸𑌾 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃, 𑌨𑌿𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑍍𑌮𑌰𑍂𑌪𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌸𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃, 𑌤𑌾𑌂 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌸𑌦𑍍𑌯𑍋𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌰𑍂𑌪𑌾𑌂 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍇𑌨 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌨, 𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍇𑌣 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑍇𑌨, 𑌅𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌂—'𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑍈𑌵 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍 𑌨 𑌕𑌾𑌰𑌯𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍇' 𑌇𑌤𑌿 ॥ ௪௯ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑍇𑌨 𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑌨𑌰𑍂𑌪𑍇𑌣 𑌜𑌨𑌿𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌵𑍇𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑍇𑌵𑌲𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍂𑌪𑌾 𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍇𑌨 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌆𑌹—

பற்றுக்குக் காரணமான மக்கள் மனைவி முதலானோர்மீது அகக்கரணம் பற்றாதவனாய், அந்தக்கரணத்தை வசப்படுத்தி, உடம்பின்மேலும் உயிர்வாழ்க்கையின்மேலும் போகத்தின்மேலும் ஆசைநீங்கியவனாய் எவன் இவ்வாறுள்ளவனோ, ஆத்மாவை அறிபவனோ, அவன் நைஷ்கர்ம்யமாகியஸித்தியைப் பெறுகிறான். கர்மமில்லா ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உணர்கின்ற எந்த மெய்யுணர்வினால் கர்மங்கள் நீங்குகின்றனவோ, அது நிஷ்கர்மம்; அதனது தன்மை - நைஷ்கர்ம்யம். அல்லது, "நைஷ்கர்ம்யம் - கர்மமில்லா ஆத்மவடிவாய் நிற்றலாகிய நிஷ்கர்மநிலை, கர்மம் நீங்கிநிற்கும் நிலை" என்க. அதனுடைய ஸித்தியானது, அது கைகூடுதலானது - மேலானது, கர்மத்தாலாகும்ஸித்தியினும் வேறானது, உடனே விடுபட்டுநிற்கும் நிலையென்பது. (இதனை அவன்) ஸந்யாஸத்தினால், மெய்யறிவினால், அல்லது அதனோ[மெய்யறிவோ]டமைந்த ஸகலகர்மத்துறவினால் அடைகிறான். அவ்வண்ணமே, "ஸகலகர்மங்களையும் மனத்தால் துறந்து (ஒன்றையும்) செய்யவேசெய்யாதவனாய் செய்விக்காதவனாய் வீற்றிருக்கின்றான்" (௫ - ௧௩) எனக்கூறப்பட்டுள்ளது. (௪௯)

ஈச்வரனைத் தொழுதலாகிய முற்கூறிய ஸ்வகர்மாநுஷ்டானத்தினால், தனக்குரிய செய்கையைச் செய்வதனால் வருவதாய் முன்பு (௧௮ - ௪௬) லக்ஷணம் கூறப்பட்டுள்ள ஸித்தியைப் பெற்று ஆத்மவிவேகவுணர்வுஉண்டானவனுக்கு நைஷ்கர்ம்யமாகிய ஸித்தியானது, கர்மம்நீங்கிய நிலையானது, சுத்தமான ஆத்மாவினுடைய அறிவிலே நிலைத்தலானது எம்முறையினால் உண்டாகுமோ, அதனைக் கூறவேண்டும் என அருளிச்செய்கிறார் :

௫௦. 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌥𑌾𑌽𑌽𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌮𑍇 ।
𑌸𑌮𑌾𑌸𑍇𑌨𑍈𑌵 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑌰𑌾 ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌈𑌶𑍍𑌵𑌰𑌂 𑌸𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌜𑌾𑌂 𑌕𑌾𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃— '𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃' 𑌇𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌅𑌨𑍁𑌵𑌾𑌦𑌃 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑍍𑌥𑌃 । 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌂, 𑌯𑌦𑌰𑍍𑌥𑍋𑌽𑌨𑍁𑌵𑌾𑌦𑌃 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌯𑌥𑌾 𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍂𑌪𑍇𑌣 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿, 𑌤𑌥𑌾 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌂 𑌮𑍇 𑌮𑌮 𑌵𑌚𑌨𑌾𑌤𑍍 𑌨𑌿𑌬𑍋𑌧 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇𑌨 𑌅𑌵𑌧𑌾𑌰𑌯 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 । 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣? 𑌨 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹—𑌸𑌮𑌾𑌸𑍇𑌨𑍈𑌵 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣𑍈𑌵 𑌹𑍇 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 । "𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌨𑌿𑌬𑍋𑌧" 𑌇𑌤𑌿 𑌅𑌨𑍇𑌨 𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃 𑌤𑌾𑌮𑌿𑌦𑌂𑌤𑌯𑌾 𑌦𑌰𑍍𑌶𑌯𑌿𑌤𑍁𑌮𑌾𑌹—'𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑌰𑌾' 𑌇𑌤𑌿 । 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 । 𑌕𑌸𑍍𑌯? 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌯𑌾 𑌪𑌰𑌾 𑌕𑍀𑌦𑍃𑌶𑍀 𑌸𑌾?—𑌯𑌾𑌦𑍃𑌶𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 । 𑌕𑍀𑌦𑍃𑌕𑍍 𑌤𑌤𑍍?—𑌯𑌾𑌦𑍃𑌶 𑌆𑌤𑍍𑌮𑌾 । 𑌕𑍀𑌦𑍃𑌶𑌃 𑌸𑌃?—𑌯𑌾𑌦𑍃𑌶𑍋 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌉𑌕𑍍𑌤𑌃, 𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌨𑍍𑌯𑌾𑌯𑌤𑌶𑍍𑌚 ॥

---

௫௦. ஸித்தியைப் பெற்றவன் எவ்விதத்தால் ப்ரஹ்மத்தை அடைகிறானோ, அவ்விதத்தைச் சுருக்கமாகவே கௌந்தேய! என்னிடமிருந்து அறிந்துகொள். அறிவினுடைய முடிந்தஎல்லை எதுவோ, (அது அவ்விதத்தை அறிந்து அநுஷ்டிப்பதனாலாகும்).

ஸித்தியை - தனது கர்மத்தால் ஈச்வரனைத் தொழுது அவனது அருளினாலாவதாய், உடம்பும் இந்திரியங்களும் ஞானநிஷ்டைக்கு உரியனவாதலாகியஸித்தியை. "ஸித்தியைப்பெற்றவன்" என அதனை [ஸித்தியை] அநுவதித்தல் பின்வரும்விஷயத்திற்கென்க.—அநுவதித்தல் எதற்காக உள்ளதோ, அந்தப்பின்வரும்விஷயம் யாது?—கூறுவோம் : (அவன்) ஞானநிஷ்டையாகிய எந்தவிதத்தால் பரமாத்மாவை அடைகின்றானோ, அந்தவிதத்தை, ஞானத்திலே நிலைபெறுவதின் முறையை எனது வார்த்தையினால் அறிந்துகொள், நிச்சயமாக இன்னதென்று தெரிந்துகொள் என்றபடி.—விரிவாக (அது சொல்லப்படுமோ)?—அன்று எனக் கூறுகிறார் : "சுருக்கமாகவே (சொல்லப்படும்)."

ப்ரஹ்மத்தை அடைதலே ஆத்மஞானமுடிவு.

"எவ்விதத்தால் ப்ரஹ்மத்தை அடைகின்றானோ, அவ்விதத்தை அறிந்துகொள்" என்றதினால் எது, ப்ரஹ்மத்தை அடைதலானது மேற்கொள்ளப்பட்டதோ, அதனை இன்னதென்று உணர்த்துவான் "எது ஞானத்தினுடைய முடிந்த எல்லையோ" என்கிறார். நிஷ்டை - எல்லை, முடிபு என்பது.—எதனுடைய?—ப்ரஹ்மஞானத்தினுடைய.—(இதனது) முடிந்த எல்லை எதுவோ, அது எத்தகையது?—ஆத்மஅறிவு எத்தகையதோ, (அத்தகையது).—அது எப்படிப்பட்டது? - ஆத்மா எப்படிப்பட்டதோ, (அப்படிப்பட்டது.)—அது எப்படிப்பட்டது?—பகவானால் எப்படிப்பட்டதாக அருளிச்செய்யப்பட்டும், உபநிஷத் வாக்கியங்களால் எப்படிப்பட்டதாக உரைக்கப்பெற்றும், (அவரது திருவாக்குக்களிலுள்ள) யுக்திகளினால் எப்படிப்பட்டதாக (நிர்ணயிக்கப்பட்டும் உள்ளதோ, அப்படிப்பட்டது.)

நநு விஷயாகாரம் ஜ்ஞாநம் । ந ஜ்ஞாநவிஷய:, நாபி ஆகாரவாந் ஆத்மா இஷ்யதே க்வசித் ।

நநு 'ஆதித்யவர்ணம்' 'பாரூப:' 'ஸ்வயஞ்ஜ்யோதி:' இதி ஆகாரவத்த்வம் ஆத்மந: ஶ்ரூயதே ।

ந; தமோரூபத்வப்ரதிஷேதார்தத்வாத் தேஷாம் வாக்யாநாம்—த்ரவ்யகுணாத்யாகாரப்ரதிஷேதே ஆத்மந: தமோரூபத்வே ப்ராப்தே தத்ப்ரதிஷேதாய 'ஆதித்யவர்ணம்' இத்யாதீநி வாக்யாநி । 'அரூபம்' இதி ச விஶேஷத: ரூபப்ரதிஷேதாத் । அவிஷயத்வாச்ச—'ந ஸம்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்' 'அஶப்தமஸ்பர்ஶம்' இத்யாதே: । தஸ்மாத் ஆத்மாகாரம் ஜ்ஞாநம் இதி அநுபபந்நம் ॥

கதம் தர்ஹி ஆத்மந: ஜ்ஞாநம்? ஸர்வம் ஹி யத்விஷயம் யத் ஜ்ஞாநம், தத் ததாகாரம் பவதி । நிராகாரஶ்ச ஆத்மா இத்யுக்தம் । ஜ்ஞாநாத்மநோ: உபயோ: நிராகாரத்வே கதம் தத்பாவநாநிஷ்டா இதி? ।

ஆத்மஅறிவு நிகழக்கூடுமோ ?

(ஆக்ஷேபம்) :—அப்படியானால், அறிவு அறியப்படும்பொருளினது உருவத்தைக்கொண்டது. ஆத்மாவோ அறிவினால் அறியப்படும்பொருளாகவும், உருவமுள்ளதாகவும் ஓரிடத்தும் கொள்ளப்படவில்லை. (அறிவு அறியப்படும்பொருளினது உருவத்தைக் கொள்வதனாலும், ஆத்மா அறியப்படும்பொருளாகாமையினாலும், அதற்கு உருவமின்மையினாலும் அதனுடைய வடிவஞானமானது செல்லாது என இவ்வாக்ஷேபம் எழுந்ததென்க.—ஆ.)

(ஸமாதாநம்) :—ஏன் ! "ஸூர்யன்போன்ற நிறமுடையது" (ச்வே - ௩ - அ) "ஒளிவடிவானது" (சா - ௩ - ௧௪ - உ), "ஸ்வயம்பிரகாசமானது" (பி - ௪ - ௩ - ௯) என ஆத்மாவிற்கு உருவமுண்டென்று சுருதிகளிற் கூறப்படுகின்றதே !

(ஆக்ஷேபம்) :—அப்படியன்று ; (ஆத்மா) இருள்வடிவினது என்பதை மறுத்தல் அவ்வாக்கியங்கட்குப் பொருளாதலின். ஆத்மாவிற்குத் திரவியம் குணம் முதலியவற்றினது உருவங்களை விலக்க, (அங்ஙன மதற்கு) இருள்வடிவ முண்டு என்றுவர, அதனை மறுத்தற்பொருட்டாய் "ஸூர்யன்போன்ற நிறமுடையது" என்பது முதலான வாக்கியங்கள் உள்ளனவென்க. மேலும், "உருவமில்லாதது" (கட - ௩ - ௧௫) என உருவத்தைச்சிறப்பாக மறுத்தலாலும்(ஆத்மாவிற்கு உருவமில்லை. மற்றும், அறிவிற்கு விஷயமாகாமையினாலும், (அறிவு ஆத்மாவைப் பற்றாது) ; "இதனது உருவம் (நமது) பார்வைக்கு விஷயமாய் நிற்பதில்லை, இதனை ஒருவனும் கண்ணால் பார்க்கமுடியாது" (ச்வே - ௪ - ௨௦), "ஓசையில்லது, ஸ்பர்சமில்லது" (கட - ௩ - ௧௫) என்பது முதலியவற்றாலென்க. ஆகவே, ஆத்மவடிவான அறிவு நிகழுமென்பது செல்லாது.

அப்பொழுது [இவ்வாறுள்ளவளவிலே], ஆத்மாவை அறிதல் எவ்வாறு கூடும்? எந்த அறிவு எவ்விஷயத்தைப் பற்றியதோ, அஃதெல்லாம் அதனது [அவ்விஷயத்தினது] உருவமுடையதாய் உள்ளது. ஆத்மாவோ உருவமில்லாதது எனக் கூறப்பட்டுளது. அறிவு ஆத்மா இரண்டிற்கும் உருவமில்லையாயின், அதனுடைய தியானநிஷ்டையானது, (ஆத்மஅறிவினுடைய தியானமுடிபானது, ஆத்மாவை நேரேகண்டுணர்ந்து தேறுதலானது—ஆ.) எவ்வாறு அமையும்? என்பது—

𑌨 ; 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌤𑍍𑌵𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 । 𑌬𑍁𑌦𑍍𑌧𑍇𑌸𑍍𑌤𑍁 𑌆𑌤𑍍𑌮𑌵𑌤𑍍 𑌨𑍈𑌰𑍍𑌮𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌆𑌤𑍍𑌮𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌾𑌭𑌾-𑌸𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌭𑌾𑌸𑌂 𑌮𑌨𑌃, 𑌤𑌦𑌾𑌭𑌾𑌸𑌾𑌨𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿, 𑌇𑌨𑍍-𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌾𑌸𑌶𑍍𑌚 𑌦𑍇𑌹𑌃 । 𑌅𑌤𑌃 𑌲𑍌𑌕𑌿𑌕𑍈𑌃 𑌦𑍇𑌹𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌏𑌵 𑌆𑌤𑍍𑌮𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 । 𑌦𑍇𑌹𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌶𑍍𑌚 𑌲𑍋𑌕𑌾𑌯𑌤𑌿𑌕𑌾𑌃 "𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃 𑌕𑌾𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 । 𑌤𑌥𑌾 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌮𑌨𑌶𑍍𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 । 𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌆𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍍 𑌅𑌵𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌾𑌖𑍍𑌯𑌮𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑍇 𑌆𑌤𑍍𑌮𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌾𑌭𑌾𑌸𑌤𑌾 𑌆𑌤𑍍𑌮𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌰-𑌣𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑌤𑌃 𑌆𑌤𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨 𑌵𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿? — 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪-

---

ஆத்மா புத்தியில் வெளிப்படுகின்றது.

(ஸமாதாநம்):—அப்படியன்று; ஆத்மா மிகநிர்மலமாயும், மிக ஸ்வச்சமாயும், மிக நுண்மையாயுமிருத்தல் கூடுமாதலின். புத்தியும் ஆத்மாபோல நிர்மலமாயிருத்தல் முதலியன கூடுமாதலால், (அப்புத்தி) ஆத்மாவினுடைய அறிவுவடிவத்தின் சாயலைக் கொள்ளுதல் அமையுமென்க. புத்தியினுடைய சாயலுடைத்து மனம்: அதனது சாய லுடையவை இந்திரியங்கள்: இந்திரியங்களுடைய சாயலுடைத்து உடம்பு என்க. (ஆத்மாவிற்கும் புத்திக்கும் நிர்மலமாயிருத்தல், ஸ்வச்சமாயிருத்தல் முதலிய ஒப்புமை இருப்பதனுல், ஆத்மனைசதந்யசாயலால் வியாபிக்கப்பெற்று, அறிவின் விகாரத்தை யுடையது புத்தி; அந்த ஆத்மஅறிவுச்சாயலோடமைந்த புத்தியினுல் வியாபிக்கப் பெற்றது மனம்; அந்த ஆத்மஅறிவுச்சாயலோடமைந்த மனத்தினுல் வியாபிக்கப் பெற்றவை இந்திரியங்கள்; அந்த ஆத்மஅறிவுச்சாயலோடமைந்த இந்திரியங்களால் வியாபிக்கப்பெற்றது ஸ்தூலஉடம்பு; எனக் கண்டுகொள்க.—ஆ.) ஆதலால், ஸாமாந் நியஜநங்களாவார் உடம்பில்மட்டுமே ஆத்மநோக்கைச் செய்கின்றுர்கள். ஆத்மநோக் கானது உடம்பில்மட்டும் காணப்படுதலால், அதனுள் சைதந்யச்சாயல் வியாபித்த லானது இந்திரியங்களின்வழியாகக் கொள்ளப்படுகின்றது; இந்திரியங்களுள்ளும் ஆத்மநோக்கானது காணப்படுதலால், சைதந்யச்சாயலுடைமை மனத்தின் வழியாக அமைகின்றது; மனத்தினுள்ளும் ஆத்மநோக்கானது காணப்படுதலால், சைதந்யச் சாயலுடைமை புத்தியின்வழியாகப் பெறப்படுகின்றது; புத்தியினுள்ளும் ஆத்ம நோக்கானது காணப்படுதலால், அஜ்ஞானத்தின் வழியாக அமைகின்றது.—ஆ.) உடலையே அறிவென வாதிக்கும் லோகாயதிகர்கள் "அறிவுடைய உடம்புதான் ஆத்மா" எனக் கூறுகிருர்கள். அவ்வண்ணமே, சிலர் இந்திரியங்களையே அறிவென வாதிப்பவர். சிலர் மனத்தையே அறிவென வாதிப்பவர். சிலர் புத்தியையே அறி வென வாதிப்பவர். சிலர் அதனினும் [புத்தியைக்காட்டிலும்] உள்ளேயுள்ளதாய், அவ்யாக்ருதம் என்னும் பெயருடையதாய் அவித்யாநிலைமைத்தான அவ்யக்தத்தை ஆத்மாவாகக் கொண்டவர். புத்திமுதலாக உடம்பு ஈருகவுள்ள எங்குமே ஆத்ம அறிவுச்சாயலுடைமையானது,(புத்திமுதலியனவே)ஆத்மாஎன மயங்குதற்குக்காரண

𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾, 𑌨 𑌆𑌤𑍍𑌮𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑍍, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌕𑌾𑌰𑍈𑌃 𑌏𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌯𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌇𑌤𑌿 । 𑌅𑌤 𑌏𑌵 𑌹𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌬𑍌𑌦𑍍𑌧𑌾𑌃 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌵 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾𑌃, 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑌾𑌂 𑌚 𑌸𑍍𑌵𑌸𑌂𑌵𑌿𑌦𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌽𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌨 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌯𑌤𑍍𑌨𑌃, 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌕𑌾𑌰𑌾𑌪𑌹𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍁𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 𑌆𑌸𑌨𑍍𑌨𑌤𑌰𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌮𑌪𑌿, 𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 𑌅𑌤𑌿𑌦𑍂𑌰𑌮𑍍 𑌅𑌨𑍍𑌯𑌦𑌿𑌵 𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌤𑌿 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌾𑌮𑍍 । 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌲𑌬𑍍𑌧𑌗𑍁𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌨𑌾𑌂 𑌨 𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍁𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌸𑌨𑍍𑌨𑌤𑌰𑌮𑍍 𑌅𑌸𑍍𑌤𑌿 । 𑌤𑌥𑌾 𑌚 𑌉𑌕𑍍𑌤𑌂—'𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌵𑌗𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ॥

மாம்; எனவே, ஆத்மாவைப்பற்றிய அறிவை விதிமுகத்தால் உணர்த்தவேண்டா.—அங்ஙனம் (செய்யவேண்டியது) என்ன?—பெயர் உருவம் முதலிய அநாத்மாக்களை, ஆத்மா அல்லாதவற்றைத்தள்ளுதலேதான் செய்யவேண்டியது; ஆத்மசைதந்யஉணர்ச்சியைச் செய்யவேண்டாம்; ஏனெனில், (அவ்வுணர்ச்சி) அவித்யையினால் ஏற்றப்பட்ட எல்லாப்பொருள்களினுடைய உருவங்களோடுகூடவே சேர்ந்து உணரப்படுகின்றது. ஆதலால்தான், விஜ்ஞானவாதிகளான [எல்லாம் உணர்ச்சிகளெனக் கூறும்] பௌத்தர்கள் "உணர்ச்சிகளைத்தவிர வேறு பொருளே இல்லை" எனக்கொண்டவர்; (அவ்வுணர்ச்சிகள் தமக்குத்)தாமே அறியப்படுகின்றவை எனக்கொண்டு அதனால் "(அவற்றிற்கு) வேறுபிரமாணம் வேண்டியதில்லை" எனவும் கொண்டனர். ஆகவே, ப்ரஹ்மத்தினிடத்து அவித்யையினால் ஏற்றப்பட்டவற்றைத் தள்ளுதல்மாத்திரம் செய்யவேண்டுமேயன்றி ப்ரஹ்மத்தை உணர்வதிலே முயற்சி செய்யவேண்டாம்; மிகப்பிரஸித்தமாயிருத்தலின் (ப்ரஹ்மமானது யாவர்க்கும் நன்கு தெரிந்திருப்பதாதலால் என்க. இது யாவர்க்கும்) நன்கு தெரிந்திருப்பதாயும், எளிதில் அறியக்கூடியதாயும், மிகச் சமீபத்திலுள்ளதாயும் ஆத்மாவாயும் [ஒருவனுக்குத் "தான்" என்பது எதுவோ, அதுவாயும்] இருந்தாலும், அவிவேகிகட்கு, பகுத்தறிவில்லாதவர்க்கு, அவித்யையினால் கற்பிக்கப்பட்ட பெயர் உருவம் என்பவற்றினுடைய பல தோற்றங்களால் புத்தி கவரப்பெற்றவர்க்கு, தெரியாததாகவும் அறிதற்கு அரியதாகவும் வெகுதூரத்திலிருப்பதாகவும் வேறுபொருள்போலத் தோற்றுகின்றது. மற்று, வெளித்தோற்றங்களினின்றும் புத்திநீங்கியவராய் ஆசார்யனது அருளையும், மனத்தினது தெளிவையும் பெற்றவர்க்கு இன்பமாயும், நன்கு தெரிந்ததாயும், எளிதில் அறியக்கூடியதாயும் மிகச் சமீபத்திலுள்ளதாயும் இருப்பது - இதனினும்[ப்ரஹ்மத்தைக்காட்டிலும்] வேறொன்று இல்லை. அவ்வண்ணமே, "(ஆத்மஅறிவு உடனே) நேரே அறியப்படுவது, தருமத்தின் நீங்காதது" (௯ - ௨) என அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது.

𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑌾𑌃 "𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌆𑌤𑍍𑌮𑌵𑌸𑍍𑌤𑍁 𑌨 𑌉𑌪𑍈𑌤𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌅𑌤𑌃 𑌦𑍁𑌃𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 ।

𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 𑌏𑌵𑌮𑍍 𑌗𑍁𑌰𑍁𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌰𑌹𑌿𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌶𑍍𑌰𑍁𑌤𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌾𑌸𑌕𑍍𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌷𑍁 𑌅𑌕𑍃𑌤𑌶𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌮𑍍 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 𑌤𑍁 𑌲𑍌𑌕𑌿𑌕𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌦𑍍𑌵𑍈𑌤𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌨𑌿𑌤𑌰𑌾𑌮𑍍 𑌦𑍁𑌃𑌸𑌮𑍍𑌪𑌾𑌦𑌾, 𑌆𑌤𑍍𑌮𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌯 𑌅𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃, 𑌯𑌥𑌾 𑌚 "𑌏𑌤𑌤𑍍 𑌏𑌵𑌮𑍇𑌵, 𑌨 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾" 𑌇𑌤𑌿 𑌅𑌵𑍋𑌚𑌾𑌮; 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌭𑌗𑌵𑌤𑌾 '𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌾 𑌨𑌿𑌶𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍋 𑌮𑍁𑌨𑍇𑌃' 𑌇𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌭𑍇𑌦𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌆𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌨𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 । 𑌨 𑌹𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌨𑌾𑌮 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌃 𑌹𑍇𑌯𑌃 𑌉𑌪𑌾𑌦𑍇𑌯𑍋 𑌵𑌾 । 𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿, 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑍇𑌰𑌨𑍍 । 𑌨 𑌚 𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯𑌚𑍇𑌤𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌮𑍍 । 𑌨 𑌚 𑌸𑍁𑌖𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍁𑌖𑌂, 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍁𑌃𑌖𑌂, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑌗𑌤𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌯𑌥𑌾

இனி, தம்மைப் பண்டிதராக மதித்துக்கொண்ட சிலர் "(ஆத்மாவிற்கு) உருவம் இல்லையாதலால் புத்தியானது (அந்த) ஆத்மப்பொருளைப் பற்றுது; ஆகவே, மெய்யறிவுநிஷ்டையானது சாதிக்கத்தக்கதன்று" எனக் கூறுகிறார்கள்.

இவ்வாறு உண்மை; குருஸம்பிரதாயமில்லாதவராய், வேதாந்தநூல்களைப் படித்துணராதவராய், வெளிவிஷயங்களிலே புத்தி முற்றும் அழுந்தியவராய், நேரான பிரமாணங்களிலே பயிற்சிசெய்யாதவர்க்கு (அது அமையாது). மற்று, அவர்கட்கு மாறுனவர்க்கோ [குருஸம்பிரதாயத்தையும், மற்றுமிதுபோன்றவற்றையும் உடையவர்க்கோ] உணரப்படுவதும் உணர்வதுமாகிய உலகப்பொருளிலே த்வைதப்பொருளிலே புத்தியானது [த்வைதம் மெய்யென்னும் எண்ணமானது] சிறிதும் அமையாது; ஆத்மஅறிவைத்தவிர வேறோர்பொருளையும், காணுமையின். "இது இப்படித்தான், வேறுவிதமாயன்று [அத்வைதமேதான் மெய்ப்பொருள், த்வைதமோ அவித்யையினுல்ஆனது]" என்றவகையைக்கூறியுள்ளோம். பகவானும் "பிராணிகள் எதில் தூங்குகின்றனவோ, அது (உண்மையைக்) காணும் முனிவனுக்கு இரவு" (உ-சுகூ) என அருளிச்செய்துள்ளார். ஆகவே, வெளித்தோற்றங்களுடைய பேதபுத்தியைத் தவிர்த்தலே ஆத்மவடிவத்தைப் பற்றுதற்குக் காரணமாம். ஆத்மா என்பது ஒருவனுக்கும் ஒருபொழுதாயினும் தெரியாதபொருளன்று, அடையவேண்டிய பொருளன்று, தள்ளவேண்டிய பொருளன்று, அல்லது கொள்ளவேண்டிய பொருளன்று. அந்த ஆத்மா தெரியாத பொருளாயின், தனதுநலத்திற்கான எல்லாச்செய்கைகளும் வீணுகிவிடுமன்றே. மேலும், உணர்வில்லாத உடம்புமுதலியவற்றினதுநலத்திற்காக எனவும் கொள்ளுதல் செல்லாது. அன்றியும், "இன்பம் இன்பத்திற்காக, துன்பம் துன்பத்திற்காக" (எனவும் கொள்ள முடியாது. இன்னும், யஜ்ஞம்முதலியன) எல்லாவியவகாரங்கட்கும் முடிபான ஆத்மஅறிவிற்குப் பயன்படுவதனுலும், (ஆத்மா யாவர்க்கும்

𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑌾𑌯 𑌨 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌅𑌨𑍍𑌤-𑌰𑌤𑌮𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑌵𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 । 𑌇𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌾𑌂 𑌸𑍁𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ॥

𑌯𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂, 𑌤𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌶𑍇𑌨𑍈𑌵 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌵𑌗𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍁𑌖𑌾𑌦𑌿𑌵𑌦𑍇𑌵 𑌇𑌤𑌿 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚—𑌅𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌚𑍇𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌜𑍍𑌞𑍇𑌯𑌵𑌤𑍍 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑍇𑌤 । 𑌯𑌥𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌘𑌟𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿, 𑌤𑌥𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 । 𑌨 𑌚 𑌏𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 । 𑌅𑌤𑌃 𑌅𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌽𑌪𑌿 𑌅𑌤 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌯𑌤𑍍𑌨𑍋 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃, 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌆𑌤𑍍𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌵𑍇𑌵 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑍁𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑌾 ॥ ௫௦ ॥

பிரஸித்தமாயுளது.) ஆகவே, தனதுஉடம்பை அளந்தறிய வேறு பிரமாணம் வேண்டியதில்லைபோல, ஆத்மா அதனினும் உள்ளே உள்ளமையால் [உடம்பைக்காட்டினும் நிகச்சமீபத்திலிருப்பதனால்] அதனை அறியும்விஷயத்திலே வேறு பிரமாணம் வேண்டியதில்லை. எனவே, இவ்வாறாக ஆத்மஞானநிஷ்டையானது, ஆத்மஅறிவிலே நிலைத்தலானது விவேகிகட்கு, பகுத்தறிவுள்ளவர்க்கு எளிதே அமைவதெனப் பெறப்பட்டது.

அறிவும், அறியும்பொருளும் வெளிப்படையா யுள்ளன.

எவர்கட்கு அறிவு உருவமில்லாததோ, பிரத்தியக்ஷமாய் இல்லாததோ [அறிவிற்கு உருவமில்லை, அது பிரத்தியக்ஷமாயில்லை என எவர்கள் கொள்கிறார்களோ], அவர்கட்குங்கூட அறிவின்வழியாகத்தான் அறியப்படும்பொருளை அறிதலாகின்றது; ஆதலால், இன்பம்முதலியதுபோலவே, அறிவு மிக நன்றாய் அறியப்படுவது என (அவர்களும்) ஏற்றுக்கொள்ளவேண்டுமென்க.

அன்றியும், காம்யமான அக்நிஹோத்ரம் முதலியவற்றைச் செய்யும்பொழுது, நித்யமான அக்நிஹோத்ரம் முதலியவையும் ஒன்றாயுள்ளமுறையினாலேயே செய்யப்பட்டனவாகின்றன ; எனவே, அந்த ஆயாஸத்துன்பத்தினாலேயே காம்யமான அக்நிஹோத்ரம்முதலியவற்றின் பயன் கழிந்திட்டதாகும் ; அதேமுறையுடைத்தாதலின். (காம்யமான அக்நிஹோத்ரத்திற்கும் நித்யமான அக்நிஹோத்ரத்திற்கும் செய்கையிலே பேதமின்மையால், முந்தினதைச் செய்கின்ற அக்காலத்தே, அதாவது ஒரே காலத்தே, பிந்தினதும் செய்யப்பட்டதாகும். இவ்வாறாக, காம்யாநுஷ்டாநமும் நித்யாநுஷ்டாநமும் ஒருங்கே உள்ளமையின், நித்யாநுஷ்டாநத்திலேயுள்ள ஆயாஸத்துன்பத்தினால் முன்செய்த பாவகர்மப்பயனை அநுபவிப்பதுபோல, காம்யப்பயனும் அநுபவிக்கப்பட்டதாகுமென்க.— ஆ.) இனி, காம்யாக்நிஹோத்ரம் முதலியவற்றின் பயன் வேறுதான், ஸ்வர்க்கம்முதலிய (வேறு பயனேதான்)ஆயின், அவற்றை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பமும் வேறாதல் வேண்டும். ஆனால், அஃதில்லை ; விரோதம் காணப்படுவதனால் என்க. நித்யகர்மத்தை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பமானது, காம்யகர்மத்தை அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பத்தைக் காட்டிலும் வேறாகக் காணப்படவில்லையன்றோ.

இன்னும், வேறோர் (காரணமுண்டு):—விதிக்கப்படாத கர்மமும், விலக்கப்படாத கர்மமும், தற்காலப்பயனுள்ளவை [உடனே பயனைத்தந்திடும்]; மற்று, சாஸ்திரத்தில்விதிக்கப்பட்டகர்மமும், விலக்கப்பட்டகர்மமும் தற்காலப்பயனுள்ளவையல்ல. (தற்காலப்பயனுள்ளவை)யாயின், அங்ஙனம், காணப்படாத பயனை வேண்டி ஸ்வர்க்கம் முதலியவற்றிலும்[அவற்றையடையும்விஷயத்திலும்]முயற்சியுண்டாகாது. கர்மத்தின் இயல்பிலே பேதமில்லாதிருக்க, அக்நிஹோத்ரமுதலியவற்றையே நித்யமாக (அநுஷ்டிக்குங்கால்), அநுஷ்டிப்பதிலேயுள்ள ஆயாஸத்துன்பமாத்திரத்தினாலேயே வேறு பயனில்லாது அவை) கழிந்துபோதலும், ஆனால் காம்யமாக (அவற்றையே அநுஷ்டிக்குங்கால்), உறுப்புக்களும் செய்யவேண்டிய முறைகளும் மற்றும்இவைபோன்றவைகளும் அதிகமில்லாதிருக்க, பயனைவிரும்புதலமாத்திரத்தினாலேயே ஸ்வர்க்கம்முதலிய

க்ரியதே। தஸ்மாந்ந நித்யாநாம் கர்மணாமத்ருஷ்டபலாபாவ: கதாசிதபி உபபத்யதே ।

அதஶ்ச அவித்யாபூர்வகஸ்ய கர்மண: வித்யைவ ஶுபஸ்ய அஶுபஸ்ய வா க்ஷயகாரணமஶேஷத:, ந நித்யகர்மாநுஷ்டாநம் । அவித்யாகாமபீஜம் ஹி ஸர்வமேவ கர்ம । ததா சோபபாதிதம் அவித்வத்விஷயம் கர்ம, வித்வத்விஷயா ச ஸர்வகர்மஸம்ந்யாஸபூர்விகா ஜ்ஞாநநிஷ்டா—'உபௌ தௌ ந விஜாநீத:', 'வேதாவிநாஶிநம் நித்யம்', 'ஜ்ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்', 'அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்,' 'தத்த்வவித்து மஹாபாஹோ... குணா குணேஷு வர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே,' 'ஸர்வகர்மாணி மநஸா ஸம்ந்யஸ்யாஸ்தே' 'நைவ கிஞ்சித்கரோமீதி யுக்தோ மந்யேத தத்த்வவித்,' அஜ்ஞ: "கரோமி" இதி ஆருருக்ஷோ: கர்ம காரணம், ஆரூடஸ்ய யோகஸ்ய ஶம ஏவ காரணம், உதாரா: த்ரயோऽபி அஜ்ஞா:, 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்', 'அஜ்ஞா: கர்மிண: கதாகதம் காமகாமா லபந்தே', 'அநந்யாஶ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே,' "ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே"

மேலான பயன் (வருதலுமாகிய இப்பாகுபாட்டிற்குப் பிரமாணமில்லை). ஆகவே, காணப்படாத பயன் நித்யகர்மங்கட்கு இல்லையென்பது ஒருபொழுதும் ஒவ்வாது.

கர்மநெறியும், ஞானநெறியும் வெவ்வேறான இருதிறத்தார்க்கு முறையே உரியவை.

ஆகவே [காம்யகர்மம் பயனைத் தருவதுபோல, நித்யகர்மமும் பிதிருலோகத்தையடைதல்முதலிய பயனைத்தருகின்றமையின் பாவத்தை நீக்கமாட்டாதாதலால்], வித்யையேதான், ஞானமேதான் அவித்யையினாலான நல்வினையையும் தீவினையையும் முற்றும் அழித்தற்குக் காரணம்; நித்யகர்மங்களை அநுஷ்டிப்பதன்று. ஏனெனில், கர்மங்களெல்லாவற்றிற்குமே அவித்யையும்காமமும்[அறியாமையும், ஆசையும்] விதையென்க. அவ்வாறே, கர்மயோகம் அஜ்ஞானியைப்பற்றியது எனவும், ஸகலகர்மத்துறவோடுகூடிய ஞானநிஷ்டை ஞானியைப் பற்றியதுஎனவும் நிரூபிக்கப்பட்டுள்ளன:— ''இருவரும்அறிவதில்லை'' (உ - கக), ''அழியாததாகநித்யமாக அறிகிறான்'' (உ-உக), ''ஞானயோகத்தால் ஸாங்க்யர்கட்கும், கர்மயோகத்தால் கர்மயோகிகட்கும்''(ங - ங), ''கர்மத்திற் பற்றுள்ள அஜ்ஞானிகட்கு'' (ங-உசு), ''உயர்தோளா ! உண்மையுணர்ந்தவனோ 'குணங்கள் குணங்களிலே செல்லுகின்றன' எனக்கொண்டு பற்றுக்கொள்வதில்லை'' (ங - உஅ), ''ஸகலகர்மங்களையும் மனத்தால்துறந்து வீற்றிருக்கிறான்'' (ரு-கங), ''ஒருநிலைப்பட்டு உண்மையுணர்ந்தவன் 'நான்ஒன்றுஞ் செய்யவேஇல்லை' எனக் கொள்கிறான்'' (ரு - அ). அஜ்ஞானி ''நான் செய்கிறேன்'' என(க் கொள்கிறான். புத்தி தெளிதலை) அடையவிரும்புவோனுக்குக் கர்மம் ஸாதநம்; (அதனை)அடைந்து ஞானயோகத்தில் நிற்பவனுக்கு ஒழிவே ஸாதநம்(சு - ங). அஜ்ஞானிகள் மூவரும் மேலானவர்கள்; ஆனால், 'ஞானி நானேதான்; (இது) என் கொள்கை (எ - கஅ). அஜ்ஞானிகளான கர்மிகள்விஷயங்களை விரும்புபவராய்ப்போதலையும்வருதலையும் பெறுகிறார்கள் (கூ - உக). ''அன்னியரல்லாதவராய், ஆகாசம்போன்ற கீழ்க்கூறிய ஆத்மாவாகிய என்னைத் தியானிப்பவராய்த் தொழுகிறார்கள்''(கூ - உஉ). ''அவர்கள் எதனால் என்னை அடைகிறார்களோ, அந்த ஞானயோகத்தைக்கொடுக்கிறேன்'' (க0 - க0). கர்மிகளான

அர்தாத் ந கர்மிணஃ அஜ்ஞாஃ உபயாந்தி இதி | பகவத்கர்மகாரிணோ யே யுக்ததமா அபி கர்மிணஃ அஜ்ஞாஃ தே உத்தரோத்தரஹீனபலத்யாகாவஸானஸாதனாஃ; அநிர்தேஶ்யாக்ஷரோபாஸகாஸ்து "அத்வேஷ்டா ஸர்வபூதானாம்" இத்யா அத்யாயபரிஸமாப்தே உக்தஸாதனாஃ க்ஷேத்ராத்யாயாத்யத்யாயத்ரயோக்தஜ்ஞானஸாதனாஶ்ச | அதிஷ்டானாதிபஞ்சஹேதுகஸர்வகர்மஸந்ந்யாஸினாம் ஆத்மைகத்வாகர்த்ருத்வஜ்ஞானவதாம் பராயாம் ஜ்ஞானநிஷ்டாயாம் வர்தமானானாம் பகவத்தத்த்வவிதாம் அநிஷ்டாதிகர்மபலத்ரயம் பரமஹம்ஸபரிவ்ராஜகானாம் ஏவ பகவத்ஸ்வரூபாத்மைகத்வஶரணானாம் ந பவதி; பவத்யேவ அன்யேஷாம் அஜ்ஞானாம் கர்மிணாம் அஸந்ந்யாஸினாம் — இத்யேஷஃ கீதாஶாஸ்த்ரோக்தகர்தவ்யார்தஸ்ய விபாகஃ ||

அவித்யாவிஷயத்வம் ஸர்வஸ்ய கர்மணஃ அஸித்தமிதி சேத் —

ந; ப்ரஹ்மஹத்யாதிவத் | யத்யபி ஶாஸ்த்ராவகதம் நித்யம் கர்ம, ததாऽபி அவித்யாவத ஏவ பவதி | யதா ப்ரதிஷேதஶாஸ்த்ராவகதமபி ப்ரஹ்மஹத்யாதிலக்ஷணம் கர்ம அனர்தகாரணம் அவித்யாகாமாதிதோஷவதஃ பவதி — அன்யதா ப்ரவ்ருத்த்யனுபபத்தேஃ — ததா நித்யநைமித்திககாம்யானீதி ||

அஜ்ஞானிகள் என்னை அடைவதில்லை யென்பது, பொருளினால் [அர்த்தாபத்தியினால்]
(விளங்குகின்றது). பகவானுக்காகக் கர்மத்தைச் செய்கின்ற எவர்கள் மேலான
யோகிகளாயினும் கர்மிகளான அஜ்ஞானிகளோ, அவர்கள் பயனை விட்டிடுதல்வரை
யுள்ள பிந்தின தாழ்ந்த ஸாதனத்தைக்கொண்டவர் (கஉ - சு, எ, அ, கூ, க0, கக).
ஆனால், குறிப்பிட்டுணர்த்தமுடியாத அழியாப்பொருளைத் தொழுபவரோ "எந்தப்
பிராணியையும் பகையாதவனாய்" (கஉ - கந) என்பதுமுதலாக அத்தியாயமுடிவுவரை
கூறப்பட்ட ஸாதநங்களையும், க்ஷேத்திராத்தியாயம் முதலிய மூன்றுஅத்தியாயங்களுள்
ளும் கூறப்பட்ட ஞானஸாதநங்களையும்உடையவர் (கங - எ, அ, கூ, க0, கக; கச -
உஉ, உங, உச, உரு, உசு; கரு - ங, ச, ரு). இடம் முதலிய ஐந்தினாலும் (கஅ - கச)
உண்டாகின்ற எல்லாக்கர்மங்களையும் துறந்து, "ஆத்மா ஒன்றுதான் அகர்த்தாதான்"
என்னும் அறிவுடையோராகி, மேலான ஞானநிஷ்டையிலே இருப்பவராய், பகவானது
உண்மையினை உணர்ந்து, "பகவத்ஸ்வரூபமும் ஆத்மாவும் ஒன்றுதான்" என்பதை
அடைக்கலமாகப்பெற்ற பரமஹம்ஸத்துறவிகட்கு, தீயபயன்முதலிய கர்மப்பயன்
மூன்றும் (கஅ - கஉ) வருவதில்லை; துறவிகளல்லாதமற்றையோர்கட்கு, அஜ்ஞானி
களான கர்மிகட்கு வரவேவருகின்றது. இவ்வாறாக, இது - கீதாசாஸ்திரத்தினுள்
உபதேசிக்கப்பட்ட செய்யவேண்டிய கடமையின் பாகுபாடாம்.

கர்மம் அவித்யையினால் விளைகின்றது.

(ஆக்ஷேபம்) :—எல்லாக்கர்மங்களும் அவித்யையினால் உண்டாவதென்பது
அமையாது எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று; ப்ரஹ்மஹத்யை [பிராமணனைக் கொல்லுதல்]
முதலியனபோல.—நித்யகர்மமானது சாஸ்திரத்தினுள் உபதேசிக்கப்பட்டதாயினும்,
அவித்யையுள்ளவர்க்கே உரித்தாயுளது. ப்ரஹ்மஹத்யைமுதலாகிய கர்மமானது
சாஸ்திரத்தினுள் தீங்கிற்குக் காரணமாக மறுத்துஉபதேசிக்கப்பட்டதாயினும், அவி
த்யை காமம்முதலிய குற்றங்களுடையவனுக்கு எப்படி உரித்தாயுளதோ (அவன்
அதனை எப்படிச் செய்கின்றானோ)—அல்லாக்கால், (அவன் அதிற்) செல்லுதல் பொ
ருந்தாமையின்—அப்படியே, நித்ய நைமித்திக காம்ய கர்மங்களும் (அவனுக்கே
உரித்தானவை) என்பதாம்.

𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑌾 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨; 𑌚𑌲𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌸𑍍𑌯 "𑌅𑌹𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿" 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ॥

𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌗𑍌𑌣𑌃, 𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨; 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌵𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌗𑍌𑌣𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 ।

𑌆𑌤𑍍𑌮𑍀𑌯𑍇 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌗𑍌𑌣𑌃; 𑌯𑌥𑌾 𑌆𑌤𑍍𑌮𑍀𑌯𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑍇 '𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑍈 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑌾𑌸𑌿' 𑌇𑌤𑌿, 𑌲𑍋𑌕𑍇 𑌚 "𑌮𑌮 𑌪𑍍𑌰𑌾𑌣 𑌏𑌵 𑌅𑌯𑌂 𑌗𑍌𑌃" 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 । 𑌨𑍈𑌵𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 । 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌣𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌯𑍋𑌃 𑌅𑌗𑍃𑌹𑍍𑌯𑌮𑌾𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌯𑍋𑌃 ।

𑌨 𑌗𑍌𑌣𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌤𑌾, 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌶𑌬𑍍𑌦𑍋𑌪𑌮𑌾𑌨𑍇𑌨 । 𑌯𑌥𑌾 "𑌸𑌿𑌂𑌹𑍋 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌃" "𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌮𑌾𑌣𑌵𑌕𑌃" 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌂𑌹 𑌇𑌵 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑌿𑌵 𑌕𑍍𑌰𑍌𑌰𑍍𑌯𑌪𑍈𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌮𑌾𑌣𑌵𑌕𑌯𑍋-

---

(ஆக்ஷேபம்).—உடம்பினும் வேருக ஆத்மாவை அறியாதவழி, நித்யகர்மம் முதலிய கர்மங்களை மேற்கொள்ளுதல் பொருந்தாது எனில்—

(ஸமாதாநம்):—அப்படியன்று; அநாத்மாவினுல் [ஆத்மாஅல்லாததினுல், உடம்புமுதலியவற்றுல்] செய்யப்படுகின்ற அசைதல்வடிவான கர்மத்தை "நான் செய்கின்றேன்" எனக்கொண்டு (ஒருவன் கர்மத்திற்) செல்லுதலைக் காண்பதனுலென்க.

(ஆக்ஷேபம்):—உடம்புமுதலியவற்றினதுசேர்க்கையிலே நான்என்னும் எண்ணமானது உபசாரவழக்கினுலாவது; அது மயக்கமன்று எனில்,—

(ஸமாதாநம்):—அப்படியன்று; அதனது செய்கைகளும் உபசாரவழக்கினுலானவை என அமையுமாதலின்.

(ஆக்ஷேபத்தின் விவரணம்):—ஆத்மாவிற்குச் சொந்தமான உடம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே நான்என்னும்எண்ணமானது உபசாரவழக்கினுலாவது; "நீதானே (உனது)மகன்எனப்படுகிறவனுயிருக்கிருய்" எனத் தனது மகனிடத்து(த் தந்தையினுடைய நான்என்னும் எண்ணத்தைச் சுருதியானது உபசாரவழக்கினுல் கூறுவது)போல: உலகத்தினுள்ளும் "இப்பசு எனது உயிரேதான்" என (வழங்கப்படுகின்றது); அதுபோல என்க. இவ்வாறு மயக்கஎண்ணமன்று. மயக்கஎண்ணமோ, வேற்றுமையறியப்படாத தூண்மனிதர்களதுவிஷயத்திலே (நிகழ்கின்றது. தூணிற்கும் மனிதனுக்கும் வேற்றுமையை உணராவழி, தூண் மனிதனுகமயங்கப்படுகின்றது).

(ஸமாதாநவிவரணம்):— உபசாரவழக்கினுலான எண்ணமானது முதன்மையானகாரியத்திற்குப் பயன்படாது [வாஸ்தவமான பயனைத் தரமாட்டாது]; உவமையுருபு தொக்குநிற்பதனுல், இடத்தை [எடுத்துக்கொண்ட பொருளை]ப் புகழும்பொருட்டாய் நிற்றலின். உதாரணமாக, "தேவதத்தன் சிங்கமாயிருக்கிருன்," "மாணுக்கன் நெருப்பாயிருக்கிருன்" என்றல் - சிங்கம்போலக் கொடுமையும், நெருப்புப்போல பொன்மைநிறமும், மற்றுமித்தன்மையதுமான ஒப்புமையினுல், (கொடுமைக்கு) இடமாயுள்ள தேவதத்தனையும் (பொன்மைநிறத்திற்கு) இடமாயுள்ள மாணுக்

ஸ்துத்யர்த்தமேவ, ந து ஸிம்ஹகார்யமக்நிகார்யம் வா கௌணஶப்தப்ரத்யயநிமித்தம் கிஞ்சித் ஸாத்யதே; மித்யாப்ரத்யயகார்யம் து அநர்த்தமதிகச்சதி இதி।

கௌணப்ரத்யயவிஷயம் ச ஜாநாதி "நைஷ ஸிம்ஹ:" "நாயமக்நி:" இதி। ததா கௌணேந தேஹாதிஸங்காதேந ஆத்மநா க்ருதம் கர்ம ந முக்யேந அஹம்ப்ரத்யயவிஷயேண ஆத்மநா க்ருதம் ஸ்யாத்। ந ஹி கௌணஸிம்ஹாக்நிப்யாம் க்ருதம் கர்ம முக்யஸிம்ஹாக்நிப்யாம் க்ருதம் ஸ்யாத்। ந ச க்ரௌர்யேண ஶௌர்யேண வா முக்யஸிம்ஹாக்ந்யோ: கார்யம் கிஞ்சித் க்ரியதே, ஸ்துத்யர்த்தத்வேந உபக்ஷீணத்வாத்।

ஸ்தூயமாநௌ ச ஜாநீத: "ந அஹம் ஸிம்ஹ:" "ந அஹமக்நி:" இதி; ந ஹி "ஸிம்ஹஸ்ய கர்ம மம, அக்நேஶ்ச" இதி। ததா "ந ஸங்காதஸ்ய கர்ம மம முக்யஸ்ய ஆத்மந:" இதி ப்ரத்யய: யுக்ததர: ஸ்யாத், ந புந: "அஹம் கர்தா மம கர்ம" இதி।

கனையும் புகழும்பொருட்டேதான். ஆனால், உபசாரவழக்கினாலாகும் சொல்லும் எண்ணமும் காரணமாக வாஸ்தவசிங்கத்தினது காரியமொன்றாயினும், வாஸ்தவநெருப்பினது காரியமொன்றாயினும் சாதிக்கப்படுவதில்லை. மற்று, மயக்கஎண்ணத்தின் பயனை தீங்கை (ஒருவன்) அநுபவிக்கிறான் என்பதாம்.

மேலும், உபசாரவழக்கினாலாகும் எண்ணத்தினால் குறிக்கப்படும் (தேவதத்தனையும் மாணுக்கனையும் பிறனொருவன்) "இவன் சிங்கமில்லை," "இவன் நெருப்பில்லை" என அறிகிறான். (ஆத்மாவிற்கும் உடம்புமுதலியவற்றினது சேர்க்கைக்கும் பேதமிருந்தும், அஜ்ஞானியானவன் இந்தத் திருஷ்டாந்தத்திற்போல், உடம்புமுதலியவற்றினது சேர்க்கையை "இது ஆத்மா இல்லை" என்று அறிகிறானில்லை; ஆகவே, அச்சேர்க்கையினிடத்து நானென்னும்சொல்லும், நானென்னும்எண்ணமும் உபசாரவழக்கினானவையல்ல என உணர்க.) அவ்வாறே, உடம்புமுதலியவற்றின் சேர்க்கையாகிய கௌண ஆத்மாவினால், உபசாரவழக்கினாலாகும் ஆத்மாவினால் செய்யப்பட்ட செய்கையானது நானென்னும்எண்ணத்தினால் குறிக்கப்படும் வாஸ்தவஆத்மாவினால் செய்யப்பட்டதாகாது. உபசாரவழக்கினாலாகும் சிங்கத்தாலும், உபசாரவழக்கினாலான நெருப்பினாலும் செய்யப்பட்ட செய்கையானது வாஸ்தவசிங்கத்தாலும் வாஸ்தவநெருப்பினாலும் செய்யப்பட்டதாகாதன்றே. (இவ்வாறாக, உண்மையான கர்த்தாவாதல்முதலியன இல்லை என்க.) அன்றியும், (தேவதத்தனது) கொடுமையினாலும், (மாணுக்கனது) பொன்மைநிறத்தினாலும் வாஸ்தவசிங்கத்திற்கும் வாஸ்தவநெருப்பிற்கும் ஒருகாரியமும் செய்யப்படுவதில்லை; புகழும் பொருட்டாய்த் தீர்ந்துபோனமையின்.

இன்னும், (தேவதத்தனையும் மாணுக்கனையும்) புகழும்பொழுது, "நான் சிங்கமில்லை," "நான் நெருப்பில்லை" எனவும், "சிங்கத்தினது செய்கை என்னுடையதில்லை" "நெருப்பினது செய்கை என்னுடையதில்லை" எனவும் (அவர்கள்) அறிகிறார்கள். அவ்வாறாக, "(உடம்புமுதலியவற்றினது)சேர்க்கையின் செய்கையானது என்னுடையதில்லை, உண்மையாத்மாவினுடையதில்லை" என்பதுதான் மிகப்பொருந்தியதாகும்; மற்று, "நான் செய்பவன், என்னுடையது செய்கை" என்பதன்று.

यत्तु पुनः "आत्मीयैः स्मृतीच्छाप्रयत्नैः कर्महेतुभिः आत्मा कर्म करोति" इति—न, तेषां मिथ्याप्रत्ययपूर्वकत्वात्। मिथ्याप्रत्ययनिमित्तेष्टानिष्टानुभूतक्रियाफलजनितसंस्कारपूर्वका हि स्मृतीच्छाप्रयत्नादयः। यथा अस्मिन् जन्मनि देहादिसंघाताभिमानरागद्वेषादिकृतौ धर्माधर्मौ तत्फलानुभवश्च, तथा अतीते अतीततरेऽपि जन्मनि इति अनादिः अविद्याकृतः संसारः अतीतः अनागतश्च अनुमेयः। ततश्च सर्वकर्मसंन्याससहितज्ञाननिष्ठया आत्यन्तिकः संसारोपरमः इति सिद्धम्।

अविद्यात्मकत्वाच्च देहाभिमानस्य, तन्निवृत्तौ देहानुपपत्तौ संसारानुपपत्तिः। देहादिसंघाते आत्माभिमानः अविद्यात्मकः। न हि लोके "गवादिभ्यः अन्योऽहम्, मत्तश्च अन्ये गवादयः" इति जानन् तान् "अहम्" इति मन्यते कश्चित्। अजानंस्तु स्थाणौ पुरुषविज्ञानवत् अविवेकतः देहादिसंघाते कुर्यात् "अहम्" इति प्रत्ययम्, न विवेकतः जानन्।

यस्तु "आत्मा वै पुत्रनामासि" इति वेदे अहंप्रत्ययः, स तु जन्यजनकसंबन्धनिमित्तः गौणः। गौणेन च आत्मना भोजनादिव्यव

இனி, "ஆத்மா தனது நினைவும், இச்சையும், முயற்சியும் காரணமாக(வாஸ்தவமாகவே) கர்மத்தைச் செய்கின்றது" என்று எதனைக் கூறுகிறார்களோ, (அந்தக் கொள்கை) சரியன்று; அவை மயக்கவுணர்வினாலாகின்றமையின். நினைவு, இச்சை, முயற்சிமுதலியன - மயக்கவுணர்வு காரணமாக வேண்டியதாகவும் வேண்டாததாகவும் அநுபவிக்கப்பெற்ற கர்மப்பயனினாலான வாஸனையினால் வருபவையன்றோ. எவ்வாறு இந்தஜன்மத்திலே தர்ம அதர்மங்களும் அவற்றின்பயனை அநுபவித்தலும் - உடம்பு முதலியவற்றின்சேர்க்கையையே ஆத்மாவாகக் கொள்வதனாலும், விருப்புவெறுப்புக்களாலும், மற்றுமித்தன்மையவற்றாலும் ஆனவையோ, அவ்வாறே சென்றபிறவியிலும் அதற்குமுன்சென்ற பிறவியிலுமாம்; எனவே, சென்றதும் வருவதுமான ஸம்ஸாரமானது ஆதியில்லதாய் அவித்யையினாலானதாக அநுமானிக்கத்தக்கது. ஆதலால், ஸம்ஸாரமானது ஸகலகர்மத்துறவோடமைந்த ஞானநிஷ்டையினாலே முற்றும் அற ஒழிதலாகின்றது என அமைந்தது.

மேலும், உடம்பை நான்எனக்கொள்ளுதல் அவித்யாவடிவினதாதலால், அவ்வவித்யை நீங்குமளவிலே உடம்புஅமையாததாதலின் ஸம்ஸாரம் அமையாது. உடம்பு முதலியவற்றின் சேர்க்கையை ஆத்மாவாகக்கொள்ளுதல் அவித்யாவடிவினது. உலகத்திலே, "நான் ஆ முதலியவற்றினும் வேறானவன்; ஆ முதலியனவும் என்னைக்காட்டிலும் வேறானவை" என அறிகின்ற எவனும் அவற்றை "நான்" எனக்கொள்வதில்லை. ஆனால், அறியாதவனே, தூணை மனிதனாக உணர்வதுபோல, பகுத்தறிவின்மையால் உடம்புமுதலியவற்றினது சேர்க்கையிலே நான்என்னும்எண்ணத்தைச் செய்கிறான்; பகுத்தறிவோடு அறிகிறவன் (அவ்வாறு செய்வது) இல்லை.

இனி, "நீதானே(உனது)மகன்எனப்படுகிறவனாயிருக்கிறாய்" என மகன்மீது நான்என்னும்எண்ணம் எதுவோ, அது - பிறப்பிக்கப்படுவதும் பிறப்பிப்பதுமாகிய ஸம்பந்தத்தாலானது, உபசாரவழக்கினாலானது. உபசாரவழக்கினாலான ஆத்மாவினால் வாஸ்தவஆத்மாவின் காரியமானது செய்யமுடியாது; (தகப்பனுக்காக மகன்) உண்ணமுடியாதவாறுபோல, உபசாரவழக்கினாலான சிங்கமாகிய(தேவதத்தனாலும்),

V. B. SUBRAHMANYA SARMA TAMIL PANDIT.

𑌵𑌾𑌸𑍍𑌤𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑍍, 𑌮𑌾𑌣𑌵𑌸𑌿𑌂𑌹𑌾𑌗𑍍𑌨𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑌵𑌸𑌿𑌂𑌹𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌤𑍍 ॥

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑌚𑍋𑌦𑌨𑌾𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌦𑍍 𑌆𑌤𑍍𑌮𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌗𑍌𑌣𑍈𑌃 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤 𑌏𑌵 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨 ; 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌾𑌸𑍍 𑌤𑍇𑌷𑌾𑌮𑍍 । 𑌨 𑌗𑍌𑌣𑌾𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌯𑌃 ; 𑌕𑌿𑌂 𑌤𑌰𑍍𑌹𑌿 ?—𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍈𑌵 𑌅𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌸𑌤𑌾𑌮𑍍 𑌆𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌮𑍍 𑌆𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑍇 𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, 𑌤𑌦𑌭𑌾𑌵𑍇 𑌚 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌾𑌂 𑌹𑌿 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑌾𑌲𑍇 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 “𑌦𑍀𑌰𑍍𑌘𑌃 𑌅𑌹𑌮𑍍” “𑌗𑍌𑌰𑌃 𑌅𑌹𑌮𑍍” 𑌇𑌤𑌿 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 । 𑌨 𑌤𑍁 𑌵𑌿𑌵𑍇𑌕𑌿𑌨𑌾𑌂 “𑌅𑌨𑍍𑌯𑌃 𑌅𑌹𑌮𑍍 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑌾𑌤𑍍” 𑌇𑌤𑌿 𑌜𑌾𑌨𑌤𑌾𑌂 𑌤𑌤𑍍𑌕𑌾𑌲𑍇 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑍇 𑌅𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑍃𑌤 𑌏𑌵, 𑌨 𑌗𑍌𑌣𑌃 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌕𑌾𑌰𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌹𑌿 𑌸𑌿𑌂𑌹𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌯𑍋𑌃 𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑌾𑌣𑌵𑌕𑌯𑍋𑌶𑍍𑌚 𑌗𑍌𑌣𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌨 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌕𑌾𑌰𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌯𑍋𑌃 ॥

உபசாரவழக்கினாலான நெருப்பாகிய (மாணக்கனும்) வாஸ்தவசிங்கத்தின் கார்யமும், வாஸ்தவநெருப்பின் கார்யமும்(செய்யமுடியாதவாறு)போல.

(ஆக்ஷேபம்) :—தெரியாத [மனிதஅறிவிற்குஎட்டாத] விஷயங்களிலே சாஸ்திரம் பிரமாணமாதலால், ஆத்மாசெய்யவேண்டிய (கர்மமானது) உபசாரவழக்கினால் ஆத்மாவாகக் கூறப்படும் உடம்பு இந்திரியங்கள் முதலியவற்றால் செய்யவேசெய்யப்படுகின்றது எனில்,—

(ஸமாதாநம்) :—அப்படியன்று ; அந்தஆத்மாக்கள் அவித்யையினாலானமையின். உடம்பு இந்திரியங்கள் உபசாரவழக்கினால் ஆத்மாவாகக் கூறப்படுவனவல்ல.—மற்றென்ன ? — அநாத்மாக்களாய், ஆத்மாஅல்லாதவையாய்இருப்பவை - மயக்கத்தினாலேயே ஆத்மாக்களாக ஆக்கப்படுகின்றன;அஃதுள்ளவழி உள்ளமையாலும்,அஃதில்லாவழி இல்லாமையாலு மென்க. (உடம்புமுதலியன ஆத்மாஅல்லாதவையாயிருக்க, மயக்கத்தால் அவை ஆத்மாவாகக் கொள்ளப்படுகின்றன ; மயக்கமிருக்கும்வரை அவை ஆத்மா என்று எண்ணப்படுகின்றது ; மயக்கம் தீர்ந்தமாத்திரத்திலே அவ்வாறு எண்ணுதலில்லை.) பகுத்தறிவில்லாத சிறுவர்க்கன்றோ அறிவில்லாக்காலத்திலே "நான் நெடியவன்," "நான் பொன்மைநிறமுள்ளவன்" என உடம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே நானென்னும்எண்ணம் காணப்படுகின்றது. ஆனால், "உடம்புமுதலியவற்றினது சேர்க்கையினின்றும் நான் வேறானவன்" எனஅறியும் விவேகிகட்கு அக்காலத்திலே உடம்புமுதலியவற்றினது சேர்க்கையில் நானென்னும்எண்ணம் நிகழ்வதில்லை. ஆதலால்,(உடம்புமுதலியவற்றிலே நானென்னும்எண்ணமானது)மயக்கமில்லாவழி இல்லாமையால், அதனால் [மயக்கத்தால்] ஆனதேதான் ; உபசாரவழக்கினாலானதன்று. சிங்கமும் தேவதத்தனும், அல்லது நெருப்பும் மாணக்கனும் ஆகிய இவரது வேற்றுமையையும் ஒப்புமையையும் உணர்ந்தவிடத்தன்றோ,("தேவதத்தன் சிங்கமாயிருக்கிறான் ; மாணக்கன் நெருப்பாயிருக்கிறான்" என மனத்திற்)கொள்ளுதலும், சொல்லால் வழங்குதலும் உபசாரவழக்கினாலாகும ; (இரண்டு பொருள்கட்குள்ள) வேற்றுமையும் ஒப்புமையும் உணரப்படாவிடத்து இல்லை.

𑌯𑌤𑍍𑌤𑍂𑌕𑍍𑌤𑌂 "𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌤𑍍" 𑌇𑌤𑌿 — 𑌤𑌨𑍍𑌨, 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍁𑌪𑌲𑌬𑍍𑌧𑍇 𑌹𑌿 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂, 𑌨 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑍇, 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌙𑍍𑌘𑌾𑌤𑍇𑌷𑍁 𑌗𑍌𑌣𑌤𑍍𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑍍 । 𑌨 𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑌮𑌪𑌿 "𑌶𑍀𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑌾" 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌮𑍍 𑌉𑌪𑍈𑌤𑌿 । 𑌯𑌦𑌿 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 "𑌶𑍀𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑌾 𑌇𑌤𑌿," 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌅𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂, 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃, 𑌨 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌮𑍍 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌅𑌭𑌾𑌵𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌅𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨 ; 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑍍 𑌅𑌰𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌰𑌪𑌿 𑌅𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨 ; 𑌬𑌾𑌧𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌯𑌥𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾

இனி, "சாஸ்திரவிதி பிரமாணமாதலால்" என எது கூறப்பட்டதோ, அது நேரன்று; ஏனெனில், அது பிரமாணமாதல் தெரியாத [மனிதஅறிவிற்கு எட்டாத] விஷயத்திலென்க. பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்களால் உணரப்படாத விஷயத்திலே, அக்நிஹோத்ரம்முதலிய கருவிகட்கும் அவற்றது பயன்கட்குமுள்ள ஸம்பந்தத்திலே சுருதி பிரமாணமாயிருக்கின்றது; பிரத்தியக்ஷம்முதலிய பிரமாணங்களால் அறியப்படும் விஷயத்திலன்று; பிரமாணமென்பது தெரியாததைத் தெரிவிக்கும்பொருட்டாதலின். ஆகவே, உடம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே, மயக்கஅறிவினாலானதாகக் காணப்படும் நானென்னும்எண்ணத்தை - உபசாரவழக்கினாலானதாகக்கொள்ளுதல் கூடாது. "தீ சீதளமானது" அல்லது "தீ வெளிச்சமில்லாதது, இருண்டது" என நூறுசுருதிகள் கூறுவனவாயினும், பிரமாணமாதலைப் பெறமாட்டாவன்றோ [அவையெல்லாமே அவ்விஷயத்தில் பிரமாணமாகமாட்டா என்க]. "தீ சீதளமானது" அல்லது "இருண்டது" எனக்கூறுமாயின்,—அப்படியிருந்தாலும், வேறுஅர்த்தத்தைச் சுருதிசொல்லக்கருதியதாகக் கொள்ளவேண்டும்; (சுருதி) பிரமாணமாதல் வேறுவிதமாகப் பொருந்தாமையின்;—மற்று, வேறோர் பிரமாணத்திற்கு விரோதமாகவாயினும், தனது வார்த்தைக்கு [சுருதிகூறியதற்கு] விரோதமாகவாயினும் (அந்த அர்த்தத்தைக்) கொள்ளக்கூடாது.

அவித்யைக்கொள்கையானது கர்மகாண்டத்தோடு மாறுகொள்வதில்லை.

(ஆக்ஷேபம்) :—மயக்கஅறிவுள்ளவனே கர்மத்தைச் செய்பவனாதலால், (மெய்யறிவினால் அம்மயக்கஅறிவு நீங்கியவுடன், கர்மத்தைச்) செய்பவன் இல்லாமையின், சுருதி பிரமாணமாதலில்லை எனின்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று ; ப்ரஹ்மவித்யையிலே(சுருதி இன்னும்)பயன்படுவதாயிருத்தல் கூடுமாதலின்.

(ஆக்ஷேபம்) :—கர்மத்தை விதிக்கும் சுருதிபோல, ப்ரஹ்மவித்யையை உணர்த்தும் சுருதியும் பிரமாணமாகாமை வேண்டும் எனில்,—

(ஸமாதானம்) :—அப்படியன்று ; (ப்ரஹ்மவித்யையை) நீக்கும்எண்ணம் அமையாதலின். ப்ரஹ்மவித்யை உணர்த்தும் சுருதியினால் ஆத்மாவை அறிந்தவழி, உட-

𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍇 𑌦𑍇𑌹𑌾𑌦𑌿𑌸𑌂𑌘𑌾𑌤𑍇 𑌅𑌹𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌥𑌾 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵 𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑌗𑌤𑌿𑌃 𑌨 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌕𑍇𑌨𑌚𑌿𑌤𑍍 𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌬𑌾𑌧𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌾, 𑌫𑌲𑌾𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌚𑍍𑌚 𑌅𑌵𑌗𑌤𑍇𑌃, 𑌯𑌥𑌾 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌉𑌷𑍍𑌣𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌶𑍍𑌚 𑌇𑌤𑌿 ।

𑌨 𑌚 𑌏𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 𑌅𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌮𑍍, 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑍇𑌨 𑌉𑌤𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌜𑌨𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌨𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌉𑌪𑌾𑌯𑌸𑍍𑌯 𑌉𑌪𑍇𑌯𑌸𑌤𑍍𑌯𑌤𑌯𑌾 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌯𑌥𑌾 𑌅𑌰𑍍𑌥𑌵𑌾𑌦𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌧𑌿𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌮𑍍, 𑌲𑍋𑌕𑍇𑌽𑌪𑌿 𑌬𑌾𑌲𑍋𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌪𑌯𑌆𑌪𑌾𑌯𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑍇 𑌚𑍂𑌡𑌾𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌦𑌿𑌵𑌚𑌨𑌮𑍍 । 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍇𑌵 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍, 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍 𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌦𑍇𑌹𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌵𑌤𑍍 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇—𑌸𑍍𑌵𑌯𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑍋𑌽𑌪𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑌰𑍋𑌤𑌿, 𑌤𑌦𑍇𑌵 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃; 𑌯𑌥𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑍋𑌧𑍇𑌷𑍁 𑌯𑍁𑌧𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑌯𑍁𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌾𑌦𑍇𑌵

ம்புமுதலியவற்றின் சேர்க்கையிலே நான்என்னும் எண்ணமானது எப்படித் தள்ளுண்டு போகின்றதோ, அப்படியே, ஆத்மாவினிடத்தே ஆத்மஅறிவானது எப்பொழுதும் எதனாலும் எவ்விதத்தாலும் தள்ளுண்டுபோதல் இயலாது ; அறிவு, பயனைக் காட்டிலும் [அறியாமை நீங்குவதைக்காட்டிலும்] வேறன்றாதலின் ; " தீ உஷ்ணமாயும், பிரகாசமாயு மிருக்கின்றது " என்னும் (அறிவு) போல.

மற்றும், இவ்வாறாக, கர்மத்தை உணர்த்தும் சுருதியானது பிரமாணமாதலில்லை என்பதில்லை ; முந்தினமுந்தின முயற்சிகளைத் தடுத்து, பிந்தினபிந்தின புதிய முயற்சிகளைப் பிறப்பிப்பது உள்ளேயுள்ள ஆத்மாவை எதிர்ப்படும் முயற்சியை உண்டாக்கப் பயன்படுவதாதலின் (கர்மகாண்டசுருதியானது அநாதிகாலமாக வரும் ஸ்வபாவமுயற்சிதோன்றுதலைத் தடுத்து, யஜ்ஞம் முதலிய நற்செய்கைகளிலே முயற்சி தோன்றுதலைப் பிறப்பிக்கின்றது ; பிறப்பிக்கவே, அது புத்திதிருந்துதல்வழியாக, உள்ளேயுள்ள ஆத்மாவை எதிர்நோக்கிச் செல்லும் ஊக்கத்தைத் தருகின்றது ; எனவே, கர்மகாண்டசுருதியானது இவ்வாறு பரம்பரையாகப் பிரமாணமாதலைக் காண்க). கருவி - போலியாயிருந்தாலும், பயன் உண்மையாயிருப்பதனால் (கருவியும்) உண்மையேயாகும்; விதிக்குத்துணையாயுள்ள அர்த்தவாதங்கள்போல : உலகத்திலுள்ளும், பாலன் பித்தன் முதலானோரைப் பால்முதலியவற்றைக் குடிக்கச்செய்யவேண்டும்போது, (பால்குடித்தால்)குடுமி வளரும் என்பதுமுதலிய வார்த்தைகள் (காணப்படுகின்றன).—அல்லது, வேறுவகையிலேயுள்ள (ஆத்மஅறிவு பிறத்தற்கு முந்தின நிலையிலேயுள்ள கர்மகாண்டசுருதிகள்) நேரேயே பிரமாணமாதல் அமைந்துளது ; உடம்புஅபிமானத்தாலாகும் பிரத்தியக்ஷம்முதலியன ஆத்மஅறிவை (ப் பெறுதற்கு) முன்பு பிரமாணமாயிருத்தலைப்போலென்க.

ஸந்நிதிமாத்திரத்தால் ஆத்மா கர்த்தாவாகாது.

(வேறோர் கொள்கை) :—இனி, "ஆத்மா, தான் தலைப்படாததாயினும், ஸந்நிதிமாத்திரத்தால் செய்கின்றது ; அதேதான் - ஆத்மா வாஸ்தவமான கர்த்தாவாதலென்பது. உதாரணமாக, போர்வீரர்கள் போர்செய்யும்பொழுது அரசன், தான் போர்செய்யாமலிருந்தாலும், ஸந்நிதிமாத்திரத்தால்[போர்க்களத்தில் இருப்பதுமாத்

𑌜𑌿𑌤𑌃 𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌚, 𑌤𑌥𑌾 𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌃 𑌵𑌾𑌚𑍈𑌵 𑌕𑌰𑍋𑌤𑌿 ; 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌫𑌲𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑍇𑌶𑍍𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 । 𑌯𑌥𑌾 𑌚 𑌋𑌤𑍍𑌵𑌿𑌕𑍍𑌕𑌰𑍍𑌮 𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑍍𑌯, 𑌤𑌥𑌾 𑌦𑍇𑌹𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌆𑌤𑍍𑌮𑌕𑍃𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌫𑌲𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌗𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌥𑌾 𑌵𑌾 𑌭𑍍𑌰𑌾𑌮𑌕𑌸𑍍𑌯 𑌲𑍋𑌹𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌥𑌾 𑌚 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌇𑌤𑌿 ।

𑌤𑌨𑍍𑌨 ; 𑌅𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌃 𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ।

𑌕𑌾𑌰𑌕𑌮𑍍 𑌅𑌨𑍇𑌕𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍—

𑌨 ; 𑌰𑌾𑌜𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 । 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌯𑍁𑌧𑍍𑌯𑌤𑍇 ; 𑌯𑍋𑌧𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌯𑍋𑌧𑌯𑌿𑌤𑍃𑌤𑍍𑌵𑍇 𑌧𑌨𑌦𑌾𑌨𑍇 𑌚 𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌥𑌾 𑌜𑌯𑌪𑌰𑌾𑌜𑌯𑌫𑌲𑍋𑌪𑌭𑍋𑌗𑍇 𑌚 । 𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌦𑌾𑌨𑍇 𑌚 𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌾𑌪𑍃𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍋𑌪𑌚𑌾𑌰𑍋 𑌯𑌃 𑌸𑌃 𑌗𑍌𑌣𑌃 𑌇𑌤𑌿 𑌅𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌯𑌦𑌿 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑍇𑌤 𑌰𑌾𑌜𑌯𑌜𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀𑌨𑌾𑌂, 𑌤𑌦𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑍇𑌤 𑌯𑌥𑌾 𑌭𑍍𑌰𑌾𑌮𑌕𑌸𑍍𑌯 𑌲𑍋𑌹𑌭𑍍𑌰𑌮𑌣𑍇𑌨 ; 𑌨 𑌤𑌥𑌾 𑌰𑌾𑌜𑌯𑌜𑌮𑌾𑌨𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑍋 𑌨

திரத்தால்] போர்புரிகிறானென்பது பிரஸித்தமாயுளது ; வெற்றிபெற்றான், தோல்வியுற்றான் என்பதும்பிரஸித்தமாயுளது. அவ்வாறே, சேனாதிபதி வெறும்வார்த்தையினால் செய்கிறான். செய்கையின்பயன் சேர்வதோ அரசனுக்கும், சேனாதிபதிக்கும் காணப்படுகின்றது. மற்றோர் உதாரணம் : ரித்விக்கினுடைய செய்கை யஜமானனுடையதாகின்றது. அவ்வண்ணமே, உடம்புமுதலியவற்றின் செய்கை ஆத்மாவினால் செய்யப்பட்டதாகும் ; பயன் ஆத்மாவைச் சேர்கின்றமையின். அல்லது, வேறோர் உதாரணம் : ஊசிக்காந்தம் இரும்பைச் சுற்றச்செய்கின்றமையின், (தொழிலில்) தலையிடாத பொருளேதான் வாஸ்தவமேயான கர்த்தா ஆகின்றது. அவ்வாறே ஆத்மா என்க" எனஎது கொள்ளப்படுகின்றதோ,

(மறுமொழி) :—அது நேரன்று ; ஏனெனில், செய்யாதபொருள் செய்வதாதல், காரகமாதல் வேண்டும் : (காரகம் - செய்கையைச் செய்வது.)

(பிரதிவாதி) :—காரகம் பலவகைத்து எனில்,—

(வாதி) :—அப்படியன்று ; அரசன்முதலானோர்கள் நேரான கர்த்தாவாயிருத்தலையும் காண்பதனாலென்க. முதலில், அரசன் தனது செய்கையினாலும் [தானே நேராக] போர்புரிகிறான்; போர்வீரர்களைப் போர்புரிய ஏவுதலிலும், கூலிகொடுப்பதிலும், அவ்வண்ணமே, வெற்றிதோல்விகளின் பயனை அநுபவிப்பதிலும் வாஸ்தவமேயான கர்த்தாவாகிறான். யஜமானனும் பிரதான ஹவிஸைக் கொடுப்பதிலும், தக்ஷிணையைக் கொடுப்பதிலும் வாஸ்தவமேயான கர்த்தாவாகிறான். ஆகவே, (தொழிலில்) தலையிடாத பொருளைக் கர்த்தாவாக ஏற்றிக்கூறுதல் ஏதுவோ, அது உபசாரவழக்கினாலாவதெனத் தெரிகின்றது. தன்செய்கையாகிய வாஸ்தவ கர்த்திருத்துவமானது, தொழிற்பட்டிருத்தலானது, அரசன் யஜமானன் முதலானோர்கட்குக் காணப்படவில்லையாயின், அங்ஙனம் ஸந்நிதிமாத்திரத்தாலும் கர்த்தாவாதல் வாஸ்தவமாகக் கொள்ள வேண்டும் ; ஊசிக்காந்தம் இரும்பைச்சுற்றும்படிசெய்வதனால்போல, அரசன் யஜமானன் முதலானோர்கட்குத் தமது செய்கையானது அவ்வாறு காணப்படவில்லையென்

உபபத்யதே । தஸ்மாத் ஸந்நிதிமாத்ரேண கர்த்ருத்வம் கௌணமேவ । ததா ச ஸதி தத்ஸம்பந்தோऽபி கௌண ஏவ ஸ்யாத் । ந கௌணேந முக்யம் கார்யம் நிவர்த்யதே । தஸ்மாத் அஸதேவ உச்யதே "தேஹாதீநாம் வ்யாபாரேண அவ்யாப்ருத ஆத்மா கர்த்தா போக்தா ச ஸ்யாத்" இதி ।

ப்ராந்திநிமித்தம் து ஸர்வம் உபபத்யதே, யதா ஸ்வப்நே; மாயாவிநி ச ஸர்வம் । ந ச தேஹாத்யாத்மத்வப்ராந்திஸந்தாநவிச்சேதேஷு ஸுஷுப்திஸமாதியாநாதிஷு கர்த்ருத்வபோக்த்ருத்வாத்யநர்தாஃ உபலப்யந்தே । தஸ்மாத் ப்ராந்திப்ரத்யயநிமித்தஃ ஏவ அயம் ஸம்ஸாரப்ரமஃ, ந து பரமார்த்தஃ ।

இதி ஸம்யக்தர்சநாத் அத்யந்த ஏவ உபரமஃ இதி ஸித்தம் ॥

ஸர்வம் கீதாசாஸ்த்ரார்த்தம் உபஸம்ஹ்ருத்ய அஸ்மிந் அத்யாயே, விசேஷதச்ச அந்தே இஹ சாஸ்த்ரார்த்தஸாரம் ஸம்க்ஷேபதஃ உபஸம்ஹாரம் க்ருத்வா, அத இதாநீம் சாஸ்த்ரஸம்ப்ரதாயவிதிமாஹ—

௬௭. இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந ।
ந சாசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்யஸூயதி ॥

பதில்லே. ஆகவே, ஸந்நிதிமாத்திரத்தால் கர்த்தாவாதல் கௌணமேதான், வாஸ்தவமன்றேதான். அவ்வாறுள்ளவளவிலே, அதனுடைய பயனின்சம்பந்தமும் கௌணமே[வாஸ்தவமன்றே]யாகும். கௌணமான கர்த்தாவினால் வாஸ்தவமான காரியம் செய்துமுடிக்கப்படுவதில்லை. ஆகவே, இது—"தொழிற்படுதலில்லாத ஆத்மாவானது உடம்புமுதலியவற்றினது செய்கையினால் கர்த்தாவும், போக்தாவும்[செய்வதும், அநுபவிப்பதும்] ஆகும்" என்பது—தவருகவே கூறப்படுகின்றது.

அவித்யைக்கொள்கையின் முடிபு.

மற்று, மயக்கம் காரணமாக எல்லாம் பொருந்துகின்றன; கனவிலும், செப்படிவித்தைக்காரனுடைய இந்திரஜாலத்திலும்போல. அன்றியும், செய்பவனுயிருத்தலும், அநுபவிப்பனுயிருத்தலும் இன்னுமிவைபோன்ற தீங்குகளும் - உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக்கொள்ளும் மயக்கத்தின் தொடர்ச்சி அறுந்துபோயுள்ள உறக்கம் ஸமாதி முதலியவற்றில் காணப்படவில்லை. ஆதலால், மயக்கஅறிவினாலானதேதான் இந்த ஸம்ஸாரமயக்கம்; ஆனால், உண்மையன்று.

எனவே, (இம்மயக்கமானது) மெய்யறிவினால் முற்றுமே அறத்தொலைந்திடுதல் ஆகின்றது என அமைந்தது.

கீதையை உணர்த்தற்கு வேண்டிய உரிமை.

இவ்வத்தியாயத்தினுள் கீதாசாஸ்திரப்பொருள்முழுவதையும் முடித்து, சாஸ்திரப்பொருள் (புத்தியில்) திடப்படுதற்காக இங்கு முடிவிலே (அதனை) விசேஷமாகவும் சுருக்கமாகவும் கூறி முடித்து, இனி, இப்பொழுது சாஸ்திரஸம்பிரதாயமுறையை, சாஸ்திரத்தைப் பிறர்க்கு உரைக்கும் ஒழுங்கை அருளிச்செய்கிறார்:

௬௭. உனக்கு (உபதேசிக்கப்பட்ட) இது, தவமில்லாதவனுக்கு ஒருபோதும் சொல்லத்தக்கதன்று: பக்தனல்லாதவனுக்கன்று: கேட்கவிருப்பமில்லாத [பணிவிடைசெய்யாத]வனுக்குமன்று: அன்றியும், எவன் என்னை இடக்குப்பேசுகின்றானே, (அவனுக்குமன்று).

𑌇𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌤𑌵 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌮𑌯𑌾 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑌯𑍇 𑌅𑌤𑌪𑌸𑍍𑌕𑌾𑌯 𑌤𑌪𑍋𑌰𑌹𑌿𑌤𑌾𑌯 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍇𑌨 𑌸𑌂𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇𑌽𑌪𑌿 𑌅𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌗𑍁𑌰𑍌 𑌦𑍇𑌵𑍇 𑌚 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑌹𑌿𑌤𑌾𑌯 𑌕𑌦𑌾𑌚𑌨 𑌕𑌸𑍍𑌯𑌾𑌂𑌚𑌿𑌦𑌪𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌂 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌤𑌪𑌸𑍍𑌵𑍀 𑌅𑌪𑌿 𑌸𑌨𑍍 𑌅𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌃 𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌅𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌨 𑌚 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌅𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌤𑌿 𑌆𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌣𑍇𑌨 𑌈𑌶𑍍𑌵𑌰𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌅𑌜𑌾𑌨𑌨𑍍 𑌨 𑌸𑌹𑌤𑍇, 𑌅𑌸𑌾𑌵𑌪𑌿 𑌅𑌯𑍋𑌗𑍍𑌯𑌃, 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌅𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌅𑌨𑌸𑍂𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌵𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌦𑍍 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌤𑍍𑌰 '𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾' 𑌇𑌤𑌿 𑌅𑌨𑌯𑍋𑌃 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍, 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌤𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌨 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍇 𑌨𑌾𑌪𑌿 𑌮𑍇𑌧𑌾𑌵𑌿𑌨𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌭𑌗𑌵𑌤𑌿 𑌅𑌸𑍂𑌯𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌯 𑌸𑌮𑌸𑍍𑌤𑌗𑍁𑌣𑌵𑌤𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 । 𑌗𑍁𑌰𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍇 𑌚 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍍 𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌵𑌿𑌧𑌿𑌃 ॥ ௬௭ ॥

𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌫𑌲𑌮𑍍 𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑍍 𑌆𑌹—

இந்த சாஸ்திரமானது உனது நலத்திற்காக, ஸம்ஸாரம் அறுதற்பொருட்டு என்னால் உரைக்கப்பட்டது. அதபஸ்காய என்பதை - ந வாச்யம் என ஒதுங்கிநிற்பதனேடு கூட்டுக.—தவமுள்ளவனுயினும், குருவினிடத்தும் பகவானிடத்தும் பக்தியில்லாதவனுக்கு எந்தநிலைமையிலும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. பக்தியும் தவமும் உள்ளவனுயினும், எவன் பணிவிடைசெய்யாதவனுய் இருக்கின்றனே, அவனுக்கும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. எந்த அறியாதவன் என்னை வஸுதேவன்மகனை ஸாமான்னிய மனிதனுக நினைத்து, தற்புகழ்ச்சிமுதலிய குற்றங்களை (என்மீது) ஏற்றி, எனது ஈச்வரத்தன்மையை ஒத்துக்கொள்கிறனில்லையோ, நான் ஈச்வரன் என்பதற்கு இடங்கொடுப்பதில்லையோ, அவனும் தகுதியில்லாதவன்; அவனுக்கும் (இச்சாஸ்திரத்தைச்) சொல்லக்கூடாது. சாஸ்திரமானது - பகவானிடத்து இடக்குப்பேசுதலில்லாது, தவமும்பக்தியுமுள்ளவனுய்ப் பணிவிடைசெய்பவனுக்குச் சொல்லத்தக்கது என (சுலோகத்திலுள்ள நான்கு நகாரங்களினது) வலிமையினுல் தெரிகின்றது. இனி, "மேதாவிக்காவது, தபஸ்விக்காவது (சாஸ்திரத்தைச் சொல்லலாம்)" என இவ்விருவருள் விகற்பத்தை[மேதையுடைமை தவமுடைமைஎன்றவற்றுள் ஏதாவதொன்று அதிகாரிக்குவேண்டியதாக]க் காண்பதனுல், பணிவிடையையும் பக்தியையும் உடைய தபஸ்விக்காவது, அவற்றையுடைய மேதாவிக்காவது (சாஸ்திரத்தைச்) சொல்லவேண்டுமென்க. (தபஸ்வி - தவமுள்ளவன்; மேதாவி - மேதையுள்ளவன். தவம் - தனதுகர்மத்தைச் செய்தல்முதலியன. மேதை - சொன்னதைக் கிரகித்து உள்ளத்து அமைத்துக்கொள்ளும் திறம்.) பணிவிடையும்பக்தியுமில்லாத தபஸ்விக்குச் சொல்லக்கூடாது; (அவையில்லாத) மேதாவிக்கும் சொல்லக்கூடாது. எல்லாநற்குணங்களும் பொருந்தியவனுயினும், பகவானிடத்து இடக்குப்பேசுதலுடையவனுக்குச் சொல்லக்கூடாது. குருவிற்குப் பணிவிடைசெய்தலையும் பக்தியையும் உடையவனுக்குச் சொல்லவேண்டும் என்று இது, சாஸ்திரஸம்பிரதாயத்தின் முறையாம். (௬௭)

கீதையைப் பிறர்க்கு உணர்த்துவதனுலாகும் பயன்.

இனி, ஸம்பிரதாயத்தைச் செய்பவனுக்குப் பயனை அருளிச்செய்கிறர்:

௬௮. 𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

𑌯𑌃 𑌇𑌮𑌂 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌰𑌮𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌾𑌯𑌨𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌯𑍋𑌃 𑌸𑌂𑌵𑌾𑌦𑌰𑍂𑌪𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌗𑍋𑌪𑍍𑌯𑌤𑌮𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌮𑌯𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑍁 𑌅𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌶𑌬𑍍𑌦𑌤𑌃 𑌅𑌰𑍍𑌥𑌤𑌶𑍍𑌚 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃, 𑌯𑌥𑌾 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌮𑌯𑌾 । 𑌭𑌕𑍍𑌤𑍇𑌃 𑌪𑍁𑌨𑌰𑍍𑌗𑍍𑌰𑌹𑌣𑌾𑌤𑍍 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑍇𑌵𑌲𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 । 𑌕𑌥𑌮𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌇𑌤𑌿? 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇—𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 "𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑌰𑌮𑌗𑍁𑌰𑍋𑌃 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌾 𑌮𑌯𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇" 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌇𑌦𑌂 𑌫𑌲𑌂—𑌮𑌾𑌮𑍇𑌵 𑌏𑌷𑍍𑌯𑌤𑌿 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌚 । 𑌅𑌸𑌂𑌶𑌯𑌃 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 ॥ ௬௮ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚—

௬௯. 𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌭𑌵𑌿𑌤𑌾 𑌨 𑌚 𑌮𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑍋 𑌭𑍁𑌵𑌿 ॥

𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑍃𑌤𑌃 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌮𑍇 𑌮𑌮 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 𑌅𑌤𑌿𑌶𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑌃, 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃, 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 । 𑌨 𑌚 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 𑌕𑌾𑌲𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌰𑌃 𑌭𑍁𑌵𑌿 𑌲𑍋𑌕𑍇ऽ𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 ॥ ௬௯ ॥

---

௬௮. எவன் என்னிடத்து மேலான பக்தி செய்து இந்தப் பரம ரஹஸ்யத்தை எனது பக்தர்கட்கு உரைப்பானோ, (அவன்) என்னை அடையவே அடைகிறான்; ஸம்சய மில்லை.

உயர்ந்த உறுதியானநன்மைக்குப் பயன்படுவதாய், கேசவன் அர்ஜுனன் இவரது சம்பாஷணையாகிய மிக்கரஹஸ்யமான கீழ்க்கூறிய இந்நூலை, என்மீது பக்தியுள்ளவரிடத்து எவன் உரைப்பானோ, அதாவது, நூலையும், நூற்பொருளையும் நான் உன்னிடத்து (உணர்த்தி நிலைப்படுத்தியது)போல, (எனது பக்தரிடத்து உணர்த்தி) நிலைப்படுத்துவானோ, (அவன் முக்தியைப் பெறுகிறான். மத்பக்தேஷு என) பக்தியைப் பின்னும் கூறியதனால் - (ஒருவன்) சாஸ்திரோபதேசத்தைப் பெறுதற்கு பக்தியொன்று மாத்திரத்தாலே தக்கோனாகிறான் எனத் தெரிகின்றது.—எவ்வாறு உரைப்பான்? என்பது.—கூறுவோம்:—"(நான் பகவானுக்குச்செய்யவேண்டியபணிவிடையானது, கீதையையும் கீதாப்பொருளையும் பகவத்பக்தர்கட்கு உணர்த்தவேண்டுமென்பது. ஆகவே,) பரமகுருவான பகவானுக்கு நான்(அந்தப்)பணிவிடையைச் செய்கின்றேன்" என இத்தகைய மேலான பக்தியை என்னிடத்துச் செய்து என்க. அவனுக்கு இது பயன்:—என்னை அடையவே அடைகிறான், (ஸம்ஸாரத்தினின்றும்) தப்பவே தப்புகிறான் (என்பது). இதிலே ஸமசயம் கொள்ளவேண்டாம். (௬௮)

மேலும்,

௬௯. மனிதரில் அவனைக்காட்டிலும் எனக்குப் பிரியமான காரியத்தைச் செய்பவன் ஒருவனும் இல்லை; அன்றியும், அவனைக்காட்டிலும் எனக்குப் பிரியமானவன் வேறுஒருவனும் பூமியிலே இருப்பானில்லை.

அவனைக்காட்டிலும் - சாஸ்திரஸம்பிரதாயத்தைச் செய்பவனைக்காட்டிலும். மனிதரில் - இப்பொழுதுள்ள மனிதரில். இருப்பானில்லை - வருங்காலத்திலும் இல்லை. பிரியமானவன் - பிரியமான காரியத்தைச் செய்பவன். பூமியிலே - இவ்வுலகிலே. (௬௯)

𑌯𑍋𑌽𑌪𑌿—

௭௦. 𑌅𑌧𑍍𑌯𑍇𑌷𑍍𑌯𑌤𑍇 𑌚 𑌯 𑌇𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌵𑌾𑌦𑌮𑌾𑌵𑌯𑍋𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌤𑍇𑌨𑌾𑌹𑌮𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ॥

𑌅𑌧𑍍𑌯𑍇𑌷𑍍𑌯𑌤𑍇 𑌚 𑌪𑌠𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌯𑌃 𑌇𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌵𑌾𑌦𑌰𑍂𑌪𑌂 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌮𑍍 𑌆𑌵𑌯𑍋𑌃, 𑌤𑍇𑌨 𑌇𑌦𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 — 𑌵𑌿𑌧𑌿𑌜𑌪𑍋𑌪𑌾𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑌸𑌾𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌃 𑌮𑌾𑌨𑌸𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑌮𑌃 𑌇𑌤𑌃 𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌗𑍀𑌤𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌸𑍍𑌤𑍂𑌯𑌤𑍇; 𑌫𑌲𑌵𑌿𑌧𑌿𑌰𑍇𑌵 𑌵𑌾, 𑌦𑍇𑌵𑌤𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌫𑌲𑌤𑍁𑌲𑍍𑌯𑌮𑍍 𑌅𑌸𑍍𑌯 𑌫𑌲𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 — 𑌤𑍇𑌨 𑌅𑌧𑍍𑌯𑌯𑌨𑍇𑌨 𑌅𑌹𑌮𑍍 𑌇𑌷𑍍𑌟𑌃 𑌪𑍂𑌜𑌿𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌭𑌵𑍇𑌯𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃 ॥ ௭௦ ॥

𑌅𑌥 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌃 𑌇𑌦𑌂 𑌫𑌲𑌮𑍍—

௭௧. 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑌨𑌸𑍂𑌯𑌶𑍍𑌚 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌦𑌪𑌿 𑌯𑍋 𑌨𑌰𑌃 ।
𑌸𑍋𑌽𑌪𑌿 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 ॥

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌃 𑌅𑌨𑌸𑍂𑌯𑌶𑍍𑌚 𑌅𑌸𑍂𑌯𑌾𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 𑌸𑌨𑍍 𑌇𑌮𑌂 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌂 𑌶𑍃𑌣𑍁𑌯𑌾𑌦𑌪𑌿 𑌯𑍋 𑌨𑌰𑌃 — 𑌅𑌪𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 𑌕𑌿𑌮𑍁𑌤 𑌅𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍 — 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑍁𑌭𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌮𑍍 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌵𑌤𑌾𑌮𑍍 ॥ ௭௧ ॥

கீதாபாராயணத்தின் பயன்.

மற்றும், எவன் (கீதைக்கு அர்த்தம் தெரியாதவனோ),

௭௦. ***தர்மத்தினின்றும் தவறாததான நம்மிருவருடைய இந்தச் சம்பாஷணையை எவன் படிப்பானோ, அவனால் "நான் ஞானமாகிய யஜ்ஞத்தால் பூஜிக்கப்பட்டவனாவேன்" என்பது எனது கொள்கை.***

சம்பாஷணையை - சம்பாஷணையாகிய இந்நூலை. *அவனால்* இது [ஞானயஜ்ஞம்], செய்யப்பட்டதாகின்றது. ஞானமென்னும்யஜ்ஞமானது - விதி, ஜபம், உபாம்சு, மானஸம் என்ற யஜ்ஞங்களுள் மானஸமாதலால் மிகச் சிறந்தது. ஆகவே, கீதாசாஸ்திரத்தைப் படித்தலானது அந்த ஞானயஜ்ஞமாகப் பாராட்டப்படுகின்றது. (விதி யஜ்ஞம் - சரீரத்தாற்செய்யப்படும் ப்ரஹ்மயஜ்ஞாதிகளால் தொழுதல். ஜப யஜ்ஞம் - உரத்து உச்சரிக்கப்படும் பாராயணாதிகளால் தொழுதல். உபாம்சு யஜ்ஞம் - பிறர்க்குக் கேளாதபடி வாய்க்குள்ளாகவே உச்சரிப்பதனால் தொழுதல். மானஸ யஜ்ஞம் - மனத்தால் தியானித்துத் தொழுதல்.)

அல்லது, (இத்திருவாக்கானது) பயனைவிதிப்பதாகவே (அமையும், யாதெனின்,) ஒருதெய்வம்முதலியவற்றைப்பற்றிய ஞானயஜ்ஞத்தினுடைய, அத்தெய்வம் முதலியவற்றை உபாஸிப்பதனுடைய பயனுக்குச் சமமான (பயன் கீதாசாஸ்திரத்தைப் படிப்பதனால்) இவனுக்கு உண்டாகின்றது என்பது. *கொள்கை* - நிச்சயம்.(௭௦)

கீதாசாஸ்திரத்தைக் கேட்பவனுக்குப் பயன்.

இனி, கேட்பவனுக்கு இது பயனாம்:

௭௧. ***எந்த மனிதன் நம்பிக்கையுள்ளவனாய், இடக்குப்பேசுதலில்லாதவனாய் (இந்நூலை)க் கேட்கவாவது செய்வானோ, அவனுங்கூட விடுபட்டவனாய் நல்வினையுள்ளவருடைய நல்ல லோகங்களை யடைவான்.***

"*ஆவது*" என்னும்சொல்லினால், அர்த்தஞானமுள்ளவனைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ என்க. *விடுபட்ட* - பாவத்தினின்றும் நீங்கிய. *நல்வினையுள்ளவருடைய* - அக்நிஹோத்ரம்முதலிய கர்மங்களைச்செய்தவருடைய. (௭௧)

शिष्यस्य शास्त्रार्थग्रहणाग्रहणविवेकबुभुत्सया पृच्छति । तदग्रहणे ज्ञाते पुनः ग्राहयिष्यामि उपायान्तरेणापि इति प्रष्टुः अभिप्रायः । यत्नान्तरं च कृत्वा शिष्यस्य कृतार्थता कर्तव्या इति आचार्यधर्मः प्रदर्शितो भवति —

७२. कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।
कच्चिदज्ञानसंमोहः प्रणष्टस्ते धनंजय ॥

कच्चित् किम् एतत् मया उक्तं श्रुतं श्रवणेन अवधारितं पार्थ त्वया एकाग्रेण चेतसा स्थितः ? किं वा अवधीरितः ? कच्चित् अज्ञानसंमोहः अज्ञाननिमित्तः संमोहः अविविक्तभावः अविवेकः स्वाभाविकः किं प्रणष्टः — यन्निमित्तः अयं शास्त्रश्रवणायासः तव, मम च उपदेशप्रयासः प्रवृत्तः — ते तव धनंजय ॥ ७२ ॥

अर्जुन उवाच ॥

७३. नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥

नष्टः मोहः अज्ञानजः संसारानुबन्धः, सागर इव दुस्तरः । स्मृतिश्च कृत्स्नविषया लब्धा — यस्याः माहात्म्यं सर्वग्रन्थीनां विप्रमोक्षः — त्वत्प्रसादात् तव प्रसादात् मया त्वत्प्रसादस्य कृत्स्नेन अच्युत । अनेन मोहनाशस्मृतिलाभेन सर्वशास्त्रज्ञा-

---

தமது உபதேசத்தை அர்ஜுனன் கிரகித்துக்கொண்டானே என்று பகவான் நிச்சயித்தல்.

மாணாக்கன் நூற்பொருளை உணர்ந்ததையும், உணராமையையும் தெளிவாய் அறியவேண்டி வினவுகின்றார். ஆனால், அதனை உணராமையை அறிந்தால், வேறோர்வழியாலும் உணர்த்துவேன் என்பது, வினவுவோன் கருத்து. அன்றியும், வேறோர் முயற்சி கொண்டு சிஷ்யனைக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும் (மாணாக்கன் நூற்பொருளை அறிந்து ஈடேறுமாறு ஆசிரியன் மறுபடியும் முயலவேண்டும்) என குருவின் ஒழுக்கம் காட்டப்பெற்றதாகின்றது :

எஉ. பார்த்த ! உன்னால் இது, ஒருப்பட்ட மனத்தோடு கேட்கப்பட்டதா ? தனஞ்ஜய ! உனது அஜ்ஞானமயக்கம் தீர்ந்திட்டதா ?

பார்த்த ! யான் கூறியதை, ஒருப்பட்ட ஒரேகருத்தோடு தடுமாற்றமில்லாது கேட்டுத் தெரிந்துகொண்டனையா ? அறிவின்மையினாலான மயக்கமானது, பகுத்தறிவின்மையானது, இயற்கையாயுள்ள அவிவேகமானது உனக்கு அழிந்திட்டதா ? அ(து தொலை)தற்காகவன்றோ, நூலைக் கேட்பதிலே உனக்கு இப்பிரயாசமும், உபதேசிப்பதிலே எனக்கு இப்பிரயாசமும் ஆகியுள்ளன. (எஉ)

அர்ஜுனன் சொல்லலுற்றான் :

எ௩. மயக்கம் தீர்ந்துளது ; அச்யுத ! உமது அருளினாலே என்னால் நினைவுகூர்தலும் அடையப்பெற்றுளது. (நான்) நிலைத்தவனாய், ஸந்தேகம்போனவனாய் இருக்கின்றேன் ; உமது திருவாக்கைச் செய்வேன்.

மயக்கம் - அஜ்ஞானத்தாலானது, ஸம்ஸாரஅநர்த்தங்கட்கெல்லாம் காரணமானது, கடல்போல கடத்தற்கு அரியது. நினைவுகூர்தல் - எதனைப் பெறுவதனால் நெஞ்சத்துமுடிச்சுக்களெல்லாம் முற்றும் அவிழ்ந்திடுதலாகின்றதோ, (அது); ஆத்ம உண்மையினைப்பற்றிய நினைவு. என்னால் - உமது அருளைப் பெற்றவனால். — மயக்கம் தீர்தலைப்பற்றிய இவ்விரண்டினைகளால் - "நூற்பொருள் முழுதையும் அறிதற்குப் பயன்

ஃலம் ஏதாவதேவ இதி நிஶ்சிதம் பவதி, யத: ஜ்ஞாநாத் மோஹநாஶ: ஆத்மஸ்ம்ருதிலாபஶ்ச இதி। ததா ச ஶ்ருதௌ "அநாத்மவித் ஶோசாமி" இதி உபந்யஸ்ய ஆத்மஜ்ஞாநேந ஸர்வபந்தநாநாம் விப்ரமோக்ஷ: உக்த: । "பித்யதே ஹ்ருதயக்ரந்தி:" "தத்ர கோ மோஹ: க: ஶோக: ஏகத்வமநுபஶ்யத:" இதி ச மந்த்ரவர்ண:। அத இதாநீம் த்வச்சாஸநே ஸ்தித: அஸ்மி கதஸந்தேஹ: முக்தஸம்ஶய:। கரிஷ்யே வசநம் தவ। அஹம் த்வத்ப்ரஸாதாத் க்ருதார்த:, ந மே கர்தவ்யம் அஸ்தி இத்யபிப்ராய: ॥ ௭௩ ॥

பரிஸமாப்த: ஶாஸ்த்ரார்த: । அத இதாநீம் கதாஸம்பந்தப்ரதர்ஶநார்தம் ஸஞ்ஜய: உவாச—

ஸஞ்ஜய உவாச ॥

௭௪. இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்தஸ்ய ச மஹாத்மந: ।
ஸம்வாதமிமமஶ்ரௌஷமத்புதம் ரோமஹர்ஷணம் ॥

இதி ஏவம் அஹம் வாஸுதேவஸ்ய பார்தஸ்ய ச மஹாத்மந: ஸம்வாதம் இமம் யதோக்தம் அஶ்ரௌஷம் ஶ்ருதவாந் அஸ்மி அத்புதம் அத்யந்தவிஸ்மயகரம் ரோமஹர்ஷணம் ரோமாஞ்சகரம் ॥ ௭௪ ॥

தம் ச இமம்—

௭௫. வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவாந் ஏதத் குஹ்யமஹம் பரம் ।
யோகம் யோகேஶ்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ॥

இவ்வளவேதான்" என முடிபாக் காட்டப்பட்டுளது; (அதாவது)-அந்தஅறிவினல் "மயக்கம்தீர்தலும், ஆத்மாவை நினைவுகூர்தலைப் பெறுதலும்" என்பது. அவ்வாறே, சுருதியினுள் "ஆத்மாவை யறியாதவனாய் வருந்துகின்றேன்" எனத்தொடங்கி, ஆத்ம அறிவினல் முடிச்சுக்களெல்லாம் முற்றும் அவிழ்ந்திடுதல் கூறப்பட்டிருக்கின்றது (சா - எ - க - ௩, உ௬ - உ). "நெஞ்சத்துமுடிச்சுத் தெறித்திடுகின்றது" (மு - உ - உ - அ), "ஒன்றாயுள்ளதைக் காண்பவனுக்கு அங்கு மயக்கமேது? வருத்தமேது?" (ஈ - எ) என்பதும் மந்திரவர்ணமாம். இனி, நான் இப்பொழுது உமது கட்டளையில் நிலைத்தவனாய் ஸம்சயம்நீங்கியவனாய் இருக்கின்றேன். உமது திருவாக்கைச் செய்வேன்: நான் உமது அருளினல் கிருதார்த்தனாக (வாழ்க்கையின் பயனை அடைந்தவனாக இருக்கின்றேன்); நான் செய்யவேண்டியது இல்லை என்பது கருத்து. (எ௩)

பகவானையும், அவரது உபதேசத்தையும் ஸஞ்ஜயன் கொண்டாடுதல்.

நூற்பொருள் முடிவுற்றது. இனி, இங்ஙனம் கதைத்தொடர்ச்சியைக் காட்ட ஸஞ்ஜயன் கூறலாயினன்:

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்:

எ௪. **இவ்வாறு நான் வாஸுதேவனுக்கும் பெருந்தகைமையுள்ள பார்த்தனுக்கும் (நடந்த) இந்த அத்புதமான மயிர்க்கூச்செறியும் சம்பாஷணையைக் கேட்டிருக்கின்றேன்.**

இந்த - கீழ்க்கூறிய அத்புதமான - மிக்க ஆச்சரியத்தை விளைக்கின்ற. (எ௪)

இனி, அந்த இதனை (நான் எதனல் கேட்டிருக்கின்றேன் எனில்)—

எ௫. **வியாசரது அருளினால், கேட்டிருக்கின்றேன்: யோகேச்வரனான கிருஷ்ணனிடத்தினின்றும் மிக்க ரஹஸ்யமான இந்த மேலான யோகத்தைத் தாமே சொல்ல (நான்) நேரே கேட்டிருக்கின்றேன்.**

வ்யாஸப்ரஸாதாத் தத: திவ்யசக்ஷு:ச்ரோத்ரலாபாத் ச்ருதவாந் இமம் ஸம்வாதம் குஹ்யதமம் பரம் யோகம்—யோகாக்யஸ்ய ஜ்ஞேயஸ்ய யோக:— ஸம்வாதே இமம் யோகமேவ வா யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ந பரம்பரயா ॥ ௭௫ ॥

௭௬. ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம் ।
கேசவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ॥

ஹே ராஜந் த்ருதராஷ்ட்ர ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ப்ரதிக்ஷணம் ஸம்வாதம் இமம் அத்புதம் கேசவார்ஜுநயோ: புண்யம் இமம் ச்ரவணமாத்ரேண பாபஹரம் ச்ருத்வா ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ப்ரதிக்ஷணம் ॥ ௭௬ ॥

௭௭. தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: ।
விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ॥

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபம் அத்யத்புதம் ஹரே: விச்வரூபம் விஸ்மயோ மே மஹாந் ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ॥ ௭௭ ॥

கிம் பஹுநா—

௭௮. யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்தோ தநுர்தர: ।
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம ॥

வியாசரது அருளினல் - அவரிடத்தினின்றும் திவ்வியமான கண்ணைப் பெற்றதனல். யோகத்தை - சம்பாஷணையை; (கர்மயோகம்முதலிய) யோகத்தைத் தருவதனல், நூலும் யோகம் எனப்பட்டது. அல்லது, இந்த சம்பாஷணையை (சித்தவிருத்திகளைத் தடுப்பதாகிய) யோகமாகவே(கொள்ளலாம்; அதற்கு இது துணையாதலின். யோகேச்வரன் - யோகத்தை ஆளுபவன்; அவனது அருளினலன்றோ கர்மயோகம்முதலியனவும், அவற்றது பயன்களும் கைகூடும்.—ஆ.) தாமே: (நான் கேட்டிருப்பது கர்ண) பரம்பரையாக அன்று. (௭௫)

௭௬. அன்றியும், அரசனே! கேசவார்ஜுனர்களுடைய இந்த அத்புதமான புண்ய சம்பாஷணையை நினைந்துநினைந்து அடுத்தடுத்து மகிழ்கின்றேன்.

அரசனே - திருதராஷ்டிரனே! நினைந்து நினைந்து - ஓரோர் க்ஷணமும் நினைத்து நினைத்து. புண்ய - கேட்டல் மாத்திரத்தாலே பாவத்தைப் போக்குகின்ற. இதனைக் கேட்டுக் கணந்தோறும் மகிழ்வுறுகின்றேன். (௭௬)

௭௭. இன்னும், ஹரியினுடைய அந்த அத்புதமான வடிவையும் நினைந்துநினைந்து எனக்கு ஆச்சரியம் அதிகமாகின்றது; அரசனே! மீண்டும்மீண்டும் மகிழ்கின்றேன். (௭௭)

வடிவை - விச்வரூபத்தை.

அதிகமாக (விரித்துரைப்பதனல்) என்ன?—

௭௮. எங்கே யோகேச்வரனை கிருஷ்ணன் இருக்கின்றானே, எங்கே வில்லேந்தியபார்த்தன் இருக்கின்றானே, அங்கே லக்ஷ்மியும், வெற்றியும், ஆக்கமும், நீதியும் நிலைத்தவை: (என்பது) எனது எண்ணம்.

इति श्रीमहाभारते शतसाहस्र्यां संहितायां वैयासिक्यां भीष्मपर्वणि श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे मोक्षसंन्यासयोगो नामाष्टादशोऽध्यायः ॥

यत्र यस्मिन् पक्षे योगेश्वरः सर्वयोगानां ईश्वरः—तत्प्रभवत्वात् सर्वयोगबीजस्य—कृष्णः, यत्र पार्थः यस्मिन् पक्षे धनुर्धरः गाण्डीवधन्वा, तत्र श्रीः तस्मिन् पाण्डवानां पक्षे श्रीः, विजयः, तत्रैव भूतिः श्रियो विशेषः विस्तारः भूतिः, ध्रुवा अव्यभिचारिणी नीतिः नयः, इत्येवं मतिः मम इति ॥ ७८ ॥

इति श्रीमद्भगवद्गीताभाष्ये अष्टादशोऽध्यायः ॥

ஸ்ரீமஹாபாரதத்திலே, வ்யாஸ ரருளிச்செய்த நூறுபிரக்கிரந்த ஸம்ஹிதையிலே, பீஷ்மபர்வத்திலே, ஸ்ரீமத் பகவத்கீதைகளாக, உபநிஷத்துக்களாக, ப்ரஹ்மவித்யையாக, யோகசாஸ்திரமாக இருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணார்ஜுந ஸம்வாதத்திலே மோக்ஷஸந்யாஸயோகம் என்னும் பதினெட்டாம் அத்தியாயம் முற்றும்.

எங்கே - எந்தப் பக்கத்திலே. **யோகேச்வரன்** - எல்லாயோகங்களையும் ஆளுபவன்; யோகங்களெல்லாவற்றினுடைய விதையானது அவனிடத்தினின்றும் உண்டாகின்றமையால் என்க [ஞானயோகம்முதலிய யோகங்களெல்லாவற்றிற்கும் வித்துக்களாகிய ஞானம் வைராக்கியம் முதலியன அவனது அருளினாலன்றி அமையமாட்டாவாதலால் என்றபடி]. **வில்லையேந்திய** - காண்டீவமென்னும்வில்லையுடைய. **அங்கே** - பாண்டவருடைய அப்பக்கத்திலே. **ஆக்கம்** - லக்ஷ்மியின் பெருக்கம். **நிலைத்தவை** - பிறழாதவை.—எனது அபிப்பிராயம் இப்படிப்பட்டது என்க. (எஅ)

ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்யத்தில் பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பண மஸ்து ;

ஓம் தத் ஸத்.

(கீதாசாஸ்திரம் முற்றுப்பெற்றது.)

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

அநுபந்தக் குறிப்பு.

(223, 224, 249 - ஆம் பக்கங்களில் குறிக்கப்பட்ட யோகமார்க்கமானது, விசாரத்தோடமைந்து தியானயோகத்தைப் பெரும்பான்மையும் தழுவிய ஞான நிஷ்டையாம். சிரவணம் முதலியவற்றைச் செய்பவனாயினும், பரிசுத்தமான புத்தி நுட்பமில்லாதவன் இதனைக் கைக்கொள்ளுகிறானென்க. இனி ஆசார்யன் உபதேசித்த பொருளைக் கேட்டு, அதனைத் தனது புத்தியினால் ஆராய்ச்சிசெய்யமாட்டாது, நம்பிக்கையோடு கூடி, அஷ்டாங்கயோகத்தை நாடி, அநத நிர்க்குணப்பொருளை, பஞ்சதசியினுள் தியானதீபததுள் கூறியவாறு தியானித்தலாகிய யோகமார்க்கமானது, உபாஸனையாம்; ஞானநிஷ்டையன்று. யோகப்ரஷ்டனென்பான் - ஞானநிஷ்டையினின்றும் தவறியவன்; உபாஸனையினின்றும் தவறியவன் அல்லன். ஏனெனில், உபாஸனை வேறு; ஞானம வேறு. எனவே, விசாரத்தோடமைந்த யோகமார்க்கத்திற்கும், அஃதில்லாத வெறும் யோகமார்க்கத்திற்கும் இவ்வாறு வேறுபாடு கண்டுகொள்க. இதனை வேதாந்தபோதினிப் பதிப்பு பஞ்சதசியினுள் தியாநதீபத்தில் விரிவாகக் காணலாம்)

குறிப்பெழுத்துக்களின் விவரம்.

ஆ = ஆனந்தகிரி.
ஈ = ஈசாவாஸ்ய உபநிஷத்.
கட = கடோபநிஷத்.
கே = கேநோபநிஷத்.
கௌ = கௌஷீதகீ உபநிஷத்.
ச்வே = ச்வேதாச்வதரோபநிஷத.
ச - ப = சதபத ப்ராஹ்மணம்.
சா = சாந்தோக்ய உபநிஷத்.
சாரீ = சாரீரக பாஷ்யம்.
ஜா = ஜாபாலோபநிஷத்.
தை = தைத்திரீயோபநிஷத்.
தை - ஆ = தைததிரீய ஆரண்யகம்.
தை - உப = தைத்திரீய உபநிஷத.
தை - ஸம் = தைத்திரீய ஸம்ஹிதா.
தை - ப்ரா = தைத்திரீய ப்ராஹ்மணம.
ப்ர = பிருஹதாரண்யக உபநிஷத.
பி = பிருஹதாரண்யக உபநிஷத.
பிரு = பிருஹதாரண்யக உபநிஷத்.
பு - ஸூ = புருஷஸூக்தம்.
போ = போதாயந தர்மஸூத்ரம்.
ம = மதுஸூதனஸரஸ்வதி.
ம - அச்வ = மஹாபாரதம், அச்வமேதபர்வம்.
மகா - சா - மோ = மகாபாரதம், சாந்திபர்வம், மோக்ஷதர்மம்.
மநு = மநு ஸ்ம்ருதி.
ம - சா = மஹாபாரதம், சாந்திபர்வம்.
ம - ஸ்திரீ = மஹாபாரதம், ஸ்திரீபர்வம்.
மு = முண்டகோபநிஷத.
மோ = மோக்ஷதர்மம் (மஹாபாரதம்).
யா - உப = யாஜ்ஞிகி உபநிஷத்.
யோ - சா = யோகசாஸ்திரம்.
ருக் = ருக் வேதம்.
வி = விஷ்ணு புராணம.
வே = வேதாந்த தர்சநம் [ப்ரஹ்மஸூத்ரம்].

பிழை திருத்தம்.

பக்கம்.	வ்ரி.	பிழை.	திருத்தம்.
55	5	ஊ-வாக	ஊஃவாக
67	29	முயற்லியால்	முயற்சியால்
168	16	யஊநாஷாநாக	யஊநாஷ்டாநாக
175	6	கரோநி	கரோதி
181	8	நிஷா	நிஷ்டா
200	36	வெருய்	வேருய்
204	21	இற்யகை	இயற்கை
205	14	வூஶாஜா தா	வூஶாஜாத்ரா
206	4	ஐதயஃ அல்லது ஐதயஃ	ஐத்ரயஃ
,,	12	உத்தம்ஸாயி	உத்தம்ஸ்யாயி
211	20	யோத்தை	யோகத்தை
224	20	ஞானயோகத்தை	ஞானயோகப்பயனை
252	14	ஷணாஸம்	ஷ்ணாஸம்
,,	15	யாவஜ்ஜவம்	யாவஜ்ஜீவம்
253	7	நாவஞ்வஞி	நாவந்ஞ்வஞி
,,	8	வஞ்நஜஞ்ந	வஞ்நஜஞ்ந்ர
269	33	அனுபவிப்வேன்	அனுபவிப்பேன்
270	1	நிஷா	நிஷ்டா
298	7	யெநகுநாவேஸி	யெநகுநாவேஸ்ரி
309	1	ஊஶஞ்யாவேஸ	ஊஶஞ்யாரோஸ
330	5	ஜூஷ்டவவஞ்	ஜூஷ்டவகுவஞ்
333	23	வடித்தை	வடிவத்தை
335	29	இறந்தபுன்பு	இறந்தபின்பு
336	5	விஶேஸ்வாஸ்வ	விஶ்வேஸ்வாஸ்வ
346	2	ஸைதஷி	ஸ்ஸைதஷீ
353	12	வெதி	வெத்தி
368	15	செய்துக்கொண்டு	செய்துகொண்டு
391	22	அறிதற்குஅறிய	அறிதற்கு அரிய
397	26	யொருள்கொள்க	பொருள்கொள்க
420	20, 21	முதலியதற்றை	முதலியவற்றை
,,	34	ஏற்றகொள்ள	ஏற்றுக்கொள்ள
422	23	பெரிய சிரிய	பெரிய சிறிய
425	21	பாராத	பாரத

குறிப்பு.—இவற்றுள், பெரும்பாலன சில பிரதிகளில்மாத்திரம் காணப்படுகின்றன.